சிவஞானசித்தியார்

சுபக்கம்

54



T03958
R001J01

சித்தாந்தசைவ

மூன்றுவது மாநாட்டு மலர்

திருவெண்ணெய்நல்லூர்

சய — புரட்டாசி — 21.

ஓ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டசாத்திரம்

4. சிவஞானசித்தியார்

சுபக்கம்

ஸ்ரீ அருணந்திதேவநாயனார்

1954.

திருவாவடுதுறையாதீனவெளியீடு — 88.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டசாத்திரம்

ஸ்ரீ அருணந்திதேவநாயனார்

அருளிச்செய்த

சிவஞானசித்தியார் சுபக்கம்

ஸ்ரீ சுப்பிரமணியதேசிகர் பதவுரை

ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் பொழிப்புரை

மெய்கண்டார் யாண்டு

731.

திருவாவடுதுறையாதீன வெளியீடு – 88.

ஓ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டசாத்திரம்

ஸ்ரீ அருணந்திதேவநாயனார்

அருளிச்செய்த

சிவஞான சித்தியார் சுபக்கம்

பதவுரை பொழிப்புரை முதலியன

திருக்கயிலாயபரம்பரைத்திருவாவடுதுறையாதீனத்து

21–வது குருமஹாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிகசுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

திருவாவடுதுறையாதீன வித்துவான்

த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளையால்

பல பிரதிகளைக்கொண்டு

பரிசோதித்துப் பதிப்பிக்கப்பெற்றன.

(உரிமை பதிவு)

சய — புரட்டாசி.

சித்தாந்தசைவ மாநாட்டு மலர்

1951 திருவுந்தியார்
திருக்களிற்றுப்படியார்.

1953 சங்கற்பநிராகரணம்.

1954 சிவஞான சித்தியார் சுபக்கம்
பதவுரை — பொழிப்புரை.

ஸ்ரீ வெங்கடேஸ்வர் பிரஸ், கும்பகோணம்.

இப்புத்தகத்தில் அடங்கியுள்ளவை

1.	டைட்டில் முதலியன	1—8
2.	முன்னுரை	9—
3.	முகவுரை	க—உஅ
4.	நூலாசிரியர், உரையாசிரியர் வரலாறுகள்	i—xvi
5.	உரையில் எடுத்தாண்ட நூல்கள்	1—2
6.	விஷய அட்டவணை	i—xxii
7.	சிவஞானசித்தியார் சுபக்கம் பதவுரை – பொழிப்புரை	1—598
8.	செய்யுள் முதற்குறிப்பகராதி	i—vi
9.	அரும்பதமுதலியவற்றின் அகராதி, அரும்பதக்குறிப்பகராதி முதலியன, அருந்தொடரகராதி முதலியன	க—சஉ
10.	பிழையும் திருத்தமும்	சஙு—

திருவுருவப்படங்கள்

ஸ்ரீ-ல-ஸ்ரீ 21-வது மஹாசந்நிதானம்
மேலகரம் 16-வது
— ஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்திகள்
ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் ஆதீனம் லைபரெரியனுக்கு ரூ. 1—4—0 தபால் தலைகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.



திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து
இருபத்தொன்றுவது குருமகாசன்னிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

'சிவத்துக்குமேல் தெய்வம் இல்லை, சித்திக்கு மேல் நூல் இல்லை' என்பது ஒரு பழமொழி. 'சைவசமயமே சமயம்' எனவும் 'சைவத்தின் மேற் சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம், தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனும் ஞான்மறை' எனவும் பெரியோர் அருளினர். பதி பசு பாசம் என்னும் முப்பொருள் ஆராய்ச்சி சித்தாந்த சைவத்தில் செய்யப்படும். முழுமுதற் பரம்பொருளைச் சிவம் எனவும், உயிர்களைப் பசு எனவும், அறியாமையைச் செய்யும் இருளைப் பாசம் எனவும் சைவசமயம் அறுதியிட்டுக் கூறும்.

இனி, மெய்கண்டதேவ நாயனார் அருளிச் செய்த சிவஞான போத நூலை நன்கு விரித்துத் தடைவிடைகளால் தெளிவிப்பது சிவஞானசித்தியார் என்னும் நூல். இதனை அருளிச்செய்தவர்கள் ஸ்ரீ அருணந்திசிவம். இதுவழி நூல். பரபக்கம் சுபக்கம் என்னும் இரு பிரிவினை யுடையது. ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் இதன் பெருமையைக் கண்டு 'சிவாகமார்த்தங்களுக்கெல்லாம் உரையாணி' என இதனைப் போற்றியருளினர். 'பார்விரிந்த நூலெல்லாம் பார்த்தறியச்சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும்' என்பது சிவபோகசாரம். 'பாதி விருத்தத்தால் இப்பார் விருத்தமாக வுண்மை—சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நாளோ' என்றருளினர் தாயுமான சுவாமிகள். சித்தியார் சுபக்கம் 328 திருவிருத்தங்களையுடையது. முதனூலாகிய சிவஞானபோதம் போலவே பிரமாணம், இலக்கணம், சாதனம், பயன் என நான்கு இயல்களாக வகுக்கப்பட்டுள்ளது. இந்நூலுக்கு ஆறு ஆசிரியர்கள் உரை கண்டனர். அவற்றுள் இரண்டு ஆசிரியர்கள் செய்தருளிய உரையே இதன்கண் வைக்கப்பட்டுள்ளன. எனைய 'அறுவகையுரை' எனவேறு தனிப்புத்தகமாக வெளிவரவிருக்கின்றது. இதனைப் பற்றிய விவரங்களையெல்லாம் முகவுரையிற்காண்க.

சிவமயம்

முகவுரை

பரசமய கோளரியைப் பாலரு வாயனேப்பூம் பழனஞ் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானேத் தேய மெல்லாம்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளும் கவுணியர்தங் குலதீ பத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமத விளங்களிற்றை விரும்பி வாழ்வாம்.

— ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.

'சிவஞானசித்தியார்' என்பது மெய்கண்டசாத்திரங் கள் பதினெண்கனுள் ஒன்று. இதனை "உந்திகளிறுஉயர் போதம் சித்தியார்" என்னும் வெண்பா நன்குணர்த்தும். மெய்கண்டசாத்திரங்களைச் சித்தாந்த சாத்திரங்கள் எனவும் பெரியோர் கூறுவர். இதனைத் தமிழகத்துக்குத் தந்தருளிய ஆசிரியர் ஸ்ரீ அருணந்திதேவநாயனார். இவர்கள் சந்தான குரவருள் இரண்டாமவராக வைத்துப் போற்றப்பெறு வார்கள். இவர்களுடைய **ஞானசிரியர் ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனார்.** ஸ்ரீ மெய்கண்டதேவநாயனருடைய மாணவர் நாற்பத்தொன்பதின்மருள் இவர்கள் முதல் மாணவர். வடமொழி தமிழ்மொழிகளில் வல்லவர், வேத சிவாகமங்களிலும் உபாகமங்களிலும் பெரிதும் வல்ல ராய்க் கற்றுச் சிறந்திருந்தமையின் இவரைப் பெரியோர் சிறப்பித்துச் **சகலாகமபண்டிதர்** என்னும் பட்டம் தந்து பாராட்டினர். பெற்றோர் இட்டுவளர்த்த பிள்ளைத்திரு நாமம் இன்னதெனத் தெரியவில்லை. **அருணந்தி** என்பது தீட்சாநாமம். மெய்கண்டதேவருடைய காலம்

(கி-பி 1223) பதின்மூன்றும் நூற்றாண்டின் முற்பகுதி யென ஒருவாறு ஆராய்ச்சியாளர்களால் துணியப்பெற் றுளது. ஆகலின், இவ்வாசிரியர் காலமும் அதுவேயாம். மூன்றும் இராசராசன் ஆட்சிக்காலத்துப் பதினேந்தாம் ஆண்டுக் கல்வெட்டால் இது குறிக்கப்படுவதென்பர். இவர்களுடைய அவதாரத்தலம் திருத்துறையூர். இவர்கள் சிவபரிபூரணமுற்றதும் இத்தலத்திலேதான். இவர்கள் சமாதிக்கோயிலும், திருமடமும் திருக்கயிலாயபரம்பரைத் திருநந்திமரபு மெய்கண்டசந்தானத்துவந்த இத்திருவாவடு துறையாதீனத்துக்கே இன்றும் உரிமையாகவுள்ளன. அக்குருமூர்த்தத்துக்கு நித்திய நைமித்திக பூசைகளும் குருபூசைப்பெருவிழாவும் இவ்வாதீனத்தாராலேயே சிறப் பாக நடந்துவருகின்றன. இவ்வாசிரியர் தமது ஞானசிரி யருடைய ஆணைப்படி தமிழ்ச் சிவஞானபோதத்துக்குச் சிறந்ததோர் பேருரை விருத்தச்செய்யுட்களாற் செய்து முடித்தருளினர். சிவஞானம் சித்தித்தற் பொருட்டாகச் செய்யப்பட்டமையின் இது **சிவஞானசித்தி** என்னும் பெயருடையதாயிற்று என்பர். இஃது இந்நூலுக்கு ஆசிரியர் இட்டபெயர்.

திருக்கோவையார், திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் என்பன போல இந்நூலும் **சிவஞானசித்தியார்** என வழங்கிவருகின்றது. இதன் பெருமை கருதிச் சிவ போகசாரம் அருளிச்செய்த ஸ்ரீ குருஞானசம்பந்ததேசிக மூர்த்திகள் " பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தி யிலே, ஓர்விருத்தப் பாதிபோதும் " என்றருளினர்கள். தவயோகிகள் போற்றும் சிவயோகிகளாக விளங்கிய தாயுமானசுவாமிகளும் " பாதிவிருத்தத்தான் இப் பார் விருத்தமாக வுண்மை, சாதித்தார் பொன்னடியைத் தான் பணிவ தெந்நாளோ" என்று பாராட்டினர்கள். 'ஓதரிய

வாய்மைச் சிவாகமங்கட்கெலாம் உற்றபேராகரமதாய்-
ஓங்கு திருவாவடுதுறைப்பதியில் அற்புதத்தொருவடிவு
கொண்டருளியே, பேதமுறு சமயவாதிகள் உளமயக்
கைப் பெயர்க்கும் ரசகுளிகையாகிப் — பிரியமுடனே
வந்தடுத்தவர்க்கு இன்பப் பெருங்கருணை மேருவாகி,
ஆதரித் தடியேங்கள் உண்ணத் தெவிட்டாத அமிர்தசாகர
மாகியே—மணிவிளக்கென வளர் ' ஸ்ரீ மாதவச்சிவஞான
யோகிகள் இதனை, ''சிவாகமார்த்தங்களுக்கெல்லாம் உரை
யாணி '' எனப் போற்றியருளினர். அடியேங்கள் இச்
சிவஞானசித்தியைப் போற்றுவதைத்தவிர்த்துவேறென்ன
செய்யவல்லேம். ஞானாசாரியர்திருவடிகளைச்சென்னிமேற்
கொண்டு சிந்தித்திருப்பதே சிவஞானசித்தியை அடையத்
தக்க சாதனமாம் என்க. தாய் அழகுடையவள் என
மைந்தன் கூறமாட்டான். அவள் அழகுடையவள்
எனக் கூறுபவன் மைந்தனுகமாட்டான். தாய் 'தெய்வக்
கற்புடையவள்' என்பதே தகுதி. அதுவே மரபுமாம்.
ஆசிரியர் புத்திமான் என வினை வழித்தோன்றிய நாம்
கூறலாமா ? பண்டை நற்றவத்தால் தோன்றிய பெரி
யோரைப்பற்றி ஆராயும் தூயகருவி கரணங்களை நாம்
பெற்றிலோமே ! அவர்கள் அருளை நினைந்து நினைந்து
கும்பிட்டிருத்தலொன்றே நாம் செய்யத்தக்கதாம்.

இனி, சிவஞானசித்தியார் என்னும் இந்த ஞானநூல்
பரபக்கம், சுபக்கம் என இரு பகுதியினையுடையது. பர
பக்கம் – 301 திருவிருத்தங்களையும், சுபக்கம் – 328 திரு
விருத்தங்களையும் கொண்டுளது. பரபக்கத்தில் உலகாயத
முதலிய பதின்மூன்று பரசமயங்களின் உண்மையை
எடுத்துக்கூறி அவற்றைச் சித்தாந்த சைவநெறியில் நின்று
மறுத்துரைக்கும் மறுதலைகளும் உடன் அருளிச்செய்யப்
பட்டுள்ளன. சுபக்கத்தைக் கூறவந்த ஆசிரியர் ' பர

மதத்தை நிராகரியாதிருக்கில் தன் மதம் பிரதிட்டை ஆகாது ' என்னும் நியாயத்தால் பரமதங்களையும் எடுத்து ஆராய்ந்து அவைகளைச் சித்தாந்தப்பார்வையால் மறுத்துரைத்திருக்கிறார்கள், ஏனைய மதங்களையும் தத்தம் மதத்தோடு வைத்து ஒப்புநோக்கும்போதுதான் அவைகளின் வன்மை மென்மைகள் நன்கு புலப்படும். மிருகேந்திரம் முதலிய உபாகமங்கள் பரசமயங்களையும் எடுத்து ஆராய்வன என்பர் பெரியோர். இரௌரவ ஆகமத்தின்கண் உள்ள இரண்டரை சுலோகங்களை ஆதரவாகக்கொண்டு ஸ்ரீ சத்தியோஜோதி சிவாசாரியர் பரமோக்ஷநிராச காரிகை என்னும் நூலை இயற்றியருளினர். இந்நூல் 60 சுலோகங்களால் செய்யப்பட்டுளது.

" அந்நியர்களுக்கு அராகம் முதலான மேலானதத்துவங்கள் கூறப்படாமையால் பொருளில் குறைந்திருக்கும் தன்மை யிருக்கின்றது. ஆகையால், அந்நிய மதங்களை அறிந்தவர் மாயையைக் கடவாமைபற்றி உலகங்களிலே இருக்கின்றனர்" என்பதாம். (58 சுலோ.)

(உரை)" எல்லாப் பிரமாணங்களும் எல்லாவற்றையும் விடயமாகக்கொள்ளவேண்டும் என்பதில்லை. சிலவிடயங்களையே விளக்குகின்ற பிரத்தியட்சம் முதலியவை போல் ஏனைய நூல்களும் பிரமாணியங்களேயாம். அவற்றிற்குச் சிலவிடயங்களையே அறிவிக்கும் தன்மை உண்டு என்பது எவ்வாறு? என்பார்க்கு, "அராகதத்துவம் முதலிய மேலானதத்துவங்கள் கூறப்படாமையால்" என்பதனால் விடை கூறப்பட்டது. அராகதத்துவம் முதலிய எல்லாத்தத்துவக் கூட்டங்களையும் கூறுமையால் அவர்களுக்குச் சிலவிடயங்களை அறியும் தன்மையே இருக்கின்றது. இவ்வாறுயின், ஏனைய ஆகமங்களால் அடையப்படு

வதுயாது? என்பார்க்கு ''ஆகையால்மாயையைக்கடவாமை பற்றி'' என்பதனால் விடை கூறப்பட்டது. அராகதத்துவம் முதலிய மேலானதத்துவங்கள் ஒன்றும் அவர்களால் அறியப்படாமையால் மாயாதத்துவத்திற்குக் கீழே அறிவையுடைய அந்நிய மதத்தைச்சார்ந்த முத்தர்கள் தத்துவங்களிலுள்ள புவனக் கூட்டங்களில் ஒடுக்கமடைந்திருக்கின்றனர். எவரெவருக்கு எந்த எந்தத்தத்துவ புவனத்தில் ஒடுக்கம் என்னும் விடயத்தை ஆகமப் பிராமாணியம் என்னும் நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளமை காண்க''.

''இவ்வாறு வாதிகளால் கூறப்பட்ட பயன்கள் அனைத்தும் அவற்றின் சாதனங்களில் மாணவகருக்குப் பிரவிருத்தியுண்டாகாமை என்னும் பயனைக்கருதிச் சுருக்கமாய் நம்மால் கூறப்பட்டன'' (சுலோ—59)

(உரை) ''எல்லாவாதிகளுக்கும் நிச்சயங்களாய் உள்ள முத்திரூபங்களான பயன்கள் அனைத்தும் சுருக்கமாய்க் கூறப்பட்டன. அவை அனைத்தும் எதன் பொருட்டு மறுக்கப்பட்டன? எனில், முத்திப்பயன்களுக்குச் சாதனமான சாத்திரங்களை நிச்சயம் செய்யாமல் தாழ்ந்த பயனில் பிரவிருத்திக்கின்றனர். சிரேயசை (மேலானமுத்தியை) விரும்புகின்றவர்கள் அயோகவியவச்சேதத்தால் (இயைபின்மை நீக்குதல்) இவ்விட (சித்தாந்த சாத்திர)த்தில் பிரவிருத்திக்கத்தக்கது; சிறந்த மோட்சம் இதனால்தான் அடையப்படுகின்றது. ஆகையால், என்க''. என மேற்கண்ட நூலின் இறுதியில் அறுதியிட்டுக் கூறுவதால் இனிது புலப்படும்.

இனி, ஆசிரியர் அருணந்திதேவநாயனார் சுபக்கத்துத் தொடக்கத்தும் விநாயக வணக்கம் கூறியருளுகின்றார்

கள். இஃது ஆன்றோர் ஆசாரம் பாதுகாத்தலாம். மங்கல வாழ்த்தில் சிவபிரான் வணக்கம் 2 முதனூற் சிறப்பு, 3 நுதலிய பொருள் முதலியன, 4 அவையடக்கம், 5 ஆசங்கை நீக்கல் ஆக ஐந்து செய்யுட்கள் உள்ளன. பரபக்கத்துள்ளும் இவ்வாசிரியர் காப்புக் கூறிய பின் மங்கலவாழ்த்தில் சிவபிரான், சத்தி, விநாயகக்கடவுள், சுப்பிரமணியக் கடவுள், மெய்கண்டதேவநாயனார் துதி, அவையடக்கம், நூற்சிறப்பு, நூற்கதிகாரி நூல்வழி நூற்பெயர், நூற்கருத்து முதலிய பத்துத்திருவிருத்தங்கள் அருளிச்செய்திருக்கின்றமை காண்க. எடுத்துக்கொண்ட பொருள் இடையூறின்றிக்கடைபோக இனிது முடிதற்கும், இந்நூல் நின்று நிலவுதற் பொருட்டும் விநாயக வணக்கமுதலியன கூறப்பட்டுள. அளவையின் இயல்புகள் பதினொன்கு திருவிருத்தங்களாற் பேசப் பட்டிருக்கின்றன.

பிரமாண இயல் முதல் மூன்றுசூத்திரங்களாலும், இலக்கணஇயல் 4, 5, 6, சூத்திரங்களாலும், சாதனஇயல் 7, 8, 9 சூத்திரங்களாலும், பயனியல் 10, 11, 12 சூத்திரங்களாலும் உணர்த்தப்பட்டன.

'பதி பசு பாசம் எனப்பகர் மூன்றிற், பதியினைப் போற் பசு பாசம் அனுதி, பதியினைச் சென்றணு காபசு பாசம், பதியணு கிற்பசு பாசம் நிலாவே' என்பது திருமந்திரம்.

இனி, அளவையிலக்கணம் கூறிய ஆசிரியர் அவ்வளவைகளான், உரைப்படும் பதி பசு பாசம் ஆகிய முப்பொருள்களது உண்மை முதல் மூன்று சூத்திரங்களான் உணர்த்துவாராயினர். அவற்றுள், முதற்சூத்திரத்திற் பதியுண்மையும், இரண்டாம்சூத்திரத்திற் பாசவுண்மையும், கூறப்பட்டன. முதற்சூத்திரத்திலே உலகிற்கு நிமித்த

காரணுகிய பதியுண்மைக்கு அளவை கூறிய ஆசிரியர் காரணமாதற்பொதுமையான் துணைக்காரணம் மூதற் காரணங்களது உண்மைக்கு அளவையும், அவற்றுற் காரியப்படுமாறும் இரண்டாஞ் சூத்திரத்திற் கூறுகின்றார். முதற்காரணம் மாயை, துணைக்காரணம் சிற்சத்தி. பசுவுண்மைக்குப்பிரமாணம் மூன்றுஞ்சூத்திரத்திற் கூறுகின்றார்.

முதல் மூன்றுசூத்திரங்களாலும் பொருளுண்மைக்கு அளவு கூறிய ஆசிரியர் நிறுத்த முறையானே எதிர் நிரனிறையாகப் பொருளியல்பு கூறுவான் தொடங்கி நான்காஞ்சூத்திரத்திற் பசுவிலக்கணமும், ஐந்தாஞ்சூத்திரத்திற் பாசஇலக்கணமும், ஆறுஞ்சூத்திரத்திற் பதியிலக்கணமும் அருளிச்செய்தார்.

வேண்டுஞ்செய்தி முறைமை யெனப்படும் சாதனவியல்பு கூறத்தொடங்கிய ஆசிரியர் மேற்கூறிப்போந்த முப்பொருள்களுள் சாதித்துப் பெறுதற்குரிய அதிகாரமுடையது இது என்பது பாரிசேட அளவையின்வைத்து ஏழாஞ்சூத்திரத்திற் கூறினர். சாதித்துப் பெறும் உரிமை தனக்கே உண்டு என்பதை உணர்ந்த உயிர்க்கு அப்பேறு தனக்கு வேண்டற்பால தென்பதும், பிறவும் எட்டாஞ் சூத்திரத்தால் உணர்த்தியருளினர். அப்பேறு பயப்பதாய சாதனம் செய்யுமாறு ஒன்பதாஞ்சூத்திரத்திற் கூறினர்.

இனி, அச்சாதனத்தாற் பெறப்படும் பாசநீக்கமும் சிவப்பேறும் ஆகிய பயனியல்பு கூறத்தொடங்கிப்பெத்த நீக்கம் ஆமாறு பத்தாஞ்சூத்திரத்தானும், சிவப்பேறு எய்துமாறு பதினொராஞ்சூத்திரத்தானும் உணர்த்தினர். முறையே பாசநீக்கமும் சிவப்பேறும் ஆகிய பயன்பெற்றார்க்குச் சீவன் முத்திநிலைக்கண் நிகழும் இயல்பு பன்னிரண்டாஞ்சூத்திரத்தாற் கூறியருளினர்.

இனி, முன்னுற் சிறப்புக்கூறும் முகத்தால் தமது ஞானசாரியராகிய ஸ்ரீ மெய்கண்டதேவர் திருவடி தீட்சை செய்து தம்மை ஆட்கொண்டருளியமையும், சிவஞான போதத்தைத்தமக்கு உபதேசித்தமையும், அந்நெறிபற்றித் தாம் சைவாகமப் பொருட்கூற்றை விளக்குகின்றமையும் அருளியிருக்கின்றனர். சிவபிரானது திருவடி கூடும் முறைமையாகிய பயனைக்கூறுமிடத்துச் சாமுசித்தருக்கும் பிராகிருதருக்கும் இந்நூல் பயன்படாது. ஏனெனில் சாமுசித்தராவார் முற்செய்தவவிசேடத்தால் பிறக்கும்போதே நின்மல அந்தக்கரணத்துடன் பிறந்து முதல்வனிடத்தே வீடுகாதலித்துப் பத்திபண்ணுபவர்.இறைவன் அவரை நூல் வழியானன்றிச் சிவகதியிற் சேர்த்துவன். ஏனைப்பிராகிருதர் அறிவும் ஆற்றலும் காதலுமில்லாதவர். ஆகலின், அவர்க்கும் நூல் வேண்டுவதின்று, மந்ததர முதலிய சத்திநிபாதமுடைய வைநயிகருக்கே இந்நூல் கூறப்படுகின்றது என ஆசிரியர் கூறுகின்றனர். பண்டை நற்றவம் என்றது வீடுபேற்றுக்குரிய தவமாம். அஃது இறப்பில் தவம் என்றபடி; அது சரியை கிரியை யோகங்களின் முடிந்த ஞானம். 'ஞானம் ஈசன்பா லன்பே' என்றமை காண்க. அஃது ஆராய்ச்சியின்றி எழும் எழுச்சியாம். குறிக்கோளின்றி நிகழ்வதும் அது. மூனைத்துத்தோன்றுமையாகிய 'தாழ்வெனுந்தன்மை' என்பர். 'முன்புசெய்தவத் தினீட்டம் முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக் காட்ட' எனச் சேக்கிழார் சுவாமிகள் கண்ணப்பநாயனர் புராணத்து அருளியமையும் சிந்தித்தற்குரியது.

இனி, தத்துவங்கள் இன்றியமையாமைபற்றி எழுந்தன. தத்துவங்களை நோக்கியே சமயங்கள் உண்டாயின. ''தத்துவஞானம் தலைப்பட்டவர்கட்கே, தத்துவஞானம்

தலைப்படலாய் நிற்கும்'' எனவும், ''ஆகின்ற தொண் ணூறே டாறும் பொதுவென்பர், ஆகின்ற வாரு றருஞ் சைவர் தத்துவம். ஆகின்ற நாலேழ் வேதாந்தி வயிண வர்க், காகின்ற நாலா றையைந்து மாயாவாதிக்கே'' என வும் திருமந்திரம் கூறும். தத்துவாதீத சமயம் சித்தாந்த சைவமேயாம். சமயாசாரியர்களையும் சந்தானாசாரியர் களையும் வரம்பில் வைத்துச் சிந்தித்துணர்தல் வேண்டும். பிற ஆசிரியர்களெல்லாம் உஜ்ஜீவிக்க வழிகண்டனர். விரிந்த தத்துவங்களையுடையது சைவம். ஆ க லி ன், 'ஆகின்ற ஆறு**அருஞ்சைவர்** தத்துவம்' எனத் திருமூல தேவர் அருளினர். கடவுள், சமயம், ஆசாரியர், சாத்திரம் எல்லாம் சைவசமயத்திற் சிறந்து விளங்குவன. நல்ல குணங்கள் பழக - பதியப் பெரியோரை அணுகவேண்டும். எளியராந்தன்மையொன்றே அருளைப்பெற இன்றியமையா தது. ஆண்டவன் முன் சிறுமையுடையவராய் ஒழுகுதல் வேண்டும். அடியார் முன்பும் அப்படியே நடத்தல் வேண்டும். 'ஆசையொடும் அரனடியார் அடியாரை அடைந்திட்டு, அவர் கருமம் உன்கரும மாகச் செய்து, கூசி மொழிந்து, அருண்ஞானக்குறியில் நின்று, கும்பிட் டுத் தட்டமிட்டுக் கூத்தாடித்திரியே' (பக் - 585) என்னும் பகுதியும் நோக்கியுணர்க. பண்பாட்டால், சமய நலங்களால்தான் மன ஒருமை உண்டாம். சமயநலங்கள் உயிருணர்வில் தோய்ந்து தோய்ந்து வளர இடந்தர வேண்டும். சமயமே மக்கள் வாழ்வுக்கு உயிராம். சமயநலமில்லாத மக்கள் உயிர் நீங்கிய உடம்புபோன்ற வரே யாவர். மனத்தை ஒருமுகப்படுத்துதலே சமயநெறி. மக்களைச் செம்மைசெய்வது சமய ஒழுக்கம். மக்கள் உணர்வில் உறைத்து மிகுவதே சமயம் என்பர். அவ் வெழுச்சியும் உணர்வும் பரிபாகத்துக்குத் தகவே உண்

டாம். அருளே உயிரைச் செம்மைசெய்யும். அருளாற் றல் பெருக இறைநலம் பெருகச் செய்யவேண்டும். ஆள் வாரிலி மாடாக ஆதலாகாது. சிவஞான விளைவுபெற நன்னெறியைக் கைக்கொண்டு வாழ்தல் அ வ சி ய ம். நன்னெறி - சன்மார்க்கம். மிக்காரைக்கண்டு தாழ்தல் வேண்டும். கனமுள்ள பொருளே தாழும். பாசகனம் கூடாது, சித்கனமே வேண்டும்.

இனி, சிவஞானச்செய்தியுடையோர் ஈ ச ன் நேச ரொடும் செறிந்திட்டு, அவர் திருவேடம், ஆலயங்கள் எல்லாம் அரன் எனவே தொழுது, இறைஞ்சி, ஆடிப் பாடி, எங்கும் யாம் ஒருவர்க்கும் 'எளியோமல்லோம் : யாவர்க்கும் மேலானேம்' என்று இறுமாப்பெய்தி, திங்கள் முடியார் அடியார் அடியோம் என்று திரிந்திடுவர் (பக் - 583). 'ஈனர்கட்கெளியேனலேன் திருவாலவாயரன் நிற்கவே' என்னும் ஆளுடையபிள்ளையார் திருவாக்குண் மையும், 'யாமார்க்கும் குடியல்லோம் யாதுமஞ்சோம்'' 'நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்' 'இறுமாந் திருப்பன் கொலோ ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டு' என்னும் திருவாக்குக்களும் சிவஞானச் செயலுடையோர் தன்மையை நன்கு விளக்குவனவாம். 'இந்திரிய மெனப் பற்றி' (பக்க - 537) என்னும் திருவிருத்தம் திருநாவுக் கரசு சுவாமிகள் அருளிச்செய்த 'பொய்ம்மாயப் பெருங் கடலிற் புலம்பாநின்ற புண்ணியங்காள்' என்பனபோன்ற தோத்திரப் பெருமையை நன்கு தெளிவிக்கும்.

''இத்தன்மை யரம்பையர்கள் எவ்விதமும் செயல்புரிய
அத்தனுர் திருவடிக்கீழ் நினைவகலா வன்புருகு
மெய்த்தன்மை யுணர்வுடைய விழுத்தவத்து மேலோர்தம்
சித்தநிலை திரியாது செய்பணியின் தலைநின்ருர்''.

''இம்மாயப் பவத்தொடக்காம் இருவினைகள் தமைநோக்கி
உம்மாலிங் கென்னகுறை யுடையேன்யான் திருவாரூர்
அம்மானுக் காளானேன் அலையேன்மின் நீரென்று
பொய்ம்மாயப் பெருங்கடலுள் எனுந்திருத்தாண் டகம்
[புகன்ருர்''

என்ற சேக்கிழார்பெருமான் அருளிச்செயல் சாத்திரவுண்மையை எத்துணை வலியுடையதாகச்செய்கிறது. விரிக்கிற் பெருகும்.

இனி, சிவஞானசித்தியார் 'ஆகமவுணர்வின் பிழிவு' என்பது மட்டுமல்ல. அநுபவவுணர்வின் சிகரமும் அது. பெரிய புராணத்தை வரலாற்று நூல் என்பேமா? ஒழுக்க நூல் என்பேமா? அஃது அநுபவவுணர்வின் சாரமாகிய நூலின் சிகரம் என்பதே சாலும். சிவஞானசித்தியாரென்னும் இச்சாத்திர நூலுக்குஉரைகண்டார் ஆறுஆசிரியன்மார். அவ்வுரைகள் 'அறுவருரை' என்னும் தொகுப்புடன். 66 ஆண்டுகட்கு முன் அச்சிடப்பெற்றுள்ளது, ஆயினும், அது கிடைப்பது பெரிதும் அரிதாயிற்று. இதனையடுத்து அவ்வுரைகளின் தொகுப்பு ஆதீன வெளியீடாக வரவுள்ளது.

சிவஞானசித்திக்கு உரைகண்டார் அறுவரில் ஸ்ரீ மறைஞானதேசிகர் என்பார் ஒருவர். இவர், சிதம்பரம் கண்கட்டி – மறைஞானபண்டாரத்தின் மாணவர். சீகாழிப்பதியினர். பரம்பரைச்சைவவேளாண் குலத்தவர் அந்தணர் மரபினர் என்பர் ஒருசாரார். ஆராய்தற்குரியது. வடமொழி தமிழ்மொழியில் வல்லவர். இவர் உரையில் ஆகமங்கள் பலவற்றினின்று மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன. தமிழ் நூல்களிற் பல எடுத்துக்காட்டாகவுள. அளவைநூல் ஒன்று இவர்காலத்துப்பிரசித்தமாக

வழங்கப்பட்டதுபோலும். அளவையிலக்கணவுரைப்பகுதியில் அந்தநூலைப் பெரிதும் இவர் எடுத்தாண்டுள்ளனர். இவர்காலம் பதினேழும் நூற்றாண்டு என்பர்.

ஸ்ரீ ஸ்கந்தபரம்பரை வாமதேவ சந்தானம் சூரியனார் கோயில் ஆதீனத்து இரண்டாவது குருமஹாசந்நிதானம் **ஸ்ரீ சிவாக்கிரயோகிகள்** ஓர் உரையியற்றியருளினர். இவர்கள் தொண்டைநாட்டில் அவதரித்தவர்கள். அந்தணர் மரபினர். சூரியனார் கோயில் ஆதீனத்தை யடைந்து பிரதம பரமாசாரியராகிய ஸ்ரீ சிவக்கொழுந்தாசாரியர்பால் சிவஞானோபதேசமும், சைவசந்நியாசமும், ஆசாரியாபிஷேகமும் பெற்றுவிளங்கினர். திருவீழிமிழலையில் வசித்து வந்தமையின் வீழிச்சிவாக்கிரயோகிகள் எனவும், வருணச்சிரம அதீதராக விளங்கினமையின் அதிவர்ணசிரம சிவாக்கிரயோகிகள் எனவும் பெயர் பெற்றனர். இவர்கள் சைவசந்நியாசபத்ததி, சிவாக்கிரபத்ததி என்னும் கிரியாதீபிகை, வடமொழிச் சிவஞானபோதத்துக்குச் சங்கிரகவியாக்கியானம் என்னும் சிற்றுரை சிவாக்கிரபாஷ்யம் என்னும் பேருரை முதலியன வடமொழியிலேயே இயற்றியருளினர். சர்வஞானோத்தரத்தின் ஞானபாதத்துக்கு அகோரசிவாசாரியர் செய்த சிவசமவாதவுரையை சிவாக்கிர பாஷ்யத்திலே மறுத்தருளினர். சைவபரிபாஷை என்னும் வடமொழி நூலொன்றும் செய்தனர். சர்வஞானோத்தரம், தேவிகாலோத்தரம், அரதத்தாசாரியர் செய்த சுருதிசூக்திமாலை முதலியவைகட்குத் தமிழுரையும் செய்திருக்கின்றனர். இருநூற்றுப்பதினேந்து திருவிருத்தங்களையுடைய சிவநெறிப்பிரகாசம் என்னும் சித்தாந்த நூல் ஒன்றும் தமிழில் அருளிச் செய்தனர். இவர்கள் காலம்—கி–பி 1564 என்பர்.

சிவாக்கிரயோகிகள் உரையில் வடமொழி நூல்களின் மேற்கோள் நிறைந்துள்ளன. மணிப்பிரவாள நடையில் அமைந்த இவ்வுரையே சித்தியாருக்குள்ள உரைகளில் முற் பட்ட தென்பர் பெரியோர். இதுவும் ஆராய்தற்குரியது.

இனி, திருவண்ணுமலை யாதீனத்து ஸ்ரீ **ஞானப்பிரகாச முனிவர்** என்பவர் ஓர் உரையியற்றியுள்ளனர். ஞானப் பிரகாசமுனிவர் யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியில் அவ தரித்தவர்கள். பரம்பரைச் சைவவேளாளர். பாண்டிமழ வர் குடியில் வந்தவர். தந்தையார் காராளபிள்ளை என் பவர். யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலரவர் களின் முன்னோரில் ஒருவர் இவர் என்பர். திருப்புகலூர் அண்ணுசாமி சிவாசாரியாரிடம் சிவதீட்சை பெற்றவர் தேவியை உபாசித்து மந்திரசித்தி பெற்றவர். வங்காள தேசத்தை யடைந்து ஒருபிராமண சந்நியாசியிடத்து வட மொழி நூல்களைக்கற்று வல்லவராஞர். பின்பு, திருவண்ணுமலை யாதீனத்தை யடைந்து சைவசந்நியாச மும் சிவஞானோபதேசமும் பெற்றுச் சிவாகமங்களை ஓதியுணர்ந்தார். பௌஷ்கர ஆகம விருத்த சித்தாந்த சிகா மணி, பிரமாணதீபிகை, பிராசாததீபிகை, அஞ்ஞான விவேசனம், சிவயோகசாரம், சிவயோகரத்னம், சிவாக மாதி மான்மியசங்கிரகம், ஓமாத்திரிகற்பம் முதலியவற்றை வடமொழியில் இயற்றியருளினர். இச்சிவஞான சித்தியார் சுபக்கத்துக்கு ஓர் உரை தமிழிலே இயற்றினர்.

இவ்வுரை மறைஞானசம்பந்தர், சிவாக்கிரயோகிகள் உரைகளுக்குப் பிந்தியது. இவர் இவ்வுரையில் 'திரு மறைஞானதேசிகர், ஸ்ரீ சிவக்கொழுந்தாசாரியர் என்னும் இவர்கள் சிவஞானசித்திக்குச் செய்தவுரைகள் விரிந்தபடி யினாலே எழுவாய் பயனிலை பொருட்புணர்ச்சி பொள்ளெ னத்தோன்றுவாயினும் தீவிர தீவிரதர புத்திமான்கள்

தங்கள் தங்கள் சம்பிரதாயத்துக்கு மாறிச் சில விரோதித் தன் மாத்திரம் நீக்கி நீர்நீக்கிப் பால்கொளும் அன்னம் போலப் பொருள்கொள்வார்கள் ஆதலானும், மற்றை யோர் உரைத்த வுரைகள் தூரம்போய்ச் சுட்கதர்க்கமாய் மூடியுமாதலானும் மந்தமதிகட்கு மயக்கம் போக்கும் பொருட்டுச் சுருக்கமாக ஓருரை சொல்வாம்' என நூல் முன்னர்க்காப்பும் உரையும் வரைந்திருக்கின்றனர்.

இதனால், மறைஞானசம்பந்தர், சிவாக்கிரயோகிகள் உரைகளேயன்றி இதற்கு வேறுரைகளும் அக்காலத்து உள்ளன என அறியக்கிடக்கின்றது.

இனி, ஞானப்பிரகாசமுனிவர் உரைத்தவுரை 'பொருந் தாவுரை' எனக்காட்டி இவ்வாதீனத்துத் திராவிடமா பாடிய கர்த்தராகிய ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் **'சிவ சமவாதவுரை மறுப்பு' 'எடுத்து என்னும் சொல்லுக்கிட்ட வயிரக்குப்பாயம்' 'சிவசமவாத கண்டனம் என்னும் சிவ சமவாதவுரை மறுப்பு'** என்னும் நியாயகண்டனங்கள் செய்தருளினர். சிவசமவாதம் சுருதி உத்தி அநுபவ விரோதமாமாறும், சித்தாந்த சைவநூலான சிவஞான சித்திக்கு அவ்வுரை இணங்காதவாறும், பிறவும் இம்மறுப் பினுள் அவர்களால் நன்றுணர்த்தப்பட்டன. இன்னும், சித்தாந்த ரகசியங்கள் பல இயைபுபற்றி வெளிப்படை யான் அதன்கண் எடுத்தோதப்பட்டனவும் உள.

இனி, ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் சிவஞான பாடியத்துப் பொதுவதிகாரத்து இறுதி அதிகரணத்தில், சிவசமவாதம் இயைபுபற்றி எடுத்துத் தடைவிடைகளான் மிக விரித்து மறுத்துச் சித்தாந்த சைவம் நாட்டினர். சிவ சமவாதவுரை மறுப்பினுள் ஆண்டாண்டு விரிவஞ்சிக்

கூறுது விடுத்த நுண்பொருள்களெல்லாம் ஆண்டும் பிரண்டும் தெளிவாக விளக்கியருளினர்கள். ஆண்டுக் காண்க. 'சிவசமவாதவுரை மறுப்பு முதலியன' சிவஞான சித்தியார் கற்போருக்கு மிகமிக இன்றியமையாதன ஆகலின் அந்த நூல்களும் அச்சிட்டு விரைவில் வெளிவரச் சித்தமாயுள்ளன.

இனி, நிரம்பவழகிய தேசிகர் செய்தருளிய வுரை மற்றொன்று, அது சிவாக்கிரயோகிகளது கருத்துக்குச் சிலசில இடங்களில் மாறுபடும், நிரம்பவழகிய தேசிகர் வேதாரணியத்திலே பரம்பரைச் சைவவேளாளர்குலத்திலே அபிஷிக்தர் மரபிலே தோன்றியவர்கள். வடமொழி தமிழ்மொழிகளில் மிக வல்லவர், கமலைஞானப்பிரகாசருடைய மாணவருள் ஒருவர். சித்தாந்த சாத்திரப்பயிற்சி மிக்குடையவர், சிவஞானசித்தியாருக்கேயன்றித் திருவருட்பயனுக்கும் உரை வரைந்துள்ளனர். சேதுபுராணமும் திருப்பரங்கிரிப்புராணமும் செய்தனர். திருப்பரங்கிரியிலும், மதுரையிலும் நெடுநாள் வசித்துவந்தனர் என்ப. பரஞ்சோதிமுனிவரோடு உடன்பயின்றவர் எனவும் கூறுவதுண்டு. இவர்கள் காலம் பதினேரும் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர்.

இனி, "பாதிவிருத்தத்தால் இப்பார் விரூத்தமாக உண்மை சாதித்தார்" எனத் தாயுமானசுவாமிகள் அருளிச் செய்த 'பாதிவிருத்தம்' யாது? என ஆராய்தல் இன்றியமையாததொன்றன்றே! சிவபோகசாரத்திலே "ஆறாறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும், நீறாக முத்திநிலை நிற்போர்க்குப்– பேறாகப், பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியின் சித்தியிலே, ஓர் விருத்தப் பாதிபோதும்" என

ஸ்ரீ குருஞான சம்பந்ததேசிகமூர்த்திகளுமன்றே !! அருளிச்செய்தனர். மேற்கூறிய இருகுரவரும் இரண்டு ஆதீன கர்த்தரன்றே ! தாயுமானவர் ஆதீனம் திட்டைப் புகைவண்டி நிலயத்தின் கீழ்பால் அன்னப்பன்பேட்டையில் உள்ளது. மற்றொன்று உலகமறியப்பட்டதொன்றுகிய தருமையாதீனமாம். இரண்டு ஆசிரியர்களால் குறிக்கப்படும் பாதிவிருத்தம் "அறியாமை அறிவகற்றி அறிவினுள்ளே அறிவுதனை அருளினுல் அறியாதே அறிந்து, குறியாதே குறித்தந்தக் கரணங்களோடும் கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயின்" (சித்தி - சூத் - 8, அதி - 2, செய் - 30) என்பது. இதிற் கூறிய அகற்றலும் அறிதலும் அருளினலன்றிக் கூடாது. அருளே வடிவமாக எழுந்தருளிய ஞானசாரியனது திருவருள்தான் அவ்வருள். அறியாமை என்பது கேவலம். அறிவென்பது சகலம். கருவிகரணங்களோடு கூடாமல் ஆணவத்தில் ஆன்மா அழுந்திநிற்பது கேவலம். கேவலம் - தனி; ஈண்டுக் கருவி கரணங்களோடு கூடாமை. "**கேவலாவத்தையாவது**— தேகாதிகள் ஒன்றுமற்று, குணமற்று, தொழிலற்று, போகமற்று, கர்த்தாவாகையற்று, மைக்குள் மணிபோல ஆணவமலத்தினுலே மூடப்பட்டு ஓர் அறிவுமற்று வியாபியாய் இருக்கும் அவதரம். **சகலாவத்தையாவது**— பஞ்ச கோசபெத்தனுய் அதனுலே பரிச்சின்னன் ஆகி, கிஞ்சிக்ஞனுய், அநாதிகன்மத்துக்கு ஈடாய், அநேக யோனிகளிலும் சஞ்சரித்து விடயங்களைப் புசிக்கும் அவதரம்" என்பது ஞானமிர்தக் கட்டளை. "கேவலமாவது மலமளைய நின்ற அவதரம். சகலமாவது எல்லாக் கருவிகளோடும் கூடி நின்று வினைப்பயனை அநுபவிக்கும் அவதரம்" என்பது சுத்த சிவப்பிரகாசக்கட்டளை. கேவலமும் சகலமும் இருவகைப்பாசங்கள். பாசங்களின் நீங்குதற்குக்

குருவருள் வேண்டும். 'அறிவினுள்ளே அறிவுதனை அறியாதே அறிதற்கும்' குருவருள் வேண்டும். இது சுத்தாவத்தை. **சுத்தாவத்தையாவது** – இருவினையொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் வந்த காலத்துச் சரியை கிரியா யோக ஞான பாதங்களையுணர்ந்த குருகடாட்சத்தினலே மும்மலங்களையும் நீங்கிச் சச்சிதானந்த சிவமாக விளங்கும் அவதரம் ''என்பது ஞானமிர்தக் கட்டளை. அறிதல் - கேட்டல், குறித்தல் - சிந்தித்தல், கேட்டல் சிந்தித்தல்களின் பயன் தெளிதல், அதனையே இங்கே 'அறியாதே அறிந்து குறியாதே குறித்து' என்றது. கேட்கும் முறைமையிற் கேட்டலும், சிந்திக்கும் முறைமையிற் சிந்தித்தலும் வேண்டும். பின்பு அன்புசெய்து அடங்கிநிற்கப் பெறுதல் அவசியம். குழைதல் – அன்பு செய்தல். கேட்டல் கூடும், சிந்தித்தல் கூடும், தெளிந்து அன்பு செய்தலும் கூடும். ஆனல், அடங்கி நிற்கப் பெறுதல் அருமையேயாம். அஃது எளிதன்று. இதனையே நமது தாயுமானசுவாமிகள் ''ஐந்துவகையாகின்ற பூதமுதல் நாதமும் அடங்க வெளியாக வெளிசெய்து, அறியாமை அறிவாதி பிரிவாக அறிவார்கள்; அறிவாக நின்ற நிலையில் 'சிந்தையறநில்' என்று 'சும்மா இருத்தி' என அருளிச்செய்தார்கள். சிந்தையற நிற்றலும், சும்மா இருத்தலும் அம்மம்ம! அவ்வளவு எளிதா? 'சிந்தையையடக்கியே சும்மா விருக்கின்ற திறம் அரிது' எனப் பிறிதோரிடத்துக் கூறினமையும் காண்க. முதல்வன் நிராதாரமாய்த் தோன்றவேண்டி அறியாமையும் அறிதலுமாகிய இருவகைப் பாசங்களும் நீங்கித் தம் அறிவின் கண்ணே கேட்டல் அறிவினைக் கேட்கும் முறையிற் கேட்கச் செய்தவர் ஆசிரியர் அன்ரே! அந்தஞானசாரியருடைய திருவருளையின்றி இவை யாவும் அமையா: ஆகலின், 'அருளினுல்' என இடைநிலைத் தீவகமாக வைத்தருளியமையும் சிந்திக்கத்தக்கது.

இனி, 'அறியாமை யறிவகற்றி' என்னும் திருவிருத்தம் தாயுமானவர் பாடலில் அமைந்து கிடக்கும் முறை வருமாறு:— 1. 'அருளினுல் அறியாமை அறிவு அகற்றி'– 'ஐந்து வகையாகின்ற.....அறியாமை அறிவாதி பிரிவாக அறிவார்கள்; 2. அறிவினுள்ளே அறிவுதனை அறியாதே அறிந்து' – 'அறிவாகி நின்ற நிலையில்,; 3. 'குறியாதே குறித்தந்தக் கரணங்களோடும் கூடாதே' - 'சிந்தையற'; 4. 'வாடாதே' – 'நில்லென்று,; 5. குழைந்திருப்பையாயில்' – 'சும்மா இருத்தி'; 6. பிறியாத சிவன்தானே பிரிந்து தோன்றிப் பிரபஞ்ச பேதம் எல்லாம் தானுய்த் தோன்றி' – 'வெள்ளம் தேக்கித் திளைத்து'; 7. இவையெல்லாம் அல்லவாகி நெறியாலே நின்று என்றும் தோன்றிடுவன் நிராதாரனுயே'–'நானதுவாயிருக்க' எனப் பிரித்துச் சம்பந்த முண்மை காட்டியிருக்கின்றூர்கள் இவ்வாதீனத்துச் சைவப்பிரசாரகர் ஸ்ரீ பொ. முத்தையபிள்ளை யவர்கள்.

இத்திருவிருத்தக் கருத்து "அறிவறி யாமை யிரண்டு மகற்றிச், செறிவறி வாயெங்கும் நின்ற சிவனைப், பிறிவறி யாது பிரானென்று பேணும், குறியறி யாதவர் கொள்ளறி யாரே" எனத் திருமந்திரத்தில் அமைந்து நின்றமை காண்க.

இனி, "குறியைக் குறியாது குறித் தறியும், நெறியைத் தனிவே லெநிகழ்த் திடலும், செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற், றறிவற் றறியா மையுமற் றதுவே" எனவும், "அறிவொன் றறநின் றறிவா ரறிவிற், பிறிவொன் றறநின் றபிரா னலையோ" எனவும், "சும்மா விருசொல் லறவென் றலுமே, அம்மா பொருளொன் றுமறிந் திலனே" எனவும் ஸ்ரீ அருணகிரிநாதர் தமது கந்தரநுபூதியில் அருளிச் செய்

நமையும் இதனை நன்குவிளக்குமென்க. இவ்வுபதேச மொழியைக் கருதியன்றே. ''ஐயா! அருணகிரியப்பா! உனைப்போல, மெய்யாக வோர்சொல் விளம்பினர்யார்?'' எனத்தாயுமானவர் தம்பாடலில் அருளிச்செய்தனர். விரிக்கிற் பெருகும்.

இந்த நூலை ஆராய்ந்து பதிப்பிக்கும் காலத்து உடனிருந்து ஒப்புநோக்குதல் முதலிய உதவிகளைச்செய்தவர்கள் என்னிடத்துத்தமிழ்க்கல்வி பயின்று வருபவர்களாகிய திரு. இராமமூர்த்தி ஐயரும், சிரஞ்சிவி பஞ்சாபகேசநாடாரும் ஆவார். பிரதிகளை யெல்லாம் வைத்து, ஒப்புநோக்கிச் செப்பஞ் செய்யும் காலத்தும், செய்யுள் முதற்குறிப்பகராதி, அரும்பத அகராதி, அரும்பதக்குறிப்பகராதி, அருந்தொடரகராதி முதலியவைகளை உடனிருந்து குறிப்பின்வழி நடந்து செய்துமுடித்தவர் என் இளவலும் தமிழ்ப்புலமையும் சித்தாந்த சாத்திரவுணர்ச்சியுமுடைய வரும் ஆகிய சிரஞ்சிவி T. S. இராசகோபால பிள்ளை, வித்துவான், சிரஞ்சிவி V. நடராச பிள்ளை, M. திருநாவுக்கரசு முதலியோர். இவர்களுக் கெல்லாம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் கருணையும், ஸ்ரீ பஞ்சாக்கர பரமாசாரியர் திருவருளும் பெருக உண்டாவதாகுக எனச் சிந்தித்து வந்திக்கின்றேன். இனி,

''பின்னர்த் தொல்காப்பியப் பரிசோதனைக்காகத் தேடியபோது ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் பிரதி அகப்பட்டது. அதுகொண்டு கலித்தொகை அருமையுணர்ந்து அதனை எப்படியும் உலகிற்குப் பயன்பட அச்சிடவேண்டுமென்னும் அவாவுற்று ஸ்ரீ ஆதீன மடாதிபதிகளுக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டேன், காருண்ணியமும் கலாபரிபாலனமுமே தமது திருமேனியாகக்

கொண்டு விளங்கும் திருவாவடுதுறைச் சற்குருநாத சுவாமிகள் உடனே தங்கள் மடத்துப் பிரதியுடன் வேறும் இரண்டு பிரதி தென் தேசத்தினின்று வருவித்தனுப்பி அச்சிட்டபிரதியும் 20 எடுத்துக்கொள்வதாக உத்தரவு செய்தது. இப்பேருபகாரத்திற்கு யானே அங்கு அடிமையாவதன்றி வேறுயாது கைம்மாறுளது?எனவும்,

சர்வஜித்து - ஆவணி - 1887. (கலித்தொகைப் பதிப்புரை - பக்கம் - 27)

"என் முயற்சிக்கு ஸ்ரீ கைலாசபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்துச் சற்குருநாத சுவாமிகளாயிருந்து அடைந்துபோன ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக மூர்த்திகள் செய்துவந்ததுபோலவும், இப்பொழுது ஷை சுவாமிகள் பட்டத்திற்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிகமூர்த்திகள் செய்துவருவதுபோலவும், மற்றைத் தமிழ்நாட்டு ஆதீனங்களில் ஆங்காங்கு எழுந்தருளியிருக்கும் மகாசந்நிதானங்கள் கைகொடுத்து வருவார்களாயின் இன்னும் பல பண்டைக்காலத்துத் தமிழ் நூல் எடுத்துப் பரிசோதித்துப் பிரசரிப்பதில் அதிக ஊக்கம் உடையவனுவேன்." எனவும்

(தொண்டமான் புதுக்கோட்டை, விரோதி-ஐப்பசி. 1889. இலக்கணவிளக்கம் பதிப்புரை-பக்கம் - 19) யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் எழுதியமை காண்க. இதனுல் தொடர்ச்சியாகவே தொன்றுதொட்டு இவ்வாதீனம் செய்துவரும் தமிழ்வளர்ச்சி, சமயவளர்ச்சி கூள எளிதில் அறியலாம்.

இனி, இவ்வாதீனத்துப் பதினுருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்திகள் காலம் 1868—1888. பதினேழாவது மகாசந்நிதானம் ஸ்ரீ அம்பலவாண

தேதிகமூர்த்திகள் காலம் 1888 — 1920. பதினேழாவது மகாசந்நிதானத்தின் கட்டளைப்படி கீழே கண்ட நூல்கள் ஆதீனப்பொருளுதவியினால் வெளிவந்தன. அவை:

1. மெய்கண்டசாத்திரம் முழுவதும் உரையுடன் காஞ்சி - நாகலிங்க முதலியாரவர்கள் பதிப்பு. ஏவிளம்பி - துலா-மீ (கி. பி. 1897)

2. ஷி பதிப்பு சிவஞானசித்தியார் சுபக்கம் பதவுரை. ஏவிளம்பி – மேஷ-மீ (கி. பி. 1897)

3. திருவாவடுதுறைக் கோவை சுபகிருது – தை – (கி. பி. 1903) உ. வே. சா. பதிப்பு.

4. மண்ணிப்படிக்கரைப்புராணம் பிலவங்க – சித்திரை (கி. பி 1907) உ. வே. சா. பதிப்பு.

5. காஞ்சிப்புராணம் இரண்டு காண்டங்கள் காஞ்சி – நாகலிங்க முதலியார் பதிப்பு சாதாரண (கி. பி. 1910)

6. உபதேசகாண்டம் பொழிப்புரையுடன் ஈக்காடு-இரத்தினவேல் முதலியார் பரிதாபி – மகர ரவி (கி.பி.1913)

7. திருக்கோவையார் பதவுரை, திருக்கோவையார் உண்மை முதலியன. செந்தில்வேல் முதலியாரவர்கள்.

8. காசிகண்டம் பொழிப்புரையுடன் ஈக்காடு இரத்தினவேல் முதலியாரவர்கள் (1895)

9. ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் பிரபந்தங்கள் மதுரை — இராமசாமி பிள்ளையவர்கள் நந்தன சிங்கமதி.

10. தேவாரம் தலமுறை மதுரை — இராமசாமி பிள்ளையவர்கள் விஷு – மார்கழி.

11. ஆதீனசைவப்பிரசாரகர்–தூத்துக்குடி-பொ. மு. சிவஞான சித்தியார் சுபக்கம் ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் அருளிச்செய்த பொழிப்புரையைத்தழுவி யெழுதிய விரிவுப் பொழிப்புரை - முதற்பதிப்பு – 1914.

இவ்வாதீனத்துப் பதினெட்டாவது மகாசந்நிதானம் ஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்திகள் காலம் – 1920–1922.

ஐங்குறுநூறு பழையவுரை ரௌத்திரி – ஐ ப சி (கி-பி 1920) உ. வே. சா. 2-ஆம் பதிப்பு

சிலப்பதிகாரம் 2-ஆம் பதிப்பு ரௌத்திரி – (1920) உ-வே-சா.

இனி, 17-வது மகாசந்நிதானம் காலத்திலே யாழ்ப்பாணத்து வண்ணைநகர் ஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்கள் சாதாரண – (1911) ஆண்டில் தேவாரம் தலமுறையையும்; சிவஞான போதச் சிற்றுரை – மாபாடியக் குறிப்புக்களுடன் கூடிய சில பகுதிகளையும் (பராபவ – 1907) பதித்தார்கள் திருமுறையின் முகவுரை 5-ம் பக்கத்தில் பண்டிதரவர்கள் அடிக்குறிப்பில் எழுதுவதாவது " திருக்கைலாச பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் யான் திராவிடமாபாடியம் அச்சிட்டு வெளிப்படுத்திய ஞான்று ஐம்பது புத்தகங்கள் பெற்று அவற்றின் கிரயத்தை அளித்து இன்புறுத்திற்று" என்பது. பொ. முத்தைய பிள்ளையவர்கள் பதித்த பொழிப்புரை 200 பிரதிகள் ஆதீனத்தில் வாங்கப்பட்டன. 1926 - ஆண்டில் இரண்டாம் பதிப்புப் பிரதிகளும் 200 வாங்கப்பட்டன என்க.

பத்தொன்பதாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ வைத்தியலிங்கதேசிகசுவாமிகள் காலம் 1922–1937 வரையில்.

பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு அக்ஷய – 1926.

வண்டுவிடுதூது 2-ஆம்பதிப்பு - பிரமோதூத - 1931.

20-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீ அம்பலவாணதேசிக மூர்த்திகள் காலம் 1937 — 1951 வண்டுவிடுதூது 3-ம் பதிப்பு. சர்வசித்து – 1947. உ-வே-சா.

மெய்கண்ட நூல்கள் உரைநடை ஸ்ரீ கா. சுப்பிர மணியபிள்ளை M. A., M. L,. அவர்கள் எழுதியது. காஞ்சி புரம் திரு. கி. நாராயணசாமி முதலியார் (1938) பதித்தது. இப்பதிப்புக்குரிய பொருள் ஒருபகுதிதரப்பட்டது.

தூத்துக்குடி – ஸ்ரீ ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் எழுதிய சிவஞான சித்தியார் ஆராய்ச்சி (எண் - 30) இவ் வாதீனப் பொருளுதவி பெற்றுள்ளது (1949)

இந்த 20-வது குருமகாசந்நிதானத்தின் காலமுதலாக ஆதீனத்திலுள்ள நூல்களை ஆதீனவித்துவான்களைக் கொண்டு பரிசோதித்து அச்சிட்டு இலவசமாக வழங்கப் பட்டு வருவது உலகறிந்த செய்தி. இவ்வரலாறுகளைச் செவ்வேயறியாமையாற் பலர் இருபதாம் நூற்றாண்டின் செம்பாதிவரையில் திருவாவடுதுறை யாதீனம் தமிழ்ப் பணி, சைவசமயப்பணி செய்திலதென்பர். அவரறிந்தபடி அது. இவ்வாதீன வரலாறு, அம்பலவாணதேசிகர் நினைவு மலர், சைவப்பேரரசு முதலிய நூல் வெளியீட்டால் ஆதீ னம் செய்துவரும் அருந்தொண்டுகள் நன்கு புலனும்.

இனி, காஞ்சி நாகலிங்கமுதலியாரவர்களைக்கொண்டு பதிப்பிக்கப்பெற்ற பிரதி இவ்வாதீனத்திலே பதினேழாவது குருமகாசந்நிதானத்தினிடத்தும், மகாவித்துவான் பிள்ளை யவர்களிடத்தும் முறையே சித்தாந்த சாஸ்திரங்களையும்

இலக்கண இலக்கிய நூல்களையும் கற்றுச்சிறந்த மதுரை–இராமசாமி பிள்ளையவர்களால் செப்பஞ் செய்தனுப்பப் பெற்ற ஆதீனப்பிரதி என்பர் பதிப்பாளர்.

ஏட்டுப்பிரதிகளின் துணைகொண்டு பரிசோதித்த காலத்தில் அச்சிட்ட புத்தகங்களிலெல்லாம் அங்கங்கே சில சொற்களும் சொற்றொடர்களும் விடுபட்டுள்ளன. இப்பதிப்பில் அவை சேர்க்கப்பட்டுள. இப்பதிப்பையும் முன்புள்ளபதிப்புக்களையும்உடன்வைத்துஆராய்வார்க்கே அது புலனும். மற்றவர்க்கு அருமை புலப்படாது.

இப்புத்தகத்தைப் படிப்போருக்கு அநுகூலமாக இருக்கும்படி விஷய அட்டவணை முதலியன முன்னே கூட்டப்பட்டிருக்கின்றன.

இந்நூலைப் பதிப்பித்தற்கு உதவியாயிருந்த பிரதிகள் வருமாறு :—

1. திருவாவடுதுறை ஆதீனத்து (சரஸ்வதி மகால்) கல்விக்களஞ்சியத்தில் உள்ள உரையுடன் கூடிய பழைய ஏட்டுப்பிரதிகள் — 3.

2. இவ்வாதீனத்து அடியார் கூட்டத்தில் ஒருவரும், ஆதீனம் காறுபாரும் ஆகிய ஸ்ரீ சுந்தரலிங்கத்தம்பிரான் சுவாமிகள் (கி. பி. 1892) கையெழுத்துக் காகிதப்பிரதி - 1

3. யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ த. கைலாச பிள்ளையவர்களால் (1883) சுபானு – ஆனியில் பதிப்பிக்கப்பட்ட சிவஞான சித்தியார் சுபக்கம் பொழிப்புரைமட்டும் உள்ள அச்சுப்பிரதி.

4. இவ்வாதீனத்துப் பதினேழாவது குருமஹாசந்நிதானம் ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகள் கட்டளை

பிட்டருளியபடி காஞ்சி – ஸ்ரீ நாகலிங்கமுதலியாரவர்களால் (கி–பி. 1897) ஏவிளம்பி – துலாமீ பதிப்பிக்கப்பட்ட மெய்கண்டசாத்திரம் முழுவதும் உள்ள உரைப் புத்தகம். இதில் பதவுரை மட்டும் உள்ளது.

5. ஸ்ரீ தாமோதரம்பிள்ளையவர்களால் (1917) அச்சிடப்பட்ட பதவுரை மட்டும் உள்ள அச்சுப்புத்தகம்.

6. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் துந்துபி - தை (1923)ல் பதிப்பிக்கப் பெற்ற சிவஞான சித்தியார் சுபக்கம் இருவருரைப் புத்தகம்.

7. இவ்வாதீனத்துச் சைவப் பிரசாரகர் தூத்துக்குடி ஸ்ரீ பொ. முத்தையபிள்ளையவர்களால் பதிப்பிக்கப்பெற்ற (1914, 1926) சுபக்கம் நூதனப் பொழிப்புரைப் புத்தகம்.

8. சென்னை பச்சையப்ப முதலியார் கல்விச்சாலைத் தமிழ் உபாத்தியாயர் ஸ்ரீ ஆ. சிங்காரவேலு முதலியாரவர்களால் பார்வையிடப் பெற்றுப் (1899) பதிப்பித்த சைவ சித்தாந்த சாத்திரம் பதினன்கின் மூலம் மட்டு முள்ள புத்தகம்.

9. தருமபுரம் ஆதீனப்பதிப்பு மெய்கண்டசாத்திரம் முழுவதும் மூலம் மட்டு முள்ள (1942) புத்தகம் முதலியன.

இவைகளுள் ஏடெழுதுவோரால் நேர்ந்துள்ள எழுத்துப் பிழைகள் மலிந்திருப்பினும் ஏடுகளில் மூலமும் உரையும் திருத்தமாக உள்ளன. கையெழுத்துக் காகிதப் பிரதி மிகப்பழைய காகிதமாக ஒடிந்து போகும் நிலையில் உள்ளது. ஆயினும் திருத்தமாகப் பிழையின்றியிருந்தது.

இனி, ஸ்ரீ கைலாச பிள்ளையவர்கள் பதிப்பித்த பொழிப்புரைப்புத்தகத்தின் முகவுரை இறுதிப்பகுதியில் அவர்கள் குறித்திருப்பது வருமாறு :— ''ஸ்ரீ நாவலரவர்களிடத்தே நான் பெற்றுக்கொண்ட பிரதி அவர்களால் ஒருதரம் பரிசோதிக்கப்பட்டமையால் அதனைக்கொண்டும், இணுவில், ஸ்ரீ நடராசையரவர்கள் தந்த இரண்டு பிரதிகளைக்கொண்டும் இந்நூல் அச்சிடப்பட்டது. ஸ்ரீ நடராசையரவர்கள் இரண்டு ஏட்டுப்பிரதிகள் தந்தமையேயன்றி எனக்கு இந்நூலின்கணிருந்த சந்தேகங்களையும் மாற்றினர்கள்...'' என்பது

அன்றியும், அதற்கு மேற்பகுதியில் அவர்களே ''வேத வாக்கியங்களை வலியுறுத்துவனவாய சரித்திரங்களைக் கூறும் புராணம் முதலியவைகளே சைவசமய நூல்கள் எனவும், அவைகளில் உள்ள வர்ணனைகளும் குறிப்பான் வேறு பொருள் உணருமாறு சொல்லப்பட்ட சரித்திரங்களுமே சைவத்துண்மைகள் எனவும் கொண்டு, சைவர்களுக்கு வேறு சமயநூல் யாதென மயங்குவார்க்கு, அம் மயக்கம் தீர்தற்பொருட்டும், சைவநூலுணர்ச்சி நன்குதித்தற் பொருட்டும் இந்நூலை அச்சிடத்தொடங்கினேன்'' என எழுதியுள்ளமை காண்க.

ஸ்ரீ நாவலரவர்கள் சௌமிய (1849) ஆண்டிலே சென்னையிலிருந்து தட்சிணதேச யாத்திரை செய்து கொண்டு வந்தார்கள். அப்போது ஸ்ரீ மெய்கண்டசந்தானத்துப் பிரதம பரமாசாரியராகிய ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளைத்தரிசித்து உபயகுருமகாசந்நிதானங்களையும் தரிசித்தார்கள். அவர்களுடைய பிரசங்கவன்மையைக்குறித்து மகிழ்ந்து வியந்து, 'நாவலர்' என்னும் பட்டத்தைச் சூட்டி, அவர்களை மகாசந்நிதானம் கௌரவித்தது,

(நாவலர் சரித்திரம் – 28–29) மற்றும், நன்னூல் விருத்தி யுரை, இலக்கணக்கொத்து, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, தர்க்கசங்கிரகம் அன்னம்பட்டீயம் மொழி பெயர்ப்பு, சிவஞானசித்தியார் பொழிப்புரை, சிவஞான போதச் சிற்றுரை முதலியவைகளை அருளிப் பதிப்பிக்கச் செய்தருளியது. அவைகளைப் பெற்று மகிழ்ந்த நாவல ரவர்கள் (1851) விரோதிகிருது ஐப்பசி மாதத்திலே நன் னூல் விருத்தியுரையை அச்சிட்டு வெளிப்படுத்தினர்கள். பின்பு மற்றைய நூல்களையும் நாளடைவில் அச்சிட்டார் கள். எனினும், ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் அருளிய சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞானசித்தி முதலியவை கள் ஸ்ரீ நாவலரவர்களால் பதிப்பிக்கப்படவில்லை. அவை களில், ஸ்ரீ த. கைலாசம் பிள்ளையவர்களால் (1883) சிவஞானசித்தியார் பொழிப்புரையும், ஸ்ரீசதாசிவப்பிள்ளை அவர்களால் (1885) சிவஞானபோதச் சிற்றுரையும் அச்சிடப்பட்டன.

மெய்கண்ட சாத்திரங்களையெல்லாம் தமது ஆதீனத் துப் பூர்வாசாரியர்கள் செய்த உரைகளுடன் நன்கு ஆராய்ந்து பதிப்பிக்குமாறு பெருங்கருணையுடன் கட்டளை யிட்டருளி அவ்வப்போது ஆவனவெல்லாம் அநுக்கிர கித்து ஸ்ரீ **மெய்கண்டசாத்திரப்** பிரதிஷ்டாசாரியராய், தமிழ்ப்புலவராயினருக்கெல்லாம் அன்னையனையராய், சித் தாந்தமாநாடு – திருமந்திரமாநாடு முதலியவைகளை அடிக் கடி கூட்டியருளிச் சைவப் பெருமக்கட்கெல்லாம் தனிப் பெரு விருந்தாகச் சித்தாந்தத் தேனமுதுமூட்டி, இவ்வாதி னத்தில் இப்பொழுது இருபத்தொன்றுவது குருமஹா சந்நிதானமாய், குரவர்மாமணியாய் வீற்றிருந்து சிவஞானச்

செங்கோல் செலுத்தும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள் பெருங்கொடைத்திறத்தையும், கருணைத்திறத்தையும் என்னென்று புகழ்வேம்! மகாசந்நிதானத்தின் திருவடித்தாமரைகளைச் சிந்தித்திருத்த லொன்றே எளியேன் செய்யத்தக்கதாம். அறிஞர் குற்றம் பொறுத்தருள்க.

இங்ஙனம்,

சித்தாந்தசைவமணி—

த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை,

ஆதீன வித்துவான்.

திருவாவடுதுறை
1—10—54.



திருவாவடுதுறையாதீனத்துப் பதினாறாவது குருமஹாசந்நிதானம்

மேலகரம் —

ஸ்ரீ சுப்பிரமணியதேசிக மூர்த்திகள்

நூலாசிரியர்

ஸ்ரீ அருணந்திசிவாசாரியர்

சரித்திரச் சுருக்கம்

——o——

செந்தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகச் சிறந்து விளங்கும் புண்ணிய பூமியாகிய நடுநாட்டிலே திருத்துறையூர் என்னும் சிவதலம் பெண்ணையாற்றின் வடகரையில் உள்ளது. அத்தலம் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம் பெற்றது. பதிகம் பதிஞ்ஞரு திருப்பாட்டுகளையுடையது. பண் — தக்கராகம். 'துறையூர்த் தலைவர்! உனை வேண்டிக் கொள்வேன் தவறெறியே' எனத் திருப்பாட்டுக்கள்தோறும் இறுதியடி அமைந்துள்ளது. அத்தலத்திலே ஏறக்குறைய எழுநூற்றைம்பது ஆண்டுகளின் முன்னர் ஆதிசைவர்மாபிலே சித்தாந்த சைவம் தழைத்தோங்குமாறு ஒரு சற்புத்திரர் திருவவதாரம் செய்தருளினர். மூப்போதுந்திருமேனி தீண்டும் பெருவாழ்வும், புத்திர பரம்பரையாக ஆசிரியத்தன்மையெய்தும் பெருஞ்சிறப்பும் வாய்ந்த அவர் உரிய பருவத்திற்ருனே உபநயன முதலியனவும் சமய விசேட நிருவாண தீக்ஷைகளும் ஆசிரியாபிடேகமும் செய்யப்பெற்ருர். கிரியாவதியில் சிறிதும் பிறழாமல் ஆன்மார்த்த பரார்த்த பூஜைகளும் செய்துவந்தார். வேத சிவாகமங்களை முறையே ஓதியுணர்ந்தார். முழுமுதற்பரம்பொருளாகிய சிவபெருமானிடத்து இடையருத பேரன்பு வரவரப் பெருகுவதாயிற்று. சிவாகமப் பொருளைச் சிந்தித்துணர்ந்து அகத்தும் புறத்தும் தூயராய்ச் சிவவழிபாட்டைச் செவ்வே செய்துவருவாராயினர். தம்மையடுத்த பக்குவர்க்குச் சித்தாந்தஉபதேசமும் செய்துவந்தார்.

தேவாரத்திருமுறைகளிலே எல்லையில்லாத பத்தி சிரத்தை விசுவாசம் வைத்து நியமமாகத் திருமுறைப் பூசையும், பாராயணமும் காடோறும் செய்வாராயினர். அதனால், இவருக்கு **சகலாகமபண்டிதர்** என்னும் சிறப்புப் பெயரும் காளடைவில் உண்டாயிற்று.

இங்ஙனம் நிகழ்ந்துவருங்காலத்திலே அண்மையில் உள்ள **திருப்பெண்ணாகடம்** என்னும் சிவதலத்திலே பரம்பரைச் சைவவேளாளர் குலத்திலே சிவபக்தி குருபக்தி அடியார் பக்திகளிலும், செல்வத்திலும், கல்வியறிவொழுக்கங்களிலும் மேம்பட்டு விளங்கிய **அச்சுதகளப்பாளர்** என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சகலாகமபண்டிதருடைய சீடர். அவருக்கு முன்னைப் புண்ணியத்தால் எல்லாச் செல்வமும் எளிதிலே கிடைத்திருந்தும் பிள்ளைப்பேறில்லாக் குறையொன்றே இருந்து வந்தது. அதனால் அவர் பெரிதும் வருந்தித் தமது குலகுருவாகிய சகலாகமபண்டிதரை யடுத்துத் தங்குறைதீர வழியொன்று அருளவேண்டுமெனப் பிரார்த்தித்தார். ஆசிரியரும் தமது சீடர் குறையைத் தீர்க்கத்தக்க உபாயத்தைச் சிந்தித்திருந்தார். ஒருநாள் வழக்கம்போலத் தமது ஆன்மார்த்த பூசையையும் திருமுறைப்பூசையையும் செய்து முடித்தார். திருவருளைச் சிந்தித்துத் திருமுறையிலே கயிறு சாத்திப்பார்த்தார். அப்பொழுது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருவெண்காட்டுத் திருப்பதிகத்திலே இரண்டாவது திருப்பாட்டு உதயமாயிற்று. அப்பாடல் வருமாறு:—

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளகினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே".

என்பது அது. சகலாகமபண்டிதர் அத்திருப்பாட்டின் பொருளைச் சிந்தித்து மகிழ்ந்தார். சீடரை நோக்கி, 'ஐய! உம்முடைய எண்ணம் நிறைவேறும். திருவெண்காட்டை அடைந்து அங்கேயுள்ள முக்குளநீரில் விதிப்படி முழுகிப் பிரமவித்தியாகாயகியாரையும் சுவேதவனப் பெருமானையும் போன்புடன் வழிபட்டுவருக'என அச்சுதகளப்பாளருக்கு விடைகொடுத்தருளினர்.

அச்சுதகளப்பாளரும் ஆசிரியர் கட்டளையைச் சிரமேற் கொண்டு தமது மனைவியாரையும் உடனழைத்துத் திருவெண் காட்டை யடைந்தார். முக்குளதீர்த்தத்திலே முழுகினர். சிவபிரானையும் உமாதேவியாரையும் விதிப்படி வழிபட்டு வருவாராயினர். சிவபெருமானுக்கு நித்திய நைமித்திகங்களைச் சிறப்பாகச் செய்வித்தார். மகேசுரபூசையையும் விதிப்படி காடோறும் செய்துவந்தார். ஒருநாள் சிவபெருமான் அச்சுதகளப்பாளர் கனவிலே தோன்றி, அன்பனே! உனக்கு இப் பிறவியில் பிள்ளைப்பேறு அரிது. ஆயினும், தேவாரத் திருமுறையிலே சிறந்த பத்திவைத்து, அதனைப்பிரமாணமாகக் கொண்டு ஒழுகிவருவதால், திருஞானசம்பந்தப் பிள்ளையைப் போன்று சைவசமயத்தை நிலைநாட்டவல்ல ஒரு சற்புத்திரன் உன்னிடத்துத் தோன்றுவான். தோத்திரவடிவாயுள்ள தேவாரத் திருமுறையின் மெய்ப்பொருளைச் சாத்திரவாயிலாக வெளியிட்டுச் சித்தாந்தசைவ சமயஸ்தாபனம் செய்து தமிழ் நாட்டார் உய்யுமாறு வழிகாட்டவல்லவனுவான், கவலற்க!' எனக்கூறி அபயந்தந்து மறைந்தருளினர்.

அச்சுதகளப்பாளர் சிவபெருமான் தமதுகனவிலே தோன்றி அருளியமையைச் சிந்தித்து மகிழ்ந்தார். தமது மனைவியாருடன் தாமும் சிவபெருமானை வழக்கம் போலவே வழிபாடாற்றி வந்தார். சிலகாலம் சென்றது. மனைவியார்

வயிறுவாய்த்தார். திருவருளைப் பெரிதும் வியந்தார். சிவாகம விதிப்படி செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் செவ்வே செய்துமுடித்தார். பத்துத்திங்களும்நிரம்பின. தமிழகம் செய்தமாதவம் நிறைவேறவும், சித்தாந்தசைவ சமயம் தழைத்தோங்கவும் நல்லோரையிலே ஒரு தவப்புதல்வர் திருவவதாரம் செய்தார். இக் குழந்தைக்குச் சாதகன்ம முதலியன விதிப்படி செய்தார்கள். சுவேதவனப் பெருமான் திருவருளால்தோன்றினமையின் **சுவேதவனப்பெருமாள்** எனப் பிள்ளைத்திருநாமம் இட்டழைத்தனர். அச்சுதகளப் பாளர் அருமையாக இப்பிள்ளையை வளர்த்து வந்தனர்.

இங்ஙனமாக, திருவெண்ணெய்நல்லூரிலிருந்து சுவேத வனப் பெருமாளது நன்மாமனூர் வந்து குழந்தையைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தார். சைவப்பெருவாழ்வைத்தாம் அழைத் துச்சென்று தம் ஊரிலே செல்வமாய் வளர்ப்பாராயினர். சுவேதவனப்பெருமாளும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவந்தார். இளம்பருவ விளையாட் டினுல் யாவரையும் மகிழ்வூட்டினர். ஆயினும், மெய்யுணர் வின் முற்றுப்பேறுடையராகலின்உலக நிலையை விரும்பாமலி ருந்துவந்தார். இரண்டு ஆண்டுகள் சென்றன. சிறுபருவச் செயலெல்லாம் சிவபுண்ணியச் செயலாகவே மலிந்தன.

அந்நாளிலே, திருக்கயிலாயமலையிலே கல்லால மர நீழலிலே தென்முகப்பரமாசாரியராக வீற்றிருந்த சிவபெரு மான்பால் எல்லா ஆகமப்பொருள்களையும் மலைவற விளக்கும் சிவஞான போதப்பொருளை உபதேசமுறையிற் பெற்ற திரு நந்திதேவர் மாபிலே வந்த பாஞ்சோதி மாமுனிவர் திருவெண்ணெய்நல்லூரையடைந்து சாமுசித்தராக விளங்கும் சுவேதவனப் பெருமாளுக்குத் தீக்கை செய்து குருமாபில் தாம் சத்திய ஞான தரிசினிபால் கேட்டவாறே சிவஞான

போதத்தை உபதேசித்துத் தமிழ்கமுய்யத் தமிழிலே மொழி பெயர்த்து வார்த்திகப் பொழிப்பும் உரைக்குமாறு கட்டளை யிட்டருளினர். சித்தாந்தசைவமாகிய மெய்ச்சமய உண்மை உணர்ந்து அதனை நிலை காட்டுதற்கும், பொய்ச்சமய இருளைக் கடிதற்கும், தமதுஆசிரியர் திருப்பெயருக்கிணங்கக் காரணப் பெயராக **மெய்கண்டதேவர்** எனத் தீக்ஷாநாமமும் சாத்தி வழிச்சென்றனர். மெய்கண்டதேவர் தமதாசிரியர் பால் கேட்ட சிவஞான போதப் பொருளைத் திருவெண்ணெய் நல்லூரிலே திருவருட்டுறையிலுள்ள பொல்லாப்பிள்ளையார் சந்நிதியிலே இருந்து சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடினர். ஆசிரியர் ஆணைப்படி தாம் பெற்ற வடமொழிச்சிவஞான போதத்தைத் தமிழிலே மொழிபெயர்த்து வார்த்திகப் பொழிப்பும்அருளிச்செய்தனர். தம்மையடைந்த உத்தமோத்தம பக்குவமுடையாருக்கு உண்மைப்பொருளையுபதேசித்துச் சித்தாந்தசைவஸ்தாபனம் செய்து கொண்டு வீற்றிருந்தனர்.

இச் செய்திகளை யெல்லாம் குலகுருவாகிய சகலாகம பண்டிதர் கேட்டு மகிழ்ந்திருந்தனர். மெய்கண்ட தேவரை நேரிற்காணுமாறு அவர் திருவெண்ணெய் நல்லூருக்கு வந்து சேர்ந்தனர். அப்பொழுது மெய்கண்டதேவர் தமது மாணவர்கட்குப் பதி பசு பாசமாகிய மும்பொருளுண்மையை உபதேசித்துக் கொண்டிருந்தார். அதனைச் செவிமடுத்த சகலாகம பண்டிதர் இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாத முற்றவராகலின் அடியற்றமரம் போல் மெய்கண்டதேவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தம்மையாட்கொண்டருளுமாறு பிரார்த்தித்தார். மெய்கண்டதேவரும் அவருடைய சத்திநிபாத நிலையைப்பார்த்துத் திருவடிதீக்ஷை செய்து, தாமருளிய சிவஞானபோதத்தை யுபதேசித்து, அருணந்தி எனத் தீக்ஷாநாமம் சூட்டி அநுக்கிரகம் செய்தனர். 'இச்சிவஞானபோத நூற்பொருளை விரித்தும் பிற

காலத்தார்க்கு இனிது விளங்குமாறு ஓர் நூல் செய்க' எனக் கட்டளையிட்டருளினர். அவ்வாணையைச் சிரமேற்கொண்டு சிவஞான சித்தியார் என்னும் இவ்வரிய நூலைச் செய்தருளினர். அருணந்திசிவாசாரியர் அருளிச்செய்த இந்நூல் சிவாகமங்களுக் கெல்லாம் உரையாணி போன்ற தெனப் பெரியோர் கூறுவர். சிவஞான சித்தியார் பரபக்கம் சுபக்கம் என இரண்டு பெரும் பிரிவினை யுடையது. இந்நூலையன்றி இவ்வாசிரியர் இருபாஇருபஃது என்னும் சிறந்த நூலையும் அருளினர். பின்பு, அருணந்திசிவாசாரியர் தமதாசிரியர்பால் கேட்டவாறே சிவஞானபோதத்தையும், தாம் அருளிய இருநூல்களையும் திருப்பெண்ணாகடத்தில் அவதரித்த ஸ்ரீ மறைஞான சம்பந்தருக்கு உபதேசித்தருளினர். இடையறாத சிவானந்த நிட்டையிலெழுந்தருளியிருந்த அருணந்திதேவ நாயனார் புரட்டாசிப் பூராநாளில் திருத்துறையூரிலே சிவபரிபூரணமாயினர்.

திருச்சிற்றம்பலம்.

உரையாசிரியர்

ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் வரலாறு

பாண்டிநாட்டிலே பொதியில் மலைச்சாரலிலே பாவநாசம் என்னும் தலம் உள்ளது. அதனருகே விக்கிரமசிங்கபுரம் என்னும் சிற்றூர் உண்டு. அவ்வூரில் ஆனந்தக் கூத்தர் என்னும் ஒருவர் இருந்தார். அவர் பரம்பரைச் சைவவேளாளர். சிவபத்தி குருபத்தி அடியார் பத்திகளிற் சிறந்தவர். அவர் மனைவியார் மயிலம்மையார் என்பார் அருந்ததியன்ன பெருந்துதிக்குரிய கற்புடையவர். அக் குடும்பத்தினர் தமிழ் முனிவராகிய அகத்திய முனிவர் பால் தவங்கிடந்து ஏழுதலைமுறையளவும் அருட்புலமை நிரம்பிய புத்திரப்பேறுண்டாக வரம் பெற்றனர். ஏழாவது தலைமுறையிலே தமிழ்நாடு செய்ததவப்பயனுக ஆனந்தக் கூத்தருக்கு மயிலம்மையார் வயிற்றில் ஒரு சற்புத்திரர் திருவவதாரம் செய்தார். பெற்றோர்கள் அப்புதல்வருக்கு முக்களாலிங்கர் என்னும் பிள்ளைத்திருநாமம் இட்டு வளர்த்து வந்தனர். முக்களாலிங்கர் சிறுபிராயத்திலேயே ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், தவம் முதலியன வளர வளர்ந்து வருவாராயினர்.

முக்களாலிங்கர் சிறுபிராயமாயிருக்கும்போது பள்ளியிற் சென்று படித்துவிட்டு ஒரு நாள் வழக்கம்போலத் திரும்பிப் பகற் போசனம் செய்ய வீட்டுக்கு வந்தார். அப்போது வழியிலே திருவாவடுதுறை ஆதீனத்து முனிவர்கள் சிலர் முக்களாலிங்கரைச்சந்தித்தனர். முக்களாலிங்கர் முனிவர்களை வணங்கித் தமது வீட்டிற்கு எழுந்தருளித் திருவமுது செய்தருள வேண்டுமெனக் குறையிரந்து வேண்டி நின்றார். முனிவர்கள் அவர் வேண்டுகோளுக்கு

இசைந்து அவருடன் வீட்டுக்குச் சென்றனர். அச்சமயத்திலே அவர் தந்தையார் வீட்டில் இல்லை. ஆயினும், மயிலம்மையார் அம்முனிவர்களை உபசரித்துத் திருவமுது செய்வித்தார். அதனைக்கண்ட முக்களாலிங்கர் தமது தாயைப் பெரிதும் பாராட்டினர்.

'அருந்ததியென் னம்மை அடியவர்கட் கென்றும்
திருந்த அமுதளிக்கும் செல்வி — பொருந்தவே
ஆனந்தக் கூத்தர் அகமகிழத் தொண்டுசெயும்
மானந் தவாத மயில்'

என்னும் ஒருவெண்பாவைப்பாடி மகிழ்ந்தார். ஆனந்தக் கூத்தர் தமது வேலைகளை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தார். நிகழ்ந்தவற்றை அறிந்தார். மிகவும் மகிழ்ச்சி கொண்டார்.

பின்பு, அம்முனிவர்களை ஆனந்தக் கூத்தர் வணங்கி நின்றார். முக்களாலிங்கர் தாமும் அம்முனிவர்களோடு செல்ல வேண்டுமெனத் தந்தையார் பால் தெரிவித்தார். தந்தையாருக்கு மைந்தரைவிட்டுப் பிரிய மனம் வரவில்லை. திருவருளால் சிறிதுமனம் தேறினர். ஒருவாறு இசைந்து முனிவர்கள் பால் ஒப்படைத்தார். ஆதீனத்து முனிவர்களுடனே முக்களாலிங்கர் சிவதல யாத்திரை செய்து வழியிலுள்ள சிவாலயங்களையெல்லாம் வணங்கித் தரிசனம் செய்துகொண்டு திருவாவடுதுறை ஆதீனத்தை யடைந்தார். 'மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்—வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும் பராபரமே' என்ற பெரியோர் வாக்கிற்கிணங்க ஆதீன மடாலயத்தையடைந்து ஆதீன முதற்குரவராகிய ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளை விதிப்படி தரிசித்தார். பின்பு சின்னப் பட்டத்தில் வீற்றிருந்தருளிய பேரூர்—வேலப்ப

தேசிக சுவாமிகளைத் தரிசித்துப் பேரன்போடுவணங்கினர். முக்களாலிங்கருடைய இளமைப் பிராயத்தையும் முதிர்ந்த பக்குவ நிலையையும் ஆசிரியர் கண்டு வியந்தார். தீவிரதர சத்திநிபாதமுடைய முக்களாலிங்கருக்கு சைவசந்நியாசம் கொடுத்து ஞானதீட்சையும் செய்தருளினர். மெய்கண்ட நூல்களையும், பண்டார சாத்திரங்களையும் உபதேசித் தருளினர், **'சிவஞானயோகி'** எனத்தீட்சாநாமமும் செய்தனர். மகத்துவமுடைய அகத்தியமுனிவர் வரத்தால் அவதரித்தவராகலின் வடமொழிக் கடலும் தென்தமிழ்க் கடலும் எளிதிலே நிலைகண்டுணர்ந்தார், சிவஞானியாக வீற்றிருந்தருளினர்.

சிவஞானயோகிகள் உலகோபகாரமாகச் சிவஞான போதத்திற்குத் திராவிடமாபாடியம் என்னும் பேருரையும், இலகு வியாக்கினமாகிய சிற்றுரையும் செய்தருளினர். பின்பு, சிவஞான சித்தியாருக்கு உள்ள உரைகளில் பொருந்தாதவற்றைக்களையத் திருவுளங் கொண்டு ஒரு பொழிப்புரை வரைந்தருளினர். இப் பொழிப்புரையொன்றுமே சிவஞான சித்திக்குள்ள உரைகளில் சிரத்தானமாய் விளங்குவது. சிவஞான சித்தியாருக்குத் திருவண்ணுமலை யாதீனத்துமுனிவர் கூட்டத்துள் ஒருவராகிய ஞானப்பிரகாசருரை சித்தாந்தசைவ நூலுக்குப் பொருந்தாத சிவசமவாதவுரை ஆகலின் அதற்கோர் மறுப்பும் அருளினர். **சிவசம வாதவுரை மறுப்பு, எடுத்து என்னும் சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம், சிவசமவாத கண்டனம் என்னும் சிவசமவாதவுரை மறுப்பு** முதலிய வற்றையும் செய்தருளினர். இவையல்லாமலும், 1. தொல்காப்பியச் சூத்திர விருத்தி, 2. சோமேசர் முதுமொழி வெண்பா, 3. திருவேகம்பரந்தாதி, 4. வடதிருமுல்லை வாயிலந்தாதி, 5. குளத்தூர்ப்பதிற்றுப்பத்தந்தாதி

6. கலிலைசைப்பதிற்றுப்பத்தந்தாதி, 7. செங்கழு நீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், 8 அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், 9. கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம், 10. செப்பறை அகிலாண்டேசுவரி பதிகம், 11. திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு, 12. திருத்தொண்டர் திருநாமக்கோவை, 13, பஞ் சாக்கர தேசிகர் மாலை, 14. தருக்கசங்கிரக அன்னம் பட்டீயங்களின் மொழிபெயர்ப்பு, 15. சித்தாந்தமரபு கண் டன கண்டனம், 16. ஹரதத்தாசாரியர் செய்தருளிய சுலோகபஞ்சகத்தின் மொழிபெயர்ப்பு, 17. அப்பயதீக்ஷி தர் செய்த சிவ தத்துவ விவேக மொழிபெயர்ப்பு, 18.காஞ் சிப் புராண முதற்காண்ட மொழிபெயர்ப்பு, 19. சித்தாந் தப் பிரகாசிகை மொழிபெயர்ப்பு, 20. கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தரவிருத்தி, 21. இலக்கண விளக் கச் சூருவளி, 22. நன்னூல் விருத்தியுரை முதலியவற்றை யும் அருளிச் செய்தார்கள்.

ஸ்ரீ சிவஞானயோகிகள் மாணவருட் சிறந்தார் கவி ராக்ஷஸ—கச்சியப்ப முனிவர், மதுரகவி–தொட்டிக்கலை– சுப்பிரமணியமுனிவர், இராமநாதபுரம் – சோமசுந்தரம் பிள்ளை, இலக்கணம்—சிதம்பரநாத முனிவர், காஞ்சிபுரம் சிதம்பர முனிவர் முதலியோர். இவர்கள் வரலாறு முழுவ தும் திருவாவடுதுறை ஆதீன வரலாறு, குருபரம்பரை விளக்கம் முதலியவற்றால் அறியலாம்.

தவமே யொருதிருவுருக் கொண்டு விளங்கிய ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் தமது முப்பத்திரண்டாம் வயதில் சிவானந்த நிட்டையில் வீற்றிருந்து மெய்கண்டார் யாண்டு 562 விசுவாவசு - சித்திரை – ஆயிலிய நாளில் திருவாவடுதுறையிலே சிவபரிபூரணமடைந்தருளினர்.

மேலகரம்

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்

சரித்திரச் சுருக்கம்

பாண்டிவள நாட்டிலே திருக்குற்றாலத் திருத்தலத்துக்கு அருகிலேயுள்ள மேலகரம் என்னும் ஊரிலே பரம்பரைச் சைவவேளாளர் குலத்திலே ஒருசற்புத்திரர் அவதாரம் செய்தருளினர். அவர் குற்றாலலிங்கர் என்னும் பிள்ளைத் திருநாமமுடையவர். திருக்குற்றாலத் தலபுராண முதலிய பல நூல்களைச் செய்தருளிக் கீர்த்தி மிகப் படைத்த திரிகூடராசப்பக்கவிராயருக்கு நான்காம் தலைமுறையிலே தோன்றியவர் சுப்பிரமணியக் கவிராசர் என்பவர். அவருடைய இரண்டாம் புதல்வரே குற்றாலலிங்கர் ஆவார். அவர் சாலிவாகன சகம் 1755 விசய - தை - முதல்தேதி ஞாயிற்றுக்கிழமையும் அவிட்ட நாண்மீனும் மீன லக்கினமும் கூடிய சுபதினத்திலே தோன்றியவர். இளம்பருவத்திலே வித்தியாரம்பம் செய்வித்தனர். இவர் அக்கால வழக்கப்படி தமிழ் சம்ஸ்கிருதம் ஆகிய இரு மொழியும் பயின்று வந்தார். பன்னிரண்டு வயதளவிலே திருவாவடுதுறை யாதீனத்துச் சின்னப் பண்டாரச் சந்நிதிகள் வீற்றிருக்கும் கல்லிடைக்குறிச்சித் தளிகை மடாலயத்திற்கு இவர் தந்தையார் இவரை அழைத்து வந்தார். அப்போது அங்கே வித்துவானுக இருந்த இலக்கணம்–அம் பலவாணத்தம்பிரானிடமும், வித்துவான் தாண்டவராயத்

தம்பிரானிடமும் தமிழ்க்கல்வி பயின்று வருமாறு குற்றாலலிங்கரை ஒப்படை செய்தார். ஆதீன வடமொழி வித்துவான் வேதாந்த சாஸ்திரிகளிடமும் வடமொழிப் பயிற்சி செய்வித்தார். குற்றாலலிங்கர் சிறிது காலத்தில் தமிழ்ப் புலமையும் வடமொழிப் புலமையும் மிகப்பெற்றார். மாணவர் யாவரினும் மிகமேம்பட்டுவிளங்கினர்.

இங்ஙனமாக, அப்பொழுது மகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்த பதினேந்தாவது ஸ்ரீ அம்பலவாண தேசிகர் தக்ஷிணதேச யாத்திரையாக எழுந்தருளிவந்து திருநெல்வேலி ஈசானமடத்திலே வீற்றிருந்தார்கள். அப்போது குற்றாலலிங்கர் தமது தந்தையாருடன் சென்று தரிசித்து வணங்கிநின்றார். குற்றாலலிங்கருடைய கல்வியறிவொழுக்கங்களையும் தீவிர சத்திநிபாதத்தையும் கண்டு ஆதீன சம்பிரதாயப்படி ஞானவதி தீட்சை செய்து சைவ சந்நியாசமும் கொடுத்தருளினார். பின்னர் கல்லிடைக் குறிச்சிக்கெழுந்தருளியபொழுது அவரைச் சின்னப் பட்டமாக அபிஷேகம் செய்து சுப்பிரமணியதேசிகர் என்னும் தீக்ஷாநாமமும் சாத்தியருளினர். பின்பு, ஞானசாரியருடனிருந்து ஆதீன சம்பிரதாய சாஸ்திரங்களை ஐயந்திரிபற ஓதியுணர்ந்தனர். முன்னே பேட்டையில் தோன்றி இளம்பருவத்திலே திருவாவடுதுறையை அடைந்து ஸ்ரீ அம்பலவாணதேசிகரிடத்தே சைவசந்நியாசமும் மூவகைத் தீட்சையும் பெற்று வடமொழி தமிழ்மொழிகளில் வல்லவராய்த் திகழ்ந்த நமச்சிவாயத்தம்பிரான் சுவாமிகளும் ஆதீனத்திலே சிறப்புடன்விளங்கினர்.

கி-பி. 1845–முதல் 1868-வரையில் பதினேந்தாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ அம்பலவாணதேசிகருக்குப்பின் 1868—முதல் 1888—வரை பீடத்திலெழுந்தருளியிருந்தனர். நமசிவாயதேசிகர் சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த காலம் கி-பி. 1871 — 1883-வரையில். அதற்கு முன் நமசிவாயதேசிகர் தம்பிரானுகக் காசியில் 12-ஆண்டுகள் வசித்திருந்தனர். அந்தக்காலம் 1859 முதல் 1871 வரை என்பர்.

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் சின்னப்பட்டத்திலிருந்த காலத்திலேயே மகாவித்துவான்–மீனாட்சிசுந்தரம் பிள்ளைய வர்கள் ஆதீனவித்துவானுகவும், மகாவித்துவானுகவும் விளங்கினர். ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய மாணவர் மிகப்பலர். சாஸ்திரபாடங்களைத்தாமே பாடம் சொல்லு வார்கள். தமிழ் வித்துவான்கள், வடமொழிவித்துவான் களுடைய சல்லாபமே இவர்கள் சங்நிதியில் நிறைந்திருக் கும். சங்கீதத்திலும் மிகவல்லவர்கள். இவர்கள் வரலாறு மகாமகோபாத்தியாய ஸ்ரீமத் ஐயரவர்கள் எழுதியுள்ள பிள்ளையவர்கள் வரலாறுகள், என் சரித்திரம் முதலிய நூல்களால் அறியக்கிடப்பன. ஆண்டுக் காண்க. சிவஞான சித்தியாருக்குப் பொழிப்புரையைத் தழுவி இவர்கள் பதவுரை செய்தருளினர். அது மிகப்பயனுடை யது.



சிவஞானசித்தியார் பதவுரைச்
சிறப்புப்பாயிரம்.

—o—

மஹாவித்துவான் – ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்
இயற்றியது.

" ஒருபரைநேர் தரவுலகத் துயிர்பலவும் விருத்தியுற
ஓம்பி மீட்டும்
கருமலவே ரறுத்தருளித் தாளேக்கும் பெருங்கருணைக்
கடவுள் ஞானப்
பெருவலிய னெமக்கெளியன் பேணுதார் தமக்கரியன்
பெருகா னந்தம்
தருதிருவா வடுதுறைச்சுப் பிரமணிய தேசிகன்பொற்
சரணம் சார்வாம். " (1)

" முற்றுணர்ந்த வருணந்தி சிவனருள்செய் சித்தியெனும்
முடிபா நன்னூற்
குற்றுணர்ந்த சிவஞான மாமுனிவ னுரைத்தபொழிப்
புரையிம் மண்மேற்
கற்றுணர்ந்த சிலர்க்கன்றிப் பலர்க்குமுப காரமுருக்
கருத்தா முத்தைச்
சற்றுணர்ந்த வெம்மனோர் களுமிடரீர்ந் தெளிதுணரும்
தன்மை யோர்ந்து." (2)

" வளர்திருவா வடுதுறையம் பலவாண தேசிகன்கண்
மணியாய் நாளும்
தளர்வறவந் தருள்பொழிசுப் பிரமணிய வெங்கள்குரு
சாமி யென்பான்
விளர்தபுமப் பொழிப்புரையின் விரோதமுரூப் பதவுரை
விளக்கந் தந்தான் [யாம்
கிளர்தருமற் றவர்க்கியாது புரிதுமென்றும் பணிதலன்றிக்
கிளக்குங் காலே," (3)

"நல்லானந் துறைசையிற்சுப் பிரமணிய குருசாமி
நவிறல் போன்முன்
இல்லாமை யானன்ரே சமவாதப் படுகுழிவீழ்ந்
திழிந்தார் சில்லோர்
ஒல்லாத மாயாவா தக்கரிய சேறழுந்தி
உழன்ரூர் சில்லோர்
பொல்லாத வினுமுளபல் புகர்மதக்கோட் பாட்டழுந்திப்
போனர் சில்லோர்," (4)

"இனியாது மெண்ணராய்த் திகழ்திருவா வடுதுறையை
எய்தி யாரும்
தனியாணை மவனடியார்க் கடியாராய்ச் சித்தாந்த
சைவ ராகி
நனியாருஞ் சிவானந்தப் பெரும்பரவையிடைத்தோய்ந்து
நாளும் வாழ்வார்
பனியாம லிவரினைய ரேலவற்காட் படுமெஞ்சீர்
பகரொ ணுதே," (5)

"கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
காட்டும் வெண்ணீ

பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான
பாநு வாகிக்

குயிலாரும் பொழிற்றிடுவா வடுதுறைவாழ் குருநமச்சி
வாய தேவன்

சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடுழி
தழைக மாதோ."



ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்

உரையில் எடுத்தாண்ட நூல்கள்

திருக்குறள் 11, 55, 66, 74, 123, 158, 181, 183, 220, 243, 341, 587

திரிகடுகம் 37

திருச்சிற்றம்பலக்கோவையார் 54, 253, 494

சிவஞானபோதம் 55, 57, 320, 340, 383, 553, 592

ஞானமிர்தம் 66

தொல்காப்பியம் சொல் 66, 92, 196, 307, 471

,, பொருள் 185

சிவப்பிரகாசம் 89, 156, 252, 519

இரத்தினத்திரயம் 85

போற்றிப்பஃறொடை 111

சதுர்வேததாற்பரியசங்கிரகம் 111

பூசலார்நாயனார் புராணம் 125

சம்பந்தர் தேவாரம் திருப்பாசுரம் 128, 156

திருநாவுக்கரசு தேவாரம் 523

மூத்ததிருப்பதிகம் 185

திருவாசகம் 217, 474, 478, 519, 540, 547

வாயுசங்கிதை 141

வாதுளாகமம்	142
மகுடாகமம்	446
அம்மைதிருவந்தாதி	567
துகளறுபோதம்	156, 320, 417
நன்னூல்	177
நாலடியார்	340
சர்வஞானேத்தரம்	345
அசிந்திய விசுவ சாதாக்கியம்	359
சிற்றம்பல நாடிகள் கலித்துறை	364
சோமசம்புபத்ததி வருணபத்ததி	428
சிவதருமோத்தரம்	460
சங்கற்ப நிராகரணம்	480
உண்மை விளக்கம்	518, 519, 564
உலகுடையந்ஙாயனுர் கழிநெடில்	516



விஷய அட்டவணை

முதற்சூத்திரம்

உலகாயதன் மதம் பற்றி நிகழும் ஆசங்கையைப்பரிகரித்து முத்தொழில் உண்மை சாதித்தல் 2.

உலகாயதரில் ஒருசாரார் மதம் பற்றி ஆசங்கித்துப் பரிகரித்தல் 4.

சவுத்திராந்திகர், மாத்திமிகர், சமணர் மதங்களை ஆசங்கித்துப் பரிகரித்துச் சற்காரிய வாதத்தை வலியுறுத்தல் 7.

மீமாஞ்சகர் மதம் பற்றி ஆசங்கித்துப் பரிகரித்தல் 8, 9, 10.

அணுகாரண வாதம் தலைமைபற்றித் தார்க்கிகர்மேல் வைத்து மறுத்தது 11.

தார்க்கிகர் மதம் பற்றி யாசங்கித்துப் பரிகரித்தல் 16.

சாங்கியர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்தல் 17, 18.

மாயாவாதி, சமுதாயவாதம், ஆரம்பவாதம் முதலிய வற்றை மறுத்தல் 27.

மாயாவாதி மதம் பற்றி ஆசங்கித்துப் பரிகரித்தல் 28.

புத்தர் மதம் பற்றி ஆசங்கித்தலும் பரிகரித்தலும் 33.

பௌராணிகர் மதம் பற்றிப் பரிகரித்தல் 35.

பாஞ்சராத்திரி மதம் இரணியகருப்ப மதங்களைப் பரிகரித்தல் 35.

மூன்ருஞ்சூத்திரம்

உயிர் சூனியம் அன்று, உடம்பும் உயிரன்று, ஐம்பொறி களும் உயிரன்று, சூக்கும உடம்பும் உயிரன்று, பிராணவாயு வும் உயிரன்று, பிரமமும் உயிரன்று, அனேத்துங்கூடிய சமுதாயமும் உயிரன்று எனக்காரணங்கூறி இந்த உடலின் கண் இவையனேத்திற்கும் வேருக உயிர் என்பது ஒன்று உளது எனல் 1.

இவ்வுடம்பின்வேருய் உயிர் ஒன்று உண்டு என்பது எற்றுக்கு? உடம்பே அறியும் எனில், அவயவத்தால் ஒன்றும் குறைபாடில்லாத பிணத்தினிடத்து உடம்பில் அறிவின்று, உறக்கத்தினும் அறிவின்று ஆகலின் உடம்பு அறிதலில்லே என்பது 2.

இந்திரியங்கள் ஒன்றறிந்தது ஒன்றறிதல் இல்லே இவ் வைந்தினனும் ஐம்புலன்களேயும் அறிவதொன்றுளது என்பது 3.

கரணங்களேயும் தன்னேயும் கொண்டு அறிவதாகிய உயிர் வேறுண்டு என்பது 4.

நான்காஞ்சூத்திரம்

சவுத்திராந்திகர் மதம் பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தல் 5.

அந்தக்கரணங்கள் கருத்தாவல்லவாமாறும், கருவியாதற்கட்படு முறைமைகளும் அவை உயிரின் வேறுமாறும் உணர்த்துதல் 2–5.

பரமதங்களை எடுத்தோதிப் பரிகரித்து ஆன்மாவிற்கு இலக்கணம் கூறுதல் 6-32.

உயிருண்மைகொண்டு ஆணவமலத்துண்மை கொள்ளாத சமயிகள் தத்த மதத்துக் கேற்பக்கூறும் உயிரிலக்கணங்களும் அவை பொருந்தாமையும் கூறுதல் 19.

உயிருக்கு இலக்கணமாவது மற்றென்னையோ என்னும் ஐக்கியவாத சைவரை நோக்கிச் சித்தாந்தங்கூறுதல் 20.

உயிருக்கு அநாதி நிலையாகிய தன்னுண்மை கூறல் 20.

பசுத்துவவுபாதிபான் மறைப்புண்டு நின்ற அவ்வறிவிச்சை செயல்கள் பின் ஒருபுடை விளங்குதல் 21,22,23.

விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் இரண்டும் முறையே சீவான்மாவும் பரமான்மாவுமாம் என்பார் மதத்தை மறுத்தல்—28.

ஐங்கோசங்களை ஆன்மாவென்னும் உபநிடதத்திற்குத் தாற்பரியம் கூறல்–29.

பரமதங்களைப் பரிகரித்து ஆன்மாவுக்கு இலக்கணம் கூறியது 31.

துரியாதீதத்தில் காரணசரீரமாத்திரையேயன்றிக் கஞ்சுக சரீரமில்லை என்றது 33.

ஐந்தவத்தை என்றவற்றின் பெயரும் வகையும் இடமும் அவற்றதியல்பும் இவையென்பது 33-36.

அவத்தைகட்குக் காரணமிவை யென்பதூஉம் அவற்ற தியல்பும் 37.

தன்னுண்மை கேவலமாதல் 38.

மெய்பொறிகளெல்லாம் காவலன் கொடுத்தபோது சகலனுதல் கூறப்பட்டமை 39.

மலங்களெல்லாம் ஒவினபோது சுத்தமுடையனுமாறு வகுத்துக்கூறல். 40.

ஐந்தாஞ்சூத்திரம்

கன்மத்தோடும் கூடிய வுயிரே காரணமாதலமையும் வேறு மோரிறைவன் எற்றுக்கு? என்பாரை மறுத்தல் 2.

சாங்கியர் மதம் பரிகரித்து வலியுறுத்தியது 3.

மாயேயமே அமையும் இறைவன் எற்றுக்கு என்பாரை மறுத்தல் 3.

மூறையே கன்மமும் உயிரும் மாயேயமும் என்னு மிவையே அமையும் என்னும் ஆருகதர் மீமாஞ்சகர் சாங்கியர் முதலியோரை மறுத்து வலியுறுத்தல் 2—4.

அறிவித்தல் பற்றி இறைவனுக்குத்துடக்கின்மை 6.

அவ்வருளே இறைவனுக்கு அணிகலமாதல் 9.

ஆருஞ்சூத்திரம்

பதிப்பொருளுக்கிலக்கணம் கூறப்படுகிறது. சொரூப லக்கணம் எனப்படும் சிறப்பியல்பு 1.

அறிபொருளனேத்தும் அசத்தென்பது அவ்வறி வியல்புபற்றித் தார்க்கிகரைநோக்கித் தெரித்துணர்த்தல் 2.

இந்திரசாலம், கனக்காட்சி, கழுதிரதம் உவமையாதல் 3.

சற்காரியவாதத்தில் அறிபொருள் அசத்தாமாறு உவமையொடு படுத்துச்சாங்கியரை நோக்கிக்காட்டல். 3.

அறிபொருள் அசித்தசத்தாமென்பது 3.

அநிருவசனீய மென்னுது சித்தொடுசத்தாய் நிற்கு மென்றது யாங்ஙனே? மென்னும் மாயாவாதியை நோக்கிக் கூறல் 5.

அறிபொருளுமன்று அறியாததுமன்று என விடுப்பது உம் அநிர்வசனமாய் முடியுமன்றே! என்னும் மாயாவாதியின் ஆசங்கையை நீக்குதல் 6.

யோகபாவனே செய்து காணவே அமையும் என்னும் பாதஞ்சலர் மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்தல் 7.

பரம்பரன் அருளினுலே பாவிக்கப்படுவது என்னுது மலமாசு தீர்ந்தவழிச் சிவத்தோடு ஒப்பதாய உயிரறிவே அதனேயறியும் என்னும் சமவாத சைவரை நோக்கிக் கூறல் 8.

ஒன்றுய் வேறுய் உடனுமாய் அச்சிவம் நிற்பதொன்று என்பது எற்றுற் பெறுதும்? என்னும் சிவ சமவாதி மதம் பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தப்பட்டது 9.

ஏழாஞ்சூத்திரம்

நாலாஞ்சூத்திர முதலிய மூன்றனும் பொருளியல்பு கூறப்பட்டது. சாதனங்களதியல்பு மேல் மூன்று சூத்திரங்களால் கூறப்படும்.

மேற்கூறிப்போந்த முப்பொருள்களுட் சாதித்துப் பெறுதற்குரிய அதிகாரம்உடையது பசுப்பொருளே என்பது பாரிசேடவளவையால் கூறப்படுதல்.

உயிர் அவ்விரண்டின் வேறுயும் அதுவதுவாய் நிற்ப தொன்றும், ஆன்மா அவ்விரண்டனையும் அறியுமுகத்தான் அறியப்படுவதாம் என்பது 2.

சிவனெதிர் மூனைத்து நிற்றல் ஆற்றுத அசத்துச் சீவனல் அறியப்படுவதாய் அதனெதிர் மூனைத்துநிற்றல் ஆற்றுதற்குக் காரணம் 3.

உயிருக்குச் சத்தசத்து இரண்டினையும் அறியும்உரிமையுண்மையும், அதற்குக் காரணமும், அஃதாண்டுளதாமாறும் தெரித்துணர்த்தி வலியுறுத்தல் 2—4.

எட்டாஞ்சூத்திரம்

சாதித்துப் பெறும் உரிமை தனக்கே உண்டு என்பது உணர்ந்த உயிர்க்கு மனவெழுச்சி சேறற்பொருட்டு அப்பேறு தனக்குவேண்டற்பாலது என்பதும், சிறந்த சாதனமாவது இது என்பதும், அது வருவாயும் உணர்த்துவது இவ்வெட்டாஞ்சூத்திரம்.

தீக்கை இருவகைத்து என்பதும், அவ்விருவகைக்கும் உரியார் இவர் என்பதும் 2.

சாதாரதீக்கையிற்படும் பாகுபாடும் இயல்பும். சாம்பவ தீக்கை, நயனதீக்கை முதலிய ஆறும் இருவகைப்படுதல் 3.

நிர்ப்பீசதீக்கை என்பது 4.

சபீசதீக்கை என்பது – சாதாரதீக்கைக்குரியார் முத் திறப்படுவர் என்பது – ஒளத்திரி தொகையான் ஒன்று, வகையான் இரண்டு, விரியான் நான்கு ஆதல் – சாதாரதீக் கையின் வகையும் அவற்றியல்புகளும் 3—5.

ஆசிரியன்தீக்கைசெய்யுமாறு தொகுத்துக் கூறுதல் 6.

தீக்கை செய்தற்கண் அத்துவாக்கள் ஒன்றிரெண்டு வியாத்தியாதல் அறிந்து அடக்குதல் 7—9

இறைவன் குருமூர்த்தியை அதிட்டித்து நின்றுசெய் யும் தீக்கையில் ஏனைமலசுத்திகளை ஒழித்து அத்துவசுத் தியே மிகுத்துக் கூறியதன்காரணம்.

பருவமடையாதார்க்குத் தீக்கை செய்தலும் அடைந் தார்க்கு அது செய்யாமையும் பழுதாம் எனல்.

அத்துவசுத்திச் சிறப்புக் கூறியவாறு 10.

உயிர் பருவமடையும் முறைமை கூறுமுகத்தால் வகை யும், அவற்றிற்குவாயில் இவை என்பதும் கூறல் 11.

புறச்சமய நெறிநிற்றல் முதலியன எல்லாம் சைவத் திறத்தடைதற்குச் சோபான முறையான் வாயிலாமாறு 12.

எல்லாம் அருமறைபாகமத்தே காணப்பட்டடங்கும் என்பது 14.

சிவாகமத்தின் சிறப்பு 15.

பல சனனங்களிலும் ஆகாதவற்றை யெல்லாம் ஒரு சனனத்திலேதானே செய்யுமாறு வலியுறுத்தியபடி 17.

சைவத்திறத்தடைந்தாரால் செலுத்தப்படும் சரியை முதலிய நான்கும், முத்திநெறியாதற்கட்படும் பேதமும், அவற்றின் பயனும் கூறியது 18.

சரியை முதலிய நான்கிற்கும் இலக்கணம் கூறப்பட்டது 19, 20.

கீழுள்ளவற்றைக் கீழ்ளனக்கண்டு கழித்தாலன்றி மேலுள்ளன பயன்படா என்பது 22.

கன்மவேள்வி முதலிய நான்கும் போகத்தையூட்டுவன, ஓதன்முதல் ஐவகைத்தான ஞானவேள்வி யொன்றுமே வீடு பேற்றைத்தரும் என்பது 23.

ஞானமாவது இத்துணைப்பகுதித்து என்பதும், அவற்றுட் பொதுச்சிறப்பு ஆமாறும், அவற்றிற்குரிய பயன் வேறுபாடும் கூறல் 24.

சரியை முதலிய பதமுத்தி மாத்திரையே யன்றி இயற்றினோர் முடிவின்கண் எவ்வாற்றானும் ஞானநெறியைத் தலைப்பட்டே வீடெய்துவர் எனல் 25

எந்நெறியில் நின்றோர்க்கும் வீடுபேறு எய்துதற்கண் ஞான நெறியாகிய சன்மார்க்கம் இன்றியமையாச் சிறப்பிற்று என்பது 26.

ஞானத்தின் இயல்பும் அதன் பயனும் பொதுவகையாற் கூறியது 27.

கேட்டலாமாறும், அதன்கண் நிகழும் அநுபவமும் 28.

சிந்தித்தலாமாறும், அதன்கண் நிகழும் அநுபவமும் 29.

தெளிதலாமாறும், அதன்கண் நிகழும் அநுபவமும் 30.

நிட்டையாமாறும் அதன் பயனும் 31.

நிட்டைமேவினோர்களது ஆசாரம் 33

நிட்டைமேவப்பெறுதார்க்கு அது பெறும் உபாயம் கூறல் 34.

சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர் பெருமை 35.

சிவசங்கிராந்தவாதிகள் மறுப்பு 36.

இறைவன் ஒப்ப நிற்பினும் ஏகதேசப் பொருள் ஏகதேசப் பொருளே வியாபகப் பொருள் வியாபகப் பொருளே என்பது 37.

சிவாத்துவிதசைவரை நோக்கி ஒப்பநிற்கும் வழியும் வேற்றுமை யுண்டென்பது உவமை முகத்தால் விளக்குதல் 38.

ஒன்பதாஞ்சூத்திரம்

பேறு முதலியவற்றை யுணர்ந்தானுக்கு அப்பேறு பயப்பதாகிய சாதனம் செய்யுமாறு வகுத்துக்கூறுவது.

வாதனைபற்றிச் சலியாமைப் பொருட்டுத் திருவைந் தெழுத்தை விதிப்படி உச்சரிக்க எனல் 1.

ஞாயிற்றைக் காணப் பெறுதாருக்கு இருள் நீங்காத வாறுபோல, சிவனைபறியப்பெறுதாருக்கு மலம் தவிராது 3.

பதிஞானம் ஒன்றுனே பதிப்பொருளை அறியற்பாற் றென்பது 4

திருவஞ்செழுத்தை விதிப்படி உச்சரிப்பார்க்கு வேண் டும் பாவனை 7.

வேண்டப்படும் மந்திரமும் கிரியையும் 8.

ஆசனம், மூர்த்தி, மூர்த்திமான் 9.

ஆன்மசுத்திக்கு ஏதுவாதலான் அந்தரியாகம் ஒரு தலையான் வேண்டப்படும் முத்திசாதனமாதல் 10.

புறத்தேயும் ஒருகுறியில் இறைவனைப் பூசித்தல் வேண்டும். உபகரணம் அயாசகமாய் வந்த அமுத முதலாயினவாம்.

புறப்பூசையும் அங்கமாதல் 11.

இந்தனத்தின் எரி, பாலின் நெய், பழத்தின் இரதம், எள் ளின் கண் எண்ணெய் உவமையாதல். சிவானந்த மேலீடு 12.

பத்தாஞ்சூத்திரம்

வேண்டுஞ்செய்திமுறைமைகள் மூன்றுசூத்திரங்களாற் கூறப்பட்டன. ஆகலின், அது சாதனஇயல் எனப்பெயர் பெற்றது. அச்சாதனத்தாற் பெறப்படும் பயன் பெத்தநீக்க மும் முத்திப்பேறும் ஆவன. ஆகலின், இது பயனியல் எனப் பெயர் பெற்றது. இருவகைப் பயனுள் முதற்கண் பெத்த நீக்கம் இச்சூத்திரத்திற் கூறப்படுகின்றது.

பதிஞானத்தாற் காணப்பட்ட இறைவன் ஆன்மாவேயாய் ஒற்றுமைப்பட்டுப் பெத்தநிலையில் நின்றமைபோல, ஆன்மா அவ்விறைபணியின் அவனோடு ஒற்றுமைப்பட்டு வழுவாது நிற்கப்பெறின் யானெனதென்னும் செருக்கறும். அக் காலத்து இவன் செய்யும் இதமகிதங்களெல்லாம் யான் செய்ததென முதல்வன் உடனாய் நின்று ஏன்று கொள்வன். அரன்பணியில் நிற்றலான் பரதந்திரியம் ஒழியும். இவன் செய்யும் இதமகிதங்கள் இவனுக்குப் பணியாய் முடியும். இவனுக்கு இதமகிதம் செய்தார்மாட்டு அவ்வளவினன்றி மிகுதிப்படுதற்குத் துணைக்காரணமாய் இயையும். ஆர்ச்சிப் பும் இவனைப் பந்தியாதொழியும். சஞ்சிதமும் மாயையும் ஆணவமும் இவனைப்பந்திக்கமாட்டா, விண்டொழியும் என்பது 1.

யானெனதென்னும் செருக்கு அறுதியின் பொருட்டு ஏகனாகி நிற்கும் ஞானம் ஒருதலையான் வேண்டற்பாற்று 2.

பாடிகாவலர் அரசன் ஆணைவழி நின்று பிழை செய்தாரைத் தாம் ஈர்த்தவழியெல்லாம் பரதந்திரமாய்க் கிடக்கச் செய்வர். அவர் அவ்வாறு செய்தல் அரசன் ஆணையின் ஆற்றலே, பிறிதன்று. பிழைசெய்தார் அரசனைத் தலைக்கூடி அவன் கருத்தின்வழி யொழுகின் பாடிகாவலரையும் தம் ஆணையின் வழி நிற்கச்செய்யும் சுதந்திரராவார். அதுபோல, இந்திரியங்கள் தம் வழி ஆன்மாவை ஈர்த்தற்குக் காரணம் முதல்வன் ஆணையேயன்றிப் பிறிதில்லை. இந்திரியங்களையும் தன்னையும் உடையனாகிய அம்முதல்வன் தாள்களைச்சார்ந்து அவன்பணியில்உறைத்துநிற்க அவ்விந்திரியங்களையும் அவன் ஆணையின் வழிச் செலுத்தும் சுதந்திரன் ஆவன். உறைத்து நிற்புழியும் பயிற்சிவயத்தான் ஒரொருகால் இந்திரியங்களின் குறும்புநிகழுமாயின் அது முந்தனுடைச் செயலென்று கொண்டு பணியின் வழுவாது ஒழுகுதல் வேண்டும். வினைகள் சத்திமடங்கி ஒழியும். இறைவன் அடிமைத்திறத்து உறைத்து நின்றோன் மறித்துப் பொறிகளின் வழிப்பட்டு அப்பொறிகட்கு அடியனுவானல்லன் 3.

உலகத்தின்கண் மனவாக்குக்காயங்களால் செய்யப்பட்ட புண்ணிய பாவங்களெல்லாம் முதல்வனுல் கற்பிக்கப்பட்டனவே. அந்தர்யாமியாகத் தம்மிடத்திலேநின்று இச்சையாதியாற் செலுத்தியும், ஞானேந்திரியங்களினுலே விஷயங்களைப் பற்றுவித்தும், கன்மேந்திரியங்களினுலே தொழில்களைச் செய்வித்தும் செய்கின்றோன். கிரியாசத்தியே செய்விப்பது, எவ்விடத்தும் எச்செயலும் முதல்வன் செயலே, அவனன்றி ஓர் அணுவும் அசையாது எனக்கொண்டு தம்மை இழந்து நிற்கப்பெறுவார்மாட்டு அஞ்ஞானகன்மம் பிரவேசிக்கமாட்டா. மெய்யுணர்வான் அடைக்கலம் புக்கா

ரத்தன்னைப்போலச் சுத்தராகச் செய்து பாதுகாப்பன். இறைவன் சலமுடையனல்லன். அரன்பணியில் நின்றிடல் இதுவாம் என்பன 4.

எத்துணைப் பெரும்பேற்றையும் அளிக்கவல்ல எத்துணை நன்மைகளும், அரன்பணியில் நிற்றலாகியமெய்த்தொண்டால் விளையும் ஞானத்தால் தரப்படும் பேற்றைத் தரத்தக்கன வல்ல. இறைபணியில் நிற்கும் ஞானத்தோடொப்பதாகிய சிறப்புடையது ஒன்று மின்று என்பது. அரன்பணியில் நிற்கும் ஆற்றல் கூறியபடி 5.

அங்கித்தம்பனம் செய்யவல்லார் அக்கினியின் மூழ்கிக் கிடப்பார், அதனால் அவருக்குத்துன்பமில்லை. விடகாரிவிடத்தின் வலியைக்கெடுப்பர், அவர்க்குக் கொலைத்தொழில் நிகழாது. அதுபோல இந்திரியங்களைத் தம் வழிப்படுத்தவல்ல ஞானிகள் எக்கருமம் செய்தாராயினும் இருவினைகள் அவரைச் சென்றணையா என்பது 6.

பதினெராஞ்சூத்திரம்

பெத்தத்தினின்று நீங்கப்பெற்றோர்க்கு முத்திப்பயன் பெறுமாறு வகுத்துக்கூறுவது இச்சூத்திரம்.

கண்ணிந்திரியம் ஒருருவத்தைக் காட்டுதன் மாத்திரையின்றி அவ்வுருவத்தைக் காணுதலும் செய்து உபகரிக்கும். அதுபோல முதல்வன் உயிர் அறியும்படி ஒரு விடயத்தை

அறிவித்தன் மாத்திரையேயன்றி அவ்வுயிருணர்வுடன் அத்துவிதமாய்ச் சென்று அறிதலும் செய்து உபகரித்து வருவான். முதல்வன் இங்ஙனம் அத்துவிதமாய் நின்று உபகரித்துவரும் உரிமையை உள்ளபடி அறிந்து நிற்பாளையின் முதல்வன் திருவடிகளைத் தலைப்படுதற்கண் இச்சை இடையறாது நிகழும். அறிவிச்சைகள் முதல்வன் திருவடிக்கண்ணவாய் ஒருங்கு நிகழவே காயத்தோடு நிற்புழியும் சுத்தனாய் அம்முதல்வன் திருவடியைத்தலைக்கூடப்பெற்றுச் சிவாதுபூதியே சுவாதுபூதியாகக்கொண்டு வாழ்வான் என்பது 1.

பரஞானத்தால் அதனைத் தெளியநோக்கி அன்புசெப்பப்பெற்றார் அவ்வொன்றனையே உணர்ந்துகொண்டு நிற்பர். ஏனைப்பதார்த்தங்களைச் சிறிதும் காண்பாரல்லர். அளவை ஞானங்கள் விந்துஞானம், பேதஞானம் என்பன பாவனை ஞானமே; அதுபூதிஞானமன்று. சிவஞானமொன்றே சிறப்புடைய ஞானம். சிவஞானத்தைப்பெற்ற சீவன்முத்தர் சிவமொன்றே கண்டிருப்பர். பிராரத்தவாதனையிற் படுவாரல்லர் என்பது 2.

உருவசிவசமவாதிகள் உடம்பாவது அநாதியாய் உயிரைப்பற்றி நீரோட்டம்போல் வருவன. அதற்கொரு முடிவில்லை முத்தியினும் நித்த சுத்த மங்களமயமான திப்பிய வுடல் உண்டு என்பர். உடம்புளதாகவே மாயை உண்டு, கன்மம் உண்டு. ஆணவமலமும் விட்டு நீங்குதல் இல்லை, அதுவும் துன்பமே. ஆகலின், அதனை முத்தி என்றதற்குத் தாற்பரியம் பதமுத்தியே எனக் கூறி அவரை மறுத்து மாயாமலம் பற்றறக்கழியுமாறு கூறப்பட்டது 3.

'இரசகுளிகை பரிசித்த மாத்திரத்தில் செம்போடு சகசமாய் நின்ற களிம்பு நீங்கும், செம்புஉருவேற்று நிற்கும். அதுபோல, மெய்ஞ்ஞானம் சேர்ந்த மாத்திரத்தில் உயிரோடு சகசமாய் நின்ற ஆணவமலம் நசிக்கும்' எனக்கூறி; முத்தியினும் சகசமலம் நீங்குமாறில்லை என்னும் பாடாண வாத சைவரையும், 'அருக்கன் ஒளிமேவினும் அருக்கனெடு கண் ஒளி கலந்தாலன்றி இருள் பற்றறக்கழியாது. அதுபோல, மெய்ஞ்ஞானம் சேரினும் சிவம் பிரகாசித்துத் திருவடியை உயிர் பொருந்திலன்றி ஆணவமலம் பற்றறக் கழியுமாறில்லை' எனக்கூறி; மெய்ஞ்ஞானம்சேர்ந்தமாத்திரையே மலம் நீங்கப்பெறும். அதுவே முத்தி,அதன்மேலும்திருவடியைக் கலத்தல் வேண்டா என்னும் பேதவாத சைவரையும் தடை விடைகளால் மறுத்தது 4

அரிசியொடும் சகசமாய்நின்ற முளை தவிடு உமிகள் கெட்டொழிய அரிசி கேடின்றி நிலைபெறுதல் கண்டாம். அவ்வரிசி முன்போல வேறொரு நெல்லுத்தோன்றுதற்குக் காரணமாதல் இல்லை. ஏன்? அவை அரிசியின்கண் இல்லை என்பது தெளிவு. அதுபோல, அநாதியே உயிர்களோடு சகசமாய்நின்ற மும்மலங்களும் முத்திநிலைக்கண் விண்டொழியும். விண்டொழியினும் ஏனைப் பெத்தரிடத்துக் காணப்படும். ஆகலின், அவை நித்தப் பொருளையாம் என்பது 5.

ஆணவமலத்தின் நீங்கி வேறுநின்றஉயிர்கள் இறைவனை விட்டுத்தனித்து நிற்றல் ஓரிடத்துமில்லை என உவமை முகத்தால் விளக்கியது 6.

முதல்வன் அத்துணைக்கலப்புடையனுப் எங்கும் செறிந்து நின்று உபகரித்துவரினும் அஃது அருட்கண்ணுடையார்க்கே அறியவரும். ஏனையோர்க்கு அறியவாராது. அருட்கண்ணும் பக்குவமுடையார்க்கன்றிக் கிடைக்கப்பெறுது. அவ்வருட்கண்ணே முதல்வன் பருவம் பார்த்திருந்து கொடுக்கப்பெறுவர். அவருக்கே முதல்வன் அறிவுக்கறிவாயிருந்து உபகரித்துவரும் அத்துவிதநிலே இனிது விளங்கும் என்பது 7.

ஈசுர அவிகாரவாதி, பரிணமவாதி, ஐக்கவாதிமதங்கள் அடாதெனக் கூறிப்பரிகரித்தல் 8.

முதல்வனே இரதகுளிகைகளோடு ஒப்புறுத்துதலன்றிப் பொன்னோடு ஒப்புறுத்தல் கூடாது. உயிர் சிவானுபவம் ஒன்றற்கே உரித்து. ஐந்தொழில் எல்லாவற்றிற்கும் சுதந்திரனுகிய முதல்வனோடு ஒத்து ஒன்றுதல் இல்லே என்பது 9.

கண்ணெளிக்கும் ஞாயிற்றினெளிக்கும் வேற்றுமை பெரிதானுற்போல இருபொருளும் சித்தாயினும் சித்திரண்டற்கும் அந்தரங்க வேற்றுமை பெரிதாம். ஐக்கவாதிகளே மறுத்தற் கெழுந்த இரண்டு செய்யுட்களும் இங்கே அருவசிவசமவாதிகளே மறுத்தற்கும் ஆயின. ஒத்து ஒன்றுய் நிற்கும் என்பர் அருவ சிவசமவாதிகள் 10.

காந்தம் விகாரமின்றி நின்றே இரும்பைவலிக்கும். அதுபோல இறைவனும் விகாரமின்றியே உயிரைத் தன் வழிப்படுத்துநிற்பன். எரி இரும்பைக்கெடுத்தலின்றித் தன்வண்ணம் ஆக்கித், தன்வண்ணம் ஆக்குதற்குரித்தாகாது இரும்பின்கண் உடன்தோன்றி நிற்கும் கறை மாத்திரம் கெடச் செய்யும். அதுபோல, இறைவனும் உயிரைத் தன்வண்ண

மாகச்செய்து தன் வண்ணம் ஆக்குதற்குரித்தாகாது உயிரின் கண் உடன்தோன்றி நிற்கும் மலம்மாத்திரம் கெடச் செய்வன். நீரோடு சேர்ந்த உப்புத் தன் சுவைமுழுவதும் அந் நீர்க்கு ஆக்கித் தன்னோடு ஒப்பச் சமம் செய்துநிற்கும். அதுபோல, உயிரைச் சேர்ந்த இறைவனும் தனக்குரிய எண் குணங்களையும் அவ்வுயிரின்கட் பதிப்பித்துத் தன்னோடு ஒப்பச் செய்து நிற்பன். இரதகுளிகை செம்பையுருக்கித் தன்னோடு கூட்டி வேதித்துப் பொன்னாகச்செய்தும் பொன் னியல்பைக்காட்டாது தன்னுள் அடக்கி நிற்கும். அதுபோல, இறைவன் உயிரை அவ்வாறெல்லாம் செய்தும் அதன் இயல்பு சிறிதும் தோன்றாது அறிவிறந்து நிற்குமாறு தனது வியாபகத்துள் அடக்கி நிற்கும். உம்பர்பிரான் ஒருவனே உற்பத்தியாதிகளுக்குரியன். கருப்பஞ்சாறு முதலிய சுவைப் பொருள்கள் எல்லாம் ஒன்றாகக் கலந்தவழி உளதாகிய சுவை இவ்வியல்பிற்று எனப்பிரித்தறியவாராது. இறைவனும் உயிரின்கண் அங்ஙனம் கலந்தவழி இவ்வியல் பிற்று எனப்பிரித்தறியவாராது ஆனந்தசொரூபமாய் நிற்பன். உயிர்தானும் சிவாநுபவம் ஒன்றினுக்குமே உரித்து என்பது 11.

பன்னிரண்டாஞ்சூத்திரம்

பாசநீக்கமும் சிவப்பேறும் ஆகிய பயன் பெற்றார்க்குச் சீவன் முத்தி நிலைக்கண் நிகழும் இயல்பு கூறுவது இப் பன்னிரண்டாம்சூத்திரம்.

விளக்கற்றம் பார்க்கும் இருள். அதுபோல, அறிவற்றம் பார்க்கும் மும்மலங்கள். ஆகலின், மலங்களைபஞ்சிப் பரிகரித்தலும், பரிகரித்தற்குத்துணையாகிய மெய்யன்பரொடுபயிறலும், பயிற்சி நிலைபெறும்படி அவரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் அரன் எனக்கண்டு வழிபடுதலும் உடையராய் வாழ்தல் சீவன் முத்தர்க்குரிய இயல்பாம் 1.

கழிகாமமுடையராயினுர்க்கு அத்தொடர்புடையாரது இணக்கம் கழிபேருவகையைத்தரும். அல்லாரது இணக்கம் வெறுப்புமிகுதியைத்தரும். அதுபோல, சிவானுபவமுடையாருக்கு அத்தொடர்புடையாரோடு இணங்குதல் உவகை மிகுதியைத்தரும். பிறரோடு இணங்குதற்கண் வெறுப்பு மிகுதி இயல்பான் அவருக்கு உளதாம் என்பது 2.

பாசப்பற்றுடையாரது பற்று விட்டொழிதற்பொருட்டுத் திருவேடமுடைய மெய்யன்பரை அரனெனவே தேறி வழிபடுக என்பது 3.

சிவலிங்கம் முதலிய திருமேனியே சிவமெனக்கண்டு வழிபடுவர் சரியையாளர். அவர்க்குச்சிவன் ஆண்டுவெளிப்படாதுநின்று அருள் செய்வன். மந்திரகியாசங்களால் வழிபடும் கிரியையாளர்க்கும், சாத்தியமந்திரங்களால் வழிபடும் யோகிகளுக்கும் அவரவர் விரும்பியவடிவாய் அவ்வத்திருமேனிகளில் அப்போதப்போது தோன்றிநின்று அருள்செய்வன். அன்பு மாத்திரையான் ஆண்டுவழிபடும்ஞானிகட்கு அன்பே தானுய் எப்போதும் ஆண்டுவெளிப்பட்டு நின்று அருள்செய்வன். ஆகலான், அஃதறிந்துவழிபடுதல்வேண்டும் என்பது, தொழப்படுவாரது கருத்துவகை பற்றியும், தொழுவாரது கருத்துவகைபற்றியும் கூறியது 4.

உட்டொழில்செய்வார் புறத்தொழில் செய்தற்கும் உரியர். ஏனையோர் தத்தம் தொழிற்கே உரியர். நாலுபாதத்தின் நிகழும் கிரியையெல்லாம் கர்த்தாவினது உண்மைப் பணியாம். உலகின் மருவாத இன்பத்துள்வைத்த குருவின் உபகாரத்தைக்கருதி நால்வகைத்தொழிலும் ஞானிசெய்தலே கடப்பாடாம். ஞானகுருவே தலையாயகுரு. தாவரசங்கமங்களும் இக்குருவடிவின் வேறல்ல. ஆகலின், அவ்விரண்டினும் வழிபடுக என்பது 5.

ஏனைஞானங்கள் எல்லாம் ஆசாரியனை இன்றியும் அமையும். திருவடிஞானம் ஆசிரியனையின்றி ஒருவாற்றானும் அமையாது. ஆகலின், இவனே ஈசன் என்று இறைஞ்சி ஏத்துக என்பது 6.

சிவபேதம் அனைத்தும் குரு மூர்த்தமே எனத்தேறி ஞானாசாரியனை வழிபடுக. அங்ஙனம் வழிபடப்பெறின் சிவன் இக்குருவை ஆவேசித்து நின்று நாடோறும் செய்யும் பரிசம் முதலியவற்றான் அவ்வுயிரைத் தன்வண்ணமாகச் செய்தருளுவன். ஏத்தினோர்க்குவரும் பயன் கூறியது இது. 7.

விஷய அட்டவணை

முற்றிற்று

ஒ

உரைப்பாயிரம்

பண்ணிசைவெம் பரிதிமதி திலதயிலந் தீயிரும்பு
பாணி யுப்பு
விண்ணனில முடலுயிர்நீர் நிழலுச்சிப் பளிங்குபகல்
விளக்குப் பானீர்
கண்ணிரவி யுணர்வொளிபோற் பிறிவரிய வத்துவிதக்
கலவி காட்டித்
தண்ணளிவைத் தெனையாண்ட துறைசைநமச் சிவாயகுரு
சரணம் போற்றி.

— ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் சுபக்கம்.

மூலமும் – உரையும்.



ஸ்ரீசுப்பிரமணியதேசிகர் பதவுரை —

ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் பொழிப்புரைகள்.

---

*சிவ*ஞானபோதநூற்பொருள் பிற்காலத்தார்க்கு இனிது 'விளங்குமாறு விரித்தல் யாப்பான் நூல்செய்வான் புகுந்தவாசிரியர் எடுத்துக்கொண்டபொருள் இடையூறு தீர்ந்தினிதுமுடிதற்பொருட்டும், இந்நூ லின்னது நிலவுதற்பொருட்டும், முதற்கட் செய்து கொண்ட கடவுள்வாழ்த்து மாணாக்கர்க்கு அறிவறுத்தற்பொருட்டுச் செய்யுளாற் றொடங்கின்றார்.

காப்பு.

விநாயகர் வணக்கம்.

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த
னுல்வாயைங் கரத்த னுறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
றருமொருவா ரணத்தின் ருள்கள்
உருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே
யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமுமொன்
ருேவென்னச் செய்யுந் தேவே.

சுப — பதவுரை.

ஆறு - கங்கையும்,—தரு கோட்டு அம் பிறை - தன் னுற்றரப்பட்ட வளைவான் அழகுபெற்ற பிறையும்,— இதழி - கொன்றை மாலையும் (அணிந்த),— தாழ் சடை யான் தரும் - தாழ்ந்த சடையையுடைய சிவபிரான் அளித் தருளிய,—ஒரு கோட்டன் - ஒற்றைக் கொம்பையுடைய னும்,—இரு செவியன் - இரண்டு (முறம்போலுஞ்) செவி களையுடையனும்,—மும்மதத்தன் - மூன் று ம த ங் க ள் யுடையனும்,—நால்வாய் ஐங்கரத்தன் — நான்ற வாயை யுடையனும் ஐந்து கரங்களை யுடையனுமாகிய, — ஒரு வாரணத்தின் தாள்கள் - ஒப்பற்ற வாரணமுகத்தானுடைய திருவடிகள்,— உருகு ஓடு அன்பொடும் - உருகுதலுடன் ஓடப்பெற்ற பேரன்பான், — ஓவாதே வணங்கி — இடை யருது (தம்மை) வழிபட்டு,—இரவு பகல் - இரவும் பகலும், —உணர்வோர் சிந்தை - தியானிப்போர் அறிவின் கண்ண தாகிய,—திருகு ஒட்டும் - மலக்கோணைத் துரக்கும் (அது வேயுமன்றி),-அயன் திருமால் செல்வமும் ஒன்றே என்ன -அயன் அரி முதலியோர் வாழ்வும் ஒரு பொருளன்றென வெறுப்ப,—தேவே செய்யும் - சிவமாந் தன்மைப் பெரு வாழ்வையுந் தரும் என்க.

சிவ — பொழிப்புரை.

என்பது: *கங்கையும் பிறையுங் கொன்றையு மணிந்த சடையா னளித்தருளிய ஒருகோடு முதலியவற்றையுடைய வனகிய வாரணமுகத்தானுடைய திருவடிகள், பேரன்பா னிடையறாது தம்மை வழிபட்டுத் தியானிப்போ ரறிவின் கண்ணதாகிய மலக்கோணைத் துரக்கும்; அதுவேயுமன்றி; அயனரிமுதலியோர் வாழ்வு மொருபொருளன்றென வெறுப் பச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வையுந் தரு மென்பதாம்.*

சிந்தைத் திருகோட்டித் தெய்வத்தன்மை செய்யவல்ல தாள்களுக்கு இடையூற்றை யோட்டி இந்நூன் முடிவுபெறச் செய்தல் அருமையன் றென்பது கருத்து.

கங்கையின் செருக்கடக்கிப் பிறையை வாழ்வித்த பெருமான் மகனுதலானும் அச்சீலமுடைமை தெளியப்படுமென்பார், ஆறுதரு கோட்டம் பிறையிதழித் தாழ் சடையான் றருமொரு வாரண மென்றார்.

இதழியு முடன்கூறினர், திருவடையாள மாலையாதலின்.

இதழித்தணர்போலத் தாழ்ந்தசடையானென உவமத்தொகையாகக்கொண்டுரைத்தலு மொன்று.

தருகோட்டம்பிறை தன்னுற்றரப்பட்ட வளைவானழகுபெற்ற பிறை.

இருசெவியனென்றது, இசையெச்சத்தால், இரண்டு முறம் போலுஞ் செவியனெனப் பொருடந்து நிற்றலின், ஒருகோடு முதலியனபோலப் பிறிதினியைபுநீக்கிய விசேடணமாதற் கிழுக்கின்மை யுணர்க.

யானையுறுப்புக் கழுத்திற்கு மேலன்றியின்மையான் மும்மதத்தனுதல் யாங்ஙனமென்பார்க்கு, மும்மதம் யானைக்கு அடையென்பாரும், ஒருகோட்டன் முதலியன போல மும்மதத்தனென விகாயகப்பிரானுக்கே யடையாய் நிற்றலின் யானைக்கடை யாமாறு யாங்ஙனமென மறுத்து இச்சாஞானக் கிரியைகள் ஈண்டு மும்மதமென உருவகஞ் செய்யப்பட்டன வென்றுரைப்பாரும்; ஒருகோடு முதலிய வேனை யடையெல்லாம் உறுப்பினையே யுணர்த்தி நிற்றலின் இதுமாத்திரமினம்பற்றி யுருவகமாதல் செல்லாமையானும், உருவகஞ் செய்தற்குரியதோரியைபுவிசேடமின்மையானுங்

கந்தன் முதலியோரையு மக்கருத்துப்பற்றி மும்மதத்தனெனல் யாண்டுமின்மையானும், அதுவுமுரையன்றென மறுத்துப் பஞ்சாக் காத்தின் பேதமாகிய எட்டெழுத் தாறெழுத்து காலெழுத்து முதலியனவும் பஞ்சாக்கரமென வழங்கப்படுமாறு போல மும்மதத்தின் வகையாகிய ஒருமதமு மிருமதங்களு மும்மதமென வழங்கப்படுமாகலின் அது பற்றி ஆசங்கை யென்னையென் றெழுவாரு முளர்.

வாரணமுஞ் சிந்தையும் ஆகுபெயர்.

திருகு முதனிலைப்பெயர்.

ஓகாரம் எதிர்மறை.

இஃதெண்ணலங்காரம்.

ஈண்டு "இறைவனையு மிறைவனு லியம்புநூலு மீண்டளவும் பொருளியல்பும் வேண்டுஞ் செய்தி–முறைமைகளும் பெத்தமொடு முத்தியெல்லாம்" என்றெடுத்துக்கொண்ட முறையே வைத்துப் ப்ரபக்கங்களை யெடுத்தோதி மறுத்த வாசிரியர், இனி யம்முறையே சுபக்கம் கூறுகின்றார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவஞான சித்தியார் சுபக்கம்.

மங்கலவாழ்த்து.

திருவிருத்தம் — 5.

பாயிரம்

மங்கலவாழ்த்து.

சிவபெருமான்.

அறுவகைச் சமயத் தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறுங்
குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறியிறந்தங்
கறிவினி லருளான் மன்னி யம்மையோ டப்ப னுகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்.

சுப — பதவுரை.

அறுவகைச் சமயத்து - (புறப்புறம் புறம் அகப்புறம் அகமென்னு நான்கனுள் அகச்சமயமொழித்து ஒழிந்த மூக்கூற்றுப் புறங்களிலே தனித்தனி) அறுவகைப்பட்ட சமயங்களி னின்றுகொண்டு,—ஓர்க்கும் - (அவற்றுள்ளும் பல வேறுவகைப்பட) ஆராய்ந்தறிகின்ற,—அவ்வவர் பொருளாய் – அவரவர்கொண்ட முதற்பொருளாய்,—வேறுங் குறியது உடைத்தாய் – அவரின் வேறுகிய (பாடாணவாத முதலிய அகச்சமயத்தார்க்கு இலயம் போகம் அதிகாரமென்னு மூன்றவத்தையின் முறையே சத்தியும் உத்தியோகமும் பிரவிருத்தியு மென்னுந்தொழில் வேறுபாடுபற்றிச் சிவன் சதாசிவன் மகேசனென்னும் பெயருடைய அருவம் அருவுருவம் உருவமென்னுந் தடத்தக்) குறியே குறியாக வுடைத்தாய்,— வேதாக மங்களின் குறி இறந்து – (சித்தாந்தசைவர்க் கத்தடத்தக் குறியேயன்றி) வேதாகமங்களின் கருத்திற் கதிதமாய்,—அறிவினில் அருளான் மன்னி – உயிர்க்குயிராய்,—அங்கு

அம்மையோடு அப்பன் ஆகி - (உயிர்கட்கெல்லாம் அறிவைப் பிறப்பிக்கும்) அம்மை அப்பனுமாகி,—செறிவு ஒழியாது நின்ற—(எங்கணும் எக்காலமுஞ்) செறிந்து வியாபகமாய் நின்ற,— சிவன் அடி சென்னி வைப்பாம் –சிவபிரான் றிருவடியைச் சிரமேற் கொள்வாம் என்க.

சிவ — பொழிப்புரை.

எ-து புறப்புறம் புறம் அகப்புறம் அகம் என்னு நான்கனுள் அகச்சமயமொழித்தொழிந்த முக்கூற்றுப்புறங் களிற் றனித்தனி யறுவகைப்பட்ட சமயங்களி னின்று கொண் டவற்றுள்ளும் பலவேறுவகைப்பட வோர்த்துணர் கின்ற அவரவர்கொண்ட முதற்பொருளாய், அவரின் வேறுகிய பாடாணவாதமுதலிய அகச்சமயத்தார்க்கு இலயம் போகமதிகாரமென்னு மூன்றவத்தையின் முறையே சத்தியு முத்தியோகமும் பிரவிருத்தியுமென்னுந் தொழில் வேறு பாடுபற்றிச் சிவன் சதாசிவன் மகேசனென்னும் பெயருடைய அருவம் அருவுருவம் உருவமென்னுந் தடத்தக்குறியே குறியாகவுடைத்தாய்ச், சித்தாந்தசைவர்க்கு அத்தடத்தக் குறியேயன்றி வேதாகமங்களின் கருத்திற்கதீதமாய், உயிர்க் குயிராய், உயிர்கட்கெல்லாமறிவைப் பிறப்பிக்கும் அம்மை யப்பனுமாகி, எங்கணுமெக்காலமுஞ் செறிந்து வியாபகமாய் நின்ற சிவபிரான் றிருவடியைச் சிரமேற் கொள்வாமென் பதாம்.

பரபக்கத்துட் புறப்புறச்சமயத்தாரையும் புறச்சமயத்தா ரையுமறுப்பவே, அம்முறைபற்றி அகப்புறச்சமயத்தாரும் மறுக் கப்பட்டாரேயாவ ரென்னுங் கருத்தான், அவரையுமுடன்றழுவ அறுவகைச்சமயத்தெனப் பொதுப்படக்கூறினர்.

ஓர்த்தல்—ஆராய்தல்.

விசேடியமடியாகலின் உடைத்தாயென்றார்.

சிவனடி யென்றது உபசாரம்.

இதனுள், அறுவகைச்சமயத்தோர்க்கு மவ்வவர்பொருளாயென வே மேற்கூறிப்போந்த பாபக்கத்துப்பொருளும், வேருங்குறியது வுடைத்தா யெனவே முதற்சூத்திர முதலிய வைந்துசூத்திரத்திற் பெறப்படுந் தடத்தப்பொருளும், வேதாகமங்களின் குறியிறந்தென வே இரண்டுமன்றி யேனைச்சொரூபலக்கணங்கூறும்ஆறுஞ்சூத்திரப் பொருளும், அறிவினிலெனவே ஆன்மசொரூபங்கூறு மேழாஞ்சூத் திரப்பொருளும், அருளான் மன்னி யெனவே ஞானதரிசனங்கூறு மெட்டாஞ் சூத்திரப்பொருளும், அம்மையோ டப்பனுகியெனவே ஞானமு ஞேயமு ஞாதிருவுமாகக் காணப்படு மொன்பதாஞ் சூத் திரப்பொருளும், செறிவொழியாது நின்ற வெனவே ஏகனுகிநிற்றல் கூறும் பத்தாஞ்சூத்திரப் பொருளும், சிவனடி சென்னி வைப்பா மெனவே அரன்மலரடிக்கீழிருத்தல் கூறும் பதினென்றாஞ் சூத் திரப்பொருளும், சென்னிவைப்பா மென்னுஞ் சொல்லியல்பான் அணேக்தோர்தன்மை கூறும் பன்னிரண்டாஞ் சூத்திரப்பொருளுங் குறிப்பானறியக் கிடந்தன.

இங்ஙனந் தொகுத்துக் காட்டுதல் மங்கலவாழ்த்துக்கு இலக் கணமென உணர்க.

இனி, இதனுட் கூறப்படு மறுவகைவினேயெச்சங்களானும் முதல்வனுடைய அறுவகைக் குணங்களுங் கூறப்பட்டன வென் றுரைத்தலு மொன்று.

அதுகாட்டுதும்: அவ்வவர் பொருளாயென்றதனுல் அங்ஙனம் பல வேறுவகைப்பட நிற்கு மகந்தசத்தியாகிய அளவிலாற்றலுடை மை கூறப்பட்டது; வேருங்குறியது வுடைத்தா யென்றதனுல் அகாதிபோத மகாதி முத்தத்தன்மை யெனப்படும் இயல்பாகவே

பாசங்களினீங்குதல் கூறப்பட்டது; நிராமயான்மா வெனப்படும் இயற்கை யுணர்வினுதலுமீண்டே யடங்கும்; வேதாகமங்களின் குறியிறந்தென்றதனுற் சுதந்திர னெனப்படுந் தன்வயத்தனுதல் கூறப்பட்டது; அறிவினி லருளான் மன்னி யென்றதனுற் சருவஞ் ஞத்துவமெனப்படும் முற்றுமுணர்தல் கூறப்பட்டது; அம்மையோ டப்பனுகி யென்றதனுல் அலுத்தசத்தி யெனப்படும் பேரருளுடை மைகூறப்பட்டது; விசுத்ததேகமெனப்படுந் தூயவுடம்பினுதலு மீண்டே அடங்கும்; செறிவொழியா தென்றதனுற்பூர்த்தியெனப் படும் வரம்பிலின்பமுடைமை கூறப்பட்டதென்றுணர்க. இன்னும் விரிப்பிற் பெருகும். (1)

முன்னுற்சிறப்பு.

என்னையிப் பவத்திற் சேரா வகையெடுத் தென்சித் தத்தே,
தன்னைவைத் தருளினுலே தாளிணை தலைமேற்சூட்டு,
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண் டானுல்,
சென்னியிற் கொண்டு சைவத் திறத்திணைத்தெரிக்க லுற்றும்.

சுப் — பதவுரை.

என்னை— (பவமாயக் கடலிலழுந்துகின்ற) என்னை,—இப்பவத்திற் சேராவகை அருளினுலே எடுத்து—அதன் கணழுந்தாதவண்ணம் கருணைக்கையாலெடுத்து,—என் சித்தத்தே தன்னை வைத்து—என்னறிவின் கண்ணே தற்சொரூபத்தை விளக்குதற் கெழுந்தருளி வந்து,—தாள் இணை தலைமேற் சூட்டும் – திருவடிகளைச் சென்னியிற்

சூட்டித் தீக்கை செய்தருளிய,—மின் அமர் பொழில் சூழ் வெண்ணெய் மேவிவாழ்–மின்னலையுடைய மேகந்தங்கு தற்கிடமாகிய சோலைகள் சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூ ரென்னுந் திருப்பதியில் விருப்பமுற்று வாழ்கின்ற,—மெய் கண்டான் நூல் – மெய்கண்டதேவன் (மொழிபெயர்த் துரைத்தருளிச்செய்த) சிவஞானபோத நூலை,—சென்னி யின் கொண்டு – (ஏனையாசிரியன்மார் செய்த பிரமாண நூல்கட் கெல்லாஞ்) சிரத்தானமாகக்கொண்டு,—சைவத் திறத்தினைத் தெரிக்க லுற்றும் — (அதனிற் கூறப்படுஞ்) சைவாகமப் பொருட்கூற்றை விளக்குவாம் என்க.

சிவ — பொழிப்புரை.

எ-து. பவமாயக்கடலிலழுந்துகின்ற வென்னை அதன்க ணழுந்தாத வண்ணங் கருணைக்கையா லெடுத்து என்னறி வின் கண்ணே தற்சொரூபத்தை விளக்குதற்கெழுந்தருளி வந்து திருவடி சென்னியிற் சூட்டித் தீக்கைசெய்தருளிய வெண்ணெய் மெய்கண்டதேவன் மொழிபெயர்த்துரைத்தரு ளிச்செய்த சிவஞானபோதநூலை, ஏனையாசிரியன்மார் செய்த பிரமாணநூல்கட்கெல்லாஞ் சிரத்தானமாகக் கொண்டு அத னிற் கூறப்படுஞ் சைவாகமப் பொருட்கூற்றை விளக்குவா மென்பதாம்.

இந்நூலுக்கு வழிகூறியவாறு.

எடுத்தென்றது குறிப்புருவகம்.

வைத்தென்றது உபசாரவழக்கு; "அன்போடியைந்தவழக்கு" (திருக்குறள் – அன்புடைமை – 3.) *என்றாற்போல.*

நூதலியபொருண்முதலியன.

பண்டைநற் றவத்தாற் றேன்றிப் பரமனைப் பத்தி பண்ணுந்
தொண்டரைத் தானே தூய கதியினிற் றெருகுப்பன் மார்க்கர்
கண்டநூ லோதி வீடு காதலிப் பவர்கட் கீசன்
புண்டரி கத்தாள் சேரும் பரிசினைப் புகல லுற்றும்.

சுப் — பதவுரை.

(சாமுசித்தர் வைஞயிகர் பிராகிருத ரென்னு மிவருள் ஆற்றலு மறிவுங் காதலு மில்லாத பிராகிருதரை யொழித்து ஒழிந்த இருவரின்) பண்டை நற்றவத்தால்-முற்செய் தவவிசேடத்தால்,—தோன்றி-(சாமுசித்தராய்ப்) பிறந்து,—பரமனைப் பத்தி பண்ணும் தொண்டரை-முதல் வனிடத்தே (வீடுகாதலித்துப்) பத்தி பண்ணுகின்ற சிவ பத்தரை,— தானே — (விஞ்ஞானகலர் பிரளயாகலரைப் போல நூல் வழியாலன்றித்) தானே,—தூய கதியினில் தொகுப்பன் - சிவகதியிற் சேர்த்துவ ரகலின் (அவர்க்கு நூல் வேண்டாமையான்),— மார்க்கர் — ஞானிகளெல் லாம்,— கண்ட நூல் ஓதி - பிரமாணமென்றறிந்து கைக் கொண்ட நூலை ஓதி (அதன்வழியான்),—வீடு காதலிப் பவர்கட்கு-(முறைமையின் மந்ததர முதலிய சத்திநிபாத முடையராய்) முத்திபெற விரும்பும் வைஞயிகராயினர் க்கு,— ஈசன் புண்டரிகத் தாள் சேரும் பரிசினை-சிவபெரு மானுடைய செந்தாமரை மலர்போன்ற திருவடி கூடு முறைமையினை,— புகலலுற்றும் — (ஈண்டு வகுத்துக்) கூறுகின்றும் என்க.

சிவ — பொழிப்புரை.

எ-து. சாமுசித்தர் வைரயிகர் பிராகிருதரென்னுமிவ ருள், ஆற்றலு மறிவுங் காதலுமில்லாத பிராகிருதரையொழி த்து, ஒழிந்தவிருவரின் முற்செய் தவவிசேடத்தாற் சாமு சித்தராய்ப் பிறந்து வீடு காதலிக்குஞ் சிவபத்தரை விஞ் ஞானகலர் பிரளயாகலரைப்போல நூல்வழியா னன்றித் தானே சிவகதியிற் சேர்த்துவனகலின் அவர்க்கு நூல் வேண் டாமையான், முறைமையின் மந்ததர முதலிய சத்திநிபாத முடையவராய் நூல்வழியான் முத்திபெறவிரும்பும் வைரயிக ராயினர்க்குச் சிவகதி கூடுமுறைமையினை ஈண்டு வகுத்துக் கூறுகின்ரு மென்பதாம்.

சன்மார்க்கரை மார்க்கரென்றது தலைக்குறை. சன்மார்க் காராவார் ஞானிகள்.

கண்டநூல் அவர்களெல்லாம் பிரமாணமென்றறிந்து கைக் கொண்டநூல்.

நுதலியபொருளுங் கேட்போரும் பயனுங் கூறியவாறு. (3)

அவையடக்கம்.

மறையினு லயனன் மாலான் மனத்தினுல் வாக்கான் மற்றுங், குறைவிலா வளவி னலுங் கூரெணு தாகி நின்ற, விறைவனுர் கமல பாத மின்றியா னியம்பு மாசை, நிறையினர் குணத் தோர்க் கெல்லா நகையினை நிறுத்து மன்றே.

சுப் — பதவுரை

மறையினுல் — வேதங்களினுலும், — அ ய னு ல் –அயனுலும்,—மாலால்–மாலாலும்,— மனத்தினுல் – மனத்தினுலும்,— வாக்கால்–வாக்கினுலும்,— மற்றும் குறைவு இலா அளவினுலும்–வேறுங் குறைவில்லாத அநுமானப் பிரமாணத்தாலும்,—கூற ஒணாது ஆகி நின்ற–அறிதற் கரிதாய் நின்ற,— இறைவனுர் கமல பாதம் – முதல்வனது கமலமலர்போலும் பாதமென்றுபசரித்துக் கூறப்படும் இயல்பை,—இன்று யான் இயம்பும் ஆசை – இன்றுயான் சொல்லுவலென் றெழுந்த எனது புல்லியவாசை,—நிறையினுர் குணத்தோர்க்கெல்லாம்–சால்புடையராய குணத்தினையுடையாரெல்லார்க்கும்,—நகையினை நிறுத்தும் அன்றே – ஏ ஏ இஃதோ இவனறிவென்றெள்ளி நகையாடுதற் கேதுவாம் என்க.

இனி, மறையினுல் – வேதங்களாலும்,—அயனுல் – அவ்வேதத்திற் கங்கமாய் அயனுற் செய்யப்பட்ட பதினெண்புராண நூல்களாலும்,— மாலால் – மாயோன வதாரமாகிய வியாசனுற் செய்யப்பட்ட இதிகாச நூலாலும்,— மனத்தினுல் — மநு முதலிய விருடிகண் மனத்தானினைந்து செய்யப்பட்ட மிருதி நூல்களாலும்,— வாக்கால்-அவ்வேதத்தைக் கருமகாண்டம் ஞானகாண்டமென் றிருவகைப்படுத் தெடுத்துக்கொண்டு அதன் பொருளை நிச்சயித்துரைக்குஞ் சாத்திரமாகிய பூருவ மீமாஞ்சை உத்தரமீமாஞ்சைகளாலும்,—மற்றுங்குறைவு இலா அளவினுலும் – வேறுங் குறைவில்லாத அளவை நூலாகிய தருக்க சாத்திரங்களாலும்,—கூற ஒணாது ஆகி நின்ற இறைவனுர் கமலபாதம்–சொல்லுதற்கரிதாய் நின்ற சிவபிரான் கமலபாத மென்றலு மொன்று.

சிவ — பொழிப்புரை.

எ-து. வேதமுதலியவற்றினு மறிதற்கரிய முதல்வன தியல்பை யான் சொல்லுவலென்றெழுந்த எனது புல்லியவாசை, சால்புடையாரெல்லாரும் ஏயேயிஃதோவிவனறிவென் றெள்ளி நகையாடுதற் கேதுவா மென்பதாம்.

அயனுன் மாலான் மனத்தினுல் வாக்காலென்புழி, ஆலுருபு முன்னேயவிரண்டும் வினைமுதற்பொருண்மையினும், பின் னேயவிரண்டுங் கருவிப்பொருண்மையினும் வந்தன; சாத்தனுற் கண்ணு னுக்கப்பட்ட தென்றாற்போல.

ஈண்டளவென்றது அனுமானப் பிரமாணத்தை.

அயன்மா லென்றது உபலக்கணம். கூறினு தென்றது உபசாரம்.

இனி, அயனென்றது அவ்வேதத்திற்கங்கமாய் அயனுற் செய்யப்பட்ட பதினெண்புராணநூலையும், மாலென்றது மாயோனவதாரமாகிய வியாதனுற் செய்யப்பட்ட இதிகாச நூலையும், மனமென்றது மனுமுதலிய இருடிகளான் மனத்தானினைந்து செய்யப்பட்ட மிருதிநூலையும், வாக்கென்றது அவ்வேதத்தைக் கருமகாண்டம் ஞானகாண்டமென்றிருவகைப்படுத்தெடுத்துக்கொண்டு அதன் பொருளை நிச்சயித்துரைக்கும் சாத்திரமாகிய பூருவமீமாஞ்சை உத்தரமீமாஞ்சைகளையும், அளவென்றது அளவை நூலாகிய தர்க்க சாத்திரத்தையும் ஆருபெயரானுணர்த்தின வெனக்கொண்டு வேதத்தானு மதற்கங்கமான புராண மிதிகாச மிருதி மீமாஞ்சை தருக்கங்களானுங் கூறினுதபாதமென்றுரைத்தலு மொன்று.

அவையடக்கங் கூறியவாறு. (4)

ஆசங்கைநீக்கல்.

அருளினு லாக மத்தே யறியலா மளவி னுலுக்
தெருளலாஞ் சிவனே ஞானச் செய்தியாற் சிந்தை யுள்ளே
மருளெலா நீங்கக் கண்டு வாழலாம் பிறவி மாயா
விருளெலா மிரிக்க லாகு மடியரோ டிருக்க லாமே.

சுப் — பதவுரை.

(இறைவனியல்பு அப்பெற்றித்தாயினும்) சிவனே – அவ்விறைவனே,—ஆகமத்தே - (அவனருளிய நூலெனப் படும் வேதசாரமாகிய) சிவாகமத்தின்,—அருளினுல் அறியலாம் – (அநுபவமுடைய தேசிகர்) அருளிச்செய் யும் உபதேசத்தாற் கேட்டறியலாம்,—அளவினுலும் தெருளலாம் – (கேட்டதனை அதற்கனுகூலமான) அளவையாற் சிந்தித்து மறியலாம்,— சிந்தையுள்ளே — (சிந்தித்ததனைத்) தன்னறிவின்கண்ணே,— ஞானச்செய் தியால் மருளெலாம் நீங்கக் கண்டு வாழலாம்-சிவ ஞானத்தான் மாசறத்தெளிந்து மறியலாம்,–பிறவி மாயா இருளெலாம் இரிக்கல் ஆகும்-(அதனற்) பிறவி மாயா மைக் கேதுவாகிய பாசக்ஷயமும் பண்ணலாம்,—அடிய ரோடு இருக்கலாமே–(அதனல்)அவனடியாரோடு கலந்து (நிட்டைகூடிச் சிவானந்தானுபூதியும் பெற்)றிருக்கலாம் என்க.

சிவ — பொழிப்புரை.

எ-து. இறைவனியல்பு அப்பெற்றித்தாயினும் அவனே அவ்விறைவனலெனப்படும் வேதசாரமாகிய சிவாகமத்தின னுபவமுடைய தேசிகாருளிச்செய்யும் உபதேசத்தாற்

கேட்டறியலாம்; கேட்டதனை அதற்கனுகூலமானவளவை யாற் சிந்தித்துமறியலாம்; சிந்தித்ததனைத்தன்னறிவின் கண்ணே சிவஞானத்தான் மாசறத் தெளிந்துமறியலாம்; அதனைற் பாசசூபம்பண்ணி நிட்டைகூடிச் சிவானந்தானு பூதியும் பெறலாமென்பதாம்.

உம்மை எண்ணின்கண் வந்தது.

மேல் அவையடக்கத்துட் கூறியதுபற்றி நிகழு மாசங்கையை நீக்கிற்று.

இக்கடவுள்வணக்க முதலாயின வெல்லாம், பரபக்கத்து நூன் முகத்தாற் கூறிப் போந்தனவே யாயினும், பரபக்கஞ் சுபக்கமென விதனை இருநூலாதலுங் கொள்ள வைத்தமையின், ஈண்டும் வேறு கூறினர்.

அறுவகைச்சமயத்தென்னு முதற்செய்யுளிற் கடவுள் வணக்கங் கூறுமுகத்தாற் சுபக்கத்தி னிறைவனுவா னிவனென்பதூஉம், ஏனை நான்கு செய்யுளினும் வழிமுதலியன கூறுமுகத்தான் அவ் விறைவனு லியம்பப்படும் நூலிவை யென்பதூஉம், அவற்றுட்பொது நூல் சிறப்புநூலென்னும் வேறுபாடு முணர்த்தப்பட்டன. (5)

மங்கலவாழ்த்து முடிந்தது.

ஆகத்திருவிருத்தம் – 6.

உ


சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவஞான சித்தியார் சுபக்கம்.

அளவையிலக்கணம்.

திருவிருத்தம் — 14.



அளவையியல்கணம்.

இனி, நிறுத்தமுறையானே பொருளுண்மைக்களவு கூறுவான் றொடங்கி, அவ்வளவையி னியல்புணர்ந்தார்க்கன்றி அதனையெடுத் துக் காட்டலாகாமையின், முதற்கண் அளவையி னியல்பு பதினொன்று செய்யுளாற் கூறுகின்றூர்.

அளவை காண்டல் கருதலுரை யபாவம் பொருளொப் பாறென்ப, ரளவை மேலு மொழிபுண்மை யைதி கத்தோ டியல்பெனநான், களவை காண்ப ரவையிற்றின் மேலு மறைவ ரவையெல்லா, மளவை காண்டல் கருதலுரை யென்றிம் மூன்றி னடங்கிடுமே.

சுப் — பதவுரை.

அளவை – பிரமாணமாவது,—காண்டல் – காட்சியும்,—கருதல் — அனுமானமும்,—உரை – ஆகமமும்,—அபாவம் – இன்மையும்,–பொருள் - அருத்தாபத்தியும்,—ஒப்பு (என) — உவமையு மென,—ஆறு என்பர் - அறு வகைப்படுமென்பாரும்,—அளவை மேலும் — அவ்வறு வகைப் பிரமாணங்கட்கு மேலும்,—ஒழிபு — பாரிசேட மும்,—உண்மை – சம்பவமும்,—ஐதிகத்தோடு — உலக வாதமும்,—இயல்பு என – சகசமு மென,—நான்கு அளவை காண்பர் – நான்கு பிரமாணமுள வென்பாரும்,– அவையிற்றின் மேலும் அறைவர் – அப்பத்துக்கு மேலும் (பிரமாணங்களுள) வென்பாருமுளர்,—அவை யெல்லாம் அளவை - அவையெல்லாம் பிரமாணமேயாயினும்,–காண் டல் — காட்சியும்,— கருதல் — அனுமானமும்,— உரை

என்ற - ஆகமமு மென்ற,—இம்மூன்றின் அடங்கிடுமே —இம்மூன்றனு ளடங்குவன (வன்றி வேறுவனவல்ல) என்க.

சிவ — பொழிப்புரை.

எ-து பிரமாணமாவது காட்சிமுதல் அறுவகைப்படு மென்பாரும், அவ்வறுவகைப் பிரமாணங்கட்குமேலும் பாரி சேடமுதலிய நான்கு பிரமாணமுள வென்பாரும், அப்பத் துக்குமேலும் பிரமாணங்களுள வென்பாருமுளர். அவை யெல்லாம் பிரமாணமேயாயினுங் காட்சிமுதலிய மூன்றனு ளடங்குவனவன்றி வேறுவனவல்லவென்பதாம்.

இம்முறைபற்றி ஆகமமு மனுமானத்தி லடங்குமெனப் புத்தர் முதலாயினர் கூறுப; அஃததனுளடங்காதென்பது "நூலுரைத் தாலொருவனுளன்" என்னும் பரபக்கத்துச் செய்யுளானுணர்க.

இது சொற்பொருட் பின்வருநிலை.

இதனுனே பிரமாண மினைத்தென்பது கூறப்பட்டது. (1)

மாசறு காட்சி யையந் திரிவின்றி விகற்ப முன்னை
வாசற வறிவ தாகு மனுமான மவினை பாவம்
பேசறு மேதுக் கொண்டு மறைபொருள் பெறுவ தாகுங்
காசறு முரையிம் மானத் தடங்கிடாப் பொருளைக் காட்டும்.

சுப் — பதவுரை.

(அம்மூன்றனுள்) விகற்பம் முன்னை – நிருவிகற்ப வுணர்வைத் தனக்கு முன்னைக்கொண்டு,—ஐயம் திரிவு இன்றி – ஐயவுணர்வும் விபரீதவுணர்வு மின்றி,—ஆசு அற

அறிவது – (விடயங்களை) நேரே யறியப்படுவதாகிய ஆன்மாவினது ஞானசத்தி,—மாசு அறு காட்சி ஆகும் —குற்றமற்ற காட்சியளவை யெனப்படும்,—மறை பொருள்-(அங்ஙன நேரே யறியப்படுவதன்றிச் சாதித்துப் பெறற் பாலதாய்) மறைந்து நின்ற பொருளை,—அவினை பாவம் பேசுறும் ஏதுக்கொண்டு — சொல்லப்பெற்ற (அதனை) விட்டு நீங்காது (யாண்டு முடனுய் நிகழும்) ஏது வைக் கொண்டு,—(விகற்பம் முன்னை ஐயம் திரிவு இன்றிப்) பெறுவது–அவ்வாறு நிருவிகற்ப வுணர்வைத் தனக்கு முன்னைகக்கொண்டு ஐய விபரீதக் குற்றமின்றி யுணர்வதாகிய ஆன்மாவினது ஞானசத்தி.–அனுமானம் ஆகும் -கருதலளவை யெனப்படும்,–இம்மானத்து அடங்கிடாப் பொருளை — இவ்விரண்டு பிரமாணங்களாலும் அறியப்படாத (பரலோக பாதாளலோக முதலிய)பொருள்களை,– (ஆத்த வாக்கியங்கொண்டு) (விகற்பம் முன்னை ஐயம் திரிவு இன்றிக்) காட்டும்–அவ்வாறு நிருவிகற்பத்தைத் தனக்கு முன்னைகக்கொண்டு ஐய விபரீதக்குற்றமின்றி யுணரச்செய்வதாகியஆன்மாவினது ஞானசத்தி,— காசு அறும் உரை—குற்றமற்ற வுரையளவை யெனப்படும் என்க.

சிவ — பொழிப்புரை.

எ-து. *அம்மூன்றனுள், நிருவிகற்பவுணர்வைத் தனக்கு முன்னைகக்கொண்டு ஐயவுணர்வும் விபரீதவுணர்வுமின்றி விடயங்களை நேரேயறிவதாகிய ஆன்மாவினது ஞானசத்தி காட்சியளவையெனப்படும். அங்ஙனம் நேரேயறியப்படுவதன்றிச் சாதித்துப் பெறற்பாலதாய் மறைந்து நின்ற பொருளை அதனை விட்டுநீங்காது யாண்டு முடனுய்நிகழு மேதுவைக்*

கொண்டு அவ்வாறுணர்வதாகிய ஆன்மாவினது ஞானசத்தி கருதலளவையெனப்படும். இவ்விரண்டானுமறியப்படாத பொருள்களை ஆத்தவாக்கியங்கொண்டு அவ்வாறுணரச்செய்வதாகிய ஆன்மாவினது ஞானசத்தி உரையளவையெனப்படுமென்பதாம்.

அடங்கிடாப்பொருள் பரலோக பாதாளலோக முதலாயின.

இம்மானத் தடங்கிடும் பொருளையும் ஆத்தவாக்கியங்கொண்டறிவது அருத்தவாதம்.

ஐயந்திரிவின்றி விகற்பமுன்ன வென்பதனை யாண்டுங் கூட்டியுரைத்துக்கொள்க.

விகற்பமென்றது தலைக்குறை.

இதனானே அம்மூன்றற்கும் இலக்கணங் கூறப்பட்டது. (2)

கண்டபொருளை யிரட்டுறவே கருத லையந் திரிபவே, கொண்டறிவாம் பெயர்சாதி குணமே கன்மம் பொருளென வைன், அண்ட விகற்ப வுணர்வினுக்குப் பொருளி னுண்மை மாத்திரத்தின், விண்ட லில்லா வறிவாகும் விகற்ப மில்லாக் காட்சியே.

சுப் — பதவுரை.

(மேற் கூறிப்போந்த நிருவிகற்பமுதலிய நான்கனுள்) விண்டல் இல்லா – (பெயர்முதலியவற்றுற்) பகுத்தறிதல் இன்றி,—பொருளின் உண்மை மாத்திரத்தின் அறிவு – (இஃதொன்று தோன்று நின்றதெனப்)

பொருளுண்மை மாத்திரையே அறியு ஞானசத்தி—விகற்பம் இல்லாக்காட்சியே ஆகும்–நிருவிகற்பக்காட்சியெனப்படும்.—கண்டபொருளை — அங்ஙனமறிந்த பொருளை,—இரட்டுறவே கருதல் — இஃது யாதோவென ஒன்றிற்றுணிவு பிறவா தாராயு ஞானசத்தி,—ஐயம்—ஐயக்காட்சியெனப்படும்,—திரியவே கொண்டல் — அதனை யதனோடொப்புமையுடைய வேறு பொருளாக மயங்கி நிச்சயிக்கு ஞானசத்தி,—திரிவு ஆம் - திரிவு காட்சியெனப்படும்.—பெயர் சாதி குணமே கன்மம் பொருள் என ஐந்து –பெயருஞ் சாதியுங் குணமுங் கன்மமும் பொருளுமாகிய ஐந்தும் (பொருடோறும் உண்மையின் அவ்வைவந்தும் அப்பொருட்கணுள்ளவாறு இனிதுவிளங்க வுணரு ஞானசத்தி),—அ விகற்ப உணர்வினுக்கு உண்டு — அந்தச்சவிகற்பக்காட்சிக்கு உண்டென வுணரப்படும் என்க.

சிவ — பொழிப்புரை.

எ-து. மேற்கூறிப்போந்த நிருவிகற்பமுதலிய நான்கனுள், பெயர் முதலியவற்றுற் பகுத்தறிதலின்றி இஃதொன்று தோன்றுகின்றதெனப் பொருளுண்மை மாத்திரையே யறியும் ஞானசத்தி நிருவிகற்பமெனப்படும். அங்ஙனமறிந்த பொருளை இஃதியாதோவென ஒன்றிற்றுணிவு பிறவா தாராயும் ஞானசத்தி ஐயமெனப்படும். அதனை அதனோடொப்புமையுடைய வேறுபொருளாக மயங்கி நிச்சயிக்கும் ஞானசத்தி திரிவெனப்படும். பெயர்முதலியவைந்தும் பொருடோறுமுண்மையின் அவ்வைந்தும் அப்பொருட்கண்ணுள்ளவாறினிது விளங்க வுணரும் ஞானசத்தி சவிகற்பமெனப்படுமென்பதாம்.

முன்கண்ட வாதனைபற்றித் தோற்றுவதாகிய நினைவுணர்வு இவ்விடத்துக் கண்ட பொருளின்க ணிகழ்வதன்மையின், அதனை யீண்டெடுத்தோதி விலக்காராயினர்.

இதனுனே காட்சிமுதலிய மூன்றினுஞ் சேறற்குரிய நிருவி கற்ப முதலிய நான்கினிலக்கணங் கூறப்பட்டது. (3)

காண்டல் வாயின் மனந்தன்வே தனையோ டியோகக் காட்சியென, வீண்டு நான்கா மனுமானந் தனக்கும் பிறர்க்கு மென்றிரண்டா, மாண்ட வுரைதந் திரமந்திரத்தோ டுபதே சச்சொ லெனமூன்றும், பூண்ட வளவைக் கெதிர்புலன் றன்னியல்பு பொதுவென் றிரண்டாமே.

சுப — பதவுரை.

(அம்மூன்றனுள்) காண்டல்–காட்சியளவையாவது,–வாயிற் (காட்சி) – வாயிற் காட்சியும்,—மன (க்காட்சி)–மானதக் காட்சியும்,—தன்வேதனை (க்காட்சி) யோடு — தன் வேதனைக் காட்சியும்,—யோகக்காட்சியென–யோகக் காட்சியு மென,—ஈண்டு நான்காம் – இங்ஙன நான்கு வகைப்படும்,—அனுமானம் — கருதலளவையாவது,—தனக்கும் பிறர்க்கும் என்று — தன்பொருட் டனுமான மும் பிறர்பொருட் டனுமானமுமென,—இரண்டாம் — இரண்டு வகைப்படும்,—மாண்ட உரை - மாட்சிமைப் பட்ட வுரை யளவையாவது,— தந்திர (ச்சொல்) – தந்திரகலையும்,— மந்திரத்து(ச்சொல்)லோடு — மந்திர கலையும்,— உபதேசச்சொல் என–உபதேசகலையுமென,–மூன்றும் — மூன்று வகைப்படும்,-பூண்ட அளவைக்கு எதிர் புலன் – பொருந்திய இப்பிரமாணங்களான்

அறியப்படும் பிரமேயங்களதியல்பு,—தன் இயல்பு பொது (இயல்பு) என்று — சிறப்பியல்பு பொதுவியல்பென,— இரண்டாமே — இரண்டு வகைப்படும் என்க.

சிவ — பொழிப்புரை.

எ-து. அம்மூன்றனுள், காட்சியளவை வாயிற்காட்சி முதல் நான்கு வகைப்படும்; கருதலளவை தன்பொருட்டுப் பிறர்பொருட்டென இருவகைப்படும்; உரையளவை தந்திரகலை முதன் மூவகைப்படும். இப்பிரமாணங்களானறியப்படும் பிரமேயங்களதியல்பு சிறப்பியல்பு பொதுவியல்பென இருவகைப்படு மென்பதாம்.

இதனுனே காட்சிமுதலிய மூன்றும் படும் பாகுபாடும், அவற்றுனளக்கப்படும் பொருள்களின் பாகுபாடும், தொகுத்துக் கூறப்பட்டன. (4)

அன்னிய சாதி யுந்தன் சாதியு மகன்று நிற்ற
றன்னியல் பன்னி யத்தைத் தவிர்ந்துதன் சாதிக் கொத்த
றன்னிய பொதுவி யற்கை சொன்னவிவ் விரண்டி னுள்ளே
மன்னிய பொருள்கள் யாவு மடங்கிடு மான முற்றும்.

சுப — பதவுரை.

(சிறப்பியல்பு பொதுவியல்பென்ற விரண்டனுள்) அன்னியசாதியும் – (ஒரு பொருட்கு) வேற்றுச் சாதிப் பொருளினும்,—தன் சாதியும்–தன் சாதிப்பொருளினும்,– அகன்று நிற்றல் – செல்லாது (தனக்கு மாத்திரையே யுரித்தாய்) நிலைபெறுந் தன்மை,—தன் இயல்பு – சிறப்

பியல்பெனவும்,—அன்னியத்தைத் தவிர்ந்து – வேற்றுச் சாதிப்பொருண் மாத்திரையிற் செல்லாது,—தன் சாதிக்கு ஒத்தல் — தன் சாதிப்பொருட் கெல்லாம் ஒப்ப நிலை பெறுந் தன்மை,— துன்னிய பொது இயற்கை – பொருந்திய பொது வியல்பெனவுங் கூறப்படும்,–மானம்-காட்சிமுதலிய பிரமாணங்களால்,— மன்னிய பொருள்கள்–பொருந்திய பிரமேயப்பொருள்களை, – உற்றுழல்—அறியலுறுமிடத்து,—யாவும் – அவையெல்லாம்,—சொன்ன இவ்விரண்டினுள்ளே அடங்கிடும் – ஈண்டுக் கூறிய இவ்விரண்டியல்பினுள் ஒன்று பற்றி அறியப்படும் என்க.

சிவ — பொழிப்புரை.

எ-து. சிறப்பியல்பு பொதுவியல்பென்ற இரண்டனுள், ஒருபொருட்கு வேற்றுச்சாதிப் பொருளினுந் தன்சாதிப் பொருளினுஞ் செல்லாது தனக்குமாத்திரையே யுரித்தாய் நிலைபெறுந்தன்மை சிறப்பியல் பெனவும், வேற்றுச்சாதிப் பொருண்மாத்திரையிற் செல்லாது தன்சாதிப்பொருட்கெல்லாம் ஒப்ப நிலைபெறுந்தன்மை பொதுவியல்பெனவுங் கூறப்படும். காட்சிமுதலிய பிரமாணங்களாற் பிரமேயப்பொருள்களை யறியலுறுமிடத்து அவையெல்லாம் இவ்விரண்டியல்பினு ளொன்றுபற்றி அறியப்படுமென்பதாம்.

எனவே, இவ்விரண்டின் வேறுகிய வேற்றியல்புபற்றி அறியப்படுமாயின், அவ்வறிவு பிராமாணியம் அன்றுய்ப் போமென்பதாயிற்று.

பிரமேயத்தை யறிந்தவறிவே தான் பிராமாணிய மென்பதனையு மறியுமெனவும், தான் பிராமாணியமாகாதவழி அவ்வாகாமை

மாத்திரையே பிறிதொன்று னறியப்படுமெனவும், இவ்வாறன்றித் தனது பிராமாணியம் பிறிதொன்றுனறியப்படுவதேயென்னுந் தார்க்கிகர் முதலியோர் மதம் அடாதெனவுங் கொள்க.

இவற்றை வடநூலார் சுதத்துவம் பரதத்துவமென வழங்குப.

சாதியாவது ஒரு நிகரனவாகிய பலபொருட்குப் பொதுவாவ தோர் தன்மை,

இதனனே மேற்றன்னியல்பு பொதுவியல்பென்றவற்றி னிலக் கணங் கூறப்பட்டது.

இச்செய்யுள் சூசிகடாகரயம்பற்றி முன் வைத்தவாறு. (5)

உயிரிரே டுணர்வு வாயி லொளியுரு வாதி பற்றிச்
செயிருறு விகற்ப மின்றித் தெரிவதிற் திரியக் காட்சி
அயர்விலிற் திரிய ஞான மைம்புலன் சார்ந்து யிர்க்கண்
மயர்வற வந்த ஞான மானதக் காண்ட லாமே.

சுப் — பதவுரை.

(மேற்கூறிப்போந்த காட்சி நான்கனுள்ளும்) உயி ரின் – (தன்னை நோக்கி நிற்கு மறிவாகிய) ஆன்மாவினின் றும்,—ஓடு உணர்வு – (விடயங்களை நோக்கி) ஓடு மறிவாகிய சிற்சத்தி,—வாயில் – கண்முதலிய பொறிகளை யும்,—ஒளி (ஆதி) – (அவற்றிற்குத் துணையாய் வலிசெய் துடனிற்குந்) தேயுமுதலிய பூதங்களையும்,—உரு ஆதி பற்றி – (அப்பூதங்களுக்கு முதற்காரணமாய் அவற்றை விட்டு நீங்குதலின்றி யுடனுகிய) உருவமுதலிய தன் மாத்திரைகளையும் அதிட்டித்துக்கொண்டு,—செயிர் – ஐய

விபரீதக்குற்றங்களும்,—உறு விகற்பம் இன்றி – பொருந்திய பெயர் சாதிமுதலிய விகற்பமுமின்றி,—தெரிவது—(உருவமுதலிய வைம்புலன்களை நிருவிகற்பமா) யறியு மறிவு,—இந்திரியக் காட்சி – வாயிற் காட்சியெனப்படும்,—ஐம்புலன் சார்ந்து - அங்ஙன மைம்புலன்களை இயைந்தறிந்த பின்னர்,—அயர்வு இல் — மீள மறத்தலின்றி,—இந்திரிய ஞானம் — (சித்தத்தாற் சிந்திக்கப்பட்டு நிலை பெறுவதாகிய அவ்)வாயிற் காட்சியறிவு,—மயர்வு அற—(பெயர் சாதி முதலியவற்றுன்) விபரீதமாதலின்றி (நிச்சயமாய்),— உயிர்க்கண் — புத்தி தத்துவத்தின்கண்,— வந்த ஞானம்—வருதலாலுகிய சவிகற்பவுணர்வாய் உயிரினேடு ணர்வு தெரிவது,—மானதக் காண்டல் ஆமே – மானதக் காட்சி யெனப்படும் என்க.

சிவ — பொழிப்புரை.

எ-து. மேற்கூறிப்போந்த காட்சி நான்கனுள்ளும், தன்னை நோக்கிநிற்கு மறிவாகிய ஆன்மாவினின்றும் விடயங்களை நோக்கியோடுமறிவாகிய சிற்சத்தி, கண்முதலிய பொறிகளையும், அவற்றிற்குத் துணையாய் வலிசெய்துடனிற்குந் தேயுமுதலிய பூதங்களையும், அப்பூதங்களுக்கு முதற்காரணமாய் அவற்றைவிட்டு நீங்குதலின்றி உடனையவுருவமுதலிய தன்மாத்திரைகளையு மதிட்டித்துக்கொண்டு, ஐய விபரீதக் குற்றங்களும் பெயர் சாதி முதலிய விகற்பமுமின்றி, உருவ முதலிய வைம்புலன்களை நிருவிகற்பமாயறியுமறிவு வாயிற் காட்சியெனப்படும்; அங்ஙனமைம்புலன்களை இயைந்தறிந்த பின்னர் மீள மறத்தலின்றிச் சித்தத்தாற் சிந்திக்கப்பட்டு நிலைபெறுவதாகிய அவ்வாயிற்காட்சியறிவு, பெயர் சாதி

முதலியவற்றுன் விபரீதமாதலின்றி நிச்சயமாய்ப் புத்திதத் துவத்தின்கண் வருதலாகிய சவிகற்பவுணர்வாய் உயிரினேடுணர்வு தெரிவது மானதக்காட்சியெனப்படுமென்பதாம்.

ஐம்புலன்சார்ந் தயர்விலிந்திரிய ஞானமென மாறுக.

இன் ஐந்தா முருபு.

ஒடுணர்வு விசேஷணத்தொகை,

ஒளி ஆகுபெயர். ஆதியென்பதனே ஒளியோடுங் கூட்டுக,

சார்ந்தபினென்பது சார்ந்தெனத் திரிந்து காரியத்தின் மேனின்றது.

உயிர்க்குப் பற்றுக்கோடாகிய புத்தியை உயிரென்றுபசரித்தார்.

வந்தஞானமென்னும்பெயரெச்சம் 'ஆறுசென்றவெயர்' என் றுற்போல நின்றது.

மனத்தின் றொழிற்பாடு முன்னுக நிகழ்தலின் மானதக்காட்சி யெனப்பட்டது.

அதிகாரமுறைமை யென்னுமுத்தியான் உயிரினேடுணர்வு தெரிவதென்பதனே அளவையதிகார முழுதினு முய்த்துரைக்க.

இதனுனே வாயிற்காட்சி மானதக்காட்சிகள தியல்பு கூறப் பட்டது. (6)

அருந்தின்பத் துன்ப முள்ளத் தறிவினுக் காக மாதி
தருந்தன்வே தனேயாங் காட்சி சமாதியான் மலங்கள் வாட்டிப்
பொருந்திய தேச கால வியல்பகல் பொருள்க ளெல்லா
மிருந்துணர் கின்ற ஞான மியோகநற் காண்ட லாமே.

சுப — பதவுரை

(அம்மானதக்காட்சி விசேடம்பற்றி மேம்பட்டு நிகழுஞ் சத்துவகுண முதலியவற்றின் விளக்கமாகிய) அருந்து இன்பத் துன்பம் – நுகரப்படு மின்பத்துன்பங் கள்,— உள்ளத்து அறிவினுக்கு — புருடனதறிவிற்கு (விடயமாம்படி),—அராகம் ஆதி தரும் – அராக முதலிய வைந்து தத்துவங்களானும் புணர்க்கப்படுவதனை உயிரினெடுணர்வு தெரிவது,— தன் வேதனைக் காட்சி ஆம் –தன்வேதனைக் காட்சி யெனப்படும்,—மலங்கள் – (இவ் வாறன்றி) அறிவைத் தடைசெய்து நின்ற) மலசத்திகளை,– சமாதியான் வாட்டி - இயமம் நியம முதலிய அட்டாங்க யோக சமாதியான் ஒருவாறு கெடுத்து,-இருந்து– (ஓரிடத் தொருகாலத்) திருந்தாங்கிருந்து,—பொருந்திய தேச கால இயல்பு அகல் பொருள்கள் எல்லாம் — பொருந்தப்பட்ட மூவிடத்து முக்காலத்தும் இயல்பாக விரிந்த பொருள்க ளெல்லாவற்றையும்,—உணர்கின்ற ஞானம்–காண்கின்ற காட்சியாய் உயிரினெடுணர்வு தெரிவது,—நல் யோகக் காண்டல் ஆமே — நன்மையாகிய யோகக் காட்சி யென்ப்படும் என்க.

சிவ — பொழிப்புரை.

எ-து. அம்மானதக்காட்சி விசேடம்பற்றி மேம்பட்டு நிகழுஞ் சத்துவகுண முதலியவற்றின் விளக்கமாகிய இன்ப த்துன்பங்கள் புருடனதறிவிற்கு விடயமாம்படி அராக முதலிய வைந்து தத்துவங்களானும் புணர்க்கப்படுமதனை உயிரினெடுணர்வு தெரிவது தன்வேதனைக்காட்சி யெனப் படும்; இவ்வாறன்றி அறிவைத் தடைசெய்து நின்ற மலசத்தி

களே இயம நியம முதலிய அட்டாங்கயோக சமாதியான் ஒரு வாறுகெடுத்து ஓரிடத்தொருகாலத் திருந்தாங்கிருந்து மூவிடத்து மூக்காலத்துப்பொருள்களேயும் காண்கின்ற காட்சியாய் உயிரிலேடுணர்வு தெரிவது யோகக்காட்சி யெனப்படுமென்பதாம்.

இதனானே தன்வேதனைக்காட்சி யோகக்காட்சிகளதியல்பு கூறப்பட்டது. (7)

பிரதிபேதம்: இவையிரண்டு செய்யுளானும் மேலெடுத்துக் கொண்ட நால்வகைக்காட்சிக ளதியல்பு கூறப்பட்டது.

பக்கமூன்றின் மூன்றேது வுடைய பொருளைப் பார்த்துணரத், தக்க ஞானந் தன்பொருட்டாம் பிறர்தம் பொருட்டா மனுமானந், தொக்க விவற்றுற் பிறர்தெளியச் சொல்லலாகு மச்சொல்லு, மிக்க வன்னு வயத்திலெடு வெதிரேகச்சொல் லெனவிரண்டாம்.

சுப — பதவுரை

மூன்று ரூது உடைய பொருளை – இயல்பு முதலிய மூன்றனுள் ஓரேதுவுடைய சாத்தியத்தை,—பக்கம் மூன்றின் – பக்கம் மூன்றின் வைத்து,—பார்த்துஉணரத்தக்க ஞானம்–(அவினாபாவம்பற்றி) ஆராய்தற்குரிய ஞானமாய் உயிரிலேடுணர்வு தெரிவது,—தன்பொருட்டு (அனுமானம்) ஆம் – தன்பொருட் டனுமானமாம்,—தொக்க இவற்றுற் பிறர் தெளியச் சொல்லல் – பொருந்திய அவ்வேதுக்களானே (தானறிந்ததனைப்) பிறரறியப் போதித்தலே உயிரிலேடுணர்வு தெரிவது,—பிறர் தம்பொருட்டு

அனுமானம் ஆம் – பிறர் பொருட் டனுமானமாம்,—ஆகும் அச்சொல்லும் – அங்ஙனம் பிறரறியப் போதித்த லாகிய சொல்லும்,—மிக்க அன்னுவயத்திலெடு வெதி ரேகச்சொல் என – மேலாகிய உடம்பாட்டுச்சொல்லும் மறைச்சொல்லுமென.—இரண்டு ஆம் – இரண்டுவகைப் படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இயல்பு முதலிய மூன்றனுள் ஒரேதுவுடைய சாத்தியத்தைப் பக்கமுதலிய மூன்றின் வைத்து அவினை பாவம்பற்றி ஆராய்தற்குரிய ஞானமாய் உயிரிலெடுணர்வு தெரிவது தன்பொருட்டனுமானமாம்; அவ்வேதுக்களானே தானறிந்ததனைப் பிறரறியப் போதித்தலே உயிரிலெடுணர்வு தெரிவது பிறர்பொருட்டனுமானமாம். அங்ஙனம் பிறரறி யப் போதிக்குஞ் சொல்லும் உடம்பாடு மறை யென்று இரு வகைப்படு மென்பதாம்.

இதனுனே மேலெடுத்துக்கொண்ட இருவகை யனுமானங்கள இயல்பு கூறப்பட்டது. (8)

மூன்று பக்கம் பக்கநிகர் பக்க நிகரில் பக்கமெனத், தோன்றும் பக்கத் துணிபொருளுக் கிடமா முவமை நிகர்பக்க, மான்ற பொருள்சென் றடையாத விடமா நிகரில் பக்கமுத, லேன்ற விரண்டும் பொருளுண்மைக் கிடமா மொன்று பொருளின்றும்.

சுப் — பதவுரை

பக்கம் மூன்று – பக்க மூன்றுவன,—பக்கம் நிகர் பக்கம் நிகரில்பக்கம் எனத் தோன்றும் – பக்கமுஞ் சபக்க மும் விபக்கமு மென்பனவாம்.–துணி பொருளுக்கு இடம் பக்கம் ஆம் – அவற்றுள் (ஐயுற்றுத்) துணியற்பாலதாய பொருளிருக்குமிடம் பக்கமெனப்படும்,—உவமை நிகர் பக்கம் – அதற்கெடுத்துக் காட்டப்படுவ (தாய்த் துணியப் பட்ட பொருளிருக்குமிடஞ்) சபக்கமெனப்படும்.–ஆன்ற பொருள் சென்று அடையாத இடம் நிகரில் பக்கம் ஆம்– மாட்சிமையாகிய அப்பொருளில்லாத விடம் விபக்க மெனப்படும்.–முதல் ஏன்ற இரண்டும்–(இம்மூன்றனுண்) முதற்கட்பொருந்திய பக்கஞ் சபக்க மிரண்டும்,—பொருள் உண்மைக்கு இடம் ஆம்–பொருளுண்டென வறிதற் கிட மாம் —ஒன்று – ஏனை விபக்கம்,—பொருள் இன்று ஆம்– அஃதில்லை யென்றறிதற் கிடமாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. பக்கமூன்றுவன பக்கஞ் சபக்கம் விபக்கமென் பனவாம். அவற்றுள், ஐயுற்றுத் துணியற்பாலதாய பொரு ளிருக்குமிடம் பக்கமெனப்படும்; அதற்கெடுத்துக் காட்டப் படுவதாய்த் துணியப்பட்ட பொருளிருக்குமிடம் சபக்க மெனப்படும்; அப்பொருளில்லாதவிடம்விபக்கமெனப்படும். இம்மூன்றனுட் பக்கஞ் சபக்க மிரண்டும் பொருளுண்டென வறிதற்கிடமாம்; விபக்கம் அஃதில்லையென் றறிதற்கிடமா மென்பதாம்.

துணிபொருள் எதிர்கால வினைத்தொகை.

அவிஞபாவ மறிதற்கண் ஐயமறுத்தற் பொருட்டுச் சபக்கம் விபக்க மிரண்டும் வேண்டப்படுமென்பார், முதலென்ற விரண்டும் பொருளுண்மைக் கிடமா மொன்று பொருளின்மை மெனவுங் கூறினர்.

இதனுனே மேற்பக்க மூன்றென்றவற்றின் பெயரு மியல்புங் கூறப்பட்டன. (9)

ஏது மூன்று மியல்புகா ரியத்தோ டநுப லத்தியிலை
யோதி னியல்பு மாமரத்தைக் காட்ட லுறுகா ரியம்புகைதன்
னேதி யாய வனல்காட்ட லாகு மநுப லத்தியது
சீத மின்மை பனியின்மை காட்டல் போலுஞ் செப்பிடினே.

சுப் — பதவுரை

மூன்று ஏது – (மேலெடுத்துக்கொண்ட) மூன்றே துவாவன,—இயல்பு காரியத்தோடு அநுபலத்தி ஆம் – இயல்புங் காரியமும் அநுபலத்தியுமாம்,—இவை ஓதின் – இவற்றிற் கிலக்கணங் கூறுமிடத்து,—மாமரத்தைக் காட்டல் – மா முதலிய சொற்கண் மரமுதலிய பொருளை உணர்த்துதற்கண் (வேறுகாரணமின்றி அச்சொற்களினியல்பா னுளதாகிய வாற்றல்),—இயல்பு – சகசவேது வெனப்படும்,—புகை தன் ஆதியாய அனல் காட்டல் – புகை முதலிய காரியங்கள் நெருப்பு முதலிய தத்தங் காரணங்களை உணர்த்துதற்கண்,—உறு காரியம் ஆகும் – (அவை) பொருந்திய காரியவேது வெனப்படும்,—செப்பிடினே — சொல்லுமிடத்து,—சீதம் இன்மை பனி இன்மை காட்டல் போலும்—குளிரில்லாமை முதலிய காரியாபாவங்கள் பனியில்லாமை முதலிய காரணா

பாவங்களை உணர்த்துதற்கண்ணும் பனியில்லாமை முதலிய காரணபாவங்கள் குளிர்வாராமை முதலிய காரியாபாவங்களை உணர்த்துதற்கண்ணும்,—அநுபலத்தி யது-(அவை) அநுபலத்தியேது வெனப்படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேலெடுத்துக்கொண்ட மூன்றேதுவாவன இயல்புங் காரியமும் அநுபலத்தியுமாம் அவற்றுள், மாமுதலிய சொற்கள் மரமுதலிய பொருளையுணர்த்துதற்கண் வேறு காரணமின்றி அச்சொற்களி னியல்பா னுளதாகிய ஆற்றல் சகசவேது வெனப்படும்; புகைமுதலிய காரியங்கள் நெருப்பு முதலிய தத்தங் காரணங்களை யுணர்த்துதற்கண் அவை காரியவேதுவெனப்படும்; குளிரில்லாமை முதலிய காரியாபாவங்கள் பனியில்லாமை முதலிய காரணபாவங்களை யுணர்த்துதற்கண்ணும் பனியில்லாமைமுதலிய காரணபாவங்கள் குளிர்வாராமை முதலிய காரியாபாவங்களை உணர்த்துதற்கண்ணும், அவை அநுபலத்தியேது வெனப்படுமென்பதாம்.

இங்ஙனம்உணர்ச்சிமூவகைப்படுதலின்ஏதுவுமூவகைப்பட்டன.

காரியவேதுக் கூறவே, ஒற்றுமைபற்றிக் காரணவேதுவுங் கொள்ளப்படும். அஃதாவது, இடித்து மின்னி இருண்டெழுந்த மேகம் மழை பெய்தலைக் காட்டுதல் போல்வது.

சீதமின்மை பனியின்மை காட்டலென்பது ''வாலுமீ னுள்ள றலைப்படல்'' (திரிகடுக. செ – 7) என்றாற்போல நின்றது.

போலும் அசை.

இதனானே ஏதுமூன்றென்றவற்றின் பெயரும் இயல்புங் கூறப்பட்டன.

புகையா லனலுண் டடுக்களேபோ லென்னப் புகற லன்
னுவயம், வகையா மனலி லாவிடத்துப் புகையின் ருகு மலரி
னெடு, முகையார் நீரிற் போலென்று மொழிதல் வெதிரே கச்
சொலிவை, தொகையா ருறுப்பைந் தொடுங்கூடச் சொல்லு
வாரு முளர்துணிந்தே.

சுப — பதவுரை

(மேலெடுத்துக்கொண்ட சொல்லிரண்டனுள்) புகை யால் அனல் உண்டு – புகையுள்ளவிடத்தே அனலுண் டென (உடம்பாடு பற்றி),—அடுக்களேபோல் என்னப் புகறல்–அட்டிலே உவமை கூறுஞ்சொல்,–அன்னுவயம்– அன்னுவயச் சொல்லாம்,—வகையாம் அனல் இலா இடத் துப் புகை இன்ருகும் – விளக்கமாகிய நெருப்பில்லாத விடத்துப் புகையில்லையென (மறுதலைபற்றி),—மலரினெடு முகை ஆர் நீரிற்போல் என்று மொழிதல்–மலரும் அரும்பு நிறைந்த தாமரை யோடையை உவமை கூறுஞ் சொல்,– வெதிரேகச் சொல் – வெதிரேகச் சொல்லாம்,—இவை – இவ்விருவகைச் சொற்களையும்,–தொகை ஆர் ஐந்து உறுப் பொடுங் கூட – தொகை பொருந்திய மேற்கோளும் ஏது வும் எடுத்துக்காட்டும் உபநயமும் நிகமனமு மென்னும் ஐவகை யுறுப்புக்களான் இணங்க வைத்து,—துணிந்தே சொல்லுவாரும் உளர் – தெளியக் கூறுவாருமுளர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து மேலெடுத்துக்கொண்ட சொல்லிரண்டனுள், புகையுள்ள விடத்தனலுண்டென உடம்பாடுபற்றி அட்டிலே உவமை கூறுஞ் சொல் அந்துவயச்சொல்லாம்; நெருப்

பில்லாதவிடத்துப் புகையில்லையென மறுதலைபற்றித் தாமரை போடையை உவமைகூறுஞ் சொல் வெதிரேகச்சொல்லாம். இவ்விருவகைச் சொற்களையும் மேற்கோளும் ஏதுவும் எடுத்துக்காட்டும் உபநயமும் நிகமனமுமென்னும் ஐவகையுறுப் புக்களான் இணங்கவைத்துத் தெளியக் கூறுவாருமுள ரென்பதாம்

அவ்வாறு சொல்லுவர் தார்க்கிகர் முதலியோர்.

இதனை சொல்லிரண்டென்றவற்றினியல்பு கூறப் பட்டது. (11)

போது நாற்றத் தாலறிதல் பூர்வக் காட்சி யனுமான
மோது முரையா லறிவினள வுணர்தல் கருத லனுமான
நீதி யான்முற் கன்மபல நிகழ்வு திப்போ திச்செய்தி
யாதி யாக வருமம்பனென் றறித லுரையா லனுமானம்.

சுப் — பதவுரை

நாற்றத்தால் போது அறிதல் – நாற்றமுதலிய வேதுப் பற்றிப் போதுமுதலிய (காட்சிப் புலனுதற் குரிய) பொருளை உயிரினெடுணர்வு தெரிவதெல்லாம்,—பூர்வக்காட்சியனுமானம் – பூர்வக்காட்சியனுமானமெனப்படும்,—ஓதும் உரையால் அறிவின் அளவு உணர்தல் – ஓதப்பட்ட வுரை முதலிய வேதுப்பற்றி அறிவினளவுமுதலிய (கருத்துப் புலனுதற்குரிய) பொருள்களை(த் தன்குறிப்பொடு சார்த்தி) உயிரினெடுணர்வு தெரிவதெல்லாம்,—கருதலனுமானம் – கருதலனுமான மெனப்படும்,—நீதியான் இச்செய்தி முன் கன்மபலம் – (இவ்விரண்டினும்வேருய்) முறைமையின்

(முன்வினை யெனப்படும்) இதமகிதங்களாவன முற்பிறவி யின் அவ்வாறு நிகழுமுயற்சியே யாமாலல்,—இப்போது நிகழ்வது ஆதியாக வரும் பயன் என்று அறிதல் – இங்கு மவை செயின் மேலைக்காகு மென்றுற்போல வேதாகமங் களுட் சொல்லியது கொண்டு சொல்லாத பொருளையும் ஒப்புமைபற்றி யூகித்துத் துணிவதாய் உயிரினேடுணர்வு தெரிவ தெல்லாம்,—உரையாலனுமானம் – உரையனுமான மெனப்படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *நாற்றமுதலிய ஏதுபற்றிப் போது முதலிய காட்சிப்புலனைதற்குரிய பொருளை உயிரினேடுணர்வு தெரிவ தெல்லாம் பூருவக்காட்சியனுமானமெனப்படும். உரைமுத லிய ஏதுபற்றி அறிவினளவு முதலிய கருத்துப்புலனைதற் குரிய பொருள்களைத் தன்குறிப்போடு சார்த்தி உயிரினே டுணர்வு தெரிவதெல்லாங் கருதலனுமானமெனப்படும். இவ் விரண்டினும் வேறாய் இதமகிதங்கண் முன்னர் அச்செய லாலிங்குமவை செயின்மேலைக்காகும் என்றுற்போல, வேதாகமங்களுட் சொல்லியதுகொண்டு சொல்லாத* பொருளையும் ஒப்புமைபற்றி யூகித்துத் துணிவதாய் உயிரி னேடுணர்வு தெரிவதெல்லாம் உரையனுமானமெனப்படு மென்பதாம்

ஆகமத்துட்கூறும் பதிமுதலிய பொருள்களை அவ்வாகமத்திற் கியைபுடைய அனுமானத்தின் வைத்தறிவதுமும் உரையனுமான மெனப்படு மென்பாருமுளர்.

இதனனே அவையிற்றின்மேலு மறைவர் எனப்பட்ட அளவை கள் காட்சியனுமானத்தோடொப்ப வைத்து அனுமானத்தடக்கிக் காட்டப்பட்டன.

அநாதியே யமல னைய வறிவனூ லாக மந்தான்
பிணதிமா றின்றிப் பேண றந்திர மந்தி ரங்கண்
மணதிக ளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை யாகுந்
தனதியீ றிலாதான் றன்மை யுணர்த்துத னுபதே சந்தான்.

சுப் — பதவுரை

அநாதியே அமலனைய அறிவன் நூல் ஆகமந்தான் – அநாதி முத்த சித்துருவாகிய முதல்வன் அருளிச்செய்த நூல்களெனப்படும் வேதாகமங்கள் (கருமகாண்டம் உபாசனைகாண்டம் ஞானகாண்டமென மூவகைப்படும்),–பின் ஆதி மாறு இன்றிப் பேணல் – (அவற்றுட் கருமகாண்டம் பற்றிப்) பின்னெடு முன் மாறுகோளின்றி அநுட்டித்தலே உயிரினேடுணர்வு தெரிவது,—தந்திரம் – தந்திரவுரையளவை யெனப்படும்,—மனதிகள் அடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை – (உபாசனைகாண்டம்பற்றி) மனதிகளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மையை உயிரினேடுணர்வு தெரிவது,—மந்திரங்கள் ஆகும் – மந்திர வுரையளவை யெனப்படும்,—தன் ஆதி ஈறு இலாதான்-(ஞானகாண்டம்பற்றித்) தனக்கு முதலு முடிவு மில்லாத இறைவன்,—தன்மை உணர்த்துதல் – (தன்னின்வேறல்லாத எண்குண முடையனதல் தன்னின் வேருகிய பசுபாசங்களை யுடையனதன் முதலிய) தன்மைகளைத் தானுணருமாறும் பிறர்க்குணர்த்துமாறும் உயிரினேடுணர்வு தெரிவது,—உபதேசந்தான் – உபதேச வுரையளவை யெனப்படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனருளிச் செய்த வேதாகமங்கள் கருமகாண்டம் உபாசனகாண்டம் ஞானகாண்டமென மூவகைப்படும். அவற்றுள், கருமகாண்டம்பற்றிப் பின்னெடு முன் மாறு கோளின்றி அனுட்டித்தலே உயிரிறேடுணர்வு தெரிவது தந்திரவுரையளவையெனப்படும்; உபாசனகாண்டம்பற்றி மனுதிகளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மையை உயிரிறேடுணர்வு தெரிவது மந்திரவுரையளவை யெனப்படும்; ஞானகாண்டம்பற்றித் தனக்கு முதலுமுடிவுமில்லாத இறைவன் தன்னின் வேறுகிய பசுபாசங்களையுடையுதல் முதலிய தன்மைகளைத் தானுணருமாறும் பிறர்க்குணர்த்துமாறும் உயிரிறேடுணர்வு தெரிவது உபதேசவுரையளவை யெனப்படுமென்பதாம்.

வேதமும் ஆகமமெனப்படு மென்பது சிகண்ட பாடியத்துள் ளுங் காண்க.

ஆத்தவாக்கிய மென்ப துணர்த்துதற்கு அநாதியே யமலனுய வறிவனென்றார்.

அறிவனுலென்புழி ஆருவது செய்யுட்கிழமைக்கண்வந்தது.

இவ்வாறன்றி, பதிபசுபாசங்களுக்குப் பிரமாணமு மிலக்கண மும் பின் முன் மாறுகோளின்றிப் பாதுகாத்துக்கூறும் ஆகமவாக்கியங்களைத்தெரிவது தந்திரவுரையெனவும், மனுதிகளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை யெனப்படுஞ் சாதனமாகிய வேண்டுஞ்செய்தி முறைமைகளைக்கூறும் ஆகமவாக்கியங்களைத் தெரிவது மந்திரவுரை யெனவும், தனுதியீறிலாதான்றன்மை யுணர்த்துதலெனப்படும்

கிட்டையினியல்பு கூறும் ஆகமவாக்கியங்களைத் தெரிவது உபதேச வுரை யெனவும், இவ்வாறு ஞானகாண்ட மொன்றனையே மூவகைப் படுத்துரைப்பாரு முளர்; அவர்க்கு மற்றை யுபாசனகாண்டமுங் கன்மகாண்டமும் பிரமாணத்துளடங்காமையறிக.

இனித் தார்க்கிகர் முதலியோர் குடம்படமுதலிய உலகச் சொற்கள்பற்றி அவ்வப்பொருள்களை யுணர்தலும் உரையளவை யென்பர். அவை, காட்சியனுமானங்களி னடங்கிடாப்பொருளைக் காட்டுவன வன்மையின், மாமரத்தைக் காட்டல்போலும் இயல்பே துப்பற்றி யறிவதாகிய அனுமான விசேடமாவனவன்றி உரை யளவை யாதற்கேலாமையறிக.

சொல்லானறிந்தேன் என்றனுபவங்கழ்தலின் அது வேற ளவையாவதன்றி அனுமானத்துளடங்காதென்பார்க்கு, குளிரின்மை பனியின்மை முதலியன அநுபலத்தியாலறிந்தேனென்று அநுபவ ங்கழ்தலின், இன்னோரன்னவற்றை வேறுபிரமாண மென்னுது காட்சிமுதலியவற்றுளடக்குதல் பொருத்தாதாய் முடியுமென் றுழிக.

இதனானே உரையளவை மூன்றென்றவற்றதியல்பு கூறப் பட்டது. (13)

ஈண்டு பக்கப் போலிதான் கேதுப் போலி யொருமூன் றாய், வேண்டு மெழுமூன் றாகும்விளங் குவமைப் போலி யீரொன்பான், காட்டுந் தோல்வித் தானமிரண் டிருபத் திரண் டாங் கருதிலிவை, யாண்டு மொழிவ ரவையெல்லா மளக்கி லறுபத் தைந்தாகும்.

சுப — பதவுரை

ஈண்டு பக்கப்போலி நான்கு – மேற்கூறிப் போந்த அனுமான சாமக்கிரியைகளுள் துணிபொருட்கிடனுதலாகிய பக்கலக்கணத்திற் குறைபாடுடைத்தாயும் ஒருபுடையொத்துப் பக்கம்போலத் தோன்றுவதாகிய பக்கப்போலி, துணியும் பொருட்கிடனுகாததூஉம், துணியும் பொருட்கொருமருங்கிடனுகாததூஉம், துணிந்த பொருட்கிடனுவதூஉம், துணிந்த பொருட்கொருமருங்கிடனுவதூஉமென நான்குவகைப்படும்,—ஏதுப்போலி ஒரு மூன்றாய் வேண்டும் எழுமூன்றுகும் – சாத்தியப்பொருளோடு வியாத்தியுடைத்தாய்ப் பக்கத்திலிருத்தலாகிய ஏதுவிலக்கணத்திற்குறைபாடுடைத்தாயும் ஒருபுடையொத்து ஏதுப்போலத் தோன்றுவதாகிய ஏதுப்போலி, துணியப்படாததூஉம் மறுதலைக்கட்படுவதூஉம் ஒருதலைப்படாததூஉமென மூவகைப்பட்டு, விரியான் இருபத்தொன்றும். அவையாவன,—சார்பில்லதூஉம் சார்புண்மை யறியப்படாததூஉமெனச் சார்புபற்றிய குற்றம் இரண்டும், சொரூபமில்லதூஉம் சொரூபமுண்மையறியப்படாததூஉம் சொரூபத்தின் விசேடணமில்லதூஉம் விசேடணமுண்மை யறியப்படாததூஉம் விசேடியமில்லாததூஉம் விசேடியமுண்மையறியப்படாததூஉம் ஒருமருங்கில்லதூஉம் ஒருமருங்குண்மை யறியப்படாததூஉம் பரனுக்குடம்பாடில்லதூஉமெனச் சொரூபம்பற்றிய குற்றம் ஒன்பதும், சாத்தியத்தோடு வியாத்தியுண்மை யறியப்படாததூஉம் செய்கைபற்றி வியாத்தியுடையதூஉமென வியாத்திபற்றிய குற்றம் இரண்டும் ஆகிய பக்கவிருத்தி துணியப்படாத ஏதுப்போலியின் விரிபதின்மூன்றும், மறுதலைப்பொருள் சாதிப்பதூஉம் மறுதலைப்பொருள் சாதிப்ப

தாய்ப் பிறிதோரேதுவை உடன்கொண்டு வருவதூஉம் காட்சியளவையான் மறுக்கப்பட்டுக்கொண்டு வருவதூஉம் கருதலளவையான் மறுக்கப்பட்டுக்கொண்டு வருவதூஉம் உரையளவையான் மறுக்கப்பட்டுக்கொண்டு வருவதூஉமென மறுதலைத்தலையுடைய ஏதுப்போலி விரி ஐந்தும், பக்க சபக்க மாத்திரையின்றி விபக்கத்துஞ் சேறலுடையதூஉம் சபக்கத்திற் சேறலின்றிப் பக்கமாத்திரையினுள்ளதூஉம் சபக்க விபக்கங்கள் கிடைக்கப் பெறுததூஉமென ஒருதலைப்படாத ஏதுப்போலிவிரி மூன்றுமாம்,—விளங்கு உவமைப்போலி ஈரொன்பான் காண்டும் – இனி வியாத்தி நிச்சயித்தற் கிடனுதலாகிய உவமையிலக்கண மின்றியும் உவமைபோலத் தோன்றுவ தாகிய உவமைப்போலி, அந்நுவயம்பற்றியும் வெதிரேகம் பற்றியும் இருவகைப்பட்டு, விரியான் ஒரோவொன்று ஒன்பதாய்ப் பதினெட்டு வகைப்படும். அவையாவன:— சாத்திய முடைத்தாகாததூஉம் சாத்தியமுடைமை நிச்சயிக்கப்படாததூஉம் ஏதுவுடைத்தாகாததூஉம் ஏதுவுடைமை நிச்சயிக்கப்படாததூஉம் இரண்டு முடைத்தாகாததூஉம் இரண்டு முடைமை நிச்சயிக்கப்படாததூஉம் சொரூபமில்லதூஉம் சொரூபமுண்மை பரனுக்குடம்பாடாகாததூஉம் செயற்கையானுகிய வியாத்தியுடையதூஉமென அந்நுவய வுவமைப் போலிவிரி ஒன்பதும், சாத்தியமின்மை யுடைத்தாகாததூஉம் சாத்தியமின்மை யுடைத்தென்பது நிச்சயிக்கப்படாததூஉம் ஏதுவின்மை யுடைத் தாகாததூஉம் ஏதுவின்மை யுடைத்தென்பது நிச்சயிக்கப்படாததூஉம் இரண்டின்மையு முடைத்தாகாததூஉம் இரண்டின்மையு முடைத்தென்பது நிச்சயிக்கப்படாததூஉம் சொரூபமில்லதூஉம் சொரூபமுண்மை பரனுக்குடம்பாடாகாததூஉம் வெதிரேக வியாத்தி

செயற்கையானுடையதூஉமென வெதிரேகவுவமைப் போலி ஷிரி ஒன்பதுமாம்.—தோல்வித்தானம் இரண்டு இருபத்திரண்டாம் – இனித் தருக்க வாதத்தின்கட் பேசத் தெரியாமையாகிய தோல்வித்தானம், மயங்கப்பேசுதலும் வாளாவிருத்தலுமென் றிருவகைப்பட்டு, விரியான் இருபத்திரண்டாம். அவையாவன:—தானெடுத்துக்கொண்ட மேற்கோளைச் சாதிக்கமாட்டாமல் அதற்குக் கேடுவரப் பேசுதலும், பிறிதொரு மேற்கோளைக் கூறுதலும், மேற்கோளுக்கு மறுதலைப்படப் பேசுதலும், மேற்கோளை விட்டுவிடுதலும், தான் கூறிய ஏதுவுக்குக் குற்றம் வந்துழி வேறோராற்றான் ஏதுக்கூறுதலும், தனக்கு வருந்தோல்வியைப் பிறிதொன்றுபேரி மறைத்தலும், பயனெடு படாதனபேசுதலும், பொருள் இனிது விளங்காத சொற்களையெடுத்துக்கொண்டு பேசுதலும், அவாய்நிலை தகுதி அண்மை இல்லனவாய்ப் பேசுதலும், மேற்கோள் முதலிய வைந்தினையும் முறைபிறழப் பேசுதலும், அவற்றுட் சில குறையப் பேசுதலும், ஒன்றற்குப் பல கூறுதலும், சொல்லை இரட்டித்துச் சொல்லுதலும், பொருளை இரட்டித்துச் சொல்லுதலும், பிறன் கூறியபொருளை அநுவதிக்க மாட்டாமையும், பிறன் கூறியபொருளை அறிந்தும் அறியான்போன்று விடுதலும், விடைசொல்லத்தெரியாது வேறொரு கருத்துடையான் போன்றிருத்தலும் வாதத்தை விட்டுப் பிறிதொன்றனைச்சொல்லிப் பொழுதுபோக்கலும், சுபக்கத்துக்குச் சொல்லிய குற்றத்தைப் பரிகரியாதுடம் பட்டுப் பரபக்கத்துக்குக் குற்றம் பேசுதலும், தோல்வித்தான மெய்தினைனைத் தோல்வித்தான மெய்தினையென் றறிந்து கூறுதிருத்தலும், தோல்வித்தான மெய்தாதானை எய்தினையென்று கூறுதலும், தன் சித்தாந்தத்திற்கு இணங்காதவற்றைச் சொல்லிச் சித்தாந்தஞ் சாதித்தலுமென

இவை,—அவையெல்லாம் அளக்கில் அறுபத்தைந்தாகும்-அவைகளை அளவிடுமிடத்தே இங்ஙனம் நான்கும் இருபத்தொன்றும் பதினெட்டும் இருபத்திரண்டுமாகிய அறுபத்தைந்தாம்,--இவை கருதில்யாண்டும் ஒழிவர்-இவைகளை விசாரிக்கின் அநுமானவளவைக் கெவ்விடத்துங் குற்றங்களாமென்று ஒழிவர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேற்கூறிப்போந்த அனுமானசாமக்கிரியை களுள் துணிபொருட்கிடனுதலாகிய பக்கலக்கணத்திற் குறைபாடுடைத்தாயும் ஒருபுடையொத்துப் பக்கம்போலத் தோன்றுவதாகிய பக்கப்போலி, துணியும் பொருட்கிடனுகாததூஉம், துணியும்பொருட்கொருமருங்கிடனுகாததூஉம், துணிந்தபொருட்கிடனுவதூஉம், துணிந்தபொருட்கொருமருங்கிடனுவதூஉமென நான்கு வகைப்படும். சாத்தியப்பொருளோடு வியாத்தியுடைத்தாய்ப் பக்கத்திலிருத்தலாகிய ஏதுவிலக்கணத்திற் குறைபாடுடைத்தாயும் ஒருபுடையொத்து ஏதுப்போலத் தோன்றுவதாகிய ஏதுப்போலி, துணியப்படாததூஉம் மறுதலைக்கட்படுவதூஉம் ஒருதலைப்படாததூஉமென மூவகைப்பட்டு, விரியானிருபத்தொன்றும். அவையாவன:— சார்பில்லதூஉம் சார்புண்மையறியப்படாததூஉமெனச் சார்புபற்றிய குற்றமிரண்டும், சொரூபமில்லதூஉம் சொரூபமுண்மையறியப்படாததூஉம் சொரூபத்தின் விசேடணமில்லதூஉம் விசேடணமுண்மையறியப்படாததூஉம் விசேடியமில்லாததூஉம் விசேடியமுண்மையறியப்படாததூஉம் ஒருமருங்கில்லதூஉம் ஒருமருங்குண்மையறியப்படாததூஉம் பரனுக்குடம்பாடில்லதூஉ

மெனச் சொரூபம்பற்றிய குற்றமொன்பதும், சாத்தியத் தோடு வியாத்தியுண்மையறியப்படாததூஉம் செயற்கைபற்றி வியாத்தியுடையதூஉமென வியாத்திபற்றிய குற்றமிரண்டும் ஆகிய பக்கவிருத்தி துணியப்படாத ஏதுப்போலியின் விரி பதின்மூன்றும், மறுதலைப்பொருள் சாதிப்பதூஉம் மறுதலைப் பொருள் சாதிப்பதாய்ப் பிறிதோரேதுவை உடன்கொண்டு வருவதூஉம் காட்சியளவையான் மறுக்கப்பட்டுக்கொண்டு வருவதூஉம் கருதலளவையான்மறுக்கப்பட்டுக்கொண்டுவரு வதூஉம் உரையளவையான் மறுக்கப்பட்டுக்கொண்டுவருவ தூஉமென மறுதலைத்தலையுடைய ஏதுப்போலிவிரியைந்தும், பக்கசபக்க மாத்திரையினன்றி விபக்கத்துஞ் சேறலுடைய தூஉம் சபக்கத்திற் சேறலின்றிப் பக்கமாத்திரையினுள்ளதூ உம் சபக்கவிபக்கங்கள் கிடைக்கப்பெறுததூஉமென ஒரு தலைப்படாத வேதுப்போலிவிரி மூன்றுமாம். இனி வியாத்தி நிச்சயித்தற்கிடனுதலாகிய உவமையிலக்கண மின்றியும் உவமைபோலத் தோன்றுவதாகிய உவமைப்போலி, அந்து வயம்பற்றியும் வெதிரேகம்பற்றியும் இருவகைப்பட்டு, விரி யாலெரோவொன்றென்பதாய்ப் பதினெட்டு வகைப்படும். அவையாவன:—சாத்தியமுடைத்தாகாததூஉம் சாத்திய முடைமை நிச்சயிக்கப்படாததூஉம் ஏதுவுடைத்தாகாததூ உம் ஏதுவுடைமை நிச்சயிக்கப்படாததூஉம் இரண்டு முடைத்தாகாததூஉம் இரண்டுமுடைமை நிச்சயிக்கப்படா ததூஉம் சொரூபமில்லதூஉம் சொரூபமுண்மை பரனுக் குடம்பாடாகாததூஉம் செயற்கையாலாகிய வியாத்தியுடைய தூஉமென அந்துவயவுவமைப்போலிவிரி ஒன்பதும், சாத் தியமின்மையுடைத்தாகாததூஉம் சாத்தியமின்மையுடைத் தென்பது நிச்சயிக்கப்படாததூஉம் ஏதுவின்மையுடைத்தா

காததூஉம் ஏதுவின்மையுடைத்தென்பது நிச்சயிக்கப்படாததூஉம் இரண்டின்மையுமுடைத்தாகாததூஉம் இரண்டின்மையுமுடைத்தென்பது நிச்சயிக்கப்படாததூஉம் சொரூபமில்லதூஉம் சொரூபமுண்மை பரனுக்குடம்பாடாகாததூஉம் வெதிரேகவியாத்தி செயற்கையானுடையதூஉமென வெதிரேகவுவமைப்போலிவிரியொன்பதுமாம். இனித் தருக்கவாதத்தின்கட் பேசத்தெரியாமைபாகிய தோல்வித்தானம், மயங்கப்பேசுதலும் வாளாவிருத்தலுமென்றிரு வகைப்பட்டு, விரியாணிருபத்திரண்டாம். அவையாவன:— தானெடுத்துக்கொண்ட மேற்கோளைச் சாதிக்கமாட்டாமல் அதற்குக் கேடுவரப் பேசுதலும், பிறிதொரு மேற்கோளைக் கூறுதலும், மேற்கோளுக்கு மறுதலைப்படப் பேசுதலும், மேற்கோளை விட்டுவிடுதலும், தான் கூறிய ஏதுவுக்குக் குற்றம் வந்துழி வேறோராற்றான் ஏதுக்கூறுதலும், தனக்கு வருந் தோல்வியைப் பிறிதொன்றுபேசி மறைத்தலும், பயனெடுபடாதன பேசுதலும், பொருள் இனிது விளங்காத சொற்களை யெடுத்துக்கொண்டு பேசுதலும், அவாய்நிலை தகுதி யண்மை யில்லனவாய்ப் பேசுதலும், மேற்கோண் முதலியவைந்தினையும் முறைபிறழப் பேசுதலும், அவற்றுட் சில குறைபப் பேசுதலும், ஒன்றற்குப் பல கூறுதலும், சொல்லை இரட்டித்துச் சொல்லுதலும், பொருளையிரட்டித்துச் சொல்லுதலும், பிறன்கூறிய பொருளை அநுவதிக்க மாட்டாமையும், பிறன் கூறிய பொருளையறிந்தும் அறியான் போன்று விடுதலும், விடைசொல்லத்தெரியாது வேறொரு கருத்துடையன்போன்றிருத்தலும், வாதத்தைவிட்டுப் பிறிதொன்றனைச் சொல்லிப் பொழுதுபோக்கலும், சுபக்கத்துக்குச் சொல்லிய குற்றத்தைப் பரிகரியாதுடம்பட்டுப் பரபக்

கத்துக் குற்றம் பேசுதலும், தோல்வித்தானமெய்தியோனைத் தோல்வித்தான மெய்தியென்றறிந்து கூறுதிருத்தலும், தோல்வித்தானமெய்தாதானை எய்தியனென்று கூறுதலும், தன் சித்தாந்தத்திற் கிணங்காதவற்றைச் சொல்லிச் சித்தாந்தஞ் சாதித்தலு மெனவிவை. இங்ஙனம் நான்கும் இருபத்தொன்றும் பதினெட்டும் இருபத்திரண்டுமாகிய அறுபத்தைந்தும் அனுமானவளவைக்குக் குற்றங்களா மென்பதாம்.

இவை குற்றமாகலின் ஆகமவளவைக்கு முன்னுக வையாது இறுதிக்கண்வைத்தார். இவற்றிற் குதாரணம் உய்த்துணர்ந்து கொள்க. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இன்னும் இப்பக்கவேதுவுவமைகளை எடுத்துச்சொல்லும்வழிப் படுஞ் சொற்குற்றங்களெல்லாந் தோல்வித்தானத்துளடங்கும்.

ஈண்டுக் கூறும் பக்கப்போலி உவமைப்போலிகளெல்லாம் எதுப்போலியுளடங்குமெனத் தார்க்கிகர் கூறுவர்.

பக்கவுவமைகளினிலக்கணத்தை நோக்கிக் காணும்வழி, அவைபக்கப்போலி யுவமைப்போலி யெனப்படுவனவன்றி எதுப்போலி யெனப்படாமை யறிக.

இதனுனே அனுமானப் பிரயோகத்தின்கட்படுங் குற்றங்களிவையென்பது தெரித்துக் கூறப்பட்டது. (14)

அளவையிலக்கணமுடிந்தது.

ஆகத்திருவிருத்தம் – 20.

ஓ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் சுபக்கம்

பிரமாணவியல்

முதற்சூத்திரம்

திருவிருத்தம் — 70.

பிரமாணவியல்

முதற்சூத்திரம்

இங்ஙனம் அளவையிலக்கணங் கூறியவாசிரியர், அவ்வளவை யானுணரப்படும் முப்பொருள்கள தண்மை மூன்று சூத்திரத்தா னுணர்த்துவான் மொடங்கி, முதற்சூத்திரத்துப் பதியுண்மைக்கு அளவை கூறுகின்றார்.

ஒருவனே டொருத்தி பொன்றென் றுரைத்திடு முலக மெல்லாம், வருமுறை வந்து நின்று போவது மாத லாலே, தருபவ னொருவன் வேண்டுந் தான்முத லீறு மாகி, மருவிடு மநாதி முத்த சித்துரு மன்னி நின்றே.

சுப — பதவுரை

ஒருவனுடு ஒருத்தி ஒன்று என்று உரைத்திடும் உல கம் எல்லாம் – அவனென்றும் அவளென்றும் அதுவென் றும் (இவ்வாறவயவப் பகுப்புடைத்தாய்க்) கூறப்படும் பிரபஞ்சத்தொகுதி,—வரு முறை – தோன்றுதற்குரிய சற் காரிய முறையால்,—வந்து நின்று போவதும் ஆதலால் – தோன்றி நிற்றலே யன்றி அழிதலு முடைமையால்,— தருபவன் ஒருவன் வேண்டும் – (அது தன்னைத்) தோற்று விப்பானொரு வினைமுதலை அவாய் நிற்கும்,—(ஆகலான்) ஈறுமாகியே – (அவ்வுலகமொடுங்குதற்கு ஏதுவாய் நின்ற) சங்கார காரணனே,—அநாதி முத்த சித்து உரு மன்னி நின்றே – (அஃதொடுங்கிய பின்னும்) அநாதி முத்த சித் துருவாய் நிலைபெற்று நின்று,—மருவிடும் – அநாதி பெத்த

சித்துருவின் பொருட்டு மீளவும் அவ்வுலகத்தை) முன் போலவே தோற்றுவிக்கும்.—தான் முதல் – (அதனால்) அவனே உலகிற்கு முதற்கடவுள் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து அவனவளதுவென்னும் அவயவப்பகுப்புடைய பிரபஞ்சந் தோன்றுதற்குரிய சற்காரியமுறையாற் றோன்றி நின்று அழிதலுடைமைபால், அது தன்னைத் தோற்றுவிப்பா னெரு விஃமுதலை அவாய்நிற்கு மாகலான், அவ்வுலக மொடுங்குதற்கு ஏதுவாய்நின்ற சங்காரகாரணனே அஃ தொடுங்கிய பின்னும் அநாதிமுத்தசித்துருவாய் நிலைபெற்று நின்று அநாதிபெத்த சித்துருவின்பொருட்டு மீளவுமவ்வுல கத்தை முன்போலமருவுவிக்கும்; அதனால் அவனேயுலகிற்கு முதற்கடவுளென்பதாம்

"கொள்ளப் படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே" (திருச்சிற்றம்பலக்கோவையார். செ-87.) என்பதனுட் கொள்ளப் படாதென்பதுபோல, போவதென்னு மொருமை அத்தொழின் மேனின்றது.

உம்மை இறந்தது தழீஇயிற்று.

ஒருவனே யென்னு மிரண்டாவதும் தானேயென்னும் பிரிநிலே யேகாரமும் விகாரத்தாற்றொக்கன.

ஈறு ஆகுபெயர்.

உம்மை சிறப்பு.

ஆகியென்பது பெயர்.

மருவுவித்தல் முன்போலவே தோன்றச்செய்தல். "குடி பொன்றிக்–குற்றமு மாங்கே தரும்" (திருக்குறள், வெஃகாமை. செ – 1.) என்றாற்போல விவ்விகுதி விகாரத்தாற் றொக்கது.

முழுவது மொடுங்கியபின் முதல்வ னெவ்வாறு நிற்பனென்னுங் கடாவை விடுத்தற்கு அநாதிமுத்த சித்தருவாய் மன்னி நின்று என்றார். ஆக்கச்சொல் வருவித்துரைக்க.

அநாதி முத்த சித்தருவென இனம்பற்றி யடையடுத்தலின், அநாதி பெத்த சித்தருவு முண்டென்பதூஉம், மீளவு மருவுவித்தல் அதன்பொருட்டென்பதூஉம் பெற்றும்.

"மலத்துளதாம்" (சிவஞானபோதம். சூ – 1.) என்றார் முதனூலாசிரியரும்.

ஒருவனே டொருத்தி யொன்றென் றுரைத்தலாகிய அடை மொழி வந்து நின்று போவதாகிய ஏதுவைச் சாதிக்குங் குறிப்பேது வாய் நின்றது.

இது மூன்றெழுவாயும் மூன்று பயனிலையு முடைத்தாய் முதனூன் முதற்சூத்திரம்போல முக்கூற்றதாமாறு காண்க.

இனி அம்மூன்றனுண் முதற்கூற்றை இருபத்தேழு செய்யுளான் வலியுறுத்துவான் றொடங்கினார். (1)

முதலதிகரணம்

உதிப்பது மீறு முண்டென் றுரைப்பதிங் கென்னை முன்னோர்
மதித்துல கநாதி யாக மன்னிய தென்ப ரென்னி
னிதற்குயா னுமமா னுதி யெடேனிப்பூ தாதி யெல்லாம்
விதிப்படி தோற்றி மாயக் காணலான் மேதி னிக்கே.

சுப — பதவுரை

முன்னோர் – உலகாயத நூலுணர்ந்தோர்,—மதித்து – (காட்சியளவைக் கெய்தாதன பிரமாணமாகாவென) மதித்து,—உலகு அநாதியாக மன்னியது என்பர் – உலகம் நித்தமாக நிலைபெறு மென்பர்,—(ஆகலான்) உதிப்பதும் ஈறும் உண்டு என்று உரைப்பது–(நிலைத்தொழிலொன்றே யன்றி ஏனைத்) தோற்றமு நாசமும் உண்டெனக் கூறுவது,—என்னையென்னின் – பெறப்படாதெனின்,—இங்கு விதிப்படி – ஈண்டு (நீ) விதித்த விதியாகிய நிலைத்தொழில் போலவே,—இம் மேதினிக்கே – இவ்வுலகின்கண்ணே,—பூதாதி எல்லாம் – பூதமுதற்காரணமாகவுடைய பிரபஞ்சங்களெல்லாவற்றிற்கும்,—தோற்றி மாயக் காணலான் – தோற்ற நாசங்களாகிய ஏனை இரண்டு தொழிலு முடனிகழக் காண்டலான்,—யான் இதற்கு – யானிதனைச் சாதித்தற்கு,—அநுமானெதி எடேன் – (நீ கொண்ட காட்சியளவையொன்றே அமையுமாகலின்) ஈண்டு அநுமான முதலிய வேறு பிரமாணங்கள் எடுத்துக்காட்டுவேனல்லேன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *உலோகாயத நூலுணர்ந்தோர் காட்சியளவைக் கெய்தாதன பிரமாணமாகாவென மதித்து உலகம் நித்த மென்பாராகலான், நிலைத்தொழிலொன்றேயன்றி ஏனை யிரண்டு தொழில்களதுண்மை பெறப்படாதெனின்,—ஈண்டு நீ விதித்த விதியாகிய நிலைத்தொழில்போலவே ஏனையிரண்டு தொழிலும் உடனிகழக் காண்டலான், இதனைச் சாதித்தற்கு நீ கொண்ட காட்சியளவையொன்றே அமையுமாகலின், ஈண்டு வேறு பிரமாணங்களெடுத்துக்காட்டல் வேண்டா மென்பதாம்.*

படி உவமவுருபு.

''தோற்றமுமீறு முள்ளதன்பாலே கிடத்தலின்'' (சிவஞான போதம், முதற்சூத்திரம். அதி – 1.) என்றுமுதனூலாசிரியரும்.

மேதினிக்கென்பது உருபு மயக்கம்.

இதனுனே உலகாயதன் மதம்பற்றி நிகழுமாசங்கையைப் பரிகரித்து முத்தொழிலுண்மை சாதிக்கப்பட்டது.

பரபக்கத்துட் சித்தாந்தப் பார்வையாற் பரபக்கத்தாரை மறுத்தார்; ஈண்டுப் பரபக்கப்பார்வையால் அவர்கூறு மறுப்பைப் பரிகரித்துச் சித்தாந்தத்தை காட்டுகின்றார். இவை தம்முள் வேற்றுமையாகலிற் கூறியது கூறலன்மையுணர்க. வேதாந்தநூலிரண்டாமத்தியாயத்துள் இரண்டாம் பாதத்தினும் முதற்பாதத்தினுங் கூறியனவு மிவ்வாறே கொள்ளப்படும். (2)

இயல்புகாண் டோற்றி மாய்கை யென்றிடினியல்பினுக்குச், செயலதின் றியல்பு செய்தி செய்திபே லியல்ப தின்று, மியல்பதாம் பூதந் தானே யியற்றிடுஞ் செய்தி யென்னிற், செயல்செய்வா ரொருவன் வேண்டுஞ் செயற்படு மீசதனத்தால்.

சுப் — பதவுரை

தோற்றி மாய்கை–அத்தோற்றக் கேடுகள்,—இயல்பு காண் என்றிடின் – (உலகிற்)கியல் பாகலின் அவற்றிற்கு வினைமுதல் வேண்டப்படுவதன்) றெனின்,—செயலது இயல்பினுக்கு இன்று – (தோன்றலுங் கெடுதலும் விகாரமாகலின்) விகாரமாதல் இயல்பிற்குக்கூடாது,—செய்தி

இயல்பே – (அங்ஙனம்) விகாரமாதலே (உலகிற்) கியல் பெனின்,—செய்தி இயல்பது இன்றும் – (அவ்வாறியம்பு வார்க்கு) விகாரத்தின் (வேறு) யியல்பென்ப தொன்றில்லை யெனப்படும் (படவே தோற்றி மாய்கை இயல்பென்பது விட்டுப்போய்த் தோல்வித்தானமாய் முடியும் இனி இயல் பும் விகாரமும் வேறெனவே கொண்டு),—பூதந்தானே இயல்பதாம் – பூதநான்கும் இயல்பாயுள்ளனவாம்,—செய்தி இயற்றிடும் என்னின் – (அவை தோற்றி மாய்தலாகிய) விகாரத்தைச் செய்யுமெனின் (நன்றுசொன்னாய்),—செயற் படும் அசேதனத்தால் – (அவை யங்ஙனந்) தொழிலுற்று நிற்குஞ் செயப்படுபொருளாகலின்,—செயல் செய்வான் ஒருவன் வேண்டும் – (செயப்படுபொருட்கு) வினைமுதல் வேறு வேண்டப்படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அத்தோற்றக் கேடுகள் உலகிற் கியல்பாகலின் அவற்றிற்கு வினைமுதல் வேண்டப்படுவதன்றெனில்,—தோன்றலுங் கெடுதலும் விகாரமாகலின் விகாரமாதலியல் பிற்குக் கூடாது அங்ஙனம் விகாரமாதலே உலகிற்கியல் பெனின், அவ்வாறியம்புவார்க்கு விகாரத்தின் வேறாய் இயல்பென்பதொன்றில்லையெனப்படும்; படவே, தோற்றி மாய்கை இயல்பென்பது விட்டுப்போய்த் தோல்வித்தான மாய் முடியும். இனி இயல்பும் விகாரமும் வேறெனவே கொண்டு, பூதநான்கும் இயல்பாயுள்ளன அவை தோற்றி மாய்தலாகிய விகாரத்தைச் செய்யுமெனின், நன்று சொன் னாய்; அவை அங்ஙனந்தொழிலுற்று நிற்குஞ் செயப்படு பொருளாகலிற் செயப்படுபொருட்கு வினைமுதல் வேறு வேண்டப்படுமென்பதாம்.

படுமென்பது செய்யுமென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்.

அசேதன மென்பது செயப்படுபொருளென்னுந் தன்மையாய் நின்றது.

சாத்தன் தன்னைக் குத்தினனென்புழியும், குத்தியது கையுங் குத்தப்பட்டது பிறிதோருறுப்புமாகலின், வினைமுதலுஞ் செயப் படுபொருளு மொன்றுதல் யாண்டு மின்மை யுணர்க. (3)

நிலம்புன லனல்கால் காண நிறுத்திடு மழிக்கு மாக்கும்
பலந்தரு மொருவ னிங்குப் பண்ணிட வேண்டா வென்னி
னிலங்கிய தோற்ற நிற்ற லீறிவை யிசைத லாலே
நலங்கிளர் தோற்ற நாசந் தனக்கிலா நாதன் வேண்டும்.

சுப் — பதவுரை

கால் காண நிறுத்திடும் – (நான்கு பூதங்களுள்) வாயு ஏனை மூன்று பூதங்களையுங் காணும்படி நிலைபெறுத்தித் தான் அவற்றது சமுகத்தின் நிலைபெறும்,—அனல் அழிக்கும் – அங்கி ஏனை மூன்று பூதங்களையுமழித்துத் தான் அவற்றது சமுகத்தின் அழிவெய்தும்,—புனல் ஆக்கும் – அப்பு ஏனை மூன்று பூதங்களையுந் தோற்றித் தான் அவற்றது சமுகத்திலே தோன்றும்,—நிலம் பலந்தரும் – பிருதிவி ஏனை மூன்று பூதங்களினின்று நுகரப்படும் பயனைப் பயப்பித்துத் தான் அவற்றது சமுகத்திற் பயன் படுதலையுடைத்தாம்,—(இங்ஙனஞ்செயப்படுபொருட்கு வினைமுதல் வேறாய் நின்று காரிய நிகழ்த்துதல் கண்கூடாக நிகழ்தலின் இவையே தம்முள் ஒன்றனையொன்று பண்ண அமையும்),—ஒருவன் இங்குப் பண்ணிட வேண்டா என்னின் – வேறொருவன் கண்டைக்கு வினைமுதலாதன்

மிகையாமெனின் (அற்றன்று).—இலங்கிய இவை தோற்றம் நிற்றல் ஈறு இசைதலாலே - விளங்கிய விந்நான்கு பூதங்களும் ஒப்பமுத்தொழிற்படுதலான் (இவை யொன்றினைக் காரியப்படுத்தும் ஆற்றலுடையன வன்மையின்),—தோற்றம் (நிற்றல்) நாசம் தனக்கு இலா நலம் கிளர் நாதன் வேண்டும் – (இவைபோல) முத்தொழிற்படுதல் தனக்கின்றி விளங்குகின்ற மேம்பாடுடைய இறைவனொருவனே (இவற்றைத் தொழிற்படுத்தற்பொருட்டு) வேண்டப்படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. நரன்கு பூதங்களுள், வாயு ஏனை மூன்று பூதங்களையும் நிலைபெறுத்தித் தான் அவற்றது சமுகத்தினில்லை பெறும்; அங்கி ஏனை மூன்று பூதங்களையுமழித்துத் தான் அவற்றது சமுகத்தினழிவெய்துதும்; அப்பு ஏனை மூன்று பூதங்களையுந் தோற்றித் தான் அவற்றது சமுகத்திற்றோன்றும்; பிருதிவி ஏனை மூன்று பூதங்களினின்று நுகரப்படும் பயனைப்பயப்பித்துத் தானும் அவற்றது சமுகத்திற் பயன்படுதலையுடைத்தாம். இங்ஙனஞ் செயப்படுபொருட்கு வினை முதல் வேறாய் நின்று காரிய நிகழ்த்துதல் கண்கூடாக நிகழ்தலின் இவையே தம்முள் ஒன்றனையொன்று பண்ணவமையும், வேறொருவன் ஈண்டைக்கு வினைமுதலாதன் மிகையாமெனின், அற்றன்று; இந்நான்கு பூதங்களுமொப்ப முத்தொழிற்படுதலான் இவை ஒன்றனைக் காரியப்படுத்துமாற்றல் உடையனவன்மையின், இவைபோல முத்தொழிற்படுதலின்றி மேம்பாடுடையானொருவனே இவற்றைத் தொழிற்படுத்தற்பொருட்டு வேண்டப்படுமென்பதாம்.

எதிர்நிரனிறையாக வைத்துரைக்க. இவ்வாறன்றி மேலைச் செய்யுளின் பொருளே பொருளார்க்கொண்டு, கூறியது கூறலென்னும் வழுப்படவுரைப்பாருமுளர்.

நலங்கிளர்காதனென வியையும். நலம் – மேம்பாடு.

இவையிரண்டு செய்யுளானும் உலகம் முத்தொழிலுடைத்தென்பதனை யுடம்பட்டு, தருபவனொருவன் வேண்டாவென்னும் உலகாயதரிலொருசாரார் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரிக்கப் பட்டது. (1)

சார்பினிற் றோன்று மெல்லாந் தருபவ னில்லை யென்னிற்
றோரினில் லதற்கோ தோற்ற முள்ளதற் கோநீ செப்பா
யோரினில் லதுவுந் தோன்று துள்ளதே னுதிக்க வேண்டா
சோர்விலா திரண்டு மின்றி நிற்பது தோன்று மன்றே.

சுப — பதவுரை

(கணபங்கமாகிய எல்லாப் பொருள்களுள்ளும் முற்கணத்திற் றோன்றிய பொருள் பிற்கணத்திற் றோன்றும் பொருட்குச் சார்பாய் மேம்படுதலின்) எல்லாம் சார்பினில் தோன்றும் – எல்லாப்பொருளும் (வித்தின் கேட்டின் அங்குரம்போல) அவ்வச்சார்பிலே தோன்றுமெனச் சவுத்திராந்திகர் முதலியோர் மதம்பற்றிக் கூறவமையும்,—தேரின் தருபவன் இல்லை என்னின் – (ஆதலால்) ஆராயுமிடத்து இதற்கொரு கருத்தாத் தோற்ற நாசமின்மை பற்றி மேம்பாடுடையனு யுளனுதல் வேண்டாவெனின்,—தோற்றம் இல்லதற்கோ உள்ளதற்கோ நீ செப்பாய் – அற்றன்று நீ சார்பிற் றோற்றங் கூறியது இல்பொருட்கோ வுள்

பொருட்கோ கூறுவாயாக,–ஓரின் இல்லதுவும் தோன்றாது – உணருமிடத்து இல்பொருட்காயின் (அது முயற்கோடு போல) ஒருஞான்றுந் தோன்றுமாறில்லை,–உள்ளது உதிக்க வேண்டா வேல்–(அற்றேல் குடம்போல) வுள்பொருட்குத் தோற்றம் வேண்டாமையின்,—இரண்டும் இன்றிச் சோர்வு இலாது நிற்பது – மாத்திமிகர் மதம்பற்றி இல்லது மன்றி யுள்ளதுமன்றி (அநிர்வசனமாய்ச்) சோர்வின்றி நிற்ப தொரு பொருள்,—தோன்றும் அன்றே – தோன்றுமெனக் கோடும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. கணபங்கமாகியவெல்லாப் பொருள்களுள்ளும் முற்கணத்திற்றோன்றிய பொருள் பிற்கணத்திற்றோன்றும் பொருட்குச் சார்பாய் மேம்படுதலின், எல்லாப்பொருளும் வித்தின் மேட்டினங்குரம்போல அவ்வச்சார்பிலே தோன்று மெனச் சவுத்திராந்திகர் முதலியோர் மதம்பற்றிக் கூறவமை யும், இதற்கொரு கருத்தாத் தோற்றநாசமின்மைபற்றி மேம் பாடுடைய ஞயுளதல் வேண்டாவெனின்,–அற்றன்று; நீசார் பிற்றோற்றங் கூறியது இல்பொருட்கோ உள்பொருட்கோ? இல்பொருட்காயின், அது முயற்கோடுபோல ஒருஞான்றுந் தோன்றுமாறில்லை. அற்றேற் குடம்போல உள்பொருட்குத் தோற்றம் வேண்டாமையின் மாத்திமிகர்மதம்பற்றி இல்லது மன்றி யுள்ளதுமன்றி அநிர்வசனமாய் நிற்பதொருபொருள் தோன்றுமெனக் கோடுமென்பதாம்.

இல்லதுவு மென்னு மும்மை சிறப்பு. உடம்படுமெய் பெறுதல் இலேசாற் கொள்க. (5)

உள்ளது மிலது மின்றி நின்றதொன் றுளதே லுண்டா
மில்லதே லில்லை யாகுந் தோற்றமு மிசையா தாகு
மூள்ளகா ரணத்தி லுண்டாங் காரிய முதிக்கு மண்ணி
லில்லதாம் படங்க டாதி யெழிறரு மியற்று வானல்.

சுப் — பதவுரை

உள்ளதும் இலதும் இன்றி நின்றது ஒன்று – (அங்ஙனம்) உள்ளது மில்லது மன்றி அநிர்வசனமாய்க் கூறப்படும் பொருடான் ஒன்று (உண்டோ வில்லையோவெனக் கடாயினர்க்கு),—உளதேல் உண்டாம் – உண்டெனில் உள்பொருளேயாம்,—இல்லதேல் இல்லையாகும் – இன்றெனில் இல்பொருளேயாம் (எனப்பட்டு அநிர்வசனமென்றது போலியாயொழியும்),—தோற்றமும் இசையாதாகும் – (அல்லதூஉம் அநிர்வசனப்பொருள் சூனியமாகலின் அதற்குத்) தோற்றமுங் கூடாது,—(இவ்வாறு சவுத்திராந்திகர் முதலியோர் கூறும் இல்பொருட்கும் மாத்திமிகர் முதலியோர் கூறும் அநிர்வசனப் பொருட்குந் தோற்றங் கூடாமையிற் பாரிசேடவளவையால்) உள்ள காரணத்தில் உண்டாங் காரியம் உதிக்கும் – உள்பொருளாகிய காரணத்தினின்றும் உள்பொருளாகிய காரியம் (ஒருகருத்தாவால் வெளிப்பட்டுத்) தோன்று மென்பது,—இவற்றுவானல் மண்ணில் - திகிரிமுதலிய துணைக்காரணங் களோ மண்ணுகிய முதற்காரணத்தின்கண் உய்க்குங் குயவனல் அம்மண்ணினின்றும்,—படம் இல்லதாம் – ஆடை முதலிய காரியந்தோன்றாது,—கடாதி எழில் தரும்-குடஞ் சால் கரக முதலிய காரியமே வெளிப்பட்டுத் தோன்றுதலின் (அவ்வெதிர்மறை முகத்தானும் அறியப்படும்) என்க.

சிவ -- பொழிப்புரை

எ-து. அங்ஙனம் அநிர்வசனமாய்க் கூறப்படும் பொருடா னென்று உண்டோ இல்லையோவெனக் கடாயினார்க்கு, உண்டெனில் அப்பொருளையாம் இன்னெனிலில் பொருளையாமெனப்பட்டு அநிர்வசனமென்றது போலியாபொழியும்; அல்லதூஉம் அநிர்வசனப்பொருள் சூனியமாகலின் அதற்குத் தோற்றமுங் கூடாது; இவ்வாறு சவுத்திராந்திகர் முதலியோர் கூறும் இல்பொருட்கும் மாத்திமிகர் முதலியோர் கூறும் அநிர்வசனப்பொருட்குந் தோற்றங் கூடாமையின், பாரிசேடவளவையாற் காரணங் காரியமிரண்டும் உள்பொருளையாய்க் காரணத்தினின்றுங் காரியம் ஒருகருத்தாவால் வெளிப்பட்டுத் தோன்றுமென்பது, குயவனைவான் திகிரிமுதலிய துணைக்காரணங்களை மண்ணுகிய முதற்காரணத்தின்கணுய்ப்ப, அதனினின்றும் ஆடைமுதலிய காரியந் தோன்றுது குட்டஞ் சால் கரகமுதலிய காரியமே வெளிப்பட்டுத் தோன்றுதலின், அவ்வெதிர்மறைமுகத்தானும் உடம்பாட்டு முகத்தானும் அறியப்படுமென்பதாம்.

உள்ளது மிலது மின்றி நின்றதொன்றுளதேலென்றது அநுவாதஞ் செய்து கொண்டது. (6)

ஒருபொரு ளொருவ னின்றி யுளதில தாகு மென்னிற்
றருபொரு ளுண்டே லின்றுந் தன்மையின் றின்றே லுண்டாய்
வருதலின் றிலது காரிய முதலுள தாகு மென்னிற்
கருதுகா ரியமு முண்டாய்த் தோற்றமுங் கருத்தா வாலாம்.

சுப் — பதவுரை

(அற்றேல் அவையிரண்டு மேலாமையின்) ஒரு பொருள் உளது இலது – காரியப்படுவதோர் பொருள் உண்டுமா யில்லையுமாய் நிற்கு மீரியல்புடைய தாகலின்,—ஒருவன் இன்றி ஆகும் என்னின் – இதற்கொரு கருத்தா வேண்டப்படுவதின்றியே யுண்டாமெனச் சமணர் மதம் பற்றிக் கோடுமென்னின்,—தரு பொருள் உண்டேல் – பொருந்திய பொருள் உள்பொருளாயின்,–இன்றுந்தன்மை இன்று–இல்லையாந்தன்மை யின்மையின் உள்ளதேயாம்,—இன்றேல் – இல்பொருளாயின்,—உண்டாய் வருதல் இன்று – உண்டாய் வருதலின்மையின் இல்லதேயாம் (ஆதலின் உண்டு மில்லையுமாமென மாறுபட்ட இரண்டு தன்மை ஒருபொருளுக்கிசைதல் கூடாது),—முதல் உளதாகும் காரியம் இலது என்னின் – இனிக் காரணரூபமாயுண்டு காரியரூபமா யில்லையென்பதே உண்டு மில்லையு மென்பதற் குப் பொருளெனின்,—(நன்று சொன்னாய் காரண காரி யங்கட்குத் தம்முள் வேற்றுமையின்மையின் காரண முள் பொருளாகவே),—கருது காரியமும் உண்டாய் – கருது கின்ற காரியமும் அதன்கட் சூக்குமரூபமாயுள்ளதாய்,—தோற்றமும் கருத்தாவால் ஆம் – அது பின்னர்த் தூலரூப மாய் விளங்கித் தோன்றுதல் ஒருவினைமுதலா னுமென்பது தானே போதரும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து *அற்றேல், அவையிரண்டுமேலாமையிற் காரியப் படுவதோர் பொருள் உண்டுமாயில்லையுமாய் நிற்கும் ஈரியல் புடைத்தாகலின் இதற்கொரு கருத்தா வேண்டப்படு*

வானல்லனைச் சமணர்மதம்பற்றிக் கோடுமெனின்,—அற் றன்று; உண்டுமில்லையுமாமென மாறுபட்ட இரண்டுதன்மை ஒருபொருட்கிசைதல் கூடாது. இனிக் காரணரூபமாயுண்டு காரியரூபமாயில்லையென்பதே உண்டுமில்லையுமென்றதற்குப் பொருளெனின்,—நன்று சொன்னாய்; காரணகாரியங்கட்குத் தம்மூள் வேற்றுமையின்மையிற் காரணமுள் பொருளாகவே காரியமுமதன்கட் சூக்குமரூபமாயுள்ளதாய் அது பின்னர்த் தூலரூபமாய் விளங்கித்தோன்றுதல் ஒரு வினைமுதலானு மென்பது தானே போதருமென்பதாம்.

இன்னு மிச்சற்காரியவாதத்தின்கட் படுங்கடாவிடைக ளெல் லாம் "தந்துமுதல்காரகம்" (அகவல் – 22) என்னும் ஞானமிர்த முதலியவற்றுட் காண்க.

இவை மூன்றுசெய்யுளானும் முறையே, இல்லது தோன்று மென்னுஞ் சவுத்திராந்திகர் முதலியோர் மதமும், இல்லது முள் ளது மல்லது தோன்று மென்னும் மாத்திமிகர் முதலியோர் மத மும், இல்லது முள்ளதுமாயது தோன்றுமென்னுஞ் சமணர்மதமும் பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து, வருமுறையென்பதனாற் பெறப் பட்ட சற்காரியவாதத்தை வலியுறுத்தி, தருபவனொருவன் வேண்டு மென்பது சாதிக்கப்பட்டது.

இதுகாறும் வந்துநின்று போவதென்றதூஉம், வருமுறை யென்றதூஉம், தருபவனொருவன் வேண்டுமென்றஉதூம், வைதிகப் புறத்தார் மதத்தான் இகந்துபடாமைக்காத்தார்; இனி வைதிகத் துட்பட்ட மீமாஞ்சகர் தார்க்கிகர் சாங்கியர் மதத்தான் முறையே அவையிகந்து படாமற் காக்கின்றார். (7)

காயத்தி னழிவு தோற்றங் கண்டன முலகிற் காணு
நீயித்தை யுரைத்த வாறிங் கென்னெனி னிகழ்த்து முண்மை
மாயத்த வுலகம் பூநீர் தீவளி வான மாதி
யாயித்தா னென்றி னென்று தோன்றிநின் றழித லாலே.

சுப் — பதவுரை

(காயமும் உலகுமென்னு மிருகூற்றுப் பிரபஞ்சத்துள் ஆண் பெண் அலியென மேற்கூறிய அவயவப்பகுப்புக் காயத்திற்கே யன்றி ஏனையுலகத்திற் கின்மையால்) தோற்றம் அழிவு காயத்திற் கண்டனம் – (அவயவப்பகுப்புடைமை பற்றித் துணியப்படுந்) தோற்றக் கேடுகளுங்காயத்திற்கே கண்டாமன்றி,—உலகிற் காணும்–உலகிற்காணுமென்ப(து துணியப்படுவ) தாயிருக்க,—இங்கு நீ இத்தை உரைத்த வாறு என்னெனின் – ஈண்டுத்தோற்றக்கேடுகள் இரண்டற்கும் ஒப்பக்கூறுதல் அமையாதென்று நீ சொல்லில் (அற்றன்று),—மாயத்த உலகம் – (இவ்வாறு உனக்கு) மயக்கத்தைச் செய்வதாகிய உலகமும் (நிரவயவமாதலின்றி,—பூ நீர் தீ வளி வானம் ஆதி ஆய இத்தான்-நிலம் நீர் தீ வளி வான மென்றற் றொடக்கத்துப் பகுப்புடைத்தாகிய இதனுன்,—உண்மை – அவ்வுண்மையே,—ஒன்று – (நீ கூறும் இருகூற்றுப்பிரபஞ்சத்துள்) ஒன்றாகிய உலகமும்,—ஒன்றின் – ஏனைக்காயம்போல,—தோன்றி நின்று அழிதல் ஆலே – தோன்றி நின்றழிதலால,—நிகழ்த்தும் - உணர்த்தும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. காயமு முலகுமென்னும் இருகூற்றுப் பிரபஞ்சத்துள், ஆண் பெண்ணலியென மேற்கூறிய அவயவப்பகுப்புக்

காயத்திற்கேயன்றி ஏனையுலகத்திற்கின்மையால், அவயவப் பகுப்புடைமைபற்றித் துணியப்படுந் தோற்றக்கேடுகளுங் காயத்திற்கே யன்றி உலகிற்கில்லையென்பது துணியப்படுவ தாயிருக்கத் தோற்றக்கேடுகள் இரண்டற்குமொப்பக்கூறு தல் அமையாதென்று நீ சொல்லில்,—அற்றன்று; இவ்வா றுனக்கு மயக்கத்தைச் செய்வதாகியவுலகமும் நிரவயவமாக லின்றி நில நீர் தீ வளி வான மென்றற்றொடக்கத்துப் பகுப் புடைத்தாகியவிதனுன், அவ்வுண்மையே நீ கூறு மிருகூற்றுப் பிரபஞ்சத்துளொன்றுகியவுலகமும் ஏனைக்காயம்போலத் தோன்றிநின்றழிதலே உணர்த்து மென்பதாம்.

ஆயவென்னும் பெயரெச்சத்து ளகரமும், இதனு னென்பத னுள் அன்சாரியையும், விகாரத்தாற்றொக்கன; "பெற்றத்தாற் பெற்றபயன்" (திருக்குறள், சுற்றந்தழால். செ – 4.) என்றாற் போல.

ஆயிற்றுனென்பு பாடமோதுவாருமுளர்.

ஒன்றினென்னும் இன் உவமவுருபு.

"ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின் மெய்யுருபு தொகாஅ விறுதியான" (தொல்காப்பியம் – சொல்லதிகாரம். வேற்றுமை மயங்கியல். சூ–22.) என்பதோத்தாகலின், இரண்டாவது இறுதிக் கட்டொக்கது.

ஆல் அசை.

ஒன்றினுன்று தோன்றிநின்றழிதலாலென்பதற்கு வான முதலியவைந்தும் முறையே ஒன்றினுன்று தோன்றிநின்றழியு மென்னுஞ்சுருதி உனக்குப் பிரமாணமாதலாலென்றுரைப்பாரு

முளர்; வேதத்துள் விதிவாக்கியமொழித் தொழிந்தன வெல்லாம் புனைந்துரை வகையானன்றிப் பிரமாணமாகா வெனக்கொண்ட மீமாஞ்சகமதத்தார்க்கு அவ்வுபநிடதச்சுருதி பிரமாணமன்றென் பது அவாறிந்திலர்; அல்லதூஉம் ஈண்டுக்கூறுவன வெல்லாம் பொருந்துமாறுபற்றியன்றி ஆகம வளவைபற்றி யன்மையானும் அவ்வுரை போலியாதலறிக. (8)

ஓரிட மழியப் பின்னு மோரிட நிற்கு மொக்கப்
பாரிட மழிவ தின்றி மென்றிடிற் பயில்வித் தெல்லாங்
காரிட மதனிற் காட்டு மங்குரங் கழியும் வேனிற்
சீருடைத் தலகு காலஞ் சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும்.

சுப் — பதவுரை

(நில மலை கடன் முதலிய வடிவிற்றாகிய உலகமுங் காயம்போல அவயவப் பகுப்புடைமையான் அதுபோலத் தோன்றி நின்றழிதல் பெறப்படுமென்றதொக்கும் அங்ஙன மாயினும்) பார் இடம் ஒக்க அழிவது இன்றும் – பார்த் தறியப்படு முலகமெல்லாம் ஒருங்கே யழியுமெனின் உல கம் அநாதியென்னுஞ் சுருதியோடு முரணுதலானும் மீளத் தோன்றுதற்கோ ரியைபின்றாய் முடியு மாகலானும்,—ஓர் இடம் அழியப் பின்னும் ஓர் இடம் நிற்கும் என்றிடின் – (அவ்வாறன்றி) உலகத்திலெருபக்க மழியினும் பிறிதொரு பக்க நிற்குமென்றலே பொருத்தமுடைத்தெனின் (அற் றன்று),—பயில் வித்து எல்லாம் – (தம்முள் ஒரு சாதிப் பல பொருளாகிப்) பயில்கின்ற வித்து முதலிய சடங்கள்,– கார் இடமதனில் அங்குரம் காட்டும் – கார்காலமாகிய வோர் காலவிசேடத்தின் ஒருங்கே முளை தோன்றும்,— வேனிற் கழியும்–வேனிற்காலமாகிய வோர் காலவிசேடத்

தின் ஒருங்கே யழியும் ஆகலின்,—சீர் உடைத்து உலகு – (அவ்) வியல்பிற்றாகிய வுலகமும்,—காலம் சேர்ந்திட—அவ் வக்காலம் வந்துழி,—பெயர்ந்து செல்லும் – அவ்வாறு முழுவது மொருங்கே தோன்றி யொருங்கே யழியும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. நிலமலைகடன் முதலிய வடிவிற்றாகிய வுலகமுங் காயம்போல அவயவப்பகுப்புடைமையான் அதுபோலத் தோன்றிநின்றழிதல்பெறப்படுமென்றதொக்கும்; அங்ஙன மாயினும், பார்த்தறியப்படுமுலகமெல்லாம் ஒருங்கேயழியு மெனின், உலகமஹாதியென்னுஞ் சுருதியோடு முரணுதலா னும், மீளத் தோன்றுதற்காரியபின்றாய் முடியுமாகலா னும், அவ்வாறன்றி உலகத்தி னொருபக்கமழியினும் ஒரு பக்கம் நிற்குமென்றலே பொருத்தமுடைத்தெனின்,—அற் றன்று; தம்முளொருசாதிப்பலபொருளாகிய வித்துமுதலிய சடங்கள் ஒவ்வொரு காலவிசேடத்தின் ஒருங்கே தோன்று தலு மொருங்கேயழிதலுங் கண்டாமாகலின் அவ்வியல்பிற் றாகிய வுலகமும் அவ்வக்காலம் வந்துழி, அவ்வாறு முழுவது மொருங்கே தோன்றி ஒருங்கேயழியுமென்பதாம்

பாரிடம் வீணைத்தொகை.

சீர் உவமவுருபு; அச்சீரென்றாற்போல. (9)

காலமே கடவு ளாகக் கண்டனந் தொழிலுக் கென்னிற்
காலமோ வறிவின் றாகு மாயினுங் காரி யங்கள்
காலமே தரவே காண்டுங் காரணன் விதியி னுக்குக்
காலமுங் கடவு ளேவ லாற்றுணைக் கார ணங்காண்.

சுப் — பதவுரை

(காலஞ் சேர்ந்திடப் பெயர்ந்து சேறலான்) தொழிலுக்கு–அத்தோற்றக் கேடுகட்கு,—காலமே கடவுளாகக் கண்டனம் என்னின் – காலமே கருத்தாவாய் முடியுமெனின் (அஃதொக்கும்),—ஆயினும்–அங்ஙனமாயினும்,–காலமோ அறிவு இன்றுகும் – அக்காலம் அறிவில்லாத சடமாதலாற் (கருத்தாவாகாது),—காரியங்கள் காலமே தரவே காண்டும்–(ஆதலின்) காரியங்களைக் காலமே தரவே காண்டலின்,—கடவுள் ஏவலால் – சேதனனுகிய கருத்தாவின தேவலான்,—காரணன் விதியினுக்கு – அவன் செய்யும் அத்தொழிற்கு,–காலமும் துணைக்காரணம் காண் – காலமுந் துணைக்காரணமாமென்றறிவாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *காலஞ் சேர்ந்திடப் பெயர்ந்து சேறலான் அத் தோற்றக் கேடுகட்குக் காலமே கருத்தாவாய் முடியுமெனின், —அஃதொக்கும்; அங்ஙனமாயினும் அது சடமாகலாற் கருத்தாவாகாது சேதனனுகிய கருத்தாவினதேவலான் அவன் செய்யுமத்தொழிற்குத் துணைக்காரணமாமென்றறி வாயாகவென்பதாம்.*

இது சொற்பொருட்பின்வருநிலை.

ஓகாரஞ் சிறப்பின்கண் வந்தது.

காலமே தரவே என்னும் எகார மிரண்டினுள், முன்னையது பிரிநிலைக்கண்ணும், பின்னையது தேற்றத்தின்கண்ணும் வந்தன.

இவை மூன்று செய்யுளானும் மீமாஞ்சகர் மதம்பற்றி யாசங் கித்துப் பரிகரித்து, 'வந்து நின்றுபோவது' சாதிக்கப்பட்டது.(10)

அழிந்தபி னணுக்க டாமே யகிலமாய் வந்து நின்று
கழிந்திடுங் கன்மத் தென்னிற் கன்மமு மணுவுங் கூட
மொழிந்திடுஞ் சடமே யாகி முடிதலான் முடியா செய்தி
யொழிந்திடு மணுரூ பங்க ளுலகெலா மொடுங்கு மன்றே.

சுப — பதவுரை

அழிந்த பின்–உலகம் அழிந்தபின்னர்,— அணுக்கள் தாமே – மீளப் பரமாணுக்கடாமே,—கன்மத்து – கன்ம மேதுவாக,—அகிலமாய் – பிரபஞ்சமாய்,—வந்து நின்று கழிந்திடும் என்னின் – தோன்றி நின்று அழியும் (கன்ம காலங்கள்போல் இறைவனிச்சையு மொருகாரணமாம் அத்தனையே பிறிதில்லை) எனின் (அற்றன்று),— மொழிந் திடும் கன்மமும் அணுவும் – சொல்லப்பட்ட கன்மமும் அணுவும்,—சடம் ஆகியே முடிதலான் – சடமாயே முடி தலின்,—செய்தி முடியா – (அவை தம்முட் கூடித் தொழிற்படுதல் சித்தாகிய முதல்வன்) தொழிலையின்றி அமையாது,—உலகு எல்லாம் ஒடுங்கும் அன்றே – (அஃ தன்றியும்) உலகமுழுதும் ஒடுங்கும்போது,—அணுரூபங் கள் கூட ஒழிந்திடும் — அணுவுங் கூடவே ஒடுங்கும் (ஆகலான் அது பின் அகிலமாய் வந்து நின்று கழியுமா றுயாண்டையது) என்க

சிவ — பொழிப்புரை

எ-து. உலகமழிந்தபின்னர் மீளப் பரமாணுக்கடாமே கன்மமேதுவாகப் பிரபஞ்சமாய்த் தோன்றிநின்றழியும்; கன் மங்காலங்கள்போல் இறைவனிச்சையும் ஒருகாரணமாமத் தனையே பிறிதில்லையெனின்,—அற்றன்று; கன்மமுமணுவுஞ்

சடமேயாகலான், அவை தம்முட்கூடித்தொழிற்படுதல் சித்தாகிய முதல்வன்றொழிலேயின்றி அமையாது. அதுவன்றியும், உலகமொடுங்கும்போது அணுவுங் கூடவேயொடுங்குமாதலால், அது பின் அகிலமாய்வந்து கழியுமாறு யாண்டையதென்பதாம்.

இவ்வணுகாரணவாதஞ் சவத்திராந்திகர் வைபாடிகர் ஆசீவகர்க்கு மொக்குமேனுந் தலைமைபற்றித் தார்க்கிகர்மேல் வைத்து மறுத்தவாறு. (11)

காரண வணுக்கள் கெட்டாற் காரிய வுலகின் றென்னிற்
காரண மாயை யாகக் காரியங் காண லாகுங்
காரண மாயை யென்னே காண்பதிங் கணுவே யென்னிற்
காரண மாயை யேகாண் காரிய மணுவிற் கண்டால்.

சுப் — பதவுரை

காரண அணுக்கள் கெட்டால் – காரணமாகிய அணுக்கள் அழிந்தால்,—காரிய உலகு இன்று என்னின்—காரியமாகிய பிரபஞ்சம் இன்றெனின்,—மாயை காரணமாக—(சத்திரூப சமுகமாய் நிலேபேறுடைய) மாயையே உலகிற்கு முதற்காரணமாதலால்,—காரியம் காணலாகும்—(அணுக்கள் அழிந்தமைபற்றி உலகு மீளக்) காரியப்படுதற்கோ ரிழுக்கில்லே,—அணுவே இங்குக் காண்பது—(ஆனல்) அணுவே யீண்டு (முதற்காரணமென)க் காணப்படுவதன்றி,—மாயை காரணம் என்னே எனின்—மாயை முதற்காரணமென்பது பெறப்படாதெனின்,—அணுவிற் காரியம் கண்டால்—அணுக்களிடத்தே காரியத்தன்மை

காண்டலான் (அவை உலகிற்கு முதற்காரணமாதல் செல்லாதாகலின்),—மாயையே காரணம் காண் – மாயையே முதற்காரணமாமென வுணர்க என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. சத்திரூபசமூகமாய் நிலேபேறுடைய மாயையே உலகிற்கு முதற்காரணமாதலால் அணுக்களழிந்தமைபற்றி உலக மீளக் காரியப்படுதற்கோரிழுக்கில்லேயெனவும், அணுக்கள் காரியப்பொருளாகலால் அவையுலகிற்கு முதற்காரண மாதல் செல்லாதெனவு முணர்க வென்பதாம்.

இது சொற்பொருட்பின்வருநிலே.

காண்டலென்பது கண்டெனத்திரிந்தது, "மயலாகு மற்றும் பெயர்த்து" (திருக்குறள், துறவு. செ – 4.) என்றூற்போல; ஆல் அசை. (12)

காரிய மென்ப தென்னே காரண வணுவை யென்னிற்
காரிய மவய வத்தாற் கண்டனங் கடாதி போலக்
காரிய வுருவ மெல்லா மழிதருங் கார ணத்தாற்
காரிய வுறுப்பின் மாயை தருமெனக் கருதி டாயே.

சுப் — பதவுரை

காரண அணுவை – காரணமாகிய அணுவை,—காரியம் என்பது என்னே எனின் – காரியமென்பது எங்ஙனமெனின்,—காரியம் கடாதி போல அவயவத்தாற் கண்டனம் – (அணுக்கள்) காரியப்பொருளாதல் குடமுதலியனபோல அவயவமுடைமையால் அறிந்தனம்,—காரிய

உருவம் எல்லாம் – காரியப்பொருளெல்லாம்,—அழிதரும் காரணத்தால்-அழிதன்மாலைய வாகலின்,—காரிய உறுப்பு இல் மாயை – காரியப்பொருளெனப்படுதற்கு இயை புடைய அவயவத்தன்மை இன்மையின் நிலைபெறுமியற் கைத்தாகிய மாயையே,—தரும் எனக் கருதிடாயே – முதற்காரணமென நீ அறிவாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அணு காரியப்பொருளாய் அழிதன்மாலைத்தென் பதூஉம், மாயை காரியப்பொருளாதலின்றி நிலைபேறுடைய தென்பதூஉம், முறையே அவயவமுடைமையானும் அஃ தின்மையானுமறியப்படு மென்பதாம்.*

இதுவுஞ் சொற்பொருட்பின் வருநிலை.

அணுக்களுக்கு அவயவமுண்டென்பது சையோகப்படுதலாற் பெறப்படும். (13)

தோற்றமு நிலையு மீறு மாயையின் றொழில தென்றே
சாற்றிடு முலகம் வித்துச் சாகாதி யணுக்க ளாக
வேற்றமே லீண்டு நிற்கு மில்லதே யியைவ தின்று
மாற்றரீ மறந்தா யித்தான் மாயையை மதித்தி டாயே.

சுப் — பதவுரை

தோற்றமும் நிலையும் ஈறும் – தோற்றம் நிலை இறுதி என்னு முத்தொழிலும்,—மாயையின் தொழிலது என்றே சாற்றிடும் உலக (மாற்றம்) – (மாயைதருமென்றற்கு) மாயையே பிரகிருதி யென்றறிக வென்று கூறுகின்ற

வேதமொழியும்,—வித்துச் சாகாதி அணுக்களாக ஏற்ற தேல் – வித்தின்கண்ணே சாகை முதலியன சூக்குமரூப மாய் அடங்கி நின்றன வாயின்,—ஈண்டு நிற்கும் – அவை தூலரூபமாக வெளிப்படுதலை உடம்பாட்டானும்,—இல்லதேல் – அவ்வாறு சூக்குமரூபமாய் அடங்கிநிற்ற லில்லையெனின்,—இயைவது இன்றும் – அவை தூலரூப மாக வெளிப்படுதலு மின்றுமென எதிர்மறையானும் வழங்குகின்ற,—(உலக) மாற்றம் – உலகமொழியுஞ் (சான்றுகளின்),—நீ மறந்தாய் – (அதனை) நீமறந்தாய்,—இத்தால்– (காரியவுறுப்பின்மை மாத்திரையேயன்றி வேத மொழி உலக மொழி சான்றுதலாகிய) இதனானும்,—மாயையை – (அணுகாரண வாதத்தை விட்டு) மாயையே காரண மென்பதனை,—மதித்திடாயே – அறிவாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மாயைதருமென்றதற்கு, மாயையே பிரகிருதி யென்றறிக வென்னும் வேதமொழியும், வித்துச்சாகாதி முத லியவற்றின் வைத்து உடம்பாட்டானு மெதிர்மறையானும் வழங்குகின்ற உலகமொழியும், சான்றுகளின், இதனானும் அணுகாரணவாதத்தை விட்டு மாயையே காரணமென்பதனை அறிவாயாகவென்பதாம்.

பிரமாணங்கூறி வலியுறுத்தியவாறு.

வேதத்தின்றொழில் அதனையுணர்ந்தார்மேலேற்றிக் கூறப் பட்டது.

ஏனையவற்றைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

இத்தாலென்புழி விகாரத்தாற்றொக்கவும்மை, காரியவுறுப் பின்மை மாத்திரையேயன்றி யென இறந்தது தழீஇயிற்று. (14)

மாயையி னுள்ள வஞ்சம் வருவது போவ தாகு
நீயதிங் கில்லை யென்னி னிகழ்ந்திடு மூயலிற் கோடு
போயுகு மிலைக ளெல்லா மரங்களிற் புக்குப் போதி
னையிடு மதுவு மென்னிற் காரணங் கிடக்க வாமே.

சுப் — பதவுரை

நீ அது இங்கு இல்லை என்னின் – (அதுவன்றியும்) நீ சற்காரிய காரணங் கொள்ளாது இல்லது உற்பத்தியா மென்பையாயின்,— மூயலிற்கோடு நிகழ்ந்திடும் – மூய லின்கண்ணுங் கோடு உளதாதல் வேண்டும்,—உள்ள வஞ்சம் –(அற்றேல்) உள்ள பிரவஞ்சமே,—மாயையின் போவது வருவதாகும் — மாயையினெடுங்கி மீளத் தோன்று மென்பார்க்கும்,—மரங்களின் உகும் இலைகள் எல்லாம் – அவ்வாறே மரத்தினின்று உதிர்ந்த இலைத் தொகுதி,—போய்ப் புக்கு – தானே மரத்தின் ஒடுங்கி,— போதின் – அதற்குரிய காலத்தில்,—ஆயிடும் என்னின் – – மீளத்தோன்றுதல் வேண்டுமெனின் (அஃதொக்கும்),— காரணம் கிடக்க – (அங்ஙனம் உதிர்ந்த இலைத்தொகுதி) சத்திரூபகாரணமாய் நிலைபேறுடைமையின்,—அதுவும் ஆமே – அது (மீளத் தோன்றுதற்குரிய கன்மங் கால முதலிய பிறகாரணங்களெல்லாம் அதனோடொருங்குகூடி யவழி அவ்வாறே) தோன்றும் (அல்லுழித் தோன்றுதாக லின் அதுபற்றிக் கடாவென்னை) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அதுவன்றியுஞ் சற்காரியகாரணங் கொள்ளாது இல்லது உற்பத்தியா மென்பார்க்கு மூயலின் கண்ணுங்

கோடுளதாதல்வேண்டுப்; அற்றேல் உள்ளபிரபஞ்சமே மாயையிலெடுங்கி மீளத் தோன்றுமென்பார்க்கும், அவ்வாறே மரத்தினின்றுதிர்ந்தவிலை தானே மரத்திலெடுங்கி மீளத் தோன்றுதல் வேண்டுமெனின்,—அஃதொக்குப்; அங்ஙனமுதிர்ந்தவிலைகள் சத்திநிபகாரணமாய் நிலைபேறுடைமையின் அது மீளத் தோன்றுதற்குரிய பிறகாரணங்களெல்லாம் அதனெடொருங்கு கூடியவழி அவ்வாறே தோன்றும், அல்லுழித் தோன்றுதாகலின் அதுபற்றிக் கடாவென்னை? யென்பதாம்.

தருக்கங் கூறி வலியுறுத்தியவாறு.

பிரபஞ்சம் வஞ்சமெனக் குறைத்து நின்றது.

அதுவும் உம்மை அசை.

பிறகாரணங்களாவன:—கன்மங் காலம் முதலாயின.

கிடத்தல் முதற்காரணத்தோடு ஒருங்கியைதல்.

கிடக்கவாமென்பது "மழைபெய்யக் குளநிறையும்" என்றுற் போல நின்றது.

அதுவே தோன்றுதற்குரிய காரணவியைபு இல்வழியும் மரத்தின் கண் அதுபோல மற்றுஞ் சத்திகள் பலவுளவாகலின், இயைபுடைய வேறுவேறிலைகள் தோன்றுதற் கிழுக்கின்மையு மூணர்க. (15)

கருதுகா ரணமுண் டாகக் காரிய முள்ள தாகி
வருதலா லநாதி வைய மற்றொரு கடவு ளித்தைத்
தருதலா லாதி யாகச் சாற்றலு மாகு மாயைக்
கொருவனை யென்னிங் கென்னினுள்ளவா றுரைப்பக் கேளீ.

சுப் — பதவுரை

(அற்றேல் இங்ஙனஞ் சற்காரியவாதங் கூறுவார்க்கு உலகம் அழிபொரு ளென்றல் பொருந்தாதாய் முடியு மெனின்; அற்றன்று) கருது காரணம் உண்டாகக் காரியம் உளதாகி வருதலால் – கருதுகின்ற காரணம் உள்பொரு ளாக அதன்கட் டோன்றுங் காரியமும் உள்பொருளே யென்பது மேற்கூறியவாற்றுன் இனிது விளங்குதலின்,— வையம் அநாதி – காரியப் பிரபஞ்சமும் நித்தப்பொருளே யாம்,—மற்று ஒரு கடவுள் இத்தைத் தருதலால் – இது ஒரு கருத்தாவால் (ஒருகாலத்து) விளங்குதலும் (ஒரு காலத்து மறைதலுமாகிய அவத்தை வேறுபாடு) பற்றி,— ஆதி யாகவும் சாற்ற லாகும் – அழி பொருளென்றுஞ் சாற்றப்படும் (அவ்வவத்தை வேறுபாடு கருதாதவழி உம்மையான் நித்தப்பொரு ளென்பதே துணிவு என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அற்றேல் இங்ஙனஞ் சற்காரியவாதங் கூறுவார்க்கு உலகமழிபொருளென்றல் பொருந்தாதாய் முடியுமெனின்,— அற்றன்று; காரணங்காரியமிரண்டும் உள்பொருளேயென்பது மேற்கூறியவாற்றுன் இனிது விளங்குதலிற் காரியப்பிரபஞ்சமு மநித்தப்பொருளேயாம். ஒரு கருத்தாவால் ஒருகாலத்து விளங்குதலும் ஒருகாலத்து மறைதலுமாகிய அவத்தைவேறுபாடுபற்றி அழிபொருளென்றுஞ் சாற்றப்படும். அவ்வவத்தை வேறுபாடு கருதாதவழி உம்மையால் நித்தப்பொருளென்பதே துணிபென்பதாம்.*

மாயைக்கொருவனுரென்னிங் கென்னினுள்ளவாறுரைப்பக் கேணீ என்பதொழித்து அழித்தபினணுக்கடாமே என்பது முதல்

இவையாறு செய்புளாலுந் தார்க்கிகர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து, வருமுறை யென்பதனுற் பெறப்பட்ட சற்காரியவாதத் தினியல்பு வலியுறுத்தப்பட்டது.

"மாயைக்–கேணீ" என்னு மிறுதியது பின்வருஞ் செய்யுளிற் சேர்த்துப் பொருளுரைக்கப்படும். (16)

புத்திமற் காரி யத்தாற் பூதாதி புருடன் ருனு
மத்தனு கரணம் பெற்ரு லறிதலா லவற்றை மாயை
யுய்த்திடு மதனன் மாயைக் குணர்வொன்று மில்லை யென்றே
வைத்திடு மதனு லெல்லாம் வருவிப்பா லொருவன் வேண்டும்.

சுப் — பதவுரை

இங்கு மாயைக்கு ஒருவன் ஆர் என் என்னின் – ஈண்டுக் (கூறியவற்றுள் ஏனையவெல்லாம் ஒக்கும்; மற்றொரு கடவுளித்தைத் தருதலா லென்றது பொருந்தாது) மாயையே தன் காரியத்தைத்தரும் இதற்கொரு கருத்தா வெற்றுக் கெனின் (அறியாது கூறினுய்), –உள்ளவாறு உரைப்ப நீ கேள் – (அதனை) உள்ளவாறு உரைத்தலை நீ கேட்பாயாக(குடங்குயவனுற் செய்யப்படுங் காரியமானுற்போல),– பூதாதி – பூதமுதலிய பிரபஞ்சமெல்லாம்,—புத்திமற் காரியத்தால் – ஒரு சேதனப் பொருளாற் செய்யப்படுங் காரியமே யாகலானும்,—புருடன்ருனும் – புருடன் (சேதனப் பொருளாயினும்),—அத்தனுகரணம் பெற்ருல் அறிதலால் –அப்பூதாதியானுகிய தனுகரணங்களைப் பெற்ருலே அறிதலானும்,—மாயை அவற்றை உய்த்திடு மதனுல் – மாயை (அவற்றிற்கு முதற்காரணமாய்) அவற்றைச் செலுத்துதலின்,—மாயைக்கு உணர்வு ஒன்றும் இல்லை என்றே

வைத்திடுமதனால் – அம்மாயைக்கு உணர்ச்சி சிறிது மில்லையென்றே கூறியிருத்தலானும்,—எல்லாம் வருவிப்பான் – பாரிசேட வளவையான் (இவ்வனேத்தினும் வேறாய் மாயையினின்றும்) பூதமுதலிய பிரபஞ்ச மெல்லாவற்றையுந் தோற்றுவிப்பான்,—ஒருவன் வேண்டும் – ஒரு கடவுள் வேண்டப்படுவன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *சண்டுக் கூறியவற்றுள் ஏனைபவெல்லாமொக்கும்; மற்றொரு கடவுளித்தைத் தருதலாலென்றது பொருந்தாது; மாயையே தன்காரியத்தைத் தரும்; இதற்கொரு கருத்தா எற்றுக்கெனின், அறியாது கூறினாய்; குடங் குபவனாற் செய்யப்படுங் காரியமாறைப்போலப் பூதமுதலிய பிரபஞ்சமெல்லாம் ஒருசேதனப்பொருளாற் செய்யப்படுங் காரியமேயாகலானும், புருடன் சேதனப்பொருளாயினும் அவன் அப்பூதாதியானகிய தனுகரணாதிகளைப் பெற்றலன்றி யறிய மாட்டாமையானும், மாயை அவற்றிற்கு முதற்காரணமாகலின் அது சேதனப்பொருளாதல் செல்லாமையானும், பாரிசேடவளவையான் இவ்வனேத்தினும் வேறாய் மாயையினின்றும் பூதமுதலிய பிரபஞ்சமெல்லாவற்றையுந் தோற்றுவிப்பானொருகடவுள் வேண்டப்படுவனென்பதாம்.*

புத்திமற்காரியமென்பது வடசொன் முடிபு; ஆண்டுத் தொக்கு நின்ற ஆறனுருபு காரகப்பொருண்மையின் வந்தது.

புத்திமான் சேதனனென்பன ஒருபொருட்கிளவி.

ஒன்றுமென்பது சிறிதுமென்னும் பொருள்படநின்றது.

ஏகாரந் தேற்றம். (17)

காரிய காரணங்கண் முதறுணை நிமித்தங் கண்டாம்
பாரின்மண் டிரிகை பண்ணு மவன்முத றுணைநிமித்தந்
தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தி யாக
வாரியன் குலால னுய்நின் றுக்குவ னகில மெல்லாம்.

சுப — பதவுரை

காரிய காரணங்கள்–(அல்லதூஉம்) ஒரு காரிய நிகழ்ச்சிக்கு வேண்டுங் காரணங்கள்,—முதல் துணை நிமித்தம்–முதற்காரணந் துணைக்காரண நிமித்தகாரண மென மூவகைப்படும் (அவை தம்முளொன்றை இன்றியமையாவென்பதூஉம் தம்முள் வேறுதலும்),—பாரின் மண் திரிகை பண்ணுமவன்–இவ்வுலகின்கண்ணே (குடமுதலிய காரியத்தில்) மண்ணுந் திரிகையுங் குலாலனும்,—முதல் துணை நிமித்தங் கண்டாம்–(முறையே) முதற்காரணமுந் துணைக்காரணமு நிமித்தகாரணமுமாகக் காட்சியளவையான் அறிந்தாம்,—தேரின்–ஆராயுங்கால்,—அகிலம் எல்லாம்–பிரபஞ்சத்தொகுதியாகிய காரியத்திற்கும் (அவ்வாறே),—மாயை மண்ணுக–மாயை மண்போல முதற்காரணமாகவும்,—தன்சத்தி திரிகையாக–தனது சத்தி திரிகைபோலத் துணைக்காரணமாகவும்,—ஆரியன் குலாலனுய் நின்று,—(சிவபிரான்) குலாலன்போல நிமித்தகாரணமாகவு நின்று,—ஆக்குவன்–(அதனைத்) தோற்றுவிப்பான் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அல்லதூஉம், ஒருகாரிய நிகழ்ச்சிக்கு முதறுணை நிமித்தமென்னுங் காரணமூன்றுந் தம்முளொன்றையின்றி

யமையாவென்பதூஉம் மூன்றுந் தம்முள் வேறுதலுங் குட முதலிய காரியத்திற் காட்சிப்புலனுயிரியப்படுதலானும், பிர பஞ்சகாரியத்திற்குமவ்வாறே முதற்காரணந் துணைக்காரணங் களின் வேறுப் நிமித்தகாரணமும் ஒருதலைபான் வேண்டப் படுமென்பதாம்.

காரிய காரணங்களென்னும் ஆறும்வேற்றுமைத்தொகை வட நூன்முடிபு

" மாயைக்கொருவனுரென்னிங்கென்னி னுள்ளவாறு ரைப்பக் கேணீ " என்பதுளப்பட இவையிரண்டு செய்யுளானும், சாங்கியர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்தது " தருபவனொருவன் வேண்டு " மென்றது வலியுறுத்தப்பட்டது

இங்ஙனம்"உதிப்பதுமீறு"மென்பதுமுதல் இத்தூணையும்உலகா யதர் புத்தர் சமணரென்னும் வைதிகப்புறத்தார் மதம்பற்றியும், மீமாஞ்சகர் தார்க்கிகர் சாங்கியரென்னும் வைதிகத்துட்பட்ட முத் திறத்தார் மதம் பற்றியும், ஐயங்கிழாமல் "வருமுறை வந்துநின்று போவதுமாதலாலே தருபவனொருவன்வேண்டும்" என்ற முக்கூற் றுப் பொருளையுங் காத்துக்கொண்டு, இனி யக்காரணகாரியங்கள் தருபவனொருவனும் ரப்படுமாறும் அவற்றதியல்பும் யாங்ஙனமென் பார்க்கு ஆரியன் குலாலனுய் நின்றுக்குமாறு ஒன்பது செய்யுளாற் றெருத்துணர்த்துகின்றுர். (18)

விந்துவின் மாயை யாகி மாயையி னவ்வி யத்தம்
வந்திடும் விந்துத் தன்பால் வைகரி யாதி மாயை
முந்திடு மராக மாதி முக்குண மாதி மூலந்
தந்திடுஞ் சிவன வன்றன் சந்நிதி தன்னி னின்றே.

சுப — பதவுரை

(சுத்தஞ் சுத்தாசுத்தம் அசுத்தமெனக் காரியப்பிரபஞ் சம் முத்திறப்படுதலின் அவற்றிற்கு முதற்காரணங்களுந் தம்முள் வேறுதல் பெற்றும். அவற்றுண் மலகன்மங் களோடு விரவாது முதற்காரணமாய் நிற்பது சுத்தமா யையென்றும் அஃது ஏனை யிரண்டனையும் வியாபித்து மேலாய்நிற்ப) விந்துவின் மாயை ஆதி – அவ்விந்துவின் கீழாயடங்கி (மலகன்மங்களோடு விரவி) முதற்காரண மாய் அசுத்தமாயையாகியும்,—மாயையின் அவ்வியத்தம் வந்திடும் – அவ்வசுத்தமாயையினது தூலபரிணமமாய்த் தோன்றிப் பிரகிருதி மாயையாகியும் வரும் (அம்மூன்று ளுள்),—விந்துத் தன்பால் – சுத்தமாயையினின்றும்,— வைகரி ஆதி மூந்திடும் – (சங்காரமுறைபற்றி) வைகரி முதல் வைத்தெண்ணப்படு நாலுவாக்குந் தோன்றும்,— மாயை – அசுத்தமாயையினின்றும்,—அராகம் ஆதி (மூந் திடும்) – (சங்காரமுறைபற்றி) அராகமுதல் வைத்தெண் ணப்படுங்காரணதத்துவம் ஐந்துந் தோன்றும்,—மூலம் – பிரகிருதிமாயையினின்றும்,—முக்குணம் ஆதி(மூந்திடும்) –(சிருட்டிமுறைபற்றிக்) குணதத்துவமுதல் வைத்தெண் ணப்படும் போக்கியதத்துவம் இருபத்துநாலுந் தோன்றும் (இங்ஙனஞ் சடரூபமான விந்து மோகினி மான் மூன்றுந் தத்தங் காரியங்களை),—சிவனவன்றன் சந்நிதி தன்னின் நின்றே – சிவசத்தி சங்கற்பரூப சந்நிதியினின்றும்,—தந் திடும் – தோற்றுவிக்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *சுத்தஞ் சுத்தாசுத்தம் அசுத்தமெனக் காரியப் பிரபஞ்சம் முத்திறப்படுதலின், அவற்றிற்கு முதற்காரணங்*

களுக் தம்முள் வேறுதல்பெற்றும். அவற்றுள், மலகன்மங்களோடு விரவாது முதற்காரணமாய் நிற்பது சுத்தமாயையென்றும், அஃதேயிரண்டனையும் வியாபித்து மேலாய் நிற்ப அவ்விந்துவின் கீழாயடங்கி மலகன்மங்களோடு விரவி முதற்காரணமாவது அசுத்தமாயையென்றும், அவ்வசுத்தமாயையது தூலபரிணமமாய்த் தோன்றுவது பிரகிருதிமாயையென்றும் கூறப்படும். அம்மூன்றனுள், சுத்தமாயையினின்றுஞ் சங்காரமுறைபற்றி வைகரிமுதல் வைத்தெண்ணப்படு நாலு வாக்குந் தோன்றும்; அசுத்தமாயையினின்றுஞ் சங்காரமுறைபற்றி அராகமுதல் வைத்தெண்ணப்படும் காரணதத்துவமைந்துந்தோன்றும்; பிரகிருதிமாயையினின்றுஞ் சிருட்டிமுறைபற்றிக் குணதத்துவமுதல்வைத்தெண்ணப்படும் போக்கியதத்துவமிருபத்துநாலுந் தோன்றும். இங்ஙனஞ் சடரூபமானவிந்து மோகினி மான் மூன்றுந் தத்தங் காரியங்களைச் சிவசத்தி சங்கற்பரூப சந்நிதியினின்றுந் தோற்றுவிக்குமென்பதாம்.

விந்துவின்மாயையாகி யென்புழிக் கீழென்னும் பொருள்படவந்த கண்ணுருபு விரித்துரைக்க; இன் சாரியை; அதோமாயையென்றதும் இப்பொருள்பற்றி யென்க.

இஃதறியாதார் விந்துவைப்போல மாயையாகி யென உவமையுருபாகக் கொண்டுரைப்பாரும், விந்துவினின்று மாயைதோன்றி யென நீக்கப்பொருட்டாகக் கொண்டுரைப்பாருமாயினர்; இரத்தினத்திரய மென்னும் வடநூலின் அவ்விரண்டனையும் பிறர்கருத்தாக வைத்தோதுதலின் அவை பொருந்தாமை யறிக.

அகத்தர் சிகண்டர் செய்யுந் தொழிலுஞ் சிவசந்நிதியையின்றியமையா வென்னுங் கருத்தான் மூன்றற்குஞ் சிவசந்நிதியே கூறினர்.

அவன் பகுதிப்பொருள் விகுதி.

இதனுனே முதற்காரணமூன்றுமாறும், அவை தத்தங் காரியங்களைத் தோற்றுவிக்குமாறும், அது முதல்வனே யின்றி யமையாதவாறுந் தொகுத்துக்கூறப்பட்டன. (19)

வைகரி செவியிற் கேட்ப தாயத்த வசன மாகி
மெய்தரு முதான வாயு மேவிட விளைந்த வன்னம்
பொய்யற வடைவு டைத்தாய்ப் புந்திகா ரணம தாகி
பையமில் பிராண வாயு வடைந்தெழுந் தடைவு டைத்தாம்.

சுப — பதவுரை

(மேற்கூறிய வைகரியாதி நான்கனுள்) வைகரி – வைகரி வாக்காவது,—செவியிற் கேட்பதாய் – தன் செவிக்கும் பிறர் செவிக்குங் கேட்கப்படுவதாய்,—அத்த வசன மாகி – (நிலைந்த) பொருளைச் சொல்லுஞ் சொல்லாய்,—புந்தி காரணமதாகி – (அச்சொல்லுவானுக்குங் கேட்பானுக்குஞ்) சவிகற்பவுணர் வுண்டாதற் கேதுவாதலும்,—மெய்தரும்–உடம்பின்கண் எழும்,—உதான வாயு மேவிட – உதானனென்னுங் காற்றுன் உந்தப்பட்டு,—விளைந்த வன்னம் – (மத்திமைத்தானத்துச்) சூக்குமரூபமாய்ப் பிரிந்துதோன்றிய அக்கரங்கள்,—ஐயம் இல் பிராண வாயு – (மனத்தின் றெழிற்பாடாகிய) ஐயமின்றுதற் கேதுவாய் (அகங்காரத்தாற் செலுத்தப்படும்) பிராணனென்னுங்காற்றுன்,—அடைந்து எழுந்து - உந்தப்பட்டெழுந்து,—பொய் அற அடைவு உடைத்தாய் – விபரீதமறப் புறத்தே அடைதலுடைத்தாகியும்,—அடைவு உடைத்தாம்–(சொல்லாநின்ற இவ்விருவகை)இலக்கணத்தையுடையதாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேற்கூறிய வைகரியாதி நான்கனுள், வைகரியா வது தன்செவிக்கும், பிறர்செவிக்குங் கேட்கப்பட்டு நிற்கின்ற பொருளைச் சொல்லுஞ் சொல்லாய்ச் சொல்வானுக்குங் கேட்பானுக்குஞ் சவிகற்பவுணர்வுண்டாதற்கு ஏதுவாதலும், உதானனென்னுங் காற்றுனுந்தப்பட்டு மத்திமைத்தானத் துச் சூக்குமரூபமாய்ப் பிரிந்து தோன்றிய வக்கரங்கள் அகங்காரத்தாற்செலுத்தப்படும் பிராணனென்னுங் காற்று னுந்தப்பட்டெழுந்து புறத்தேயடைதலுடைத்தாதலுமாகிய இரண்டும் இலக்கணமாகவுடைத்தென்பதாம்.

மெய்தருமுதானவாயுமேவிடவிளைந்தவன்னம் என்றது அனு வாதம்.

விளைதல் உருவெவையுக் தெரிதல்.

மெய் உடம்பு.

பொய் விபரீதம்.

ஐயமில் பிராணவாயு, மனத்தின் றொழிற்பாடாகிய ஐய மின்றுதற் கேதுவாய் அகங்காரத்தாற் செலுத்தப்படும் பிராண வாயுவென ஏதப்பெயர்கொண்ட குறிப்புவினைத்தொகை.

எழுந்து பொய்யறவடைவுடைத்தாயென மேலே கூட்டுக.

அடைவு பின்னையது இலக்கணம்.

ஈண்டுப் புந்தியென்றது ஏற்புழிக்கோடலாற் பிறர்க்குரிய சவி கற்ப வுணர்வின் மேற்றாயிற்று. (20)

உள்ளுனை ரோசை யாகிச் செவியினி லுறுதல் செப்பா
தொள்ளிய பிராண வாயு விருத்தியை யுடைய தன்றித்
தெள்ளிய வக்க ரங்கள் சிந்திடுஞ் செயல தின்றி
மெள்ளவே யெழுவ தாகு மத்திமை வேற தாமே.

சுப — பதவுரை

செவியினில் உறுதல் செய்யாது – செவியிற் கேட்கப் படாதாய்,—மெள்ளவே எழுவது – மெல்லோசையாய்க் கண்டத்திலே விளங்குதலுண்மையால்,—உள் உணர் ஓசையாகி – (சொல்லுவான்) தன்னுள்ளே உணருஞ் சவி கற்பவுணர்வுக் கேதுவாய்,—(உள் உணர் ஓசையாகி) – உள்ளே யுணரப்படும் ஓசையாகியும்,—ஒள்ளிய பிராண வாயு விருத்தியை உடையது அன்றி – விளங்கிய பிராண வாயுவின் றொழிற் பாடின்றி (உதான வாயுவின் றொழிற் பாடு மாத்திரையே ஆண்டுண்மையின்),—தெள்ளிய அக் கரங்கள் – (சூக்குமரூபமாய்) வடிவு விளங்கிய அக்கரங் கள்,—சிந்திடும் செயலது இன்றி – (பிரிந்து தோன்றினும் பல் இதழ் நா அண்ணங்களிற் பட்டுச்) சிதறிப்போதலின்றி யுஞ்(சொல்லா நின்ற இவ்விருவகை இலக்கணத்தானும்),– வேறதாயே - (முறையே பைசந்திக்கும் வைகரிக்கும்) வேறுய் (அறியப்படுவது),—மத்திமை ஆகும் – மத்திமை வாக்காகும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. செவியிற் கேட்கப்படாதாயும் மெல்லோசை யாய்க் கண்டத்திலே விளங்குதலுண்மையாற் சொல்லுவான் றன்னுள்ளே யுணருஞ் சவிகற்பவுணர்வுக்கேதுவாய் உள்ளே

யுணரப்படுமோசையாதலும், பிராணவாயுவின் தொழிற்பாடின்றி உதானவாயுவின் தொழிற்பாடுமாத்திரையே ஆண்டுண்மையிற் சூக்குமரூபமாய் அக்கரங்கள் பிரிந்து தோன்றினும் பல்லிதழ்நாவண்ணங்களிற் பட்டுச் சிதறிப்போதலின்மையுமாகிய அவ்விரண்டிலக்கணத்தானு முறையே பைசந்திக்கும் வைகரிக்கும் வேறுபடுவது மத்திமைவாக்கென்பதாம்.

இறட்டுறமொழிதலான் உணரோசை யென்னும் விஷத் தொகையின் ஓசையென்பது ஏதுப்பெயராயுஞ் செயப்படுபொருட் பெயராயும் நின்றது.

தெள்ளுதல் ஈண்டு வடிவு விளக்குதல்.

அதுவிரண்டும் பகுதிப்பொருள் விகுதி.

"உயிரிற் சேர்ந்துவரு மவைமருவு முருவெவையுந் தெரித்து—முந்தியிடுஞ் செவியிலுரு தள்ளுணர்வா யோசை முழங்கியிடு மத்திமை" (சிவப்பிரகாசம், பொதுவதிகாரம், செ—26.) என்றுரை புடைநூலாசிரியரும்; உயிரிற்சேர்ந்து வருமவையென்றது முன்னர்க் கூறப்படும் வைகரியை. (21)

வேற்றுமைப் பட்ட வன்னம் வெவ்வேறு விபாக மாகித்
தோற்றுத லடைவொ டுக்கிச் சொயம்பிர காச மாகிச்
சாற்றிய மயிலி னண்டந் தரித்திடுஞ் சலமே போன்றங்
காற்றவே யுடைய தாகிப் பைசந்தி யமர்ந்து நிற்கும்.

சுப் — பதவுரை

பைசந்தி – பைசந்தி வாக்காவது,—சாற்றியமயிலின் அண்டந்தரித்திடுஞ் சலமே போன்று – (மேல்விளங்கித்

தோன்றுவனவாகிய பஞ்சவன்னங்களையும் சூக்குமரூப மாய் அடைவுபட ஒடுக்கி நிற்பதாய்க்) கூறுகின்ற மயின் முட்டையிற் றரித்திடு நீர்போல,—வேற்றுமைப்பட்ட வன்னம் வெவ்வேறு விபாகமாகி – பலவகைப்பட்ட எழுத்துக்கள் (மத்திமைத்தானத்து) வேறுவேறுகப் பிரிவுபட,—தோற்றுதல் அடைவு ஒடுக்கி – விளங்கித் தோன்று முறைமையினை அடக்கி,—அங்கு ஆற்றவே உடையதாகி–அங்கே மிகவுஞ் சூக்குமரூபமாய்க்கொண்டு,—சொயம்பிரகாசமாகி அமர்ந்து நிற்கும் – சிந்தையின் கண் அமர்ந்துநிற்கும் (அன்றி நிருவிகற்ப வுணர்விற்கு ஏதுவாம் என்னும் இவ்விரண்டிலக்கணத்தையுடைத் தாம்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. பைசந்திவாக்காவது, மேல் விளங்கித் தோன்று வனவாகிய பஞ்சவன்னங்களையுஞ் சூக்குமரூபமாய் அடைவு படவொடுக்கி நிற்கும் மயில்முட்டையி னீர்போலப் பல வகைப்பட்டவெழுத்துக்கண் மத்திமைத்தானத்துப் பிரிவு பட விளங்கித்தோன்று முறைமையினை அடக்கி மிகவுஞ் சூக்குமரூபமாய்க்கொண்டு சிந்தையின்கணிற்றலும், நிருவி கற்பவுணர்விற்கு ஏதுவாதலுமாகிய இரண்டுமிலக்கணமாக வுடைத்தென்பதாம்.

விபாகம் பிரிவு. (22)

சூக்கும வாக்க துள்ளோர் சோதியா யழிவ தின்றி
யாக்கிடு மதிகா ரத்திற் கழிவினை தன்னைக் கண்டா
னீக்கமி லறிவா னந்த முதன்மைநித் தியமு டைத்தாய்ப்
போக்கொடு வரவி லாப்பும் விகாரமும் புருட னின்றும்.

சுப் — பதவுரை

சூக்குமவாக்கது – சூக்குமவாக்காவது,—உள் ஓர் சோதியாய் – பரசரீரத்தினுள்ளாக நாதமாத்திரையாக விளங்கியும் (ஞானமாத்திரைக்கு ஏதுவாகியுஞ் சொல்லாகின்ற இலக்கணத்தை) உடையதாய்,—அழிவது இன்றி – (சுத்தமாயாரூபமாய்க்) கேடின்றி (நிலைபெற்று),—அதிகாரத்திற்கு அழிவினை ஆக்கிடும் – பைசந்தி மத்திமை வைகரியாய் விருத்திப்படுவதாகிய தன்னதிகாரமாத்திரைக்கே அழிகின்ற தொழிலை உண்டாக்கும்,—தன்னைக் கண்டால் – (தவவிசேடத்தால்) அதனை (உள்ளபடி) காணப்பெற்றால்,—புருடன் – அப் புருடனுக்கு,—நீக்கம் இல் அறிவு ஆனந்தம் முதன்மை நித்தியம் உடைத்தாய்– நீங்காத பேரறிவும் ஆனந்தமுஞ் சுதந்திரமும் நித்தியத்துவமு முடையதாய்,—போக்கொடு வரவு இலைப்பும் விகாரமும் இன்று – நாசோற்பத்தியான் வரும் இலைப்பும் விகாரமுறுதலும் இல்லையாம்,—ஆம்–(சுத்தமாயாபுவனத்தின்கண்ணதாகிய அபரமுத்திப் பெரும்போகம்) உண்டாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. பரசரீரத்தினுள்ளாக நாதமாத்திரையாய் விளங்குதலும் ஞானமாத்திரைக்கேதுவாதலுமாகிய இலக்கணத்தையுடையது சூக்குமவாக்கு. அதுதான், பைசந்தி மத்திமை வைகரியாய் விருத்திப்படுவதாகிய தன்னதிகாரமாத்திரைக்கேயழிவுண்டாக, தான் சுத்தமாயாரூபமாய்க் கேடின்றி நிலை பெறுவதாம். தவவிசேடத்தால் அதனை உள்ளபடி காணப் பெறுவார்க்குச் சுத்தமாயாபுவனத்தின்கண்ணதாகிய அபரமுத்திப் பெரும்போக முண்டாமென்பதாம்.

ஆய் இன்றி ஆக்கிடுமெனவும், கண்டால் உடைத்தாய் இன்றுமெனவும், வேறு வேறு வினைமுடிபு செய்க.

அழிவினை வினைத்தொகை.

புருடனென்பது ''காலமூலகம்'' (தொல்காப்பியம். சொல்லதிகாரம். கிளவியாக்கம், சூ – 57.) என் னுஞ் சூத்திரவிதியால் அஃறிணைச் சொல்லாயிற்று.

சுத்தமாயா புவனத்தின்கண்ணதாகிய அபரமுத்திப் பெரும் போகத்தினியல்பிதுவென அதன்பெருமை கூறுவார், 'நீக்கமிலறி வானந்த முதன்மை நித்தியமுடைத்தாய்ப் போக்கொடு வரவினைப் பும் விகாரமும் புருடனின்றும்' என்றார்.

தானழிவதின்றித் தன்னதிகாரமாத்திரைக்கு அழிவினைச் செய்யுமெனவே, அது சிவதத்துவம்போலச் சுத்தமாயையின் வேறன்மை பெற்றும்.

தன்னை உள்ளபடி காண்டலாவது, அதிசூக்குமவாக்கினை வியஞ்சக வோசைபற்றித் தூலமாகக் காணும் நம்மனோர் போலன்றி நம்மனோர்க்குக் குடம் படமுதலியன காட்சிப்புலனாறு போலத் தன்னியல்பா னினிது விளங்கக் காண்டல்.

கண்டாலெனவே அங்ஙனம் காண்டல் அரிதென்பது பெற்றும்.

இவ்வாறன்றி, ''ஒவிட வந்து ஞான முதிப்பதோர் ஞான முண்டேற் – சேவுயர் கொடியினன்றன் சேவடி சேரலாம்'' என்பதே ஈண்டைக்கும் பொருளாகக் கொண்டு, கண்டாலாக்கிடுமெனக் கூட்டித் தமக்கு வேண்டியவாறே யுரைப்பாருமுளர். அவர், அழிவதின்றி யழிவினை யாக்கிடு மென்னுந் தொடர் அவ்வாறு

பொருள்படுதற் கேலாமையும், கூறியது கூறலாதலும், உண்மை யதிகாரத்திற் கூறப்படும் பாமுத்தி யிலக்கணம் ஈண்டு வகுத்துக் கூறுதற்கோ நியையின்மையும் கோக்கிலர். (23)

நிகழ்ந்திடும் வாக்கு நான்கு நிவிர்த்தாதி கலையைப் பற்றித்
திகழ்ந்திடு மஞ்ச தாகச் செயல்பரி ணம மன்று
புகழ்ந்திடும் விருத்தி யாகும் படங்குடி லானைப் போல
மிகழ்ந்திடும் பிரம மன்று மாமாயை யென்பர் நல்லோர்.

சுப் — பதவுரை

நிகழ்ந்திடும் நான்கு வாக்கும் – இங்ஙனம் கூறிப் போந்த வைகரி முதலிய நான்கு வாக்குக்களும்,—நிவிர்த்தி ஆதி கலையைப்பற்றி – நிவிர்த்தி முதலிய பஞ்சகலை களைப் பற்றுக்கோடாகச் சார்ந்து.—அஞ்சதாகத் திகழ்ந் திடும் – ஐவகைப்பட்டுச் சிவதத்துவ முதலிய பஞ்ச தத்து வங்களின் இருக்கும்,—படம் குடில் ஆனைப்போல – படமே குடிலாயினைப்போல,—புகழ்ந்திடும் விருத்தி ஆகும் –(இவை சுத்தமாயையி னின்றும்) புகழத்தக்க விருத்தி யாய்க் காரியப்படுவன வன்றி,—செயல்பரிணமம் அன்று– (அசுத்தமாயாகாரியம்போலப்) பரிணமமாய்க் காரிய ப் படுவன வல்ல,–மகிழ்ந்திடும் பிரமம்(என்பர்)–(இவ்வாக்குக் களைச் சத்தப்பிரமவாதிகள்) மகிழத்தக்க பிரமமென்பர்,— நல்லோர் – சைவசித்தாந்திகள்.—(பிரமம்) அன்று மாமா யை (ஆகும்) என்பர் – பிரமமாத லின்றிப் (பிரமத்திற்கு நேரே பரிக்கிரகசத்தி யெனப்படுஞ்) சுத்தமாயா ரூபமாகு மென்று கூறுவர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இங்ஙனங் கூறிப்போந்த வைகரிமுதலிய நான்கு வாக்குக்களும் நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகள் பற்றுக் கோடாகச் சார்ந்து ஐவகைப்பட்டுச் சிவதத்துவ முதலிய பஞ்சதத்துவங்களி னிருக்கும். இவை சுத்தமாயையினின் றும் விருத்தியாய்க் காரியப்படுவனவல்ல. இவ்வாக்குக்களைச் சத்தப்பிரமவாதிகள் பிரமமென்பர்; சைவசித்தாந்திகள் பிரமமாதலின்றிப் பிரமத்திற்கு நேரே பரிக்கிரகசத்தியெனப் படுஞ் சுத்தமாயாரூபமாமென்று கூறுவரென்பதாம்.

காரியப்பாட்டிற்கு எள்ளாஞய குப்பைபோலப் புத்தர்சமணர் கூறுஞ் சமுதாயவாதமும், நூலாஞகிய வாடைபோலத் தார்க்கிகர் கூறும் ஆரம்பவாதமும், பேய்த்தேராஞய நீர்த்தோற்றம்போல மாயாவாதிகள் கூறும் விவர்த்தனவாதமுஞ் சித்தாந்தத்திற் கேலாமையின், அவற்றை யொழித்து, சித்தாந்தத்திற் கொள்ளப் படும் பரிணமம் விருத்தி யென்னு மிரண்டினுள் இச்செயல் யாதோவென்னும் ஐயநீக்குதற் பொருட்டுப் பரிணமமன்று விருத்தியாகுமென்றும் அற்றேற் பிரமம்போலு மென்னுங் கடாவை யாசங்கித்துப் பிரமமன்று மாமாயையா மென்றுங் கூறினர்.

அன்றி யென்னும் வினையெச்சத்திகரம் உகரமாய்த் திரிந்தது.

ஆகுமென்றது பின்னருஞ் சென்றியையும்.

பரிணமம் விருத்தியென்னு மிரண்டினுள், மலகன்மங்களோடு விரவாத சுத்தமாயையின் காரியம் படங் குடிலாஞற் போல விருத்தி யெனவே, எனைப் பரிணமம் அவற்றோடு விரவிய அசுத்த மாயையின் காரியத்திற்கென்பதூஉம் பெறப்பட்டது.

பாலினுண்டாகிய தயிர்போல முழுவதும் பரிணமித்தலும், நெய்யினுண்டாகிய புழுப்போல ஏகதேசத்திற் பரிணமித்தலு மெனப் பரிணமமிருவகைப்படும்; அவற்றுட்பின்னையதே அசுத்த மாயையிற் கொள்ளப்படுவதாமென்க.

விருத்தியென்பதஞ் சூக்குமபரிணமமென்ப.

நிவிர்த்தாதிகலையைப்பற்றித் திகழ்ந்திடுமஞ்சதாக என்பதற்கு, நிவிர்த்திகலையுட்பட்ட புவனவாசிகட்குத் தூலதமமாயும், பிரதிட்டையுட்பட்ட புவனவாசிகட்குத் தூலதரமாயும், வித்தையுட்பட்ட புவனவாசிகட்குத் தூலமாயும், சாந்தியுட்பட்ட புவனவாசிகட்குச் சூக்குமமாயும், சாந்தியதீதகலையுட்பட்ட புவனவாசிகட்குச் சூக்கும தரமாயும், இங்ஙனம் நால்வகைவாக்கும் ஐவகைப்படுமென்றதைத் தலுமொன்று. (24)

வித்தைகள் வித்தை யீசர் சதாசிவ ரென்றி வர்க்கு
வைத்துறும் பதங்கள் வன்னம் புவனங்கண் மந்தி ரங்க
டத்துவஞ் சரீரம் போகங் கரணங்க டாமெ லாமு
மூய்த்திடும் வயிந்த வந்தா னுபாதான மாகி நின்றே.

சுப் — பதவுரை

வயிந்தவந்தான்—சுத்தமாயை (மூதற்காரணமாவது),—வித்தைகள்—(ஈண்டுக் கூறிப்போந்த வாக்கு மாத்திரைக் கேயன்றி) மந்திரேசுரர், —வித்தையீசர்—மந்திரமகேசுரர்,—சதாசிவர் என்ற இவர்க்கு—அனுசதாசிவர்முதலிய அபர முத்தர்க்கு,—வைத்துறும் பதங்கள்—வேண்டப்படும் பதங்களும்,—வன்னம்—அக்கரங்களும்,—புவனங்கள்—புவனங்களும்,—மந்திரங்கள்—மந்திரங்களும்,—தத்துவம்—தத்துவங்களும்,—சரீரம்—சரீரங்களும்,—போகம்—

போகங்களும்,—கரணங்கள் தாம் எலாமும்,—கரணங்களுமாகிய சுத்தாத்துவாக்க ளெவற்றினுக்கும்,–உபாதானமாகிநின்றே உய்த்திடும் – முதற்காரணமாய் நின்று செலுத்தும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *சுத்தமாயை முதற்காரணமாவது ஈண்டுக் கூறிப் போந்த வாக்குமாத்திரைக்கேயன்று; மந்திரேசுரர், மந்திரமயேசுரர், அணுசதாசிவர் முதலிய வபரமுத்தர்க்கு வேண்டப்படுஞ் சுத்தாத்துவாக்க ளெவற்றினுக்கும் முதற்காரணமாமென்பதாம்.*

வித்துவை வைந்தவமென்றது பகுதிப்பொருள் விகுதி பெற்றது. (25)

மூவகை யணுக்க ளுக்கு முறைமையின் வித்து ஞான
மேவின தில்லை யாகில் விளங்கிய ஞான மின்று
மோவிட வித்து ஞான முதிப்பதோர் ஞான முண்டேற்
சேவுயர் கொடியி னன்றன் சேவடி சேர லாமே.

சுப — பதவுரை

வித்து ஞானம் – (மேற்கூறிப்போந்த) வாக்குகள் சவிகற்ப ஞானத்திற் கேதுவாதலால்,—மூவகை அணுக்களுக்கும் – (ஈண்டுக்கூறிய சுத்தப் பிரபஞ்சம்போல வித்தைகள் வித்தையீசர் சதாசிவர் மாத்திரைக்கேயன்றி) விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்க்கும்,—முறைமையின் மேவினது இல்லையாகில் – (வியஞ்சக வேறுபாடு பற்றி) முறையே தூலமாயுந் தூலதரமாயுந் தூலதமமாயும்

பொருந்தி யறிதல் இல்லையாயின்,—விளங்கிய ஞானம் இன்றும் – விளங்கிய ஞானம் இல்லையாம் (ஆகலின் ஒரு தலையான் வேண்டப்படும்),—விந்து ஞானம் ஓவிட—சவி கற்ப ஞானத்திற்கேதுவாகிய அவ்வாக்குக்கள் (பரமபந்த மாதலிற் றன்னின் வேறுகக் காணப்பட்டு) நீங்க,—ஓர் ஞானம் உதிப்பது உண்டேல் – (அவைக்கு மேலாகிய தோர்) பேரறிவு (ஒருவனுக்கு) விளங்குமாயின்,—சே உயர் கொடியி னன்றன் சேவடி சேரலாமே—(அவன் அப் பொழுதே) இடபக்கொடியையுயர்த்த சிவபிரான் றிருவடி யாகிய பரமுத்தியைத் தலைப்படுவன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து மேற்கூறிப்போந்த வாக்குக்கள் சவிகற்பஞானத் துக்கேதுவாகலால், ஈண்டுக் கூறியது சுத்தப்பிரபஞ்சம்போல வித்தைகள் வித்தையீசர் சதாசிவர் மாத்திரைக்கேயன்றி, விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்க்கும் ஒருதலையான் வேண்டப்படும் சவிகற்பஞானத்திற்கேதுவாகிய அவ்வாக்குக் கள் தன்னின் வேறுகக் காணப்பட்டு நீங்க அதற்கு மேலாகிய பேரறிவு ஒருவனுக்கு விளங்குமாயின், அவனப்பொழுதே பரமுத்தியைத் தலைப்படுவனென்பதாம்.

எனவே இவ்வாக்குக்கள் பரமபந்தமென்பதாயிற்று.

முறைமையின் மேவுதலாவது, வித்தைகள் வித்தையீசர் முதலியோர்க்குப்போலன்றிச் சகலர் முதலிய மூவர்க்கும் வியஞ் சக வேறுபாடு பற்றி முறையே தூலதமமாயுந் தூலதரமாயுந் தூல மாயும் பொருந்துதல்.

ஞானத்திற்கேதுவாகிய வாக்கை ஞானமென்றுபசரித்தார்.

பிரளயாகலர் விஞ்ஞானகலர்க்குத் தனுவில்லையென மயங்கிக் கூறுவாருமுளர். அஃது ஆகமவசனங்களோடு முரணுதலின் அவை சித்தாந்த மென்றெழுதிக.

இவை யேழுசெய்யுளானுஞ் சுத்தமாயையிற் றோன்றுங் காரியங்களும் அவற்றதியல்பும் வகுத்துக் கூறப்பட்டன. (26)

அருவினி லுருவக் தோன்றி யங்காங்கி பாவ மாகி
யுருவினி லுருவ மாயே யுதித்திடு முலக மெல்லாம்
பெருகிடுஞ் சுருங்கும் பேதா பேதமோ டபேத மாகு
மொருவனே யெல்லா மாகி யல்லவா யுடனு மாவன்.

சுப் — பதவுரை

அருவினில் உருவம் தோன்றி - சூக்குமமாகிய மாயையினின்றுந் தூலமாகிய கலாதியும் அவற்றினுந் தூலமாகிய மூலப்பகுதியும் அதனினுந் தூலங்களாகிய குணதத்துவ முதலாயினவுந் தோன்றி,—உருவினில் உருவமாயே உதித்திடும் – அத்தூலங்களினின்றுந் தோன்றுங் காரியம் அவற்றினுந் தூலமேயாம்,—உலக மெல்லாம் அங்காங்கி பாவம் ஆகி,—(இவ்வாறே) காரியப் பிரபஞ்சமெல்லாந் (தோன்றி) நில நீர் தீ வளி விசும்பு ஆண் பெண் அலியென்றத் தொடக்கத் தவயவப் பகுப்புடையனவாய்,—பெருகிடும் சுருங்கும் – வளர்ந்துந் தேய்ந்தும் பரிணமித்து வரும் (இத்தன்மையவாகிய காரிய காரணங்கட்குத் தம்முட் பெரும்பாலும் வேற்றுமை கூறுநையாயிகர் முதலியோர் மதம் அடாது மற்றென்னெனில்),—பேதா பேத மோடு அபேதமாகும் – பரிணமமாதலை நோக்கிப் பேதா பேதமாம் சற்காரியமாதலை நோக்கி அபேதமாம்,—ஒருவனே – மேற்சிவனவன்றன் சந்நிதி தன்னினின் றே

தோன்றுமென்பதனாற் பெறப்பட்ட நிமித்தகாரணனாகிய முதல்வனே,—எல்லாமாகி – (அநந்தர் சீகண்டர் முகத்தான் அவற்றைக் காரியப்படுத்துங்காற்) கலப்பினால் ஒன்றாகியும்,—அல்லவாய்-பொருண்மையால் வேறாகியும்,—உடனும் ஆவன் – செலுத்துதலால் உடனாகியு நிற்பன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. சூக்குமமாகிய மாயையினின்றும், தூலமாகிய கலாதியும், அவற்றினுந் தூலமாகிய மூலப்பகுதியும், அதனினுந் தூலங்களாகிய குணதத்துவ முதலாயினவுந் தோன்றும். அத்தூலங்களினின்றுந் தோன்றுங் காரியம் அவற்றினுந் தூலமேயாம். இவ்வாறே காரியப் பிரபஞ்சமெல்லாந் தோன்றி, நிலம் நீர் தீ வளி விசும்பு ஆண் பெண் அலி என்றற்றொடக்கத்து அவயவப்பகுப்புடையனவாய், வளர்ந்துந் தேய்ந்தும் பரிணமித்துவரும். இத்தன்மையவாகிய காரிய காரணங்கட்குத் தம்மூட் பெரும்பாலும் வேற்றுமை கூறும் நையாயிகர் முதலியோர் மதம் அடாது மற்றென்னெனில், பரிணமமாதலே நோக்கிப் பேதாபேதமாம், சற்காரியமாதலே நோக்கி அபேதமாம். மேற் சிவனவன்றன் சந்நிதி தன்னினின்றே தோன்றுமென்பதனாற் பெறப்பட்ட நிமித்த காரணனாகிய முதல்வன், அநந்தர் சீகண்டர் முகத்தான் அவற்றைக் காரியப்படுத்துங்கால், கலப்பினாலொன்றாயும் பொருண்மையால் வேறாயுஞ் செலுத்துதலான் உடனாயு நிற்பனென்பதாம்.

எல்லாமென்றதனாற் சுத்தமாயாவிருத்தியினும் அவ்வாறு நிற்பனென்பது பெறுதும்.

உருவினிலுருவாய்த் தோன்றுதனப்பிரித்தமையின், ஏகாரம் பிரிநிலேக்கண் வந்தது.

ஒருவனே யென்னும் ஏகாரந் தேற்றம்.

அங்காங்கிபாவமாகிப் பெருகிடுஞ் சுருங்குமெனக் கூட்டுக.

அநிர்வசனத்தின் உலகந் தோன்று மென்னும் மாயாவாதத்தை மறுப்பார், அருவினி லுருவந் தோன்றி யென்றும், அவயவமே பொருளாய்த் தோன்றுவதன்றி அவயவி யென்ப தொன்றில்லே யென்னுஞ் சமுதாயவாதத்தை மறுப்பார், அங்காங்கிபாவமாகி யென்றும், நில முதலிய உருவப்பொருளினின்றுங் கந்தகுண முதலிய அருவந் தோன்று மென்னும் ஆரம்பவாதத்தை மறுப்பார், உருவினிலுருவமாயே யுதித்திடுமென்றுங் கூறினர்.

பெருகிடுஞ் சுருங்குமென்றதும் பெருக்கஞ் சுருக்கம்பற்றி ஒரு பொருட்கே பெரும்பாலும் வேற்றுமை கூறும் அவ்வாதத்தை மறுத்தற் பொருட்டு. பிறவுமன்ன.

இதனுனே மாயை மூந்திடுமாகமாதி முக்குணமாதிமூலந் தந்திடும் என்றதன்கட் படுமியல்பு தொகுத்துக் கூறப்பட்டது.(27)

அருவுரு வீனு தாகும் விகாரமு மவிகா ரத்தின்
வருவது மில்லே யென்னின் வான்வளி யாதி பூதந்
தருவது தன்னின் மேக சலனசத் தங்க ளோடு
வருவமின் னுருமே றெல்லா முதித்திடு முணர்ந்துகொள்ளே.

சுப் — பதவுரை

அரு உரு ஈனுதாகும் — அருவமாகிய மாயை உருவமாகிய பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்காது,—அவிகாரத்தின்

விகாரமும் வருவதும் இல்லை என்னின் – அவிகார மாகிய மாயையினின்றும் விகாரமாகிய பிரபஞ்சந் தோன் றுவதுமில்லை எனில் (அறியாது கூறினாய்),—வான் – (உன்மதத்தில் அருவும் அவிகாரியுமாகிய) ஆகாயத்தினின் றும்,—வளி ஆதி பூதம் தருவது – (உருவமும் விகாரியு மாகிய) வாயு முதலிய பூதங்கள் முறையே தோன்றும் (அதுவேயுமன்றி),—தன்னின் – அவ்வாகாயத்தினின் றும்,—மேக சலன சத்தங்களோடும் உருவ மின் உரு மேறு எல்லாம் உதித்திடும் – பல முகில்களும் முகிலின் கட் பல விகாரங்களும் பல வோசைகளும் உருவமாகிய பல மின்னுக்களும் பல விடிகளும் இன்னும் இவைபோல் வன பலவும் தோன்று மாகலான்,—உணர்ந்து கொள்ளே –(அதனை மறந்து அங்ஙனங் கூறுதல் உனக்கே வழுவாய் முடியு மென்பதனை) அறிவாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அருவெனவே அவிகாரமாதலும் பெறப்பட்ட மையின், அப்பெற்றித்தாகிய மாயையினின்றும் உருவமாய் விகாரியுமாகிய பிரபஞ்சந் தோன்றுமென்றல் பொருந்தா தெனில்,—அறியாது கூறினாய்; உன்மதத்தில் அருவமும் அவிகாரியுமாகிய ஆகாயத்தினின்றும் உருவமும் விகாரியு மாகிய வாயுமுதலிய பூதங்கண் முறையே தோன்றும்; அது வேயுமன்றி அவ்வாகாயத்தினின்றும் பல முகில்களும் முகி லின்கட் பல விகாரங்களும் பலவோசைகளும் பலமின்களும் பலவிடிகளும் இன்னுமிவைபோல்வன பலவுந் தோன்றுமா கலான், அதனை மறந்து அங்ஙனங் கூறுதல் உனக்கே வழு வாய் முடியுமென்பதாம்.

சற்காரியங்கொண்ட எமக்காயின் அது வழுவன்றென்பது கருத்து.

இதனானே மாயாவாதிமதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து மேலது வலியுறுத்தப்பட்டது.

இவ்வாறு, உதிப்பது மீறு மென்பது முதல் அருவுரு வென்ப தீ ரு கி ய இருபத்தேழுசெய்யுளானும், முதற்செய்யுளின் ''ஒரு வனேடொருத்தி யொன்றென் றுரைத்திடு முலக மெல்லாம் வரு முறை வந்து நின்று போவது மாதலாலே தருபவனொருவன் வேண்டும்'' என்ற முதற்கூற்றை, முறையே அவ்வவர்மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தி, இனி ''ஈறுமாகியாதிமுத்த சித்துருவாய் மன்னிநின்று மருவுவித்திடு'' மென்னும் இரண்டாங் கூற்றை அவ்வாறு வலியுறுத்துவான் றொடக்கினர். (28)

இரண்டாமதிகரணம்

மண்ணினிற் கடாதி யெல்லாம் வருவது குலால னீலை
பெண்ணிய வுருவ மெல்லா மியற்றுவ னீசன் றானுங்
கண்ணுகா ரியங்க ளெல்லாங் காரண மதனிற் காண்பன்
பண்ணுவ தெங்கே நின்றிங் கென்றிடிற் பகரக் கேணீ.

சுப் — பதவுரை

குலாலனாலே – குயவனால்,—மண்ணினிற் க டா தி எல்லாம் வருவது – மண்ணிற் குடமுதலிய காரியமனைத்தும் வருதல்போல,—ஈசன்றானும்–ஆரியனும்,—எண்ணிய

உருவம் எல்லாம் இயற்றுவன் (ஆயின்) – கருதிய அகில மெல்லாவற்றையும் ஆக்குவானையின்,—இங்குக் கண்ணுகாரியங்கள் எல்லாம் – (குயவன்ரூனும்) ஈண்டுக் கருதுகின்ற கடாதி காரியங்களே யெல்லாம்,—காரண மதனின் (நின்று) காண்டன் – (அவற்றிற்குக் காரணமாகிய) அந்நிலத்தினின்றுஞ் செய்வன் (எனக் கண்டோமே அதுபோல),—எங்கேநின்று பண்ணுவது–(ஆரியன்) யாங்ஙனநின்று செய்வன், என்றிடிற் பகர நீ கேள் – என்ரூல் (யாம் அதற்கு விடை) கூற நீ கேட்பாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இங்ஙனம் அகிலமெல்லாம் ஆரியன் குலாலன் போனின்று ஆக்குவையின், குலாலன் கடாதி காரியங்களே யெல்லாம் அவற்றிற்குக் காரணமாகிய அந்நிலத்தினின்றுஞ் செய்யக் கண்டோமே ஆரியன் யாங்ஙனநின்று செட்வனென் பதாம்

'மண்ணினிற் கடாதியெல்லாம் வருவது குலாலனேல் எண்ணிய வுருவமெல்லா மியற்றுவ னீசன்ரூனும்' என்றது அனுவாதம்.

ஆயினென்பது சொல்லெச்சம்.

காரணமென்றது நிலமென்னுந் துணையாய் நின்றது.

காண்டல் செய்தல்.

நின்றென்பது மேலுங் கூட்டப்பட்டது.

இது வினு; இதற்குப் பிறரெல்லாங் கூறியதுகூறலென்னும் வழுப்படவுரைத்தார். (29)

சிலமோ வுலகம் போலத் தெரிப்பரி தத னினிற்குங்
கோலமு மறிவா ரில்லை யாயினுங் கூறக் கேணீ
ஞாலமே ழினையுந் தந்து நிறுத்திப்பின் ஞசம் பண்ணுங்
காலமே போலக் கொண்ணீ நிலைசெயல் கடவுட் கண்ணே.

சுப — பதவுரை

சிலமோ உலகம் போலத் தெரிப்ப அரிது அதனால் – (அவன்) தன்மையே உலகம்போலன்றி வாக்குமனாதீத கோசரமாகலான்,—நிற்கும் கோலமும் அறிவார் இல்லை –(அவன்) நிற்கு நிலையும் அவ்வியல்பிற்றேயாம்,—ஆயினும் கூற நீ கேள் – அங்ஙனமாயினும் ஒருவாற்றான் உவமையில் வைத்து உனக்குக் காட்டுதும் நீ அறிவாயாக,—ஞாலம் ஏழினையும் தந்து நிறுத்திப் பின் நாசம் பண்ணும் காலமே போல – உலகமெல்லாவற்றையுந் தோற்றுவித்து நிறுத்திப் பின்னர் அழித்துக் காரியப் படுத்துங் காலம் (அவற்றைக் காரியப்படுத்துங்கால் எல்லாப் பொருட்குந் தானதாரமாய்த் தனக்கோராதாரமின்றி நிற்றல்) போல,– கடவுட் கண்ணே – சிவசத்தி,—நிலைசெயல் நீகொள் – (நிராதாரமாய்) நின்றே (காரியப்படுத்து முறைமையை) நீ உணர்ந்துகொள்க என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அவன் உலகம்போலன்றி வாக்குமனாதீத கோசரப்பொருளாகலான், அவனிற்கு நிலையும் அவ்வியல்பிற்றேயாம். அங்ஙனமாயினும், ஒருவாற்றான் உவமையில் வைத்து உனக்குக் காட்டுதும். உலகமெல்லாங் காலத்தாற் காரியப்படு

மென்பது எல்லோர்க்குமொக்குமன்றே, அக்காலம் அவற்றைக் காரியப்படுத்துங்கால் எல்லாப்பொருட்குந் தானுதார மாய்த் தனக்கோராதாரமின்றி நிற்றல்போல, சிவசத்தியும் நிராதாரமாய் நின்றே காரியப்படுத்துமுறைமை உணர்ந்து கொள்கவென்பதாம்.

சீலம் தன்மை.

ஓகாரம் சிறப்பின்கண் வந்தது.

கோலமுமென்ற வும்மை இறந்ததுதழீயிற்று.

ஞாலமே மழினேயுமென்றது உபலக்கணம்.

கண் அறிவு; ஒற்றுமைபற்றிச் சிவசத்திமேல் வைத்துக் கூறினர்; உயர்திணைக்கட் சிறுபான்மை ளகாரந் திரிதல், மக்கட்பண்பு முதலியன போல இலேசாற் கொள்க.

நிலேசெயலென்பது நிற்றலென்னும் பொருட்டாய் இரண்டாவது தொக்கு நின்றது.

அற்றேன், ஞாலமேழினேயுந் தந்து நிறுத்திப் பின் நாசம் பண்ணுங் காலம், அத்தொழில் வேறுபாடுபற்றிச் செல்காலம் நிகழ் காலம் எதிர்காலங் கணம் இலவர் துடி யென்றற் றொடக்கத்தன வாய்ப் பலவகை யவத்தைப்படுமென்பது சித்தாந்த நூற்றுணிபாகலின், அதுபோல உலகத்திற் காதாரமாய்நின்று செய்யு முதல் வனும் அவ்வத்தொழில்பற்றிப் பலவகை யவத்தைப்பட்டுத் தடக் குறுவன் போலுமெனின், அதற்கன்றே வருஞ் செய்யு ளெழுந்த தென்பது. (30)

கற்றதூற் பொருளுஞ் சொல்லுங் கருத்தினி லடங்கித் தோன்றும், பெற்றியுஞ் சாக்கி ராதி யுயிரினிற் பிறந்தொடுக்க, முற்றதும் போல வெல்லா வுலகமு முதித்தொடுங்கப், பற்றெறு பற்ற தின்றி நின்றனன் பரனு மன்றே.

சுப — பதவுரை

சாக்கிராதி – (கரணங்களானகிய) சாக்கிரமுதலிய அவத்தைகள்,—உயிரினில் ஒடுக்கம் உற்றுப் பிறந்ததும் போல – ஆன்மாவின் ஒடுங்கித் தோன்றும்வழி (ஆன்மாவும் அவத்தைப்பட்டுத் துடக்குறுதல்) போல,—பரனும் –முதல்வன்,—எல்லா உலகமும் உதித்து ஒடுங்க – எல்லாவுலகமுந் தன்பால் ஒடுங்கி உதிப்ப,–பற்றெறு (நின்றனன்) –தானும் அதுபற்றி இலயம் போகம் அதிகார மென்னும் அவத்தைப்பட்டுத்) துடக்குறுவோனகியும்,—கற்றநூற் பொருளும் சொல்லும் கருத்தினில் அடங்கி – கற்றநூற்பொருளுஞ் சொல்லும் (வாதனரூபமாய்ப் புத்தி தத்துவத்தை ஒட்டி நின்று) ஆன்மபூதத்தின்கண் ஒடுங்கி,—தோன்றும் பெற்றியும் (போல) – தோன்றும்வழி அவ்வான்மபோதம் அதுபற்றித் துடக்குறுதவாறுபோல,—பற்றது இன்றி நின்றனன் அன்றே – (ஆண்டுத்) துடக்குறுதலின்றியே நின்றனன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து காரணங்களானகிய சாக்கிரமுதலிய வவத்தைகள் ஆன்மாவினெடுங்கித் தோன்றும்வழி ஆன்மாவும் அவத்தைப்பட்டுத் துடக்குறுதல்போல, முதல்வன் எல்லாவுலகமுந் தன்பாலொடுங்கி யுதிப்பத் தானுமதுபற்றி இலயம்

போகம் அதிகாரமென்னும் அவத்தைப்பட்டுத் துடக்குறு வோனெகியும், கற்றறிற்பொருளுஞ் சொல்லும் வாதனைரூப மாய்ப் புத்திதத்துவத்தை யொட்டிநின்று ஆன்மபோதத்தின் கண் ஒடுங்கித் தோன்றும்வழி அவ்வான்மபோதம் அதுபற் றித் துடக்குறுதலாறுபோல, ஆண்டுத் துடக்குறுதலின் றியே நின்றனனென்பதாம்.

எதிர்கிரணிறையாகக்கொள்க.

ஈண்டுக் கருத்தென்றது உயிருணர்வை.

பற்று முதனிலைத் தொழிற்பெயர்.

இவை மூன்று செய்யுளானும் மன்னிநின்றேமருவிடு மென்றது தடைவிடைகளாற் றெரித்துணர்த்தப்பட்டது.

இயைபுபற்றி இதனை முன்வைத்தார்.

இனி ஆறுசெய்யுளான் ஈறுமாகிமருவிடு மென்றதனை வலியுறுத்துகின்றார். (31)

உயிரவை யொடுங்கிப் பின்னு முதிப்பதெ னரன்பா லென்னிற், செயிருறு மலத்தி னுகுஞ் சிதைந்ததே தென்னிற் சித்தத், தயர்வொழி காரி யங்க ளழியுங்கா ரணங்கி டக்கும், பயிறரு காரி யம்பின் பண்டுபோற் பண்ணு மீசன்.

சுப் — பதவுரை

ஈசன் – ஈருகியோனெல், —ஒடுங்கிய உயிர் அ வை – ஈறெய்திய உயிரோடுங் கூடியவுலகம், —பின்னும் (ஈறெய் தியவாறே ஒழியாது) மீளவும், —அரன்பால் உதிப்பது என் எனில் – அவன்பானின்று தோன்றுதல் எற்றுக்கெனின், —

செயிர்உறு மலத்தின் ஆகும் – குற்றம் பொருந்திய மலபரி பாகம் வருதற் பொருட்டுத் தோன்றும்,—சிதைந்தது ஏது என்னில்–(அற்றேன் மீளவுந் தோன்றற்பாலது முன் அழியாது நிலை பெறவே அமையும் அவ்வாறன்றி) அழி தல் எற்றுக்கெனின்,— சித்தத்து அயர்வு ஒழி(யக்)காரியங் கள் அழியும் – உயிரின் இளைப்பொழித்தற் பொருட்டு (முன் இளைப்பினைச்செய்து நின்ற) காரியங்கள் அழியுமா கலான்,—பயில் தரு காரணம் கிடக்கும் காரியம் – (அழிந் தவழியும் முன்வினைத்தொடர்ச்சிக்கு உரியனவாய்த் தத் தங்) காரணங்களிற் (கன்மத்தோடு) பயின்று கிடக்கின்ற அக்காரியங்களை,—பின் பண்டு போற் பண்ணும் – பின் னர் ஒடுங்கியவாறே உதிப்பச்செய்வன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *ஈருகியோனை லீறெய்திய வுலகம் ஈறெய்திய வாறே யொழியாது மீளவுமதன்பாணின்று தோன்றுதல் எற் றுக்கெனின்,— மலபரிபாகம் வரும்பொருட்டுத் தோன்றும். அற்றேன், மீளவுந் தோன்றற்பாலது முன்னழியாது நிலை பெறவேயமையும், அவ்வாறன்றி அழிதலெற்றுக்கெனின்,— உயிரி னிளைப்பு ஒழித்தற்பொருட்டு. முன் இளைப்பினைச் செய்துகின்ற காரியங்கள் அழியுமாகலான், அழிந்தவழியும் முன்னை வினைத்தொடர்ச்சிக்குரியனவாய்த் தத்தங் காரணங் களிற் கன்மத்தோடு பயின்று கிடக்கின்ற அக்காரியங்களை ஒடுங்கியவாறே உதிக்கச் செய்வ னென்பதாம்.*

''ஆக்க மவ்வவர் கன்மெல்லாங் கழித்திடல்'' என முன்னர்க் கூறுவாராகலின், அ தற்குரிய வியைபு ஈண்டேயுணர்த்துவார் காரணங்கிடக்கும் பயிறருகாரியம் பின் பண்டுபோற்பண்ணுமீசன் என்றார்.

உயிரவை உயிரோடுங் கூடிய உலகமென்றவாறு.

ஏதென்பது எற்றுக்கென்னும் பொருட்டாய் நின்றது.

சித்தத்தயர்வு அறிவின்கண்ணதாகிய இளைப்பு.

ஒழியவென்னும் வினையெச்சத்தகரம் விகாரத்தாற்றொக்கது.

கிடக்குமென்பது பெயரெச்சம்.

இதற்குப் பிறரெல்லாஞ் சற்காரியத்தியல்பின் வைத்துக் கூறியது கூறலென்னும் வழுப்படவுரைத்தார். (32)

தோற்றுவித் தளித்துப் பின்னுந் துடைத்தரு டொழில் கண் மூன்றும், போற்றவே யுடைய னீசன் புகுந்தது விகார மென்னிற், சாற்றிய கதிரோ னிற்கத் தாமரை யலரு நாந் தங், காற்றிடுங் கனலி நீருங் கரந்திடுங் காசி னிக்கே.

சுப் — பதவுரை

ஈசன்—ஒரு கடவுள்,—தோற்றுவித்து அளித்துப் பின்னும் துடைத்தருள் மூன்று தொழில்களும் – தோன்றச் செய்து நிலைப்பித்துப் பின்னர் இறுதியைச் செய்விக்கின்ற இம்முத்தொழில்களும்,—போற்றவே உடையன் – இடையறாது செய்வனையின்,—புகுந்தது விகாரம் என்னின் – பாரமெய்தி விகாரியாவான்போலு மென்பராயின் (அஃதில்லையென்பது),—சாற்றிய கதிரோன் நிற்க – (யாவராலும்) புகழப்பெற்ற ஞாயிறு சந்நிதிக்கண்,—காந்தம் கனலிக் காற்றிடும் – சூரியகாந்தக்கல்லின் கண்ணே நெருப்பைக் காலச்செய்யும்,—தாமரை அலரும் – தாமரையை அலரச்

செய்யும்,—காசினிக்கே நீரும் கரந்திடும் – பூமியின்கண் ணே நீரைச் சுவறச்செய்யும் (இங்ஙனந் தனக்குரிய முத் தொழில்செய்தும் அதுபற்றி விகார மெய்தாமையின் வைத்து அறியப்படும்) என்க.

சிவ - பொழிப்புரை

எ-து ஒருகடவுண் மூன்று தொழிலிடைபருது செய் வா ஞயிற் பாரமெய்தி விகாரியாவான்போ லு மென்பார்க்கு அலீதில்லையென்பது, தனக்குரிய முத்தொழில் செய்தமது பற்றி விகாரமெய்தாத ஞாயிற்றின் வைத்து அறியப்படு மென்பதாம்.

காசினிக்கென்பது உருபுமயக்கம்.

இவை யிரண்டு செய்யுளானும் புத்தர்மதம்பற்றி யாசங்கித்தும் பரிகரித்து ஈறுமாறி மருவுவித்திடுமாறு வலியுறுத்தப்பட்டது. (33)

உரைத்தவித் தொழில்கண் மூன்று மூவருக் குலக மோத வரைத்தொரு வனுக்கேயாக்கிவைத்ததிங்கென்னை யென்னின் விரைக்கம லத்தோன் மாலு மேவலான் மேவி னோர்கள் புரைத்ததி கார சத்தி புண்ணிய நண்ண லாலே.

சுப — பதவுரை

உரைத்த இம்மூன்று தொழில்களும் – கூறிப்போந்த முத்தொழில்களும்,—மூவருக்கு உலகம் ஓத – மூன்று கடவுளருக்கும் உரியதென உலகஞ் சொல்லா நிற்பவும்,— இங்கு வரைத்து ஒருவனுக்கே ஆக்கி வைத்தது என்னை என்னின் – ஈண்டு வரையறுத்து ஒரு கடவுளுக்கே முத் தொழிலுஞ் செய்யுஞ் சுதந்திர முண்டென்பது என்னை

யெனின்,—விரைக்கமலத்தோன் மாலும் – வாசனை பொருந்திய கமலத்தின்கணுறைகின்ற அயன் மால் இருவரும்.—புண்ணியம் நண்ணலாலே – பொருந்திய புண்ணிய விசேடத்தால்,—புரைத்த அதிகார சத்தி – (முதல்வனுடைய) உயர்ந்த அதிகார சத்தியை,—ஏவலான் மேவினோர்கள் – அவனதேவலாற் பெற்றுடையர் (அன்றி அத்தொழிற்கு சுதந்திரரல்லராகலான் முத்தொழிலுஞ் செய்தற்குரிய சுதந்திரம் அவ்வீறுமாகியொருவனுக்கே உண்டு) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து அயன்மாலிருவரும், புண்ணிய விசேடத்தான் முதல்வனுடைய அதிகாரசத்தி அவனதேவலாற் பெற்றுடையரன்றி அத்தொழிற்குச் சுதந்திரரல்லராகலான், முத்தொழிலுஞ் செய்தற்குரிய சுதந்திர மீறுமாகியொருவனுக்கே யுண்டென்பதாம்.

கல்வினைக்கண் – வாணுளின்மாலாயயனாகி'' (போற்றிப்பஃறொடை: 71 – 72.) என்றூர் புடைநூலாசிரியரும்.

வேதம் புராணம் இதிகாச முதலியவற்றிற்கும் இதுவே கருத்தென்பது சதுர்வேததாற்பரிய சங்கிரகமுதலியவற்றுட் காண்க.

வரைந்து வரைத்தென வலித்தது.

புரைத்த வென்னும் பெயரெச்சத்தகரம் விகாரத்தாற் றொக்கது; புரைத்தல் உயர்தல்.

இறுதியாங் காலந் தன்னி லொருவனே யிருவ ருந்தம்
முறுதியி னின்ரு ரென்னி னிறுதிதா னுண்டா காதா
மறுதியி லரனே யெல்லா மழித்தலா லவரை யின்னும்
பெறுதுநா மாக்க நோக்கம் பேரதி கரணத் தாலே.

சுப — பதவுரை

இறுதியாங் காலந் தன்னின் – சங்கார காலத்தில்.— இருவரும் தம் உறுதியின் நின்ரூர் என்னின் – ஏனையிரு வருந் தத்தம் ஆற்றலோடு நிலைபெறுவாராயின்,—இறுதி தான் உண்டாகாதாம் – உலகஞ் சங்காரமாதலின்மை யான் (அக்காலத்தே அவ்விருவரும் உளரென்பது பெற் ரும்),—அறுதியில் அரனே எல்லாம் அழித்தலால் – (அல் லதூஉம்) வேரொருவராலுஞ் சங்கரிக்கப்படாத சங்காரக் கடவு ளெனப்படுவோன் (சிலவற்றை யொழித்துச் சங் கரிப்பானல்ல னுகலானும்) முழுதுஞ் சங்கரித்தவழி,— ஒருவனே – அவ்வொருவனே (எஞ்சி நிற்றல் பெறப்படுத லானும்),—பேரதிக்ரணத்தாலே – (ஒடுங்கிய வுலகங்கட் குப்) பெரியதோ ராதாரம் (அவனே) ஆகலானும்,— இன் னும் ஆக்கம் நோக்கம் அவனல் நாம் பெறுதும் – (ஒடுங் கிய வுலகத்தை) மீளத் தோற்றுதலும் நிறுத்துதலுஞ் செய்தலை அவனுலே நாம் பெற்றுக்கொள்ளுதும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. சங்காரகாலத்தில் ஏனையிருவருந் தத்தமாற்ற லோடு நிலைபெறுவாராயின் உலகஞ் சங்காரமாதலின்மை யான் அக்காலத்து அவ்விருவரும் உளரல்லரென்பது பெற் ரும். அல்லதூஉம், சங்காரக்கடவுளெனப்படுவோன் சில

வற்றை யொழித்துச் சங்கரிப்பானல்லன்; அப்பெற்றியனகிய சங்காரக் கடவுளே வேறு சங்கரிப்பாரில்லையாகலான், முழுவதுஞ் சங்கரித்தவழி அவனெருவனே எஞ்சி நிற்றல் பெறப்படுதலானும் ஒடுங்கிய வுலகத்தை மீளத் தோற்றுதற்கும் நிறுத்துதற்கும் அவனே யுரியனென்பது தானே போதரு மென்பதாம்.

அறுதியி லானென்னும் பெயரடையானும் ஓரேதுக்கூறிய வாறு.

இன்னும் மீளவும்.

ஆதாரம் அதிகரண மென்பன ஒருபொருட்கிளவி; போதி காணமென விசேடித்தார், முதற்காரணமும் அதிகரணமாதலுண்மையின்.

இவை யிரண்டு செய்யுளானும், பௌராணிகர் மதம்பற்றி நிகழுங்கடாவை முறையே ஆகமவளவைபற்றியும் பொருந்துமாறு பற்றியும் பரிகரித்து, மேலது வலியுறுத்தப்பட்டது.

இதனுனே பாஞ்சராத்திரிமதம் இரணியகருப்பமதங்களைப் பரிகரித்தவாறு மாயிற்று. (35)

சொன்னவித் தொழில்க ளென்ன காரணந்தோற்றவென்னின்
முன்னவன் விளையாட் டென்று மொழிதலு மாமு யிர்க்கு
மன்னிய புத்தி முத்தி வழங்கவு மருளான் முன்னே
துன்னிய மலங்க ளெல்லாந் துடைப்பதுஞ் சொல்ல லாமே.

சுப் — பதவுரை

முன்னவன் – சங்காரக்கடவுள்,—சொன்ன இத் தொழில்கள் – இங்ஙனங் கூறிப்போந்த தோற்றமுதலிய

தொழில்களை,—தோற்றக் காரணம் என்ன என்னில் - செய்தற்குக் காரணம் யாதெனின்,—விளையாட்டு என்று மொழிதலுமாம் – "காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி" (திருவாசகம், திருவெம்பாவை. செ – 12 ஷிஷி செ – 11.) என்பது முதலிய திருவாக்குக்கள் பற்றி அத் தொழிற்குக் காரணம் விளையாட்டென்றலுமாம் "ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டி னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்" என்பது முதலிய திருவாக்குக்கள்பற்றி விளையாட்டென்றது ஐங்கலப் பாரஞ்சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டென்பதுபோல அத்துணை எளிதிற் செய்யப்படுதலை நோக்கியேயாகலின் (அக்கருத்தும்),— உயிர்க்கு – உயிர்கட்கு.—மூன்னை மன்னிய புத்தி முத்தி – பெத்த காலத்துப் பொருந்திய சுவர்க்காதி போகமும் பதமுத்திகளும்,–துன்னிய மலங்கள் எல்லாம் அருளால் துடைப்பதும் – (முத்திகாலத்துச்) செறிந்த மும்மலங்களும் அருளானைக்குதலாகிய வீடு பேறும்.—வழங்கவும் – கொடுத்தற்பயத்ததுமாம்,—(அருளாற்) சொல்லலாமே – (அவ்விரண்டுந் தம்முண் முரணுமையான்) உயிர்கண்மேற் சென்ற கருணையால் ஆகியதே ஆண்டைக்குக் காரணமெனச் சொல்லலாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. சங்காரக்கடவுள் இங்ஙனம் கூறிப்போந்த தோற்றமுதலிய தொழில்களைச் செய்தற்குக் காரணம் யாதெனில்,—"காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி" என்பது முதலிய திருவாக்குக்கள் பற்றி, ஒருசாரார், அத் தொழிற்குக் காரணம் விளையாடற் கருத்தென்பர்; ஒரு சாரார், "ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டி னுய்வார்

களுப்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்" என்பது முதலிய திருவாக்குக்கள் பற்றி, விளையாட்டென்றது, ஐங்கலப் பாரஞ் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டென்பது போல அத்துணையெளிதிற் செயப்படுதலே நோக்கியேயாகலின், அக்கருத்தும் உயிர்கட்குப் பெத்தகாலத்துச் சுவர்க்காதிபோகமும் பதமுத்திகளும் முத்திகாலத்து வீடுபேறுங் கொடுத்தற்பயத்ததென்பர். அவ்விரண்டுந் தம்முண் முரணுமையான் உயிர்கண்மேற் சென்ற கருணையே ஆண்டைக்குக் காரணமென்பதாம்.

மொழிதலு மென்னுமும்மை எதிரது தழீஇயது.

ஏனைய எண்ணும்மை.

வழங்கவுமென்னு மும்மையோடு இயைதற்கேற்பத் தடைப்பதாகவுமென ஆக்கச்சொல் வருவித்துரைக்க.

அருளாலென்பதனை மேலுங் கூட்டுக.

காரண மென்னையெனக் கடாயினுர்க்குப் பயன்கூறி விடுத்தல் செப்புவழுவாம்போலுமெனின்,—ஆகாது; அருளாலெனவே வழங்கவுந் தடைப்பவும் வைத்த அவ்வருள் காரணமென்பது தாற்பரியமாகலின், அற்றுயினும். அனுக்கிரகமொழித்தொழிந்த தொழில்களெல்லாம் பிறப்பிறப்புக்களிற் படுத்துத் துயருறுத்துவனவாகலின் அவற்றைச் செய்வது அருளாமா றியாங்ஙனமெனின், அதற்கன்றே வருஞ் செய்யுளெழுந்ததென்பது. (36)

அழிப்பினைப் பாற்ற லாக்க மவ்வவர் கன்ம மெல்லாங்
கழித்திட னுகரச் செய்தல் காப்பது கன்ம வொப்பிற்
றெழித்திடன் மலங்க ளெல்லா மறைப்பருள் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடி னருளே யெல்லாம்.

சுப் — பதவுரை

அழிப்பு – ஒடுக்கமாவது,—இளைப்பாற்றல் – இளைப் பாற்றலும்,—ஆக்கம் – தோற்றமாவது,—அவ்வவர் கன் மம் எல்லாம் கழித்திடல் – அவரவர் கன்மமுழுதுங் கழியு முகத்தான் (மலபாகம் வரச்செய்தலும்),—காப்பது – நிலையாவது,—நுகரச்செய்தல் – (கன்மங் கழியுமாறு அதனை) நுகர்வித்தலும்,—மறைப்பு – மறைப்பாவது,— கன்ம ஒப்பின் மலங்களெல்லாம் தெழித்திடல் - கன்ம ஒப்பினை (வருவித்து) மலங்களை முதிர்வித்தலும்,—அருள்– அருளாவது,—பந்தம் வீடு – பந்தம் விடுவித்தலும் ஆகிய (உறுதிப்பயத்தனவாகலான்),—பார்த்திடின் எல்லாச் செய்தி தானும் அருளே – ஆராயும்வழி ஐந்தொழிலும் அருட்செயலேயாகலின்,—பழிப்பு ஒழி - (இவற்றுட் சில மறத்தொழிலேபோலுமெனப்) பழித்தலை ஒழிவாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. ஒடுக்கந் தோற்றம் நிலை மறைப்பு அருளென் னும் ஐந்தும், முறையே, இளைப்பாற்றலும், கன்மங் கழியு முகத்தான் மலபாகம் வரச்செய்தலும், கன்மங் கழியுமாறு அதனை நுகர்வித்தலும், கன்மவொப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தலும், பந்தம் விடுவித்தலுமாகிய உறுதிப்பயத்தன வாகலான், ஐந்தொழிலுமருட்செயலேயாகலின், இவற்றுட் சில மறத்தொழிலேபோலுமெனப் பழித்தலையொழிவாயாக வென்பதாம்.

மேன் முத்தொழில் கூறி ஈண் டைந்தொழி லென்றன் மேலவாம் பிறவெனின்,—ஆகாது; மறைப்பையுமருளையும் நிலையிறு

திகளினடக்கி ஆண்டு முத்தொழிலென்றார், தம்முள் வேற்றுமை யுடைமைபற்றி ஈண்டைந்தொழிலென்று ராகலின்.

இவை இரண்டு செய்யுளானும், சங்காரக்கடவுள் செய்யுந் தொழில் மறமாய் முடியுமென்னும் காத்திகர் மதமும், வீண்டொழிலென்னும், மாயாவாதிகள் மதமும், தன் பொருட்டென்னும் பரிணமவாதிகள் மதமும் பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து, மேலது நிறப்பிக்கப்பட்டது.

இங்ஙனம் ஆறு செய்யுளான் 'ஈறுமாகி மருவிடு' மென்றதனை வலியுறுத்தி, இனி 'அநாதிமுத்த சித்துரு'வென்றதனை இருபத்திரண்டு செய்யுளான் வலியுறுத்துகின்றார். (37)

அருவமோ வுருவா ரூப மானதோ வன்றி நின்ற
வுருவமோ வுரைக்குங்கர்த்தாவடிவெனக்குணர்த்திங்கென்னி
னருவமு முருவா ரூப மானது மன்றி நின்ற
வுருவமு மூன்றுஞ் சொன்ன வொருவனுக் குள்ள வாமே

சுப் — பதவுரை

உரைக்கும் கர்த்தா வடிவு - இங்ஙனங் கூறிப்போந்த (ஐந்தொழில் செய்யு) முதல்வனுக்கு (வடிவம் இன்றியமையாமையின் அவ்) வடிவமாவது,—அருவமோ உருவாரூபம் ஆனதோ அன்றி நின்ற உருவமோ – அருவாகிய வடிவமோ அருவுருவமாகிய வடிவமோ அவ்விரண்டுமின்றிநின்ற உருவாகிய வடிவமோ (இம்மூன்றனுள் இவ்வடிவமென),—இங்கு எனக்கு உணர்த்து என்னின் - இவ்விடத்தே எனக்கு உணர்த்தவேண்டுமெனின்,—சொன்ன ஒருவனுக்கு - (அநாதி முத்த சித்துருவென

மேற்) கூறப்பட்ட ஒருவனுக்கு,—அருவமும் உருவா ரூபம் ஆனதும் அன்றி உருவமும் நின்ற மூன்றும் – அருவும் அருவுருவும் அன்றி உருவுமென நின்ற மூன்று வடிவமும்,—உள்ளவாமே – உள்ளனவாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. ஐந்தொழில் செய்யுமுதல்வனுக்கு, வடிவம் இன்றியமையாமையின், அவ்வடிவமாவது அருவமுதலிய மூன்றனுள் யாதெனின், அவனுக்கு அம்மூன்றும் வடிவேயா மென்பதாம்.

இது சொற்பொருட்பின் வருநிலை.

உள்ளவென்றது அன்பெறுத வ்கரவீற்றுப் பலவறிசொல்.

சொன்னவொருவன் அநாதிமுத்த சித்துருவென மேற்கூறப் பட்ட ஒருவன்.

இதனானே அநாதிமுத்த சித்துருவாகிய சங்காரக்கடவுளுக்குத் தடத்த வடிவ மிலையென்பது கூறப்பட்டது.

இனி இம்மூன்றற்கும் பிறர் கூறுங் குற்றங்களைப் பரிகரிப்பா ராய், உருவத்தின்கட் கூறுங் குற்றம் பரிகரிக்கவே ஏனையவும் பரிகரிக்கப்பட்டனவாமென்னுங் கருத்தான், உருவத்தின்கணைசங் கித்துப் பரிகரிக்கின்றார், (38)

நண்ணிடு முருவ மென்னி னமக்குள வுருவம் போலப்
பண்ணிட வொருவன் வேண்டு மிச்சையேற் பலரு மிச்சை
கண்ணிய வுருவங் கொள்ளேம் யாம்பெருங் கடவு டானு
மெண்ணிய யோக சித்தர் போலுரு விசைப்பன் காணே.

வித்தக யோக சித்தர் வேண்டுருக் கொள்ளு மாபோ
லுத்தமன் கொள்வ னென்னி னவர்களி லொருவ னுவ
னத்தகை யவர்க ளெல்லா மாக்குவ தருளா லாங்கு
வைத்தது மாயை யென்னின் வடிவெலா மாயை யாமே.

சுப் — பதவுரை

உருவம் நண்ணிடும் என்னின் – (முதல்வனுக்கு) உருவமுண்டென்னின்,—உருவம் நமக்கு உளபோல – (உருவமெல்லாம் ஒரு பெற்றியவாகலின்) உருவமுடைய நம்மனோர்க்கு உளதாகிய (பரதந்திரம்) போல,—பண்ணிட ஒருவன் வேண்டும்–(முதல்வனுக்கும்) உருவமுண்டாதற்கு ஒரு கருத்தா (உண்டெனப்பட்டுப் பரதந்திரமுளதாதல்) வேண்டும். அஃதன்றி,—இச்சையேல் – (முதல்வன் நினைந்த வடிவங்கொள்ளுதல்) சுதந்திரமென்னின்,–பலரும் இச்சை – (முதல்வனுக்கு உளதாகிய) சுதந்திரம் நம்மனோர் பலர்க்கும் உளதாதல் வேண்டும்,—யாம் கண்ணிய உருவம் கொள்ளேம் – (இனி) நம்மனோர்க்குக் கருதிய வடிவங்கள் எடுத்தன் முடியாது,—பெருங் கடவுள் தானும் – முதல்வன்றானும்,—யோகசித்தர்போல் எண்ணிய உரு இசைப்பன் காணே – யோகசித்தர்போலத் தான் கருதியதொருவடிவத்தை எடுத்துக்கொள்ளுவன்,—வித்தக யோகசித்தர் வேண்டு உருக் கொள்ளுமாபோல் – (அங்ஙனம்) சதுரப்பாடுடைய யோகசித்தர்கள் வேண்டும் வடிவங்கொள்ளு முறைபோல,—உத்தமன் கொள்வன் என்னின் அவர்களில் ஒருவனுவன் – முதல்வன் நினைந்த வடிவங்கொள்வனுயின் அவ்வியோகசித்தர்களில் ஒருவனுய் முடியுமெனின்,—அத்தகை அவர்கள் எல்லாம் ஆக்குவது அருளால் – அத்தன்மையுடைய யோகசித்தர் முதலியோர் வேண்டுருக்கொள்வது முதல்வன் அருளானன்றி

முடியாமையானும்,—ஆங்குவைத்தது மாயை என்னின்—(அன்றியும்) அவ்விடத்தே யோகசித்தர்கட்கு உண்டாகிய உருவம் மாயாகாரியமாய் முடிதலானும் (நம்மனோர்க்கும் யோகிகட்கும் உளதாகிய வேறுபாடு பெரிதாயினுற்போல யோகி கண் முதலிய நம்மனோர்க்கும் முதல்வனுக்கும் உளதாகிய வேறுபாடு பெரிதாகலின் ஒப்புமை கூறுதல் பொருந்தாது) என்னின்,—வடிவெலாம் மாயை யாமே—(அங்ஙனமாயினும்) உருவடிவெல்லாம் (ஒருபெற்றிய வாகிய) மாயாகாரியமேயாகலின் (உருவத்தின் வேற்றுமையில் வழி அவ்வேறு பாட்டாற் போந்த பயன் என்னை) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து முதல்வனுக்கு உருவமுண்டென்னின், உருவமெல்லாம் ஒருபெற்றியவாகலின், உருவமுடைய நம்மனோர்க்குளதாகிய பரதந்திரம் முதல்வனுக்குமுளதாதல்வேண்டும்; அஃதன்றியின் முதல்வனுக்குளதாகிய சுதந்திரம் நம்மனோர்க்குமுளதாதல்வேண்டும். இனி, நம்மனோர்க்கும் யோகிகட்கும் உளதாகிய வேறுபாடு பெரிதாயினுற்போல, யோகிகண்முதலிய நம்மனோர்க்கும் முதல்வனுக்குமுளதாகிய வேறுபாடு பெரிதாகலின், ஒப்புமை கூறுதல் பொருந்தாதெனின்,—அங்ஙனமாயினும், உருவடிவெல்லாம் ஒருபெற்றியவாகலின் உருவத்தின் வேற்றுமையில்வழி அவ்வேறுபட்டாற் போந்த பயன் என்னையென்பதாம்.

வித்தகயோகசித்தர் வேண்டுருக்கொள்ளுமாபோலுத்தமன் கொள்வனென்னின் என்றது அனுவாதஞ் செய்துகொண்டது.

இவை இரண்டு செய்யுளுந் தழை.

இனி விடை. (39–40)

மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவ மாகு
மாயவா ணவம கன்ற வறிவொடு தொழிலே யார்க்கு
நாயக னெல்லா ஞானத் தொழின்முத னண்ண லாலே
காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னல்.

சுப் — பதவுரை

(நீ அங்ஙனங் கூறுதல் பொருந்தாது அங்கிகளது ஏற்றத்தாழ்வால் அங்கங்களும் ஏற்றத்தாழ்வுடையன வன்றித் தம்முள் ஒப்பனவல்ல. அற்றேல், அவ்வேற்றத் தாழ்வுகள் என்னையெனிற் கூறுதும்; யோகிகள் நம்மனோ ரெல்லாரும் மலத்தைப்பற்றிக்கிடக்கும் பசுக்கள்; அது வன்றியும், ஒன்றையே அறிதலும் ஒன்றையே செய்தலும் ஒன்றிலே முதன்மையாதலுமாகிய அற்ப ஞானத்தொழின் முதலுடையராம்: முதல்வனுவான்)ஆய ஆணவம் அகன்ற-பந்திப்பதாய அவ்வாணமல நீங்கிய, — அறிவெறு தொழிலே ஆர்க்கும் நாயகன் – அறிவிலே தங்கி நின்று உணர்த்துந் தொழிலுடையோனுகிய பசுபதி (அதுவு மன்றி),—எல்லா ஞானத்தொழில் முதல் நண்ணலாலே – எல்லாவறிவும் எல்லாத்தொழிலும் எல்லா முதன்மையு முடையவன் (இங்ஙனம் அங்கிகட்குத் தம்முள் ஏற்றத் தாழ்வுகள் உண்மையின் அதற்கேற்ப),-மலத்தைப்பற்றி-மலத்தைப்பற்றிய பசுக்களுக்கு,—வருவதோர் மாயை தான் வடிவமாகும் – அம்மலத்தோ டியைபுடைத்தாய் (ஏகதேசவறிவைச்செய்யு) மாயையுருவமாம்,—காயமோ மாயை அன்று – (அநாதிமுத்தசித்துருவாகிய பசுபதிக்கு) வடிவம் (ஏகதேசத்தைச்செய்யு) மாயையன்றுதலின்,— சத்தி தன்னற் காண்பது (ஆகும்) – (மலநீங்கியவுயிர்க்கு வியாபகவறிவைச் செய்யுஞ்) சத்தியுருவமாதலே

அமைவுடைமையின் (அங்கங்களினுந் தம்முள் ஏற்றத் தாழ்வுண்மை இனிது விளங்குதலான் அதனையறியாது "இச்சையேற் பலருமிச்சை" என்றும் "மாயையென்னில் வடிவெலாமாயையாகும்" என்றுங் கூறுதல் அடாது) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. நீயங்ஙனம் கூறுதல் பொருந்தாது. அங்கிகளது ஏற்றத்தாழ்வால் அங்கங்களும் ஏற்றத்தாழ்வுடையனவன்றித் தம்முளொப்பனவல்ல. அற்றேல், அவ்வேற்றத்தாழ்வுகளென்னையெனிற் கூறுதும்: யோகிகள் நம்மனோரெல்லாரும் மலத்தைப்பற்றிக் கிடக்கும் பசுக்கள்; அதுவன்றியும் ஒன்றையேயறிதலும் ஒன்றையே செய்தலும் ஒன்றிலே முதன்மையாதலுமாகிய அற்புஞானத்தொழின் முதலுடையராம். முதல்வனுவான் அம்மலநீங்கியவறிவிற் றங்கிநின்று உணர்த்துவோனுகிய பசுபதி; அதுவுமன்றி எல்லாவறிவும் எல்லாத்தொழிலும் எல்லா முதன்மையுமுடையன். இங்ஙனம் அங்கிகட்குத் தம்முள் ஏற்றத்தாழ்வுண்மையின், அதற்கேற்ப மலத்தைப்பற்றிய பசுக்களுக்கு அதனேடியைபுடைத்தாய் ஏகதேசவறிவைச்செய்யு மாயையுருவமும், அநாதிமுத்த சித்துருவாகிய பசுபதிக்கு மலநீங்கியவுயிர்க்கு வியாபகவறிவைச் செய்யுஞ் சத்தியுருவமுமாதலே அமைவுடைமையின், அங்கங்களினுந் தம்முள் ஏற்றத்தாழ்வுண்மை இனிது விளங்குதலான், அதனையறியாது "இச்சையேற் பலருமிச்சை" யென்றும், "மாயையென்னில் வடிவெலாமாயையாகு" மென்றுங் கூறுதல் அடாதென்பதாம்.

தானென்பது அனுவகித்தலேயுணர்த்தி நின்றது.

பற்றியென்பது பெயர்; ''ஐந்தவித்தானற்றல்'' (திருக்குறள், நீத்தார்பெருமை, செ - 5.) என்புழிப்போலப் பற்றிக்கென்னுகான் கனுருபு விரித்துரைக்க.

காயகனெல்லா ஞானத்தொழின்முத ணண்ணலா லெனவே, உயிர்கள் ஒரு ஞானத் தொழின்முதலே ணண்ணுவனவென்பது பெற்றும்.

அகறல் நீங்குதல்.

ஆர்தல் பொருந்துதல்; அஃது உபசாரத்தாற் காரியத்தின்மே னின்றது.

ஓகாரம் சிறப்பின்கண் வந்தது.

ஏகதேசவறிவைச் செய்தல் ஏகதேசப்படுந் தகுதியுடைய பொருட்கேயன்றி ஏனையதற்குரித்தன்று, வியாபகவறிவைச் செய்தல் வியாபகப்பொருட்கேயன்றி ஏகதேசப்படுந் தகுதியுடையதற்கு உரித்தன்றுகலான், ஏகதேசத்திலறியும் பசுக்களுக்கு ஏகதேசப் படுந் தகுதியுடைய மாயையே உருவமாயிற்று; வியாபகமாயறியும் பசுபதிக்கு அதுபோ லேகதேசப்படுந் தகுதியில்லாத சத்தியே உருவாயிற்றெனக்கொள்க.

இனி, ஆணவமகன்ற வறிவொடு தொழிலையார்க்கும் என்ப தற்கு, வியாபக ஞானத் தொழில்களே ஆணவமலந் தடுக்குமென் றுரைப்பாருமுளர்; முன்னும் பின்னும் பொருளியைபு படுதற் கேலாது நின்றுவற்றுமாகலின் அஃதுரையன்மையறிக. (41)

சத்தியே வடிவென் றுலுந் தான்பரி ணாம மாகு
நித்தமோ வழியு மத்தா னின்மல னருவே யென்னி
லத்துவா மார்க்கத் தூள்ளா னலனிவ னருமை தன்னைப்
புத்திதா னுடையை போல விருந்தனே புகலக் கேணீ.

சுப் — பதவுரை

சத்தியே வடிவு என்றுலுந் தான் - (அங்ஙனஞ்) சத்தியே வடிவாயினும்,—பரிணமமாகும் நித்தமோ அழியும் – (உருவமெல்லாங் கண்டிதப்பொருளாகலிற்) பரிணமித்து அழிவெய்தும்,—அத்தால் - அது (சிவசத்திக்குத் தகாமை)யால்,—நின்மலன் அருவே என்னில் – அநாதி முத்த சித்துருவாகிய முதல்வன் (முதற்கட் கூறப்படும்) அருவப் பொருளாதன் மாத்திரையென்றலே அமைவுடைத்தெனின், — அத்துவா மார்க்கத்து உள்ளான் அலன் – ஆறத்துவாவையுங் கடந்த பொருளே (அவற்றோடொப்பவைத்து அங்ஙனங்கூறுதல் பொருந்தாது ஆயினும்),—இவன் அருமை தன்னை -- இவன்றன்மையை,—புத்திதான் உடையைபோல இருந்தனை – புத்தியுடையாய் போல விருந்தவனே,—புகல நீ கேள் – கூறுவாம் நீ கேட்பாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அங்ஙனமாயினும், உருவமெல்லாங் கண்டிதப் பொருளாகலிற் பரிணமித்தழிவெய்தும்அது சிவசத்திக்குத் தகாமையால் அநாதி முத்த சித்துருவாகிய முதல்வன் முதற்கட் கூறப்படும் அருவப்பொருளாதன் மாத்திரையென்றலே அமைவுடைத்தெனின்,—ஆறத்துவாவையுங் கடந்த பொருளே அவற்றோடொப்பவைத்து அங்ஙனங் கூறுதல் பொருந்தாதென்பதாம்.

புத்திதானுடையை போல விருந்தனை யென்பது, இழித்தற் கண் வந்த குறிப்புமொழி.

அன்றென்பது பாடமாயின், அத்துவாமார்க்கத் துள்ளா னென்பது அத்துவாமார்க்கத்துள் ஒன்றுக் கருதப்படானென் றுரைத்து, அன்றிவனென்பது அவ்வத்துவாக்கள தியல்போடு மாறுபட்ட இவனென வினைத்தொகையாக வைத்துரைக்க.

அன்றுதல் அப்பொருட்டாதல் "அன்றினர் புரமெரித் தார்க்கு" (பூசலார்காயனூர்புராணம், செ - 1) என்பதனுனுமறிக.

அற்றேன், முதல்வன் அருவமேயெனில் அத்துவாக்களில் ஒருவனுய் முடியுமென்றல் யாங்ஙனமெனின், அது வருஞ்செய்யுளிற் கூறப்படும். (42)

உலகினிற் பதார்த்த மெல்லா முருவமோ டருவ மாகி
நிலவிடு மொன்றொன் றுகா நின்றவர் நிலையே போல
வலகிலா வறிவன் றானு மருவமே யென்னி லாய்ந்து
குலவிய பதார்த்தத் தொன்றுய்க் கூடுவன் குறித்தி டாயே.

சுப் — பதவுரை

உலகினிற் பதார்த்தமெல்லாம் – உலகத்திற் (காணப் பட்ட) பொருள்களெல்லாம்,—உருவமோடு அருவம் ஆகி நிலவிடும் – உருவமும் அருவமும் அருவுருவமுமாய்க் காணப்பட்டு நிற்கும்,—ஒன்று ஒன்று ஆகா – (ஆகாய முதலிய அருவப்பொருள் உருவத்தினியல்புடைய தாகாது; நிலமுதலியவுருவப்பொருள் அருவத்தினியல்புடையதாகாது ; சந்திரன் முதலிய அருவுருவப்பொருள் அருவியல்பே யுடையது மாகாது உருவியல்பே யுடையது மாகாது இங்ஙனம் ஆறத்துவாவுட்பட்ட பொருள்க ளெல்லாம்) ஒன்று பிறிதொன்றி னியல்புடைய தாகமாட்டாதாக லான்,—அலகு இலா அறிவன் அருவமே என்னில் –

அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனே அருவப்பொருளே யெனின்.—நின்றதானும் அந்நிலையே போல – நிலைபெற்ற அவனும் அப்பொருள்கள்போல (மாட்டாமையுடைய னெனப்பட்டு).—குலவிய பதார்த்தத்து ஒன்றுய்க் கூடுவன் – பொருந்திய அவற்றுளொருவனுய் முடியும் (ஆகலான்),—ஆய்ந்து குறித்திடாயே – (நீ இதனை) ஆராய்ந்தறிவாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. ஆகாயமுதலிய அருவப்பொருள் உருவத்தினியல்புடைய தாகாது; நிலமுதலிய உருவப்பொருள் அருவத்தினியல்புடையதாகாது; சந்திரன்முதலிய அருவுருவப்பொருள் அருவியல்பே யுடையதுமாகாது, உருவியல்பே யுடையதுமாகாது. இங்ஙனம் ஆறத்துவாவுட்பட்ட பொருள்களெல்லாம் ஒன்று பிறிதொன்றினியல்புடையதாக மாட்டாது. ஆகலான், அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனே அருவப்பொருளேயெனின், அவனு மவைபோல மாட்டாமையுடையனெனப்பட்டு அவற்றுளொருவனுய் முடியுமென்பதாம்.

உருவமோடருவ மென்பதனை இரட்டுறமொழிந் துரைத்துக் கொள்க.

* ஒன்றினியல்பு ஒன்றுடைத்தாகா தென்பார், ஒன்றிறன் றுகாவென வுபசரித்தார்; இவ்வாறுரையாதார்க்குச் சற்காரியவாத முரணுமாறுணர்க.

இதனுனே நின்மலன் அருவேயென்பார் மதமும் அருவுருவே யென்பார் மதமும் மறுக்கப்பட்டவாறுமாயிற்று.

அஃதங்ஙனமாக, சத்தியே வடிவென்றல், பரிணமமாகவே அநித்தமுமாய் விடுமெனக் கூறிய குற்றத்திற்குப் பரிகாரமென்னையெனின், அதுவருஞ் செய்யுளிற் பெறப்படும். (43)

பந்தமும் வீடு மாய பதபதார்த் தங்க ளல்லா
னந்தமு மாதி யில்லா னளப்பில ரைத லாலே
யெந்தைதா னின்ன னென்று மின்னதா மின்ன தாகி
வந்திடா னென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே.

சுப் — பதவுரை

எந்தை தான்–(அநாதிமுத்த சித்துருவாகிய)எந்தை,–பந்தமும் வீடும் ஆய பத பதார்த்தங்கள் அல்லான் – கட்டு வீடென்னும் பதங்களையுடைய (பசுபாச) பதார்த்தங்களது இயல்புடையனல்லனாகலானும்,—ஆதி அந்தமும் இல்லான் – எழுவாயும் இறுவாயும் இலனாகலானும்,—அளப்பிலன் ஆதலாலே–(அவையிலனாகவே) அளவைகட்கெட்டாதவனாகலானும்,—இன்னன் என்றும் – (அருவம் உருவம் அருவுருவமென்னு முக்கூற்றுள்) இன்னவனென்றுதான்,—இன்னது ஆம் இன்னது ஆகி வந்திடான் என்றும் சொல்ல - (அம்முக்கூறும் படும் விருத்தி பரிணமம் விவர்த்தனம் என்பவற்றுள்) ஒன்றிற்படுவன் படானென்று தான் கூறுதற்கு,—வழக்கொடு மாற்றம் இன்றே – ஓராசங்கையும் இல்லை (ஆசங்கையின்மையின்) அதற்கு மறுமொழியாகிய பரிகாரமும் இல்லை என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அநாதிமுத்த சித்துருவாகிய எந்தை, கட்டு வீடென்னும் பதங்களையுடைய பசுபாச பதார்த்தங்களது*

இயல்புடையனல்லனாகலானும், எழுவாயிறுவாய் இலனாகலானும், அவையிலனாகவே அளவைகட் கெட்டாமையானும், அருவம் உருவம் அருவுருவமென்னும் முக்கூற்றுள் இன்னனுவனென்றுதான் அம்முக்கூறும்படும் விருத்தி பரிணமம் விவர்த்தனமென்பவற்றுள் ஒன்றிற் படுவன் படானென்றுதான் கூறுதற்கோராசங்கையுமில்லை, ஆசங்கையின்மையின் அதற்கு மறுமொழியாகிய பரிகாரமுமில்லையென்பதாம்.

அருவமெல்லாம் உருவமாய்த் தோன்றுதலும் உருவமெல்லாம் அருவமாயழிதலுமொருதலை; அதுபற்றி அவை அளவைகட்கு வரம்பு படுவனவுமாம்.

அகாதிமுத்தசித்துருவாகிய எந்தைக்குத் தோற்றக்கேடுகளின்மையானும், அவையின்மையின் அளவைகட்கு வரம்புபடாமையானும், அவன் முக்கூற்றுளொரு கூற்றினும் வைத்து மொழியப்படானென்பார் 'அந்தமுமாதியில்லானளப்பில ஞதலாலே யெந்தை தானின்னனென்று சொல்ல வழக்கொடு மாற்றமின்றே' என்றும், கட்டு வீடுகளிலனுகலின் எவ்வாறுமாமென்பார் 'பந்தமும்வீடுமாய பதபதார்த்தங்களல்லான் இன்னதா மின்னதாகி வந்திடானென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்றமின்றே' யென்றும் கூறினர்.

எதிர்நிரனிறை.

''எந்தையாரவ ரெவ்வகையார்கொலோ'' (திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் தேவாரம், திருப்பாசுரம் செ - 3) என்றருளிச்செய்த பாசுரமுமிது.

பதபதார்த்தமென்றது குழைக்காதுபோல் இரண்டாம் வேற்றுமைத்தொகை; பதம் அவ்வச்செவ்வி.

ஆதியுமென்னுமும்மை விகாரத்தாற்றொக்கது.

அற்றேல், உருவமுண்டாயெல்லாம் விகாரப்படுதலும் ஏக தேசமாதலுந் தொடக்குறுதலு முடையராதல் காணப்பட்டமையின், முதல்வனுக்கு உருவமுண்டாயின் அவையுமுளவெனப்பட்டு வழுவாமாலெனின், அவ்வாசங்கை நீக்குதற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. (44)

குறித்ததொன் றாக மாட்டாக் குறைவில தாலு
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பான் மேவுத லிலாமை யானு
நிறுத்திடு நினைந்த மேனி நின்மல னருளி னாலே.

சுப — பதவுரை

குறித்தது ஒன்று ஆகமாட்டாக் குறைவு இலன் ஆதலானும் – (விகாரப்படுதற்குக் காரணமாகிய) பரதந்திரமிலனாகலானும்.—நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமையானும் – முறைமைப்பட (ஏகதேசமாதற்குக் காரணமாகிய) சிற்றுணர்வு சிறுசெயல்களின்றிய நிலைமையனாகலானும்,—விருப்பொடு வெறுப்புத் தன்பால் மேவுதல் இலாமையானும் – (துடக்குறுதற்குக் காரணமாகிய) விருப்பு வெறுப்புக்கள் தன்மாட்டுப் பொருந்துதலில்லாதவனாகலானும், — நின்மலன் அருளினாலே – (அவ்வுபாதிகளிலனாகவே அக்குற்றங்களுக்குச் சேயனாய்) அநாதி முத்தசித்துருவாகிய முதல்வன் (மல நீங்கிய அறிவிலே தங்கி நின்று உணர்த்தும்) அருளுடையனாய் நிற்றலின்,—நினைந்த மேனி நிறுத்திடும் – தான் நினைந்த தொரு திருமேனியைத் தனதாகக் கொண்டருளுவன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. விகாரப்படுதற்குக் காரணம் பரதந்திரமும் ஏகதேசமாதற்குக் காரணஞ் சிற்றுணர்வு சிறுசெயல்களும், தொடக்குறுதற்குக் காரணம் விருப்புவெறுப்புக்களுமேயாகலின், அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன்மாட்டு அவ்வு பாதிகளின்மையின், அக்குற்றங்களுக்குச் சேயனுகிய அவன், ஆணவமகன்ற வறிவொடு தொழிலியார்த்து நிற்றலின், தானிணைந்ததொரு திருமேனியைத் தனதாகக் கொண்டருளுவனென்பதாம்.

குறித்ததொன் முகமாட்டாக் குறைவே பரதந்திரமாவதென்றறிக.

அற்றேல், அக்குற்றங்களிலனுகிய முதல்வன் உருவமின்றி நின்றே எத்தொழிலுஞ் செய்ய வல்லுமாகலான், உருவங் கோடலாற் போந்த பயனென்னையெனின், அஃதுணர்த்துதற்கன்றே வருஞ்செய்யுளெழுந்ததென்பது. (45)

ஆரண மாக மங்க ளருளினு லுருவு கொண்டு
காரண னருளா னுகிற் கதிப்பவ ரில்லை யாகு
நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாஞ்
சீரணி குருசந் தானச் செய்தியுஞ் சென்றி டாவே.

சுப் — பதவுரை

(உயிர்க்குத் தன்னுடம்பை இயக்குதற்கண் வேறோருருவம் வேண்டாமைபோல அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனுக்குத் தன்னுருவமாகிய வுலகத்தைத் தொழிற்படுத்தற் பொருட்டு வேறோருருவம் வேண்டப்படுவ

தன்றுயினும்) காரணன் அருளினால் உருவுகொண்டு – (அம்) முதல்வன் கருணையாற் றிருவுருக்கொண்டு,—ஆரணம் ஆகமங்கள் அருளாதகில் – வேதாகமங்களைக் (கோவைப்பட) அருளிச்செய்திலனேல்,—கதிப்பவர் இல்லையாகும்–(பிரளயாகலர் சகலரென்னும் பசுவர்க்கம் இரண்டும் முறையே முன்னிலையினும் படர்க்கையினுங்கின்று உணர்த்தினாலன்றி உணரமாட்டாமையின்) உயிர்வர்க்கங்கள் (பொருளியல்புணர்ந்து வீடுபேறடைதல் இல்லையாகும்,—(அதுவன்றி) காரணன் முதலாயுள்ள சுரர்-திருமான் முதலிய தேவர்க்கும்,—நரர் – மாநுடர்க்கும்,—நாகர்க்கு எல்லாம் – நாகர் முதலியோர்க்கும்,—சீர் அணி குரு சந்தானச் செய்தியும் – மிக்க சிறப்புடைய குருபரம் பரையின் வைத்து அருளுதலும்,—சென்றிடாவே – (செல்லாமையிற் றிருமேனி ஒரு தலையான் வேண்டப்படும்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. உயிர்க்குத் தன்னுடம்பை இயக்குதற்கண் வேறொருருவம் வேண்டாமைபோல, அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனுக்கு, தன்னுருவமாகிய உலகத்தைத் தொழிற்படுத்தற்பொருட்டு வேறொருருவம் வேண்டப்படுவதன்றுயினும், பிரளயாகலர் சகலரென்னும் பசுவர்க்க மிரண்டும்முறையே முன்னிலையினும் படர்க்கையினும் நின்றுணர்த்தினலன்றி உணரமாட்டாமையின், உயிர்வர்க்கங்கள் பொருளியல்புணர்ந்து வீடுபெறுமாறு வேதாகமங்களைக் கோவைப்படச் செய்தற்பொருட்டும், அதனைக் குருபரம் பரையின்கண் வைத்தற்பொருட்டும், திருமேனி ஒருதலையான் வேண்டப்படுமென்பதாம்.

கதித்தல் கதியடைதல்.

அற்றேல், அகாதி முத்த சித்தரு வாகிய முதல்வனுக்குத் தனுவுண்டாகவே, தனுவிற்குரிய தொழில் காரணம் புவனம் போகக்களு முளவாமாகலின், அவைபற்றி கம்மனோர்போலச் சுட்டியுணரப்பட்டு வாக்குமனுதீதனென்றல் வழுவாம்போலுமெனின், அவ்வாசங்கை நீக்குதற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. (46)

உருவருள் குணங்க ளோடு மூணர்வரு ளுருவிற் ரோன்றுங்
கருமமு மருள ரன்றன் கரசர ணுதி சாங்கந்
திருமரு ளுபாங்க மெல்லாந் தானரு டனக்கொன் றின்றி
யருளுரு வுயிருக் கென்றே யாக்கின னசிந்த னன்றே.

சுப — பதவுரை

அரன்றன் உரு அருள் – அரன்றிருவுரு அருளாகலான்.—தரும் கரசரணுதி சாங்கம் அருள் – தரப்பட்ட திருக்கை திருவடி முதலிய பிரத்தியங்கங்களும் அருள் வடிவே.—உணர்வு அருள் உருவில் தோன்றும் கருமமோடும் குணங்களும் அருள் – (உயிர்கட்கு) உணர்வு அளிப்பதாகிய அத்திருவுருவிற் ரோன்றுகின்ற தொழில்களும் வாய்மை முதலிய குணங்களுமாகிய சாங்கங்களும் அருள்வடிவே,–உபாங்கம் எல்லாந்தான் அருள் - உபாங்கமாகிய புவனபோகங்களும் அருள்வடிவே,—அருளுரு உயிருக்கு என்றே – இவ்வருளாகிய வடிவெல்லாம் உயிர்களின் பொருட்டன்றி.—தனக்கு ஒன்று இன்றி ஆக்கினன் அசிந்தன் அன்றே – சிறிதுந் தன் பொருட்டுக் கொள்ளுவோனன்மையான் (இவைபற்றிச் சிந்திதனையினும்) அசிந்திதனே என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அரன்றனுரு அருளாகலான் உயிர்கட்குணர் வளிப்பதாய அவ்வுருவிற்றோன்றுத் தொழில்களுங் குணங் களுமாகிய கரணமும் அருள்வடிவே; கைகான் முதலிய வுறுப்புக்களும் அருள்வடிவே; உபாங்கமாகிய புவனபோகங் களும் அருள்வடிவே; இவ்வருள்வடிவெல்லாம் உயிர்களின் பொருட்டன்றித் தன்பொருட்டன்மைபான் இவைபற்றிச் சிந்திதனையினும் அசிந்திதனேயென்பதாம்.

அருளுருமுன்னேயது வினைத்தாகை; ஏனேயது இருபெய ரொட்டுப் பண்புத்தாகை.

குணம் வாய்மை முதலியன; அவையே அவனுக்குச் சூல மழு முதலிய படைக்கலமாகலின் அவை கரணமெனப்பட்டன.

காசாணுதி சாங்கந் தருமருளென்பது முன் வைக்கற்பால தாயினும், செய்யுளாகலின் முறைபிறழ வைத்தார்.

ஆதி யென்றதனுல் ஏனேயங்கப் பிரத்தியங்கங்களுந் தழுவப் பட்டன, இவற்றைச் சாங்கமென்றது உபசாரம்.

அசிந்தனென்னும் வடசொல் அன்மொழித்தாகை.

அன்றே அசை.

இவை யொன்பது செய்யுளானும் முதல்வனுக்கு உருவத் திருமேனியுண்டென்பது, பிறர் கூறுங் குற்றங்களா னிகந்துபடா மைக் காத்து வலியுறுத்தப்பட்டது.

இனி, சிந்திதனுகியும் அசிந்திதனேயென்றதனே வலியுறுத்து முகத்தான் அவ்வுருவடிவின் பேதங்களும் அவற்றின்கணிகழுந் தொழில்களும் அவற்றுனுய பயன்களுந் தொகுத்துணர்த்து கின்றுர். (47)

உலகினை யிறந்து நின்ற தரனுரு வென்ப தோரா
ருலகவ னுருவிற் ரோன்றி யொடுங்கிடு மென்று மோரா
ருலகினுக் குயிரு மாகி யுலகுமாய் நின்ற தோரா
ருலகினி லொருவ னென்ப ருருவினை யுணரா ரெல்லாம்.

சுப — பதவுரை

(சிந்திதனையினும் அசிந்திதனே யென்பதற்கு) அரன் உரு உலகினை இறந்து நின்றது என்பது ஓரார் – உருத்திர னுருவம் உலகினைக் கடந்து நிற்றலான். வேதத்துள் உருத்திரன் விச்சுவாதிகனென்று கூறுஞ் சுருதியினையும் உணரார்,—அவன் உருவில் உலகு தோன்றி ஒடுங்கிடும் என்றும் ஓரார் – அவன் றிருவுருவில் உலகந்தோன்றி ஒடுங்குமாதலால் விச்சுவகாரணனென்று கூறுஞ் சுருதியினையும் உணரார்,—உலகினுக்கு உயிரும் ஆகி (நின்றது ஓரார்) – உலகிற்கு உயிராய் நிற்றலால் விச்சுவத்திற்கு அந்தரியாமி யென்று கூறுஞ் சுருதியினையும் உணரார்,—உலகும் ஆய் நின்றது ஓரார் – உலகமாய் நிற்றலால் விச்சுவரூபியென்று கூறுஞ் சுருதியினையும் உணரார்,—உருவினை உணரார் எல்லாம் – (இங்ஙனங் கூறுஞ் சுருதிகள் சான்றுகவுந்) திருமேனியி னியல்புணரா ரெல்லாம்,—உலகினில் ஒருவன் என்பர் – (அச்சிவபிரானை) உலகத்திலுள்ளார் கூறுங் கடவுளரின் ஒருவனென்பர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. சிந்திதனையினும் அசிந்திதனேயென்பதற்கு, வேதத்துள் உருத்திரன் விச்சுவாதிகனென்றும், விச்சுவகாரணனென்றும், விச்சுவத்திற்கந்தரியாமியென்றும், விச்சுவரூபியென்றுங் கூறுஞ் சுருதிகளே சான்றென்பதாம்.

மாயையிற் ரோன்றி யொடுங்கு முலகம் அதற்காதாரமாய் நின்ற முதல்வனுருவிற் ரோன்றி யொடுங்கியதூஉமா மென்பது, கிழங்கினின்றுந் தோன்றிய தாமரையைப் பங்கயமென்பதனானு மறிக. (48)

தேவரி ருருவ னென்பர் திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்ற தோரார் முதலுருப் பாதி மாத
ராவது முணரா ராதி யரியயற் கறிய வொண்ணு
மேவுரு நிலையு மோரா ரவனுரு விளைவு மோரார்.

சுப — பதவுரை

(விச்சுவாதிக னென்பது முதலிய நான்கு சுருதிகளை யும் முறையே வலியுறுப்பனவாய்) அரி அயற்கு அறிய ஒண்ணு ஆதி மேவு உருநிலையும் ஓரார் – அரியும் அயனும் அடி முடி தேடி அறியாவண்ண நீண்ட முதல்வன் றிரு வுருவினிலை கூறும் புராணவசனத்தினையும் உணரார்,— தேவர் மூவர் ஆய்த் திரு உரு நின்றது ஓரார் – மும்மூர்த்தி களுந் தன்னுறுப்பிற் ரோன்றிநின்ற திருவடிவினியல்பு கூறும் புராணவசனத்தினையும் உணரார்,—அவன் உரு விளைவும் ஓரார் – அவன் வடிவிலே விளைந்தவண்ணமே உலகிற்கு விளைவுகூறும் புராணவசனத்தினையும் உணரார், —முதல் உரு பாதி மாதர் ஆவதும் உணரார்-அர்த்தநாரீசுர வடிவு கூறும் புராணவசனத்தினையும் உணரார்,—சிவனைத் தேவரின் ஒருவன் என்பர் – (இங்ஙனங் கூறும் புராண வசனங்கள் சான்றுகவும் இவ்வுண்மை அறியாதவர் அச்) சிவபிரானைக் கடவுளரின் ஒருவனென்பர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. விச்சுவாதிகனென்பது முதலிய நான்கு சுருதிகளையும் முறையே வலியுறுப்பனவாய் அரியுமயனும் அடிமுடி தேடியறியாவண்ணம் நீண்ட திருவுருவினில் கூறும் புராணவசனமும், மும்மூர்த்திகளுந் தன்னுறுப்பிற்றோன்றி நின்ற வடிவினியல்பு கூறும் புராணவசனமும் அவன் வடிவிலே விளைந்தவண்ணமே உலகிற்கு விளைவு கூறும் புராணவசனமும், அர்த்தநாரீசுர வடிவு கூறும் புராணவசனமுமாகிய இவையுமதற்குச் சான்றென்பதாம்.

இவை இரண்டு செய்யுளும் அசிந்திதனென்றதற்கு உரையளவை காட்டியவாறு. (49)

போகியா யிருந் துயிர்க்குப் போகத்தைப் புரித லோரார்
யோகியா யோக முத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியா லுற்போற் செய்த வினையினை வீட்ட லோரா
ரூகியா மூட ரெல்லா மும்பரி னெருவ னென்பர்.

சுப் — பதவுரை

(முதல்வன்கொண்ட திருமேனிகளிற் சில திருமேனி) போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார் – போகவடிவமாகக்கொண்டது உயிர்கட்குப் போகம் புரிதற் பொருட்டென்பதனையும் உணரார்,— வேகி ஆளுற் போல் செய்த வினையினை வீட்டல் ஓரார் – (சில திருமேனி) கோரவடிவமாகக் கொண்டது உயிர்கள் செய்த வினையினை வீட்டுதற்பொருட்டென்பதனையும் உணரார்,—யோகியாய் யோகமுத்தி உதவுதலதுவும் ஓரார்–(சில திருமேனி) யோகவடிவமாக் கொண்டது உயிர்கட்கு

யோகமுத்தி உதவுதற் பொருட் டென்பதனையும் உணரார், —ஊகியா மூடர் எல்லாம்–(இவ்வாறு திருமேனி கொள்ளு முறைமையினை) ஆராய்ந்தறியும் வலியிலார் அனைவரும்,— உம்பரின் ஒருவன் என்பர் – (அம்முதல்வனைத்) தேவரின் ஒருவனென் பர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. முதல்வன்கொண்ட திருமேனிகளிற் சிலதிரு மேனி போகவடிவமும், சிலதிருமேனி கோரவடிவமும், சிலதிருமேனி யோகவடிவமுமாகக்கொண்டது, முறைமே, உயிர்க்கட்குப் போகம் புரிதற்பொருட்டும், வினையினை வீட்டு தற்பொருட்டும், யோகமுத்தியுதவுதற் பொருட்டுமாமென் பதாம்.

ஒன்றொடொன் றொவ்வா வேட மொருவனே தரித் துக் கொண்டு, நின்றலா லுலக நீங்கி நின்றன னென்று மோரா, ரன்றியவ் வேட மெல்லா மருள்புரி தொழிலென் றோரார், கொன்றது வினையைக் கொன்று நின்றவக் குண மென் றோரார்

சுப் — பதவுரை

(அங்ஙனம் போகவடிவுங் கோரவடிவும் யோகவடிவு மாய்) ஒன்றொடு ஒன்று ஒவ்வா வேடம் ஒருவனே தரித் துக்கொண்டு நின்றலால் – தம்முண் மாறுபட்ட பலவடி வம் ஒருவனே தரித்துக்கொண்டு நிற்றலால்,—அன்றிய அவ்வேடமெல்லாம் அருள்புரி தொழில் என்று ஓரார் – தம்முண் மாறுபட்ட அப்பலவடிவங்களும் (அங்ஙனம்

போகமும் வீடும் யோகமும் உதவுமுகத்தான்) அநுக்கிரக மொன்றற்கே ஏதுவாமென்பதனையும் உணரார்,—கொன்றது வினையைக்கொன்று நின்ற அக்குணம் என்று ஓரார்-கொல்லுதலாகிய தீமை செய்வது வினையைக் கெடுத்தலாகிய நன்மையைப் பயத்தலாகிய நிலைபெற்ற அக்குணமென்பதனையும் உணரார்,—உலகம் நீங்கி நின்றனன் என்றும் ஓரார் – (இங்ஙனம்) உலகத்தின் வைத்தறியப்படாத அதிசயநிலையனென்பதனையும் உணரார் (ஆகலின் இதுவும் அதற்குச் சான்று) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அங்ஙனம் போகவடிவுங் கோரவடிவும் யோகவடிவுமாய்த் தம்முண் மாறுபட்ட பலவடிவம் ஒருவனே கொண்டுநிற்றலும், தம்முண் மாறுபட்ட அப்பலவடிவுங்களும் அங்ஙனம் போகமும் வீடும் போகமுமுதவுமுகத்தான் அனுக்கிரகமொன்றற்கே ஏதுவாதலும், தீமை செய்வது நன்மையைப் பயத்தலும், உலகத்தின் வைத்தறியப்படாத அதிசய நிலையாகலான், இதுவுமதற்குச் சான்றென்பதாம்

உலகினை யிறந்துநின்ற தரனுரு வென்பதூஉம் ஈண்டினிது விளக்கியதூஉ மாயிற்று.

நிற்றல் நின்றலென விகாரம்.

அன்றியவென்னும் பெயரெச்சவீறு விகாரத்தாற் றொக்கது.

இவையிரண்டுசெய்யுளும் அசிந்திதனுதற்கு ஏதுக்காட்டிய வாறு. (51)

நாயகன் கண்ண யப்பா ணுபகி புதைப்ப வெங்கும்
பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பிற்
றேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேச தென்னர்.

சுப் — பதவுரை

(அவ்வேடமெல்லாம் அருள்புரிதொழி லென்பதற்கு) நாயகி நயப்பால் – முதல்வி திருவுள மகிழ்ச்சியால்,—நாய கன் கண் புதைப்ப – முதல்வனது திருக்கண் புதைத்த திருவிளையாட்டின்கண்,—எங்கும் பாய் இருள் ஆகி மூட – எவ்விடத்தும் பரவிய விருளாகிப் போர்க்கவும்,— பரிந்து உலகினுக்கு – பரிவுற்று உலகத்தினுள்ளார்க்கு,— தூய நெற்றி நேத்திரத்தினாலே – தூய்தாகிய நெற்றிக் கண்ணால்,—சுடர் ஒளி கொடுத்த பண்பின் – மிகுந்த பிரகாசத்தினை அளித்தருளிய தன்மையால்,—தேயம் ஆர் ஒளிகள் எல்லாம் – உலகின்கணுள்ள ஒளிகளெல்லாம்,— சிவன் உருத் தேசது என்னர் – (அச்)சிவபிரான் றிருமே னிப்பிரகாசமேயென்று உணரார் (ஆகலின் இங்ஙகழ்ச்சியே சான்று) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து அவ்வேடமெல்லாம் அருள்புரிதொழி லென்பத ற்கு முதல்வி திருக்கண் புதைத்த திருவிளையாட்டின்கணி கழ்ந்த நிகழ்ச்சியே சான்றென்பதாம்.

நயப்பு மகிழ்ச்சி.

பாய்தல் பரத்தல்.

தேயம் உலகம்.

கண்ணுதல் யோகி குப்பக் காமனின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை யோரார் மாறு
னெண்ணிவேண் மதனே பேவ வெரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்ப மளித்தவோரார்.

சுப் — பதவுரை

(பலவேறு வகைப்பட்ட அருள்புரிதொழிலும் அவ் வேடத்தை இன்றியமையாமைக்கு) கண்ணுதல் யோகு இருப்ப – நெற்றிக்கண்ணுடைய சிவபெருமான் யோகி ருந்துழி,—வேட்கைக்குக் காமன் நின்றிட—வேட்கைக்கு (க்காரணமாகிய) காமனிருக்கவும்,—விண் உறு தேவர் ஆதி – மேலிடத்துள்ள தேவர்கண் முதலியோர்,—மெலிந் தமை ஓரார் – மெலிவுற்றதும் அறியார்,—மால் தான் எண்ணி வேண்மதனே ஏவ – மாயன் (அம்மெலிவு கெடும் படி) கருதிக் காமனே ஏவுதல் செய்ய,—எரி விழித்து – (அவனே) நெற்றிக்கண்ணே விழித்தெரித்து,—இமவான் பெற்ற பெண்ணினைப் புணர்ந்து – இமையமலையரையன் பெற்ற உமாதேவியைக் கலந்து,—உயிர்க்குப் பேரின்பம் அளித்தது ஓரார் – அவ்வுயிர்களுக்குப் பேரின்பத்தினை அருளிச்செய்ததும் உணரார் (ஆகலின் இங்ஙகழ்ச்சியே சான்று) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. பலவேறுவகைப்பட்ட அருள்புரிதொழிலும் அவ்வேடத்தை யின்றியமையாமைக்குக் கண்ணுதல் யோகிருந்துழி உலகத்தின்கணிகழ்ந்த நிகழ்ச்சியே சான் றென்பதாம்.

உலகினுக்குயிருமாய் நின்றவாற்றை இவ்விருவகைத் திரு விளையாட்டின் வைத்து இனிது விளக்கியதுமாயிற்று.

'ஒன்றெடொன் றெவ்வா வேட மொருவனே தரித்துக் கொண்டதும்' (செ-51) இதனுட் கண்டுகொள்க.

இவையிரண்டு செய்யுளும் மேலதனைக் கண்கூடாகத் தெளிவித்துச் சிந்திதனையும் அசிந்திதனே யென்றதனை வலியுறுத்திய வாறு.

சிகண்டருத்திரர்க்குரிய வடிவங்களும் பெயர்களும் தொழில் களும் முதல்வனுக்கும் ஒப்பவுள வென்பது வாய்சங்கிதையுட் கூறப் படுதலின், ஈண்டுக் கூறியனவெல்லாம் முதல்வனுக்குரியனவே யாமெனக்கொள்க; அற்றாகலினன்றே, ஈண்டுக் கூறிய வடிவங்க ளெல்லாம் மகேசுரமூர்த்த மிருபத்தைந்தனுள் வைத்தெண்ணப் பட்டன வென்பது. (53)

படைப்பாதித் தொழிலும் பத்தர்க் கருளும்பா வனையு நூலு, மிடப்பாக மாத ராளோ டியைந்துயிர்க் கின்ப மென்று, மடைப்பானு மதுவு முத்தி யளித்திடும் போகும் பாசந், துடைப்பானுந் தொழிலு மேனி தொடக்கானேற் சொல்லொ ணாதே.

சுப — பதவுரை

(''ஆரணமாகமம்'' என்னுஞ் செய்யுளிற் கூறிப் போந்த உபதேசமாத்திரைக்கேயன்றி) படைப்பு ஆதித் தொழிலும் -- படைப்பாகிய ஆதித்தொழிற்கும் (வாதுளா கமத்தின் ஓதியவாறே இயங்கியற் பொருளும் நிலையியற் பொருளுமாகிய உலகங்கள் முதல்வனது திருமேனியில்

ஒவ்வோருறுப்புக்களினின்று தோன்றுமாறு செய்ய வேண்டுமாதலானும்),—பத்தர்க்கு அருளும் பாவனையும்—பத்தர்களுக்கு(இருவினையொப்பின்) அருளுதற்பொருட்டுச் செய்யும் பாவனையாகிய திரோதானத்தொழிற்கும் (ஊன நடனம் இயற்றவேண்டுதலானும்),—உயிர்க்கு என்றும் இன்பம் அடைப்பானும் அதுவும் நூலும் மாதராலோடு இடப்பாகம் இயைந்து – உயிர்களுக்கு எஞ்ஞான்றும் இன்பத்தைச் செய்வதாய திதிக்கும் நூலைச் செய்யும் உமாதேவியோடு வாமபாகத்தே இயைய வேண்டுதலானும்,—முத்தி அளித்திடும் யோகும் – முத்தி அளிப்பதாகிய அநுக்கிரகத்திற்கும் யோகிருந்து காட்டவேண்டுதலானும்,—பாசந்துடைப்பானுந் தொழிலும் – பாசநீக்குவதாகிய சங்காரத்தொழிற்கும் (தோன்றினமுறையே அவ்வவ் வுறுப்புக்களின் ஒடுக்கவேண்டுதலானும்),—மேனி தொடக்கானேல் சொல்ல ஒணுதே – (இவற்றிற்கும் அவ்) வுருவத் திருமேனி முதல்வனுக்கு இன்றியமையாச் சிறப் பினவாய் வேண்டப்படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *ஆரணமாகமமென்னுஞ் செய்யுளிற் கூறிப் போந்த உபதேசமாத்திரைக்கேயன்றி உலகவனுருவிற் றோன்றியொடுங்கிடு மென்பது முதலாக இங்ஙனம் கூறிப் போந்த தோற்ற மறைப்பு நிலை யருளிறுதி யென்னும் ஐந் தொழில் செய்தற்கும் அவ்வடிவம் இன்றியமையாச் சிறப் பினவாய் வேண்டப்படுமென்பதாம்.*

படைப்புக்கு வாதுளாகமத்தி னோதியவாறே இயங்கியற் பொருளும் நிலையியற்பொருளுமாகிய உலகங்கள் முதல்வனது திருமேனியில் ஒவ்வோருறுப்புக்களினின்று தோன்றுமாறு செய்ய

வேண்டுதலானும், மறைப்புக்கு ஊனகடன மியற்றவேண்டுத லானும், திதிக்கு மாதாராளோடியையவேண்டுதலானும், அநுக்கிர கத்திற்கு யோகிருந்து காட்டவேண்டுதலானும், சங்காரத்திற்குத் தோன்றினமுறையே அவ்வவ்வுறுப்புக்களின் ஒடுக்கவேண்டுதலா னும், உபதேசமாத்திரைக்கேயன்றி இவற்றிற்கும் உருவத்திரு மேனி இன்றியமையாச் சிறப்பினவென்பது கண்டுகொள்க.

ஏனைத்தொழில்களைக் கிளந்து கூறுதலிற் படைப்பாதி யென் பதற்குப் படைப்பாகிய ஆதித்தொழிலென்றுரைக்க.

பத்தர்க்கருளும் பாவனையென்பது பத்தர்க்கு இருவினை யொப்பின் அருளுதற்பொருட்டுச் செய்யும் பாவனையெனத் திரோ தானத்தொழிலே யுணர்த்திற்று; பாவனையென்றார், அஃதவனுக்கு இயல்பன்மையின்.

நூலுமென்பது நூலைச் செய்யுமெனப் பெயரடியிற்பிறந்த பெயரெச்சவினையாய் இடப்பாக மாதராளுக்கு அடையாயிற்று; இவ்வாறன்றி, எண்ணும்மை யேற்ற சொல்லாகவே வைத்து, மேற் கூறிப்போந்த ஆரணவாகமங்களைப் பிரித்துக்கூட்டலென்னுமுத்தி யால் ஈண்டுமுடன்வைத்து எண்ணினரென்றுரைப்பினுமாம்.

பாசந் துடைப்பானுந் தொழிலென்றது ஈண்டுச் சங்காரத்தின் மேற்றென்பது, கொன்றது வினையைக்கொன்று நின்றவக்குண மென்பதனை னறிக.

அடைப்பான் துடைப்பானென்பன பாணீற்று வினையெச்சம்.

செய்யுளாகலின் முறைபிறழ வைத்தார்.

இவையனைத்துஞ் சுத்தமாயையிற் படுங் காரியங்களே கோக்கிக் கூறியதென்றுணர்க.

உலகினையென்பது முதல் இவ்வேழு செய்யுளானும் மேலைச் செய்யுளின் அநிந்தித னென்றதனை வலியுறுத்துமுகத்தான், அவ் வருளுருவின் பேதங்களும் அவற்றுளைய தொழில்களும் பயனும் அவையின்றியமையாச் சிறப்பினவாமாறுந் தொகுத்துக் கூறப் பட்டன. (54)

உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முருவி றந்த
வரு மேனி பதுவுங் கண்டோ மருவுரு வான போது
திருமேனி யுபயம் பெற்றேமுஞ் செப்பிய மூன்று நந்தங்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே

சுப — பதவுரை

(உருவமெனப்படுந் தூலப்பொருட்கெல்லாம் அருவ மெனப்படுஞ் சூக்குமஅவத்தை ஒருதலையான் உண்டென் னுஞ் சற்காரியத்தின் இயல்புபற்றி) உருமேனி தரித்துக் கொண்டது என்றலும் – உருவத்திருமேனி தரித்துக் கொண்டதென்ற மாத்திரையால்,—உரு இறந்த அருமேனி யதுவும் கண்டோம் – உருவம் ஒடுங்குதற்குக் காரண மாகிய அருவத்திருமேனியது உண்மையுங் கண்டாம்,— அரு உரு ஆனபோது திருமேனி உபயம் பெற்றேம் – (அவ்)வருவமெனப்படுஞ் சூக்குமப்பொருள் பின் உருவ மெனப்படுந் தூலாவத்தை எய்தும்போது (அவ்விரண் டற்கும் பொதுவாயதோர் அவத்தையும் உண்டென்பது பற்றி) அருவுருவத் திருமேனியது உண்மையும் பெற்றும், —செப்பிய மூன்றும் – திருமேனியெல்லாம் ஒரு நிகரன வாகலின்) இங்ஙனங் கூறிய மூன்று திருமேனியும்,—நந்தம் கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவு காணே – நமது பிறவிக்கேதுவாகிய மாயாவுருவை ஒழித்தற்கு(முதல்வன்) கொண்ட கருணைவடிவே என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. திருமேனியெல்லாம் ஒரு நிகரனவாகலின், ஏனையவருவத்திருமேனி அருவுருவத்திருமேனிகளதுண்மையும் அவையும் அவ்வியல்பின வாமாறும் உருவத்திருமேனிக்கோதிய நயமேபற்றி அறிபப்படு மென்பதாம்.

உருவமெனப்படுந் தூலப்பொருட்கெல்லாம் அருவமெனப்படுஞ் சூக்கும வவத்தை ஒருதலேயா னுண்டென்னுஞ் சற்காரியத்தினியல்புபற்றி, உருமேனி தரித்துக்கொண்ட தென்றலு முருவிறந்த வருமேனியதுவுங் கண்டோ மென்றும், அவ்வருவ மெனப்படுஞ் சூக்குமப் பொருள் பின் உருவமெனப்படுந் தூலாவத்தை யெய்தும் போது அவ்விரண்டற்கும் பொதுவாயதோரவத்தையும் உண்டென்பது தானே போதரு மென்பதுபற்றி, அருவுருவானபோது திருமேனியுபயம் பெற்றேமென்றும், வேறுபொருளன்மையான் அவையும் அவ்வுருவடிவோடொக்குமென்பது பற்றி, மூன்று நந்தங் கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவென்றும் கூறினர்.

இதனானே ஏனைத் திருமேனிகள் இரண்டினது உண்மையும் அவற்றது இயல்பும் உருவத்திருமேனியோடு உளதாகிய இயைபு பற்றிச் சாதிக்கப்பட்டன. (55)

அத்துவா மூர்த்தி யாக வறைகுவ தென்னை யென்னினித்தனுப் நிறைந்த வற்றி னீங்கிடா நிலைமை யானுஞ்
சித்துட னசித்திற் கெல்லாஞ் சேட்டித னுதி லானும்
வைத்ததா மத்து வாவும் வடிவென மறைக ளெல்லாம்.

சுப் — பதவுரை

(ஈண்டுக் கூறியவாற்றான் முதல்வனுக்குக் கருணை வடிவேயன்றி மாயைவடிவில்லையாயின்) மறைகள்

எல்லாம் – ஆகமங்களினெல்லாம்,—அத்துவா மூர்த்தியாக அறைகுவது என்னை என்னின் – அத்துவாக்களாறும் (முதல்வனுக்கு) வடிவமாகக் கூறுதல் என்னையெனின்,—நிறைந்து அவற்றின் நீங்கிடா நிலைமையானும் – நிறைவுற்று அவ்வத்துவாக்கண் முழுதினுங் கலந்து எல்லாமாகி நிற்றலானும்,—நித்தனுய் – அவையல்லனுய் நிற்றலானும்,—சித்துடன் அசித்திற்கு எல்லாம் சேட்டிதன் ஆதலானும் – சடசித்துக்களே யெல்லாஞ் செலுத்தி உடனுமாய் நிற்றலானும் (அவ்வியல்புடைய முதல்வனுக்கு),—அத்துவாவும் வடிவு என வைத்தது ஆம் - (தனது திரோதான சத்தியான் அவற்றோடு உளதாகிய இயைபு நோக்கி) அத்துவாவும் வடிவெனக்கூறு முபசாரமேயாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து ஈண்டுக் கூறியவாற்றுன் முதல்வனுக்குக் கருணைவடிவேயன்றி மாயை வடிவு இல்லையாயின், ஆகமங்களின் அத்துவாக்களாறும் முதல்வனுக்கு வடிவமென்ற தென்னையெனின்,—அது எல்லாமாகி யல்லவா யுடனுமாமியல்புடைய முதல்வனுக்குத் தனது திரோதானசத்தியா னவற்றோடுளதாகிய இயைபு நோக்கிக் கூறும் உபசாரமேயா மென்பதாம்.

அத்துவாவு மென்னுமும்மை உபசாரவடிவென்பது உணர்த்தி நின்றது. (56)

மந்திர மத்து வாவின் மிகுத்தொரு வடிவ மாகத்
தந்தெ னரனுக் கென்னிற் சகத்தினுக் குபாதா னங்கள்
விந்துமோ கினிமான் மூன்று மிவற்றின்மே லாகி விந்துச்
சிந்தையா ரதீத மான சிவசத்தி சேர்ந்து நிற்கும்.

சுத்தமாம் விந்துத் தன்னிற் றோன்றிய வாத லானுஞ்
சத்திதான் பிரேரித் தப்பின் முனதிட் டித்துக் கொண்டே
யத்தினற் புத்தி முத்தி யளித்தலா லானுக் கென்றே
வைத்தவா மந்தி ரங்கள் வடிவென மறைக ளெல்லாம்.

சுப் — பதவுரை

அனுக்கு – முதல்வனுக்கு,—அத்துவாவின் மந்திரம் ஒரு வடிவமாக-அத்துவாக்களுள்ளும் மந்திர வடிவத்தை ஒப்பற்ற வடிவமாக,—மிகுத்துத் தந்தது என் என்னின்–சிறந்தெடுத் தோதியது என்னெனினின்,—சகத்தினுக்கு உபாதானங்கள் – உலகிற்கு முதற்காரணங்கள்,—விந்து மோகினி மான் மூன்றும் – சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயை யென மூன்றுகும்,—இவற்றின் மேலாகி விந்து – இம்மூன்றனுண் மேலாகிய விந்துவின்கண்,—சிந்தை ஆர் அதீதம் ஆன சிவசத்தி சேர்ந்து நிற்கும் – மனத்திற்கு அருமையாகிய அதீதமெனப்படும் சிவசத்தி சேரப்பட்டு நிற்றலானும்,–சுத்தம் ஆம் விந்துத் தன்னில்-சுத்தமாகிய அவ்விந்துமாயையில்,—தோன்றிய ஆதலானும் – தோன்றிய (தூலமையுடையன) வாதலானும்,—சத்திதான் பிரேரித்து – அச்சிவசத்தி (சாதகராவார் கணிக்குமாறு) செலுத்தி,—பின் தான் அதிட்டித்துக்கொண்டே–கணித்தபின் பயன்கொடுத்தற்பொருட்டு அவற்றை வாயிலாகக்கொண்டு,—அத்தினுல் புத்தி முத்தி அளித்தலால் – அதனற் போகம் வீடுபேறுகளை அளித்தலாகிய பயனும் பற்றி,—மறைகள் எல்லாம் அனுக்கு – ஆகமங்களினெல்லாம் முதல்வனுக்கு.—மந்திரங்கள் வடிவு என வைத்த என்றே ஆம் – மந்திரவடிவம் (விசேடவுரிமையாதலைக்கிக்) கூறியனவேயாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அத்துவாக்களுள்ளும் மந்திரவடிவத்தைச் சிறந் தெடுத்தோதியது, தலைமையும் பயனும்பற்றி விசேடவுரிமை யாதலென்கி யென்பதாம்.

சகத்தினுக் குபாதானங்கள் விந்து மோகினி மான் மூன்று மென்றது அனுவாதம்.

ஆரதீதம் பண்புத்தொகை.

சேர்ந்து சேரப்பட்டு.

விந்துத்தன்னிற்றோன்றினவென்பது "விந்துத்தன்பால் வை கரியாதி" எனக்கூறிப் போந்தவாற்றுனறிக.

பிரேரித்தல் சாதகராவார் கணிக்குமாறு செலுத்துதல்.

அதிட்டித்தல் கணித்தபின் பயன் கொடுத்தற்பொருட்டு அவற்றை வாயிலாகக்கோடல்.

விசேட வுரிமையாதல்பற்றி அரனுக்கென்றே வைத்த வென்றார். (57)

மந்திர மதனிற் பஞ்ச மந்திரம் வடிவ மாகத்
தந்திரஞ் சொன்ன வாறிங் கென்னெனிற் சாற்றக் கேணீ
மூந்திய தோற்றத் தாலு மந்திர மூலத் தாலு
மந்தமில் சத்தி யாதிக் கிசைத்தலு மாகு மன்றே.

சுப் — பதவுரை

தந்திரம் – ஆகமங்களின்.—மந்திரமதனில் பஞ்ச மந்திரம் வடிவமாக – மந்திரவடிவுள்ளும் பஞ்சப்பிரம மந்திரவடிவத்தை (ஒப்பற்ற) வடிவமாக,—இங்குச்

சொன்னவாறு என் எனின் – (சிறந்தெடுத்து) ஓதியவாறு என்னையெனின்,—சாற்ற நீ கேள் – கூறுதும் நீ கேட்பா யாக,—மூந்தியதோற்றத்தாலும் மந்திர மூலத்தாலும் – ஏனைய மந்திரங்கட்கெல்லாமுற்படத் தோன்றியதானும் மூலமாதலானும்,—அந்தம் இல் ஆதி சத்திக்கு – (அவற் றைச்செலுத்தி நிற்கும்) அழிவில்லாத ஆதியாகிய திரோ தானசத்திக்கு,—இசைத்தலும் ஆகும் அன்றே–(முற்பட) இசையச்செய்தலும் (ஆகிய உபசாரவடிவாதல்) பற்றி என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மந்திரவடிவுள்ளும் பஞ்சப்பிரமவடிவைச் சிறந் தெடுத்தோதியது, ஏனைய மந்திரங்கட்கெல்லாம் முற்படத் தோன்றி முற்படக்கொண்ட வடிவாதல் பற்றியென்பதாம்.

தந்திரம் ஆகமம்.

இங்ஙனங் கூறிய அத்துவாமூர்த்தி மந்திரமூர்த்தி பஞ்சப்பிரம மூர்த்திகளெல்லாம் அவற்றைச்செலுத்தி நிற்கும் திரோதான சத்திக்கிசையச்செய்த உபசார வடிவென்பார், சத்தியாதிக்கிசைத் தலுமாகுமென இறுதிக்கட் கூறினர்; சத்தியாதி யென்பது முன் பின்னகத்தொக்க இருபெயரொட்டுப்பண்புத்தொகை; ஆதிசத்தி யெனினுந் திரோதானசத்தியெனினு மொக்கும்; உம்மை சிறப்பின் கண் வந்தது.

இவை கான்கு செய்யுளானும் முதல்வனுக்கு உபசாரத்திரு மேனி இவையென்பது கூறப்பட்டது.

அருவமோவென்பது முதல் இதுகாறுந் திருமேனியியல்பு கூறு முகத்தால் அகாதிமுத்தசித்தருவாதலைத் தெரித்துணர்த்தியவாறு.

அற்றேல், அயன்முதலியோரையும் அத்துவாமூர்த்திமான்களாக வைத்துத் தத்தமெல்லையளவும் அவரவர் வடிவின் அத்துவநியாசஞ் செய்யுமாறும் ஆகமங்களின் விதித்தலின் அவருருவும் அரனுருவோடொக்கும்போலு மெனின்,—அதற்கு விடை வருஞ் செய்யுளிற் பெறப்படும்.

இங்ஙனம் 'மண்ணினிற்கடாதி' யென்பது முதன் 'மந்திரமதனி' லென்பதீறாக முப்பத்தொரு செய்யுளானும், முதற்செய்யுளின் 'சதுமாகி மருவிடு மகாதி முத்த சித்தரு மன்னி நின்றே' என்ற இரண்டாங்கூற்றை, அவ்வவர்மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தி, இனித் 'தான்முத' லென்ற மூன்றாங்கூற்றை அவ்வாறு வலியுறுத்துகின்றார். (59)

மூன்றாமதிகரணம்.

அயன்றனி யாதி யாக வரனுரு வென்ப தென்னை
பயந்திடுஞ் சத்தி யாதி பதிதலாற் படைப்பு மூல
முயன்றன ரிவரே யாயின் முன்னவ னென்னை முற்று
நயந்திடு மவனி வர்க்கு நண்ணுவ தொரோவொன் றுமே.

சுப — பதவுரை

அயன்றன் ஐ ஆதி – அயனுடைய அழகியவுருவம் அரியுரு முதலியவற்றையும்,—ஆகம் அரன் உரு என்பது என்னை – அரனுருவோடொத்த வுருவாகவைத்து (வேதாகமங்களிலே தத்தமெல்லையளவும் அத்துவநியாச மந்திரநியாச முதலாயின) விதித்தலிற் (சங்காரக் கடவுளோடொப்ப அவரு முதல்வராவான் செல்வர்போலுமென மலையற்க),—பயந்திடும் சத்தி ஆதி – படைப்பாதி தொழில் செய்யுஞ் செநி முதலிய சிவசத்திகள்,—பதிதலால் – (ஓரோவொன்று அவர்மாட்டுப்) பதிந்துநின்று செலுத்தலான் (அவ்வியைபுபற்றி வேதாகமங்களின் அவ்வாறு

உபசரித்தோதப்பட்டன),—படைப்பு மூலம் இவரே முயன்றனர் ஆயின் – (அற்றேல்) படைப்பாதி தொழில் களை அயன் அரி முதலாயினரே (முதல்வன் அருளின்றியுந் தாந்தாம் நினைத்தவாறு செய்வரெனின்).—முன்னவன் என்னை – முதல்வன் எற்றிற்கு (ஆகலின் அமைச்சர் முதலாயினர்க்கு அரசனையின்றி அமையாமைபோல அயன் அரி முதலாயினர்க்கு அரன் அருளையின்றி அமையாது),—முற்றும் நயந்திடும் அவன்–(ஆயின்) ஐந்தொழிலுஞ் செய்யும் அம்முதல்வன்,—இவர்க்கு ஒரோவொன்று நண்ணுவது ஆமே – இவர்கட்கு ஒவ்வொரு தொழில் இயற்றச் செய்யும் (ஆகலின் அரசனுக்கு அமைச்சர் முதலாயினர் போல முதல்வனுக்கு அயன் அரி முதலாயினரும் வேண்டப்படுவர்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அயனுருவம் அரியுருவ முதலியவற்றையும் அரனுருவோடொத்த உருவாக வைத்து வேதாகமங்களிற் றத்தமெல்லைபளவும் அத்துவநியாசம் மந்திரநியாசம் முதலாயின விதித்தலின், சங்காரக் கடவுளோடொப்ப அவரும் முதல்வராவான் செல்வர் போலுமென மலையற்கு; படைப்பாதி தொழில் செய்யுஞ் சனனி முதலிய சிவசத்திகள் ஒரோவொன்று அவர்மாட்டுப் பதிந்து நின்று செலுத்துதலான் அவ்வியைபு பற்றி வேதாகமங்களின் அவ்வாறு உபசரித்தோதப்பட்டன வென்பதாம்.*

அற்றேல், ஒரு தொழிற்கிருவராதல் எற்றுக்கென்பாரை நோக்கி, அமைச்சர் முதலாயினர்க்கு அரசனையின்றியமையாமை போல, அயனரி முதலாயினர்க்கு அரனருள் யின்றியமையாமை

தருக்கமுகத்தான் விளக்குவார், 'படைப்புமூல முயன்றன ரிவரேயா யின் முன்னவனென்னே' என்றும், அரசனுக்கு அமைச்சர் முதலா யினர்போல அரனுக்கு அயனரி முதலாயினரும் வேண்டப்படுவ ரென்பது எதுமுகத்தான் விளக்குவார், 'முற்று கயந்திடு மவனி வர்க்கு கண்ணுவ தொரோவொன் ருமே' என்றுங் கூறினர்; உவமை வருஞ் செய்யுளிற் பெறப்படும்.

ஐ அழகு; அஃதாகுபெயரான் அழகுடையுருவத்தின்மேனின் றது; இரண்டனுருபாக வைத்துரைப்பார், முடிக்குஞ்சொல்லோடு இயைபின்மை நோக்கிலர்.

ஆகவானுருவென்னு முவமைத்தொகை 'பையரவல்குல்' போனின்றது; ஆகம் உடம்பு.

பயத்தல் படைத்தல். படைப்புமூலம் படைப்பாதியென்க.

பயந்திடுஞ் சத்தியாதி பதிதலைப் பிரித்துவைத்துக் கூறுகின்ற மையின், இவரேயென்னு மேகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

'உரைத்தவித் தொழில்க' ளென்னுஞ் செய்யுள், பௌராணி கரை நோக்கி இயைபின்மை மாத்திரை நீக்கி 'ஈறுமாகி மருவிடு' மென்றதனை வலியுறுத்தியது; இஃது அதேகேசுரவாதிகளை நோக் கிப் பிறிதினியையு நீக்கித் 'தான் முத' லென்றதனை வலியுறுத்தி யது; இவை இரண்டற்குந் தம்முள் வேற்றுமை.

அற்றேல் அதேகேசுரவாதம் பரிகரித்தற்பொருட்டுப் 'பயந் திடுஞ் சத்தியாதி' யெனச் சத்திக்குப் பன்மை கூறவே, சத்திமா னொருவனுதல் செல்லாமையின், இது தேளுக்குஞ்சிப் பாற்கள்வா யின் விழுந்தாலொப்ப மறித்தும் அதேகேசுரவாதமாய் முடியும் போலுமெனின், அவ்வாசங்கை நீக்குதற்கன்றே வருஞ்செய்யு ளெழுந்ததென்பது. (60)

சத்திதான் பலவோ வென்னிற் றானென்றே யநேக மாக
வைத்திடுங் காரி யத்தான் மந்திரி யாதிக் கெல்லா
முய்த்திடு மொருவன் சத்தி போலா னுடைய தாகிப்
புத்திமுத் திகளே யெல்லாம் புரிந்தவ னினைந்த வாறும்.

சுப் — பதவுரை

சத்திதான் பலவோ என்னின் – சத்திகள் அநேகமோ வென்றிடின்,—ஒருவன் சத்தி–அரசன் சத்தி (ஒன்றே),—மந்திரி ஆதிக்கு எல்லாம் உய்த்திடும் போல் – அமைச்சர் படைத்தலைவர் பாடிகாவலர் முதலாயினர்மாட்டு நின்று செய்யுங் (காரியவேறுபாட்டாற் பலவேறு வகைப்பட்டாற்) போல,—அரனுடையதாகித் தான் ஒன்றே – சிவசத்தி ஒன்றே,—காரியத்தால் அநேகமாக வைத்திடும் – (அவரவர்மாட்டுநின்று செய்யுங்) காரியவேறுபாட்டாற் (செநநிமுதலியவாய்ப்) பலவேறு வகைப்படும் (சிவசத்தி ஒன்றேயென்பதும் அது தேவ கடவுளர்மாட்டு நின்று நடாத்து மென்பதும் அமைச்சர் முதலாயினர் எவையெவை செய்யினும் அரசனினைந்தவாறன்றி ஆகாமை போல),—புத்திமுத்திகளே யெல்லாம் புரிந்து அவன் நினைந்தவாறு ஆம் – போகம் வீடுபேறுகளெல்லாம் விருப்பமுற்று அவ்வரனினைந்தவாறன்றி ஆகா(மைபற்றி அறியப்படும்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அரசன் சத்தியொன்றே யமைச்சர் படைத்தலைவர் பாடிகாவலர் முதலாயினர்மாட்டு நின்று செய்யுங் காரியவேறுபாட்டாற் பலவேறு வகைப்பட்டாற்போல, சிவசத்தியொன்றே அவ்வவர்மாட்டு நின்று செய்யுங் காரியவேறு*

பாட்டாற் செகநி முதலியவாய்ப் பலவேறு வகைப்படும். சிவசத்தியொன்றேயென்பதும் அது வேகடவுளர்மாட்டு நின்று நடாத்துமென்பதும் அமைச்சர் முதலாயினர் எவையெவை செய்யினும் அரசனினைந்தவாறன்றியாகாமைபோல; போகம் வீடுபேறுகளெல்லாம் அரனினைந்தவாறன்றியாகாமைபற்றி அறியப்படுமென்பதாம்.

தானொன்றேயானுடையதாகிக் காரியத்தால் அநேகமாக வைத்திடுமென வியையும்.

அரனினைந்தவாறன்றியாகாமை, தக்கன்வேள்வி மார்க்கண்டி வாழ்நாள் ஆலாலத்தோற்றரவு முதலியவற்றால் இனிதுவிளங்கக் கிடத்தலின், வகுத்துக்கூறுமாயினர்.

அற்றேல், ஈண்டுக் கூறியவாற்றாற் செகநிர்மூலிய பேதமெல்லாஞ் சிவசத்திக்குத் தடத்தமென் றுயவழிச் சொரூப மென்னையோ? வெனின், அஃதுணர்த்துதற்கன்றே வருஞ்செய்யு ளெழுந்ததென்பது. (61)

சத்திதன் வடிவே தென்னிற் றடையிலா ஞான மாகு
மூய்த்திடு மிச்சை செய்தி யிவைஞானத் தூளவோ வென்னி
னெத்திற ஞான மூள்ள தத்திற மிச்சை செய்தி
வைத்தலான்மறைப்பின்ஞா னின்மருவிடுங் கிரியை யெல்லாம்.

சுப — பதவுரை

சத்திதன் வடிவு ஏது என்னின் – சிவசத்தியின் சொரூபம் யாதெனின்,—தடை இலா ஞான மாகும்–(உயிர்கட்கு அநுக்கிரகமாத்திரங்குறித்துப் பொதுவகையான்) அறிந்தும் அறிவித்து நிற்பதாகிய ஞானம் ஒன்றேயாம் (அதுவே

பராசத்தியெனப்படும்),—(தடைசெயும் ஞானம்) உய்த்திடும்—(அந்த ஞானம் உயிர்கட்கு மலபாகம் வருதற் பொருட்டு ஐந்தொழில் செய்தலைக்குறித்துச் சிறப்புவகையான் வியாபரிக்குங்கால் ஒருகூற்றனே) திரோதானசத்தியென நின்று (இச்சாஞானக்கிரியையென முத்திறப்பட்டு) வியாபரிக்கும் (ஆயின்),—இச்சை செய்தி இவை ஞானத்து உளவோ என்னின்—இச்சை கிரியை யென்கின்ற இவைகள் ஞானத்தினின்றுந்தோன்றுவனவோவெனின்,—ஞானம் எத்திறம் உள்ளது அத்திறம் இச்சை செய்தி வைத்தலான்—ஞானம் எவ்வாறு உளதோ அவ்வாறே இச்சை கிரியைகளு நடத்தலின் (அவ்விரண்டும் ஞானத்தின் வியாபாரவிசேடங்களேயன்றி வேறன்மையான்),—கிரியை யெல்லாம்—(காரியத்தால் அநேகமாகிய செநநி முதலிய) வியாபார சத்திகளெல்லாம்,—மறைப்பு இல் ஞானல் மருவிடும்—(முற்கூறப்பட்ட பராசத்திரூபமாகிய) தடைசெயா ஞானம் ஒன்றன் உளவாவனவேயாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *உயிர்கட்கு அனுக்கிரகமாத்திரங் குறித்துப் பொதுவகையா னறிந்தும் அறிவித்து நிற்பதாகிய ஞான மொன்றே சிவசத்தியின் சொரூபம். அதுவே பராசத்தி யெனப்படும். அந்தஞானம், உயிர்கட்கு மலபாகம் வருதற் பொருட்டு ஐந்தொழில் செய்தலைக் குறித்துச் சிறப்புவகையான் வியாபரிக்குங்கால், ஒருகூற்றனே திரோதான சத்தியென நின்று இச்சாஞானக்கிரியையென முத்திறப்பட்டு வியாபரிக்குமாகலான், இச்சைகிரியைகளும் ஞானத்தின் வேறன்மையாற் காரியத்தால் அநேகமாகிய செனனிமுதலிய வியாபாரசத்திகளெல்லாம் முற்கூறப்பட்ட பராசத்தி ரூபமாகிய ஞானமொன்றன் உளவாவனவேயாமென்பதாம்.*

தடை தடுத்தல்; மறைப்பென்றதும் அது. தடுத்தற்குச் செயப்படுபொருள் வருவித்துரைக்க. தடையிலாஞானமெனவே, தடைசெய்யு ஞானமு முண்டென்பது போந்தமையின், அதுவே திரோதானசத்தி யெனப்படும்.

இதனுற் பஞ்சசத்திகளுங் கண்டு கொள்க.

ஞானத்துளவென்புழி, நீக்கப்பொருட்கண்வரும் இன்னுருபு விரித்துரைக்க. உளவாதல் ஈண்டுத் தோன்றுதன்மேற்று. எனைய போலத் தோன்றினவல்லவென்பார், எத்திறஞானமுள்ள தத்திற மிச்சை செய்தி யென்றார்; ஞானத்தின் வியாபாரவிசேடங்களே அவையென்பதாம். " நீடுபரா சத்திநிக ழிச்சா ஞான நிறை கிரியைதர " (சிவப்பிரகாசம், பொதுவதிகாரம், செ–2) என்றதூஉம், "கிரியையறி விச்சை கிளர்ந்தசத்தி யேதோ – பெரியபரா சத்தியெனப் பேசாய்" (துகளறுபோதம். செ–42) என்றதூஉமிக் கருத்தேதோக்கியென்க.

ஞானமென்பது அம்முக்கெட்டருபேற்று ஞானலெனநின்றது. அம்முக் கெடுதல் "பெற்றொன்றுயர்த்தபெருமான்" "கோணுகணை யான்" (திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம், திருப்பாசுரம். செ–11) என்றாற்போல்வனவற்றுள்ளுங் காண்க. அத்துச்சாரியை விகாரத்தாற் றொக்கதெனினுமாம்.

கிரியை வியாபாரம்.

இதனுற்போந்த பொருளென்னை? யெனின், அது வருஞ் செய்யுளிற் கூறப்படும். (62)

ஒன்றதா யிச்சா ஞானக் கிரியையென் றொருமூன் றுகி
நின்றிடுஞ் சத்தி யிச்சை யுயிர்க்கரு ணேச மாகு
நன்றெலா ஞான சத்தி யானயந் தறிவ தாதி
னன்றருட் கிரியை தன்னு லாக்குவ னகில மெல்லாம்.

சுப் — பதவுரை

சத்தி ஒன்றதாய் – பராசத்தியாவது (தடையிலா ஞான மெனப் பொதுமையான்) ஒன்றுய்,—இச்சா ஞ ா ன க் கிரியை என்று ஒரு மூன்றுகி நின்றிடும் – இச்சாஞானக் கிரியையென (வியாபாரபேதத்தான்) மூன்றுய் (அவையே மற்றும் அவ்வக்காரியபேதத்தாற் பலதிற)ப்படும்.–இச்சை (நாதன்) உயிர்க்கு அருள் நேசம் ஆகும் – (அம்மூன்ற னுள்)இச்சாசத்தியாவது முதல்வன் உயிர்கட்கு(மலத்தை நீக்கிச் சிவத்தை) அளித்தற்கண் உளதாகிய கருணையாம், —ஞானசத்தியான் நன்று எலாம் (நாதன்) நயந்து அறி வன் – ஞானசத்தியால் (அதற்குச்செய்யக்கடவதான) உபாயங்களெல்லாம் முதல்வன் நயப்பான் அறிவன்,— அருட்கிரியை தன்னுல் அன்று அகிலமெல்லாம் நாதன் ஆக்குவன்–அருளின் வேறல்லாத கிரியாசத்தியால் அறிந்த போதே அவற்றை (அவ்வாறே) முதல்வன் சங்கற்பித்துச் செய்வன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து பராசத்தியாவது, தடையிலாஞானமெனப் பொதுமையா ஞென்றுய், இச்சாஞானக்கிரியையென வியா பார பேதத்தான் மூன்றுய், அவையே மற்றுமவ்வக்காரிய பேதத்தாற் பலதிறப்படும். அம்மூன்றும் முறையே, உயிர் கட்கு மலத்தை நீக்கிச் சிவத்தையளித்தற்கண் ணுளதாகிய கருணையும், அதற்குச் செய்யக்கடவதான உபாயங்களெல்லாம் அறியுமறிவும், அவற்றையவ்வாறே சங்கற்பித்துச் செய்யுஞ் சங்கற்பமுமாமென்பதாம்.

''உள்ளியதெல்லாம்'' (திருக்குறள், வெகுளாமை. செ – 9) என்றாற்போல கன்றெலாமென்பது ஒருமைப்பன்மை மயக்கம். கன்மை உபாயம்.

அன்று அறிந்தபோதே யென்க.

இவை கான்கு செய்யுளானும், 'அயன்றனையாதியாக வானுரு' வென்றல் பற்றியுஞ் சத்திபலவாதல் பற்றியுந் தானெனருவனே முதற்கடவுளென்றல் செல்லா தென்னும் அகேகசுரவாதி மதத்தை ஆசங்கித்துப் பரிகரித்துத் தான் முதலென்றது வலியுறுத்தப் பட்டது. (63)

சீவனு மிச்சா ஞானக் கிரியையாற் சிவனே பொப்ப
னுவனென் றிடின நாதி மலமிவற் றினைமறைக்குங்
காவல னிவன்செய் கன்மத் தளவினிற் கொடுப்பக் காண்பன்
பாவியாம் புத்தி முத்திப் பயன்கொளும் பண்பிற் றாகும்

சுப் — பதவுரை

இச்சா ஞானக் கிரியையால் சீவனும் சிவனே ஒப்பன் ஆவன் என்றிடின் – இச்சாஞானக்கிரியை மூன்றும் (முதல்வனேடொப்ப உயிர்க்கு முளவென்பது மாத்திரையே பற்றி உயிர்களு) முதல்வனேடொக்கும் போலுமெனின் (அங்ஙனம் ஒக்குமென மலையற்க),—இவற்றினை அநாதி மலம் மறைக்கும் – இவற்றினை (க் கேவலத்தின்) அநாதி மூல மலம் மறைக்கும்,—காவலன் இவன் செய் கன்மத்து அளவினில் கொடுப்பக் காண்பன்–(சகலத்தின்) முதல்வன் உயிர்கள் செய்கின்ற கன்மத்தளவிற் கேற்ற பயன் அளிக்க (ஏகதேசப்பட்டு) அனுபவிக்கும்,—பாவி ஆம் புத்தி முத்திப்பயன் கொளும் பண்பிற்றாகும் – (அக்

கன்மத்தான்) வரக்கடவதாகிய போகப்பயன் (போலச் சுத்தத்தின் அதனின் வேருகிய) முத்திப்பயனும் (முதல் வன் கொடுப்பவே) கொள்ளு முரிமையுடையனவாம் (ஆகலான் இத்தன்மைகளில்லாத முதல்வனுடைய இச் சாஞானக்கிரியைகளோடு இவற்றிடை வேற்றுமைபெரி தாகலின்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இச்சை முதலிய மூன்றும் முதல்வனெடொப்ப உயிர்க்கு முளவென்பது மாத்திரையேபற்றி உயிர்களும் முதல்வனெடொக்கும் போலுமென மலையற்க இவை அவை போலன்றிக் கேவலத்தின் மூலமலத்தான் மறைபடுதற்குரிய தன்மையும், சகலத்திற் கன்மத்தளவின் ஏகதேசப்பட்டு நிகழ்தற்குரிய தன்மையும், அக்கன்மத்தால் வரக்கடவ தாகிய போகப்பயன்போலச் சுத்தத்தின் அதனின் வேருகிய முத்திப்பயனும் முதல்வன் கொடுப்பவே கொள்ளுமுரிமைத் தன்மையும், உடைமையான், இத்தன்மைகளில்லாத முதல் வனுடைய இச்சாஞானக்கிரியைகளோடு இவற்றிடை வேற் றுமை பெரிதாகலினென்பதாம்.

பண்பு தன்மை.

பாவி வடசொல்.

புத்திபோலென்னுமுவமவுருபு விகாரத்தாற்றொக்கது. இங் ஙன முரையாதார் கன்மத்தளவினிற்கொடுப்பக் காண்டலே புத்திப் பயன் கோடலென்பதுணர்ந்திலர்.

இதனுனே சிவசமவாதிமதம் பற்றி யாசங்கித்துப் பரிகரித்து மேலது வலியுறுத்தப்பட்டது.

அற்றுயினும் ஆகமங்களின் இலயசிவன் போகசிவன் அதிகார சிவனெனச் சிவப்பன்மை கூறுதலின் தான் முதலென்று ஒரு பொருண்மேல் வைத்தோதுதல் அமையாதுபோலுமெனின், அஃ துணர்த்துதற்கன்றே வருஞ் செய்யுட்களெழுந்தனவென்பது. (64)

ஞானமே யான போது சிவன்றெழின் ஞான மொக்கி
னீனமில் சதாசி வன்பே ரீசனந் தொழில தேறி
னானமேற் கிரியை வித்தை யுருத்திர னிலய போக
மானபே ரதிகா ரத்தோ டதிகர ணத்த னமே

சுப — பதவுரை

(மேற்கூறிப்போந்த சிவசத்தி மூன்றனுள் யாண்டும் ஒரு பெற்றித்தாய் வியாபரிக்கும் இச்சையை யொழித்து ஒழிந்த விரண்டனுள்) ஞானமே ஆனபோது சிவன் – ஞானமேயாய் வியாபரிக்கிற் சிவமெனவும்,—தொழி(லே ஆனபோது) – ஞானம் கிரியையேயாய் வியாபரிக்கிற் சத்தியெனவும்,—ஒக்கின் ஈனம் இல் சதாசிவன்–(ஞானக் கிரியைகளாகிய இவ்விரண்டும்) ஒத்து வியாபரிக்கின் மேம் பட்ட சதாசிவமெனவும்,—தொழிலது ஏறின் பேரீசன் ஆம் – (ஞானங்குறைந்து) கிரியையேறி வியாபரிக்கின் மகேசுரமெனவும்,—கிரியை ஊனமேல் வித்தை – கிரியை குறைந்து (ஞானமேறி) வியாபரிக்கிற் சுத்த வித்தையென வும் ஐவகைப்பட்டு,—இலயம் போகம் பேர் ஆன அதி காரத்தோடு – (அவ்) விலயம் போகம் பெரிதாகிய அதிகார மென மூன்றுயடங்கு மவத்தைகளையும்,—அதிகரணத்தன் உருத்திரன் ஆமே–(அவத்தைக்கேதுவா யங்ஙனம் வேறு பட்ட) ஆதாரங்களையுமுடையனைய் மகாருத்திரனெரு வனே (அவ்வப் பெயர் பெற்று) நிற்பன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேற்கூறிப்போந்த சிவசத்தி மூன்றனுள், யாண்டுமொருபெற்றித்தாய் வியாபரிக்கும் இச்சையையொழித் தொழிந்த ஞானங்கிரியைகளிரண்டும், தனித்தனி வியாபரித்தலானும், ஒத்து வியாபரித்தலானும், தம்மூளைறிக் குறைந்து வியாபரித்தலானும், சிவஞ் சத்தி சதாசிவம் மகேசுரஞ் சுத்தவித்தையென்று ஐவகைப்பட்டு, இலயம் போகமதிகாரமென மூன்றுபடங்கு மவத்தைகளையும், அவத்தைக்கேதுவாய் அங்ஙனம் வேறுபட்ட ஆதாரங்களையு மூடையனுய் உருத்திரனெருவனே அவ்வப்பெயர் பெற்று நிற்பனென்பதாம்.

உருத்திரனுமெனவியையும். ஈண்டு உருத்திரனென்றது மாசங்காரக் கடவுளாகிய பரமசிவனே, அவனுக்கும் உருத்திரனென்னும் பெயருண்மையின்.

அவ்விலயபோகமெனச் சுட்டு வருவித்துரைக்க.

ஆனபோ தென்பதனையும் பிரிநிலே யேகாரத்தையுந் தொழிலென்பதனேடுங் கூட்டுக.

பின் வந்த ஞானஞ் சத்திக்குப் பரியாயப்பெயராய் நின்றது.

ஒக்கிலென்பதற்கு இவ்விரண்டுமென எழுவாய் வருவித்துரைக்க.

பேரீசன் மகேசனென்னும் பொருட்டு.

ஆதாரம் அதிகரணமென்பன ஒருபொருட் கிளவியென்பது மேலுமுரைத்தாம்; கடைப்பிடிக்க.

அற்றேல், அவ்வியலபோகவதிகாரங்கட்கு ஏதுவாய் நின்ற அதிகாணங்களியாவை? அவற்றியல்பென்னேயோ? வெனின், அது வருஞ் செய்யுளிற் கூறப்படும். (65)

வித்தையோ டீசர் சாதாக் கியஞ்சத்தி சிவங்க ளோந்துஞ்
சுத்ததத் துவஞ்சி வன்றன் சுதந்திர வடிவ மாகு
நித்தமென் றுரைப்பர் கால நீங்கிய நிலைமை யாலே
வைத்திலர் முற்பிற் பாடு வருவித்தார் கருமத் தாலே.

சுப் — பதவுரை

வித்தையோடு ஈசர் சாதாக்கியம் சத்தி சிவங்கள் சுத்த தத்துவம் ஐந்தும் சிவன்றன் சுதந்திர வடிவம் ஆகும் – (அவ்வவ்வியாபாரங்கட்கிடமாய் ஐவகைப்பட்டு மேற் கூறிப் போந்த) அவ்வப்பெயரே பெயராகவுடையனவாஞ் சுத்ததத்துவமைந்தும் அவ்விறைவனுக்குச் சுதந்திரமாகிய அதிட்டானமுமாம்,—கருமத்தாலே (முற்பிற்பாடு) வருவித்தார் – (முன்பின்னுக நிகழு ஞானசத்தி கிரியாசத்திகளின்) வியாபாரபேதம்பற்றி இவற்றிற்கு முற்பிற்பாடு கூறினராயினும்,—காலம் நீங்கிய நிலைமையாலே – (இவ்வைந்துந் தோன்றிய பின்னர்த் தோன்றுவதாகிய) காலதத்துவம் இவற்றது தோற்றத்திற்கு ஏதுவாகாமையின்,– முற்பிற்பாடு வைத்திலர் – (காலம்பற்றி) முற்பிற்பாடு கூறிற்றிலர்,—நித்தம் என்று உரைப்பர்–(காலவரையறையைக் கடந்து நிற்றலான் அது பற்றி இவை சிவபிரானுக்கு) நித்தியவதிட்டானமென்று உரைப்பர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அவ்வவ்வியாபாரங்கட்கு இடமாய் ஐவகைப்பட்டு மேற்கூறிப்போந்த அவ்வப்பெயரே பெயராகவுடையனவாஞ்*

சுத்ததத்துவமைந்தும் அவ்விறைவனுக்குச் சுதந்திரமாகிய வதிட்டானமுமாம். மூன்பின்னை நிகழும் ஞானசத்தி கிரியாசத்திகளின் வியாபாரபேதம்பற்றி இவற்றிற்கு முற்பிற்பாடு கூறப்படினும், இவ்வைந்துந் தோன்றிய பின்னர்த் தோன்றுவதாய காலதத்துவம் இவற்றது தோற்றத்திற்கு ஏதுவாகாமையிற் காலம்பற்றி முற்பிற்பாடு கூறுதல் செல்லாது, காலவரையறையைக் கடந்து நிற்றலால் அதுபற்றி இவை சிவனுக்கு நித்திய வதிட்டான மென்றுரைக்கப்படுமென்பதாம்.

அநந்ததேவர் முதலியோர் வாயிலாக நின்ற திட்டிக்கப்படும் ஏனை மாயேயம் போலன்றித் தானே யதிட்டிக்கப்படுதலின் இவை சுதந்திர வடிவமெனப்பட்டன. அதிட்டானத்தை வடிவமென்றுபசரித்தார்.

தோற்றக்கேடுகளுடையனவாய தத்துவங்கள் இறைவனுக்குச் சுதந்திரவடிவமாமாறு யாங்ஙன? மென்னுங் கடாவை யாசங்கித்து, நித்தமென்றுரைப்பரென்றும், நித்தமாதற்கேதுக் கூறுவார் காலநீங்கிய நிலைமையாலென்றும், அற்றேற், காலநீங்கியவழி இவற்றின் றோற்றத்திற்கு முற்பிற்பாடு கூறுதல் செல்லாதென்பாரை நோக்கி ஈண்டு முற்பிற்பாடு கூறியது காலம்பற்றியன்றென்பார் 'வைத்திலர் முற்பிற்பாடு வருவித்தார் கருமத்தா' லென்றுங் கூறினர்.

ஈண்டுக் கருமமென்றது மேலைச் செய்யுளிற் கூறிய வியாபாரபேதங்களே.

அந்தவியாபாரங்கட்குக் காரணங் கலையித்திரியெனப் பெயர் பெற்றுக் காலத்தானமாய் நிற்குஞ் சிவசத்தியேயாகலின், ஆண்டுக் காலமின்மைபற்றி முற்பிற்பாடுண்மைக்கு இழுக்கின்மையுமறிக.

அற்றேல், இலயசிவன்முதலிய மூவருந் தம்முள் வேறென்னுது சுத்தசிவ னொருவனே இவ்வதிகரணங்களைப்பற்றிய வியாபாரபேதத்தால் அங்ஙனம் மூன்றவத்தை யெய்தினவனெனின் விகாரியாவான்போலுமெனின், அவ்வாசங்கை நீக்குதற் கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. (66)

ஒருவனே யிராவ ணுதி பாவக முற்றுற் போலத்
தருவனிவ் வுருவ மெல்லாந் தன்மையுந் திரியா னுகும்
வரும்வடி வெல்லாஞ் சத்தி சத்திதான் மரமுங் காழ்ப்பு
மிருமையும் போல மன்னிச் சிவத்தினை டியைந்து நிற்கும்.

சுப — பதவுரை

ஒருவனே இராவணன் ஆதி பாவகம் உற்றுற்போல — ஒருவன் (கூத்திற்குரிய) இராவணுதி (பலவேடங்கட்டி) நடித்தா (னையினுந் தன்தன்மையிற் சிறிதுந் திரியாமை) போல,—தருவன் இவ்வுருவமெல்லாம் — முதல்வன் (ஐந்தொழிற்குரியனவா) யிங்ஙனங் கூறிப்போந்த பேத வடிவெல்லாம் எய்தியும்,—வரும் வடிவு எல்லாம் — வரப்பட்ட அவ்வடிவுவேறுபாடெல்லாம்,—சத்தி தான் மரமும் காழ்ப்பும் இருமையும் போல மன்னி — சத்தியுந்தானும் மரமும் வயிரமுமாகிய அவ்விரண்டும்போல நிலைபெற்று,—சிவத்தினோடு இயைந்து நிற்கும் சத்தி — குண குணிபாவமாயுடனிற்குந் தனது சத்தியிற் காணப்படுவனவாகலின்,—தன்மையும் திரியானுகும் — (அதுபற்றித்) தன்றன்மை வேறுபட்டு விகாரியாவான் அல்லன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. ஒருவன் கூத்திற்குரிய பலவேடங் கட்டி நடித்தானையினுந் தன்றன்மையிற் சிறிதுந் திரியாமைபோல,

முதல்வன் ஐந்தொழிற்குரியனவாய் இங்ஙனங் கூறிப்போந்த பேதமெல்லாமெய்தியும் அவ்வேறுபாடெல்லாங் குணகுணி பாவமாயுடனிற்குந் தனது சத்தியிற் காணப்படுவனவாக லின், அதுபற்றித் தன்றன்மை வேறுபட்டு விகாரியாவா னல்லனென்பதாம்.

ஏகாரந் தேற்றம்.

தன்மையுமென்னுமும்மை சிறப்பின்கண் வந்தது.

இருமையென்றது ஈண்டெண்ணின்மேனின்றது.

சத்தியிற் காணப்படுவனவற்றைச் சத்தியென்றுபசரித்தார்.

அற்றேல், தனது சத்தியிற் காணப்படுவது தனக்காமாறு யாங்ஙன? மெனின், அது வருஞ் செய்யுளிற் கூறப்படும். (67)

பொன்மைநீ லாதி வன்னம் பொருந்திடப் பளிங்க வற்றின் றன்மையாய் நிற்கு மாபோற் சத்திதன் பேத மெல்லா நின்மலன் முதற் றோன்றி நிலைமையொன் றுயே நிற்பன் முன்னருட் சத்திதன்பான் முகிழ்க்குந்தான்முளையானன்றே.

சுப் — பதவுரை

பொன்மை நீலம் ஆதி வன்னம் பொருந்திட – பொன்மை நீலாதிகளைத் (தன்) னிறமே பற்ற,—பளிங்கு அவற்றின் தன்மையாய் நிற்குமாபோல் – (தானும்) அத் தன்மைகள் அனைத்துமாய்(த் தோன்றிவேற்றுமையின்றி) நிற்கும் படிகம்போல,—நின்மலன் சத்திதன் பேதமெல் லாம் – முதல்வனுந் தனது சத்தியிற் காணப்படும் அப் பேதமெல்லாம்,—தான் ஆத்தோன்றி நிலைமை ஒன்றுயே

நிற்பன்–தானுகத்தோன்றி வேற்றுமையின்றியே நிற்பன், —முன் அருட் சத்தி தன்பால் முகிழ்க்கும் – (அவன் யாண்டுங்) கருதப்பட்ட அருட்சத்தியினிடமாகவே தோன்றுவான் (அன்றி),–தான் (ஆக) முளையான் அன்றே – தானுக வேறு தோன்றுனுகலான் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. பொன்மை நீலாதிகளைத் தன்னிறமே பற்றத் தானும் அத்தன்மைகளினைத்துமாய்த் தோன்றி வேற்றுமையின்றி நிற்கும் படிகம்போல, முதல்வனுந் தனது சத்தியிற் காணப்படும் அப்பேதமெல்லாந் தானுகத் தோன்றி வேற்றுமையின்றியே நிற்பன்; அவன் யாண்டுஞ் சத்தியினிடமாகவே தோன்றுவானன்றித் தானுக வேறு தோன்றுனுகலானென்பதாம்.

வன்னம் படிகநிறம்.

ஏகாரம் தேற்றம்

தன்னென்றது இடைச்சொல், கிரியைதன்னுலாக்குவன் என்றுற்போல.

ஆகவென வருவித்துரைக்க.

இவை தான்கு செய்யுளானுஞ் சிவபேதவாதிகள் கூறுங் கடாவை யாசங்கித்துப் பரிகரித்து மேலது சாதிக்கப்பட்டது.

இம்முத்திறத் தொன்பது செய்யுளுந் 'தான்முத' லென்றதனை வலியுறுத்தியவாறு. (68)

சத்தியுஞ் சிவமு மாய தன்மையிவ் வுலக மெல்லா
மொத்தொவ்வா வாணும் பெண்ணு முணர்குண குணியு மாகி
வைத்தன னவளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கை யெல்லா
மித்தையு மறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார்.

சுப — பதவுரை

சத்தியும் சிவமும் ஆய தன்மை - (இறைவன் இவ்வாறு) சத்தியுஞ் சிவமுமெனத் தன்னுள்ளே இருவேறு வகைப்பட்ட தன்மைகள் (வைத்தலானன்றே),—இவ்வுலக மெல்லாம் – (பலவேறு வகைப்பட்ட) இவ்வுயிர் வடிவங்கள் அனைத்தும்,—ஒத்து ஒவ்வா ஆணும் பெண்ணும் – (அவ்வப் பிறப்புக்கியைய வடிவங்களெல்லாம்) ஒத்து(க் குறி குணங்கள்) ஒவ்வாது (இருவேறுவகைப்பட்ட) ஆணும் பெண்ணுமாக,—உணர் குண குணியும் ஆகி வைத்தனன் – (அவ்வவ்வியோநிக்குள் அவ்வக்குறிகட்கேற்ப) உணரப்படும் (இருவேறுவகைக்)குணங்களையுடையனவாயடங்கித் தம்முட்கூடிக்களித்து வாழாநிற்பச் செய்தனனாகலான்,—இவ்வாழ்க்கையெல்லாம் – (இப்படியே) ஈண்டுக்கூறிப்போந்த வாழ்வுகளெல்லாம்,—அவளால் வந்த ஆக்கம் – சிவசத்தி மணந்ததனாலாகிய வாழ்வு (என்பது அறியப்படும்),—இத்தையும் அறியார் – (அச்செலாம் இலிங்காங்க பகாங்கமாம்படி சிவமுஞ் சத்தியுங் கொண்டருளிய) இம்முறைமையும் உணரார்,—பீடலிங்கத்தின் இயல்பும் ஓரார் – பீடலிங்கவடிவமே (அங்ஙனம் இருவேறுவகைப்பட வைத்ததனைக் கண்கூடாக அறியச்செய்தல் சான்றாகவும் அதனையும்) உணரார் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து இறைவனிவ்வாறு சத்தியுஞ் சிவமுமெனத் தன்னுள்ளே இருவேறு வகைப்பட்ட தன்மைகள் வைத்தலானன்றே, பலவேறு வகைப்பட்ட உயிர்வடிவங்களனேத்துங் குறியானுங் குணத்தானும் ஆண்பெண்ணென அவ்வவ்விியோனிக்குள் இருவேறுவகையாயடங்கித்தம்முட் கூடிக்களித்து வாழாநின்றனவாகலான், இப்படியே யீண்டுக் கூறிப்போந்த வாழ்வுகளெல்லாஞ் சிவசத்தி மணந்ததனாலாகிய வாழ்வென்பதறியப்படும். அச்செலாம் இலிங்காங்க பகாங்கமாம்படி சிவமுஞ் சத்தியுங் கொண்டருளிய பீடலிங்கவடிவமே அங்ஙனமிருவேறு வகைப்பட வைத்ததனைக் கண்கூடாக வறியச்செய்தல் சான்றென்பதாம்.

ஒத்தொவ்வாமையாவது, அவ்வப்பிறப்புக்கியைய வடிவங்களெல்லாமொத்துங் குறிகுணங்களொவ்வாது இருவேறு வகைப்படுதல். ஆண்பெண்ணென்பன குறியுணரநின்றன. உணர்குணகுணியுமாகியென்பது, அவ்வக்குறிகட்கேற்ப உணரப்படுமிருவேறு வகைக் குணங்களோயுடைய குணியுமாகியென்பதாம். இருவேறு வகைக் குணமுடையன வாதலாவது, ஆணெனப்பட்டனவெல்லாம் ஆண்மைக் குணமும், பெண்ணெனப்பட்டனவெல்லாம் அமைதிக் குணமுமுடையனவாதல். ஈண்டுக் குணியென்றது வாளாபெயராய் நின்றது, கரிகரம் பணிபண மென்றாற்போல.

ஈண்டுக் கூறிப்போந்த வாழ்க்கையாவன, உலகமெல்லாம் அவயவப்பகுப்புடையனவாதலும், முத்தொழிலுடையனவாதலும், கருத்தாவையுடையனவாதலும், சங்காரக்கடவுளினின்றும் தோன்றுவனவாதலும், அவனையே முதற்கடவுளாகவுடையனவாதலும் என்னுமிவை.

இதனானே தான் முதலாதலைக் கண்கூடாக விளக்குமுகத் தான் முதல்வனுக்குரிய பொதுவியல்பினைத்துந் தொகுத்துக் கூறப் பட்டன. (69)

சிவனரு வுருவு மல்லன் சித்தினை டசித்து மல்லன்
பவமுதற் றொழில்க ளொன்றும் பண்ணிடு வானு மல்லன்
றவமுத லியோக போகந் தரிப்பவ னல்லன் முனே
யிவைபெற வியைந்து மொன்று மியைந்திடா வியல்பி னானே.

சுப் — பதவுரை

சிவன் அரு உருவும் அல்லன் – சிவபிரான் அருவும் உருவும் அல்லாதவன்,—சித்தினோடு அசித்தும் அல்லன் – சித்தும் அசித்தும் அல்லாதவன்,—பவம் முதல் தொழில் கள் ஒன்றும் பண்ணிடுவானும் அல்லன்–சிருட்டிமுதலிய வைந்தொழில்களில் ஒன்றுஞ் செய்வானும் அல்லாதவன், —தவம் முதல் யோக போகம் தரிப்பவன் அல்லன் – தவ முதலியவற்றிற்குரிய யோகபோகவடிவங்கொள்வானும் அல்லாதவன்,—தானே இவை பெற இயைந்தும் – (ஆத லால்) அம்முதல்வன் தடத்தலக்கணமாகிய இவற்றைப் பொருந்தி நின்றனையினும்,–ஒன்றும் இயைந்திடா இயல்பி னானே – அவற்றைச்சிறிதும் பொருந்தாத சொரூபலக்க ணத்தையுடையான் (அஃது உண்மையதிகாரத்திற்பெறப் படும்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. ஈண்டுக் கூறிப்போந்தவை யனைத்தும் முதல் வனுக்குத் தடத்தலக்கணமாதலின், சொரூபலக்கணமெனப்

படுந் தன்னுண்மை இவற்றின் வேறும்; அஃது உண்மையதி காரத்திற் பெறப்படு மென்பதாம்.

இதனுனே முதல்வனுக்குரிய சிறப்பியல்பு தொகுத்துக் கூறப்பட்டது. (70)

முதற் சூத்திரம் முடிந்தது.

ஆகத்திருவிருத்தம் – 90.

———



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் சுபக்கம்

பிரமாணவியல்

இரண்டாஞ்சூத்திரம்

திருவிருத்தம் — 96.

இரண்டாஞ்சூத்திரம்

மூதற் சூத்திரத்தின் 'ஈறுமாகி மருவிடு'மென்றதன்கட்படும் அவாய்நிலையை நிரப்புவதற்குப் புருஷோத்பவமாமா மூணர்த்துமுகத் தானே ஆண்டலகிற்கு நிமித்தகாரணனுகிய பதியுண்மைக்கு அளவை கூறியவாசிரியர், காரணமாதற் பொதுமையான் இயை புடைய ஏனைத் துணைக்காரண முதற்காரணங்களதுண்மைக்கு அள வையும் அவற்றுற்காரியப்படுமாறும் இரண்டாஞ்சூத்திரத்திற் கூறு கின்றூர்.

உலகெலா மாகி வேறு யுடனுமா யொளியா யோங்கி யலகிலா வுயிர்கள் கன்மத் தாணையி னமர்ந்து செல்லத் தலைவனு யிவற்றின் றன்மை தனக்கெய்த லின்றித் தானே நிலவுசீ ரமல னுகி நின்றன னீங்கா தெங்கும்.

சுப — பதவுரை

(மேற்கூறிப்போந்த சிவபிரான் புருஷோத்பவஞ் செய்யுங் கால்) உலகு – உயிர்களிடத்தே,—எல்லாம் ஆகி – (கலப் பினுல் உடலுயிர்போல) அவ்வுயிர்களேயாய்,—வேறு ஆய்-(பொருட்டன்மையாற் கண் அருக்கன்போல)அவற் றின் வேறுமாய்,—உடனும் ஆய் – (உயிர்க்குயிராதற் றன் மையாற் கண்ணெளி ஆன்மபோதம் போல) உடனு மாய்,—ஓங்கி ஒளி ஆய் – (அவ்வவ்வுயிர்களின் வழி) ஓங்கி நிற்பதாகிய சத்திரூபமாகியும்,— ஆணையின் – தனதாணை யான் வரும்,—கன்மத்து–இருவினைக்கேற்ப,—அலகு இலா உயிர்கள்–எண்ணிறந்த அவ்வுயிர்கள், —அமர்ந்து செல்ல– (ஐந்தொழிலிற்)பட்டுச் செல்லுங்கால்,—தலைவனும்– (அவ் வைந்தொழினடாத்துவதாகிய) பதிரூபமாகியும், — இவற்

றின் தன்மை தனக்கு எய்தல் இன்றி–அத்தன்மைகளின் வேரூய், — நீங்காது – அவற்றோடுந்தாதான்மியமாய், — எங்கும் தானே நிலவு சீர் அமலனாகி நின்றனன்– எவ் விடத்துந் தானே சுயம்பிரகாசரூபமாமியல்புடையனாய் நிற்பன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து மேற் கூறிப்போந்தசிவன், புனருற்பவஞ் செய் யுங்கால்,உயிர்களிடத்து உடலுயிர் கண்ணருக்க னறிவொளி போற் பிறிவரு மத்துவிதமாய் அவ்வவ்வுயிர்களின்வழி நிற்ப தாகிய சத்திரூபமாகியும், தனதாணையான் வரும் இருவினைக் கேற்ப அவ்வுயிர்கள் ஐந்தொழிலிற்பட்டுச் செல்லுங்கால் அவ்வைந்தொழினடாத்துவதாகிய பதிரூபமாகியும்,அத்தன் மைகளின் வேரூய் அவற்றோடுந் தாதான்மியமாய் எவ்விடத் துந் தானே சொயம்பிரகாசரூபமாமியல்புடையனாய் நிற்ப னென்பதாம்.

அகாதி முத்த சித்குருவாகிய முதல்வன், ஒன்றினுந் தோய் வின்றித் தானே சொயம்பிரகாசமாய் நிற்குந் தன்னுண்மையிற் சிவமெனவும், உலகெலாமாகிவேரூ யுடனுமாய் இவ்வாறுயிர்களின் வழி நிற்குந் தன்மையிற் சத்தியெனவும், தாதான்மியத்தானிரு திறப்பட்டு, பின் ஐந்தொழில் செய்யுந்தன்மையிற் பதியெனப் பெயர்பெற்று நிற்பனென்னுஞ் சிவாகமதூற் றுணிபுணர்த்துவார் இவ்வாறு பகுத்தோதினர்.

ஈண்டுலகமென்றது உயிர்களே.

ஒளியென்றது சத்தியை.

தலைவனெனினும் பதியெனினுமொக்கும்.

நீங்காமை தாதான்மியம்.

இச் செய்யுள் முதனூலிரண்டாஞ் சூத்திரம்போல நாற்கூற்ற தாமாறு கண்டுகொள்க. (1)

முதலதிகரணம்.

ஒன்றென மறைக ளெல்லா முரைத்திட வுயிர்களொன்றி
நின்றன னென்று பன்மை நிகழ்த்துவ தென்னை யென்னி
னன்றவை பதிதா னென்றென் றறையுமக் கரங்க டோறுஞ்
சென்றிடு மகரம் போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே

சுப் — பதவுரை

மறைகள் எல்லாம் – வேதங்களினெல்லாம்,—ஒன்று என உரைத்திட – ஆன்மா ஒருவனென்று உரைத்திட வும்,—உயிர்கள் ஒன்றி நின்றனன் என்று – உயிர்களோடு கலந்து உடனுய் நிற்பனென்று,—பன்மை நிகழ்த்துவது என்னை என்னின்–பன்மை கூறுவது யாதெனின்,—அவை பதிதான் ஒன்று என்று அறையும் – அவ்வேதங்களின் ஆன்மர் ஏகனேயென்பதற்குப் பரமான்மா ஒருவனே யென்பது தாற்பரியமாகக் கூறுதலின்,—அன்று – அது பற்றி முரணுதலின்மையான் (மேலைச்செய்யுளின் வேரு யென்றதூஉம்),—அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம் போல – ஒன்றுகிய அகரம் பல வெழுத்துக்களின் விரவி நிற்றல் (காணப்படுதலின் அங்ஙனம்) போல,— சிவனும் சேர்ந்தே நின்றனன்–ஒருவனுகிய பரமான்மாப் பலவுயிர்களின் விரவி நின்றனன் (எனல் யாங்ஙனமென் னும் ஆசங்கைக்கிடமின்மையான் உடனுமாயென்றதூ உம் அமைவுடையன) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. வேதத்துள் ஆன்மாவேகனே யென்பதற்குப் பரமான்மா வொருவனேயென்பது தாற்பரியமாகலான் அது பற்றி முரணுதலின்மையான், மேலைச் செய்யுளின் வேறு யென்றதூஉம், ஒன்றுகிய அகரம் பலவெழுத்துக்களின் விரிவிநிற்றல் யாங்ஙனமென்னுமாசங்கைக்கு இடமின்மையான், உடனுமாயென்றதூஉம். அமைவுடையனவென்பதாம்.

உம்மை சிறப்பின்கண் வந்தது. (2)

உருவொடு கருவி யெல்லா முயிர்கொடு நின்று வேறுப்
வருவது போல வீச னுயிர்களின் மருவி வாழ்வன்
றருமுயி ரவனா யாகா வுயிரவை தானு மாகான்
வருபவ னிவைதா னுயும் வேறுமாய் மன்னி நின்றே.

சுப — பதவுரை

உயிர் உருவொடு கருவி எல்லாம் கொடு நின்று – உயிர் (நரம்புமுதலியவற்றுற் பிணிக்கப்படுந்) தநுவையும் (ஐம்பொறி முதலிய) கருவிகளையுங் கைக்கொண்டு உடனுய்ந் நின்ற வழியும்,–வேறுப் வருவதுபோல–உயிருயிரே உடம்புடம்பே (உயிருடம்பா யொழியாது உடம்புயிராக மாட்டாது) அதுபோல,—ஈசன் உயிர்களின் மருவி வாழ்வன் - முதல்வன் உயிர்களோடு அபேதமாய்க் கலந்து நிற்பன் (அங்ஙனம் நின்றவழியும்).—தானும் உயிரவை ஆகான் தரும் உயிர் அவனா ஆகா – (முதல்வன் முதல்வனே உயிருயிரே) முதல்வனுயிரா யொழியான் பொருந்திய உயிர் முதல்வனுகமாட்டாது (அவ்வாருயினும் உயிரவ்வுடம்பின் வேறுகியும் அதுவாகிநிற்றல் காணப்

படுதல்போல),—இவைதான் ஆயும் வேறும் ஆய் மன்னி நின்றே வருபவன் – முதல்வன் அங்ஙனம் வேருகியும் உலகெலாமாகி நிற்றல் அமைவுடையன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. முதல்வன் அங்ஙனம் வேருகியும் உலகெலாமாகி நிற்றல் அமைவுடைத்தென்பது உடம்பின்கண்ணதாகிய உயிரியல்பின் வைத்துக் கண்டுகொள்க வென்பதாம்.

ஐ சாரியை

அவை பகுதிப்பொருள் விகுதி.

நின்று வருபவனென வியையும்

இவையிரண்டு செய்யுளானும், பேதவாதம் பேதாபேதவாதம் அபேதவாதமாகிய மூக்கூற்று மதங்களையும் பரிகரித்து, 'உலகெலாமாகிவேருயுடனுமா' யென்ற முதற்கூற்றுப் பொருள் வலியுறுத்தப்பட்டது.

இன்னும் இதன்கட்படுங் கடாவிடைகளெல்லாம் முன்னர் விரித்துக் கூறப்படுமென்பதுபற்றி ஈண்டு விரித்திலர்.

இனி ஒளியாயோங்குதற்கட்படுங் கடாவிடைகளே மேலைச் சூத்திரத்து வியைபுபற்றிக் கூறிப்போந்தமையின் ஈண்டுத் தெரித்திலர்.

அஃதங்ஙனமாக, முதனூற்பொருளே முதனூலிற்கிடந்தவாறன்றித் தொகுத்தன் முதலிய நால்வகை யாப்பினுளொன்றுபற்றிச் செய்வதன்றே வழிநூலாவது; அவ்வாறன்றி, அன்றவை பதிதானென்றென்றையும் எனவும், உருவொடு கருவியெல்லாம் எனவும், பிருண்டஞ் சிலவற்றை முதனூலிற் கிடந்தவாறே கூறுதல் வழிநூற்கு மரபன்று போலுமெனின், "முன்னோர் மொழிபொருளே

யன்றி யவர்மொழியும் – பொன்னேபோற் போற்றுவ மென்ப தற்கு – முன்னோரின் - வேறு நூல் செய்தமெனு மேற்கோளில் லென்பதற்குங் – கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்" (கன்னூல், பொதுப்பாயிரம். வெ – 9) என்பவாகலின், அப்பயன்பற்றி ஒரோ வழி யங்ஙனங் கூறுதலும் வழிநூற்கு மரபென விடுக்க; இதனானே கூறியது கூறலென்னும் வழுவின்மையுங் கண்டுகொள்க.

இனி நாற்பத்தேழு செய்யுளான் 'அலகிலாவுயிர்கள் கன்மத் தாணையினமர்ந்து செல்ல' வென்ற இரண்டாங்கூற்றை அவ்வவர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்துகின்றார். (3)

இரண்டாமதிகரணம்

இருவினை யின்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்தி றந்து
வருவது போவ தாகு மன்னிய வினைப்ப லன்க
டருமரன் றரணி யோடு தராபதி போலத் தாமே
மருவிடா வடிவுங் கன்ம பலன்களு மறுமைக் கண்ணே.

சுப் — பதவுரை

இவ்வுயிர் – மேற்கூறிப்போந்த வுயிர்.—இ ரு வி னை – (முற்பிறவியிற் செய்யப்பட்டுக்கிடந்த) இருவினைக்கீடாக. —இன்பத்துன்பத்து – (இப்பிறவியின் வரும்) இன்பத் துன்ப நுகர்ச்சியான் (மேலும் வினையேறுதலின்),–பிறந்து இறந்து – (அதனுன் மீளமீளப்) பிறந்திறத்தலும்,— போவது வருவது ஆகும் – (துறக்க நிரயங்களிற்) சென்று மீடலுமுடைத்தாகலான்,—மன்னிய வினைப்பலன்கள் –

(உடம்பொடு) நிலைபெறும் அவ்வினைப்பயன்களை,—தரணி யோடு தராபதி போல – மருத்துவனும் வேந்தனும் போல, —அரன் தரும் – முதல்வனே (அவ்வுயிர்க்குத்தனதாணை யாற்) கூட்டுவன் (அவ்வாறன்றி),–வடிவும் கன்மபலன் களும்–உருவுங் கன்மப்பயனுஞ் (சடமாகலின்),—தாமே மறுமைக்கண்ணே மருவிடா – அவைதாமே மறுமைக் கண்ணேவந்து கூடமாட்டா என்க.

சிவ — பொழிப்புரை

எ-து மேற் கூறிப்போந்தவுயிர், முற்பிறவியிற் செய்யப் பட்டுக் கிடந்த இருவினைக்கிடாக இப்பிறவியின் வரும் இன் பத்துன்ப துகர்ச்சியான் மேலும் வினையேறுதலின், அதனன் மீளமீளப் பிறந்திறத்தலும் துறக்கநிரயங்களிற் சென்று மீடலுமுடைத்தாகலான், உடம்போடு நிலை பெறு மவ் வினைப்பயன்களை மருத்துவனும் வேந்தனும்போல, முதல் வனே பவ்வுயிர்க்குத் தனதாணையாற் கூட்டுவன், அவ்வா றன்றிச் சடமாகிய அவைதாமே மறுமைக்கண் வந்து கூட மாட்டா வென்பதாம்.

தரணமென்னும் வடமொழி கடத்தலென்னும் பொருட்டாக லான், கோயைக் கடப்பித்தலின் மருத்துவனுக்குத் தரணியெனக் காரணக் குறியாயிற்றென்பது; அற்றாகலினன்றே, 'மருத்துவ னுரைத்த நூலி'னென முன்னர் வருத்துக்கூறுவாராயினரென்பது.

இதனானே முதல்வனவ்வாறு மூவகையுமாய் நிற்றலானுய பயன் இது வென்பதுணர்த்துமுகத்தான் இரண்டாங்கூற்றின்கட் படுமியல்பெல்லாந் தொகுத்துக் கூறப்பட்டது. (4)

இருவினை யென்னை யின்பத் துன்பங்க ளியல்ப தென்னி
னொருதன்மை யியல்புக்குள்ள தொருவனுக் கிரண்டு செய்தி
வருவதென் மலருந் தீயு மருவலின் வாசம் வெம்மை
தருவதெ னீரென் செய்து தானியல் பாது மன்றே.
தன்னியல் பொழியப் பூவுந் தழலுமவ் தண்ணீ ரின்
மன்னிய திரண்டு செய்தி வருமிரு வினையி னினு
முன்னிய வின்பத் துன்ப முறுமுயி ருணர்வில் லாத
துன்னிய வசித்தை யின்பத் துன்பங்கள் சூழ்ந்தி டாவே

சுப் — பதவுரை

இருவினை என்னை – இருவினையே யில்லை,—இன்பத் துன்பங்கள் இயல்பது என்னின் – இன்பத்துன்பங்களின் றன்மை இயல்பேயாகுமெனின்,—இயல்புக்கு ஒருதன்மை உள்ளது – இயல்பினுக்கு ஒருதன்மையுள்ளதன்றி,—ஒருவனுக்கு இரண்டு செய்தி வருவது என் – ஒரு பொருட்குத் (தம்முண் மாறுபட்ட) இரண்டு தன்மை வருவது யாது (அது காரணத்தானன்றி உளவாகாமையானும்),—மலருந் தீயும் மருவலின் – போதும் அனலும் பொருந்துதலான் (அன்றி),–வாசம் வெம்மை-மணமும் வெப்பமும், நீர் என் செய்து தருவது – தண்ணீர் யாது காரணத்தாற் றரப்படுவது,—தான் இயல்பு ஆகும் என் அன்றே–(அதனால்) தானே இயல்பாகுமெனின்,—நீரின் தன் இயல்பு ஒழிய–தண்ணீருக்கு இயற்கையாயதட்பமொழிய,—பூவுந் தழலும் வந்து அணைய – மலருந் தீயும் வந்து பொருந்துதலான்,—இரண்டு செய்தி மன்னியது – வாசமும் வெப்பமுஞ் செயற்கையானுளவாயினவாகலின் (அதுவே ஈண்டைக்கு உவமையாய் முடிதலானும்),—உன்னிய இன்பத் துன்பம் உயிர் உறும் – கருதப்படும் இன்பத் துன்ப

நுகர்ச்சி உயிராகிய சித்துக்கு (அன்றி)—உணர்வு இல்லாத அசித்தைச் சூழ்ந்திடாவே – அறிவில்லாதசடத்துக்குக் கூடாமையானும்,—துன்னிய இன்பத் துன்பங்கள் இரு வினையினனும் வரும்–நெருங்கிய அவ்வின்பத் துன்பங்கள் இரண்டற்குங் (காரணம் வேண்டப்படு மாகலான்) இரு வினை யெனப்படுஞ் சஞ்சிதமே ஆண்டைக்குக் காரண மாம் என்க,

சிவ — பொழிப்புரை

எ-து. ஒருபொருட்குத் தம்முண் மாறுபட்ட விரண்டு தன்மை காரணத்தானன்றி உளவாகாமையானும், தண்ணீ ருக்கு வாசமும் வெப்பமுஞ் செயற்கையானுளவாயினவாக லின் அதுவேயீண்டைக்கு உவமையாய் முடிதலானும், இன் பத்துன்பநுகர்ச்சி சித்துக்கன்றிச் சடத்துக்குக் கூடாமை யானும் அவ்வின்பத்துன்பமிரண்டற்குங் காரணம் வேண் டப்படுமாகலான், இருவினையெனப்படுஞ் சஞ்சிதமே ஆண் டைக்குக் காரணமென்பதாம்.

என்னை யென்னும் வினு இன்மை குறித்து நின்றது.

அதுவென்னும் பகுதிப்பொருள்விகுதி அப்பண்பின்மே னின் றது.

தன்னியல்பு தட்பம்.

உணர்வில்லாதவசித்தென்றது ‘‘ *அடியளந்தான் தாமரை*’’ (திருக்குறள், மடியின்மை. செ–10) என்றாற்போலக்கொள்க. 5-6

இம்மையின் முயற்சி யாலே யிருநிதி யீட்டி யின்ப
மிம்மையே துகர்வர் செய்தி யிலாதவர் பொருளு மின்றி
யிம்மையே யிடரு ழப்பர் வேறிரு வினைய துண்டே
லிம்மையின் முயற்சி யின்றி யெய்திட வேண்டு மிங்கே.

இருவினைச்செயல்காணிம்மையிரும்பொருளின்பம்வேண்டி
வருவினை செய்யுங் காலை மடிவரு மடியு மின்றித்
தருவினை யதனிலத்தந் தானறுந் துயருந் தங்கு
மொருவினை செய்யா தோரு முடையரிவ் வுலகத் துள்ளே.

சுப் — பதவுரை

(அற்றேல் அக்காரணமாவது முயற்சியேயா மென்பது) முயற்சியாலே இம்மையின் இருநிதி ஈட்டி – முயற்சியால் இம்மைக்கண் மிகுந்த பொருள்களை ஆர்ச்சித்து,—இன்பம் இம்மையே நுகர்வர் – இன்பத்தையும் இப்பிறப்பின்கண்ணே அநுபவிப்பரெனவுடம்பாட்டினும்,–செய்தியிலாதவர் பொருளும் இன்றி – முயற்சியில்லாதவர் பொருளீட்டுதலுமின்றி, இம்மையே இடர் உழப்பர் – இப்பிறப்பின்கண்ணே துன்பத்தை எய்துவரென எதிர்மறையினும் (வைத்துக் கண்கூடாக அறியக்கிடத்தலின் அதுவேயமையும் அதுவன்றி),—இருவினையது வேறு உண்டேல் – இருவினையென்பதொன்றுண்டென வேறு (மோர்காரணங், கொள்ளின்,—இம்மையின் முயற்சி இன்றி – இப்பிறப்பின்கண் யாதொரு முயற்சியின்றியும்,—இங்கே எய்திட வேண்டும் – ஈண்டுப் (பொருள்) கைகூடவேண்டும்,—(அஃதின்மையான் அவ்வேறுகாரணங் கோடன்மிகையா மென்றது பொருந்தாது),—இம்மை இரும் பொருள் இன்பம் வேண்டி – இம்மைக்கண்ணே மிக்க பொருளின்பங்கள் கருதி,—வருவினை செய்யுங்காலை மடிவரும் – வருகின்ற முயற்சிசெய்யுமிடத்துத் தளர்வுண்டாகலானும்,—மடியும் இன்றி - தளர்வுமின்றி,—தருவினையதனில் அத்தம் தான் அறும் – பொருந்திய முயற்சிக்கட் பொருளின்றிப் போதலானும்,—துயரும் தங்கும் – (அதனாலே) துன்ப

மெய்துதலானும்,—இவ்வுலகத்துள்ளே ஒருவினை செய்யாதோரும் உடையர் – இவ்வுலகின்கண் யாதொருமுயற்சி செய்யாதாருஞ் செல்வராய்த் தங்குதலானும் (அம்முயற்சி பிறழ்தலும் அவ்விருதிறத்தினும் வைத்தறியக் கிடத்தலின் நியதகாரணம் வேறுண்டென்பது பெறப்படுதலால்),—இருவினைச் செயல்காண்—(அதுவே ஆண்டைக்குப் புலனாகாத) சஞ்சிதவினையென்று அறியப்படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அற்றேல் அக்காரணமாவது முயற்சியேயாமென்பது உடம்பாட்டினுமெதிர்மறையினும் வைத்துக்கண்கூடாகவறிபக்கிடத்தலின், அதுவேயமையும், வேறுமோர் காரணங் கோடன் மிகையாமென்றது பொருந்தாது. அஃதொரோவழிப் பிறழ்தலும் அவ்விருதிறத்தினும் வைத்தறியக்கிடத்தலின் நியதகாரணம் வேறுண்டென்பது பெறப்படுதலால், அதுவே ஆண்டைக்குப் புலனாகாத சஞ்சிதவினையென்று அறியப்படுமென்பதாம்.*

ஒருவினை செய்யாதோரு முடையராதல் கிழியீடு கோப்படப் பெற்றார் முதலாயினர்மாட்டுக் காணப்படும்; ஈண்டு உடையரென்றது செல்வரை; அஃது ''உடையார்மு னில்லார்போல்'' (திருக்குறள், கல்வி, செ-5.) என்பதனானுமறிக.

இவைதான்கு செய்யுளானும் உலகாயதர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்துச் சஞ்சிதமெனப்படு மிருவினையுண்மை காரியவேதுவின் வைத்துச் சாதிக்கப்பட்டது.

அற்றேல், இருவினையே யமையுமாகலின் ''முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை-யின்மை புகுத்தி விடும்'' (திருக். ஆள்வினையுடைமை, செ-4.) என்பதுபற்றிச் செல்லும் மனவெழுச்சிக்குப் பயனில்லைபோலுமெனின், அது முன்னர்க் கூறப்படும். 7-8.

பேறிழ வின்ப மோடு பிணிமூப்புக் சாக்கா டென்னு
மாறுமுன் கருவுட் பட்ட தவ்விதி யனுப வத்தா
லேறிடு முன்பு செய்த கன்மமிங் கிவற்றிற் கேது
தேறுநீ யினிச்செய் கன்ம மேலுடற் சேரு மென்றே.

சுப — பதவுரை

பேறு இழவு - (எடுத்ததோருடம்பின் வரக்கடவன வாகிய இன்பத்துன்பங்கட்கு ஏதுவாகிய) செல்வவறுமை களும்,—மூப்புச் சாக்காடு-(அவற்றுன் வரும்) உயர்விழிவு களும்,—இன்பமோடு பிணி என்னும் ஆறும் - (அவற்று னை) இன்பத்துன்பங்களுமாகிய ஆறும்,—முன் கருவுட் பட்டது - முன்னேதானே (சூக்குமமாய்க்) கருவினுள் அமைந்து கிடந்தன) வன்றி அப்போதப்போதுளவாவன வல்ல),—அவ்விதி ஏறிடும் அனுபவத்தால் - அவை (பின் னர்த்) தூலமாய்வந்துகூடுதல் (அவற்றை) அனுபவித்தற் குத் துணையாகிய முயற்சியானும்,—இனிச்செய் கன்மம் மேல் உடற் சேரும் - (அங்ஙனம் அனுபவித்தற்குத் துணை யாக) எழுந்த முயற்சியும் (அவ்வளவினெழியாது) மற் ருேருடம்பிற்படு மவ்வறுவகைக்கும் வித்தாய் நிலை பெறும்,—முன்பு செய்த கன்மம் இங்கு இவற்றிற்கு ஏது என்றே – முற்பிறவியினிகழ்ந்த முயற்சி இப்பிறவியின் வரும் அவ்வாறற்கும் (ஏதுவாயினுற்போலும் அத் தனேயே முயற்சியா னைக்கடவது பிறிதில்லை) என,—நீ தேறு – நீ தெளிவாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து *எடுத்ததோருடம்பின் வரக்கடவனவாகிய இன் பத்துன்பங்கட்கு ஏதுவாகிய செல்வ வறுமைகளும் அவற் றுன் வரும் உயர்விழிவுகளும் அவற்றுனை இன்பத்துன்பங்*

களுமாகியவாறும், முன்னேதானே சூக்குமமாய்க் கருவினுள மைந்து கிடந்தனவன்றி அப்போதப்போது உளவாவன வல்ல; அவை பின்னர்த தூலமாய் வந்து கூடுதல் அவற்றை யனுபவித்தற்குத் துணையாகிய முயற்சியாலும்; அங்ஙனமனு பவித்தற்குத் துணையாகவெழுந்த முயற்சியும் அவ்வள விலைழியாது மற்றோ ருடம்பிற்படும் அவ்வறிவகைக்கும் வித்தாய் நிலைபெறும்; முற்பிறவியினிகழ்ந்த முயற்சி இப்பிற வியின் வருமவ்வாறற்கும் ஏதுவாயிருத்போலு மத்தனையே முயற்சியாலைக்கடவது பிறிதில்லையென்பதாம்.

பிணியென்றது ஈண்டுத் துன்பமாத்திரையேயுணர்த்தி நின் றது. ''நோயுமின்பமும்'' (பொருளதிகாரம் : பொருளியல். சூ-2.) என்றூர் தொல்காப்பியனாரும்.

ஈண்டு மூப்பென்றது உயர்ச்சியின் மேற்று; அது ''வின் ணோர்க் கெல்லா மூப்பாய்'' என்பதனாலும் 'மூத்ததிருப்பதிக'மென் பதனாலு முணர்க.

சாக்காடுபோறலின் இழிவைச் சாக்காடென்றுபசரித்தார்.

ஏனைமூப்புச்சாக்காடுகள், பேறிழவின்பம்பிணிபோலத் தம் முண்மறுதலையாகாமையானும், அவற்றின் மறுதலைப் பொருள்களை உடன் கூறுமையானும், இவற்றுளடங்குதலின் வேறுகூறவேண் டாமையானும், காலம்பற்றி ஒருதலையான் வரும் மூப்பின்கண் ஐய மறுத்தல் வேண்டாமையானும், அவற்றையுடன்வைத்தெண்ணி யுரைசெய்தல் பொருந்தாமையறிக.

ஒடு எண்ணின்கண் வந்தது.

சூக்குமவுடம்பையிற் பாகுபாடின்மைபற்றிப் பட்டதென்று ஒருமைப்பாலாற் கூறினார்; கூறவே ஏறிடுமென்பது தூலமாய் விளங்கு மென்பதாயிற்று; இது சற்காரியவாதம்.

அனுபவமெனக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தார்.

'முன்புசெய்த கன்மமிங் கிவற்றிற்கேது' என்றது எடுத்துக் காட்டுவமை; ஈண்டுக் கன்மமென்றது முயற்சியை; மேலே வினை யென்றது மதி. (9)

உடற்செயல் கன்ம மிந்த வுடல்வந்த வாறே தென்னின், விடப்படு முன்னு டம்பின் வினையிந்த வுடல்வி ளைக்குந், தொடர்ச்சியா லொன்றுக் கொன்று தொன்றுதொட் டநாதி வித்தி, னிடத்தினின் மரம ரத்தின் வித்தும்வந் தியையு மா போல்.

சுப் — பதவுரை

உடற் செயல் கன்மம் – தனுவின் செய்தியாற் கன்ம மூண்டாம்.—இந்த உடல் வந்த வாறு ஏது என்னின் – (அற்றேல்) இத்தனுவுண்டாதற்குக் காரணம் யாதெனின்,—விடப்படும் முன் உடம்பின் வினை – நீங்கப்பட்ட முற்றனுவின் கன்மம்.—இந்த உடல் விளைக்கும் – இத்தனுவைவிளைக்கும்,—வித்தின் இடத்தினின் மரம் – வித்தின்கண் மரமும்,—மரத்தின் வித்தும் வந்து இயையும் ஆபோல் – மரத்தின்கண் வித்தும் வந்து பொருந்துமாறு போல,—ஒன்றுக்கு ஒன்றுதொடர்ச்சியால் - தம்முட்காரணகாரியமாய்,—தொன்றுதொட்டு அநாதி – தொன்று தொட்டுப் பிரவாகாநாதி (யாய்வருதலின் அவற்றிற்குத் தம்முண்முற்பிற்பாடுமுடியாது) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அங்ஙனம் உடலும் வினையும், வித்தும் மரமும் போலத் தம்முட் காரணகாரியமாய்த் தொன்றுதொட்டுப் பிரவாகாநாதியாய் வருதலின், அவற்றிற்குத் தம்முண் முற்பிற்பாடு முடியாதென்பதாம்.

அற்றேல், வரம்பின்றியோடி அகவத்தையாம்போலுமென மலையற்க, அவ்விரண்டற்கும் மூலமாகிய சூக்குமவுடம்பு வேறுண்மையின். (10)

முற்செயல் விதியை யிந்த முயற்சியோ டனுப விக்தா
னிச்செயல் பலிக்கு மாறெ னிதமகி தங்கண் முன்ன
ரச்செய லானு லிங்கு மவைசெயின் மேலக் காகும்
பிற்செயா தனுப விப்ப தின்றுபின் றொடருஞ் செய்தி.

சுப் — பதவுரை

முன் செயல் விதியை இந்த முயற்சியோடு அனுபவித்தான் - (அற்றேல் இத்துணையுங் கூறியவாற்றான்) முற்பிறவியினிகழ்ந்தமுயற்சி (இப்பிறவியின் வரும் செல்வமுதலிய அவ்வாறற்கும் ஏதுவாய்) அவற்றை இம்முயற்சியாகிய துணையால் அநுபவித்தாலும்,—இச்செயல் பலிக்கும் ஆறு என் -(அவ் வா று வினைப்பயனுக்கீடாகவருகின்ற) இம் முயற்சி மேலுடற் சேருதற்குரிய வினையாமாறு யாங்ஙனமெனின் (நன்றுசொன்னாய்),—இதம் அகிதங்கள் முன்னர் அச்செயல் ஆனல் - முன்வினையெனப்படும் இதமகிதங்களாவன முற்பிறவியின் அவ்வாறு நிகழுமுயற்சியேயன்றி வேறின்மையானல்,—இங்கும் அவை செயின் மேலைக்கு ஆகும் - இங்கும் அம்முயற்சி நிகழ்ந்தால் அது மேலைக்குவினையாமென்பது தானே போதரும் (அற்றேல் ஒரோவழி முயற்சியின்றி யிருப்பார்க்கு மேல்வரக்கடவதொன்றில்லை போலுமெனின் அற்றன்று),—பின்செயாது அனுபவிப்பது இன்று செய்தி பின்தொடரும் - அனுபவமாவது பின்னர் முயற்சியை ஒட்டியே நிகழ்வதொன்றுகலின் (பிராரத்தவினை அனுபவ முள்ளவளவும் முயற்சியும்

ஒருதலையான் உண்டென்பது பெறப்படுதலின்) அனுபவ முள்வழி மேலேக்கு வரக்கடவதொன்றில்லை யென்றல் யாண்டையதென்றெழுகை என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அற்றேல் இத்துணையுங் கூறியவாற்றான் முன்பு செய்த கன்மம் இங்கிவற்றிற்கேதுவென்பதூஉம் அவற்றை யனுபவித்தற்குத் துணையாதன் மாத்திரையே முயற்சியென் பதூஉமொக்குமாயினும், அவ்வாறு வினைப்பயனுக்கிடாக வருகின்ற முயற்சி மேலுடற் சேருதற்குரிய வினையாமாறு யாங்ஙனமெனின்,— நன்று சொன்னாய்; முன்வினையெனப் படுமிதமகிதமாவன முற்பிறவியினவ்வாறு நிகழுமுயற்சியே யன்றி வேறின்மையான் அதனையுடம்பட்டார்க்கு அந்நயம் பற்றி இங்கு மம்முயற்சி நிகழ்ந்தால் அது மேலைக்கு வினையா மென்பது தானே போதரும். அற்றேல் ஒரோவழி முயற்சி யின்றியிருப்பார்க்கு மேல் வரக்கடவதொன்று இல்லேபோலு மெனின்,— அற்றன்று; அனுபவமாவது முயற்சியை யொட்டியே நிகழ்வதொன்றுகலிற் பிராரத்தவினை யனுபவ முள்ளளவும் முயற்சியும் ஒருதலையானுண்டென்பது பெறப் படுதலின், அனுபவ முள்வழி மேலேக்கு வரக்கடவதொன் றில்லையென்றல் யாண்டைய தென்றெழுகை வென்பதாம்.

ஒருவினை செய்யாதோரு முடையரென்றதும் வருந்திச் செய்ய வேண்டாது எளிதிற் பெறுவது கோக்கியே பிறிதன்றென்பது கருத்து. மரங்கண் முதலியவற்றிற்குந் தண்ணீர் முதலியவற்றை ஏற்றுக் கோடற்குரிய சூக்குமமுயற்சி யுண்டென்பது உணர்ந்து கொள்க. யாண்டும் பிறழாமை யுணர்த்துதற்கன்றே பிற்செயாதனு பவிப்பதின்று என எதிர்மறைமுகத்தான் வரைசெய்து கூறினு ரென்பது.

ஆனலென்பது தெளிவின்கண் வந்தது; 'காண்பவன் சிவனே யானுல்' என்றுற்போல.

அற்றேல், ஒன்றன்பொருட்டுவந்தது மற்றொன்றன் பொருட்டாதல் கண்டிலமாதலின், இதமகிதங்கண் முன்னரச் செயலாய வாறுதான் யாங்ஙன? மெனின், அஃதுணர்த்துதற்கன்றே வருஞ் செய்யு ளெழுந்ததென்பது. (11)

மேலைக்கு வித்து மாகி விளைந்தவை யுணவு மாகி
ஞாலத்து வருமா போல நாஞ்செயும் வினைக ளெல்லா
மேலைத்தான் பலமாச் செய்யு மிதமகி தங்கட் கெல்லா
மூலத்த தாகி யென்றும் வந்திடு முறைமை யோடே.

சுப் — பதவுரை

ஞாலத்து விளைந்தவை – உலகத்தின்கண் (உணவின் பொருட்டு) விளைந்த கனி முதலாயின,—உணவும் ஆகி மேலைக்கு வித்தும் ஆகி வரும் ஆ போல – உணவுமாய் மேலைக்கு வித்துமாய் வருமாறுபோல,—நாம் செயும் வினைகளெல்லாம் – நாமென்னு முனைப்பாற் செய்யப்படுவதாகிய முயற்சியும்,—என்றும் முறைமையோடே ஏலத்தான் பலம் ஆ (வந்திடும்) – எஞ்ஞான்றும் முறையாற் பொருந்த (ச் செயல்வகையால் வினைக்கீடாய் வரும்) அனுபவத்தைப் பயக்கும்,—செயும் இதம் அகிதங்கட் கெல்லாம் மூலத்தது ஆகி வந்திடும் – (கருத்துவகையாற்) செய்யாநின்ற இதமகிதமெனப்படும் ஆகாமிய வினையைப் பயக்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. உலகத்தின் உணவின்பொருட்டு விளைந்த கனி முதலாயின உணவுமாய் வித்துமாதல் கண்டாமன்றே; அது

போல, நாமென்னு முணைப்பாற் செய்யப்படுவதாகிய முயற் சியுஞ் செயல்வகையான் வினைக்கிடாக வருமனுபவத்தைப் பயக்கும், கருத்துவகையான் இதமகித மெனப்படும் ஆகா மியவினையைப் பயக்கு மென்பதாம்.

இவ்வியல்பு தொன்றுதொட்டு வீடுபேறெய்துமளவும் இடை யறவு படாது தொடர்ச்சியாய் வருமென்பார், என்று மென்றார்.

மூலத்ததென்னு மொருமை அத்தருமத்தின் மேனின்றது; இதமகிதங்களென்பது என வருகின்றதுமது.

"ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்" (தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமையியல். சூ–12.) என்றாற்போல ஈண்டு ஒடு ஆனையிற்று.

இவை தான்கு செய்யுளானும், முயற்சிக்குப் பயன் இதுவென் பதுணர்த்து முகத்தான், வருவாயின்மையின் வினையுண்மை பெறப் படாதென்னுமவர் மதம்பற்றி, ஆசங்கித்துப் பரிகரித்து வருவாயி னியல்பு கூறி மேலது வலியுறுத்தப்பட்டது.

அற்றேல், அம்முயற்சியினுளவாகிய இதாகிதங்களதியல்பா மாறும் அவை பின்னர்ப் பயப்படுமாறும் யாங்ஙன? மெனின், அது முன்னர்க் கூறப்படும்.

இதமகி தங்க ளென்ப திகன்மன வாக்குக் காயத்
திதமுயிர்க் குறுதி செய்த லகிதமற் றதுசெய் யாமை
யிதமகி தங்க ளெல்லா மிறைவனே யேற்றுக் கொண்டிங்
கிதமகி தத்தா லின்பத் துன்பங்க ளீவ னன்றே.

சுப் — பதவுரை

இதம் அகிதங்கள் என்பது–இதாகிதங்களாகிய கண்ம மங்களதியல்பு யாதெனின்,—இகல் மனம் வாக்குக்

காயத்து – மாறுபட்ட மனவாக்குக் காயங்களால் —உயிர்க்கு உறுதி செய்தல் இதம் – உயிர்க்கு உறுதி (யென வேதாகமங்களின் விதித்தவற்றைச்) செய்தலே இதம்.—மற்றது செய்யாமை அகிதம் – அவற்றது மறுதலையைச் செய்தலே அகிதம்.—இறைவனே இதம் அகிதங்களெல்லாம் ஏற்றுக்கொண்டு – (ஆதலால் அவ்விரண்டனையும் அறியவல்ல) முதல்வனே அவற்றைக் கைக்கொண்டு—, இங்கு இதம் அகிதத்தால் – இவண் அவ்விதாகிதமாய கன்மத்துக்கேற்ப.—இன்பத் துன்பங்கள் ஈவன் அன்றே – இன்பத் துன்பமாகிய பயன் அளிப்பன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. உயிர்க்குறுதியென வேதாகமங்களின் விதித்தவற்றைச் செய்தலே இதம், அவற்றது மறுதலையைச் செய்தலே அகிதமாகலான், அவ்விரண்டனையுமறியவல்ல முதல்வனே அவற்றைக் கைக்கொண்டு பயனளிப்பனென்பதாம்.

இறைவனிங் கேற்ப தென்னை யிதமகி தங்க ளென்னி
னிறைபர னுயிர்க்கு வைத்த நேசத்தி னிலைமை யாகு
மறமலி யிதஞ்செய் வோருக் கதுக்கிர கத்தைச் செய்வன்
மறமலி யகிதஞ் செய்யி னிக்கிர கத்தை வைப்பன்.

சுப் — பதவுரை

இறைவன்–முதல்வன்,–இதம் அகிதங்கள்-(ஆன்மாக்கள்செய்த) இதாகிதமாகிய கன்மத்தை,—இங்கு ஏற்பது என்னை என்னின் – இவ்விடத்தே ஏற்றுக்கோடற்குக் காரணம் யாதெனின்,—நிறைபரன் உயிர்க்கு வைத்த நேசத்தின் நிலைமை ஆகும் – யாண்டும் நிறைந்த அம்

முதல்வன் உயிர்கள் வீடுபேறடைதற் பொருட்டு வைத்த கருணையேயாம் (கருணையாயினுங் காரணம் இருவேறு வகைப்பட நிகழ்ந்தமையின் பயனும் இருவேறுவகைப் படச் செய்யவேண்டுதலான்),—அறம் மலி இதம் செய் வோருக்கு–அறமிகுந்த இதமாகிய வினை செய்வோருக்கு,– அநுக்கிரகத்தைச் செய்வன்–அநுக்கிரகத்தைப் புரிவன்,— மறம்மலி அ கி த ம் செய்யின்–மறமிகுந்த அகிதமாகிய வினைசெய்யின் (அவருக்கு),—நிக்கிரகத்தை வைப்பன் – நிக்கிரகத்தைச் செய்வன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *முதல்வன் அவற்றையேற்றுக்கோடற்குக் காரணம் உயிர்கள் வீடுபேறெய்தற்பொருட்டு வைத்த கருணையேயாம். கருணையாயினும் காரண மிருவேறுவகைப்பட நிகழ்ந்தமையிற் பயனு மிருவேறுவகைப்படச் செய்வனென்பதாம்.*

நிக்கிரக கங்க டானு நேசத்தா லீசன் செய்வ
தக்கிர மத்தாற் குற்ற மடித்துத்தீர்த் தச்சம் பண்ணி
யிக்கிர மத்தி னேலு மிறைசெய லருளே யென்றும்.

சுப — பதவுரை

ஈசன் – முதல்வன்,—நிக்கிரகங்கள் செய்வது தானும்– (அநுக்கிரகஞ்செய்தலே யன்றி அங்ஙனம் அகிதஞ்செய் தாரைக்) கண்டித்தலும், — நேசத்தால் – கருணையினால் (நல்வழிப் படுத்தற் பொருட்டேயாம்),—அக்கிரமத்தால் குற்றம் – அக்கிரமத்தாற் செய்யப்பட்ட குற்றங்களை,—

அடித்துத் தீர்த்து அச்சம் பண்ணி – கண்டித்து நீக்குதலான் அச்சமுண்டாகச்செய்து,—இக்கிரமத்திலேலே ஈண்டு அறம் இயற்றிடு என்பன் – இம்முறைமையால் இங்ஙனம் அறத்தினைச் செய்திடல் வேண்டுமென உணர்த்துவன்,—எக்கிரமத்திலும் – (திரோபவித்தல் சங்கரித்தல்களுட்பட்ட) எம்முறையாலும், — இறை செயல் என்றும் அருளே–அம்முதல்வன் செய்தி எஞ்ஞான்றுங் கருணையாதற்கு இழுக்கில்லை என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அங்ஙனம் அகிதஞ்செய்தாரைக் கண்டித்தல் நல்வழிப்படுத்தற் பொருட்டே யாகலின், அதுவுங் கருணையாதற்கிழுக்கில்லை யென்பதாம்.*

தான் அசை.

உம்மை இறந்ததுதழீஇயிற்று; சிறப்புமாம்.

திரோபவித்தல் சங்கரித்தலுட்பட்ட செயல்களும் அருளே யென்பார், எக்கிரமத்திலுமிறைசெயலருளேயென்றூர்; ஏகாரந் தேற்றம். (15)

தந்தையாய் பெற்ற தத்தம் புதல்வர்க டஞ்சொ லாற்றின்
வந்திடா விடினு றுக்கி வளாரினை லடித்துத் தீய
பந்தமு மிடுவ ரெல்லாம் பார்த்திடிற் பரிவே யாகு
மிந்தநீர் முறைமை யன்றே வீசனர் முனிவு மென்றும்.

சுப — பதவுரை

தந்தைதாய் – உலகத்துத் தந்தை தாயர்கள்,—பெற்ற தத்தம் புதல்வர்கள் – பெறப்பட்ட தம்முடைய புதல்வர்கள்,—தம் சொல்லாற்றின் வந்திடா விடின் – தம்முடைய சொல்வழி ஒழுகாராயின்,—உறுக்கி வளாரினால்

அடித்து – உரப்பி வளாரினாலே அடித்து.—தீய பந்தமும் இடுவர் – தீய விலங்கும் இடுவராகலான்,—எல்லாம் பார்த்திடின் – இன்னோரன்னவை பார்க்குமிடத்துச் (செயல் வகையான் வெகுளிபோலத் தோன்றினும்),— பரிவே ஆகும்–(கருத்து வகையான்) அருளேயாதல் (கடைக்கால்) அறியப்படும்.—என்றும் ஈசனர் முனிவும் – எக்காலமும் முதல்வனிக்கிரகமும். — இந்த நீர் முறைமை அன்றே – இந்த இயல்புபோலு முறையாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இன்னோரன்னவை செயல்வகையான் வெகுளி போலத் தோன்றினுங் கருத்துவகையான் அருளேயாதல் கடைக்கா லறியப்படு மென்பதாம்.

நீர்முறைமை உவமைத்தொகை. நீர்மை இயல்பு.

இவைகான்கு செய்யுளானும் மீமாஞ்சகர்மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து, 'மன்னியவினைப்பலன்கடருமர' னென்றது பொருந்தாமாறும் அதுபற்றி அவனுக்கிழுக்கின்மையுங் கூறப்பட்டன. (16)

செயல்களே பலத்தைச் செய்யுந் தெய்வம்வேண் டாவிங் கென்னின், முயலுமிச் செயல்க ளிங்கே முழுவது மழியு மெங்கே, பயனளிப் பனவ ழிந்தே பலன்களைப் பண்ணுங் கெட்டே, வயலிடுந் தழையுந் தின்னு மருந்தும் பின் பலிக்கு மாபோல்.

செய்க்கிடுந் தழையுந் தின்னுந் திரவிய மதுவும் போல, வுய்த்திடுஞ் செய்தி கெட்டே யுறுவிக்கும் பலத்தை யென்னின், வைத்திடுஞ் சோறும் பாக்கு மருந்தினர் வயிற்றின் மாய்ந்தான், மெய்த்திடும் பல முனக்கு மலமலான் வேறு முண்டோ.

சுப் — பதவுரை

செயல்களே பலத்தைச் செய்யும் – (அற்றாயினும்) வினைகளே தம்பயனைத் தோற்றுவிக்க வல்லுமாகலின்,— இங்குத் தெய்வம் வேண்டா என்னின் – ஆண்டைக்கு முதல்வன் மிகையாம் போலுமென்றல் (பொருந்தாது),- முயலும் இச்செயல்கள் இங்கே முழுவதும் அழியும் -- செய்த அவ்வினைகள் (செய்தபொழுதே) ஈண்டு முழுதுங் கெட்டொழிவனவாகலின்,—எங்கே பயன் அளிப்பன்- பின்னின்று பயன்றருதல் செல்லாமையானும், — வயல் இடும் தழையும் தின்னும் மருந்தும் – செய்யின்கண் இட்ட தழைகளும் அருந்தப்பட்ட மருந்துகளும்,—கெட்டே பின் பலிக்கும் ஆ போல் – கெட்டுப் பின்னே பலிக்கு மாறுபோல, — அழிந்தே பலன்களைப் பண்ணும் – கெட்டுப்பயன்றருதலே பொருத்தம்,—செய்க்கு இடும் தழையும் தின்னும் திரவியமதுவும் போல – வயலின்கண் இட்ட தழையுந் தின்னப்பட்ட பதார்த்தங்களும் போல, — உய்திடும் செய்தி கெட்டே – முயற்சியாகிய வினைகெட்டே,—பலத்தை உறுவிக்கும் என்னின் – பலத்தைப் பொருந்தச் செய்யுமென்னின்,—வைத்திடும் சோறும் பாக்கும் – வைத்திடப்பட்ட சோறு முதலிய வுணவுகளும் பாகடை முதலியனவும், — அருந்தினர் வயிற்றின் மாய்ந்தால் – உண்டார் வயிற்றின்கண் மாயப்பெற்றால்,– உனக்கு மெய்த்திடும் பலம் – உனக்கு மெய்யின்கண்ணதாய் வரும் பலம்,—மலம் அலால் வேறும் உண்டோ – மலமன்றி வேறில்லை ஆதலின் (கெட்டவை பயன்றருமென்பது அங்ஙனஞ் சிலவற்றினன்றி யாண்டுஞ் செல்லாமை யானும்) என்க.

சிவ — பொழிப்புரை

எ·து அற்ருயினும், வினைகளே தம்பயனைத் தோற்று விக்க வல்லுமாகலின் ஆண்டைக்கு முதல்வன் மிகையாம் போலுமென்றல் பொருந்தாது, செய்தவினை செய்த பொழு தே கெட்டொழிவதாகலிற் பின் னின் ருய பயன்றருதல் செல்லாமையானும், கெட்டுப் பயன்ருருதலே உலகத்துப் பொருள்களிற் கண்டாமெனிற் கெட்டவை பயன்றருமென் பது சி ல வற் றி னன் றி யாண்டுஞ் செல்லாமையானு மென்பதாம்.

'செய்க்கிடுங் தழையுந் தின்னுங் திரவிய மதுவும்போல வுய்த் திடுஞ் செய்தி கெட்டேயுறுவிக்கும் பலத்தை' யென்றது, அனுவா தஞ்செய்து கொண்டது.

மெய்த்திடும் பலம் மெய்யின்கண்ணதாய் வரும் பலம்.

அற்றேல், கெட்டுப்பயன்றருதல் சிலவற்றினுயினுங் காணப் படுதலின் வினையுமவ்வாறுகெட்டுப் பயன்றருமென்பது அமை வுடைத்தென்பாரை நோக்கி அதனை மறுத்தற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. (17 – 18)

திரவிய மூவமை யன்று செய்திக்கட் டிரவி யங்கள்
விரவிய விடத்தே வீந்து பலந்தரு மிம்மை யம்மை
பரவிநீ பார்நீ ரங்கி பாத்திரத் திட்ட வெல்லாங்
கரவிடு மிங்கே யெங்கே பலன்கொளக் கருதி னுயே.

சுப — பதவுரை

திரவியங்கள் – ஈண்டெடுத்துக் காட்டிய தழை முத லிய பொருள்களும்,—விரவிய இடத்தே வீந்து–தாங்கிடந்த விடத்தேகெட்டு,—பலம் தரும்–ஆண்டே பயன் றருவன வாம்,—இம்மை அம்மை – (வினை அவ்வாறன்றி) இவ்

வுடம்பிற் செய்வது ஈண்டேகெட்டு மற்றோருடம்பிற் பயன்தருமாகலின்,—செய்திக்கண் திரவியம் உவமை அன்று—வினைக்குத்திரவியம் உவமை ஆகாமையானும்(அற்றேல் சேர்ந்தவிடத்திற் பயன்றராது கேடுமாத்திரமுடைய பொருள்களும் பலவுளவாகலின் அவை மற்றோரிடத்திற் பலிக்குமெனக்கொண்டு அவற்றோடு உவமிக்க அமையுமெனின்),—அங்கி பாத்திரத்து இட்ட நீர் எல்லாம் இங்கே கரவிடும் – (ஓரிடத்திற் கெட்ட பொருண் மற்றோரிடத்திற் பலித்தலில்லையென்பது) தீயொழுகக்காய்ந்த கலத்தில் வாக்கிய நீர் முதலிய ஈண்டுச் சுவறலின்கட் காணப்படுதலானும்,—எங்கே பலன் கொளக் கருதினுமே – வேறிடத்திற் பயனுதற்குரிய வினை தானே பயனுகி வருமென்றல் கூடாது,—நீ பரவிப் பார் – (இவ்வுண்மையை) நீ புடைபட வொற்றி ஆராய்வாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *ஈண்டெடுத்துக் காட்டிய தழைமுதலிய பொருள்களுந் தாங் கிடந்தவிடத்தே கெட்டு ஆண்டே பயன்றருவனவாம்; வினையவ்வாறன்றி இவ்வுடம்பிற் செய்வ தீண்டே கெட்டு மற்றோருடம்பிற் பயன்றருமாகலின், அவை யிரண்டுங் தம்முளொவ்வாமையானும், அற்றேற் சேர்ந்த விடத்திற் பயன்றராது கேடுமாத்திரமுடைய பொருள் களும் பலவுளவாகலின் அவை மற்றோரிடத்துப் பலிக்கு மெனக்கொண்டு அவற்றோடுவமிக்கவமையுமெனின், ஓரிடத் திற் கெட்டபொருள் மற்றோரிடத்திற் பலித்தலில்லையென் பது தீயொழுகக் காய்ந்த கலத்தில் வாக்கிய நீர் முதலியவற் றிற் காணப்படுதலானும், வேறிடத்துப் பயனுதற்குரிய வினை தானே பயனுய் வருமென்றல் கூடாதென்பதாம்.*

செய்திக்கென்பது செய்திக்கண்ணென உருபுமயக்கம்.

பரவிப்பார்த்தல் புடைபடவொற்றியாராய்தல்.

அற்றேல், இம்மையம்மையாதல்பற்றி வேறிடமென வேண்டாம், இருமையினும் வினைசெய்தாரின் வேற்றுமையின்மையிற் செய்தார்வினை செய்தவாறிவின்கண்ணே யடங்கிச் செய்க்கிடுந் தழை முதலியனபோல ஆண்டே பயனைத் தோற்றுவிக்குமென அமையுமாகலின் திரவிய முவமையன்றென மறுத்தல் பொருந்தா தென்பாரை நோக்கி, அதனைப் பரிகரித்தற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. (19)

செய்தவர் மனத்தே யெல்லாச் செய்தியுங் கிடந்து பின்னை
யெய்தவே பலன்க ளீனு மென்றிடி னீருஞ்சு வர்க்கம்
பொய்யர்வாழ் நரகம் பூமி புந்தியிற் கிடந்து போந்த
தையனே யழகி துன்சொ லிந்திர சால மாய்த்தே.

சுப் — பதவுரை

செய்தவர் மனத்தே – வினைசெய்தவர் மனத்தின்கண்ணே,—எல்லாச் செய்தியும் கிடந்து – எல்லாவினைகளுந் தங்கி,—பின்னர் எய்தவே பலன்கள் ஈனும் என்றிடின் – பின்னர்ப் பொருந்தவே பயன்றருமெனின்,–இருஞ் சுவர்க்கம் பொய்யர் வாழ் நரகம் பூமி – (வினைக்குப்பயனுவன) பெரியதுறக்கம் பொய்யர் வாழ்கின்ற நிரயம் நிலமென்னும் இவற்றுட்பட்ட பல்வேறுவகைப் புவனபோகங்களாமன்றே,—புந்தியிற் கிடந்து போந்து – (அவையனைத்தும் வயலின் விளைவுபோல) ஆன்மபோதத்தின்கட் கிடந்து உளவாமென்றல்,—ஐயனே உன்சொல் அழகிது – ஐயனே உனதழகிதாய சொன்மாத்திரையேயன்றி,—இந்திரசாலம் ஆய்த்தே – பொருள்படாது என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. வினைக்குப் பயனைவன துறக்க நிரய நிலமென்னு மவற்றுட்பட்ட பலவேறுவகைப் புவனபோகங்களாமன்றே, அவையனைத்தும் வயலின் விளைவுபோல ஆன்மபோதத்தின் கட் கிடந்துளவாமென்றல் சொன்மாத்திரையேயன்றிப் பொருள்படாதென்பதாம்.

ஐயனேயென்பது இழித்தற்கண் வந்த குறிப்புமொழி.

செய்தவர்மனத்தைக் கூறவே, இனம்பற்றி ஏற்போர்மனமுங் கொள்ளப்படும்; அற்றுகலினன்றே, மறுத்தற்கட் 'புத்தியிற்கிடந்து போந்' தென்னப் பொதுவகையானெடுத்தோதி விடுத்ததூஉமென்க. (20)

தானஞ்செய் பொருட ரித்தோர் செய்தவர் தக்க செய்தி
யூனம்பின் னுறவே காண்டும் பலமுறு விப்பான் வேண்டு
மீனமில் செய்தி யீச னிடும்பணி யிவைநாஞ் செய்தா
னானங்க ளதிக நோக்கி துகர்விப்பன் வினைநோய் தீர.

சுப் — பதவுரை

(அற்றேல் அவ்வச்செய்தி அவ்வச்செயப்படுபொருளிற் கிடந்து பின்னர்ப் பயன்றருமெனக்கோடுமெனின்) தானம் செய்பொருள் – தானஞ்செய்யப்பட்ட பொருள் முதலியவும்,—தரித்தோர் – அவற்றை ஏற்றோரும்,—செய்தவர் – ஈந்தவரும்,—தக்க செய்தி – தக்க செய்தியுமாகிய அனைத்தும்,—பின் ஊனம் உறவேகாண்டும் – நிலை பேறின்றிக் கெட்டொழிவனவேயாகலான்,—பலம் உறுவிப்பான் வேண்டும் – (நிலைபேறுடையனுய்ப்) பயன்றரு முதற்கடவுள் வேறு வேண்டப்படும் (அற்றேல் முதற்

கடவுள் பயன்றருதற்கு இயைபென்னையெனின்),—ஈனம் இல் செய்தி—குறைவில்லாத முயற்சியாவது,—ஈசன் இடும் பணி – (முன்னை வினை அனுபவித்தற்பொருட்டுத் தரப் படு) முதல்வன தேவல்வினை யாகலான்,—இவை நாஞ் செய்தால் – அதனை நாமாக முனைத்து நின்று செய்தால்,—நூனங்கள் அதிகம் நோக்கி – (அது தீர்தற்பொருட்டு அச்செய்தியானை) பாவபுண்ணியங்களை அறிந்து,—வினை நோய் தீர நுகர்விப்பன் – அவை தீர்தற்குரிய பயன்றரு தல் அவ்வேவுவானுக்குக் கடப்பாடு என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அற்றேல். அவ்வச்செய்தி அவ்வச்செயப்படு பொருளிற் கிடந்து பின்னர்ப் பயன்தருமெனக் கோடு மெனின், செயப்படுபொருண் முதலியவனைத்தும் நிலை பேறின்றிக் கெட்டொழிவனவேயாகலான். நிலைபேறுடைய னைப் பயன்தரு முதற்கடவுள் வேறு வேண்டப்படும். அற்றேல், முதற்கடவுள் பயன்தருதற் கியைபென்னை? யெ னின்,—முயற்சியாவது முன்னைவினை அனுபவித்தற்பொருட் டுத் தரப்படு முதல்வனதேவல்வினை யாகலான் அதனை நாமாக முனைத்துநின்று செய்தால் அது தீர்தற்பொருட்டு அச்செய்தியானைய பாவபுண்ணியங்களை யறிந்து அவை தீர்தற்குரிய பயன்தருதல் அவ்வேவுவானுக்குக் கடப்பா டென்பதாம்.

தானஞ் செய்பொருளென்றது உபலக்கணம்.

அற்றேல், இச்செய்தி ஈசனிடும் பணியென்றற்குப் பிரமாண மென்னை? யெனின், அதுகாட்டுதற்கன்றே வருஞ்செய்யு ளெழுந்த தென்பது. (21)

உலகுடல் கரணங் கால முறுபல நியதி செய்தி
பலவிவை கொண்டு கன்மம் பண்ணுவ துண்பதானு
நிலவிடாதிவைதாஞ்சென்றுநின்னைத் துயிர்நிறுத்திக்கொள்ளா
தலகிலா வறிவ னீணை யணைத்திடு மருளி னாலே.

சுப் — பதவுரை

உலகு – வினைமுதற்காரகமாகியவுயிர்,—உடல்– இடமாகியவுடலும்,—கரணம் – கருவிகளாகியகரணமும்,—காலம் – முக்காலங்களுள் ஒன்றுகிய காலமும்,—உறுபலம் – பொருந்திய செயப்படுபொருளாகிய பலமும்,—நியதி – இன்னதற்காக இது பயனுகவென்பவைகளாகிய நியதியும்,—செய்தி பலவிவை கொண்டு – செயலாய செய்தியும் ஆகிய ஏழுகாரகங்களுந் தனக்குத் துணையாகக் கொண்டு,—கன்மம் பண்ணுவது உண்பது ஆனல் – வினைகளை ஈட்டலு நுகர்தலுமுடைத்தென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தமையின்,—இவைதாம் சென்று நிலவிடாது – (உயிரையின்றி அமைந்து தொழிற்படமாட்டாத சடமாகிய) அக்காரகங்கள் தாமே கூடமாட்டா,—உயிர் நினைந்து நிறுத்திக்கொள்ளாது – (அவற்றையின்றி யறியமாட்டாத சிற்றறிவுடைய) அவ்வுயிர் தானே கருதி நிறுத்திக்கொள்ளாது (இங்ஙனமாகலிற் பாரிசேட வளவையாலே),—அலகு இலா அறிவன் – அளவிட்டறிதற்கரிய சுதந்திரவறிவனுகிய முதல்வனே,—ஆணை அருளினுலே – தனதாணையாகிய திருவருளால்,—அணைத்திடும் – அவற்றை அவ்வவ்வுயிர்க்குப் பொருத்திச் செய்விப்பன் என்பது பெறப்படுதலின் அச்செயலெல்லாம் அவன் பணியேயாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. வினைமுதற்காரகமாகியவுயிர் ஏனையேழு காரகங்களுந் தனக்குத் துணையாகக்கொண்டு வினைகளையீட்டலும் நுகர்தலுமுடைத்தென்பது எல்லார்க்குமொப்ப முடிந்தமையின், உயிரையின்றி யமைந்து தொழிற்படமாட்டாத சடமாகிய அக்காரகங்களாதல் அவற்றையின்றி யறியமாட்டாத சிற்றறிவுடைய அவ்வுயிராதல் தாமே கூடமாட்டாமையிற் பாரிசேட வளவையாலே சுதந்திரவறிவனாகிய முதல்வனே தனதாணையாகிய திருவருளால் அவற்றையவ்வுயிர்க்குப் பொருத்திச் செய்விப்பனென்பது பெறப்படுதலின், அச் செயலெல்லாம் அவன் பணியேயாமென்பதாம்.

ஆதலா லச்செயலெலா மவன்பணியே யென்ப தது குறிப்பெச்சம்.

ஈண்டு உலகென்றது உயிர்களை.

இன்னதற்காக இது பயனுகவென்னும் இரண்டு காரகங்களையும் நியதியென்பதனாற் றழீஇயினர்.

பண்ணுவதுண்பதென்னுமொருமைகள் அத்தொழின் மேனின்றன.

அற்றேல், அப்பணி நூனங்களதிகமாமாறு யாங்ஙன?மெனின், அது வருஞ்செய்யுளிற் பெறப்படும். (22)

ஒழுக்கமன் பருளா சார முபசார முறவு சீலம்
வழுக்கிலாத் தவந்தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
பழுக்கிலாத் துறவ டக்க மறிவொடர்ச் சித்த லாதி
யிழுக்கிலா வறங்க ளாஞ லிரங்குவான் பணிய றங்கள்.

சுப் — பதவுரை

ஒழுக்கம் – உலகத்தோடொட்டவொழுகுத லுடைமையும்,—அன்பு – யாவர்மாட்டுங் காதலுடைமையும்,—அருள் – கருணையுடைமையும்,—ஆசாரம் – வேதாகமங்களின் விதித்தவாறு அனுட்டித்தலுடைமையும்,—உபசாரம் – தக்கோர் மாட்டுச்செய்யும் உபசரிப்புடைமையும்,—உறவு - யாவர்மாட்டுங்கலப்புடைமையும்,—சீலம்-நற்குணமுடைமையும்,—வழுக்கு இலாத்தவம் – (ஐம்பொறியடக்கல் விரதங்காத்தன் முதலிய) வழுவுதல் இல்லாத தவமுடைமையும்,—தானங்கள் – தக்கோர்மாட்டு உவகையோடு செய்யுந்தானங்களுடைமையும்,—வந்தித்தல் – தன்னின்மூத்தார்மாட்டு வழிபாடுடைமையும்,–வணங்கல் – வணங்குதலுடைமையும்,—வாய்மை – மெய்மையுடைமையும்,—அழுக்கு இலாத்துறவு – (பிறர்மனை விழையாமை வரைவின்மகளிர் விழையாமை முதலிய) குற்றமில்லாத ஆண்டகைமையுடைமையும்,—அடக்கம்–தீநெறிக்கட்செல்லாது அடங்குதலுடைமையும்,—அறிவொடு – தக்கன இவை தகாதன இவையெனப் பகுத்தறிதலுடைமையும்,—அர்ச்சித்தல் ஆதி – தன்னின் மூத்தார்மாட்டு அர்ச்சித்தலுடைமையுமாகிய பதினொறும் மற்றும் அவைபோல்வனவுமாகிய,—இழுக்கு இலா அறங்கள் ஆனல் – குற்றமில்லாத நன்மைகள் ஒருவனுக்கு உளவாயின்,—இரங்குவான் பணி - இரங்குவானது பணியாகிய அம்முயற்சி,—அறங்கள் – அறமாய் முடியும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *ஒழுக்கமுதலிய பதினொறும் மற்றுமவைபோல்வனவுமாகிய நன்மைகள் ஒருவனுக்குளவாயின் இரங்குவானது பணியாகிய அம்முயற்சி அறமாய் முடியுமென்பதாம்.*

எனவே, இவ்வொழுக்கமுதலியவற்றை மறுதலைத்த தீமைகள் ஒருவனுக்குளவாயின், அம்முயற்சி பாவமாய் முடியுமென்பதூஉம் பெற்றும்.

ஒழுக்கமென்றது ஈண்டு உலகத்தோடொட்ட வொழுகுதலே.

ஈண்டுத் துறவென்றது எல்லாநிலையினுஞ் சேறற்குரிய பிறர் மனைவிழையாமை வரைவின்மகளிர்விழையாமை முதலிய ஆண்டகைமையே யென்றுணர்த்துவார், அழுக்கிலாவென விசேடித்தார்.

அறிவாவது தக்கனவும் தகாதனவும் பகுத்தறிதல்.

'இனமலர் கையிற்கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றி' யென முன்வருதலின், ஈண்டு வந்தித்தல் வணங்கல் அர்ச்சித்தலென்பன தன்னின் மூத்தார்மாட்டுச் செய்வனவற்றையெனக் கொள்க.

ஒடு எண்ணின்கண் வந்தது.

இவ்வொழுக்க முதலியவெல்லாம் இயமநியமமென்னும் இருவகையுளடங்கி அறஞ்செய்வார்க்கெல்லாம் பொதுவகையான் வேண்டப்படு மங்கமாகலின் இவற்றை வேறெடுத்தோதினார். (23)

மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சொல்ல
வினமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுத லகற்றி வாழுஞ் செயலறை மாலை யார்க்கு
முனமொரு தெய்வ மெங்குஞ் செயற்குமுன் னிலையாமன்றே.

சுப் — பதவுரை

சினம் முதல் அகற்றி – (அவ்வொழுக்கமுதலிய நன்மைகளையுடையனுய்) அவற்றை மறுதலைத்த தீமைகளை

நீக்கி ஒழுகுவானெருவனுக்கு,—அங்கு இச்சித்ததெய்வம்-தன் கருத்துக்கு இயைந்ததொரு கடவுளே.—மனமது நினைய – மனத்தானினைந்து.—வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல – வாக்காற்றுதித்து மந்திரங்களே உச்சரித்து,—கையில் இனமலர்கொண்டு – கைகளால் இனமாகிய மலர்களைக்கொண்டு அர்ச்சித்து,—போற்றி வாழும் செயல் அறம் ஆனல் – வழிபட்டு வாழுஞ் செயலாகிய அறமும் உளதாயின்,—யார்க்கும் முனம் ஒரு தெய்வம்–முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளாகிய சிவபிரானே,—எங்கும் செயற்கு முன்னிலையாம் அன்றே – அத் தெய்வத்தினிடமாக நின்று அச்செயலை ஏற்றுக்கொண்டு பயனுதவும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அவ்வொழுக்கமுதலிய நன்மைகளையுடையனைப் அவற்றை மறுதலைத்த தீமைகளை நீக்கியொழுகுவானெரு வனுக்குத் தன் கருத்திற்கியைந்ததொரு கடவுளே மனமொழி மெய்களான் வழிபட்டு வாழுஞ்செயலாகிய அறமுமுள தாயின், முன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம்பொரு ளாகிய சிவபிரானே அத்தெய்வத்தினிடமாக நின்று அச் செயலை யேற்றுக்கொண்டு பயனுதவுமென்பதாம்.*

போற்றி வாழுஞ்செயலென வியையும்.

அகற்றியென்பது பெயர்; அகற்றிக்கென்னு நான்கனுருபு விகாரத்தாற்றொக்கது.

சினமுதலகற்றுதல் கூறவே, ஒழுக்க முதலியவுடைமை பெற்றும்.

மேற்கூறிய வொழுக்க முதலிய வங்கங்கட்கு ஈண்டுக் கூறிய வறம் அங்கியாகலின் உடனெடுத்தோதினர்.

அற்றேல், வழிபட்டார்க்கு வழிபடப்பட்ட அவ்வத்தெய்வமே பயன் கொடுக்குமென்றுற்படும் இழுக்கென்னே? யென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ் செய்யுளென்பது. (24)

யாதொரு தெய்வங் கொண்டூ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக ரர்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா னிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே.

சுப் — பதவுரை

(நால்வகையோனியுள் ஒருயோ னி வா ய்ப் பட் டுப் பிறப்பன யாவை அவையெல்லாஞ் சீவவர்க்கம் அவ்வா று பிறத்தலில்லது யாது அது பதிப்பொருளென்னும் இது வொன்றே ஏனைச்செயல்களான் வேற்றுமை அறியவா ராது அவ்விரண்டற்குந் தம்முள் வேற்றுமையறிய நிற்ப தாகலின்) மற்று அத்தெய்வங்கள்–ஏனைத்தேவ ரெல்லாம்,– வேதனைப்படும் - அங்ஙனம் வேதனையுற்று,—இறக்கும் பிறக்கும் – இறத்தல் பிறத்தலேயன்றி,—மேல் வினையும் செய்யும் ஆதலான் – மேலேயும் வினைசெய்தல் கேட்கப் படுதலானும்,—இவை இலாதான் – அவ்வினைகள் இல்லா தவன் சிவபிரானேயாகலானும்,—மாது ஒரு பாகனர்தாம் – அச்சிவபிரானொருவனே (வினைவயத்தனதலின்றி),—யா தொரு தெய்வம் கொண்டூர்–(நீர் எவ்விடத்தே) யாதொரு தெய்வத்தைப் பொருளாகக் கொண்டூராயினும்,—ஆங்கே அத்தெய்வம் ஆகி வருவர் – அவ்விடத்தே அத்தேவரிட மாகநின்று,—அறிந்து அருள் செய்வன் அன்றே –(உயிர்

கட்கு அவற்றை) அறிந்து கூட்டவல்லுவன் (ஏனைத் தேவர் அதுசெய்யமாட்டாரென்பது தானே போதரும்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. நால்வகை யோனியுள் ஒருயோனிவாய்ப்பட்டுப் பிறப்பன யாவை? அவையெல்லாஞ் சீவவர்க்கம். அவ்வாறு பிறத்தலில்லது யாது? அது பதிப்பொரு னென்னு மிது வொன்றே ஏனைச்செயல்களான் வேற்றுமையறிய வாராத வவ்விரண்டற்குந் தம்முள் வேற்றுமையறிய நிற்பதாகலின், ஏனைத் தேவரெல்லாம் அங்ஙனம் பிறந்திறத்தல் கேட்கப்படு தலானும், சிவனுக்கஃதுண்டென்பது யாண்டானுங் கேட்கப் படாமையானும், சிவனொருவனே வினைவயத்தனதலின்றி அவ்வத்தேவரிடமாக நின்று உயிர்கட்கு அவற்றையறிந்து கூட்டவல்லுவன்; ஏனைத்தேவர் அது செய்யமாட்டாரென் பது தானே போதருமென்பதாம்.

மற்று வினைமாற்று.

பொதுவகையானெடுத்துக்காட்டிச் சிறப்புவகையாற் கூறினு ராகலிற் பால்வழுவின்மையுணர்க.

அற்றேல், ஒருவரை வழிபட மற்றொருவர் பயன்கொடுத்தல் உலகத்திற் கண்டிலமென்பாரை நோக்கி அதுகாட்டுதற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (25)

இங்குநாஞ் சிலர்க்குப் பூசை யியற்றினு லிவர்க ளோவந் தங்குவான் றருவா ரன்றே லத்தெய்வ மத்த னோக்கா ணெங்கும்வாழ் தெய்வ மெல்லா மிறைவனு னீயினு னிற்ப தங்குநாஞ் செய்யுஞ் செய்திக் காணைவைப் பால ளிப்பன்.

சுப் — பதவுரை

சிலர்க்கு இங்கு நாம் பூசை இயற்றினுல் – பசுப்பார்ப் பார் தந்தைதாய் முதலாயினரை இம்மைக்கண்ணே நாம் வழிபட்டால்,—இவர்களோ வந்து அங்கு வான் தருவார் அன்றேல் - அஃதறிந்து மறுமைக்கட் பயன்தருங்கடவுள் வேறென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தமையின்,—அத் தெய்வம் அத்தனைக்காண் – ஈண்டும் அவ்வாருதல் அமை யும் (அற்றேல் தம்மை வழிபடார்க்கு அவ்வத்தேவரே எதிர்தோன்றி நின்று பயன் கொடுத்தாரெனவும் ஆண் டாண்டுக் கேட்கப்படுதலின் அவரும் அதற்கு வல்லுவர் போலுமென மலையற்க அரசனுணையே அமைச்சர் முதலா யினர் மாட்டு நின்று பிறர்க்களிக்குமாறுபோல),—இறை வன் ஆணையினுல் எங்கும் வாழ் தெய்வம் எல்லாம் நிற் பது – முதல்வனே தன்னுணையைத் தன்னேவல்வழி நிற் கும் அவ்வக்கடவுளர் மாட்டுவைத்து,—அங்கு நாம் செய் யும் செய்திக்கு–அவ்விடத்து நாஞ்செய்யுஞ் செய்திக்கு,— ஆணைவைப்பால் அளிப்பன் – அவ்வழித்தாகப் பயன் கொடுப்பன் (அவ்வாறன்றித் தாமே வினைத்துடக்கிற்பட் டுப் பரதந்திரராய் நிற்கும் அக்கடவுளர் பிறர்க்குப் பயன் கொடுக்குமாறு யாண்டையது என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *பசுப் பார்ப்பார் தந்தை தாய் முதலாயினரை இம்மைக்கண் வழிபட்டார்க்கு அஃதறிந்து மறுமைக்கட் பயன்தருங்கடவுள் வேறென்பது எல்லார்க்குமொப்ப முடிந்தமையின் ஈண்டுமவ்வாருதலமையும். அற்றேல் தம்மை வழி பட்டார்க்கு அவ்வத்தேவரே எதிர்தோன்றி நின்று பயன்*

கொடுத்தாரெனவும் ஆண்டாண்டுக்கேட்கப்படுதலின் அவரு மதற்கு வல்லுவர்போலுமென மலையற்க; அரசனுணையே அமைச்சர் முதலாயினர்மாட்டு நின்று பிறர்க்களிக்குமாறு போல, முதல்வனே தன்னுணையைத் தன்னேவல்வழி நிற்கும் அவ்வக்கடவுளர்மாட்டு வைத்துப் பயன்கொடுப்பன்; அவ்வாறன்றித் தாமே விணைத்துடக்கிற்பட்டுப் பரதந்திரராய் நிற்குமக்கடவுளர் பிறர்க்குப் பயன் கொடுக்குமாறு யாண்டையதென்பதாம்.

அற்றேல், அவ்வக்கடவுளர்மாட்டுச் செய்யும் வழிபாடுஞ் சிவபிரானே ஏற்றுக்கொண்டு பயனளிப்பனுயிற் பசுபுண்ணியமுஞ் சிவபுண்ணியமாவான் செல்லும்போலுமெனின்,— பசுபுண்ணியஞ் சிவபுண்ணியமெனப் பாகுபட்டது செய்வார் கருத்துவகையானன்றிக் கொள்வோர் கருத்துவகையானன்றுகலாற் செல்லாதென விடுக்க.

நிற்பதென்னுமொருமை அத்தொழின்மேனின்றது.

இவை நான்கு செய்யுளானும், ஈசனிடும்பணி நாஞ்செய்தலான் நூனங்களதிகமாமாறும் அவை நோக்கி நுகர்விக்குமாறும் பொதுவகையானுஞ் சிறப்புவகையானுந் தெரித்துணர்த்தப் பட்டன.

இனி அவை நூனங்களதிகமாதற்கட்படும் விசேடங் கூறுகின்றூர். (26)

காண்பவன் சிவனே யாரு லவனடிக் கன்பு செய்கை
மாண்பற மரன்றன் பாத மறந்துசெ யற்ங்க ளெல்லாம்
வீண்செயலிறைவன்சொன்ன விதிபறம்விருப்பொன் றில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்து கொள்ளே.

சுப் — பதவுரை

காண்பவன் சிவனே ஆனல் – (இத்துணையுங் கூறிய வாற்ருல் ஏனைக்கடவுளர் மாட்டுச் செய்யும் வழிபாடுகளை யும் ஏற்றுக்கொண்டு) அளிப்பவன் சிவபிரானென்பது பெறப்படவே.—அவன் அடிக்கு அன்பு செய்கை–அவன் றிருவடியை வழிபடுதலே,—மாண்பு அறம் – நல்லதோர் அறமாம்,—அரன்றன் பாதம் மறந்து செய் அறங்கள் எல்லாம் – அவன்றிருவடியை மறந்து செய்கின்ற அறங்க ளெல்லாம்.—வீண்செயல் – வீணென்பது போதருதலா னும்,—அறம் – புண்ணியமாவது,—இறைவன் சொன்ன விதி–(வேதாகமங்களின்) அவ்விறைவனுல் விதிக்கப்படும் விதியாகலானும்,—விருப்பு ஒன்று இல்லான் – ஒன்றினும் விருப்பிலனுகியும்.—பூண்டனன் வேண்டல் செய்யும் – (உயிர்கண்மாட்டுக் கருணை) பூண்டு விருப்பஞ் செய் கின்ற.—பூசனை புரிந்து கொள்ளே – (அவ்விறைவன்றிரு வடிப்) பூசனையே ஒருதலையாகச் செய்யற்பாற்று என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இத்துணையுங் கூறியவாற்ருல் ஏனைக் கடவுளர் மாட்டுச் செய்யும் வழிபாடுகளையும் ஏற்றுக்கொண்டளிப் பவன் சிவபிரானென்பது பெறப்படவே, அவனை வழிபடு தலே நல்லதோரறம், அவனையன்றிச் செய்வனவெல்லாம் வீணென்பது போதருதலானும், புண்ணியமாவது வேதா கமங்களின் அவ்விறைவனுன் விதிக்கப்படும் விதியாகலானும், ஒன்றினும் விருப்பிலனுகியும் உயிர்கண்மாட்டுக் கருணை பூண்டு விருப்பஞ்செய்யுமவ்விறைவன் திருவடிப்பூசனையே ஒருதலையாகச் செய்யற்பாற்றென்பதாம்.

இல்லான் பூண்டன னென்பன முற்றெச்சங்கள்.

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது.

அற்றேல், வாக்குமனாதீத கோசரமாகிய இறைவன் திரு மேனி கொண்டருளிய வழியுஞ் சுத்தசத்துவ புவனத்தினன்றி ஈண்டு வைகுதலின்மையின், அவனேயீண்டுள்ளார் எங்ஙனங்? கண்டு பூசிக்குமாறெனின், அஃதுணர்த்துதற்கெழுந்தது வருஞ் செய்யு ளென்பது. (27)

தாபர சங்க மங்க ளென்றிரண் டுருவி னின்று
மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளா வைப்ப
னீபரன் றன்னை நெஞ்சி னிணைவையே னிறைந்த பூசை
யாய்பரம் பொருளா நாளு மர்ச்சிநீ பன்பு செய்தே.

சுப் — பதவுரை

மாபரன்–(சதாசிவதத்துவத்தின் வைகும்) மாட்சிமை பெற்ற இறைவன்,—தாபர சங்கமங்கள் என்ற இரண்டு உருவில் நின்று – (புறத்தே திருக்கோயிலுள்ளிருக்குங்) திரு மேனியுந் திருவேடமுமாகிய இரண்டையும் ஆதாரமாகக் கொண்டு நின்றும்.—பூசை கொண்டு மன் உயிர்க்கு அருளைவைப்பன் – ஈண்டுள்ளார் செய்யும் பூசையைக் கொண்டு அவர்க்கு அருள் செய்வன்,—நீ பரன்றன்னை நெஞ்சில் நினைவையேல் – நீ அவ்விறைவனை அகத்தே சிந்திப்பையாயின்,—நிறைந்த பூசை (அவ்விறைவன் அவ்வகத்தே உயிரிடமாகக்கொண்டு நின்றும்) அந்நிறைந்த பூசையைக் கொண்டருளுவன்,—நீ ஆய்–(ஆகலான்) நீ அஃதறிந்து,—பரம்பொருளை நாளும் அன்பு செய்தே அர்ச்சி – பரம்பொருளை நாடோறும் அவ்விடங்களிற் பத்தி செய்து வழிபடுக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. சதாசிவதத்துவத்தின் வைகுமிறைவன், புறத்தே திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனியுந்திருவேடமுமாதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக் கொண்டுநின்றும் ஈண்டுள்ளார் செய்யும் பூசைகொண்டருளுவனுகலான், அஃதறிந்தவ்விடங்களின் வழிபடுகவென்பதாம்.

அரனடிக் கன்பர் செய்யும் பாவமு மறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினிற் பாலன் செய்த பாதக நன்மை யாய்த்தே.

சுப் — பதவுரை

(அறம் பாவங்கள் பயன்றருவது கொள்வாரது வன்மை மென்மைபற்றியன்றிச் செய்வாரது வன்மை மென்மை பற்றியாதல் செய்வினைகளது வன்மை மென்மை பற்றியாதல் அன்றுதலின்) அரன் அடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமது ஆகும் – முதல்வன் திருவடிக்கு அன்புடையார் செய்யும் பாவச்செய்கை அறமாய் முடியும்,—பரன் அடிக்கு அன்பு இலாதார் புண்ணியம் பாவம் ஆகும் – முதல்வன் திருவடிக்கு அன்பிலார் செய்யும் புண்ணியச் செய்கை பாவமாய் முடியும்,—(என்பதற்கு).—வரம் உடை தக்கன் செய்த மாவேள்வி தீமை ஆகி – (கடவுளரில்) வரங்கள் பெற்ற தக்கன் செய்த பெரிய யாக புண்ணியம் பாதகமாய் (முடிதலாகியஉடம்பாட்டானும்),—நரரினில் பாலன் செய்த பாதகம் நன்மை ஆய்த்தே–மானுடரில் இளமைபெற்ற சண்டீசநாயனர் செய்த கொலைப்

பாதகம் புண்ணியமாய் (முடிதல் ஆகிய எதிர்மறையா னும் அவ்விருவருமே சான்றுகளானுஞ் சிவபிரானையே அர்ச் சிக்கற்பாற்று) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அறம்பாவங்கள் பயன்றருவது கொள்வாரது வன்மை மென்மைபற்றியன்றிச் செய்வாரது வன்மை மென் மைபற்றியாதல் செய்வினைகளது வன்மை மென்மைபற்றி யாதலன்றென்பதற்கு உடம்பாட்டினுமெதிர்மறையினுந் தக் கனுந் தண்டசகாயரனுமே சான்றுகளானும் சிவபிரானையே அர்ச்சிக்கற்பாற்றென்றதாம்.*

இவை மூன்று செய்யுளானும் ஞானங்களதிகதோக்கி நுகர் வித்தற்கட்படும் விசேடங் கூறப்பட்டது.

இத்தனையும் மீமாஞ்சகர் மதம்பற்றியாசங்கித்துப் பரிகரித்து இருவினைகளதியல்பு கூறுகுத்தானும், அவை இறைபணியாமாறு கூறுமுகத்தானும், அவற்றை நாஞ்செய்யுமாறு கூறுமுகத்தானும், அவை பயன்படுமாறு கூறுமுகத்தானும், 'தாமே மருவிடா வடிவுங் கன்ம பலங்களு மறுமைக்கண்ணே' என்றதனை வலியுறுத்தியவாறு.

இனித் தரணியொடு தராபதிபோலென்ற உவமைப்பொருளைத் தெரித்துணர்த்துகின்றார். (29)

மறைகளீ சன்சொ லச்சொல் வழிவாரா வுயிரை வைக்குஞ் சிறைகண்மா நிரய மிட்ட பணிசெய்வோர் செல்வத் தோடு முறையுமா பதிக ளும்ப ருலகங்கள் யோனிக் கெல்லா மிறைவனு ணையினு லின்பத் தின்பங்க ளியைவ தாகும்.

சுப் — பதவுரை

(மேற் கூறியவாற்றுன் இருவினை முதலாயின அழி வெய்துவன வாகலானும் இதமகிதங்களெல்லாஞ் சிவபி ராளே ஏற்றுக்கோடலானும் அவனே இன்பத்துன்பங்கள் ஈவனென்பது போந்தது அதுவன்றியும்) மறைகள் ஈசன் சொல் – வேதாகமங்களாவன சிவபிரான் கற்பித்தருளிய வாய்மொழியே,–மா நிரயம் – பெரிய நரகமாவது,—அச் சொல் வழிவாரா உயிரை–அம்மொழி வழி நடவாதாரை,– வைக்கும் சிறைகள் – (தண்டித்தற்பொருட்டு) அவனுல் அமைக்கப்பட்ட சிறைக்களமே,—உம்பர் உலகங்கள் – துறக்க வுலகமாவது,—இட்ட பணி செய்வோர் – அம் மொழி வழி நடப்போரை,—செல்வத்தோடும் உறையும் மா பதிகள் – வாழ்வித்தற்பொருட்டு (அவனுல்) அமைக் கப்பட்ட கோ நகரமே யாகலானும்,—யோனிக்கெல்லாம் இன்பத்துன்பங்கள் – உயிர்கட்கு இன்பத்துன்பங்கள்,— இறைவன் ஆணையினுல் இயைவதாகும் - அவனாணையால் ஆகற்பாலனவே என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேற் கூறியவாற்றுன் இருவினை முதலாயின அழிவெய்துவன வாகலானும் இதமகிதங்களெல்லாஞ் சிவ பிராளே ஏற்றுக் கோடலானும், அவனேயின்பத்துன்பங்களீ வனென்பது போந்தது. அதுவன்றியும்,வேதாகமங்களாவன சிவபிரான் கற்பித்தருளிய வாய்மொழியே, நரகமாவது அம் மொழிவழி நடவாதாரைத் தண்டித்தற்பொருட்டு அவனுல மைக்கப்பட்ட சிறைக்களமே, துறக்கவுலகமாவது அம்மொழி வழி நடப்போரை வாழ்வித்தற்பொருட்டு அவனுலமைக்கப்

பட்ட கோனகரமேயாகலானும் உயிர்கட்கு இன்பத்துன்பங்கள் அவனலாகற்பாலனவேயென்பதாம்.

இயைவதென்னுமொருமை அத்தொழின்மேனின்றது. (30)

ஆணையா லவனி மன்ன னருமறை முறைசெய் யாரை
யாணையிற் றண்டஞ் செய்து மருஞ்சிறை யிட்டும் வைப்ப
ஞணையின் வழிசெல் வோருக் கரும்பதி செல்வ நல்கி
யாணையும் வைப்ப னெங்கு மாணையே யாணையே காண்.

சுப் — பதவுரை

அவனி மன்னன் – உலகத்து வேந்தர்,—ஆணையால் அருமறை முறை செய்யாரை - ஆணையாற்கிளந்த தமது அரிய மொழிவழி நடவாதாரை,—ஆணையின் தண்டஞ் செய்தும் அருஞ் சிறை இட்டும் வைப்பன். ஆணையினுல் ஒறுத்துப் பொறுத்தலரிய சிறைக்களப்படவும் வைப்பர்,– ஆணையின்வழி செல்வோருக்கு – அம்மொழிவழி நடப்போரை,—அரும் பதி செல்வம் நல்கி ஆணையும் வைப்பன் – பெரிய பதியுஞ் செல்வமும் ஈந்து வாழ்வித்துத் தங்கீழ் அதிகாரஞ் செய்ய வைப்பர்,—எங்கும் ஆணையே ஆணையே காண் – அமைச்சர் முதலாயினர்மாட்டு அவ்வாறு காணப்படும் ஆணையும் அவ் வேந்தரது ஆணையேயாம் (அதுபோல முதல்வன்மாட்டுங் கண்டுகொள்க) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. உலகத்து வேந்தர் ஆணையாற் கிளந்த தமது மொழிவழி நடவாதாரை ஒறுத்துச் சிறைக்களப்படவும் வைப்பர், அம்மொழிவழி நடப்போரை வாழ்வித்துத் தங்கீழதிகாரமுஞ்செய்யவைப்பர்; அமைச்சர் முதலாயினர்

மாட்டு அவ்வாறு காணப்படுமாணையும் அவ்வேந்தரதாணையே யாம். அதுபோல முதல்வன்மாட்டுங் கண்டுகொள்க வென்பதாம்.

ஈண்டு மறையென்றது மொழிமாத்திரையையுணர்த்தி நின்றது.

ஏகாரம் முன்னையது தேற்றம், பின்னையது அசைநிலை.

இஃது ஒட்டென்னுமலங்காரம்.

அற்றேல், அரசனாணை வேறுள்வழி இறைவனாணையே யாண்டு மென்றல் செல்லாதென்பாரை நோக்கி அஃதுணர்த்துதற் கெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (31)

அரசனுஞ் செய்வ தீசனருள்வழி யரும்பா வங்க
ளுரையுளோர் செய்யிற் றீய தண்டலின் வைத்துத் தண்டத்
துரைசெய்து தீர்ப்பன் பின்பு சொல்வழி நடப்பர் தூயோர்
நிரயமுஞ் சேரா ரந்த நிரயமுன் னீர்மை யீதாம்.

சுப — பதவுரை

தரையுளோர் அரும்பாவங்கள் செய்யின்--இவ்வுலகத்துள்ளார் பெரும்பாதகங்கள் செய்திடின்,—தீய தண்டலின் வைத்து – (அரசனனவன்) கொடிய தண்டஞ் செய்து,—தண்டத்து உரை செய்து தீர்ப்பன் – (மேலும் பாவஞ் செய்யின் இத்துணையினன்றி இன்னுங் கொடிதாகச் செய்வ லெனத்) தண்டத்தையெடுத்துச் சொல்லி (அச்சுறுத்தி) ஒழிப்பன்,—தூயோர் பின்பு சொல்வழி நடப்பர் நிரயமுஞ் சேரார் – அறிவுடையார் பின்பு விதிவழி நடந்து நிரயத்தின் அழுந்தார்,—அந்த நிரயம் ஈது முன் நீர்மை ஆம் –

அந்த நரகதண்டம் இவ்வரசதண்டம் போல முன்னுதற் கேதுவாகின்ற தன்மையுடையதாம் (இங்ஙனம் அரச தண்டம் வைத்தது நரகதண்டம் வாராமற் பாதுகாத்தற் பொருட்டும் நரகதண்டத்தை அறிவுறுத்தற் பொருட்டுமாகலான்).—அரசனும் செய்வது ஈசன் அருள்வழி—அவ்வரசனுணையும் முதல்வனுணையின் வழித்தாவதன்றிச் சுதந்திரமன்று என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அரசதண்டம் வைத்தது, நரகதண்டம் வாராமற் பாதுகாத்தற்பொருட்டாகலானும், நரகதண்டத்தை அறிவுறுத்தற்பொருட்டாகலானும், அவ்வரசனுணையின் வழித்தாவதன்றிச் சுதந்திரமன்றென்பதாம்.*

பாவஞ்செய்யிற் றண்டலின் வைத்துத் தண்டத்துரைசெய்து தீர்ப்பன் நிரய முன்னீர்மை யீதாமெனவே, புண்ணியஞ்செய்யின் அதற்குரிய வரிசையின் வைத்துத் தீர்ப்பன் அத்தத் துறக்க முன்னீர்மை யீதாமென்பதூஉம் பெற்றும்.

நிரயமுமென்னுமும்மை சிறப்பு.

தண்டத்துரைசெய்தலாவது மேலும் பாவஞ்செய்யின் இத்துணையினன்றி இன்னுங் கொடிதாகச் செய்வலென அத்தண்டத்தை யெடுத்துச் சொல்லி அச்சுறுத்துதல்; சாரியையுள்வழித் தன்னுருபு நிலையாது வருதல் இலேசாற்கொள்க; மோனையெழுத்துக் கேற்பத் தண்டமாகிய துரையைச் செய்தெனினு மமையும்; துரை மிகுதிப்பாடு; அது ''என்னுடைய துரைமாண்டவா பாடி'' (திருவாசகம், திருத்தோணோக்கம், செ-14.) என்பதனுனுமறிக.

முன்னீர்மை ஏதுப்பெயரோடு முடிந்த வினைத்தொகை; நீர்மையுடையதனை நீர்மையென்றுபசரித்தார்.

இவை மூன்றுசெய்புளாணும் தராபதிபோலத் தருமாறு தெரித்துக் கூறப்பட்டது.

அற்றேல், பாவமாத்திரையேயன்றிப் புண்ணியத்தையுந் தீர்த்தலெற்றுக்? கெனின், அது முன்னர்க் கூறப்படும். (32)

அருளினு லுரைத்த நூலின் வழிவாரா ததன்மஞ் செய்யி னிருளுலா நிரயத் துன்பத் திட்டிரும் பாவந் தீர்ப்பன் பொருளுலாஞ் சுவர்க்க மாதி போகத்தாற் புணியந் தீர்ப்பன் மருளுலா மலங்க ளீர்க்கு மருந்திவை வயித்திய நாதன்.

சுப — பதவுரை

அருளினுல் உரைத்த நூலின் வழிவாராது – கருணையினுல் உரைத்தருளிய வேதாகம நூல்வழி நில்லாது,—அதன்மம் செய்யின் – பாவஞ்செய்யின்,—இருள் உலாம் நிரயத் துன்பத்து இட்டு – இருள் செறிந்த நகரத்திட்டுத் துன்பத்தினை நுகர்வித்து,—இரும் பாவந்தீர்ப்பன் – பெரிய பாவத்தினை ஒழிப்பன்,—பொருள் உலாம் சுவர்க்கம் ஆதி போகத்தால் — அதிசயப்பொருள்கடங்கிய துறக்க முதலியவற்றின் வைத்து இன்பத்தினை நுகர்வித்து.—புணியந் தீர்ப்பன்-(நூல்வழி நின்று அருள்வழி நில்லாமையாகிய) புண்ணியத்தினை ஒழிப்பன்,—வயித்தியநாதன் – சிவபிரானுகிய வயித்தியன்,—மருள் உலாம் மலங்கள் – பந்தமுறுதற் கேதுவாகிய பாவபுண்ணிய மிரண்டும் (உயிர்க்குநோயாகலின்),—தீர்க்கும் இவை மருந்து – (அந்நோய்) தீர்த்தற்குரிய இன்பத்துன்பங்கள் மருந்தாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து வேதாகமநூல்வழி நில்லாமை பாவம், நூல்வழி நின்று அருள்வழிநில்லாமை புண்ணியம். இரண்டும்

உயிர்க்கு நோயாகலான் அவற்றுற் பந்தமுறுமைப்பொருட்டுச் சிவபிராகிய வைத்தியன் இன்பத்துன்பங்களாகிய மருந்தை நுகர்விப்பனென்பதாம்.

இஃது ஏகதேசவுருவகம். (33)

மருத்துவ னுரைத்த நூலின் வழிவரிற் பிணிகள் வாரா
வருத்திடும் பிணிக டப்பிற் றப்பிய வழியுஞ் செய்யத்
திருத்தினன் மருந்து செய்பா துறும்பிணி சென்றுந் தீர்ப்ப
னுரைத்தநூற் சிவனு மின்னே யுறுங்கன்ம மூட்டித் தீர்ப்பன்.

சுப — பதவுரை

நூலின் உரைத்த வழி வரின் – வாகட நூலின் உணர்த்திய வழி ஒழுகின்,—பிணிகள் வாரா – பிணிகள் வந்தணுகா,–தப்பின்-தப்பியவழியொழுக,–வருந்திடும் பிணிகள்-அங்ஙனம் ஆன்மிகத்தானும் பௌதிகத்தானும் வரும் பிணிகளை,—செய்ய மருந்து திருத்தினன் – அதற்குத் தக்க மருந்துகளைத் திருத்தியும்,—தப்பிய வழியுஞ் செய்யாது – தப்பிய வழி ஒழுகாதிருப்பவும்,—உறும்பிணி – தைவிகத்தான் வரும் பிணிகளை,—சென்றும் தீர்ப்பன் மருத்துவன்–(அவற்றிற்குத் தக்க வுபாயங்களாகிய தானம் பூசை ஓம முதலாயின வைகளிற்) செலுத்தியுந் தீர்த்திடுவன் மருத்துவன்,—இன்னே உரைத்த நூற்சிவனும் – இவ்வாறே வேதாகமங்களினுணர்த்தியவண்ணம் சிவபிரான்,—உறும் கன்மம் ஊட்டித் தீர்ப்பன் – உயிர்கட்குவரும் இருவினையைப் பலதிறத்தானும் ஊட்டித் தீர்ப்பன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து வாகடநூல்வழி யொழுகாது தப்பியவழியொழுக அங்ஙனமான்மிகத்தானும் பௌதிகத்தானும் வரும்

பிணிகளை அதற்குத் தக்க மருந்துகளைத்திருத்தியும், தப்பிய வழியொழுகாதிருப்பவுந் தைவிகத்தான் வரும் பிணிகளை அவற்றிற்குத் தக்க உபாயங்களிலே செலுத்தியும், தீர்த்திடுவன் மருத்துவன். இவ்வாறே சிவபிரானும் உயிர்கட்கு வரும் இருவினைப்பை பலதிறத்தானு மூட்டித் தீர்ப்பனென்பதாம்.

மேலுருவகஞ் செய்ததனைத் தெரித்துணர்த்தியவாறு.

தப்பியவழியுமென்ற வும்மை இழிவு சிறப்பின்கண்வந்தது.

திருத்தினனென்பது முற்றெச்சம்.

நன்மருந்தென்பதூஉம் பாடம்.

சென்றும் உம்மை இறந்தது தழீஇயிற்று; சென்றுமென்புழி விவ்விகுதி விகாரத்தாற் றொக்கது; ''குடிபொன்றிக் குற்ற மூமாங்கேதரும்'' (திருக்குறள், வெஃகாமை, செ – 1.) என்றுற் போல.

அவற்றிற்குத் தக்கவுபாயங்களிலே யென்பது அவாய் நிலையான் வந்தது; அவ்வுபாயங்களாவன:—தானம் பூசை யோமமுதலாயின.

செய்யாதென்னு மெதிர்மறை செயவெனெச்சத்திரிபு.

அற்றாயினும், துன்பதுகர்ச்சியேயன்றி இன்பதுகர்ச்சியும் மருந்தோடொக்குமாறு யாங்ஙன? மென்பாரை நோக்கி அஃதுணர்த்துதற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. (34)

மண்ணுளே சிலவி யாதி மருத்துவ னருத்தி யோடுந்
திண்ணமா யறுத்துக் கீறித் தீர்த்திடுஞ் சிலநோ யெல்லாங்
கண்ணிய கட்டி பாலுங் கலந்துடன் கொடுத்துத் தீர்ப்ப
ரண்ணலு மின்பத் துன்ப மருத்தியே வினைய றுப்பன்.

சுப் — பதவுரை

மருத்துவன் – மருத்துவனெவான்,—மண்ணுலே சில வியாதி – இவ்வுலகத்துள்ளார்க்கு உண்டாகிய சில வியாதிகளை,—அருத்தியோடும் திண்ணமாய் – ஆதரவும் உறுதியுமுடையவனெய்,—அறுத்துக் கீறித்தீர்த்திடும் – அறுத்துத் கீறித் தீர்த்திடுவன்,—சிலநோயெல்லாம்–சில வியாதிகளை,—கண்ணிய கட்டி பாலும் உடன் கலந்து கொடுத்துத் தீர்ப்பன்–கருதப்படுஞ் சருக்கரையும் பாலும் மருந்தோடு விரவிக் கொடுத்துத் தீர்த்திடுவன்,—அண்ணலும்–(அவ்வாறே) முதல்வன்,—இன்பத்துன்பம் அருத்தியே வினை அறுப்பன் – இன்பத்துன்பங்களாகிய மருந்தை நுகர்வித்து இருவினையாகிய நோயைத் தீர்ப்பன் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *இவை மூன்று செய்யுளானுந் தரணிபோலத் தருமாறு தெரித்துக்கூறப்பட்டது. இனி, அண்ணலருத்துமவ்வின்பத்துன்பங்களை உயிரருந்துமுறைமை எவ்வாறென்பார்க்கு இன்பத்துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து வருவது போவதாமாறு கூறுகின்றார்.*

இவை மூன்று செய்யுளானுந் தரணிபோலத் தருமாறு தெரித்துக் கூறப்பட்டது.

இனி, அண்ணலருத்துமவ்வின்பத்துன்பங்களை உயிரருந்துமுறைமை எவ்வா? றென்பார்க்கு இன்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து வருவது போவதாமாறு கூறுகின்றார். (35)

பூதனு சரீரம் போனைற் புரியட்ட ரூபந் தானே
யாதனு சரீர மாகி யின்பத்துன் பங்க ளெல்லா
நாதனு ராணை யுய்க்க நரகொடு சுவர்க்கந் துய்த்துத்
தீதிலா வணுவா போனி சேர்ந்திடுஞ் சீவ னெல்லாம்.

சுப — பதவுரை

பூதனுசரீரம் போனல்–இத்தூலவுடம்பு கழிந்தவழி,–புரியட்ட ரூபந்தானே – (தானுமுடன் கழிதலின்றி நிலை பெற்றுள்ளதாகிய) சூக்குமவுடம்பினின்றும்,—யாதனு சரீரம் ஆகி – (அவ்வினைப்பயன்களை அநுபவித்தற்குரிய) வெவ்வேறுடம்புகளுளவாதலான்,—சீவன் எல்லாம் – உயிர்களெல்லாம்,—நாதனுர் ஆணை உய்க்க – (அவ்வுடம்பொடு) நாதனுராணை செலுத்த (ச் சென்று),—சுவர்க்கமொடு நரகு இன்பத்துன்பங்களெல்லாந் துய்த்து–துறக்க நிரயத் தின்பத்துன்பங்களை நுகர்ந்து,—தீது இலா அணுவாய் – (பின்பு அவ்வினைச்சேடம் அநுபவித்தற்பொருட்டுக்) குற்றமில்லாத சூக்குமவுடம்பொடு (நிலத்திற் சென்று),—யோனி சேர்ந்திடும்–கருப்பாசயத்தைத் தலைப்படும் என்க

சிவ — பொழிப்புரை

எ–து. இத்தூலவுடம்பு கழிந்தவழித் தானுமுடன் கழிதலின்றி நிலைபெற்றுள்ளதாகிய சூக்குமவுடம்பினின்றும் அவ்வினைப்பயன்களை அனுபவித்தற்குரிய வெவ்வேறுடம்புகளுளவாதலான், உயிர்களவ்வுடம்பொடு நாதனுராணை செலுத்தச் சென்று துறக்க நிரயத் தின்பத்துன்பங்களை நுகர்ந்து பின்பு அவ்வினைச்சேட மனுபவித்தற்பொருட்டுச்

சூக்குமவுடம்போடு நிலத்திற் சென்று கருப்பாசயத்தைத் தலைப்படு மென்பதாம்.

ஆகியென்பது காரிய காரணப் பொருள்பற்றிவருஞ் செய வெனெச்சத்திரிபு.

பொன்விலங்குபோறலின் துறக்க வுடம்பையும் யாதனை சரீரமென்றார்.

நிலவுலகத்து வரும்போது அணுவாயோனி சேர்ந்திடுமெனவே, துறக்கநிரயங்களிற் செல்லும்போதும் யாதனைசரீரத்தைப்பற்றியே செல்லுமென்பது பெற்றாம்.

இங்ஙனம் பூதனைசரீரம் போனவழி யாதனைசரீரத்தைப் பற்று தற்கும் யாதனைசரீரம் போனவழிப் பூதனைசரீரத்தைப் பற்றுதற் கும் காலமிடையீடில்லைபோலுமெனின், அஃதுணர்த்துதற்கன்றே வருஞ்செய்யு ளெழுந்ததென்பது. (36)

உடல்விடா யோனி பற்றி யுதிப்பினு முதிக்கு மொன்றிற்
படர்வுறு துறும்பா வத்தாற் பாடாணம் போற்கி டந்து
கடனதாங் காலஞ் சென்றுற் கடுநர கதனில் வீழ்ந்தங்
கிடருறு முருவங் கன்மத் தளவினி லெடுக்கு மன்றே.

சுப் — பதவுரை

கன்மத்து அளவினில் – அவ்வவ்வினைகளது வன்மை மென்மைகட்கேற்ப,—உருவம் எடுக்கும் அன்றே – பூதனை சரீரம் போயவாறே யாதனைசரீரத்தை எடாது மற்றுமோர் பூதனைசரீரத்தை எடுத்தலுமுண்டு யாதனைசரீரம் போய வாறே பூதனைசரீரம் எடாது மற்றுமோர் யாதனைசரீரத்தை

எடுத்தலுமுண்டு (ஆகலான்),–உடல் விடா யோனிபற்றி-இவ்வுடம்பினை விட்டு (மற்றேருடம்புக்கேதுவாகிய மற்றெரு) யோனியிற்றங்கி,—உதிப்பினும் உதிக்கும் – உதித்தல் இடைவிடாது நிகழ்தலுமுண்டு,—ஒன்றிற் படர்வு உறுது – ஒரு யோனியிலே தங்காது,—உறும் பாவத்தால்–மிகுந்தபாவத்தால்,—பாடாணம் போல் கிடந்து – பாடாணம்போற் சிறிதுகாலந்தங்கி,—கடனதாம் காலம் சென்றால் – முறைமையாய அக்காலஞ் செல்லுங்கால்,—கடு நரகதனில் வீழ்ந்து–கொடிய நிரயத்தின்கண் வீழ்ந்து,—அங்கு இடர் உறும் – அவ்விடத்துத் துன்புற்றுப் பிறத்தலாகிய இடைவிட்டு நிகழ்தலுமுண்டு என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. அவ்வவ்வினைகளது வன்மைமென்மைகட்கேற்பப் பூதவுசரீரம் போயவாறே யாதவுசரீரத்தையெடாது மற்றுமோர் பூதவுசரீரத்தை யெடுத்தலுமுண்டு; யாதவுசரீரம் போயவாறே பூதவுசரீரமெடாது மற்றுமோர் யாதவுசரீரத்தை யெடுத்தலுமுண்டு இவையெல்லாம் இடைவிடாது நிகழ்தலுமுண்டு, இடைவிட்டு நிகழ்தலுமுண்டு என்பதாம்.

உம்மை எதிரது தழீஇயது.

பாவப்பயன் கூறவே, இனம்பற்றிப் புண்ணியப்பயனு மவ்வாறுதல் பெறப்படும்.

அற்றேல், இறந்தவுயிர் தானே மீளப் பிறக்குமெனின்,—உடம்பு முதலியனவு மிறந்தவை தானே மீளத்தோன்று மெனல் வேண்டும்; அஃதின்மையின், அதுவுமில்லையெனக் கிரீடாப்பிரமவாதி முதலியோர் கூறுங்கூற்றை யாசங்கித்து உவமைமுகத்தாற் பரிகரித்தற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (37)

பன்னக மண்ட சங்கள் பரகாயந் தன்னிற் பாய்வோர்
துன்னுதோன் முட்டை யாக்கை துறந்துசெல் வதுவேபோல
வுன்னிய வுயிர்க டூல வுடல்விட்டு வானி னூடு
மன்னிடு நனவு மாறிக் கனவினை மருவு மாபோல்.

சுப் — பதவுரை

பன்னகம் துன்னுதோல் (துறந்து செல்வதுவே போல)–நெருங்கிய (முன்னை) தோலாகிய வுடலினைவிட்டுச்சென்று (மற்றொரு தோலாகிய வுடலினைப்பற்றும்) பாம்புபோலவும்,—அண்டசங்கள் முட்டை (துறந்து செல்வதுபோல)–(முன்னை) முட்டையாகிய இடத்தினை விட்டுச் சென்று (மற்றோரிடத்தினைப்பற்றும்) பறவைகள் போலவும்,—பரகாயந்தன்னிற் பாய்வோர் யாக்கை துறந்துசெல்வதுவேபோல – (முன்னை) அச்சினைவிட்டுச் சென்று(மற்றோர் அச்சினைப்பற்றும்)பரகாயப்பிரவேசிகள் போலவும்,—உன்னிய உயிர்கள்–(முறையே) கருதப்படும் உயிர்கள் (தாம் வேறுகாது),—தூல உடல் விட்டு - தூல வுடலாகிய (முன்னை) உடம்பினைவிட்டு,—வானி னூடு (சென்று) – வானேறிச்சென்று,—மன்னிடும் – (மற்றோருடம்பி) னிலேபெறும்,—நனவுமாறிக் கனவினை மருவும் ஆபோல் – நனவுணர்வுமாறிக் கனவுணர்வைத் தலைப்படுமாறுபோல் அறிவு வேறுபட்டு என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *முன்னைத் தோன்முதலியவற்றை விட்டுச் சென்று மற்றொன்றினைப் பற்றும் பாம்பு முதலியனபோல, உயிர்களும் முன்னுடம்புவிட்டு வானேறிச் சென்று மற்றோ*

ருடம்பினிலேபெறும், நனவுணர்வு மாறிக் கனவுணர்வைத் தலைப்படுமாறுபோ லறிவுவேறுபட்டென்பதாம்.

சென்றென்பது சொல்லெச்சம்.

அறிவுவேறுபட்டென்பது அவாய்நிலையான் வந்தது.

நனவுகனவென்பன ஆகுபெயர்.

பன்னகமுதலிய நான்குந் தான் வேறுதலின்றியுந் தன்னுடலும் இடமும் அச்சும் அறிவும் வேறுதற்கும் முறையே யுவமையாயின.

இவைமூன்று செய்யுளானும் இவ்வுயிர் பிறந்திறந்து வருவது போவதாமாறு வகுத்துக் கூறப்பட்டது.

இவ்வாறு 'இருவினையென்னை'யென்பது முதற் 'பன்னகமண்டச' மென்பதீறாகக்கிடந்த முப்பத்துநான்கு செய்யுளும், இருவினையின்பத்துன்பத்தென்னு மேலைச்செய்யுளிற் கூறிய பொருள்களை அவ்வம்மதம் பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தி வகுத்துக் கூறினவெனக் காண்க. (38)

தன்மமோ டதன்ம மாகித் தானிரு பயனுந் தந்து
நன்மைதீ மையினு மின்பத் துன்பினு நாடிக் காண
முன்னமே யான்மா வின்றன் மும்மலத் தொன்ற தாகிக்
கன்மமு மூலங் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்.

சுப — பதவுரை

முன்னமே ஆன்மாவின்றன் கன்மமுந்தான் – (இத்துணையுங் கூறியவாற்றால்)முற்பிறவியிற் சதசத்தாகிய ஆன்மாவினாற் (செய்யப்படும்) கன்மமெனப்படுவது,—தன்ம

மோடு அதன்மமாகி – அறம்பாவ மென்று இருவகைத் தாய்,—இரு பயனும் தந்து – இருவகைக்கு முரிய பயன் றருதலான்,—மூலம் காட்டிக் காமிய மலமாய் – (செயப் படுபொருளாகிய தனக்கு) முதற்காரண மென்பது காட் டிக் கான்மிய மலமெனப்பட்டு,—மும்மலத்து ஒன்றதாகி- (பந்தமுறுத்துதல் ஒப்புமையான்) மும்மலத்துள் ஒன் றென வுடன்வைத் தெண்ணப்பட்டு,—நன்மை தீமை யினும் இன்பத்துன்பினும் – நன்மை தீமையாகிய காரண வேதுவானும் இன்பத் துன்பமாகிய காரிய வேது வானும்,—நாடிக் காண நிற்கும் – அனுமித் தறியுமாறு நிற்கும் என்க.

சிவ – பொழிப்புரை

எ-து இத்துணையுங் கூறியவாற்றாற் போந்த கன்ம மெனப்படுவது, சதசத்தாற் செய்யப்படுதலின் அறம்பாவ மென்றிருவகைத்தாய் இருவகைக்குமுரிய பயன்றருதலாற் செயப்படுபொருளாகிய தனக்கு முதற்காரண முண்டென் பது காட்டிக் கான்மியமல மெனப்பட்டுப் பந்தமுறுத்துத லொப்புமையான் மும்மலத்துளொன்றென உடன் வைத் தெண்ணப்பட்டுக் காரணவேதுவானுங் காரியவேதுவானும் அனுமித்தறியுமாறு நிற்கு மென்பதாம்.

மூலகன்மங் காரியமாய்ப் பரிணமித்தன்றிப் பயன்றராமை யின், ஏனையபோல வேறு வைத்தெண்ணப்படாதாயிற்று.

உம்மை சிறப்பு.

கான்மியம் காமியமென மரீஇயிற்று. (39)

இருவினை யநாதி யாதி யியற்றலா னுகர்வா லந்தம்
வருமலஞ் சார்ந்து மாயா வுருவுகண் மருவி யார்த்துத்
தருசெயன் முறைமை யாலே தான்பல பேதங் காட்டி
யருவதாய் நின்ற ரன்ற ஞணையி னமர்ந்து செல்லும்.

சுப் — பதவுரை

இருவினை நுகர்வால் இயற்றலால் வரும் – அவ்வினை தான் நாசோற்பத்தி பண்ணப்பட்டுச் சந்தானமாய் வருதலான்,—ஆதி அந்தம் அநாதி–(காரியப்பிரபஞ்சம்போல்) ஆதி அந்த முடைத்தாயும் பிரவாகாநாதியாய்,—மலம் சார்ந்து மாயா உருவுகள் மருவி - ஏனை ஆணவமல மாயா மலங்களின் காரியங்களோடுகூடி,—ஆர்த்துத் தருசெயல் முறைமையாலே – (உயிரைப்) பந்தித்துத் தனது காரிய வேறுபாட்டிற்கேற்ப,—தான் பல பேதம் காட்டி – (அவ்வவ்வுயிர்க்குப்) பலவேறு வகைப்பட்ட யோனிகளைத் தோற்றுவித்து,— அருவதாய் நின்று – சூக்குமமாய் நின்று,—அரன்றன் ஆணையின் அமர்ந்து செல்லும் – இறைவனாணையின் நடக்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அவ்வினைதான் நாசோற்பத்தி பண்ணப்பட்டுச் சந்தானமாய் வருதலாற் காரியப்பிரபஞ்சம்போல் ஆதியந்த முடைத்தாயும் பிரவாகாநாதியாய் ஏனையிரு மலங்களின் காரியங்களோடு கூடி உயிரைப் பந்தித்துத் தனது காரிய வேறுபாட்டிற்கேற்ப அவ்வுயிர்க்குப் பலவேறுவகைப்பட்ட யோனிகளைத் தோற்றுவித்துச் சூக்குமமாய் நின்று இறைவனாணையினடக்கு மென்பதாம்*

அரன்றனுணையினமர்ந்துசெல்லுமென்றது முடிந்ததை முடித்தல்.

இவை இரண்டு செய்யுளானும் அவ்விருவினையின் சொரூபம் இதுவென்பது கூறப்பட்டது. (40)

சங்கமந் தாப ரங்க டத்தங்கள் மத்துக் கிடா
வங்குரு யோனி மாறு மச்சுமா றுதிங் கென்னி
னிங்குமா னுடரி யற்றும் புண்ணியத் தின்ப வீட்ட
மங்குவான் சுரர்க ளாயோ நரர்களா யருந்து வாரோ.

சுப் — பதவுரை

தத்தம் கன்மத்துக்கு ஈடா – தத்தம் வினைக்கிடாக,—சங்கமம் தாபரங்கள் – சராசரமாகிய அவ்வவ்வுயிர்கள்,—அங்கு உருயோனி மாறும் – அச்சு அவ்வவ்யோனியின் மாறிப் பிறத்தலன்றி,—இங்கு அச்சு மாறுது என்னின் – ஈண்டை அச்சுமாறி மற்றொரு யோனியிற் பிறத்தலில்லை என்பதெனின்,—இங்கு மாநுடர் இயற்றும் புண்ணியத்து இன்ப ஈட்டம் – இவ்வுலகத்து மாநுடர் செய்யும் புண்ணியத்தின் பயனாகிய இன்பமிகுதியை,—அங்கு வான் சுரர்களாயோ நரர்களாயோ அருந்துவார் – மேலுலகத்தின் வாழ்கின்ற தேவர்களாய் அநுபவித்தலன்றி நரர்களாய் அநுபவிக்குமாறு யாங்ஙனம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. வினைக்கிடாக அவ்வவுயிரவ்வவ் யோனியின் மாறிப் பிறத்தலன்றி அச்சுமாறி மற்றொரு யோனியிற் பிறத்தலில்லை யென்பார்க்குக் கன்மநுகர்ச்சியாமாறு யாங்ஙனமென்பதாம். (41)

நரர்களாய்த் துய்ப்ப ரென்னி னரர்பதி சுரரு லோகஞ்
சுரர்களாய்த் துய்ப்ப ரென்னிற் சொன்னவச் சழியு மாகுஞ்
சுரர்களாய்ப் பலன்க டுய்த்துத் தாமிங்குத் தோன்றும்போது
நரர்களாய்ப் பிறப்பர் ஞாலத் தமரராய் நண்ணி டாரே.

சுப — பதவுரை

சுரர் உலோகம் நரர்களாய்த் துய்ப்பர் என்னின் - மேலுலகத்தில் மானுடவடிவாக அநுபவிப்பரென்னின்,—நரர் பதி – (அது) மண்ணுலகேயாம்,—சுரர்களாய்த் துய்ப்பர் என்னின்–தேவர்களாயே அநுபவிப்பரென்னின்,—சொன்ன அச்சு அழியுமாகும் – சொல்லிய அச்சு மாறுதலுண்மை (இனிது விளங்குமாகலின்),—சுரர்களாய்ப் பலன்கள் துய்த்து – தேவர்களாய்ப் பயனை நுகர்ந்து (துலைந்தவழி),—தாம் இங்குத் தோன்றும்போது – தாம் மீண்டு இவ்வுலகின் உதிக்கும்போது,—நரர்களாய்ப் பிறப்பர் – நரர்வடிவாய்ப் பிறப்பதன்றி,–அமரராய் ஞாலத்து நண்ணிடாரே–தேவராய் இவ்வுலகத்தின்கட் பொருந்திடார் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து கன்மநுகர்ச்சிக்கண் இம்மைமறுமைகளது இயல்பறிய வல்லார்க்கு அச்சுமாறுதலுண்மை இனிது விளங்குமென்பதாம்.

அற்றேல், சுரவடிவுமுதலாயின சுரவடிவுமுதலியனவாய் வேறுபடும்வழியும் அவ்வவ்வாகாரம் மாற்றலில்லையெனக் கொள்வார்க்கு அதுபற்றியிழுக்கென்னை? யென்பாரை நோக்கி வேறுமெடுத்துக் காட்டுதற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. (42)

வண்டுக ளாகி மாறு மயிர்க்குட்டி மற்றோர் செந்துப் பண்டைய வுருவந் தானே வேட்டுவ ணைப்பிற க்குங் கண்டுகொள் யோனி யெல்லாங் கன்மத்தான் மாறு மென்றே கொண்டன சமய மெல்லா மிச்சொனீ கொண்ட தெங்கே.

சுப் — பதவுரை

மயிர்க்குட்டி வண்டுகளாகி மாறும் மற்றோர் செந்துப்பண்டைய உருவந்தானே வேட்டுவணைப்பிறக்கும் – (இம்மையினும்) மயிர்க்குட்டி வண்டாக அச்சுமாறும் மற்றுமோர் புழுத்தன்பழையவடிவமே வேட்டுவணைக அச்சுமாறும் என்பது,—கண்டுகொள் – நீ (கண்கூடாக) அறியக்கிடத்தலானும்,—கன்மத்தான் யோனி எல்லாம் மாறும் என்றே சமயம் எல்லாம் கொண்டன–கன்மத்திற் கேற்ப யோனிகள் மாறுதல் உண்டெனவே எல்லாச்சமய நூல்கட்கும் ஒப்பமுடிந்த தாகலானும்,—இச்சொல் நீ எங்கே கொண்டது – (அக்காட்சியளவையோடும் உரையளவையோடு முரணி) நீ கூறும் இக்கூற்றுப்போலியாதலின் இதனை எங்கே கொண்டாய் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இம்மையிலும் வண்டுமுதலியன அச்சுமாறுதல் கண்கூடாயறியக்கிடத்தலானும், இஃதெல்லாச் சமயநூல் கட்கு மொப்பமுடிந்ததாகலானும், அக்காட்சியளவையோடும் உரையளவையோடும் மூரணிக் கூறுவார் கூற்றுப் போலி யென்பதாம்.

அற்றாயினும், வண்டுமுதலியனவற்றின் அவ்வச்சே பிறி தொன்றாய்ப் பரிணமிப்பதன்றி அஃதழிந்து வேறு தோன்றுவதன்

முகலான், அவற்றை மீண்டெடுத்துக் காட்டுதல் அமையாதென் பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (43)

அகலியை கல்ல தாரை ளரிபல பிறவி யாரனன்
பகலவன் குலத்திற் றோன்றிப் பாரெலா முழுது மாண்டு
நிகரிலா வரச ரகுஞ் சிலந்திநீ டுலகம் போற்றச்
சகமதி லெளிதா னன்றே மாவலி யாய்த்துத் தானே.

சுப் — பதவுரை

அ க லி யை ய – அகலியையானவள்,—கல்லதாளுள் – (கௌதமமுனிவனிட்ட சாபவயத்தாற்) கல்லாக அச்சழிந் தே மாறினனென்பதும்,—அரி – மாயோனனவன்,—பல பிறவியானுன் – (பிருகுமுனிவனிட்டசாபவயத்தான் மச்ச முதலியவாகத்) தசவிதத்தோற்றத்தினும் அச்சழிந்தே மாறினனென்பதும்,–சிலந்தி–சிலம்பிப்பூச்சியானது,–பக லவன் குலத்தில் தோன்றி – சூரிய வமிசத்தில் உதித்து,— பார் எலாம் முழுதும் ஆண்டு-பூமிமுழுவதும் ஆளும்படி, நிகர் இலா அரசன் ஆகும் – (முதல்வனருளான்) ஒப்பில் லாத அரசனாக அச்சழிந்தே மாறியதென்பதும்,—எளிதான் அன்றே – எளியானது,—சகமதில் – நிலவுலகின்கண்ணே, —நீடு உலகம் போற்ற - துறக்கவுலகத்துள்ளாரும் துதிக் கும்படி,—மாவலி ஆய்த்துத்தானே - (முதல்வனருளான்) மகாபலிச்சக்கரவர்த்தியாக அச்சழிந்தே மாறியதென் பதும் கேட்கப்படுதலான் (யாண்டும் அவ்வாறே தெளியப் படும்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அச்சு அழிந்தே மாறுதலும் அகலியை முதலி யோர் மாட்டுக் கேட்கப்படுதலான் யாண்டுமவ்வாறே தெளி யப்படு மென்பதாம்.

அகலியை முதலியோர்க்கு அங்ஙனமாறியதஞ் சாபவருள்களா ஞயதன்றிக் கன்மமாத்திரையா ஞயதன்றுகலான், அதுவே பற்றி யாண்டு மவ்வாறு கோடல் பொருத்தாதென்பாரை நோக்கி யெழுத்தது வருஞ்செய்யுளென்பது. (44)

செப்பினுப் மாற வேறு சிலர்விதி யாலே கன்மால்
வைப்புறும் யோனி யெல்லா மாறிவந் திடாவிங் கென்னி
னெப்படி யானுஞ் செப்திக் கிறைகரி யாவ னென்றே
முற்பட மொழிந்தே தெல்லா முதல்வன்றன் விதியேயாகும்.

சுப — பதவுரை

சிலர் விதியாலே வேறு மாறச்செப்பினுய்–சிலர் சாப வருள்களாலே அச்சழிந்தே மாறும்படி (வந்ததென்று) கூறி,—கன்மால் வைப்புறும் யோனி எல்லாம் மாறி வந்திடா இங்கு என்னின்–கன்மமாத்திரைக்கேதுவாய் அமைந்துள யோனிகளில் (உயிர் அச்சழிந்து) மாறுதலின்றென வண்டு நீ சொல்லின்,—எப்படியானும் – எவ்வகையானும்,—செய்திக்கு இறை கரியாவன் என்றே – (உயிர்கள்) செய்யுங் கன்மங்கட்கு முதல்வன் சான்றென்றே,—முற்பட மொழிந்தேன் - (மறைகளீசன்சொலென்பது முதலாக) மேற்கூறிப்போந்தாமாகலின்,—எல்லாம் முதல்வன்றன் விதியே ஆகும் - விஞைப்பய னெனப்பட்டன வெல்லாம் முதல்வனுடைய சாபவருள்களே யாதலின் விசேடமின்மையான் (ஓரிடத்திற்கண்டது யாண்டும் ஒக்கும்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மறைகளீசன்சொல்லென்பது முதலாக மேற் கூறிப்போந்தமையின், விஞைப்பயனெனப்பட்டனவெல்லாம்

முதல்வனுடைய சாபவருள்களேயாகலின் விசேடமின்மை யான் ஓரிடத்திற் கண்டது யாண்டு மொக்குமென்பதாம்.

விதியென்றது ஈண்டுச் சாபவருள்கண்மேற்று

இவை யைந்து செய்யுளானும் மீமாஞ்சகரி லொருசாரார் மதம் பற்றி ஆசங்கித்துப் பரிகரித்துத் தான் பலபேதங்காட்டியென மேற் கூறியது சாதிக்கப்பட்டது.

அற்றேல், கோக்கிற்றை கோக்கி நிற்குமுயிர் மற்றோரச் னைப் பற்றுதல் யாங்ஙனஞ் செல்லுமென்பாரை கோக்கியெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (45)

அவ்வவ யோனி தோறு மவ்வவ வுலகந் தோறும்
செவ்விதி னறிந்து கன்மஞ் சேர்ந்திடா சீவன் சேரா
விவ்வகை தம்மிற் சேர்வு மிறைசெய லானுஞ் செய்த
வெவ்வுரு வுந்தங் கன்மான் மாற்றுவ னிறைவன் ரூனே

சுப — பதவுரை

கன்மம் அவ்வவ யோனி தோறும் அவ்வவ உலகந் தோறும் செவ்விதின் அறிந்து சேர்ந்திடா - வினைகள் (சட மாகலின்) அவ்வவற்றிற்கீடாய தநுக்களையும் புவனங் களையும் நேராக அறிந்துசென்று அணையமாட்டா,— சீவன் சேரா – உயிர்கள் (சேதனமாயினும் தமக்கென அறிவின்மையான் அவையே) அவற்றது பயனை அறிந் தெடுத்துக்கொண்டு நுகரமாட்டா,—இவ்வகை தம்மிற் சேர்வும் – இங்ஙனமாதலின் மாயை வினைகளைக் காரியப் படுத்தி உயிர்கட்குச் சேர்த்தலும்,—இறை செயல் ஆனால்- இறைவனேயென்பது மேற்பாரிசேடவளவையாற் பெறப் பட்டமையின் (அஃது உயிர் முதலியவற்றின் செயலன்மை

யான்),—இறைவன் ருனே செய்த எவ்வுருவும்-இறைவன் செய்த எவ்வகை அச்சையும்,—தங்கன்மான் மாற்றுவன் –உயிர்கள் வினைக்கேற்ப இறைவன் மாற்றுவன் (ஆதலின் அதன்கண் ஆசங்கை என்னை) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மாயை வினைகளைக் காரியப்படுத்தி உயிர்க்குச் சேர்த்துவான் இறைவனேயென்பது மேற் பாரிசேடவளவையாற் பெறப்பட்டமையின், அஃது உயிர் முதலியவற்றின் செயலன்மையான் இறைவன் செய்த வச்சை இறைவன் மாற்றுதற்கண் ஆசங்கையென்னையென்பதாம்.

இவ்வென்பது வகாவீற்றுப் பலவறிசொல்.

இதனுன் மேலது வலியுறுத்தப்பட்டது.

அற்றேல், இவ்வாறு அச்சுமாறித் தோன்றுமாயிற் சற்காரிய வாதத்திற்கு இழுக்காம்போலுமென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (46)

மாறியிவ் வுருவ மெல்லாம் வருவதெங் கேகின் றென்னிற்
கூறிய சூக்கு மத்தா முருவெனிற் குறியொன் றென்னின்
வேறுரு குறியா மாரம் வீரசங் கிலியு மாகுந்
தேறிரீ பொருவ னலிச் செயலெலாஞ் சிவமு மாகும்.

சுப் — பதவுரை

இவ்வுருவமெல்லாம் மாறி வருவது எனின் – (அற்றேல் இவ்வாறு) அச்சுமாறித்தோன்றுவதாயின்,—எங்கேகின்று என்னின் - யாங்ஙன நின்றெனின்,—உருக்கூறிய

சூக்குமத்து ஆம்–தூலவுடம்பு அங்ஙனங் கூறிப்போந்த தன்மூலமாகிய சூக்குமவுடம்பினின்றும் உண்டாம்,—குறி ஒன்று என்னின் – காரணம் ஒன்(ருகக் காரியம் பல வாதல் அமையா)தெனின்,—ஒருவனுல் ஒரு குறி – செய்வானது ஆற்றலான் ஒரு பொன்,—வேரும் ஆரம் வீரசங்கிலியும் ஆகும் – ஆரம் வீரசங்கிலி முதலிய வெவ்வேறணி கலங்களாய்ப் பரிணமிக்குமாறுபோல,—சிவனுல் இச்செய லெலாம் ஆகும் – இறைவனது ஆற்றலான் ஒரு சூக்குமவுடம்பு வெவ்வேறு அச்சுக்களாய்ப் பரிணமித்துத் தோன்றுதல் உண்மையின்,—நீ தேறு – (ஆண்டுச் சற்காரிய வாதத்திற்கு இழுக்கில்லை யென்பதனை) நீ தெளிவாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. செய்வானதாற்றலான் ஒருபொன் வெவ்வேறணி கலங்களாய்ப் பரிணமிக்குமாறுபோல, இறைவனதாற்றலான் ஒருசூக்குமவுடம்பு வெவ்வேறச்சுக்களாய்ப் பரிணமித்துத் தோன்றுதலுண்மையின், ஆண்டுச் சற்காரியவாதத்திற் கிழுக்கில்லையென்பதாம். (47)

சூக்குமங் கெட்டுத் தூலந் தோன்றிடா சூக்கு மத்தி
னுக்கியோ ருடல்கி டப்பா தின்றுட லாக்குந் தன்மைக்
கோக்கிய சத்தி யுண்டா யுடறருங் கால முற்று
நீக்கிட மரம்பின் வேரோர் நீண்மர நிகழ்த்து மாபோல்.

சுப — பதவுரை

(அங்ஙனஞ் சூக்குமவுடம்பினின்றும் இத்தூலவுடம் பெல்லாம் வருவது ஆரம் வீரசங்கிலியானுற்போல ஒன்று

பிறிதொன்றுவதுமன்று) சூக்குமம் கெட்டுத் தூலந் தோன்றிடா – (வித்து மரமாஞற்போல) ஒன்று கெட்டு ஒன்று தோன்றுவது மன்று,—சூக்குமத்தின் ஆக்கி ஓர் உடல் கிடப்பது இன்று – (மதிக்கெழுகலைகள்போல)ஒன்றின்கண் ஒன்று கிடந்து தோன்றுவதுமன்று,—உடல் ஆக்குந் தன்மைக்கு–(மற்றென்னையோ) சூக்குமவுடம்பிற் றூலவுடம்புகள் உண்டாந்தன்மைக்கு(த் திருட்டாந்த மெனின்),—மரம் காலம் உற்று நீக்கிட – மரமானது இறுதிக்காலம் உறுதலான் நீங்கப்பட,—பின் வேர் ஓர் நீள் மரம் நிகழ்த்தும் ஆபோல் – பின்பு மரவேரின் மற்றொரு நீண்ட மரம் உண்டாதல் போலுமாகலின்,—ஒக்கிய சத்தி உண்டாய் உடல் தரும் – சூக்குமவுடம்பிற் றூலவுடம்புகள் யோக்கியமான சத்திரூபமாயிருந்து தோன்றுவன என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *அங்ஙனஞ் சூக்குமவுடம்பினின்றும் இத்தூலவுடம்பெல்லாம் வருவது, ஆரம் வீரசங்கிலியாஞற்போல ஒன்று பிறிதொன்றுவதுமன்று, வித்து மரமாஞற்போல ஒன்று கெட்டு ஒன்று தோன்றுவதுமன்று, மதிக்கெழுகலைகள்போல ஒன்றின்கணொன்று கிடந்து தோன்றுவதுமன்று; மற்றென்னையெனின்,— மரவேரின் மற்றொரு மரம்போலச் சூக்குமவுடம்பிற் றூலவுடம்புகள் சத்திரூபமாயிருந்து தோன்றுவன வென்பதாம்.*

சற்காரியமாதற்கட்படும் விசேடங் கூறியவாறு.

யோக்கியம் ஒக்கியமென மரீஇயிற்று. (48)

விதிப்படி சூக்கு மத்தே யுருவரும் வினையா லிங்கே
யுதித்திடா வுருவ மாக வுருவரு மரங்கள் வித்திற்
கதித்தெழு மரமும் வித்துங் கழியும்பின் னழியுஞ் சூக்க
மதிக்கெழு கலைகள் போல வருவது போவ தாமே.

சுப் — பதவுரை

உரு வரும் மரங்கள் – உருவமாய் விளங்குகின்ற மரங்கள்,—வித்தின் கதித்து எழும் (அவைக்கு முதலாகிய) வித்தினின்று தோன்றி எழும் (அதுபோல),—வினையால் விதிப்படி – வினைக்கேற்ப இறைவனுணையால்,—உரு – அத்தூலவுடம்புகள்,—சூக்குமத்தே வரும் – (அவைக்கு முதலாகிய) சூக்குமவுடம்பினின்றுந் தோன்றும்,—மரமும் வித்தும் கழியும் – அழிந்தவழி (அதற்கு மூலமாகிய) வித்தும் உடனழியும் (ஆதலின்),—பின் சூக்கம் அழியும் (என்னின்) – (அதுபோலத் தூலவுடம்பு கெட்டவழிப்) பின்னர் (அதற்கு முதலாகிய) சூக்குமவுடம்பு அழியும் போலுமெனின் (அற்றன்று சூக்குமத்திற் றூலந்தோன்று தன்மாத்திரைக்கு ஒருபுடை ஒப்புமையல்லது முற்றுவமை யன்மையான்),—மதிக்கு எழு கலைகள்போல வருவது போவதாமே – சந்திரனுக்கு உளவாகிய கலைபதினெறிற் காரணமாகிய ஒருகலை அழியாது நிற்க மற்றக்கலைகள் தோன்றுதலும் ஒடுங்குதலும்போல மூலமாகிய சூக்குமவுடம்பு அழியாது நிற்க அதினின்று தூலவுடம்புகள் தோன்றி ஒடுங்கும்.—இங்கே உருவமாக உதித்திடா – ஈண்டு (அத்தூலவுடம்புகள் தமக்கு ஒரு முதலில்வழி) உருவமாகத் தோன்றிடா (இவ் வருத்தாபத்தியால் அஃ துண்டென்பது அறியப்படும்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மரந்தோன்றுதல் வித்தையின்றி யமையாதவாறு போல, அத்தூலவுடம்பு தோன்றுதலுந் தனக்கொரு முதலில்வழிக் கூடாதென்னும் அருத்தாபத்தியால் அஃதுண்டென்பது அறியப்படு மென்பதாம்.

சூக்குமவுடம்புண்மைக்குப் பிரமாணங் கூறியவாறு; ஆண்டுத் தோன்றுமாசங்கையை நீக்குதற்பொருட்டு மதிக்கெழுகலைகள்போல வருவது போவதாமெனவு முடன் கூறினர். அற்றேல், தூலவடிவுக்குக்காரணம் ஐம்பெரும்பூதமேயமையும் சூக்குமவடிவு எற்றுக்? கெனின்,—அறியாது கூறினாய்; சற்காரியவாதத்திற் றூலப் பொருட்குக் காரணஞ் சூக்குமபூதமேயாவதன்றிப் பிறிதில்லையெனவும், அச்சூக்குமவுடம்பாவது சூக்குமபூதமெனப்படுந் தன்மாத்திரையானியன்ற வடிவாகலின் அதன் காரியமாதல்பற்றியே தூலவுடம்பை ஐம்பெரும்பூத வடிவென்பதெனவும், தெற்றெனவுணர்ந்து கொள்க. உருவருமரங்கள் வித்திற் கதித்தெழுமென்பது **எடுத்துக்காட்டுவமை**. மரமும் வித்தும் கழியுமென்பதுமது. அழியுஞ் சூக்கமென்னிலென்று உரைத்துக்கொள்க; சூக்கம் பாகதச்சிதைவு.

இவைமூன்று செய்யுளானுஞ் சூக்குமவுடம்பு முதற்காரணமா மாறுணர்த்தித் தான் பல பேதங்காட்டுதல்பற்றிச் சற்காரியவாதத்திற்கு இழுக்கின்மை கூறப்பட்டது.

அற்றேல், இப்பெற்றித்தாகிய சூக்குமவுடம்புக்கு மூலம் வேறில்லை போலுமெனின், அவ்வாசங்கை நீக்குதற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (49)

தூலமா முருவி னுக்குச் சூக்கும முதல தற்கு
மூலமா னதற்கு மூல மோகினி யதன்மு தற்றான்
மேலதாம் விந்து சத்தி சிவமிவை மிசையா மெல்லாஞ்
சாலவின் முகு மான்மாச் சிவத்தினைச் சார்ந்த போது.

சுப் — பதவுரை

தூலமாம் உருவினுக்கு முதல் சூக்குமம் – தூலவுடம் பிற்கு முதற்காரணம் சூக்குமவுடம்பு,—அதற்கு மூலம் மான் – அ தற்கு முதற்காரணம் மூலப்பகுதி,—அதற்கு மூலம் மோகினி – அதற்கு முதற்காரணம் மோகினி,— அதன் முதற்ருன் மேலதாம் – அம்மூலப்பகுதிக்கு முத லாகிய தானே பரமமுதற்காரணமெனப்படும், விந்துசத்தி சிவம் இவை மிசையாம் – (ஏனைக்) குண்டலினிசத்தியோ வெனின் (அது) சுத்தமாய் இவையனைத்திற்கும் வியாபக மாய் நிற்கும்,—எல்லாம் - இவ்விருவகைப் பிரபஞ்சமும், —ஆன்மாச் சிவத்தினைச் சார்ந்தபோது சால இன் று ஆகும் – ஆன்மாச் சிவத்தினைச் சார்தற்கு ஏதுவாகிய பக்குவகாலம் அமைதற் பொருட்டு இப்பெத்தகாலத்து உளவாவன என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. தூலவுடம்பிற்கு முதற்காரணஞ் சூக்குமவுடம்பு, அதற்கு முதற்காரணம் மூலப்பகுதி; அதற்கு முதற்காரணம் மோகினி, அதனேவ பரம முதற்காரணமெனப்படும். ஏனைக் குண்டலினிசத்தியோவெனின், அது சுத்தமாய் இவையனைத் திற்கும் வியாபகமாய் நிற்கும். இவ்விருவகைப்பிரபஞ்சமும் ஆன்மாச் சிவத்தினைச் சார்தற்கேதுவாகிய பக்குவகாலஞ் சாலுதற்பொருட்டு இப்பெத்தகாலத்துளவாவன வென்ப தாம்.

அதன் முதற்ருனென்பது அம்மூலப்பகுதிக்கு முதலாகியதா னென இருபெயரொட்டுப் பண்புத்தொகையாய் மோகினியின் மேனின்றது. அதன்முதற்ருனென்றனுவதித்து மேலதாமெனப்

பரமமுதற்காரணமாதல் கூறப்பட்டது; இவ்வாறன்றி முதலென்ற தனை எழுவாயாக வைத்துரைப்பார்க்கு, நகரமிரட்டித்தல் பொருந் தாமையுஞ் சித்தாந்தத்திற்கு ஏலாமையு முணர்க.

சிவமென்றது முன்னையது சுத்தமென்னும் பொருட்டு.

சாலவாகுமென வியையும்; சாலுதல் அமைதல்.

சார்ந்த வென்னும் பெயரெச்சம் ஏதுப்பெயர் கொண்டது.

இதனுனே மேலதன்கணிகழு மாசங்கை நீக்கி வருஞ்செய்யுட் குத்தோற்றுவாயுஞ் செய்யப்பட்டது.

'இருவினையின்ப' வென்னுஞ்செய்யுண்முதல் இதுகாறும் முதற் செய்யுளின் 'அலகிலா வுயிர்கள் கன்மத் தாணையி னமர்ந்து செல்ல' என்ற விரண்டாங்கூற்றை வலியுறுத்தியவாறு.

இனி, இருபத்திரண்டுசெய்யுளான் மூன்றுங்கூற்றின்கட்படும் முறைமையெல்லாந் தெரித்துணர்த்துகின்றார். (50)

மூன்றுமதிகரணம்.

அரன்விதி யருள தென்றீ றறைந்தன னதுவு முன்னே
தரைநர கருந்து றக்கந் தருகரணாதி யெல்லாம்
வருவதுஞ் செய்த நாதி மலங்களிம் மருந்தாற் றீர்த்துப்
பரகதி யதுவுந் தந்து பாதபங் கம்முஞ் சூட்டும்.

சுப் — பதவுரை

அதுவும்–(அவ்விருவகைப் பிரபஞ்சங்களும் ஆன்மாச் சிவத்தினைச்சார்தற்கு ஏதுவாகிய பக்குவகாலம் அமைதற்

பொருட்டு இப்பெத்தகாலத்து உளவாதலாகிய) அதுவும், —அரன் விதி (என்று) – (இலயம் போகம் அதிகாரமென்னும் அவத்தைகளினின்ற) இறைவன் செய்யுஞ் செய்தியென்றும்.–அருளதே என்று–(அது) கருணையேயென்றும். — முன்னே அறைந்தனன் – (தொகுத்தும் வகுத்தும்; மேலேகூறிப்போந்தாமாகலின்,—தரை நரகு அருந்துறக்கம் தனுகரணாதி எல்லாம் - பூமி நரகம் அரியதுறக்க முதலிய வற்றிற்சென்று (அவைக்குரிய பயனை அநுபவித்தற்கேதுவாகிய) தனுகரணாதிகளை,—வருவதும் செய்து–உளவாகச் செய்து,—அநாதி மலங்கள் - அநாதியாய மலகன்மங்களென்னும் நோய்களை,—இம் மருந்தால் தீர்த்து -அத்தனுகரணாதிகளாகிய மருந்துகளினாலே தீர்த்து.–பரகதியதுவும் தந்து–பரஞானத்தை விளக்கி,—பாதபங்கயமும் சூட்டும் – சிவானந்தப் பெரும்பேறும் அவனற் றரப்படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து எல்லாஞ் சிவத்தினைச் சார்ந்தபோது சாலவின் முதலாகியவதுவும் இலயம் போகம் அதிகாரமென்னும் அவத்தைகளினின்ற இறைவன் செய்யுஞ் செய்தியென்றும் அது கருணையேயென்றுந் தொகுத்தும் வகுத்தும் மேலே கூறிப்போந்தாமாகலின், அத்தனுகரணாதிகள் மலகன்மங்களாகிய நோய்க்கு மருந்தாக அவனாலமைக்கப்பட்டன; அவற்றால் அந்நோய் தீர்ந்தவழிப் பரஞானத்தை விளக்கிச் சிவானந்தப் பெரும்பேறும் அவனற்றரப்படுமென்பதாம்

கதியென்பது ஞானத்தினையுணர்த்தல் வடமொழிமதம்.

'முன்னேயறைந்தன' னென்றதனால் அமர்ந்துசெல்லத் தலைவனுதற்கட்படுமியல்பெல்லாம் ஈண்டே கூறற்பாலனவாயினும், ஒவ்வோரியைபு பற்றி ஆண்டாண்டு ஒருங்கு வைத்தோதப்பட்டன;

அவையெல்லாம் ஈண்டுய்த்துரைத்துக் கொண்டுணர்கவென்பதூஉ மாயிற்று. மாயாகாரியமெல்லாஞ் சிவத்தினைச் சார்தற்பொருட்டா மாறு யாங்ஙனே?மென்னும் ஆசங்கையை நீக்குதற்பொருட்டு, 'அகாதி மலங்க ளிம்மருந்தாற் றீர்த்துப் பரகதியதுவுந் தந்து பாதபங்கயமுஞ் சூட்டு' மென்றார். மலந்தீர்க்கு முகத்தான் அவையங்ஙனமாமென்ற வாறுயிற்று. ' இலனென்றதீயவைசெய்யற்க " (திருக்குறள், தீவினையச்சம், செ – 5) என்றாற்போல அன்னீறு ஈண்டுத் தன்மைக்கண் வந்தது. மேல்இன்பத்தன்பமருத்தியே வினையறுப்ப னென்றவாசிரியர், ஈண்டு மாயாகாரியங்களே மருந்தென்றன் மூலவாம் போலுமெனின்,—ஆகாது; நோய்தீர்தற்கு ஏதுவாயினவெல்லாம் மருந்தெனப்படுமாகலின். அது ''உற்றவன் றீர்ப்பான் மருந்து ழைச் செல்வானென்-றப்பாலுற் கூற்றே மருந்து'' (திருக், மருந்து செ – 10) என்பதனானுமறிக. இஃது ஏகதேசவுருவகம்.

இதனானே மேற்கூறிப்போந்த தூலம் சூக்குமம் மான்மோகினி விந்து வெல்லாம், மருத்துவனுக்கு மருந்துபோல, மல வயித்தியனாகிய அரனுக்குப் பரிக்கிரகவியூதியாதல் கூறப்பட்டது.

(51)

எழுமுடல் கரண மாதி யிவைமல மலமை லத்தாற், கழுவுவ னென்று சொன்ன காரண மென்னை யென்னிற், செழுநவை பறுவை சாணி யுவர்செறி வித்த முக்கை, முழுவதுங் கழிப்பன் மாயை கொடுமல மொழிப்பன் மூன்றென்.

சுப — பதவுரை

எழும் உடல் கரணம் ஆதி இவை மலம் - எழுகின்ற அத்தனுகரணமுதலியன மலமாகவும்,—மலம் மலத்தால் கழுவுவன் என்று சொன்ன காரணம் என்னை என்னின் - மலத்தை மலத்தால் நீக்குவனென்று கூறிய காரணம் யாதெனின்,—செழு நவை அறுவை அழுக்கை - அழுக்

தூடைய மெல்லிய ஆடையின் அழுக்கை,—சாணி உவர் செறிவித்து – சாணம் உவர்மண் முதலிய அழுக்கைக் கொண்டு,—முழுவதும் கழிப்பன் – முழுவதும் நீக்குதல் செய்யும் வண்ணான்போல,—முன்னோன் மாயை கொடு மலம் ஒழிப்பன் –முதல்வன் மாயேயமலத்தினை (மருந்தாகக்கொண்டு ஏனை) மலங்களைத் தீர்ப்பன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அழுக்கைக்கொண்டு அழுக்கை நீக்கவேண்டுதலின், மாயேயமலம் ஏனை மலங்கட்கு மருந்தாகக் கூறப்பட்டன வென்பதாம்.*

மலம் அழுக்கு என்பன ஒருபொருட்கிளவி.

இதனுனே மேலது வலியுறுத்தப்பட்டது.

இனி, அம்மாயை மாயேயங்களது இயல்பாவதுஎன்னை? யென் பார்க்கு, அதனை வகுத்துக் கூறுவான்றொடங்கினார். (52)

நித்தமா யருவா யேக நிலையதா யுலகத் திற்கோர்
வித்துமா யசித்தா யெங்கும் வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகந் தனுகர ணமுமு யிர்க்காய்
வைத்தலோர் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யு மன்றே.

சுப் — பதவுரை

மாயை–உலகிற்கு (முதற்காரணமெனப்படும்)மாயையாவது,—நித்தமாய் – நித்தமாகியும்,—அருவாய் – அருவமாகியும்,—ஏக நிலையதாய் – ஒன்றுகியும்,—உலகத்திற்கு ஓர் வித்துமாய் – உலகம் உண்டாதற்கு ஓர் வித்தாகியும்,–அசித்தாய்–சடமாகியும்,—எங்கும் வியாபியாய்-எவ்விடத்

தும் வியாபகமாகியும்,—விமலனுக்கு ஓர் சத்தியாய்-முதல் வனுக்கோர் பரிக்கிரகசத்தியாகியும்,—புவன போகம் தரு கரணமும் உயிர்க்காய் வைத்ததோர் மலமாய்-புவன்மும் போகமும் தனுவும் கரணமுமாக உயிர்களின்பொருட்டு விரிந்ததோர் மலமாகியும்,—மயக்கமும் செய்யும் அன்றே -- விபரீதவுணர்வினைச் செய்தலாகியும் உள்ள இலக்கணங் களை யுடையது என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. உலகிற்கு முதற்காரணமெனப்படும் மாயை யாவது நிமித்தமாதன் முதலிய இலக்கணங்களையுடைய தென்பதாம்.

மாயையின் சொரூபங் கூறுவார், புவனபோகந்தனுகரணமு முயிர்க்காயென்றும், அதுவும் மாத்திமிகர் மதம்பற்றிச் சூனியத் திற் செல்லாமைப்பொருட்டு உலகத்திற்கோர் வித்துமாயென்றும், அதுவுங் கணிகவாதிகள் மதம்பற்றிச் சார்பினிற் செல்லாமைப் பொருட்டு நித்தமாயென்றும், அதுவும் உலகாயதர் மதம்பற்றிப் பூதங்களிற் செல்லாமைப் பொருட்டு அருவாயென்றும், அதுவும் வைசேடிகர் முதலியோர் மதம்பற்றிப் பரமாணுக்களிற் செல்லா மைப்பொருட்டு எங்கும் வியாபியாயென்றும், அதுவுஞ் சாங்கியர் மதம்பற்றி முக்குணங்களிற் செல்லாமைப்பொருட்டு ஏகமிலயதா யென்றும், அதுவும் பாற்கரியர் மதம்பற்றிப் பிரமத்திற் செல்லா மைப்பொருட்டு விமலனுக்கோர் சத்தியாயென்றும், அதுவுஞ் சிவாத்துவிதர் மதம்பற்றிச் சிற்சத்தியிற் செல்லாமைப்பொருட்டு அசித்தாயென்றும், அதுவும் மாயாவாதி மதம்பற்றி அநிருவசனத் திற் செல்லாமைப்பொருட்டு வைத்ததோர் மலமாயென்றும், இத் தன்மைத்தாகிய மாயை ஆணவமலம்போல மயக்கமே செய்யு மென்னுஞ்சைவருளொருசாராரை மறுத்தற்பொருட்டு மயக்கமுஞ் செய்யுமென்றுங் கூறினர்.

செய்யுளாகலின் முறைபிறழ வைக்கப்பட்டன.

ஈண்டு மயக்கமென்றது விபரீதவுணர்வை; மயக்கமுமென்னு மும்மை, அது தன்னியல்பன்மையுணரின்றது. (53)

மாயையிற் கால மோடு நியதிபின் கலாதி தோன்று
மாயவக் கால மூன்று மாக்கியு மளித்தும் போக்கிக்
காயமோ டுலகுக் கெல்லாங் காலசங் கையினைப் பண்ணி
நாயக னாணை யாலே நடத்திடுஞ் சகத்தை யெல்லாம்.

சுப் — பதவுரை

மாயையின் – அத்தன்மைத்தாகிய மாயையினின்றும், – காலமோடு–காலதத்துவமும்,—நியதி–நியதிதத்துவமும், —பின் கலாதி தோன்றும் – பின்னர்க் காலதத்துவ முதலியனவும் முறையே தோன்றுவனவாம், —ஆய அக்காலம்–அவற்றுள் ஒன்று கிய காலதத்துவமாவது,—நாயகன் ஆணையாலே மூன்றுய் – முதல்வன் ஆணையான் இறப்பு நிகழ்வு எதிர்வென முத்திறப்பட்டு,—ஆக்கியும் அளித்தும் போக்கி (யும்) காயமோடு உலகுக்கெல்லாம் – தோற்றம் நிலை இறுதியென்னும் முத்தொழிலுடைய தனக்குக் கீழுள்ள உடலும் உலகுமாகிய காரியப்பிரபஞ்சம் அனைத்தையும்,—கால சங்கையினைப் பண்ணி – காலவரையறையிற்படுத்தி,—சகத்தை எல்லாம் நடத்திடும் – கன்மத்தை வரை செய்து நிற்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து *அத்தன்மைத்தாகிய மாயையினின்றுங் காலமுதலிய தத்துவங்களுள வா. அவற்றுட் காலமாவதும் முதல்வனாணையான் முத்திறப்பட்டுத் தனக்குக் கீழுள்ள காரியப்பிர*

பஞ்சமனேத்தையுங் காலவரையறையிற் படுத்திக் கன்மத்தை வரைசெய்து நிற்குமென்பதாம்.

எண்ணும்மை முன்னருஞ் சென்றியையும்.

காயகனுணையாலே யென்பதனைத் தத்துவாதிகாரமுழுதினு மூய்த்துரைக்க. (54)

நியதிபின் றோன்றிக் கன்ம நிச்சயம் பண்ணி நிற்கு மயர்விலாக் கலைபின் றோன்றி யாணவ மொதுக்கிச் சித்தின் செயல்புரி கிரியா சத்தி தெரிவிக்குஞ் சிறிதே வித்தை யுயர்கலை பதனிற் றோன்றி யறிவினை யுதிக்கப் பண்ணும்.

சுப் — பதவுரை

நியதி பின் தோன்றி – நியதித்துவம் அக்காலத்தின் பின்னுக (மாயையினின்றும்) தோன்றி,—கன்ம நிச்சயம் பண்ணி நிற்கும் – (முதல்வன் ஆணையால்) அவரவர்செய்த கன்மம் அவரவரே நுகருமாறு நியமிக்கும்,—பின் அயர்வு இலாக் கலைதோன்றி – அதன்பின் (அம்மாயையினின்றே) அயர்ச்சியில்லாத கலாதத்துவம் தோன்றி,—ஆணவம் சிறிதே ஒதுக்கி – ஆணவத்தை ஏகதேசத்தில் நீக்கி,—சித்தின் செயல்புரி கிரியாசத்தி தெரிவிக்கும் – ஆன்மாவின் றொழில்செய்யுங் கிரியாசத்தியை விளக்கி (முதல்வன் ஆணையால் வினைக்கீடாகவரும் போகத்திற் செலுத்தி) நிற்கும்,—உயர் கலையதனில் வித்தை தோன்றி – உயர்ந்த அக்கலையினின்றும் வித்தியாதத்துவம் தோன்றி,—அறிவினை(ச் சிறிதே) உதிக்கப்பண்ணும் – அவ்வான்மாவினது ஞானசத்தியை ஏகதேசத்தில் விளக்கி (முதல்வன் ஆணையால் அப்போகத்தின்கட் செலுத்தி) நிற்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து நியதித்துவம் அக்காலத்தின் பின்ஞக மாயை யினின்றுந் தோன்றி அவரவர் செய்த கன்மம் அவரவரே துகருமாறு நியமிக்கும். அதன்பின் அம்மாயையினின்றே கலைதோன்றி ஆணவத்தை யேகதேசத்தினீக்கி ஆன்மாவின் கிரியாசத்தியை விளக்கி வினைக்கீடாக வரும் போகத்திற் செலுத்தி நிற்கும். அக்கலையினின்றும் வித்தை தோன்றி அவ்வான்மாவினது ஞானசத்தியை ஏகதேசத்தில் விளக்கி அதன்கட் செலுத்தி நிற்குமென்பதாம். (55)

விச்சையி னராகந் தோன்றி வினைவழி போகத் தின்க
ணிச்சையைப் பண்ணி நிற்குந் தொழிலறி விச்சை மூன்றும்
வைச்சபோ திச்சா ஞானக் கிரியைமூன் மருவி யான்மா
நிச்சயம் புருட ஞகிப் பொதுமையி னிற்ப னன்றே.

சுப — பதவுரை

விச்சையின் அராகம் தோன்றி – அவ்வித்தையினின்றும் அராகதத்துவம் தோன்றி,—இச்சையை வினைவழி போகத்தின்கண் பண்ணிநிற்கும் – ஆன்மாவினது இச்சாசத்தியை விளக்கி (முதல்வன் ஆணையால்) வினைக்கீடாக வரும் அப்போகத்திற் செலுத்தி நிற்கும்,—தொழில் அறிவு இச்சை மூன்றும் வைச்சபோது–(இவ்வாறு கலைமுதலிய மூன்றும்) தொழின்முதலிய மூன்றனையும் விளக்கியவழி,—ஆன்மா – கன்மத்தை வரையறுத்தலும் நியமித்தலும் செய்யுமுகத்தான் உபகரிப்பனவாய கால நியதிகளும் உளப்படப் பஞ்சகஞ்சுக முடையவுயிர்,—இச்சா ஞானக் கிரியை மூன் மருவி – அவ்விச்சைமுதலிய மூன்றனையும்

ஏகதேசத்தின் மருவி.—பொதுமையின் நிச்சயம் புருட ஞகி நிற்பன் அன்றே – பொதுவகையான் நிச்சயமாகிய புருடதத்துவமெனப் பெயர்பெற்று (முதல்வன் ஆணை யான் அப்போகத்தில் உன்முகமாய்) நிற்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ—து. அவ்வித்தையினின்றும் அராகந் தோன்றி இச்சாசத்தியை விளக்கி அப்போகத்திற் செலுத்திநிற்கும். இவ்வாறு கலைமுதலிய மூன்றுந் தொழின்முதலிய மூன்றனை யும் விளக்கியவழி, கன்மத்தை வரையறுத்தலும் நியமித்த லுஞ் செய்யுமுகத்தான் உபகரிப்பனவாய கால நியதிகளு முளப்படப் பஞ்சகஞ்சுகமுடையவுயிர், அவ்விச்சை முதலிய மூன்றனையு மேகதேசத்தின் மருவிப் பொதுவகையாற் புருடதத்துவமெனப் பெயர்பெற்று அப்போகத்தி லுன்முக மாய் நிற்குமென்பதாம்.

சிறப்புவகையாற் புருடதத்துவமென நிற்றல் மூலப்பகுதியிற் றோன்று மவிச்சைமுதலிய பஞ்சக்கிலேசமு முடைத்தாயவழி யென்பார், ஈண்டுப் பொதுமையினிற்பனென்றார்.

போகத்தன்முகமாகிய உயிரே புருடதத்துவமென நிற்பதன்றி வேறில்லையென்பதுணர்த்துவார், நிச்சயம் புருடஞகியென்றார். 56

வருங்குண வடிவாய் மூலப் பிரகிருதி கலையிற் றோன்றித்
தருங்குண மூன்று பொன்றிற் றுன்மூன்றுய் மும்மூன் றுகு
மிருங்குண ரூப மாகி யிபைந்திடு மெங்கு மான்மாப்
பெருங்குண வடிவாய்ப் போக சாதனம் பெந்த மாமே.

சுப் — பதவுரை

மூலப்பிரகிருதி கலையின் வரும் குணவடிவாய்த் தோன்றி – (அதன்பின்) மூலப்பகுதி கலையினின்றும் வருகிற (அவ்வியத்த) குணவடிவாய் (முதல்வன் ஆணையாலே) தோன்றி,—தரும் குணம் மூன்றுய் – (தன்கணின்றும் வியத்தமாய்த்) தரப்படுங் குணதத்துவம் (சாத்துவிக முதலிய) மூவகையாய்,—ஒன்றின் தான் மூன்றுய் மும் மூன்று ஆகும் – (அவற்றுள்) ஒவ்வொன்று முத்திறப் பட்டு ஒன்பது வகையாம்,—போகசாதனம் – போகத்திற் குரிய சாதனமாய் அதன்கட்டோன்றும் புத்தி முதலிய தத்துவங்களும்,—பெருங்குணவடிவாய்ப் பெந்தமாமே – பெரிய குணவடிவேயாய் (முதல்வன் ஆணையான்) உயிரைப் பந்திக்கும்,—எங்கும் ஆன்மா இருங்குணரூபமாகி இயைந்திடும் – அதனற் போக நுகரும் இடமெங்கணும் உயிரும் பெரிய அக்குணரூபமாய் நிற்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *அதன்பின் மூலப்பகுதி கலையினின்றும் அவ்வியததகுண வடிவாய்த் தோன்றித் தன்கணின்றும் வியத்தமாய்த் தரப்படுங் குணதத்துவஞ் சாத்துவிகமுதலிய மூவகையாய் அவற்றுளொவ்வொன்று முத்திறப்பட்டு ஒன்பது வகையாம். போகத்திற்குச் சாதனமாயதன்கட்டோன்றும் புத்திமுதலிய தத்துவங்களும் குணவடிவேயாய் உயிரைப் பந்திக்கும். அதனற் போகநுகருமிடமெங்கணும் உயிருமக் குணரூபமாய் நிற்குமென்பதாம்.* (57)

சித்தமா மவ்வி யத்தஞ் சிந்தனை யதுவுஞ் செய்யும்
புத்தியவ் வியத்திற் றோன்றிப் புண்ணிய பாவஞ் சார்ந்து
வத்துநிச் சயமும் பண்ணி வருஞ்சுக துக்க மோகப்
பித்தினின் மயங்கி ஞானக் கிரியையும் பேணி நிற்கும்.

சுப் — பதவுரை

சித்தமாம் அவ்வியத்தம் – (குணதத்துவத்திற்குக் காரணமெனச்) சித்திக்கப்பட்டதாகிய மூலப்பகுதி,—சிந்தனையதுவும் செய்யும் – (அக்குணதத்துவத்தைத் தோற்றுவித்தலேயன்றி) விபரீத வுணர்வுடையதாகிய அவிச்சையினையும் (முதல்வன் ஆணையாலே) தோற்றுவிக்கும்,—புத்தி அவ்வியத்தில் தோன்றி – (அதன்பின்) புத்தி தத்துவம் அந்தக்குணதத்துவத்தினின்றுந் தோன்றி,—புண்ணிய பாவம் சார்ந்து – (அவ்வவ்வுயிர்கள் செய்த) புண்ணியபாவங்கள் தன்பாற் சாரப்பட்டும்,—வரும் வத்து நிச்சயமும் பண்ணி – (அவ்விருவினைக்கீடாக) வந்த விடயத்தை (இஃது இன்னதென) நிச்சயித்தும்,—சுக துக்கமோகப் பித்தினின் மயங்கி – (நிச்சயித்தபின்னர்ச்) சுகதுக்கமோகவடிவாய்ப் பரிணமித்தும்,—ஞானக்கிரியையும் பேணி நிற்கும் – (பரிணமித்தவழி உயிரின்) அறிவு தொழில்கட்கு விடயமாகியும் (முதல்வன் ஆணையால்) நிற்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து குணதத்துவத்திற்குக் காரணமெனச் சித்திக்கப் பட்ட மூலப்பகுதி, அக்குணதத்துவத்தைத் தோற்றுவித்த லேயன்றி, விபரீதவுணர்வுடையதாகிய அவிச்சையினையுந் தோற்றுவிக்கும். அதன் பிறகு புத்திதத்துவம் அந்தக்

குணதத்துவத்தினின்றுந் தோன்றி அவ்வவ்வுயிர்கள் செய்த புண்ணியபாவங்கள் தன்பாற் சாரப்படுதலும், அவ்விரு வினைக்கீடாக வந்த விடயத்தை இஃதின்னதென நிச்சயித்தலும், நிச்சயித்தபின் சுகதுக்கமோகவடிவாய்ப் பரிணமித்தலும், பரிணமித்தவழி உயிரினறிவு தொழில்கட்கு விடயமாதலுமுடைத்தாய் நிற்குமென்பதாம்.

'சித்தமாமவ்வியத்தஞ் சிந்தனையதுவுஞ்செய்யு' மென்பதனைச் சித்தத்தின்மேல் வைத்தரைப்பாருமுளர்; "சிந்தைநினைவையம் — வந்து தருமனமொழிய வகுப்பொணுதே" (சிவப்பிரகாசம், பொது வதிகாரம், செ — 3) எனப் புடைநூலாசிரியரோதுதலின், மனத்தின் பின்னதா யதன்கணடங்குஞ் சித்தத்தை ஈண்டுக் கூறுதற் கோரியைபின்மையானும், புடைநூலாசிரியர் அவ்வாறோதாமையானும், சிவாகமங்களோடு முரணுதலானும், அவ்வுரை போலியென்றுழிக.

ஈண்டுச் சிந்தனையென்றது எற்புழிக்கோடலான் விபரீதவுணர்வின் மேற்றுயிற்று.

உம்மை இறந்ததுதழீஇயது.

கன்மாலென்றுற்போல வியத்தமென்பது அம்முக்கெட்டுருபேற்று வியத்திலென நின்றது.

அகமஞ் சுட்டுப்பொருட்டு.

சார்ந்து சாரப்பட்டு.

பேணி பேணப்பட்டு.

பித்துப்போல உயிரை மயக்குதலாற் சுகதுக்கமோகங்களைப் பித்தென்றார்; மயங்குதல் ஈண்டுப் பரிணமித்தல். (58)

ஆங்காரம் புத்தி யின்க ணுதித்தகந் தைக்கு வித்தா
யீங்கார்தானென்னேடொப்பாரென்றியானென்னதென்றே
நீங்காதே நிற்குந்தானு மூன்றதாய் நிகழு மென்பர்
பாங்கார்பூ தாதி வைகா ரிகந்தைச தந்தா னென்றே.

சுப் — பதவுரை

புத்தியின்கண் ஆங்காரம் உதித்து – அப்புத்திதத்துவத்தினின்றும் அகங்காரதத்துவம் தோன்றி,—ஈங்கு ஆர் தான் என்னேடு ஒப்பார் என்று – இவ்விடத்து யாவர் தான் என்னேடு ஒப்பவர் ஒருவரும் இல்லையென,—அகந்தைக்கு வித்தாய் – அகந்தைப்படுதற்குக் காரணமாய்,—யான் என்னது என்றே நீங்காதே நிற்கும் – (வாயிற் காட்சிக்கு விடயமாய்த் தோன்றியதென்றனை இஃது இன்னதென்று புத்திதத்துவம் நிச்சயிக்கும்படியாக) யானென்றும் எனதென்றும் (அதன்கண் ஒருப்பட்டெழுந்து ஆன்மாவோடு முதல்வன் ஆணையான்) வேற்றுமையின்றி நிற்கும்,—தானும் – அதுவும்,—பாங்கு ஆர் பூதாதி – குணவேற்றுமை பற்றிப் பகுப்பினையுடைய பூதாதியகங்காரமும்,—வைகாரிகம் – வைகாரியகங்காரமும்,—தைசதந்தான் என்றே – தைசதவகங்காரமுமென்னும் வேறுபாட்டால்,—மூன்றதாய் நிகழும் என்பர் – (முதல்வன் ஆணையான்) முத்திறப்படுமென மொழிந்தனர் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *அப்புத்திதத்துவத்தினின்றும் அகங்காரதத்துவந் தோன்றி, என்னேடொப்பாரில்லையென அகந்தைப்படுதற்குக் காரணமாய் வாயிற்காட்சிக்கு விடயமாய்த் தோன்*

றியதொன்றனை இஃதின்னதென்று புத்திதத்துவ நிச்சயிக்கும்படியாக யானென்றுமெனதென்று மதன்கணிருப்பட்டெழுந்து ஆன்மாவோடும் வேற்றுமையின்றிநிற்கும். அதுவுங் குணவேற்றுமைபற்றிப் பூதாதிமுதலிய வேறுபாட்டால் முத்திறப்படுமென்பதாம்.

அகங்காரம் ஆங்காரமென மரீஇயிற்று; நீங்காது நிற்குமெனவே, அது கலிபோல வினைமுதற்காரகமென்று உபசரிக்கப் படுமென்பதாயிற்று. (59)

மனமது தைச தத்தின் வந்தொரு பொருளே முந்தி
நினைவதுஞ் செய்தங் கைய நிலைமையி னிற்கு மாங்கே
யினமலி சோத்தி ராதி கன்மவிந் திரிய மெல்லா
முனமுரை செய்த வைகா ரிகந்தரு மென்பர் முன்னோர்.

சுப் — பதவுரை

தைசதத்தின் – அம்மூன்றனுள்ளே தைசதவகங்காரத்தினின்று,—மனமது வந்து – மனமானது தோன்றி,—முந்தி ஒரு பொருளை நினைவது செய்தும்,—எதிர்ப்பட்டதொரு விடயத்தை (இஃது யாதாகற்பாற்றெனச் சித்தரூபமாய் நின்று) சிந்தித்தும்,—அங்கு ஐய நிலைமையின் நிற்கும் – (பின்னர்) அதன்கண் ஐயுற்று நிச்சயித்தற்கண்ணதாகிய வேட்கையை விளைத்தும் (முதல்வன் ஆணையான்) நிற்கும்,—இனம் மலி சோத்திராதி – (மனத்தின் பின்னதாக மேம்பட்ட இனமாகிய ஞானேந்திரியங்களும்,—ஆங்கே (தோன்றும்) – அத்தைசதவகங்காரத்தினின்றே (முதல்வனணையாலே) தோன்றும்,—முனம் உரை செய்த வைகாரிகம் – முன்னர்க் கூறிய ஏனை வைகரியகங்காரத்தினின்று,—கன்ம இந்திரியம் எல்லாம் –

கன்மேந்திரியம் ஐந்தும்.—தரும் என்பர் முன்னோர் – (முதல்வன் ஆணையாலே) தோன்றுமென்பர் முன்னோர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து அம்மூன்றனுள், தைசதவகங்காரத்தினின்றும் மனந்தோன்றி எதிர்ப்பட்டதொரு விடயத்தை இச்சியாதாகற்பாற்றெனச் சித்தரூபமாய் நின்று சிந்தித்தும் பின்னதன் கணையுற்று நிச்சயித்தற்கண்ணதாகிய வேட்கையை வினைத்தும் நிற்கும்; மனத்தின் பின்னதாக ஞானேந்திரியங்களும் அத்தைசதவகங்காரதத்தினின்றே தோன்றும். ஏனை வைகரியகங்காரத்தினின்றுங் கன்மேந்திரியமைந்துந் தோன்றுமென்பதாம்.

சோத்திராதி தோன்றுமெனச் சொல்லெச்சம் வருவித்துரைக்க. (60)

நற்செவி துவக்குக் கண்ணு நாசியைந் தினையு நல்லோர்
புத்தியிந் திரிய மென்று புகன்றன ரிவைத மக்குச்
சத்தகற் பரிச ரூப ரசகந் தங்க ளோந்தும்
வைத்தனர் விடய மாக வடைவினின் மருவு மென்றே.

சுப் — பதவுரை

நல்லோர் – அறிவின் மிக்கோர்.—(அவ்விருவகை இந்திரியங்களுள்) நற்செவி துவக்குக் கண் நா நாசி ஐந்தினையும் – நன்மையாகிய சோத்திரமும் துவக்கும் சட்சுவும் சிகுவையும் ஆக்கிராணமுமாகிய ஐந்தனையும்,—புத்தி இந்திரியம் என்று புகன்றனர்--ஞானேந்திரியங்களென்று மொழிந்தனர்,—இவை தமக்கு விடயமாக – அவற்றிற்கு

விடயமாக,—அடைவினில் – முறையே,—சத்த நன் பரிச ரூப இரத கந்தங்கள் ஐந்தும் – சத்தமும் நன்மையாகிய பரிசமும் உருவமும் இரதமும் கந்தமுமாகிய பூதகுணம் ஐந்தும்,—மருவும் என்றே வைத்தனர் – பொருந்துமென்றும் வைத்தனர் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *அவ்விருவகை யிந்திரியங்களுண் ஞானேந்திரியங்களாவன சோத்திரமுதலிய வைந்துமாம். அவற்றிற்கு விடயமாவன முறையே சத்தமுதலிய பூதகுணமைந்துமாமென்பதாம்.* (61)

வாக்கொடு பாதம் பாணி பாயுவோ டுபத்த மைந்து
நீக்கினர் முன்னே கன்மேந் திரியங்க ளெனநி னைந்தே
யாக்கிய வசன கமன தானமும் விசர்க்கா னந்த
மூக்கமா ரைந்து மைந்தின் மொழிலினை வோதி னரே.

சுப — பதவுரை

வாக்கொடு பாதம் பாணி பாயுவோடு உபத்தம் ஐந்தும்–ஏனவாக்கும் பாதமும் பாணியும் பாயுவும் உபத்தமும் ஆகிய ஐந்தும்,—கன்மேந்திரியங்கள் என முன்னே நினைந்தே நீக்கினர்–தொழில்செய்யும் கருவியாகலின் (ஞானேந்திரியங்களின்) வேறாக முன்பே கருதி வைத்தனர்,—ஐந்தின் தொழில்–இவ்வைந்தின் தொழிலாவன,—ஆக்கிய வசன கமன தானமும் விசர்க்க ஆனந்தம் ஊக்கம் ஆர் ஐந்தும் என–நிறுத்த முறையே வசனமும் கமனமும் தானமும் விசர்க்கமும் ஆனந்தமுமாகிய வலிமை பெற்ற ஐந்து மாமென,—ஓதினரே – மொழிந்தனர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *ஏனைக் கன்மேந்திரியங்களாவன வாக்கு முதலியவைந்துமாம். இவை தொழில் செய்யுங் கருவியாகலின் ஞானேந்திரியங்களின் வேறுக வைத்துக் காணப்படும். இவற்றின் றொழிலாவன முறையே வசனமுதலிய வைந்துமாமென்பதாம்*

அற்றேல், ஆன்மாவின் ஞானக்கிரியைகளை விளக்குதற்கு இந்திரிய மந்தக்காணங் கலாதியென்னும் முத்திறத்துள் ஒன்றேயமையுமாகலின் ஏனைய மிகையாம்போலு மெனின், அஃதுணர்த்துதற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (62)

வாயாதி சோத்தி ராதி புறத்துவாழ் கருவி யாகு
மோயாத மனுதி காயத் துணருமுட் கருவி யாகு
மாய்வார்கட் கராக மாதி யவற்றினுட் கருவி பென்பர்
மாயாடன் வயிற்றி வற்றுற் றுடக்குண்டு வாழு மான்மா.

சுப — பதவுரை

வாயாதி சோத்திராதி–கன்மேந்திரிய ஞானேந்திரியங்களாகிய அவ்விருவகை இந்திரியங்களும்,—புறத்துவாழ் கருவியாகும்-(ஒன்றனை விடயிக்கலுறுவார்க்கு உடம்பின்) புறத்தே தோன்றி விடயிக்கும் புறக்கருவிகளாம்,—ஓயாத மனுதி – ஒழிவில்லாத மனமுதலாயின,—காயத்து உணரும் உட்கருவியாகும் – (அவ்வவ் விந்திரியங்களாற் றரப்பட்ட விடயத்தை) உடம்பினகத்தே நின்று விடயிக்கும் உட்கருவிகளாகும்,—அராகம் ஆதி – (ஏனைக்) கலாதிகளாவன,—ஆய்வார்கட்கு அவற்றின் உட்கருவி என்பர்–

ஆராய்கின்றவர்க்கு அவ்வந்தக் கரணங்களான் (விடயிக் கப்பட்டு) வந்த பயனே ஆன்மாவின் இச்சாஞானக்கிரியை கட்குப் பொருத்துவனவாய) உள்ளந்தக்கரணங்களாம் என்பார்(இவை தம்முள் வேற்றுமையாகலின்),--மாயாள் தன் வயிற்று இவற்றுல்--மாயையினிடத்துண்டாகும் இம் முத்திறக் கருவிகளாலும்,---ஆன்மாத் துடக்குண்டு வாழும் – உயிர் பந்திக்கப்பட்டு நிற்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எது. அவ்விருவகை யிந்திரியங்களும் ஒன்றனை விடயிக்கலுறுவார்க்கு உடம்பின் புறததே தோன்றிவிடயிக்கும் புறக்கருவிகள்; மன முதலாயின அவ்விந்திரியங்களாற் றரப்பட்ட விடயத்தை உடம்பினகத்தே நின்று விடயிக்கு முட்கருவிகள்; ஏனைக்கலாதிகளாவன அவ்வந்தக் கரணங் களான் விடயிக்கப்பட்டு வந்த பயனை ஆன்மாவின் இச்சா ஞானக்கிரியைகட்குப் பொருத்துவனவாய உள்ளந்தக் கரணங்களாம்; இவை தம்முள் வேற்றுமையாகலின் இம் முத்திறக் கருவிகளும் ஒருதலையான் வேண்டப்பட்டு உயிரைப் பந்தித்து நிற்குமென்பதாம்.

மாயாளெனப் பெண்பாலாகக் கூறியது வடமொழிமதம்பற்றி; உருவகஞ் செய்தற்பொருட்டெனினுமாம்.

ஓயாமை மனத்துக்கடை. (63)

ஓசைநற் பரிச ரூப ரிரதகந் தங்க ளென்று
பேசுமாத் திரைக ளோந்தும் பிறக்கும்பூ தாதி கத்தி
னேசவிந் திரியங் கட்கு நிகழறி வதனற் காண்டு
மாசைசேர் மனதி தன்மாத் திரைபுரி யட்ட கந்தான்.

சுப் — பதவுரை

பூதாதிகத்தின் — (அவ்விருவகை இந்திரியங்களும் தோன்றியபின் ஏனைப்) பூதாதியகங்காரத்தினின்றும்,— ஓசை நன் பரிச ரூப இரத கந்தங்கள் என்று பேசு மாத்திரைகள் ஐந்தும் பிறக்கும் – சத்தமும் நன்மையாகிய பரிசமும் உருவமும் இரதமும் கந்தமுமெனக் கூறப்படும் தன்மாத்திரைகள் ஐந்தும் தோன்றி,—நேச இந்திரியங்கட்கு நிகழ் அறிவு இதனைற் காண்டும் – விரும்பப்பெற்ற அவ் விந்திரியங்கள் விளங்குகின்ற (தத்தம் விடயங்களை) விடயிக்குமாறு ஊக்கஞ் செய்வித்து (முதல்வன் ஆணையால்) உடனிற்கும்,—தன்மாத்திரை ஆசை சேர் மனுதி – இத்தன்மாத்திரைகள் ஐந்தும் இச்சாரூபமாகிய அந்தக் கரணங்கள் மூன்றுமாகிய எட்டுங்கூடி,—புரி அட்டகம் தான் – புரியட்டகவுடம்பாமென்றறிக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அவ்விருவகை யிந்திரியங்களுந் தோன்றியபின் ஏனைப்பூதாதி யகங்காரத்தினின்றுஞ் சத்தமுதலிய தன்மாத்திரை யைந்துந் தோன்றி அவ்விந்திரியங்கள் தத்தம் விடயங்களை விடயிக்குமாறு ஊக்கஞ்செய்வித்து உடனிற்கும். இத்தன்மாத்திரைகளைந்தும் அந்தக்கரணங்கள் மூன்றுமாகிய எட்டுங் கூடிப் புரியட்டகவுடம்பாமென்றறிக வென்பதாம்.

மாத்திரையென்றது தலைக்குறை.

விடயவடிவாகிய சத்தாதிகட்குந் தன்மாத்திரைவடிவாகிய சத்தாதிகட்குந் தம்முள் வேற்றுமை காணமாட்டாதாருக்கு வேற்றுமை காட்டுவார், மனுதி தன்மாத்திரைபுரியட்டகமென்பதூஉ முடன் கூறினர். (64)

சாற்றிய பஞ்ச தன்மாத் திரைகளிற் சத்த முன்னைத், தோற்றும்வான் வளிதீ நீர்மண் டொடக்கியே யொன்றுக் கொன்றங், கேற்றமா மோகை யாதி யிருங்குண மிசைந்து நிற்கு. மாற்றவே விடய பூத மங்காங்கி பாவத் தாமே

சுப — பதவுரை

சத்தம் முன்னைச் சாற்றிய பஞ்சதன்மாத்திரைகளின்–மேற்சத்த முதலியவாகக் கூறிய தன்மாத்திரைகள் ஐந்தினுநின்று,–வான் வளி தீ நீர் மண் தோற்றும்-(முறையே) ஆகாயமும் வாயுவும் தேயுவும் அப்புவும் பிருதிவியுமாகிய தூலபூதம் ஐந்துந் தோன்றி,—தொடக்கியே ஒன்றுக்கு ஒன்று அங்கு ஏற்றமாம் ஓசை ஆதி இருங்குணம் இயைந்து நிற்கும் – அவற்றுடன் பிரிப்பின்றி(முறையே) ஒன்றற்கொன்று ஏற்றமாகிய சத்தமுதலிய பெருங்குணங்கள் (முதல்வன் ஆணையால்) வியத்திரூபமாக வுடையன வாய் நிற்கும்,—பூதம் ஆற்றவே விடயம் அங்காங்கி பாவத்து ஆமே – இவ்வைம்பெரும் பூதங்கள் (தன்மாத்திரையோடு கூடி நின்று இந்திரியங்களின் ருெழிற் பாட்டை) ஊக்குதற்கு இவற்றின் காரியபூதங்களாகிய தாத்துவிகங்கள் அறுபதும் அங்காங்கி முறைமையவாய் உடனிற்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. அச்சத்தமுதலிய தன்மாத்திரைகளைந்தினு நின்று முறையே ஆகாயமுதலிய தூலபூதமைந்துந் தோன்றி அவற்றுடன் பிரிப்பின்றி முறையே ஒன்றற்கொன்றேற்ற மாகிய சத்தமுதலிய குணங்கள் வியத்திரூபமாகவுடையன

வாய் நிற்கும். இவ்வைம்பெரும்பூதங்கள் தன்மாத்திரை யோடு கூடிநின்று இந்திரியங்களின் ரெழிற்பாட்டையுக்கு தற்கு இவற்றின் காரியபூதங்களாகிய தாத்துவிகங்களாறு பதும் அங்காங்கி முறைமையவாய் உடனிற்குமென்பதாம்.

ஆற்றுதல் வல்லுதல்.

விடயமென்றது ஈண்டுக் காரியமென்னும் தூணையாய் நின்றது.

இவை பதினொன்று செய்யுளானுந் தத்துவங்களொன்றி ரெண்டு தோன்று முறைமையும் அவற்றின் ரெழிற்பாடும் பயனுந் தாத்துவிகங்களதியல்புங் கூறப்பட்டன.

இத்தத்தத்துவங்களெல்லாம் அகமும் அகப்புறமும் புறமு மென மூவகைப்படும்; அவற்றுள், பூதங்களின் வைத்துப் புறப்பூதங் களிற்படும் விசேடங்கூறுகின்றார். (65)

இரந்தர மாகி வான்ரு னிடங்கொடுத் திடுஞ்ச லித்துப்
பரந்தவை திரட்டுங் காறீச் சுட்டொன்று வித்தல் பண்ணு
நிரந்தரங் குளிர்ந்து நின்று பதஞ்செயு நீர்மண் டானு
மூரந்தரு கடின மாகித் தரித்திடு மூணர்ந்து கொள்ளே.

சுப் — பதவுரை

வான்தான் – (ஐம்பெரும்பூதங்களுள்) ஆகாயமானது,—இரந்தரமாகி இடம் கொடுத்திடும் – வெளியாதல் இடங்கொடுத்தலாகிய குணமும் தொழிலும் உடையதாம்,—கால் – வாயுவானது,—சலித்துப் பரந்தவை திரட்டும் – சலித்தல் பரந்தவற்றைத் திரட்டுதலாகிய குணமும் தொழிலும் உடையதாம்,—தீ – தேயுவானது,—சுட்டு

ஒன்றுவித்தல் பண்ணும்–சுடுதல் ஒன்றுவித்தலாகிய குணமும் தொழிலும் உடையதாம்,—நீர்–அப்புவானது,—நிரந்தரம் குளிர்ந்து நின்று பதம் செயும் – இடைவிடாது குளிர்தல் பதஞ்செய்தலாகிய குணமும் தொழிலும் உடையதாம்,—மண்தானும் – பிருதிவியானது,—உரந்தருகடினமாகித் தரித்திடும் – வலிதருதற்கு ஏதுவாகிய கடினமாதல் தரித்திடுதலாகிய குணமும் தொழிலும் உடையதாம்,—உணர்ந்து கொள்ளே – இவற்றினை அறிவாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. ஆகாயமுதலிய வைம்பெரும் பூதங்கள் முறையே வெளியாதல் இடங்கொடுத்தன் முதலிய குணமுந் தொழிலுமுடையனவென்பதாம். (66)

மண்புன லனல்கால் வான்பால் வடிவுநாற் கோண மாகுந்
தண்பிறை மூன்று கோணந் தருமறு கோணம் வட்டம்
வண்பொன்மை வெண்மை செம்மை கறுப்பொடு தூம வன்ன
மெண்டரு மெழுத்துத் தானும் வரைய வவ்வு மாமே.

சுப் — பதவுரை

மண் புனல் அனல் கால் வான் – நிலம் நீர் தீ வளி வெளியாகிய அப்பூதங்கள்,—நாற்கோணம் தண்பிறை மூன்றுகோணம் தரும் அறுகோணம் வட்டம் ஆகும் பால் வடிவு – (முறையே) நாற்கோணமும் தண்ணிய பிறைபோலும் இருகோணமும் முக்கோணமும் தக்க அறுகோணமும் வட்டமுமாகிய (ஐ)வகை வடிவுகளும்,—வண் பொன்மை வெண்மை செம்மை கறுப்பொடு

தூமம் (பால்) வன்னம் – வளவியபொன்மையும் வெண்மையும் செம்மையும் கருமையும் புகைமையுமாகிய (ஐ) வகை நிறங்களும்,—லவரய அவ்வுமாம் எண்தரும் எழுத்துத் தானுமே-லகாரமும் வகாரமும் ரகாரமும் யகாரமும் ஹகாரமுமாகிய ஐவகைப்பீசங்களுமாகிய இவையும் உடையன என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அவை நிலமுதலாகக்கொண்டு முறையே நாற்கோணமுதலிய ஐவகை வடிவும் பொன்மைமுதலிய ஐவகை நிறங்களும் லகரமுதலிய ஐவகைப் பீசங்களுமாகிய இவையுமுடையனவென்பதாம். (67)

குறிகள்வச் சிரத்தி னோடு கோகந தஞ்சு வத்தி
யறுபுள்ளி யமுத விந்து வதிதெய்வ மயன்மா லாதி
செறிபுக ழீச னோடு சதாசிவம் பூத தெய்வ
நெறிதரு கலையைந் திற்கு நிகழ்த்துவ ரிந்த நீர்மை.

சுப் — பதவுரை

வச்சிரத்தினோடு கோகநதம் சுவத்தி அறுபுள்ளி அமுதவிந்து குறிகள் – வச்சிரமும் தாமரையும் சுவத்திகமும் அறுபுள்ளியும் அமுதவிந்துவுமாகிய(ஐந்து)அடையாளங்களும்,—தெய்வம் அயன் மால் ஆதி செறிபுகழ் ஈச னோடு சதாசிவம் அதிதெய்வம் – தெய்வமெனப்படும் அயனும் மாலும் உருத்திரனும் மிக்க புகழினையுடைய மகேசனும் சதாசிவமுமாகிய (ஐந்து) அதிதெய்வங்களுமாகிய இவையும்.—பூதம் – (முற்கூறிய) பிருதிவி முதலிய பூதங்கள் (முறையே உடையனவாம்).—நெறிதரு கலை ஐந்திற்கும் இந்த நீர்மை நிகழ்த்துவர் – (இவை மந்திர முதலிய

அத்துவாக்களை அடக்கிநிற்கும்) முறைமையுடைய நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகட்கும் இவ்வாறே பெரியராற் கூறப்படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. வச்சிரமுதலிய அடையாளமைந்தும் அயன் முதலாகிய வதிதெய்வ மைந்துமாகிய இவையும் அப்பூதங்கண் முறையேயுடையனவாம்; இவை நிவிர்த்திமுதலிய கலைகட்குமிவ்வாறே கூறப்படுமென்பதாம்

இவை மூன்று செய்யுளானும் புறப்பூதங்களதியல்பு வேறெடுத்துக்கொண்டு வகுத்துக் கூறப்பட்டன.

ஏனையகப்பூதங்களதியல்பு 'நேசவிந்திரியங்கட்கு நிகழறிவிதனுற் காண்டு' மெனவும், அகப்புறப் பூதங்களதியல்பு ஆசைசேர் மனுதி தன்மாத்திரை புரியட்டகந்தா னெனவுஞ் சூக்கும பூதமாகிய தன்மாத்திரைக்கோதியவாறுபற்றி அறியக்கிடந்தன. (68)

சுத்ததத் துவங்க ளென்று முன்னமே சொன்ன வைந்து
மித்தகை மையினி யம்பு மிவைமுப்பத் தொன்று மாகத்
தத்துவ முப்பத் தாறுஞ் சைதன்னி யங்க ளைந்து
சித்தசித் தான்மா வொன்று முப்பது மசித்தே செப்பில்.

சுப — பதவுரை

சுத்த தத்துவங்கள் என்று முன்னமே சொன்ன ஐந்தும் – இயைபுபற்றி மேலைச்சூத்திரத்துட் கூறிப்போந்த சுத்த தத்துவங்கள் ஐந்துடன், —இத்தகைமையின் இயம்பும் இவை முப்பத்தொன்றும் ஆக – ஈண்டுக் குணம்

பொருந்தக் கூறிய தத்துவம் முப்பத்தொன்றும் உளப்பட,—முப்பத்தாறு தத்துவமாம் – (தொகையான்) முப்பத்தாறு தத்துவங்களாம்,—செப்பில் ஐந்து சைதன்னியங்கள் – சொல்லுமிடத்தே இவற்றுள் முன்னைய ஐந்தும் – (சடமாயினும் சிற்சத்திக்குச் சுதந்திர வடிவாகலின்) சைதன்னியமெனப்படும்,—ஆன்மா ஒன்று சித்தசித்து – (ஏனை முப்பத்தொன்றனுள்) புருடதத்துவம் ஒன்றும் சார்ந்ததின் வண்ணமாய்ச் சித்தசித்தெனப்படும்,—முப்பதும் அசித்தே – (அஃதொழிந்த) முப்பதும் அசித்தெனவே படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இயைபுபற்றி மேலைச்சூத்திரத்துட் கூறிப் போந்த சுத்த தத்துவங்களோடுடன் ஈண்டுக் கூறிய தத்துவ முப்பத்தொன்றுமுளப்படத் தொகையான் முப்பத்தாறு தத்துவமாம். இவற்றுள், முன்னையவைந்துஞ் சடமாயினுஞ் சிற்சத்திக்குச் சுதந்திரவடிவாகலிற் சைதன்னியமெனப்படும்; ஏனைமுப்பத்தொன்றனுட் புருடதத்துவஞ் சார்ந்ததன்வண்ணமாய்ச் சித்தசித்தெனப்படும்; அஃதொழிந்த முப்பதும் அசித்தெனவேடுமென்பதாம்.

சித்தசித்தென்றது தமிழ்நூலின் முடிபு.

இதனானே மேற்கூறிப்போந்த தத்துவங்களுக்குத் தொகையும் அவற்றதியல்புங் கூறப்பட்டன. (69)

ஐந்துசுத் தத்தின் கீழெழ் சுத்தாசுத் தம்ம சுத்தந்
தந்திடும் புமான்கி ழெண்மூன் ருயதத் துவஞ்சீ வர்க்கு
வந்திடும் பிரேர காண்ட மருவுபோ கசயித் திரத்தோ
டந்தமி ளணுக்க ளுக்குப் போக்கிய காண்ட மாமே.

சுப் — பதவுரை

(இத்தத்துவ முப்பத்தாறனுள் முற்கூறிய ஐந்து தத்துவமும்) ஐந்து சுத்தத்தின் கீழ் ஏழ் (தத்துவம்) – சுத்த மாகிய (அவ்)வைந்து தத்துவத்தின் கீழாக (நடுவண்) ஏழுதத்துவமும்,—தந்திடும் புமான் கீழ் எண்மூன்று ஆய தத்துவம் - பொருந்திய புருட்தத்துவத்தின் கீழாக(ப்பின்) இருபத்துநான்காகிய தத்துவமும்,—(சுத்தம்) சுத்தாசுத் தம் அசுத்தம் – (முறையே) சுத்தம் மிச்சிரம் அசுத்தம் எனவும்,—சீவர்க்கு வந்திடும் பிரேரகாண்டம் – உயிர்கள் அநுபவத்திற்கு ஏதுவாகும் பிரேரகாண்டம்,—மருவு போகசயித்திரத்தோடு – பொருந்திய போகசயித்திரு காண்டத்துடன்,–அந்தம் இல் அணுக்களுக்குப் போக்கிய காண்டம் ஆமே – எண்ணிலாத உயிர்கட்குப் போக்கிய காண்டம் எனவும் (காரணக்குறிபெற்று முத்திறப்)படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. இத்தத்துவ முப்பத்தாறனுள் முன்னைந்தும் நடுவணேழும் பின்னிருபத்து நான்கும், முறையே சுத்தம் மிச்சிரம் அசுத்தமெனவும், பிரேரகாண்டம் போகசயித்திரு காண்டம் போக்கியகாண்டமெனவுங் காரணக்குறிபெற்று, முத்திறப்படுமென்பதாம்.

முன்னைய வைந்துஞ் சுத்தமாதன் மேற்கூறிப்போந்தமையின் ஈண்டனுவதித்தொழிந்தார்.

போகசயித்திருவென்னும் வடசொல்லினுளுகரமும் அதனே டென்பதனுள் அன் சாரியையும் விகாரத்தாற்றொக்கன.

அது பகுதிப்பொருள்விகுதி.

இவை காரணக்குறியாமாறு உய்த்துணர்ந்துகொள்க.

இதனானே அம்முப்பத்தாறு தத்துவமும் மூவினமாதல் கூறப் பட்டது. (70

தத்துவ ரூப மாகுந் தருமரு வுருவ மெல்லாந்
தத்துவந் தூல சூக்க பரங்களு மாகி நிற்குந்
தத்துவந் தன்னிற் சாரு மணுக்கள்சா தாக்கி யத்திற்
றத்துவ சத்தஞ் சாருஞ் சகலமுந் தத்து வங்காண்.

சுப் — பதவுரை

தரும் அரு உருவம் எல்லாம் – (மாயையினாலே) தரப் பட்ட அருவும் உருவும் அருவுருவுமாயுள்ள காரியப் பிர பஞ்சம் அனைத்தும்,—தத்துவரூபமாகும் – இத்தத்துவ வடிவேயாம்,—தத்துவம் தூல சூக்க பரங்களுமாகி நிற் கும் – இம்மூப்பத்தாறு தத்துவமும் தூலதத்துவம் சூக்கும தத்துவம் அதிசூக்குமதத்துவமென (ஒரோவொன்று மூவகைப்பட்டுப் பொதுவும் பொதுச்சிறப்பும் சிறப்பு மாய்) நிற்கும்,—தத்துவம் தன்னிற் சாரும் அணுக்கள் சாதாக்கியத்தில் – இத்தன்மையவாய தத்துவங்களை அதிட்டிக்கும் அணுபக்க சம்புபக்கத்து அதிதெய்வங்க ளிடத்தும்,—தத்துவ சத்தம் சாரும் – அவ்வத் தத்துவப் பெயர் பொருந்தும்,—சகலமும் தத்துவம் காண் – (ஆத லின்) எல்லாப்பொருளையும் தத்துவங்களின் வைத்துக் காண்க என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. அருவுமுருவு மருவுருவுமாயுள்ள காரியப்பிர பஞ்சமனைத்தும் இத்தத்துவவடிவேயாம். இம்மூப்பத் தாறுந் தூலதத்துவஞ் சூக்குமதத்துவம் அதிசூக்குமதத்துவ

மென ஓரோவொன்று மூவகைப்பட்டுப் பாதுவும் பொதுச்சிறப்புஞ் சிறப்புமாய் நிற்கும். இத்தன்மையவாய தத்துவங்களோயதிட்டிக்கும் அணுபக்க சம்புபக்கத்ததிதெய்வங்களும் அவ்வத்தத்துவப்பெயர் பெறுமாகலான் எல்லாப் பொருளோயுந் தத்துவங்களின் வைத்துக் காண்கவென்பதாம்.

எனவே, இத்தத்துவமுப்பத்தாறுமுணர்ந்தானுக்கு எல்லாப் பொருளும் இனிது விளங்குமென்பதாயிற்று.

இச்செய்யுளிற் கூறிய பொருளனேத்துஞ் சிவாகமங்களின் விரித்துணர்ந்துகொள்க.

இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறெல்லாமுரைப்ப.

இதனுனே தத்துவங்களொருதலேயா னுணரற்பாலனவென்பது கூறப்பட்டது. (71)

தத்துவ மெண்மூன் றுஞ்சென் றுன்மதத் துவத்தொடுங்கும்
வித்தையி லைடுங்கு மாறுஞ் சிவத்தினி லைடுங்கு மூன்று
நித்ததத் துவமிம் மூன்று மென்பக ளிரண்டு நின்ற
சுத்தமாஞ் சிவத்தொடுங்குந் தோற்றமு மிதுபோ லாகும்.

சுப — பதவுரை

(இம்முப்பத்தாறு தத்துவங்களும் சங்காரகாலத்துத் தத்தங் காரணங்களின் ஒடுங்கும் வழி) தத்துவம் எண் மூன்றும் சென்று – நில முதன் மூலப்பகுதி ஈருகிய இருபத்து நான்கு தத்துவங்களும் சென்று,—ஆன்மதத்துவத்தின் ஒடுங்கும் - சகலவர்க்கத்து ஆன்மாக்கட்கு அதிதெய்வமாகிய சீகண்டருத்திரனில் ஒடுங்கும்,—ஆறும் –

மூலப்பகுதிக்கு மேலுள்ள ஆறுதத்துவமும்,—வித்தை யின் ஒடுங்கும் – வித்தையீசராகிய அநந்தரால் ஒடுங்கும்.– மூன்றும் – அவற்றின் மேலுள்ள சுத்தவித்தை முதலிய மூன்று தத்துவமும்,—சிவத்தினின் ஒடுங்கும் – இலயத்தி னின்ற சிவனுல் ஒடுங்கும்,—நின்ற இரண்டும் – ஏனைச் சத்திதத்துவம் சிவதத்துவம் இரண்டும்,—சுத்தமாம் சிவத் தின் ஒடுங்கும் – சுத்தசிவனுல் ஒடுங்கும்,— தோற்றமும் இதுபோல் ஆகும் – இவை புநருற்பவம் ஆங்காலும் அவ்வவை அவ்வவரால் ஆம்,—இம்மூன்றும் நித்ததத்து வம் என்பர்கள் – (இவருட் சுத்த சிவன் ஒருவனே நித்தி யன்) ஏனைமூவரையும் அவ்வாறு நித்தியரென்பாரும் உளர் (அஃது உபசாரமே) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து இம்மூப்பத்தாறு தத்துவங்களுஞ் சங்காரகால த்துத் தத்தங் காரணங்களிலெடுங்கும்வழி, நிலமுதன் மூலப்பகுதியீறுகிய இருபத்துநான்கு தத்துவங்களுஞ் சிகண்டருத்திரனுலொடுங்கும்; மூலப்பகுதிக்கு மேலுள்ள ஆறுதத்துவமும் வித்தையீசராகிய அனந்தராலொடுங்கும்; அவற்றின்மேலுள்ள சுத்ததத்துவமுதலிய மூன்றுதத்துவ மும் இலயத்தினின்ற சிவனுலொடுங்கும்; ஏனைச்சத்திதத்து வனுஞ் சிவதத்துவமிரண்டுஞ் சுத்தசிவனுலொடுங்கும் இவை புநருற்பவமாங்காலும் அவ்வவைபவ்வவராலாம். இவருட் சுத்தசிவனெருவனே நித்தியன்; ஏனைமூவரையுமவ்வாறு நித்தியரென்பாருமுளர்; அஃதுபசாரமேயென்பதாம்

மூலப்பகுதிக்குங் குணதத்துவத்திற்குந் தம்முள் வேற்றுமை அவ்வியத்தமாதலும் வியத்தமாதலும் மாத்திரையேயன்றி ஏனைய

போலப் பரிணமவிசேடமின்மையின் அதுபற்றி அவையிரண் டனையு மொன்றாக வைத்தெண்ணினர்.

ஏதுப்பொருட்கண் வரும் இன்னுருபு ஏனையிடங்களினும் விரித் துரைக்க.

ஆன்மாவுக்கதிதெய்வமாகிய தத்துவம் ஆன்மதத்துவமென உருத்திரனுக்குப் பெயராயிற்று; ஈண்டான்மாவென்றது ஏற்புழிக் கோடலாற் சகலவர்க்கத்தின் மேனின்றது.

தத்துவமென்பது பொதுச்சொல்.

ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவமென அவ்வக் காரணக்கடவுளர் பெயர் இயைபுபற்றி அவ்வத் தத்துவங்களுக்கு மாயினவென்ப துணர்த்துவார், அவரை யவ்வப்பெயராற் கூறினர்.

இனி, சிவந்தருபேதங் கூறுவான் புகுந்தவாசிரியர் அதற்குத் தோற்றுவாயாக இச்செய்யுளை ஈண்டு வைத்தாராயினும், இயைபு பற்றி ஐந்துசுத்தத்தினென மூவகைப்படுத்தோதிய செய்யுளின் பின்னுக வைத்துக் கண்டுகொள்க.

இதனானே அத்தத்துவங்களைத் தோற்றியொடுக்குங் காரணக் கடவுளர் இவரென்பது வருத்திக் கூறப்பட்டது.

இத்தனையும் மூன்றுங்கூற்றிற்படுமுறைமையெல்லாந் தொகுத் துக் கூறியவாறு.

இனி, எழுசெய்யுளான் காலாங்கூற்றைத் தெரித்துணர்த்து கின்றார். (72)

நான்காமதிகரணம்

மொய்தரு பூத மாதி மோகினி யந்த மாகப்
பொய்தரு சமய மெல்லாம் புக்குநின் றிடும்பு கன்று
மெய்தரு சைவ மாதி யிருமூன்றும் வித்தை யாதி
யெய்துதத் துவங்க ளேயு மொன்றுமின் றெம்மி றைக்கே.

சுப் — பதவுரை

பொய்தரு சமயம் எல்லாம் - பொய்மைபெற்ற சாரு வாக முதல் அயிக்கியவாதசைவம் ஈருகிய புறப்புறச் சமய மும் புறச்சமயமும் அகப்புறச்சமயமுமென்னும் முக் கூற்றுச் சமய தெய்வங்களெல்லாம்,—மொய்தரு பூதம் ஆதி மோகினி அந்தம் ஆகப் புக்கு நின்றிடும்-நெருங்கிய பூதமுதல் அசுத்தமாயாதத்துவம் ஈருக ஒவ்வொரு தத்து வங்களின் நிலைபெறும்,—புகன்று மெய்தரு சைவம் ஆதி இருமூன்றும் - சிவாகமங்களுட் கூறப்படும் (ஏகனநேக னிருள்கரும மாயையிரண்டென்னும் ஆறு பொருட்கும்) உண்மைத்தன்மை விளக்குகின்ற சைவமெனப்படும் தலை யாகிய அறுவகைச்சமயத் தெய்வமாய்நின்ற அதிகாரபோக இலய சிவபேதங்கள்,—வித்தை ஆதி எய்து தத்துவங்கள் ஏயும் - சுத்த வித்தை முதலியவாகப் பொருந்திய ஐந்து தத்துவங்களுள் ஒவ்வொன்றின் நிலைபெறும்,—எம் இறைக்கு ஒன்றும் இன்றே – சித்தாந்த சைவத்தெய்வ மாகிய எம்முடைய சுத்தசிவம் இம்மூப்பத்தாறையும் கடந்து நிற்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. சாருவாகமுதல் ஐக்கியவாதசைவமீறுகிய புறப் புறச்சமயமும் புறச்சமயமும் அகப்புறச்சமயமுமென்னும் மூக்கூற்றுச்சமயத்தெய்வங்களெல்லாம் பூதமுதல் அசுத்த மாயாதத்துவமீறுக ஒவ்வொரு தத்துவங்களினிலேபெறும் சிவாகமங்களுட் கூறப்படும் "ஏக னனேக னிருள்கருமா யையிரண்டு" என்னுமாறுபொருட்கும் உண்மைத்தன்மை விளக்குகின்ற சைவமெனப்படுந்தலையாகிய அறிவகைச்சமயத்தெய்வமாய் நின்ற அதிகாரபோகலயசிவபேதங்கள் சுத்த வித்தை முதலிய ஐந்து தத்துவங்களுள் ஒவ்வொன்றினிலே பெறும் சித்தாந்த சைவத் தெய்வமாகிய சுத்தசிவம் இம்முப்பத்தாறையுங் கடந்து நிற்குமென்பதாம்.

அமலனுதலைத் தெரித்துணர்த்தியவாறு.

அவ்வத்தெய்வங்களினிலேபெறுந் தத்துவமே அவ்வச்சமயத்தார்க்கு முத்தித்தான மென்பதூஉம் இதனுற் பெறுதும்.

அவ்வவற்றின்மேலுள்ள தத்துவங்கள் அவ்வச்சமயத்தார்க் குணர்ச்சி செல்லாமையின் அவ்வத்தத்துவத்தினளவினன்றி அவருக்கு மேற்சேறல் கூடாமையறிக.

சமயத்தெய்வங்களைச் சமயமென்றுபசரித்தார்; இருமூன்று மென்றதுமது.

ஆணவமலத்தண்மை கொள்ளமாட்டாத ஐக்கியவாதசைவரை நீக்குதற்கு, மெய்தரு சைவமென்றும், ஆதியிருமூன்றென்றும், விசேடித்தார்.

பாடாணவாதசைவமுதற் சுத்தசைவமீறுகக் கிடந்தவேழனுள் பாடாணவாதத்திற்கும் பேதவாதத்திற்குந் தம்முள் வேற்றுமை சிறிதாதல்பற்றி அவையிரண்டனையு மொன்றுகவைத்து இருமூன்றெனத் தொகைகூறியவாறு.

இவ்வாறன்றி உரைப்பனவெல்லாஞ் சிவாகமங்களோடு முரணு மென்றெழுதுக. (73)

சிவசத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழு மீச
னுவந்தரு ளுருத்தி ரன்றன் மாலய னென்றி னைந்தாய்
பவந்தரு மருவ நாலிங் குருவநா லுபய மொன்று
நவந்தரு பேத மேக நாதனே நடிப்ப னென்பர்.

சுப — பதவுரை

ஏகநாதனே - அங்ஙனம் ஒன்றுமின்றி நிற்கும் எம் மிறைவனே,—ஒன்றின் ஒன்றுப் பவந்தரும் சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன் உவந்தருள் உருத்திரன்றன் மால் அயன் - ஒன்றின் ஒன்றுகத்தோன்றி (ஒவ்வொருதத்துவங்களி னின்றுகொண்டு தத்தந் தொழில் களைச் செய்யும்) சிவமுதல் அயனீறுகியவைகளிலே,—அருவம் நாலு இங்கு - சிவம் சத்தி நாதம் விந்துவாகிய அருவத் திருமேனி நான்கும்,—உருவம் நாலு - மகேசன் உருத்திரன் மால் அயனுகிய உருவத்திருமேனி நான்கும்,—உபயம் ஒன்று ஆம் - சதாசிவமாகிய அருவுருவத்திருமேனி ஒன்றும்ஆகிய (முத்திறத்து),—நவம் தருபேதம் நடிப்பன் என்பர் - ஒன்பது வர்க்கத்தினும் (வேற்றுமையின்றி நின்று) அவ்வத் தொழில்களைச்செய்வ னென்பர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அங்ஙனமொன்றுமின்றி நிற்கு மெம்மிறைவன் ஒன்றினொன்றுகத் தோன்றி ஒவ்வொரு தத்துவங்களினின்று கொண்டு தத்தந்தொழில்களைச் செய்யுஞ் சிவமுதல் அயனீறுகிய முத்திறத்தொன்பது வர்க்கத்தினும் வேற்றுமையின்றி நின்று அவ்வத்தொழில்களைச் செய்வனென்பதாம்.

ஏகாரம் தேற்றம்.

மேல், 'ஒருவனே யிராவணுதி பாவகமுற்றூற்போல' என்றதனை ஈண்டுமறிவுறுத்துவார், நடிப்பனென்றூர்.

செவ்வெண்டொகை விகாரத்தாற்றெரக்கது.

இவ்வொன்பது பேதத்துட் சத்தி விந்துவென்னு மிரண்டும் சத்திபேதமாயினும், ஏனை மனோன்மனி முதலிய பேதம்போலன்றி ஒன்றினொன்றூகப் பவந்தருமுறையிற் காரணமா யிடைநிற்றல்பற்றிச் சிவபேதத்துடன் வைத்தெண்ணி நவந்தருபேத மெனப்பட்டன; 'நவந்தருபேத மேகநாதனே நடிப்ப' னென்றதும் ஒற்றுமை நயம்பற்றிப் பொதுவகையாற் கூறிற்றென்பது; அவை முறையே சிவத்தக்கும் நாதத்தக்குமூரிய சத்திபேதமேயாத லென்பது வருஞ்செய்யுளிற்காண்க. (74)

சத்தியாய் விந்து சத்தி யாய்மனோன் மனிதா னாகி
யொத்துறு மகேசை யாகி யுமைதிரு வாணி யாகி
வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தி யாகு
மெத்திற நின்ரு னீச னத்திற மவளு நிற்பள்.

சுப — பதவுரை

சிவாதிக்கு வரும் சத்தி - (மேற்கூறிய) சிவபேதம் ஏழற்கும் உரிய சத்திபேதமும்,—சத்தியாய் விந்துசத்தியாய் மனோன்மனிதானாகி ஒத்துறும் மகேசையாகி உமைதிரு வாணியாகி வைத்துறும் - (முறையே சிவத்திற்குச்) சத்தியாகியும் (நாதத்திற்கு) விந்துவாகியும் (சதாசிவத்திற்கு) மனோன்மனியாகியும் (மகேசனுக்குப்) பொருந்திய மகேசையாகியும் (உருத்திரனுக்கு) உமையாகியும் (மாலுக்குத்) திருவாகியும் (அயனுக்கு) வாணியாகியும் (எழுவகைப்)

படும்,—ஈசன் எத்திறம் நின்றான் - (எம்மிறைவனுகிய) பரமசிவன் சிவபேதம் ஏழினு நின்று நடாத்துமாறெல் லாம்,—ஒருத்தியாகும் அவளும் இங்ஙன் அத்திறம்நிற்பள்- (அவனேடு தாதான்மியமாய் நிற்கும்) ஒருத்தியாகிய பரா சத்தியும் இச்சத்திபேதம் ஏழினும் அவனுக்குத் துணையாய் நின்று நடாத்தும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து மேற்கூறிய சிவபேதமெழற்குமுரிய சத்திபேத மும் முறையே சத்திமுதல் வாணியீறாக ஏழுவகைப்படும். எம்மிறைவனுகிய பரமசிவன் சிவபேதமேழினு நின்று நடாத் துமாறெல்லாம் அவனேடு தாதான்மியமாய் நிற்கும் பராசத் தியும் இச்சத்திபேதமேழினும் அவனுக்குத் துணையாய் நின்று நடாத்துமென்பதாம்.

அற்றேல், மேலைச்சூத்திரத்தின் 'வரும்வடி வெல்லாஞ்சத்தி' எனக்கூறி,ஈண்டுச் சிவபேதஞ் சத்திபேதமென வேறுவைத்து,'எத் திற நின்றனீ சனத்திற மவளுநிற்ப' ளென்றன் மூலவாம்போலு மென மயங்காமைப் பொருட்டு அஃதுணர்த்துதற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. (75)

சத்திதா னுத மாதி தானுகுஞ் சிவமு மந்தச்
சத்திதா னுதி யாகுந் தருமவடி வான வெல்லாஞ்
சத்தியுஞ் சிவமு மாகுஞ் சத்திதான் சத்த னுக்கோர்
சத்தியாஞ் சத்தன் வேண்டிற் றெல்லாமாஞ் சத்தி தானே.

சுப — பதவுரை

சத்திதான் நாதம் ஆதிதான் ஆகும் - சத்தியானது நாத முதலியவற்றிற் கூடியிருக்கும்,—சிவமும் அந்தச்

சத்திதான் ஆதி ஆகும் - சிவமும் அந்தச் சத்தி முதலிய வற்றை அதிட்டித்து நிற்கும் (இங்ஙனம் மரமும் காழ்ப்பும்போல ஒப்ப இயைந்து நிற்றலின்).—சத்தி தான் தரும் வடிவான எல்லாம் சத்தியும் சிவமும் ஆகும் - சத்தியாற் றரப்படும் எல்லாத்திருமேனியும் சத்தி சிவம் இரண்டற் கும் பொதுவடிவேயாம் (ஆயினும்).—சத்தனுக்குச் சத் தன் வேண்டிற்றெல்லாம் ஆம் சத்திதானே - சத்தனுக் குத் தான் வேண்டியவாறெல்லா மாகும் சத்தியே.—ஓர் சத்தியாம் - ஒப்பற்ற தேவியுமாம் (ஆகலான் அதற்குரிய வடிவு விசேடம் குணவிசேடம்பற்றிச் சிவபேதம் சத்தி பேதமென்று ஆயின) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து மரமுங் காழ்ப்பும்போல ஒப்பவியைந்து நிற்ற லின் எல்லாத் திருமேனியுஞ் சத்திசிவமிரண்டற்கும் பொது வடிவேயாமாயினும் சத்தனுக்குச் சத்தி தேவியுமாமாகலான் அதற்குரிய வடிவுவிசேடங் குணவிசேடம்பற்றிச் சிவபேதஞ் சத்திபேதமென்றுயின வென்பதாம்.

ஆகலானதற்குரிய வடிவுவிசேடங் குணவிசேடம்பற்றிச் சிவ பேதஞ் சத்திபேத மென்றுயின வென்பது குறிப்பெச்சம்.

சத்தனுக்கோர் சத்தியாமென்றது வல்லவனுக்கு வல்லபை யாய் நிற்குமெனச் சிவ சத்திகட்கு நாயகநாயகிபாவங் கூறியவாறு ; நாயகநாயகி பாவமாதலே வலியுறுத்தவார், சத்தன்வேண்டிற் றெல் லாமாஞ் சத்தியெனச் சத்தியின் பெருமை கூறினர்; வேண்டிற் றெல்லாமென்றது ஒருமைப் பன்மை மயக்கம்.

இவை மூன்று செய்யுளுந் தாதான்மியமாய் நீங்காது நிற்றலைத் தெரித்துக் கூறியவாறு.

அற்றேல், மேல் ஒன்றினொன்றுய்ப் பவந்தருமெனப்பட்ட சத்திசிவங்களே ஈண்டுத் தலைவனுந் தலைவியுமாய்த் தம்முட் புணருமென்பது முறையன்று போலுமென்பாரை நோக்கி அதனை யுணர்த்தி தற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (76)

சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்று
மூவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும்
பவன்பிர மசாரி யாகும் பான்மொழி கன்னி யாகுந்
தவந்தரு ஞானத் தோர்க்குத் தன்மைதான் றெரியு மன்றே.

சுப் — பதவுரை

சிவம் சத்திதன்னை ஈன்றும் – சிவதத்துவத்தினின்று சத்தி தத்துவம் தோன்றியும்.—சத்திதான் சிவத்தை ஈன்றும் – சத்திதத்துவத்தினின்று சாதாக்கிய தத்துவம் தோன்றியும்.—உவந்து இருவரும் புணர்ந்து இங்கு உலகு உயிர் எல்லாம் ஈன்றும் – உவப்புற்று இருவரும் கூட இவ்விடத்துச் சடமும் சேதனமுமாய பிரபஞ்சமெல்லாந் தோன்றியும்.—பவன் பிரமசாரி ஆகும் பான்மொழி கன்னி ஆகும் – சிவபிரான் பிரமசாரி ஆவன் சிவசத்தி கன்னிகை ஆவள்,—தவம் தரு ஞானத்தோர்க்கு – முற்றவ விசேடத்தால் (முதல்வன் அருள்பெற்ற) ஞானிகட்கு.—இத்தன்மைதான் தெரியும் அன்றே – (சத்தியும் சிவமும் செய்யும்) இச்செயல்களெல்லாம் (நம்மனோர் பொருட்டாக நடித்துக்காட்டும் நாடகமாத்திரையேயன்றிப் பிறிதில்லையென்பது) விளங்கும் என்க.

சிவ . பொழிப்புரை

எ-து. சத்தியுஞ் சிவமுஞ் செய்யுமிச் செயல்களெல் லாம் நம்மரீஞர் பொருட்டாக நடித்துக்காட்டும் நாடகமாத் திரைபேயன்றிப் பிறிதில்லையென்பதாம்.

உம்மை சிறப்பு.

'பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்களல்லான்' என்பது முத லாக மேலைச்சூத்திரத்தின் விரித்துக்கூறியவற்றை ஈண்டுருவகஞ் செய்யுமுகத்தாற் றொகுத்துணர்த்தி, இவற்றின்றன்மை தனக் கெய்த லின்றுதலைத் தெரித்துக் கூறியவாறு. (77)

தனுகரண புவன போகக் தற்பரம் பந்தம் வீடென்
றணுவினே டெல்லா மாகி யடைந்திடுந் தத்து வங்க
ளினிதறிந் திவைநி விர்த்தி முதல்களே யிடத்தே நீக்கி
நனிபர முணர்ந்தோ னத்தத் தத்துவ ஞானி யாவன்.

சுப — பதவுரை

தனுகரணபுவனபோகம் தற்பரம் பந்தம் வீடு எல்லாம் தத்துவங்கள் ஆகி அடைந்திடும் என்று – தனு கரணபுவனபோகங்களும் அவைமூலமாயுள்ள பெத்த முத்திகளும் (அப்பெத்த முத்திகளிற்படும் பேதங்கள்) அனைத்தும் (மேற்கூறிப்போந்த) தத்துவங்களான் ஆயின வென்றும்.—இவை அணுவினேடு (என்று) – அத்தத்து வங்கள் உயிர்களோடு இயைவன (அன்றி முதல்வனேடு இயைவன வல்ல) வென்றும்.—இனிது அறிந்து – (நூல் களானும் பொருந்து மாற்றானும்) தெளிய உணர்ந்து.— நிவிர்த்திகளேமுதல் இடத்தே நீக்கி – (அத்தத்துவங்களை)

நிவிர்த்திகலே முதலாகக் கழியுமுறைமையின் வைத்துக் கழித்து,—பரம் ஈனி உணர்ந்தோன் – (அ வ ற் றி ற் கு) மேலாய் நிற்பது ஒன்றனே ஐயந் திரிவின்றி உணரப்பெற் றோன் யாவன் அவன்,—அந்தத் தத்துவஞானி ஆவன் – (பவன் பிரமசாரியும் பான்மொழி கன்னியுமாமென்னும்) அவ்வுண்மையறிவுடையவன் ஆவன் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து தனுகரணபுவனபோகங்களும், அவைமூலமா யுள்ள பெத்தமுத்திகளும், அப்பெத்தமுத்திகளிற்படும் பேதங்களனைத்தும், மேற்கூறிப்போந்த தத்துவங்களா னவினவென்றும், அத்தத்துவங்கள் உயிர்களோடியைவன வன்றி முதல்வனோடியைவனவல்லவென்றும், நூல்களானும் பொருந்துமாற்றானுந் தெளியவுணர்ந்து, அத்தத்துவங்களைக் கழியுமுறைமையின் வைத்துக் கழித்து, அவற்றிற்கு மேலாய் நிற்பதொன்றனே ஐயந்திரிபின்றி யுணரப்பெற்றோன் யாவன் அவன் பவன் பிரமசாரியும் பான்மொழி கன்னியுமாமென் னும் அவ்வுண்மை யறிவுடையனவ னென்பதாம்

'தவந்தரு ஞானத்தோர்க்கித் தன்மைதான் றெரியு' மென்ற தனைத் தெரித்துணர்த்தி மேலதனே வலியுறுத்தியவாறு.

தற்பரமென்னும் வடசொல் அப்பொருட்டாதல் தாற்பரிய மென்பதனானுமறிக. (78)

எல்லாமாய்த் தத்து வங்க ளியைந்ததென் னணுவுக் கென்னிற், றெல்லாய கன்ம மெல்லாந் துய்ப்பித்துத் துடைத்தற் கும்பி, னில்லாமை முற்று வித்து நீக்கவுங் கூடி நின்ற, பொல்லாத வாண வத்தைப் போக்கவும் புகுந்த தன்றே.

சுப — பதவுரை

தத்துவங்கள் அணுவுக்கு எல்லாமாய் இயைந்தது என் என்னின் — (அங்ஙனம்) தத்துவங்கள் அணுவினேடு எல்லாமாகி யடைந்தது யாதன் பொருட்டெனின்,— தொல்லாய கன்மமெல்லாம் துய்ப்பித்துத் துடைத்தற்கும் —பழமையாய இருவினைகளை நுகர்வித்து நீக்குதற்பொருட்டும்,—முற்றுவித்துப் பின் நில்லாமை நீக்கவும் - (அதனேற் பருவம் எய்தியவழி மேலைக்கு வித்தாகாதவாறு தீக்கையால் அவற்றை) முதிர்வித்துப் பின் பற்றறக் கழித்தற் பொருட்டும்,—கூடிநின்ற பொல்லாத ஆணவத்தைப் போக்கவும் புகுந்தது அன்றே - (அவை கழியும் முகத்தால்) விரவி நின்று எல்லா அந்தங்கட்கும் மூலமாகிய ஆணவ மலத்தைப் போக்குதற்பொருட்டும் அடைந்தாதம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அங்ஙனந் தத்துவங்கள் அணுவினேடெல்லாமாகி யடைந்தாலும், இருவினைகளை நுகர்வித்து நீக்குதற் பொருட்டும், அதனைப் பருவமெய்தியவழி மேலைக்கு வித்தாகாதவாறு தீக்கையா னவற்றை முதிர்வித்துப் பற்றறக் கழித்தற்பொருட்டும், அவை கழியுமுகத்தால் எல்லாவநந்தங்கட்கு மூலமாகிய வாணவமலத்தைப் போக்குதற்பொருட்டுமா மென்பதாம்.

எனவே, தத்துவங்களான் நீக்கப்படுவனவாகிய மலகன்மங்கள் அணுவுக்கே யன்றிச் சிவத்துக்கின்மையான், அத்தத்துவங்களும் அணுவினேடன்றிச் சிவத்தோடியையிலவாயினவென அதன்கணை சங்கை நீக்கியவாருயிற்று.

அணுவுக்கேயென்னும் பிரிநிலையேகாரமுந் தொன்மையென்னுமகரவைகார விகுதியும் விகாரத்தாற்றொக்கன.

இவை ஏழு செய்யுளானும் காலாங் கூற்றிற்படும் முத்திறப் பொருளும் வகுத்துக் கூறப்பட்டன.

அற்றேல், ஈண்டெடுத்துக்கொண்ட ஆணவமலம் யாது? அதனால் வரும் பொல்லாமை யாது? அதனைப் போக்குமாறு யாங்ஙனம்? என்பாரை நோக்கிப் பதினேழு செய்யுளான் ஒழிபு கூறுகின்றார். (79)

ஒன்றதா யநேக சத்தி யுடையதா யுடனு யாதி, யன்றதா யான்மா வின்ற னறிவொடு தொழிலை யார்த்து, நின்றுபோத் திருத்து வத்தை நிகழ்த்திச்செம்பினிற் களிம்பேய்ந், தென்றுமஞ் ஞானங் காட்டு மாணவ மியைந்து நின்றே.

சுப் — பதவுரை

அநேக சத்தி உடையதாய் - எண்ணிறந்த சத்திகளுடைத்தாய்,–ஆன்மாவின் உடனுய் - (எண்ணிறந்த) உயிர்களினும் சேர்ந்து,—செம்பினில் களிம்பு ஏய்ந்து-செம்பிற் களிம்புபோல, ஆதி அன்றதாய் இயைந்துநின்றே ஒன்றதாய்–அநாதியே விரவி நிற்பதொன்றாய்,—தன் அறிவொடு தொழிலை ஆர்த்து நின்று - (கேவலத்தில் ஆவாரக சத்தியான்) அவ்வுயிர்களின் அறிவொடு தொழில்களை மறைத்து நின்று,–போத்திருத்துவத்தை நிகழ்த்தி–(சகலத்தில் அதோநியாமிகா சத்தியாலே) போகநுகர்ச்சிக்கு வினைமுதலாதற்றன்மையை நிகழ்த்தி,—என்றும் அஞ்ஞானம் காட்டும்–எஞ்ஞான்றும் (காரணமாய் நின்று) அஞ்ஞானத்தை நிகழ்த்தும்,—ஆணவம் – (மேற்கூறிப்போந்த) ஆணவமலம் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. எண்ணிறந்த சத்திகளான் எண்ணிறந்த வுயிர் களினுஞ் செம்பிற் களிம்புபோல் அநாதியே விரவிநிற்ப தொன்றுய்க் கேவலத்தில் ஆவாரகசத்தியானுஞ் சகலத்தில் அதோகியாமிகா சத்தியானும் அஞ்ஞான நிகழ்ச்சிக்குக் காரணமாய் நிற்பது மேற்கூறிப்போந்த ஆணவமல மென்ப தாம்.

போத்திருத்துவம் போகதுகர்ச்சிக்கு வீனமுதலாதற்றன்மை.

இதனானே மலத்தின் சொரூபங் கூறப்பட்டது. (80)

மலமென வேறொன் றில்லை மாயாகா ரியம தென்னி
னிலகுயிர்க் கிச்சா ஞானக் கிரியைக ளெழுப்பு மாயை
விலகிடு மலமி வற்றை வேறுமன் றதுவே றுகி
யுலகுடல் காரண மாகி யுதித்திடு முணர்ந்து கொள்ளே.

சுப் — பதவுரை

மலம் என ஒன்று வேறு இல்லை – மலமென்று ஒரு பொருள் வேறில்லை,—மாயாகாரியமது என்னின் – மாயா காரியமே (மறைத்தற் றொழிலைச் செய்யு) மெனின் (அற் றன்று),—இலகு உயிர்க்கு – விளங்காநின்ற உயிர்கட்கு,— இச்சா ஞானக் கிரியைகள் எழுப்பும் மாயை – அ றி வு இ ச் சை செயல்களை (வேறுநின்று) விளக்குவதாகிய மாயைக்கும்,—வேறும் அன்று இவற்றை விலகிடும் மலம் –(உயிரோடு) ஒற்றித்துநின்று அவைகளை மறைப்பதாகிய மலத்திற்கும் (தம்முள் வேற்றுமை பெரிதாகலான் அஃது அறியாது).—உலகு உ ட ல் கரணம் ஆகி – உ ல கு ம் உ ட லு ம் கரணமுமாகி,—அது வேறுகி உதித்திடும் –

உயிர்க்கு வேருகி உதிக்கும் (மாயையே மலமென்பார் மதம் போலி என்பதனை),—உணர்ந்துகொள்ளே – அறிவாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து உயிரோடொற்றித்து நின்று அறிவிச்சைசெயல்களை மறைப்பதாகிய மலத்துக்கும் வேறு நின்று அவற்றை விளக்குவதாகிய மாயைக்குந் தம்முள் வேற்றுமை பெரிதாகலான், அஃதறியாது மாயையே மலமென்பார் மதம் போலி யென்பதாம். (81)

மாயையே யான்மா ஞானக் கிரியையை மறைத்து நிற்குந்
தூயவப் பரிதி தன்னைச் சுடர்முகின் மறைத்தாற் போலப்
போய்முகி லகலச் சோதி புரிந்திடு மதுவே போலக்
காயமு மகல ஞானத் தொழில்பிர காச மாமே.

பரிதியை முகின்ம றைப்பப் பாயொளி பதுங்கி றைப்போ
லுருவுயிர் மறைக்கின் ஞானக் கிரியைக ளொழிக்கு மாகுங்
கருதிடு மிச்சா ஞான காரியங் காயம் பெற்றுன்
மருவிடு முயிர்க்குக் காயம் வந்திடா விடின்ம றைப்பே.

சுப் — பதவுரை

தூய பருதிச் சுடர்தன்னை முகில் மறைத்தாற்போல—தூயதாகிய பரிதியின் ஒளியை மேகம் (வேறு நின்று) மறைத்தாற்போல,— மாயையே ஆன்ம (இச்சா) ஞானக் கிரியையை மறைத்து நிற்கும் – மாயையே (உலகு உடல் கரணமாய் நின்றே) ஆன்மாவின் இச்சாஞானக் கிரியைகளை மறைத்தல் அமையுமென (உடம்பாட்டானும்),—

அம்முகில் போய் அகலச் சோதி புரிந்திடும் அதுவே போல –அம்மேகம் நீங்கப் பரிதி வெளிப்பட்டுத் தோன்றுமாறு போல,—காயமும் அகல (இச்சா) ஞானத் தொழில் பிர காசமாமே – காயமாகிய மாயை நீங்க அவ்விச்சாஞானக் கிரியை பிரகாசித்தல் அமையுமென (எதிர்மறையானும் இவ்வுவமையின் வைத்து அறியப்படு மென்றது பொருந் தாது),—பரிதியை முகில் மறைப்பப் பாய் ஒளி பதுங் கிற்போல் – பரிதியை மேகம் மறைப்பப் பரவிய ஒளி மறைந்தாற்போல்,—உரு மறைக்கின் உயிர் (இச்சா) ஞானக் கிரியைகள் ஒழிக்குமாகும்–உருவாகிய மாயை மறைப்ப ஆன்மாவின் இச்சாஞானக் கிரியைகள் ஒழிதலா கிய (உடம்பாட்டானும்),—கருதிடும் இச்சா ஞான காரியம் – கருதுகின்ற இச்சா ஞானக் கிரியைகள்,—காயம் பெற்றால் – மாயாதனுவைப் பெற்றால்,—மருவிடும் உயிர்க்கு – விளங்கும் ஆன்மாவிற்கு,—காயம் வந்திடா விடில் மறைப்பே – அம்மாயாதனு இன்றேல் (அவை) மறைதலாகிய (எதிர்மறையானும் வைத்து அறியப்படு தலான் அவ்வுவமை ஈண்டைக்கு ஏலாது) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து மாயை உலகுடல்காரணமாய் வேறுநின்றே உயிரை மறைத்தலமையுமென்பது உடம்பாட்டினு மெதிர் மறையினும் பரிதிமுகிலுவமையின் வைத்தறியப்படுமென்றது பொருந்தாது; மேகம்போல மாயை மறைக்குமாயின், மறைத் தலாகிய காரியம் பரிதியிற்போல உயிரின்கணிகழ்தல் வேண்டும்; அஃதீண்டில்லையென்பது உடம்பாட்டினுமெதிர் மறையினும் வைத்து அறியப்படுதலான் அவ்வுவமை யீண் டைக்கேலாதென்பதாம். (82–83)

போதகா ரியமற் றைத்து நின்றது புகன்ம லங்கா
ணேதலாங் குணமு மாக வுயிரினுள் விரவ லாலே
காதலா லவித்தை சிந்தத் தருங்கலே யாதி மாயை
யாதலா லிரண்டுஞ் சோதி யிருளென வேரு மன்றே.

சுப் — பதவுரை

உயிரினுள் விரவலாலே குணமுமாக ஓதலாம்–(அல்லதூஉம் மலத்தானுகிய அஞ்ஞானம் மூகிலானுகிய மறைவுபோலன்றி) உயிரோடு (வியாபகமாய்) விரவிக் குணம்போலத்தோன்றி நிற்பதெனக் கூறுவதொன்றுகலானும்,–மாயை காதலால் அவித்தை சிந்தக் கலைஆதிதரும் ஆதலால் – மாயையானது விருப்பத்தோடு ஆணவமாகிய இருள்கெட(த் தீபம்போல)க் கலைமுதலிய தத்துவங்களைத் தருவ தொன்றுகலானும்,—இரண்டும் சோதி இருளென வேறும் அன்றே – (தொழிற்பாட்டின்கண்) இரண்டும் ஒளி இருள் போல இகலிநிற்பன வாகலானும்,—புகல் மலம் போதகாரியம் மறைத்து நின்றது காண் – (இருள் போலக்) கூறும் பெற்றித்தாகிய ஆணவமலமே உயிருணர்வின் காரியப்பாட்டைத் தடுக்கவல்லதெனத் (தெற்றென) உணர்க என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அல்லதூஉம் மலத்தானுகிய அஞ்ஞானம், மூகிலானுகிய மறைவுபோலன்றி, உயிரோடு வியாபகமாய் விரவிக் குணம்போலத் தோன்றி நிற்பதொன்றுகலானும், தொழிற்பாட்டின்கண் ஒளியிருள் போல மாயையோடு இகலி நிற்பதாகலானும், அப்பெற்றித்தாகிய வாணவமலமே உயிருணர்வின் காரியப்பாட்டைத் தடுக்கவல்லதெனத் தெற்றெனவுணர்கவென்பதாம்.

குணமுமென்னுமும்மை எதிர்மறைக்கண் வந்தது.

இவை நான்கு செய்யுளானும், ஐக்கியவாதி பாசுபதி முதலியோர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து, ஆணவமலத் தினதுண்மை சாதிக்கப்பட்டது. (84)

புருடன்றன் குணம வித்தை யெனிற்சடம் புருடனுகுங், குருடன்றன் கண்ணின் குற்றங் கண்ணின்றன் குணமோ கூறுய், மருடன்றன் குணம தாகி மலமகித் தாகி நிற்குந், தெருடன்றன் குணம தாகிச் சித்தென நிற்குஞ் சீவன்.

சுப் — பதவுரை

அவித்தை புருடன்றன் குணம் எனின் – (உயிரினுள் விரவி நிற்பதாகிய) அவித்தையினை உயிரின்குணவிசேட மென்றல் பொருத்த முடைத்தெனின்,—புருடன் சடமாகும் – (சித்தாகிய) புருடன் சடமெனப்பட்டு வழுவாம் (ஆதலின்),—குருடன்றன் கண்ணின் குற்றம் கண்ணின்றன் குணமோ – குருடனது கண்ணில் (ஒளிக்குணத்தை மறைத்துநிற்கும் படலமாகிய) குற்றம் கண்ணின் ஒளிக் குணமாதல் செல்லாமையானும்,—மலம் மருள் தன்றன் குணமதாகி அசித்தாகி நிற்கும் – மலம் அஞ்ஞானத்தைத் தனது குணமாகக்கொண்டு (குணிப்பொருளாகிய தான்) சடமாய் நிற்குமன்றிச் சித்தாகாமையானும்,—சீவன் தெருள் தன்றன் குணமதாகிச் சித்தெனநிற்கும்–உயிர் அறிதற்றொழிலையுடைய சித்தேயாய்நிற்குமாதலானும்,—கூறுய் – (உயிரின்கண்ணே குற்றமாகக்காணப்படும் அறியாமைக்குக் குணிப்பொருள் மலமென வேறுண்டென்பது) அறிவாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. உயிரினுள் விரவிநிற்பதனை உயிரின் குண விசேடமென்றல் பொருத்தமுடைத்தெனின்,—அறியாது கூறினாய்; ஒருபொருளின்கட் குணத்தோடொப்பக் குற்றமும் உடன்விரவி நிற்கப்பெறுமென்பது குருட்டுக்கண்ணிற் காணப்படுதலின், விரவிநிற்றலேபற்றிக் குற்றமுங் குணமாதல் செல்லாமையானும், அஞ்ஞானத்திற்குக் குணிப்பொருள் சடமாவதன்றிச் சித்தாகாமையானும், உயிர் அறிதற்றொழிலுடைய சித்தேயாகலானும், உயிரின்கட் குற்றமாய்க் காணப்படுமறியாமைக்குக் குணிப்பொருள் மலமென வேறுண்டென்பதாம்.

இதனானே அறியாமை உயிர்க்குக் குணமென்னும் பாடாண வாதிகண் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து மலத்தினுண்மை சாதிக்கப்பட்டது. (85)

மும்மல நெல்லி னுக்கு முளையொடு தவிடு மிப்போன்
மம்மர்செய் தனுவி னுண்மை வடிவினை மறைத்து நின்று
பொய்மைசெய் போக பந்த போத்திருத் துவங்கள் பண்ணு
மிம்மல மூன்றி னோடு மிருமல மிசைப்ப னின்னும்.

சுப — பதவுரை

மும்மலம் – (மேலே தன்மமோடதன்மமாகியெனக் கூறப்பட்ட கன்மமலமும் அதன்பின்னுக நித்தமாயருவாயெனக் கூறப்பட்ட மாயாமலமும் ஈண்டுக் கூறப்பட்ட ஆணவமலமுமாகிய இம்) மூன்று மலங்களும்,—நெல்லினுக்கு முளையொடு தவிடு உமிப்போல்—நெல்லுக்கு

மூலத்தற் சத்தியும் தவிடும் உமியும்போல,—அணுவின் உண்மை வடிவினை – உயிரினது தற்சொரூபத்தை,—மம்மர்செய்து மறைத்து நின்று – மயக்கத்திற் கேதுவாகப் பந்தித்து நின்று,—பொய்ம்மைசெய் போக பந்த போத் திருத்துவங்கள் பண்ணும் – (முறையே) பொய்மை புரியா நின்ற போ க மு ம் பந்தமும் போத்திருத்துவமும் பண்ணுவனவாம்.—இம்மலம் மூன்றிலேடும் இன்னும் இ ரு ம ல ம் இசைப்பன் – இம்மலங்கண் மூன்றலேடும் (கூடி நின்று பந்திப்பன) வேறும் இருமலங்கள் உள என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேலே தன்மமோடதன்மமாகியெனக் கூறப் பட்டகன்மமலமும் அதன்பின்னை நித்தமாயருவாயெனக் கூறப்பட்ட மாயாமலமும் ஈண்டுக் கூறப்பட்ட ஆணவமலமு மாகிய விம்மூன்றுமலங்களும், நெல்லுக்கு மூலதவிடுமி போல், உயிரைப் பந்தித்து நின்று முறையே போகமும் பந் தமும் போத்திருத்துவமும் பண்ணுவனவாம். இம்மலங்கண் மூன்றலேடுங் கூடிநின்று பந்திப்பன வேறுமிருமலங்களுள வென்பதாம்.

இது நிரனிறை.

கன்மமலம் போகம்பண்ணுதலாவது, நெல்லின்கணுள தாகிய மூலத்தற்சத்தி மூலையைத் தோற்றுவிக்குமாறுபோல, உயிரின்கட் சுசதுக்கங்களே முதற்காரணமாய் நின்று தோற்றுவித்தல்; மாயா மலம் பந்தம் பண்ணுதலாவது, மூலத்தற்கு அணுகூலஞ்செய்து உடனிற்குந் தவிடு போல, அச்சுகதுக்கங்களாண்டுத் தோன்றுதற் குத் துணைக்காரணமாய்த் தன்காரியமாகிய தனுகரண முதலிய

வற்றையும் உயிரையு மியைவித்து நிற்றல்; ஆணவமலம் போத்திருத் துவம் பண்ணுதலாவது, அம்மூலை ஆண்டுத் தோன்றுதற்கு நிமித் தகாரணமாகிய உமிபோல, அத்தோற்றத்திற்கு நிமித்தகாரண மாயவற்றை முறுகுவித்து நின்று அச்சுகதுக்கங்களை உயிர் நுகரு மாறு நிலைபெறுத்துதலெனக் கொள்க. ''பந்தம்போகம் போகநிறுத் தலும் வந்ததுமாயைவினைமலத்து'' என்றார் ஞானமிர்தநூலுடை யாரும்.

மூலை ஆகுபெயர்.

மூலை தவிடுமிகள் பந்தத்திற்குங் காரணமாதல்மாத்திரைக்கும் உவமையாயின. (86)

மாயையின் காரி யத்தை மாயேய மலம தென்று
மேயுமும் மலங்க டத்தந் தொழிலினை யியற்ற வேவுந்
தூயவன் றனதோர் சத்தி திரோதான கரிய தென்று
மாய்வரிம் மலங்க ளோந்து மணுக்களை யணைந்து நிற்கும்.

சுப் — பதவுரை

மாயையின் காரியத்தை மாயேயமலமது என்றும் — (அச்சுகதுக்க விளைவுகட்கெல்லாம் இடமாய் நின்று வியா பகமாகிய ஆன்மாவின் அறிவிச்சை செயல்களை ஏகதேசப் படுத்துவதென மேற்கூறிப் போந்த) மாயாகாரியத்தை மாயேயமென்றும்,—ஏயும் மும்மலங்கள் தத்தம் தொழி லினை இயற்ற ஏவும் தூயவன் றனது ஓர் சத்தி திரோதான கரியது என்றும் ஆய்வர் — பொருந்திய அவ்வம்மலங்களை அவ்வத்தொழிலிற்படு (த்திப் பாகம் வருவி) க்கும் சிவசத் தியை மறைத்தலைச் செய்வதாகிய திரோதாயி யென்றும் வேறேயிருமலமாக ஆராய்ந்து கூறுவர் (அவற்றுள்

மாயாகாரியம் மாயையில் அடங்குமாயினும் பந்தித்தற்கட் படும் வேற்றுமைபற்றி மாயேயமலமென வேறுவைத் தெண்ணப்படும் அம்மலங்கட் கனுகூலமாய் நின்று செய் யுஞ் சிவசத்தி பராசத்தியின் அடங்குமாயினும் தொழில் வேற்றுமை பற்றி உபசாரத்தாற் றிரோதாயியென வேறு வைத் தெண்ணப்படும்),—இம்மலங்கள் ஐந்தும் அணுக் களை அணைந்து நிற்கும்–(இவ்வாறு) இவ்வைந்து மலமும் உயிர்தோறு நின்றுசெய்யும் பந்தவேறுபாடு கண்டு கொள்க என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. வேறுமிருமலமெனப்படுவன அச்சுகதுக்க விமோவுகட்கெல்லாம் இடமாய் நின்று வியாபகமாகிய வான் மாவின் அறிவிச்சை செயல்களை ஏகதேசப்படுத்துவதென மேற்கூறிப்போந்த மாயாகாரியமும் அவ்வமலங்களை யவ்வத் தொழிலிற் படுத்திப் பாகம் வருவிக்குஞ் சிவசத்தியுமாம். அவற்றுள், மாயாகாரியம் மாயையிலடங்குமாயினும், பந்தித் தற்கட்படும் வேற்றுமைபற்றி மாயேயமலமென வேறுவைத் தெண்ணப்படும்; அம்மலங்கட்கனுகூலமாய் நின்று செய்யுஞ் சிவசத்தி பராசத்தியினடங்குமாயினும், தொழில் வேற்று மைபற்றி உபசாரத்தாற்றிரோதாயியென வேறுவைத்தெண் ணப்படும். இவ்வாறிவ்வைந்துமலமும் உயிர்தோறுநின்று செய்யும் பந்தவேறுபாடு கண்டுகொள்கவென்பதாம்.

திரோதானகரியென்பது திரோதானத்தைச் செய்வதென்னும் பொருட்டாய வடசொல். (87)

மலமாயை கன்ம மாயே யந்திரோ தாயி மன்னிச்
சலமாரும் பிறப்பி றப்பிற் றங்கியித் தரைகீழ் மேலு
நிலையாத கொள்ளி வட்டங் கறங்கென நிமிடத் தின்க
ணலமாரு மிறைவ ஞணை யாலுயிர் நடக்கு மன்றே.

சுப் — பதவுரை

உயிர் – ஆன்மாவின்கண்,—மலம் மாயை கன்மம் மாயேயம் திரோதாயி மன்னி – ஆணவம் மாயை காமியம் மாயேயம் திரோதாயியாகிய இவ்வைவகைமலங்களும் நிலை பெறுதலால் (அவைகட்கனுகுணமாக),—இ றை வ ன் ஆணையால்–முதல்வன் ஆணையினால்,—நிலையாத கொள்ளி வட்டம் கறங்கு என – நிலையுதலிலவாகிய கொள்ளிவட் டமும் காற்றடியும்போல,—நிமிடத்தின்கண் அலமாரும்-கணப்போழ்திற் (ப ல மு றை) சுழற்சியுற்று,—பிறப்பு இறப்பில் தங்கி-மேற்கூறிப்போந்த பிறப்பிறப்பிற்பட்டு,-இத்தரைகீழ்மேலும் சலமாரும் நடக்கும் அன்றே – இவ் வு ல க நிரய துறக்கங்களிலே போக்குவரவுடைத்தாய் (அவ்வுயிர்) செல்லும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து மேற்கூறிப்போந்த பிறப்பிறப்புக்களெல்லாவற் றிற்குங் காரணம் இவ்வைவகை மலங்களுமாமென்பதாம்.

மன்னி யலமாருமென்பது மழைபெய்து குளநிறைந்ததென் றுற்போலக் காரணகாரியப்பொருட்டாய் நின்றது.

அலமரும் அலமாருமென நீட்டும்வழிநீட்டல்; இறைவனுணையா லுயிர்நடக்குமென ஈண்டுங்கூறியது அவ்வலமரலை நீக்கும் வாயி லுணர்த்துதற்பொருட்டு; அது முன்னர் வகுத்துக் கூறப்படும்.

இவை மூன்று செய்யுளானும், மலங்க ளித்துணையவென்பதூ உம் அவை பந்திக்குமாறுங் கூறுமுகத்தான், ஆணவமலத்தாலுகிய பொல்லாமை கூறப்பட்டது. (88)

அண்டசஞ் சுவேத சங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தோ
டெண்டரு நாலெண் பத்து நான்குநூ றாயி ரத்தா
யுண்டுபல் யோனி யெல்லா மொழித்துமா நுடத்து தித்தல்
கண்டிடிற் கடலைக் கையா னீந்தினன் காரி யங்காண்.

சுப — பதவுரை

அண்டசம் சுவேதசங்கள் உற்பிச்சம் சராயுசத்தோடு எண்தரு நால் – முட்டையும் வியர்வையும் வித்தும் பையுமாக எண்ணப்படும் நால்வகைத்தோற்றத்து (எழுவகைப்பிறப்பின்),–எண்பத்து நான்கு நூறாயிரத்தாயுண்டு–எண்பத்துநான்கு நூறாயிர (யோனி பேத)த்தினின்று விரிந்த பேதங்கள் அளவின்றி உள்ளன,—பல்யோனியெல்லாம் ஒழித்து – (அவற்றுட்) பலவகைப்பட்ட யோனி பேதங்கள் ஒழிந்து,—மாநுடத்து உதித்தல் கண்டிடில் – (அவ்வலமரலை நீக்குதற்கு வாயிலாகிய) மாநுடப்பிறவி எய்தலைக் காணப்பெற்றிடின்,—கடலைக் கையால் நீந்தினன் காரியம் காண் – சமுத்திரத்தைக் கையானீந்திக் கரையேறினவன் காரியத்தோடொக்குமென்க.

சிவ — பொழிப்புரை

எ-து. நால்வகைத்தோற்றத் தெழுவகைப்பிறப்பி னெண்பத்து நான்குநூறாயிரம் யோனி பேதத்தினின்றும் விரிந்த பேதங்கள் அளவின்றியுள்ளன; அவற்றுள் மானுடப்பிறவியே அவ்வலமரலை நீக்குதற்கு வாயிலென்பதாம். (89)

நரர்பயி றேயந் தன்னி னன்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றன் மிக்கபுண் ணியத்தா னுகும்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணெ ணுதே.

சுப் — பதவுரை

நரர் பயில் தேயந்தன்னின் – (அம்மானுடப்பிறவி யினும்) மானுடர் வாழ்கின்ற இவ்வுலகத்துள்,—நான் மறை பயிலாநாட்டில் விரவுதல் ஒழிந்து தோன்றல் – வேதாகமவழக்கம் இல்லாத நாட்டிலே பிறத்தல் நீங்கி (அவ்வேதாகம வழக்குமிக்குடைய உத்தமநாட்டிலே) தோன்றுதல்,—மிக்கபுண்ணியத்தான் ஆகும் – மிகுந்த புண்ணியத்தால் உண்டாம்.—தரையினில் கீழை விட்டுத் தவம் செய் சாதியினில் வந்து – அவ்வுத்தமநாட்டிலே கீழ் சாதியிலே தோன்றுது தவஞ்செய்தற்குரிய உத்தமசாதி யிலே தோன்றுதல் செய்தும்,—பரசமயங்கட்செல்லாப் பாக்கியம் பண்ண ஒணுதே – புறச்சமயங்களிற் செல் லாது (அவ்வலமரல் ஒழிதற்கு வாயிலாகிய) உத்தமசம யத்திற்குரிய நன்மை ஒருவனுக்குண்டாதல் அரிது என்க

சிவ — பொழிப்புரை

எ-து. மானுடப்பிறவியினும் உத்தமசமயத்துக்குரித் தாய் உத்தம நாட்டிற் பிறக்கு முத்தமசாதியே அதற்கு வாயிலென்பதாம். (90)

வாழ்வெனு மையல் விட்டு வறுமைபாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரு
மூழ்பெற லரிது சால வுபசிவ ஞானத் தாலே
போழிள மதியி ணீப் போற்றுவா ரருள்பெற் றுரே.

சுப் — பதவுரை

வாழ்வெனும் மையல் விட்டு – குலம் இளமை கல்வி செல்வம் அதிகாரமென்னும் இவைகளான் உளதாகிய செருக்கொழிந்து,—வறுமையாஞ் சிறுமை தப்பி – வறுமையால் அச்செருக்குடையார் பின்சென்று நின்று ஏக்கறலாய சிறுமையினீங்கி (உயர்ந்தசாதியினும் உயர்ந்த குடிப்பிறப்பே அதற்கு வாயிலாம் ஆகலான் அவ்வுயர்ந்த குடியிற்பிறந்து),—தாழ்வெனும் தன்மையோடும் – மெய்யன்போடும்,—சைவமாஞ் சமயஞ்சாரும் ஊழ்பெறல் – சைவசமயத்தின் எய்தும் புண்ணியப்பேறு,—சால அரிது – பெரிதும் அரிதாம்,—உயர் சிவஞானத்தாலே – அதனினும் உயர்ந்த சித்தாந்த நெறி யுணர்ச்சியாலே,—போழ் இளமதியினை – பிளவுபட்ட இளம்பிறையணிந்த சிவபிரானை,—போற்றுவார்–வழிபடப்பெறுவாருளராயின்,—அருள்பெற்றுரே – அவர் (மலத்தானுகிய அவ்வலமரலை நீங்கி) வீடுபேறெய்துவர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. உயர்ந்த சாதியினும் உயர்ந்த குடிப்பிறப்பே யதற்கு வாயிலாம். அவ்வுயர்ந்த குடியிற் பிறந்து சைவத்தினெய்திச் சித்தாந்தநெறியுணர்ந்து சிவபிரானை வழிபடப் பெறுவாருளராயின், அவர் மலத்தானுகிய வவ்வலமரலை நீங்கி வீடுபேறெய்துவரென்பதாம்.

வாழ்வாவன:–குலம் இளமை கல்வி செல்வம் அதிகாரமென்னுமிவை.

மையல் செருக்கு.

வாழ்வெனுமையலெனவும், வறுமையாஞ் சிறுமையெனவும், காரியத்தைக் காரணமாகவுபசரித்தார்.

இவை மூன்று செய்யுளானும் அம்மலபந்தத்தைப் போக்குதற் குரிய வாயில் இவையென்பது கூறப்பட்டது. (91)

மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காய
மானிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றே
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்ப
ரூனெடுத் தழலு மூம ரொன்றையு முணரா ரந்தோ.

சுப் — பதவுரை

(அவ்வலமரலை நீக்குதற்பொருட்டு) மனவாக்காயம்– மனத்தால் நினைந்தும் வாக்கால்வழுத்தி மந்திரங்கள் சொல்லியும் காயத்தாற் பணிந்துஞ் செய்யப்படும்,— ஆனிடத்து ஐந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றே – பஞ்சகவ்வியத்தினை ஆடியருளுகின்ற அரன்பணி (ஏனைப் பிறவிகளிற் கூடாமையால் அதன்)பொருட்டாகவன்றே,- மானுடப் பிறவிதானும் வகுத்தது–(பிறவி விசேடமாகிய) மானுடப்பிறவி (வேண்டப்பட்டு) வகுத்ததாம்,—வானிடத் தவரும் – மேலுலகத்துள்ள மாயோன் முதலிய தேவர்களும்,—மண்மேல் வந்து அரன்றனை அர்ச்சிப்பர் – (அவ்வரன்பணி பயன்படுதல் ஏனையுலகங்களிற் கூடாமையாலே) தேசவிசேடமாகிய இம்மண்ணுலகத்தில் வந்து அச்சிவபிரானை அருச்சிப்பர்,—அந்தோ ஊன் எடுத்து உழலும் ஊமர் ஒன்றையும் உணரார் – ஐயோ இவ்வுலகத்து இச்சரீரம் பெற்றும் (இவ்வுண்மையை) அலமரு மூகராகிய ஏனையோர் சிறிதும் அறியமாட்டார் (ஆகலிற் சாதிவிசேடங் குடிப்பிறப்பு விசேடம் வேண்டப்படும்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து அவ்வலமரலை நீக்குதற்பொருட்டுச் செய்யப்படு மரன்பணி ஏனைப்பிறவிகளிற் கூடாமையாற் பிறவிவிசேடம்

வேண்டப்படும்; அவ்வரன்பணி பயன்படுதல் ஏனையுலகங் களிற் கூடாமையால் தேபவிசேடம் வேண்டப்படும். இவ் வுண்மை ஏனையோரறியமாட்டாமையிற் சாதி விசேடம் குடிப்பிறப்புவிசேடம் வேண்டப்படுமென்பதாம்.

இதனானே அவை வாயிலாதற்கு உரிமை கூறப்பட்டது.

வாக்காயமென்னுந் தொகைச்சொல் வடநூன்முடிபு. (92)

கருவினு ளழிவ தாயுங் கழிந்திடா தழிவ தாயும்
பரிணமித் தழிவ தாயும் பாலனை யழிவ தாயுந்
தருணனை யழிவ தாயுந் தானரைத் தழிவ தாயு
முருவவே யழிவே யானு ளுள்ளபோ தேபா ருய்ய.

சுப் —பதவுரை

(மானுடயாக்கை அத்துணைப்பெருமைத்தாயினும்) கருவினுள் அழிவதாயும் – மாதாவினுடைய கருப்பத்திற் றானே அழிவதாயும்,—கழிந்திடாது அழிவதாயும்–பிறந்து உடனே அழிவதாயும்,—பரிணமித்து அழிவதாயும் – பிற ந்து சிறிதுகாலமிருந்து அழிவதாயும்,—பாலனைப் அழிவதா யும்–பாலியனைப் அழிவதாயும்,—தருணனைப் அழிவதாயும்– தருணனைப் அழிவதாயும்,—நரைத்துத்தான் அழிவதாயும்– நரையுண்டாகி விருத்ததசையில் அழிவதாயும்,—உருவவே அழிவே ஆனால் – (இத்துணைப் பொழுது நிற்குமென்று அறியவாராது நீர்க்குமிழிபோல்) எப்பொழுதும் அழிதன் மாலைத்தாகலின்,—உள்ளபோதே உய்யப்பார் – (இவ்வாக் கைநிலையாமை இளமை நிலையாமைகளை) நிலையுதல் உள் வழியே உய்யும்படி உற்று நோக்குவாய் (அங்ஙனநோக்கு வார்க்கு அவற்றுளுகிய மையலை விடுதல் கூடும்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மானுடயாக்கை அத்துணைப்பெருமைத்தாயினும் இத்துணைப்பொழுது நிற்குமென்றறிய வாராது நீர்க்குமிழிபோல் எப்பொழுது மழிதன்மாலைத்தாகலின், இவ்வாக்கைநிலையாமை யிளமைநிலையாமைகளை உணரவல்லார்க்கே அவற்றுளுகிய மையலைவிடுதல்கூடுமென்பதாம். (93)

ஒருபுல னுகரும் போதங் கொன்றிலை யொன்றின் பாலும்
வருபயன் மாறி மாறி வந்திடு மெல்லா மாறு
மொருபொழு தணரி னுண்டா மல்லதிவ் வல்லல் வாழ்க்கை
மருள்கன வதுவும் போல மாயும்பின் மாயு மன்றே.

சுப் — பதவுரை

அங்கு ஒரு புலன் நுகரும்போது ஒன்று இலை--ஆண்டு ஒரு விடயத்தை அநுபவிக்குங்கால் மற்றொன்றின்மையால் (அவ் யாக்கையின் கண்ணதாகிய அறிவும் விடயங்களை ஒருங்கே யறியமாட்டாது),—ஒன்றின்பாலும் வருபயன் மாறி மாறி வந்திடும் - ஒரு விடயத்தின்கண்ணும் வரப்பட்ட பயனை விட்டு விட்டு அறிவதன்றி இடையீடின்றி அறிய மாட்டாது,—ஒரு பொழுது எல்லாம் மாறும்--அதுவும் உறக்கம் மூர்ச்சை முதலியவற்றிற் சிறிதும் இல்லையாய்விடும்,—அல்லது இவ்வல்லல் வாழ்க்கை – அதுவன்றி இவ் யாக்கையின் பொருட்டுளதாகிய செல்வத் துழனியும்,—மருள் கனவதுவும் போல அன்றே மாயும் பின் மாயும் – (முறையே) மயக்கப்பொருளும் களிப்பொருளும் போலத் தோன்றியபொழுதே மாய்வதுமாம் இடையே மாய்வதுமாம் ஆகலான்,—உணரின் உண்டாம் – (இவ்

வறிவுநிலையாமை செல்வநிலையாமைகளை) உணர்ந்தால் (அவ்வுணரவல்லார்க்கு அவற்றுணுகிய மையலை விடுதல்) கூடும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அவ்வாக்கையின்கண்ணதாகிய வறிவும் விடயங்களை ஒவ்வொன்றுயறிவதன்றி ஒருங்கே யறியமாட்டாது. ஒருவிடயத்தின்கண்ணும் விட்டுவிட்டறிவதன்றி இடையீடின்றி யறியமாட்டாது. அதுவும் உறக்கம் மூர்ச்சை முதலிய வற்றிற் சிறிது மில்லையாய்விடும். அஃதன்றி இவ்வாக்கையின் பொருட்டுளதாகிய செல்வத்துழனியும் முறையே மயக்கப் பொருளுங் கனப்பொருளும்போலத் தோன்றியபொழுதே மாய்வதுமாம் இடையே மாய்வதுமாமாகலான், இவ்வறிவு நிலையாமை செல்வநிலையாமைகளை உணரவல்லார்க்கு அவற்றுணுகிய மையலை விடுதல்கூடுமென்பதாம்.

உணரினுண்டாமென்பதனை இறுதிக்கண் வைத்துரைக்க.

பயன் அறிதற்பயன்.

அல்லதென்பது அன்றியென்னும் வாய்பாட்டு வினையெச்சக் குறிப்பு.

மருள்போல அன்றேமாயும் கனவுபோலப் பின்னுமாயுமென் றுரைத்துக்கொள்க.

மருளும் கனவும் ஆகுபெயர்.

வாழ்க்கையென்புழியும் பின்னென்புழியும் இறந்ததுதழீஇய வெச்சவும்மை விகாரத்தாற்றொக்கன. (94)

அரிசனம் பூசி மாலை யணிந்துபொன் னுடை சாத்திப்
பரிசனம் பின்பு செல்லப் பாரகர் பரிக்கக் கொட்ட
வரிசின்ன மூதத் தொங்கல் வந்திட வுணர்வு மாண்டு
பெரியவர் பேச்சு மின்றிக் கிடத்தலாற் பிணத்தோ டொப்பர்.

சுப் — பதவுரை

அரிசனம் பூசி – சந்தன முதலிய வாசனைதிரவியங்கள் பூசியும்,—மாலை அணிந்து – வாசத்தோடு கூடிய பூமாலைகள் அணிந்தும்,—பொன் ஆடைசாத்தி – பீதாம்பரம் போர்த்தும்,— பரிசனம் பின்பு செல்ல – தம் பரிவாரங்கள் பின்னேவரவும்,—பாரகர் பரிக்க – காவுவோர் (சிவிகை) சுமக்கவும்,—கொட்ட – வாத்தியங்கள் முழக்கவும்,—வரிசின்னம் ஊத–வரிபொருந்திய சின்னங்கள் ஊதவும்,–தொங்கல் வந்திட – சத்திரசாமரங்கள் சூழவரவும்,—உணர்வுமாண்டு பெரியவர்பேச்சும் இன்றிக்கிடத்தலால்–அறிவற்று (அதிகாரஞ்செய்து) பெரியராய்ப் பேச்சின்றிச் செருக்குற்றுக் கிடத்தலால்,—பிணத்தோடு ஒப்பர் – அவர் செத்தாரின் வேறல்லர் என்பது,—(உணரின் உண்டாம்)-(ஆண்டுநிகழும் நிகழ்ச்சிபற்றி) அறியவல்லராயின் அவர்களுக்கு அதனைனகிய மையலைவிடுதல் கூடும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அதிகாரஞ்செய்து செருக்குறுவார் செத்தாரின் வேறல்லரென்பது ஆண்டு நிகழு நிகழ்ச்சிபற்றி யறியவல்லார்க்கு அதனைனகிய மையலை விடுதல் கூடுமென்பதாம்.

உணரினுண்டாமென்றதனை ஈண்டுந் தந்துரைக்க.

பெரியவரென்றது இழித்தற்கண் வந்த குறிப்புமொழி; பெருமை அதிகாரத்தானுயது.

இவை மூன்றுசெய்யுளானும் வாழ்வெனுமையல் வீடுதற்கு உபாயங் கூறியவாறு. (95)

பிணத்தினை யெரித்து வாழ்வோர் பின்னடைப் பிணங்கள் போல, வணக்கிலே யுழல்வீ ருங்க ளுடலுயி ருணர்வு மெல்லாங், கணத்திடைத் தோன்றி மாயுங் காயமென் றறிந் தொருக்கால், வணக்குறீ ரரனை யென்றும் வானவர் வணங்க வைப்பான்.

சுப — பதவுரை

அரனை ஒருக்கால் வணக்குறீர் – சிவபிரானை ஒருகாலேனும் வழிபாடு செய்கின்றிலீர் (செய்யப்பெறின்),—என்றும் வானவர் வணங்க வைப்பன் – எஞ்ஞான்றும் தேவர்களும் வணங்கும் வண்ணம் (இறவாச்செல்வத்தை) அளிப்பனுதலின்,—கணத்திடைத் தோன்றி மாயும் காயம் என்று அறிந்து – (அதனைநோக்கக்) கணத்தின்கட் டோன்றி அழிதன் மாலைத்து உடம்பென்று உணர்ந்தும் (அதன்பொருட்டு),—உங்கள் உடல் உயிர் உணர்வு மெல்லாம் - உம்முடைய உடல் உயிர் உணர்வுமுதலிய வெல்லாம்,—உணக்கிலே உழல்வீர் – வருத்த முறும்படி வருந்தினவராய் (நீர் ஈட்டப்படுஞ் சிறு செல்வஞ் செல்வமன்றென்பது உணர்வீராயின்),—பிணத்தினை ஒத்துவாழ்வோர் பின் நடைப்பிணங்கள் போல (ஆம்) – (இச்சிறு செல்வத்தைவேண்டிப்) பிணத்தினையொத்து வாழும் அவ்வதிகாரச் செருக்குடையார் பின்சென்று நடைப்பிணங்கள்போல் (நின்று ஏக்கறுஞ் சிறுமையினீங்குதல் உமக்குக்) கூடும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. சிவபிரானே வழிபட்டுப்பெறும் இறவாச்செல்வத்தை நோக்கக் கணத்தினழிதன்மாலைத்தாகிய உடம்பின் பொருட்டு வருந்தியீட்டப்படுஞ் சிறுசெல்வஞ் செல்வமன்றென்பதுணரவல்லார்க்கு, இச்சிறு செல்வத்தை வேண்டி அவ்வதிகாரச் செருக்குடையார் பின் சென்று நின்றேக்கறுஞ் சிறுமையினீங்குதல் கூடுமென்பதாம்.

உடலுயிருணர்வுமெல்லா முணக்கியென வியையும்.

இச்செய்யுள் வறுமையாஞ்சிறுமை தப்புதற்கு உபாயங்கூறியவாறு.

ஒன்றதா யென்பது முதல் இத்துணையும் ஒழிபு கூறியதெனக் கொள்க. (96)

இரண்டாஞ்சூத்திரமுடிந்தது.

ஆகத்திருவிருத்தம் — 186.



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் சுபக்கம்

பிரமாணவியல்

மூன்றுஞ்சூத்திரம்

திருவிருத்தம் — 4.

மூன்றாஞ்சூத்திரம்

முதற்சூத்திரத்தும் இரண்டாஞ்சூத்திரத்தும் முறையே பதியுண்மைக்கும் பாசவுண்மைக்கும் பிரமாணங் கூறியவாசிரியர், இரண்டாஞ் சூத்திரத்தின் அலகிலாவுயிரென்று எடுத்துக்கொள்ளப் பட்டொஞ்சி நின்ற பசவுண்மைக்குப் பிரமாணம் மூன்றாஞ் சூத்திரத்திற் கூறுகின்றார்.

உயிரெனப் படுவ திந்த வுடலின்வே றுளதா யுற்றுச்
செயிருறு மிச்சா ஞானச் செய்திக ளுடைய தாகிப்
பயில்வுறு மின்பத் துன்பப் பலங்களு நுகரும் பார்க்கிற்
றுயிலொடு மஞ்ச வத்தைப் படுமுண்மை துரியா தீதம்.

சுப் — பதவுரை

உளதாய் – உயிர் சூனியமெனின் அவ்வாறு சொல்வ தொன்று உளதாய் நிற்றலானும்,—உற்றுச் செயிர் உறும்– உடம்பே உயிரெனின் உடம்பகத்தே பொருந்தி நின்று யானெனதென்னுஞ் செருக்குறுதலானும்,–இச்சா ஞானச் செய்திகள் உடையதாகி – ஐம்பொறியே உயிரெனின் ஞானமாத்திரையேயன்றி ஞானங் கிரியை இச்சை யென்னு மூன்று முடைத்தாகலானும்,—துயிலொடும் பயில்வு உறும்–சூக்கும வுடம்பே உயிரெனிற் கனவொடு பயின்றதனை நனவின்கண் உற்றறிந்து நிற்றலானும்,— இன்பத் துன்பப் பலங்களும் பார்க்கில் நுகரும் – பிராண வாயுவே உயிரெனின் இன்பத்துன்பப் பயன் கருவிகள் ஒடுங்கிய விடத்தின்றி ஒடுங்காது விழித்தவிடத்தே நுகர்ந்து நிற்றலானும்,—அஞ்சு அவத்தைப் படும் –

பிரமமே உயிரெனின் அறிந்தாங்கறிதலின்றி ஐந்தவத்தைப்பட்டு அறிதலானும்,—துரியாதிதம் உண்மை–அனைத்துங்கூடிய சமுதாயம்உயிரெனின் அனைத்து நீங்கிய துரியாதீதத்தும் உண்மையானும்,—இந்த உடலின் உயிரெனப்படுவது வேறு – இந்தவுடலின்கண் உயிரெனப்படுவது இவையனைத்திற்கும் வேறு என்க.

சிவ – பொழிப்புரை

எ-து. உயிர் சூனியமெனின், அவ்வாறு சொல்வதொன்றுளதாய் நிற்றலானும், உடம்பேயுயிரெனின், உடம்பகத்தே பொருந்திநின்றுயானெனதென்னுஞ் செருக்குறுதலானும், ஐம்பொறியேயுயிரெனின், ஞானமாத்திரையேயன்றி ஞானங்கிரியையிச்சையென்னு மூன்றுமுடைத்தாகலானும், சூக்குமவுடம்பேயுயிரெனின் கனவொடு பயின்றதனை நனவின்கணுற்றறிந்து நிற்றலானும், பிராணவாயுவேயுயிரெனின், இன்பத்துன்பப்பயன் ஒடுங்கியவிடத்தின்றி யொடுங்காதவிடத்து நுகர்ந்து நிற்றலானும், பிரமமேயுயிரெனின், அறிந்தாங்கறிதலின்றி ஐந்தவத்தைப் பட்டறிதலானும், அனைத்துங்கூடிய சமுதாயமுயிரெனின், அனைத்து நீங்கிய துரியாதீதத்துமுண்மையானும், இந்தவுடலின்கணுயிரெனப்படுவது இவைபனைத்திற்கும் வேறென்பதாம்.

உயிரெனப்படுவதென்றது சாதியொருமை.

துயிலொடும் பயில்வுறுமென வியையும்; துயிலென்றது ஈண்டுக் கனவின்மேற்று; பயில்வுறுமென்புழி இரண்டாவது விரித்துரைக்க; பயில்வு ஆகுபெயர்.

பார்க்கில் நுகருமென மாறுக; பார்க்கில் விழித்த விடத்தென்றவாறு.

''ஐயுங் கண்ணு மல்ல ப் பொருள்வயின்–மெய்யுருபு தொகாஅ
லிறுதி யான'' (தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமைமயங்
கியல், சூ. – 22) என்பதோத்தாகலின், ஏழாவது இறுதிக்கட்
டொக்கது.

தரியாதீதத்தி லுயிருண்டென்பது விழித்தபின்னர்ச் சுக
மாகத் தூயின்றேனென்று உணர்வு நிகழ்தல்பற்றித் தெளியப்படும்.

உளதாயென்பது முதலிய வேழுங் குறிப்பேதுவாகலான்,
அவற்றை இங்ஙனம் விரித்துரைத்து முதனூலின் மூன்றுஞ் சூத்
திரம் போல இச்செய்யுள் ஏழுகூற்றதாயவாறு கண்டுகொள்க.

அற்றேல், சூனியமுதலியவற்றுள் ஏனையவெல்லாமறியுமென்
பது காட்சியளவைக்கு எய்தாமையின் உயிர் அவற்றின் வேறெனக்
கொள்ளினும், உடம்பாதல் உடம்பின்கணுளவாகிய ஐம்பொறி
களாதல் அவ்வைம்பொறிகளேயூக்கி இயங்குவதாய பிராணவாயு
வாதல் அறியுமென்பது காட்சியளவையா னறியக்கிடத்தலின்,
உயிர் அம்மூன்றனுளொன்றுகற்பாற்றென்றலே பொருத்தமுடைத்
தப் போலுமென்பாரை நோக்கி அம்மூன்றனையுஞ் சிறந்தெடுத்
தோதி மறுத்தற்கெழுந்தன வருஞ் செய்யுட்களென்பது. (1)

உடலின்வே றுயிரே னிந்த வுடலன்றே வுணர்வ தென்னி
னுடல்சவ மான போது முடலினுக் குணர்வுண் டோதா
னுடலினின் வாயுப் போ னுணர்ச்சியின் றுடலுக் கென்னி
னுடலினின் வாயுப் போகா துறக்கத்து முணர்வ தின்றே.

சுப் — பதவுரை

உடலின் வேறு உயிர் ஏன் – இவ்வுடம்பின் வேறாய்
உயிரொன்றுண்டென்பது எற்றுக்கு,—இந்த உடல்
அன்றே உணர்வது என்னின் - இவ்வுடம்பே அறியு

மெனின்,–உடல் சவமானபோதும் உடலினுக்கு உணர்வு உண்டோதான் – அவயவங்களின் ஒன்றனுங் குறைபாடின்றிக்கிடக்கும் பிணக்கிடையினும் அவ்வுடலின் அறிவுளதோ இன்று,—உடலினின் வாயுப்போலல் உடலுக்கு உணர்ச்சி இன்றென்னின் – இவ்வுடம்பினுள்ள பிராண வாயு நீங்கிடின் அதனில் உணர்வு நிகழாதெனின்,—உடலினின் வாயுப் போகாத உறக்கத்தும் உணர்வது இன்றே – நீ கூறும் பூதக்கூட்டத்தின் ஒன்றனுங் குறைவின்றிக்கிடக்கும் உறக்கத்தினும் அறிவு நிகழ்வதின்று (ஆகலின் உடம்பறியுமாறு யாண்டையது) என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. அவயவங்களி லொன்றனுங் குறைபாடின்றிக்கிடக்கும் பிணக்கிடையினும் நீ கூறும் பூதக்கூட்டத்திலொன்றனுங் குறைவின்றிக் கிடக்குமுறக்கத்தினும் அறிவு நிகழக் காணுமையான், உடம்பறியுமாறு யாண்டையதென்பதாம்.

போகாதவென்னும் பெயரெச்சத்தகரம் விகாரத்தாற்றொக்கது.

(2)

அறிவதைம் பொறியே யென்னி னுறக்கத்தி னறியா வாகு, மறிவது மொன்றொன் றுக வொன்றொன்று மறியு மென்னி, னறிவுக ளொன்றை யொன்றங் கறிந்திடா வைந்தை யுங்கொண், டறிவதொன் றுண்ட தான்மா வைம்பொறி யறிந்தி டாவே.

சுப — பதவுரை

ஐம்பொறியே அறிவது – (பிணமாம்போது கெட்டொழிவதாகிய) ஐம்பொறிகளே (அவ்வுடம்பினின்று

நனவின்கண்) அறியும், —உறக்கத்தின் அறியாவாகும் என்னின் – உறக்கத்தின்கண் அறிதலின்றி ஒடுங்கி நிற்கு மெனின், —அறிவதும் ஒன்றொன்றுக – (நனவின்கண் அவை) அறிவதும் ஒவ்வொரு பொறியாக அறிவதன்றி (ஒருங்கே அறிவனவல்ல), —ஒன்றொன்று யறியுமென்னின் – ஒன்றொன்றுக அறியு(மதுவே அவற்றியல்) பெனின், —அறிவுகள் ஒன்றை அங்கு ஒன்று அறிந்திடா– (அங்ஙனமாயினும்) இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியா, —ஐந்தையுங்கொண்டு அறிவது ஒன்று உண்டு – (ஆகலான்) இவ்வைந்தினுனும் (ஐம்புலன்களையும்) அறிவ தொன்றுளது, —அது ஆன்மா – அஃதே ஆன்மாவெனப் படும், —ஐம்பொறி அறிந்திடாவே – ஐம்பொறிகடாமே அறியமாட்டா என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *பிணமாம்போது கெட்டொழிவதாகிய ஐம் பொறிகளே அவ்வுடம்பினின்று நனவின்கணறியும் உறக்கத் தின்கணறிதலின்றி ஒடுங்கிநிற்குமெனின், அது பொருந் தாது; நனவின் கனவையறிவதும் ஒவ்வொரு பொறியாயறி வதன்றி ஒருங்கேயறிவனவல்லவாதலானும், ஒன்றொன்று யறியுமதுவே யவற்றியல்பெனின், அங்ஙனமாயினும் இந்திரி யங்கள் ஒன்றறிந்த தொன்றறியாமையானும் இவ்வைந்தி னுனு மைம்புலன்களையுமறிவதொன்று உளதாகலானுமென் பதாம்.*

அறிவதைம்பொறியே யுறக்கத்தி னறியாவாகுமென்னின் என வியையும்.

அறிவதென்பது அத்தொழின்மேனின்றது.

உம்மை சிறப்பு.

அறிவுகள் ஆகுபெயர்.

அஃதென்னுமாய்தம் விகாரத்தாற்றொக்கது.

இவ்வாறன்றி, அறிவதைம்பொறியேயென்னி னுறக்கத்தி னறியாவாகு மறிவது மொன்றிரண்டாக வொன்றிரண்டு யறியு மென்னின் என்பதற்கு என்னுடம்பகத்து நின்றறிவது ஐம்பொறி களேயாம் அவையுறக்கத்தினறியாதவாகும் நனவின்கணெவ்வொரு விடயமாகவறிவதும் இருவர் மதத்தினுமொக்கும், அது பற்றி யென்னேயாசங்கித்தல் கூடாமையான் அவ்வைம்பொறிகளே யொருதலேயாகவறியும் வேறுமோருயிர்கோடன் மிகையாமென் பையாயின் என்றுரைத்தலுமொன்று.

உறக்கத்தினறியாமை யிழுக்கன்றென்பான் வாகென்றனென் பது. (3)

அறிந்திடும் பிராண வாயு வடங்குதல் விடுதல் செய்தா
லறிந்திடா தடஙு றக்கத் தறிவின்மை கரண மின்மை
யறிந்திடு முதலி யாகி னதுநிற்கக் கரணம் போகா
வறிந்திடும் பிராணன் றன்னே யடக்கியும் விட்டு மான்மா.

சுப் — பதவுரை

பிராணவாயு அடங்குதல் விடுதல் செய்தால் அறிந் திடும் – பிராணவாயு அடங்குதல் விடுதல் செய்தாலே அறிவு நிகழக்காண்டலின் (அதுவே அவ்வைந்தையுங் கொண்டறிவதாகிய உயிரென அமையும்).—உடல் உறக் கத்துக் கரணம் இன்மை அறிவின்மை அறிந்திடாது – உடம்பின்கண் உறக்கத்தில் (அஃதியங்கினும் ஆண்டுக்) கருவியின்மையான் அறிவில்லேயாய் அறியாதாயிற்றெனின்

(அதுபொருந்தாது),—அறிந்திடு முதலியாகின் அது நிற்கக் காரணம் போகா – அறியப்படுங் காரணமுதலி அதுவானால் அஃது நிற்புழிக் காரணம் போதல் கூடாமையின் –அடக்கியும் விட்டும் பிராணன்றன்னை அறிந்திடும் ஆன்மா – (காரணங்களையும்) அடக்குதல் விடுதல்கள்செய்து அப்பிராண வாயுவையுங் கொண்டறிவதாகிய உயிர் (வேறுண்டென்பது பெறப்படுதலான்) என்க.

சிவ — பொழிப்புரை


எ-து. பிராணவாயு அடங்குதல் விடுதல் செய்தாலே அறிவு நிகழக் காண்டலின் அதுவே பல்வைக்தையுங் கொண்டறிவதாகிய உயிரெனவமையும், உறக்கத்திலஃதியங்கினும் ஆண்டுக் கருவியின்மையான் அறியாதாயிற்றெனின்,—அது பொருந்தாது; காரணமுதலி நிற்புழிக் காரணம் போதல் கூடாமையிற் காரணங்களையுந் தன்னையுங் கொண்டறிவதாகிய வுயிர் வேறுண்டென்பது பெறப்படுதலானென்பதாம்.

இவை மூன்றுசெய்யுளானும், முறையே உடல் பொறி பிராணவாயு வென்னும் மூன்றனையுங் காட்சியளவையானறியக் கிடந்த விசேடம்பற்றி வேறெடுத்தாசங்கித்துப் பரிகரித்து, இந்த வுடலினுயிரெனப் படுவது வேறென்பது சாதிக்கப்பட்டது.

ஏனையவெல்லாம் வருஞ்சூத்திரத்தினுண்டாண்டியைபுபற்றிக் கூறக்கிடத்தலானும், உளதாயென்னு முதற்கூற்றில் ஆசங்கை விசேடமின்மையானும், அவற்றை யீண்டு விரித்திலர். (4)

மூன்றுஞ்சூத்திரமுடிந்தது.

ஆகத் திருவிருத்தம் – 190.



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் சுபக்கம்

இலக்கணவியல்

நான்காஞ்சூத்திரம்



நான்காஞ்சூத்திரம்.

மேன் மூன்று சூத்திரத்தானும் பொருளுண்மைக்கு அளவு கூறிய வாசிரியர், நிறுத்தமுறையானே பொருளியல்பு கூறுவான் முடங்கி, மேற் கூறிப்போந்த பதி பாச பசுக்களே எதிர் நிரனிறை யாகவைத்து முதற்கட் பசுவிலக்கணங் கூறுகின்றார்.

உணர்வன கரண மென்னி லொன்றையொன் றுணரா வெவ்வே, றணைதருஞ் செயல்க ணான்கு மறிந்தவை யடக்கி யாக்கிப், புணருமுட் கருவி யாக்கிப் புறக்கரு வியினும் போக்கி, யிணைதரு மிவற்றின் வேரு யானென தென்ப தான்மா.

சுப் — பதவுரை

கரணம் உணர்வன என்னில்–(இனி) அந்தக்கரணமே உணருமென்பரெனின்,–ஒன்றை ஒன்று உணரா–(இவை யும் ஐம்பொறி போல்) ஒன்றனையொன்றுணராவா கலான்,—ஆன்மா இவற்றின் வேரும் – உயிர் இவற்றின் வேருகியும்,—யான் எனது என்பது இணை தரும் - யானெனதென்னுஞ் செருக்குறுதற்கேதுவாகிய ஆணவ மலமும் உடனியைந்து நிற்குமாகலான்,—நான்கு செயல் களும் அறிந்து – (தனக்கென அறிவின்றி இவ்வந்தக் கரணங்களாலையை) நான்கு தொழிலையும் (இவற்றோடுகூடி) அறிந்து,—அவை அடக்கிப் புணரும் உட்கருவி ஆக்கி – இவற்றை (யடக்கவேண்டுழி) ச் சொப்பனவத்தையிற் செலுத்திப் பொருந்திய உட்கருவிகளாக்கியும்,—ஆக்கிப் புறக் கருவியினும் போக்கி – ஆக்கவேண்டுழிச் சாக்கிரா வத்தையிற்செலுத்திப் புறக்கருவிகளிற் போக்கியும்,— வெவ்வேறு அணைதரும் – வெவ்வேறவத்தைகளே அணை யும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இனி அந்தக்கரணமே யுணருமென்பார்க்கு, இவையும் ஐம்பொறியோ லொன்றினை யொன்றுணரா வாகலான், உயிர் இவற்றின் வேறுகியும், யானெனதென்னுஞ் செருக்குக்கேதுவாகிய ஆணவமலம் உடனுயிணைந்து நிற்குமாகலான் தனக்கென வறிவின்றி, இவ்வந்தக்கரணங்களானைய நான்கு தொழிலையுமிவற்றோடு கூடியறிந்து இவற்றையடக்க வேண்டுழி யடக்கி உட்கருவிகளாக்கியும், ஆக்க வேண்டுழியாக்கிப் புறக்கருவிகளிற் போக்கியும் வெவ்வேறவத்தைகளை யணையுமென்பதாம்.

எனவே, ஆணவமலத்திற் பிணிப்புண்டு அவத்தையுறுதல் ஆன்மாவுக்கிலக்கணமென்றவாருயிற்று; இது தடத்தலக்கணமெனப்படும் பொதுவியல்பு.

உணராவாகலான் இவற்றின்வேறுகியும், யானெனதென்பதிணைதருமாகலான் அறிந்தடக்கியாக்கி ஆக்கிப் போக்கி வெவ்வேறணைதருமென வினைமுடிபு செய்க.

அடக்குதல் சொப்பனுவத்தையிற் செலுத்துதல்.

ஆக்குதல் சாக்கிராவத்தையிற் செலுத்துதல்.

இனம்பற்றி ஏனையவத்தைகளுங் கொள்ளப்படும்.

அவையடக்கியாக்கிப் புணருமுட்கருவியாக்கிப் புறக்கருவியினும் போக்கியென்பது நிரனிறைப்பொருள்கோள்.

வேறுயுமெனச் சிறப்பும்மை விரித்துரைக்க.

என்பதெனக் காரணத்தைக் காரியமாகவுபசரித்தார்.

யானெனதென்பதென்னும் பெயரடை அதனுண்மை சாதித்தற்குக் குறிப்பேதுவாய் நின்றது.

இச்செய்யுள் முதனூல் காலாஞ்சூத்திரம்போல முக்கூற்றதா மாறு கண்டுகொள்க.

இனி அம்முக்கூற்றுள், உணர்வன காணமென்னி னெஞ்றை யொன் றுணராவாகலான் ஆன்மா விவற்றின் வேறுமென்னு முதற்கூற்றை வலியுறுத்துகின்றார். (1)

முதலதிகரணம்.

கருவியா மனமும் புத்தி அகங்காரம் சித்த நான்கு, மருவியான் மாவே யென்ன வருந்தீப மெனத்தெ ரிந்தங், கொருவியான் மாவி னுண்மை யுணர்ந்தவர் தமையு னர்ந் தோர், தருமிது பசுஞா னம்பின் சிவஞானந் தனக்கு மேலாம்.

சுப் — பதவுரை

மனமும் புத்தி அகங்காரம் சித்தம் நான்தும் கருவியா மருவி – மனம் புத்தி அகங்காரஞ் சித்த மென் கின்ற நான்கும் (ஒரு விடயத்தை அறிதற்குக்) கருவியாக மருவி,—ஆன்மாவே என்ன வரும் – (இவையே) கருத்தா வென்னும்படி (உயிரோ டொற்றித்து நின்று) நிகழ்வன வாம்,—தீபமென தெரிந்து அங்கு ஒருவி – (கண்ணுக்கு) விளக்குப்போல (இவை உயிர்க்குக் கருவியாய் வேறு நிற்பன) வென்றறிந்து நீங்கி நின்று,—ஆன்மாவின் உண்மை உணர்ந்தவர் தமை உணர்ந்தோர் – (இவற்றைக் கொண்டறியுங்) கருத்தாவினுண்மை யாதென்றுராய்ந்த வரே தாமாகிய ஆன்மசொரூபத்தை இனிதுணர்ந்தோர்,—

பின் பசுஞானம்–அதன் பின்பு (அங்ஙனம் ஆராயுமறிவு) பசுஞான மாகலான்,—இது தரும் சிவஞானம் தனக்கு மேலாம் – அதனைத்தரும் (பொருள் யாதெனத் தேர்வார்க்குச்) சிவஞானம் அதற்கு மேலாய் விளங்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. மனமுதலிய நான்கும், ஒருவிடயத்தை யறிதற்குக் கருவியாக மருவி, இவையே கருத்தாவென்னும்படி உயிரோடு ஒற்றித்து நின்று நிகழ்வனவாம்; கண்ணுக்கு விளக்குப்போல இவை யுயிர்க்குக் கருவியாய் வேறு நிற்பன வென்றறிந்து நீங்கி நின்று இவற்றைக்கொண்டறியுங் கருத்தாவினுண்மை யாதென்றாராய்ந்தார்க்கு ஆன்மசொரூபம் இனிது விளங்கும்; அதன் பின்பு அங்ஙனமாராயுமறிவு பசுஞானமாகலான் அதனைத் தரும் பொருள் யாதெனத் தேர்வார்க்குச் சிவஞானம் அதற்கு மேலாய் விளங்குமென்பதாம்.

ஈண்டு ஆன்மாவென்றது கருத்தாவென்னுந்துணையாய் நின்றது, தமையுணர்ந்தோரென முன் வருதலின்.

இதனானே அந்தக்கரணங்கள் கருத்தாவல்லவென்பது தம்மையுந் தலைவனையுமறியுமாற்றின் வைத்துக் காட்டப்பட்டது. (2)

அவ்வுடனுவ்வுமவ்வுமனம்புத்தியகங்காரங்கள், செவ்வியவிந்து நாதஞ் சித்தமோடுள்ளமாகு, மொவ்வெனு மெழுத்தாமைந்து மூணர்வுதித் தொடுங்கு மாறும், பவ்வமுந் திரையும் போலும் பார்க்கிலிப் பண்புந் தோன்றும்.

சுப் — பதவுரை

அகங்காரம் புத்தி மனம் சித்தமொடு உள்ளங்கள் – அகங்காரம் புத்தி மனம் சித்தம் உள்ளமென்கின்ற அவை கருவியாவதூஉம்,— அவ்வுடன் உவ்வும் மவ்வும் செவ்விய விந்து நாதம் ஆகும் – (முறையே) அகாரமும் உகாரமும் மகாரமும் செவ்விதாய விந்துவும் நாதமுமென்கின்ற எழுத்துக்கள் உடனின்று செலுத்தியவழியேயா மாகலால்,—ஒவ்வெனும் எழுத்தாம் ஐந்தும் – (சமட்டியிற்) பிரணவரூபமா மிவ்வைந்தெழுத்தானும்,—உணர்வு உதித்து ஒடுங்குமாறும் – (உயிரின்கண்) உணர்வு மாறி மாறித் தோன்றுமுறையும்,—பவ்வமும் திரையும்போலும் – கடலின் கண்ணே திரை புதிது புதிதாகத் தோன்றியும் ஒடுங்கியும் வருமாறு போலாம்,—பார்க்கில் – (சவிகற்பவுணர்வுக்குக் காரணம் நிவிர்த்தாதி கலையைப்பற்றி ஐந்தாய்த் திகழு நால்வகைவாக்குக்க ளென்பதனை) உற்றுநோக்கின்,—இப்பண்பும் தோன்றும் – இவ்வியல்பு இனிது விளங்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *அவை கருவியாவதூஉம் அகரமுதலியவெழுத்துக்கள் உடனின்று செலுத்தியவழியேயாமாகலான், சமட்டியிற் பிரணவரூபமாமிவ்வைந்தெழுத்தானும் உயிரின்கணுணர்வு மாறி மாறித் தோன்றுதல் கடலின்கண்ணே திரை புதிதுபுதிதாகத் தோன்றியு மொடுங்கியும் வருமாறுபோலாம். சவிகற்பவுணர்விற்குக் காரணம் நிவிர்த்தாதிகலையைப் பற்றி ஐந்தாய்த்திகழும் நால்வகை வாக்குக்களென்பதனை உற்றுநோக்கின் இவ்வியல்பு இனிது விளங்குமென்பதாம்.*

ஒற்றுமைபற்றி எழுத்துக்களே அவையாக வுபசரித்தார்.

புருடதத்துவமும் அதனைச்செலுத்து மக்காரமும் ஈண்டொப் புமைபற்றி உடன் கூறியவாறு; புருடதத்துவத்தைச் செலுத்துத லாவது புருடதத்துவமாந் தன்மையை நிகழ்வித்தல்.

"அகார வுகார மகங்காரம் புத்தி – மகாரம்" (சிவஞானபோ தம், நான்காஞ்சூத்திரம், செ – 3) என முதனூலுட் கூறுதலா னும், துகளறுபோதத்தும் அவ்வாறே கூறுதலானும், ஈண்டு அவ் வுட னுவ்வு மவ்வு மனம் புத்தி யகங்காரங்கள் என்றது எதிர் நிர னிறையெனக் கொள்க.

பிராணவமாகலின் உள்ளவாறே வெளிப்படக் கூறுது ஒவ் வெனக் கடைக்குறைத்துக் குறுக்கல்விகாரமாக்கிக் கூறினர்.

ஐந்தானுமென்னுமானுருபு விகாரத்தாற் றொக்கது. (3)

அயனரி யரனு மீசர் சதாசிவ மதிதெய்வங்க
ளுயவரு மவ்வோ டுவ்வு மவ்விந்து நாதங் கட்குப்
பயனுறு மஞ்சி லான்மாப் பரவிடி லிதித்தாம் பார்க்கிற்
சயமுறு வளியி ரண்டுந் தவிர்த்துறிற் றூனுந் தோன்றும்.

சுப் — பதவுரை

அவ்வோடு உவ்வும் மவ் விந்து நாதங்கட்கு - அகார உகார மகார விந்து நாதங்களாகிய அவ்வெழுத்துக்களே, அயன் அரி அரனும் ஈசர் சதாசிவம் அதிதெய்வங்கள் உயவரும் – (முறையே) அயனும் அரியும் அரனும் மகேச ரும் சதாசிவருமாகிய ஐவரும் அதிதெய்வங்களாய் அதிட் டித்து நிற்பராகலான்,—அஞ்சில் ஆன்மாப் பரவிடில் – இவ்வாறு கரணமும் அக்கரமும் அதிதெய்வமு மென்னும்

இம்முத்திறத்தைந்தோடும் ஆன்மாப் பரவியவழி,—பார்க்கின் பயன் உறும் – பார்க்குமிடத்தே அறிதற் பயனுறும்,—(பரவாவிடில்) அசித்தாம் – பரவாதவழிச் சடம் போல் அறிவிலதாம்,—சயம் உறு வளி இரண்டும் தவிர்த்துறின் தானும் தோன்றும் - (இவ்வியல்பும்) வலிபொருந்திய இருவகை வளியும் அடக்கிச் செய்யும் (யோகிகள்) யோகப்பயிற்சியில் இனிது விளங்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து அவ்வெழுத்துக்களே முறையே அயன்முதலிய வைவரும் அதிதெய்வங்களா யதிட்டித்து நிற்பராகலான், இவ்வாறு காரணமு மக்காரமு மதிதெய்வமுமென்னு மிம்முத்திறத்தைந்தொடும் ஆன்மாப் பரவியவழி யறிதற்பயனுறும் பரவாவிடிற் சடம்போலறிவிலதாம்; இவ்வியல்பும் இருவகை வளியுமடக்கிச் செய்யும் யோகப்பயிற்சியுடையார்க்கு இனிது விளங்குமென்பதாம்.

அசித்தேதாடொக்குமென்பார் அசித்தாமென்றுபசரித்தார்.

பரவாவிடிலென்பது சொல்லெச்சம்.

இவையிரண்டு செய்யுளானும் அ வை கருவியாதற்கட்படு முறைமையும் அதனை யறிதற்குபாயமுங் கூறப்பட்டன.

அற்றேல், இம்முத்திறத்தைந்துங் கூடிய கூட்டத்தினிகழ்வதே அறிவாகலின், இப்பலபொருட்கூட்டமே யவ்வறிவுக்கு முதலாதலையும் இடையே உயிரொனவொன்று கோடல்எற்றுக்? கென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (4)

ஆன்மாவின் வடிவு தானே யநேகார்த்தக் கூட்ட மென்னிற், பார்ப்பார்கட் கான்மா வின்ரூய்ப் பலபொரு ளுண்மை யாகுஞ், சேர்ப்பாய பலவே யுண்மை யென்றி டிற் சென்றி வற்றை, யோர்ப்பான்வே றுணர்வோர்க் கெல்லா மூணர்பொருள் வேற தாமே.

சுப — பதவுரை

ஆன்மாவின் வடிவுதானே அநேகார்த்தக் கூட்டம் என்னின் – ஆன்ம சொரூபமானது (கரணம் அக்கரம் அதிதெய்வங்களாகிய) பலபொருட்கூட்டமென்றிடின்,— பார்ப்பார்கட்கு இன்ரூய்ப் பலபொருள் உண்மையாகும்– ஆராய்பவர்கட்கு(க் கூட்டமென ஒரு பொருள்)இன்ரூகி அப்பலபொருள் உண்மையாகும்.—சேர்ப்பாய பலவே உண்மை ஆன்மா என்றிடில் – கூடுதலாய அப்பதினேந் துமே உண்மையாகிய ஆன்மாவென்ரூல்,—உணர்வோர்க் கெல்லாம் சென்றிவற்றை ஓர்ப்பான் வேறு உணர் பொருள் வேறதாமே – அறிபவரனேவர்க்கும் பொருந்திய இப்பதினேந்தினையும் அறிபவனுகிய ஆன்மாவும் வேரும் அறியப்படும் பொருளாகிய அப்பதினேந்தும் வேரும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. கூட்டமெனவொருபொருள் இன்மையானும், கூடுவனவாய பலபொருள்களும் வேரூயறியப்பட்டு நிற்றலானும், அறியப்படுவதுமறிவதுந் தம்மூளொன்ரூதல் செல்லாமையானும், இப்பதினேந்தினையும் இவை கூடியவாற்றையும் அறிவதாகியவுயிர் வேறுண்டென்பது பெறப்படுதலான் இப்பலபொருளின் கூட்டம் உயிராதல் யாண்டையதென்பதாம்

இதனுனே அவையுயிரின் வேருதல் வலியுறுத்தப்பட்டது.

மேலேச்சூத்திரத்தின் உண்மை துரியாதீதமென்ற இறுதிக் கூற்றைச் சவுத்திராந்திகர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுக்குமாறும் இதனுனே பெறுதும்.

இவை கான்கு செய்யுளானும் அந்தக்காரணங்கள் கருத்தாவல்ல வாமாறும், கருவியாதற்கட்படு முறைமைகளும், அவை உயிரின் வேருமாறுமுணர்த்தி முதற்கூற்றை வலியுறுத்தியவாறு.

இனி இருபத்தாறு செய்யுளாற், பரமதங்களே யெடுத்தோதிப் பரிகரித்து ஆன்மாவிற்கு இலக்கணங்கூறுமுகத்தால், 'யானென தென்பதினே தரு' மென்ற இரண்டாங் கூற்றை வலியுறுத்துவான் ருெடங்கினர். (5)

இரண்டாமதிகரணம்

அறிவிச்சை செயல்க ளெல்லா மடைந்தனல் வெம்மை யும்போற் குறியுற்றங் கேகா நேக குணகுணி பாவ் மாகி, நெறியுற்று நிற்கு மென்னி னிகழ்புலன் கரண மெல்லாஞ், செறிவுற்றங் கறிவு கொள்ள வேண்டுமோ சீவ னர்க்கே.

சுப் — பதவுரை

எல்லாம் - சீவான்மாக்களெல்லாம்,—அங்குக் குறி உற்று – அங்ஙனம் (பிரமப்பொருளின்) பரிணமமாய்த் தோன்றி,—அறிவு இச்சை செயல்கள் அடைந்து – அறி விச்சை செயல்களே அடைந்து,—அனல் வெம்மையும்

போல் – தீயுஞ் சூடும்போல,—ஏகாநேக குணகுணி பாவ மாகி நெறியுற்று நிற்குமென்னின் – பேதாபேதமாகிய குணகுணித் தன்மையுற்றுப் பலவேறுவகைப்பட்டு நிற்கு மெனப் பரிணமவாதிகள் கூறுவரெனின்,—சீவனுர்க்கே நிகழ் புலன் கரணமெல்லாம் செறிவுற்று அங்கு அறிவு கொள்ள வேண்டுமோ–அவ்வாருகிய சீவனுர்க்கு நிகழ் கின்ற பொறிகரணமுதலிய கருவிகளைச் செறிவுற்றன்றி ஆண்டறிய மாட்டாமைக்குக் காரணம் யாது என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. சீவான்மாக்களெல்லாம் பிரமப்பெருளின் பரிணமமாய்த் தோன்றி அறிவிச்சைசெயல்களை யடைந்து தீயுஞ்சூடும்போலப் பேதாபேதமாகிய குணகுணித்தன்மை யுற்றுப் பலவேறுவகைப்பட்டு நிற்குமெனப் பரிணமவாதி கள் கூறுவர். கருவிகளையன்றி யறியமாட்டாத சீவான்மா அவ்வாறுதல் யாண்டையதென்பதாம்.

எல்லாமங்ஙனங் குறியுற்றறிவிச்சைசெயல்க ளடைந்தனல் வெம்மையும் போலேகாகேக குணகுணி பாவமாகி நெறியுற்று நிற்குமெனக்கொண்டு கூட்டியுரைக்க.

எகாகேகம் பேதாபேதம்.

ஆர் விகுதி இழித்தற்குறிப்பின் வந்தது.

இதனுனே மேலச்சூத்திரத்தின் ஆருங்கூற்றை வலியுறுத் தவாறு மாயிற்று. (6)

குணங்களி யின்றி யொன்றுங் குறியுடைத் தான்மா வென்னி னிணங்கிடா விச்சா ஞானக் கிரியைக ளிவையு டற்கட் பிணங்கிடுஞ் சங்கி திக்க ணெனிற்பிணத் தூறக்கத் தின்று மூணங்கிடுங் கரண மென்னிற் சங்கிதி யொழிந்த தன்றே.

சுப் — பதவுரை

குணங்களே இன்றி ஒன்றுங் குறி உடைத்து ஆன்மா வென்னின் - இனிச் சாங்கியர் குணகுணித்தன்மையின்றிக் கேவலம் அறிவுமாத்திரையாய் நிற்றல் உயிரியல் பென்பரெனின்,—உடற்கண் இச்சா ஞானக் கிரியை களிவை இணங்கிடா – உடலின்கண்ணே அறிவிச்சை செயல்கள் நிகழா,—சந்நிதிக்கண் (கரணம்) பிணங்கிடும் எனில் – உயிரின் சந்நிதியில் (உடலின்கட்) கரணங்கள் செயற்படுதல் பற்றி (அறிவிச்சைசெயல்கள்) நிகழுமென் பரெனின்,—பிணத்து உறக்கத்து இன்றும் – பிணத்தும் உறக்கத்து (அவை நிகழ்தல்) இன்றும்,—கரணம் உணங் கிடும் என்னில் – பிணத்தும் உறக்கத்தும் கரணம் ஒடுங் கினமையால் (அறிவிச்சை செயல்கள் நிகழ்தலில்லை) எனில்,—சந்நிதி ஒழிந்தது அன்றே – (பிணத்தும் உறக் கத்தும் சந்நிதிக்குக் கேடின்றாகவும் அவை நிகழாமை யாற்) சந்நிதிமாத்திரையான் நிகழ்தல் ஒழிந்தது என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இனிச் சாங்கியர் குணகுணித் தன்மையின்றிக் கேவலம் அறிவுமாத்திரையாய் நிற்றல் உயிரியல்பென் றும், அவ்வுயிரின் சந்நிதியின் உடம்பின்கண்ணே நின்று கரணங்கள் செயற்படுமென்றும், அதனைத் தொழிலறிவிச் சைகள் அவ்வுடம்பிகணிகழுமென்றுங் கூறுவர். பிணத்து முறக்கத்துஞ் சந்நிதிக்குக்கேடின்றாகவும் உடம்பின் கண் அவை நிகழக் காணுமையின் சந்நிதிமாத்திரையான் அவை நிகழ்தல் யாண்டையதென்பதாம்.

சந்நிதி குணம தாகுந் தானென்போ லென்னிற் காந்த
முன்னிரும் பென்ரு யீர்க்கு முறைமையுண் டகற்ற லின்ரு
முன்னுத லொடுங்க லோடு லிருத்தலே கிடத்த னிற்ற
லென்னுமித்தொழில்கண்மற்றுமியற்றுவதான்மாவென்னே.

சுப — பதவுரை

சந்நிதிதான் என்போலென்னின் - (வியாபகமாய் நிற்கப்பெறுதன் மாத்திரையே சந்நியன்று மற்றுச்) சந்நிதி என்போலெனின்,—காந்தமுன் இரும்புக் குணம தாகும் என்ருய் – காந்தமுன் இரும்புபோல (உயிர்முன் உடம்பு தொழிற்படுதற்கேதுவாயதொரு) குணவிசேடஞ் சந்நிதியெனக் கொண்டாமாகலின் (அக்குற்றம் ஈண்டைக் கெய்தா) தென்ருயெனின்,—ஈர்க்கு முறைமை உண்டு அகற்றல் இன்ரும் - (அங்ஙனமாயினும் ஒரு குணமுள்ள காந்தம் இரும்பை) ஈர்த்தலாகிய ஒரு தொழிலன்றி அகற்ற லாகிய மாறுபட்ட தொழில் செய்தலின்ருகலின்,—உன் னுதல் ஒடுங்கல் ஓடல் இருத்தலே கிடத்தல் நிற்றல் என்னும் இத்தொழில்கள் மற்றும் ஆன்மா இயற்றுவது என்னே – நினைத்தல் மறைத்தல் ஓடல் இருத்தல் கிடத் தல் நிற்றல் முதலிய மாறுபட்ட தொழில்கள் ஆன்மாச் செய்யுமாறு யாண்டையது என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. வியாபகமாய் நிற்கப்பெறுதன்மாத்திரையே சந்நிதியன்று, மற்றுக்காந்தமுன் னிரும்புபோல உயிர்முன் உடம்பு தொழிற்படுதற்கு ஏதுவாயதொரு குணவிசேடஞ் சந்நிதியெனக் கொண்டாமாகலின் அக்குற்றம் ஈண்டைக்

கெப்தாதெனின், அங்ஙனமாயினும் ஒருகுணமொருதொழி லன்றித் தம்முண்மாறுபட்ட பலதொழில் செய்யுமாறு யாண்டையதென்பதாம் (8)

உருவுயி ரென்னி னிந்த வுடலினுட் காண வேண்டும்
வருவது பரிண மத்தா யநித்தமாம் பூத மாகுங்
கருவினி னுழையு மாறுங் காட்டிட வேண்டுங் கண்ணின்
மருவிடா தென்னி னுன்றன் வாயினு லுருவன் றென்னே.

சுப் — பதவுரை

உயிர் உருவென்னின் – இனிப் பௌவுராணிகர் மதம் பற்றி உயிர் உருவப்பொருளென்பையாயின், —இந்த உட லினுள் காணவேண்டும் – இவ்வுடம்பினுள் (வேருரு வடிவங்) காணவேண்டும், —வருவது பரிணமத்தாய் அநித் தமாம் பூதமாகும் – (அங்ஙனமன்றி உருவப்பொருளாய்) வருவது (காட்சிப்புலனுய்ப்) பரிணமித்து அழிவெய்தும் பூதத்தோ டொன்றுதல் வேண்டும்,—கருவினில் நுழையு மாறும் காட்டிடவேண்டும்—(அதுவன்றிக்) கருப்பத் திற் புகுமாறுந் தெரித்தல் வேண்டும்,–கண்ணில் மருவிடா தென்னின் – (உருவடிவாயினுங்) கட்புலனுகாதெனின்,– உன்றன் வாயினுல் உரு அன்று என்னே–உனது வாயால் உருவமன்றென மொழிதலே அமையும் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. இனிப் பௌராணிகர் உயிருருவப்பொரு ளென்பர். பரிணமித்தழிதலும் காட்சிப்புலனுதலுமில்லாத பொருள் அவ்வியல்புடைய பூதங்களோடொப்ப உருவாமாறு யாண்டையதென்பதாம். (9)

சூக்கும வுருவ தென்னிற் றூலகா ரணம தாகு
மாக்கிய மனுதி தன்மாத் திரைவடி வசேத னம்பி
னீக்கிய சூக்கு மத்தே நிற்பதோ ருருவுண் டென்னி
னுக்கிடு மூருவ மெல்லா மசித்துமா யசித்த மாமே.

சுப — பதவுரை

சூக்கும வுருவதென்னின் – (பூதம்போலக் காட்சிப் புலனுதற்குரிய தூலவுருவாதலின்றிச்) சூக்கும வுருவாய் நிற்பது உயிரெனின்,—தூல காரணமதாகும் அசேதனம் மனுதி தன்மாத்திரை ஆக்கிய வடிவு – (அஃது) தூல வுருவைத் தோற்றுவிக்கின்ற சடமாகிய மனுதி காரணங்கள் தன்மாத்திரைகளா னுக்கப்பட்ட புரியட்டக வுடம்பே யாகலானும்,—பின் நீக்கிய சூக்குமத்தே ஓர் உரு நிற்பது உண்டென்னின் – பின்பு நீக்கப்பட்ட (அப்) புரியட்டக தேகத்துள் அதி சூக்கும வுருவாய் நிற்பது உயிரெனின்,—ஆக்கிடும் உருவம் – (அஃது) ஆக்கப்பட்ட கலியாதி மண்ணந்தமாயுள்ள பரவுடம்பாகலானும்,—எல்லாம் அசித்துமாய் அநித்தமாமே – அவ்வுருவங்கள் அனைத்தும் அசித்தாதலும் அசத்தாதலும் ஒருதலையாகலானும் (அவ்வியல்பில்லாத வுயிர் உருவப்பொருளாமாறு யாண்டையது) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து பூதம்போலக் காட்சிப்புலனுதற்குரிய தூல வுருவாதலின்றிச் சூக்குமவுருவாய் நிற்பது உயிரெனின், அது தூலவுருவைத் தோற்றுவிக்குஞ் சடமாகிய புரியட்டக வுடம்பேயாகலானும், அப்புரியட்டக தேகத்துள் அதிசூக்குமவுருவாய் நிற்பது உயிரெனின், அது கலியாதி மண்ணந்த

மாயுள்ள பரவுடம்பாகலானும், அவ்வுருவங்களனைத்தும் அசித்தாதலு மசத்தாதலு மொருதலையாகலானும், அவ்வியல் பில்லாதவுயிர் உருவப்பொருளாமாறு யாண்டைய தென்பதாம். (10)

அருவுரு வென்னி லான்மா வருவுரு வாவ தின்ரு
முருவரு வாகா தாகு மொருபொருட் கிரண்டு தன்மை
வருவது மில்லை காட்ட வன்னிபோன் மருவு மென்னி
னுருவமுங் காண வேண்டு முண்மையு மொழிந்து போமே

சுப் — பதவுரை

அருவுரு ஆன்மா வென்னில்—இனிக் கவுளர் அருவுரு வப்பொருள் உயிரென்பரெனின்,—அரு உருவாவது இன்ரும் உரு அருவாகாதாகும் – அரு உருவாவதின்ரும் உரு அருவாகாதாம் ஆகலானும்,—இரண்டு தன்மை ஒரு பொருட்கு வருவதும் இல்லை – (மறுதலைப்பட்ட)இரண்டு தன்மை ஒருபொருட்கு உண்டாதலின்மையானும்,—காட்ட வன்னி போல் மருவுமென்னின் – காட்டமும் வன்னியும்போல் அருவுருவப்பொருளெனின்,—உருவமும் காணவேண்டும் உண்மையும் ஒழிந்து போமே – (அவ் விரண்டுந் தம்முள் வேறுகி) உருவமாய்க் காணப்பட்டுண் மையொழியும் (ஆதலின் ஈண்டைக் கெடுத்துக்காட்டா தல் செல்லாமையானும் அது பொருந்தாது) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இனிக் கவுளர் அருவுருவப்பொருளுயிரென்பர். ஒன்று பிறிதொன்றுகாமையானும், மறுதலைப்பட்ட இரண்டு தன்மை ஒரு பொருட்கின்மையானும், காட்டமும் வன்

னியுந் தம்மூள் வேறுதலின் ஈண்டைக்கு எடுத்துக்காட்டா தல் செல்லாமையானும், அது பொருந்தாதென்பதாம். (11)

சந்திரன் வடிவு போலத் தானரு வுருவ மென்னின்
வந்துநங் கண்ணிற் றோன்றும் வடிவுள தாமு யிர்க்கு
மிந்தவு ணுருவந் தானெ பெழுவது முயிரே யென்னிற்
பந்தமா யசித்தா யான்மாப் பவுதிக மாகு மன்றே.

சுப் — பதவுரை

உயிர்க்கும் தான் அருவுருவமென்னின் – ஆன்மாவுக்கு (வடிவு) அருவுருவமென்னில்,—வந்து நங்கண்ணில் தோன்றும் வடிவு உளதாம் – வெளிப்பட்டு நங்கண்ணிற்குப் புலப்படும் வடிவுளதாதல் வேண்டும்,—சந்திரன் வடிவுபோல–(தலையுவாவின் அருவாய் நின்றே பின் முறை முறையான் வளர்ந்து பூரணையிலே) தூலவுருவாய் விளங்கு தல் மதியின்கட் கண்டாமன்றே அதுபோல,–உயிரும் இந்த வுன் உருவந்தானுய் எழுவதேயென்னின் – உயிரும் (அருவாய்நின்றே கருவுட் பதிந்து முறைமுறையான் வளர்ந்து) இவ்வுடம் புருவாய்த் தோன்றுமாற்றுன் அருவுருவென அமையுமெனில்,—ஆன்மா அசித்தாய்ப் பவுதிகமாய்ப் பந்தமாகும் அன்றே–(சித்தாய் நித்தியமாய்ப் பந்தத்திற்பட்டு நீங்குவதாகிய)உயிர் அசித்தாய்ப் பூதகாரியமாய்ப் பந்தமாவதாகிய உடம்புருவமாமாறு யாண்டையது என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. தலையுவாவின் அருவாய்நின்றே பின் முறை முறையான் வளர்ந்து பூரணையிற் றூலவுருவாய் விளங்குதன்

மதியின்கட் கண்டா மன்றே; அதுபோல உயிரும் அருவாய் நின்றே கருவுட் பதிந்து முறைமுறையான் வளர்ந்து இவ் வுடம்புருவாய்த் தோன்றுமாற்றுன் அருவுருவெனவமையு மெனின் —சித்தாய் நித்தியமாய்ப் பந்தத்திற்பட்டு நீங்கு வதாகியவுயிர், அசித்தாய்ப் பூதகாரியமாய்ப் பந்தமாவதாகிய உடம்புருவமாமாறு பாண்டையதென்பதாம். (12)

அருவவி காரி யான்மா வாகாயம் போல வென்னி
னுருவினைக் கட்டி யாட்டி யோட்டிமீட் டுலாவப் பண்ணி
மருவிநிற் பித்தி ருத்திக் கிடத்திமண் புரட்டி மற்றும்
பெருவிகா ரங்க ளெல்லாந் தருவதென் பேசி டாயே.

சுப் — பதவுரை

ஆகாயம்போல அரு அவிகாரி ஆன்மா என்னின் – இனிப்பாதஞ்சலர் ஆகாயம்போல் அருவாய் அவிகாரியாய் நிற்பது உயிரென்பரெனின்,—உருவினைக் கட்டி ஆட்டி – தனுவை யாத்து நடிப்பித்து,—ஓட்டி மீட்டு உலாவப் பண்ணி - போக்குவரவு செய்வித்து,—மருவி நிற் பித் து இருத்திக் கிடத்தி மண்புரட்டி மற்றும் – பொருந்தி நிற் பித்தல் இருத்துதல் கிடப்பித்தல் மண்ணிற் புரட்டுதல் முதலியவாகிய,—பெரு விகாரங்களெல்லாம் தருவது என் பேசிடாயே - இப்பெரிய விகாரங்களெல்லாஞ் செய்வ தென்னை சொல்லுக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இனிப் பாதஞ்சலர் ஆகாயம்போல் அருவாய் அவிகாரியாய் நிற்பது உயிரென்பர். அது பொருந்தாமை காட்சியளவையான் உடம்பின்கணிகழு நிகழ்ச்சிபற்றி யறி யப்படுமென்பதாம். (13)

அசித்தெனி னுணரா தான்மா வசித்துச்சித் தாகு மென்னி
னசித்துச்சித் தாகா தாகுஞ் சித்தசித் தாவ தில்லை
யசித்தொரு புறமா யொன்றிற் சித்தொரு புறமாய் நில்லா
தசித்துருச் சித்தே யென்னி னசித்தடைந் தறிவ தின்றும்.

சுப் — பதவுரை

அசித்துச் சித்தாகாதாகும் சித்து அசித்தாவது இல்லை-சடப்பொருள் சித்தாகாதாம் சித்துப்பொருள் சடமாகாதாம் (ஆகலால்),—ஆன்மா உணராத அசித்தெனின் அசித்துச் சித்தாகு மென்னின் – (வைசேடிகர்) உயிர் அறிவில்லாத சடமென்றாலும் (அது பின்) மனத்தோடுங் கூடிச் சித்தாயறியுமென்றாலும் (அவர் மதமும்),—ஒன்றில் அசித்து ஒருபுறமாய்ச் சித்து ஒருபுறமாய் நில்லாது–(சைவரில் ஒரு சாரார் உயிர் சித்தசித்தென்பரெனின்) ஒன்றிலே) மாறுபட்ட இரண்டு தன்மை ஒருங்கு நில்லாமையால் (அவர்மதமும்),—அசித்துஉருச்சித்தே என்னின் – (பட்டாசாரியர் உயிர்) கருவியையுருத சித்தே யென்பரெனின்,—அசித்து அடைந்து அறிவது இன்றும் – அசித்தாகிய கருவியை யடைந் (தன்றி) அறிதல் (செல்லாமையால் அவர்மதமும்) அடா என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. சடப்பொருள் சித்தாதலுஞ் சித்துப்பொருள் சடமாதலும் உலகத்தின்மையால், உயிர் சடமென்றும் அது பின் மனத்தோடுங் கூடிச் சித்தாயறியுமென்றுங் கூறும் வைசேடிகர் முதலியோர் மதமும், மாறுபட்ட விரண்டு தன்மை ஒருங்கு நில்லாமையால், உயிர் சித்தசித் தென்னுஞ்

சைவரிலொருசாரார் மதமும், அசித்தாகிய கருவியையின்றி அறிதல் செல்லாமையால், உயிர் சித்தேயாமென்னும் பட்டாசாரியர் மதமும் அடாவென்பதாம்.

உருதவென்னும் பெயரெச்சத்தீறு விகாரத்தாற் றொக்கது.(14)

உயிரினை யணுவ தென்னி னுடல்பல துவார மோடும்
பயில்வுறக் கட்டு ணுது பாரமுந் தரித்துச் செல்லா
தயர்வுறு மசித்தாய்ப் பூத வணுக்களி னென்ற தாகு
மியல்புறு மவய வத்தா லணுவுரு விறக்கு மன்றே.

சுப் — பதவுரை

உடல் உயிரினை அணுவ தென்னின் – இனிப் பாஞ்ச ராத்திரிகள் உடம்பகத்துப் பரமாணுவளவிற்றாய் நிற்பது உயிரென்பரெனின்,—அணுவுருப் பலதுவாரம் ஓடும் – அணுவடிவாகிற் பலதுவாரத்தில் ஒரு துவாரத்தால் ஓடிப் போவதாம் (அன்றி),—பயில்வு உறக் கட்டுணுது - (அவ் வுடம்பிற்) பயிற்சி பொருந்தக் கட்டுண்டற்கும் உடம் படாது,—பாரமும் தரித்துச் செல்லாது – பாரந்தாங்கிச் செல்லுதற்கும் உடம்படாது,—அயர்வு உறும் அசித் தாய் – அழிவெய்துஞ் சடமாய்,—பூத வணுக்களின் ஒன் றதாகும் – பூத பரமாணுக்களோடு ஒன்றும்,—இயல்பு உறும் அவயவத்தால் இறக்கும் அன்றே – இயல்பு பொருந் திய அவயவப் பகுப்புண்மையான் அழிவெய்தும் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. இனி உடம்பகத்துப் பரமாணுவளவிற்றாய் நிற் பது உயிரென்னும் பாஞ்சராத்திரிகள் மதமுமடாது.

என்னை ? அணுவாயின் ஒருதுவாரத்தா லோடிப்போவ தன்றி, உடம்பிற் கட்டுண்டற்கும் பாரந்தாங்கற்கு முடம்படா தென்பது முதலிய குற்றந் தங்குமாகலானென்பதாம். (15)

உடலினி னேக தேசி யுயிரெனி னுருவாய் மாயும்
படர்வுறு மறிவின் றெங்குஞ் சுடரொளிப் பண்ப தென்னிற்
சுடர்தொடிற் சுடுவ தெங்குந் தொட்டிட மறிவுண் டாகு
மடர்புல னிடத்து மொக்க வறிவெழ வேண்டு மன்றே

சுப் — பதவுரை

உயிர் உடலினின் ஏகதேசி (சுடர் ஒளிப்பண்பது) எனின் – இனி மிருதிநூலார் உயிராவது உடம்பகத்து(ப் புன் னுனித்துளிபோல்) ஏகதேசமாய் இதயத்தானத்தினிற்ப (அவ்வுயிரினறிவு) விளக்கொளிபோல (யாங்கணும் வியா பிக்கு) மென்பரெனின்,—உருவாய் மாயும் – (உயிர் ஏக தேசமாயின் மேல்) உரு உயிரென்றூர்க் கோதியகுற்றம் அனைத்தும் எய்தும்,—எங்கும் படர்வுறும் அறிவு இன்று- (குணங்குணி யளவினன்றி) எவ்விடத்தும் வியாபித்தறிதல் செல்லாது,—சுடர் ஒளிப் பண்பது என்னின் – விளக்கின் ஒளியாவது (விளக்கினது சூக்குமவடிவேயன்றிக் குண மன்றுகலான் அஃதீண்டைக்கு உவமையாகாது) ஆமெ னவே கொள்ளினும்,—சுடர் தொடின் சுடுவது – விளக் கின் சுடர் தொடினன்றிச் சுடாதாகையால் (இருந்தவிடத் தில் அறிந்து மற்றுள்ளவிடத்துப் பரிசத்தானும் அறிய மாட்டாது),—தொட்ட இடம் எங்கும் அறிவு உண்டா கும் – (உயிர்) பரிசித்தவிடமெங்கும் அறிதல் உளதாம்,— அறிவு அடர் புலன் இடத்தும் ஒக்க எழவேண்டும் அன் றே – (விளக்கு ஓரிடத்திருந்து மற்றுள்ள விடங்களையும்

விளக்குதல்போல்) உயிரின் அறிவு நெருங்கிய ஐம்புலனிடத்தும் ஒருங்கே நிகழவேண்டும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இனி மிருதிநூலார் உயிராவது உடம்பகத்துப் புன்னுனித்துளிபோல் ஏகதேசமாய் இதயத்தானத்தினிற்ப அவ்வுயிரினறிவு விளக்கொளிபோல யாங்கணும் வியாபிக்கு மென்பதும் அடாது. என்னை? உயிர் ஏகதேசமாயின் மேல் உருவுயிரென்றார்க்கு ஓதிய குற்ற மனைத்தும் எய்துமாகலானும், குணங் குணியளவினன்றி மேற்செல்லாமையானும், விளக்கினொளியாவது விளக்கினது சூக்குமவடிவேயன்றிக் குணமன்றுகலான் அஃது ஈண்டைக்குவமையாகாமையானும், ஆமெனவே கொள்ளினும் அதனோடினிடை வேற்றுமை பெரிதாகலானு மென்பதாம்.

உயிரினை அணுவென்பார்க்கும் இஃதொக்கும். (16)

உருவினி னிறைந்து நின்றங் குணர்ந்திடு முயிர தென்னின்
மருவிடா துறக்கம் வாயி லறிவொக்க வழங்க வேண்டும்
பெருகிடுஞ் சுருங்கும் போதம் பேருடற் சிற்று டற்கண்
வருமுடற் குறைக்க வொக்கக் குறைந்துபின் மாயு மன்றே.

சுப — பதவுரை

உருவினில் நிறைந்து நின்று அங்கு உணர்ந்திடும் உயிரது என்னின் – இனிச் சமணர் உடம்பளவினிறைந்து நின்று அங்கேயுணர்வது உயிரென்பரெனின், – உறக்கம் மருவிடாது வாயில் ஒக்க அறிவு வழங்க வேண்டும் –

உறக்கமுருது ஐம்பொறியினும் ஒருங்கே அறிவு நிகழ்தல் வேண்டும்,—பேருடற் சிற்றுடற்கண் பெருகிடும் சுருங்கும் போதம் – பேருடல் சிற்றுடல்களாகிய அவ்வவ் வுடம்பளவிற்குத் தக்க வறிவாதல் வேண்டும்,—வரும் உடற்குறைக்க ஒக்கக்குறைந்து பின் மாயும் அன்றே – வருகின்ற உடம்பின் உறுப்பினைக் குறைப்பக் கூடக் குறைந்து பின்மாய்தல் வேண்டும் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. இனிச் சமணர் உடம்பளவினிறைந்து நின்று உணர்வது உயிரென்பர். அவர், உறக்கமுறுதலும், ஐம் பொறியினும் ஒருங்கேயறிவு நிகழாமையும், அவ்வுடம்பள விற்குத் தக்கவறிவாதலின்மையும், குறைப்பக் குறையாமையு மாகிய இன்னோரன்னவற்றை நோக்கிலராகலால், அவர் மத மும் அடாதென்பதாம். (17)

எங்குந்தான் வியாபி யாய்நின் றுணருமிவ் வான்மா வென்னிற், றங்கிடு மவத்தை போக்கு வரவுகள் சாற்றல் வேண்டும், பங்கமார் புலனென் றொன்றுப் பார்த்திடல் பகரல் வேண்டு, மிங்கெலா மொழிந்தா னிற்ப தெங்ஙன மியம்பல் வேண்டும்.

சுப் —பதவுரை

எங்குந்தான் வியாபியாய் நின்று உணரும் இவ்வான் மாவென்னின் – இனி அயிக்கிய வாதிகள் (முதல்வன் போல்) எங்கணும் வியாபியாய் நின்றறிவன் இவ்வான்மா வென்பரெனின்,—அவத்தை தங்கிடும் போக்குவரவுகள் சாற்றல்வேண்டும் – (அங்ஙனங் கூறுவார்க்கு) அவத்தை

களிற்றங்குதலும் போக்குவரவுகளுறுதலும் (எங்ஙனங் கூடுமென) இயம்பவேண்டும்,—பங்கம் ஆர்புலன் ஒன்று ஒன்றுப் பார்த்திடல் பகரவேண்டும் – குற்றம் பொருந்திய ஐம்புலனும் ஒருங்கே அறியாமையும் (எங்ஙனங் கூடுமெனக்) கூறவேண்டும்,—இங்கு எலாம் ஒழிந்தான் நிற்பது எங்ஙனம் இயம்பல் வேண்டும் – இங்ஙனம் எல்லா (மாய்) வியாபித்த லொழிந்தானகி (உடம்பினுள் ஏகதேசமாய்) நிற்றலும் எவ்வாறு (கூடுமெனச்) சொல்லவேண்டும் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. இனி ஐக்கியவாதிகள் முதல்வன்போல் எங்கணும் வியாபியாய் நின்று அறிவனன்மாவென்பர். அங்ஙனங் கூறுவார்க்கு, அவத்தை போக்குவரவுகளுறுதலும் ஐம்புலனு மொருங்கேயறியாமையும் எல்லாமாய் வியாபித்தலொழிந்தானகி உடம்பினு ளேகதேசமாய் நிற்றலும், எவ்வாறு கூடுமென்பதாம்,

ஒழிந்தானென்றது முற்றெச்சம்.

எல்லாமென்றது வியாபகமுணர நின்றது; ஆக்கச்சொல் வருவித்துரைக்க.

ஒழிந்தாலெனப் பாடமோதி, சங்காரகாலத்தின் எல்லாப் பொருளு மழிந்தவழி நிற்பதெங்ஙன? மென்றுரைத்து, மூர்த்தப் பொருளனேத்தினுஞ் சையோகமாதலே வியாபகமென்னும், அவையனேத்தினேயு மறிதலே முற்றுணர்வெனவுங் கொண்டு, அங்ஙனங் கூறுவார்மதத்தைஅவர்மதமேபற்றிமறுத்தாரெனினுமமையும். 18

சுத்தமா மான்ம சித்தைத் துகளுடன் மறைத்த தென்னின்
வைத்துரு துடற்கண் வாயில் கரணங்கள் வழியான் ஞான
மொத்துறு மலமற் ரூலு முறுமலம் வீடு மின்ரும்
பெத்தமு மடையான் முத்த னெய்ப்பிர காச னுமே.

சுப — பதவுரை

சுத்தமாம் ஆன்மசித்தைத் துகள் உடல் மறைத்தது என்னின் – (எங்கணும் வியாபகமாய் நின்றறிவதாய்ச்) சுத்தமாகிய ஆன்மாவி னறிவைக் குற்றம்பொருந்திய மாயாகாரியந் தடைசெய்து நிற்றலின் (உறக்க முதலியன வுற்று ஏகதேசப்படுவதாயிற்றென) விடுப்பின் (அது பரி காரமன்று).—உடற்கண் வாயில் கரணங்கள் வழியால் ஞானம் வைத்துருது – உடலினகத்துப் புறக்கரண அகக்கரணங்களின் வழியால் அறிவு (விளங்குவதாகவும் அஃது) இன்ருய்ப்போதலானும்,—ஒத்துறும் மலம் அற் ரூலும் மலம் உறும் வீடும் இன்ரும் – பொருந்திய வீடு பெற்றவழியும் மலம் உறுமெனப்பட்டு முத்தியென்பது இன்ருய் முடியுமாகலானும்,—பெத்தமும் அடையான் முத்தனெய்ப் பிரகாசனுமே – (வீடுபெற்றபின் உரு தெனின் அநாதி நிலையோடு இதனிடை வேற்றுமை யின் மையான் அநாதியே) பந்தமுறுதலின்றி முத்தனெய் விளங்குதல் வேண்டுமாகலானும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து உயிர் எங்கும் வியாபகமாய்நின்று அறிவதாயி னும் மாயாகாரியம் அவ்வறிவைத் தடைசெய்து நிற்றலின் உறக்கமுதலியனவுற்று ஏகதேசப்படுவதாயிற்றென விடுப் பின்,—அது பரிகாரமன்று; அறிவுவிளங்குதற்கு ஏதுவாய

மாயாகாரியம் அதற்கு மறுதலையாய்த் தடைசெய்தல் கூடாமையானும், முன் சுத்தமாயிருந்தவுயிரை அது பந்தித்ததனின், வீடுபெற்றவழியும் உறுமெனப்பட்டு முத்தியென்பது இன்றுப் முடியுமாகலானும், வீடுபெற்றபின்னுருதனின், அநாதிசிவயோடு இதனிடை வேற்றுமையின்மையான் அநாதியே பந்தமுறுதலின்றி முத்தனாய் விளங்குதல் வேண்டுமாகலானுமென்பதாம்.

'அறிவிச்சை செயல்க' ளென்னுஞ் செய்யுண்முதல் இத்துணையும் உயிருண்மை கொண்டு ஆணவமலத்துண்மை கொள்ளாத சமயிகள் தத்த மதத்தக்கேற்பக் கூறு முயிரிலக்கணங்களும் அவை பொருந்தாமையுங் காட்டப்பட்டன. இன்னு மவ்வமதத்தார் வேறுபடக்கூறுமுயிரிலக்கணங்களெல்லாம் இங்ஙனங் கூறியவற்றுள் வைத்துக் கண்டுகொள்க.

அற்றேல், மற்றென்னையோ? வுயிருக்கு இலக்கணமாவதென்னு மவ்வைக்கியவாதசைவரை நோக்கிச் சித்தாந்தங் கூறுமுகத்தால் யானென தென்பதினுணர்தருமாற்றைச் சாதித்தற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (19)

அசித்தரு வியாப கம்போல் வியாபக மருவ மின்றுய்
வசித்திட வரும்வி யாபி பெனும்வழக் குடைய னெகி
நசித்திடா ஞானச் செய்தி யநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவ முடைய னெகிப் பசுவென நிற்கு மான்மா.

சுப் — பதவுரை

அசித்து அரு வியாபகம்போல் – (ஒருவாற்றானும்) அசித்தாத லரிய வியாபகப் பொருள்போல,—வியாபகம் - (ஏனபச்சிலேடிக) வியாபகமாதலும்,—அருவம் இன்றுய்—

(அதுபற்றி) அதிசூக்குமசித்தாதலும் இன்றி,—வசித்திட வரும் வியாபியெனும் வழக்கு உடையனகி–அதுவதுவாய் வசிப்புண்ணும் வியாபகமாம் வழக்குடைத்தாய்,—அநாதியே பசுத்துவம் மறைத்து நிற்கும் ஈசித்திடா ஞானச் செய்தி உடையனகிப் பசுவெனநிற்கும் – அநாதியே பசுத்துவமெனப்படும் ஆணவமலத்தின் மறைப்புண்டு கிடக்கின்ற அழியாத இச்சாஞானக்கிரியைகளே யுடைத்தாய்ப் பசுவெனப்படுந் தூலசித்தாகியு நிற்கும்,—ஆன்மா – உயிர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. ஒருவாற்றனும் அசித்தாதலரிய வியாபகப் பொருள்போல ஒளபச்சிலேடிக வியாபகமாதலும், அது பற்றி அதிசூக்குமசித்தாதலுமின்றி அதுவதுவாய் வசிப் புண்ணும் வியாபகமாதலும், அநாதியே பசுத்துவமெனப் படும் ஆணவமலத்தின் மறைப்புண்டு கிடக்கும் இச்சா ஞானக்கிரியைகளேயுடைத்தாய்ப் பசுவெனப்படுந் தூலசித்தா தலுமுடையது உயிரென்பதாம்.

"உறற்பால—தீண்டா விடுத லரிது" (காலடியார், பழவினை செ–9.) என்றாற்போல, அருமை ஈண்டின்மை குறித்து நின்றது.

அருவமென்றது, "இல்லா—வருவாகி நின்றனே" (சிவஞான போதம், எட்டாஞ்சூத்திரம், செ – 5.)என்றாற்போல, அதிசூக்கும மாதலேயுணர்த்தி ஆகுபெயராய் நின்றது; இதற்குப் பிறரெல்லாம் இயைபறவுரைத்தார்.

இதனானே உயிருக்கு அநாதிநிலையாகிய தன்னுண்மை கூறப் பட்டது

மாயையின் வயிற்றுண் மன்னி வருஞ்செயன் ஞான மிச்சை
யேயுமக் கலாதி மூன்று லேகமே சத்தி னேய்ந்திங்
காயுமுக் குணங்க ளந்தக் கரணங்க ளாதி யெல்லாங்
காயபத் தங்க ளாகிக் கலந்துட னிற்கு மான்மா.

சுப் — பதவுரை

ஆன்மா – (அங்ஙனம் பசுத்துவ மாத்திரையாற் கேவலப்பட்டு நின்ற) ஆன்மா,—மாயையின் வயிற்றுள் மன்னி –(அதன்பின்) அசுத்தமாயையில் (அனந்த தேவராற் கலக்குண்ட பாகமாகிய) காரண சரீரத்தைப் பொருந்தி,—ஞானம் இச்சை செயல்வரும்–அவ்வறிவிச்சை செயல்கள் (பொதுவகையாற் சமட்டிரூபமாய்) விளங்கப்பெறும்,—அக்கலாதி மூன்றுல் – (அதன்பின்) அம்மாயாதத்துவத்தினின்றுந் தோன்றுங் கலாதிகளாகிய கஞ்சுகசரீரத்தைப் பொருந்தி,—ஏகதேசத்தின் ஏய்ந்து இங்கு ஏயும் – (அவை) வியட்டி ரூபமாய்ப் பிரிந்து தோன்றி(ச் சிறப்புவகையான்) விளங்கப்பெறும்,—அந்தக்கரணங்கள் ஆதியெல்லாம் பெத்தங்கள் முக்குணங்களாயும் – (அதன்பின்) அந்தக்கரண முதலியவற்றைத் தம்முள் அடக்கிநிற்கு முக்குணங்களாகிய குணசரீரத்தைப் பொருந்தி,—காயமாகிக் கலந்து உடன்நிற்கும் – (அவ்வறிவிச்சை செயல்கள் முன்னர்க் கூறப்படும்)இருசரீரங்களிடமாக வரும் விடயங்களின் வியாபரிக்கப்பெறும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அங்ஙனம் பசுத்துவமாத்திரையாற் கேவலப்பட்டு நின்ற வான்மா, அதன்பின் அசுத்தமாயையில் அனந்ததேவராற் கலக்குண்ட பாகமாகிய காரணசரீரத்தைப்*

பொருந்தி, அவ்வறிவிச்சைசெயல்கள் பொதுவகையாற் சமட்டிரூபமாய் விளங்கப் பெறும் அதன்பின் அம்மாயா தத்துவத்தினின்றுந் தோன்றுங் கலாதிகளாகிய கஞ்சுகசரீரத்தைப் பொருந்தி அவை வியட்டிரூபமாய் பிரிந்துதோன்றிச் சிறப்புவகையான் விளங்கப்பெறும். அதன்பின் அந்தக்கரணமுதலியவற்றைத் தம்முளடக்கி நிற்கும் முக்குணங்களாகிய குணசரீரத்தைப் பொருந்தி அவ்வறிவிச்சைசெயல்கண் முன்னர்க் கூறப்படும் இருசரீரங்களிடமாக வரும் விடயங்களின் வியாபரிக்கப்பெறுமென்பதாம்

இங்ஙனம் பரசரீரம் மூவகைப்படுமெனக் கொள்க.

மாயையிற் கலக்குண்டபாகத்தை வயிரூக உருவகஞ்செய்தார்; மேலே மாயாடன் வயிற்றென்றதுமது; அதுவே அசுத்தமாயா தத்துவமெனத் தத்துவங்களிடை வைத்தெண்ணப் படுவதூஉமென்க.

மன்னிவருமென்னும் வினையெச்சமுடிபு காரணகாரியப் பொருட்டாய் நின்றது; ஏகதேசத்தினேய்ந்தென முன் வருதலின் ஈண்டு வருமென்பதற்கு அது பொருளாதலறிக.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர்" (திருக்குறள், அன்புடைமை, செ – 2.) என்றாற்போல, எல்லாவற்றினுமென்னுஞ் சாரியையும் உருபும் விகாரத்தாற்றொக்கன.

காயம் ஆகுபெயர்.

ஆகிக்கலந்து நிற்குமென ஒற்றுமைபற்றிக் குணவினை குணிமேலேற்றப்பட்டது. (21)

சூக்கும தேகி யாகித் தூலரூ பத்தின் மன்னிச்
சாக்கிர முதலா யுள்ள வவத்தையுட் டங்கி யெங்கும்
போக்கொடு வரவு மெல்லாம் புரிந்துபுண் ணியங்கள் பாவ
மாக்கியும் பலன்க ளெல்லா மருந்தியு நிற்கு மான்மா.

சுப் — பதவுரை

ஆன்மா – (அங்ஙனம் பரசரீர மூன்றையு முறையா னெய்திய) ஆன்மா,—சூக்கும தேகியாகி – பின் சூக்கும தேகத்தைப் பொருந்தி,—எங்கும் போக்கொடு வ ர வு மெல்லாம் புரிந்து–யாண்டும் போக்குவரவுகள் செய்து,—புண்ணியம் பாவங்கள் பலன்களெல்லாம் ஆக்கியும் அருந்தியும் – (சூக்குமமாகிய) இருவினைப் பயன்களை ஈட்டியும் நுகர்ந்தும்,—தூலரூபத்தின் மன்னி–பின் தூலசரீரத்தைப் பொருந்தி,—(எங்கும் போ க் கெ ா டு வரவுமெல்லாம் புரிந்து) – எங்கணும் போக்கு வரவுகள் செய்து,—(புண்ணியம் பாவங்கள் பலன்களெல்லாம் ஆக்கியும் அருந்தியும்) – (தூலரூபமாகிய) இருவினைப் பயன்களை ஈட்டியும் நுகர்ந்தும்,—சாக்கிரமுதலாயுள்ள அவத்தையுள் தங்கி நிற்கும் – (இவ்வாறு அதித) முதற்சாக்கிர(மீ)ருயுள்ள ஐந்தவத்தைப்பட்டு நிற்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அம்மூன்றையும் மு றை யா னெய்தியபின் சூக்குமதேகத்தைப் பொருந்திப் போக்குவரவு செ ய் து சூக்குமவினைப்பயன்களை ஈட்டியுநுகர்ந்தும், தூலசரீரத்தைப் பொருந்திப் போக்குவரவு செய்து தூலவினைப்பயன்களை ஈட்டியுநுகர்ந்தும். இவ்வாறு அதிதமுத லைஞ்சவத்தைப் பட்டு நிற்குமென்பதாம்.

சாக்கிரமுதலென்றதனோடுங்குமுறைபற்றிக்கூறியதெனவறிக. 22

மருவா னந்தம் விஞ்ஞான மலேபி ராண னன்னமய, முருவாந் தன்மை யுண்டாய்மு னொன்றுக் கொன்று சூக்கும மாய், வருமா மன்ன மயம்பற்றி மாயை முதற்கா ரணமாகு,

மருவா யான்மா வைங்கோசத் தார்ப்புண் டவற்றி னகம்புற மாம்.

சுப — பதவுரை

முதற்காரணமாகும் மாயை உருவாந்தன்மை உண் டாய் – (காரணசரீர முதலிய அவ்வைந்தும் அவ்வாறு) முதற்காரணமாகிய மாயையினின்றுந் தோன்றி (ஆன்மா வுக்கு) வடிவாய்,—மருவு ஆனந்தம் விஞ்ஞானம் மனே பிராணன் அன்னமயம் – (முறையே) பொருந்திய ஆனந்த மயகோசமும் விஞ்ஞானமயகோசமும் மனோமயகோச மும் பிராணமயகோசமும் அன்னமயகோசமுமாகிய ஐவ கைப் பெயர்பெற்று,—அன்னமயம் முன்பற்றி ஒன்றுக்கு ஒன்று சூக்குமமாய் வருமாம் – அன்னமய மு த லா க் கொண்டு ஒன்றற்கொன்று சூக்குமமாய் நிற்க,—அரு வாய் ஆன்மா – (கேவலத்தில்) ஒன்றுமின்றி மலமாத்திரை யாய்நின்ற ஆன்மா,—ஐங்கோசத்து ஆர்ப்புண்டு அவற் றின் அகம் புறமாம் – இவ்வைங் கோசங்களில் (அது வதுவாய்) வசிப்புண்டு (ஏகதேசியாய்) அ வை க ளி ற் போக்குவரவு செய்துநிற்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *காரணசரீரமுதலியவவ்வைந்தும், அவ்வாறு மாயையினின்றுந் தோன்றி ஆன்மாவுக்குவடிவாய்முறையே ஆனந்தமயகோச முதலிய ஐவகைப்பெயர் பெற்று ஒன் றற்கொன்று தூலமாய் நிற்க, கேவலத்தி லொன்றுமின்றி மலமாத்திரையாய் நின்றவான்மா இவ்வைங்கோசங்களில் அதுவதுவாய் வசிப்புண்டு ஏகதேசியாய்ப் போக்குவரவு செய்து நிற்குமென்பதாம்.*

கேவலத்திலொன்றுமின்றி நின்றவான்மா, மாயையிலங்ஙனங் கலக்குண்ட பாகத்தை முதற்கட் பொருந்தி அறிவிச்சை செயல்கள் பொதுமையா னவ்வளவு விளங்கப்பெற்ற மாத்திரையே அம்மயக்கறிவா லோரானந்தமுண்டாகப்பெறுதலின், அஃதானந்த மயகோசமெனப்பட்டது.

ஏனையவுங் காரணக்குறியாமாறு உய்த்துணர்ந்துகொள்க.

இவ்வைங்கோசங்கட்கு வேறு வேறு பொருள் கூறுவார் மதங் களையெல்லா மறுத்தற்பொருட்டு, இவ்வாறெடுத்தோதி மாயை முதற்காரணமாகுமென்றுங் கூறினர்.

ஆன்மா வித்தரைகீழ்மேலுங் கொள்ளிவட்டங் கறங்கென நிமிடத்தின்க ணலமரும்படி கொண்டுதிரிதல்பற்றி, இவ்வைங் கோசங்களை ஐந்து பறவையாகவும் அவற்றுளொரோவொன்றை ஐவகைப்படுத்து முகமுதலியவுறுப்புக்களாகவும் வேதத்தளருவகஞ் செய்துணர்த்தியவாறென்க.

ஆன்மாவினுண்மை யுணர்தற்கு இவற்றை யிங்ஙனம் பகுத் தறிதலு மொருசாதனமெனக்கொள்க.

இவை மூன்று செய்யுளானும், பசுத்துவம்பரியான் மறைப் புண்டு நின்ற வவ்வறிவிச்சை செயல்கள் பின் ஒருபுடை விளங்கி அவத்தை போக்கு வரவு முதலிய வுறுதற்குரிய உபாதி கூறுமுகத் தால், வசித்திட வருமாறு தெரித்துணர்த்தப்பட்டது.

இன்னும் ஆன்மாச் சார்ந்ததின் வண்ணமாய் வசித்திட வரு மாற்றிற்குச் சருவஜ்ஞாதேத்தாதில் அவ்வச்சார்பு விசேடம் பற்றிப் பூதான்மா முத லறுவகைப்படுத்துத் தொகுத்தும் விரித்து மோதியதூஉம் ஈண்டுய்த்துரைத்துணர்ந்துகொள்க. (23)

தோற்பாவைக் கூத்துந் தொல்லை மரப்பாவை யியக்க முஞ்சீர்த், தேர்ப்பாரிற் செலவும் வேறுய்ச் செலுத்துவோர் செய்தி தானும், பார்ப்பாய வேடங் கட்டி யாடுவோர் பரிசு போலு, மார்ப்பாய காயந் தன்னை யான்மாகின் றூட்டு மாறே.

சுப் — பதவுரை

ஆர்ப்பாய காயந்தன்னை ஆன்மா நின்று ஆட்டு மாறே – பந்திக்கப்பட்ட அன்னமயகோசம் பிராணமய கோசம் மனோமயகோசம் விஞ்ஞானமயகோசம் ஆனந்த மயகோசமாகிய ஐந்தினும் ஆன்மா – (வேற்றுமையின்றி) நின்று செலுத்துமாறு,—சீர்த் தேர்ப்பாரின் செலவும் – (முறையே) சிறப்புடைய தேரைப் பாரிற் செலுத்துவோர் (தன்மை) போலும்,—தொல்லை மரப்பாவை இயக்கமும் – பழைய மரப்பாவையினை இயக்குவோர் (தன்மை) போலும்,—தோற்பாவைக் கூத்தும்–தோற்பாவையினை ஆட்டுவோர் (தன்மை) போலும்,—வேறுய்ச் செலுத்துவோர் செய்திதானும் – பரகாயப் பிரவேசஞ் செய்வோர் தன்மை போலும்,—பார்ப்பாய வேடம் கட்டி ஆடுவோர் பரிசு போலும் – வேதியர் வேட (முதலிய பல) வேடங்கட்டி ஆடுவோர் தன்மை போலுமாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. அன்னமயகோசமுதலியவைந்தினும் ஆன்மா வேற்றுமையின்றி நின்று செலுத்துமாறு, முறையே, தேர்ப் பாரிற்செலவும் மரப்பாவையியக்கமுந் தோற்பாவைக்கூத் தும் வேறுய்ச்செலுத்துவோர் செய்தியும் வேடங்கட்டியாடு வோர் பரிசும் போலுமென்பதாம்.

வேரூய்ச் செலுத்துவோர் செய்தியென்றது பரகாயப்பிரவேசத்தை.

இவையைந்தும் முறையே ஒன்றற்கொன் றந்தரங்கமாய் அவ்வைங்கோசங்களினு மான்மா நின்று செய்யுமாற்றிற்கு உவமையாமாறு தெரிந்துணர்ந்துகொள்க.

செய்யுளாகலின் முறை பிறழவைத்தார்.

காயம் சாதியொருமை.

இதனுனே ஆன்மா அங்ஙனம் வசித்திடவரினும் அவ்வேகதேசப் பொருள்கட்கு வேரூய் வியாபியெனும் வழக்குடையனுதல் அவற்றைச் செலுத்துமாற்றின் வைத்துணர்த்தப்பட்டது. (24)

என்னுடல் பொறிபிராணன் கரணமென் னுணர்வென்றக்காற்
றன்னின்வே ருகு நீயென் றன்மனை யென்ற வெல்லா
நின்னின்வே ருகு மென்னி னீங்கிடா வினையிங் கென்னி
னுன்னின வாகு நீயா முகிர்மயி ருகவுங் காண்டி.

சுப் — பதவுரை

என்றன்மனை என்றவெல்லாம் நின்னின் வேருகும் - என்மனை (என்பது) யென்று (அபேதமாய் வழங்கி வந்தன) வெல்லாம் உனக்கு வேருதல் (கண்டாற்)போல,— என் உடல் பொறி பிராணன் கரணம் என் உணர்வு என்றக்கால் நீ தன்னின் வேருகும் – (உனதன்றுகிய) உடல் பொறி பிராணன் கரணங்களைத் தனித்தனி எனதென்றும் (அங்ஙன முணர்ந்த பாசவுணர்வை) என்னுணர்வென்றும் அபேதமாகக் கூறிக்கொண்டு நீ அவைகளின் வேரூய் நிற்றிகாண்,—இவை இங்கு என்னின் நீங்கிடா வென்னின் – (மனை முதலிய புறப்பொருள்கள் என்னின் வேரு

தல்கூடும்) உடல் பொறி முதலியவை என்னைவிட்டு நீங்க மாட்டாவெனின்,—உன்னினவாகும் நீயாம் உகிர் மயிர் உகவும் காண்டி – உன்னுடையனவாகி அபேதமாய் என தென்று வழங்கப்பட்டு ங்க மயிர் முதலிய சில நீங்குதலுங் காணப்படுதலால் (இதனனும் ஆன்மா அவற்றிற்கு வேறென்பது அறியப்படும்) என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *தன்மனைமுதலியவற்றைடொப்ப எனதென்று வழங்கப்பட்டுச் சில நீங்குதலுங் காணப்படுதலால், இதனனும் ஆன்மாவவற்றிற்கு வேறென்பது அறியப்படுமென்பதாம்.*

உன்னினவென்பது இன் சாரியை பெற்ற வகாவீற்றுப் பலவறிசொல்.

அற்றேல், உடல் பொறி முதலியவற்றை எனதென்பது, தன்மனை முதலியவற்றை எனதென்றதுபோலன்றி இராகுவினது தலையென்றுற்போல அபேதம்பற்றிக்கூறுங் கருத்தேயாகலின், உரைப்போர் குறிப்பொடு படுத்துக் காணுங்கால் அவ்விருவகை வழக்கிற்குந் தம்முள் வேறுபாடுண்மையின், அவை தம்முளொக்கு மாறு யாங்ஙன? மென்பாரை நோக்கி வேறுவமையெடுத்துக்காட்டியுணர்த்துதற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (25)

பொன்னணி யாடை மாலை போதுமே லான போதிங்
கென்னணி யானென் றுண்ணி யிருந்தனை பிரிந் தபோது
நின்னணி நீயு மல்ல வாயினை காய நின்னி
னன்னிய மாகு முன்னை யறிந்துநீ பிரிந்து பாரே.

சுப் — பதவுரை

பொன் அணி ஆடை போது மரீஇ மேலான் போது-பொன்னுலியன்ற ஆபரணம் ஆடை அலராலாய அலங்கன் முதலிய (புறப்பொருள்கள்) அணிந்தபோது,,—இங்கு என் அணி யாரென்று உன்னி இருந்தனை – இவ்விடத்து என்னணி யாரென்று(அபேதம் பற்றியகருத்தான்) நினைந் திருந்த நீ,—நின் அணி பிரிந்தபோது நீயும் அல்லவாயினை-நின்னுல் அணியப்பட்ட (அப்புறப் பொருள்களாகிய அணிகல முதலாயின) நீங்கியபோது (உனக்கு அன்னிய மாய்) நீ அல்லவாயினுற்போல,—காயம் நின்னின் அன்னியமாகும் – உடல் பொறி முதலியவனைத்தும் நின்னிலிருந்து அயலாகுமாகலால்,—உன்னை அறிந்து நீ பிரிந்து பாரே – உன்னுண்மையை அறிந்து நீ (இவற்றை) நீங்கி நின்று அறிவாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. உடல்பொறி முதலியவற்றை என்னதென்றல், இராகுவினது தலையென்றுற்போலச் சிறுபான்மை வழக்க மாதலின்றிப் பெரும்பாலும் யாண்டும் யாரும் வழங்கக்கான்டலின், அவற்றை யபேதம்பற்றிய கருத்தாலெனதென்றன் மெய்ப்படுத்த அணிகல முதலியவற்றை யவ்வாறென தென்றல்போல அறிந்து பிரிந்து பாராத மடன்மையே பிறிதன் றென்பதாம். (26)

உடலியா னல்லே னிந்த வுணர்வுபா னல்ல வான
கடனீயா தென்னின் வேறு கண்டுணர் வென்ன தென்கை
யிடரிலா வென்ற ஞான மென்றபோ தான்மா வேறே
திடனதா வுயிரை வேறு கண்டிடார் செப்ப லேகாண்.

சுப் — பதவுரை

இடர் இலா என்றன் ஆன்மா என்றபோது ஆன்மா வேரூே – (ஆன்மாவைக்) குற்றமில்லாத என்னுடைய ஆன்மா வென்ற பொழுது(யான்வேறு)ஆன்மா வேறன் ருகவும் (எனதென்றல்),—திடனதா உயிரை வேறு கண்டிடார் செப்பலே காண் – உறுதியாக உயிரைவேரு ருக்காணுங் கருத்தின்றி (இராகுவினது தலையென்ருற் போல) ஒருசாரார் கூறுஞ் (சிறுபான்மை) வழக்காகலின் (அஃது அபேதம் பற்றியவழக்கென அமையும்),—இந்த உணர்வு யான் அல்லவான கடன் யாதென்னின் – இந்த விஞ்ஞானமயகோச (ஆனந்தமயகோச)ங்கள் யானல்லே ஞகிய முறைமை யாதெனின்,—உணர்வு என்னது என்கை வேறு கண்டு–இவ்விருவகைக்கோசங்களா என தென்றல் (ஏனைக்கோசங்கள் போல) வேரூகக் காணுங் கருத்தால் (எல்லாரானும் வழங்கப்படும் பெரும்பான்மை வழக்காகலின் அஃது அதுபோல் அபேதம்பற்றிய வழக் கென அமையாமையின் அவையும்),—உடல் யான் அல் லேன் – ஏனைய வுடல் முதலியனபோல உயிரின் வேறே யாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *ஆன்மாவையெனதென்றல் வேரூகக் காணுங் கருத்தின்றி இராகுவினது தலையென்ருற்போல ஒருசாரார் கூறுஞ் சிறுபான்மை வழக்காகலின் அஃதபேதம்பற்றிய வழக்கெனவமையும்; விஞ்ஞானமயகோச மானந்தமய கோசங்களா யெனதென்றல் ஏனைக்கோசங்கள்போல வேரூ கக்காணுங் கருத்தால் எல்லாரானும் வழங்கப்படும் பெரும் பான்மைவழக்காதலின் அஃததுபோல் அபேதம்பற்றிய*

வழக்கெனவமையாமையின் அவையுமேனையபோல உயிரின் வேறேயாமென்பதாம்.

விஞ்ஞானமயகோசம் உயிரின் வேறுதல் கூறவே இனம்பற்றி ஆனந்தமயகோச முயிரின் வேறுதலு மதனுற் கொள்ளப்படும்.

உணர்வென்னதென்கை வேறுகண்டாகலான் இந்தவுணர்வு யானல்லவான கடனெனக்கூட்டுக.

கண்டிடாரென்பது முற்றெச்சம். (27)

புந்தியை மனமதென்று மனமது புந்தி யென்றுஞ்
சிந்தையைச் சீவ னென்றுஞ் சீவனைச் சிந்தையென்று
முந்தனை யான்மா வென்று மான்மாவை முந்த னென்றும்
வந்திடு மென்ற ஞன்மா வென்றது மற்றொன் றைக்காண்.

சுப் — பதவுரை

புந்தியை மனமதென்றும் மனமது புந்தி யென்றும் - புத்தியை மனமென்றும் மனத்தைப் புத்தியென்றும்,— சிந்தையைச் சீவனென்றும் சீவனைச் சிந்தையென்றும் — சித்தத்தை ஆன்மா வென்றும் ஆன்மாவைச் சித்தமென்றும்,—முந்தனை ஆன்மாவென்றும் ஆன்மாவை முந்தனென்றும் வந்திடும் — காரணங்கட்கெல்லாம் பரமகாரணனுகிய சிவபிரானை ஆன்மாவென்றும் ஆன்மாவைச் சிவபிரானென்றும் (இங்ஙனம் ஒவ்வோரவதரங்களின் உபசாரமாகக்) கூறப்படும்,—என்றன் ஆன்மா வென்றது மற்றொன்றைக்காண் — (அல்லதூஉம் உள்ளவாறு நோக்குவார்க்கு) என்றனுன்மா வென்னும் வழக்கில் ஆன்மாவென்றது தன்னேடியையுடைய பிறிதொன்றின் மேல் ஆகுபெயராய் நிற்கும் (ஆகலான் அவ்வழக்குப் பற்றி நின்கருத்து நிரம்புமாறில்லை) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அல்லதூஉம், உள்ளவாறு நோக்குவார்க்கு என்றனன்மாவென்னும் வழக்கில் ஆன்மாவென்றது தன் னுடையபுடைய பிறிதொன்றின்மேல் ஆகுபெயராய் நிற்குமாகலான், அவ்வழக்குப்பற்றி நின்கருத்து நிரம்பு மாறில்லையென்பதாம்.

ஆகலானவ்வழக்குப்பற்றி நின்கருத்து நிரம்புமாறில்லை யென்பது குறிப்பெச்சம்.

அவ்வாறுபெயராய் ஆண்டாண்டு வருதலையெடுத்தக்காட்டு வார், புத்தியை மனமதென்று மனமது புத்தியென்றுஞ் சித்தையைச் சீவனென்றுஞ் சீவனைச் சித்தையென்று முந்தனையான்மாவென்று மான்மாவை முந்தனென்றும் வந்திடுமென்றார்.

ஏனை மூவகைக்கோசமாத்திரையே வேறெனக்கொண்டு விஞ்ஞானமயகோச மானந்தமயகோச மிரண்டும் முறையே சீவான் மாவும் பரமான்மாவுமாமென்பார்மதத்தை மறுத்தற்பொருட்டு, அவற்றை இங்ஙனம் வேறெடுத்தோதி வலியுறுத்தவாறு.

இவை நான்கு செய்யுளானும் உலகவழக்கின் வைத் துணர்த்தி மேலது வலியுறுத்தப்பட்டது. (28)

அறிவுடல் சிந்தை யான்மா வணைதலா லான்மா வென்ப
றெறிசுடர் விளக்கி னுக்கு மிடத்தையும் விளக்கென் றாற்
பொறிபுலன் கரண மெல்லாம் புலப்படு மபேத மாகிப் போற்
பிறிதரா தறிவ தான்மா வறிபொருள் பின்ன மாமே.

சுப — பதவுரை

அறிவு உடல் சிந்தை ஆன்மா அணைதலால் ஆன்மா வென்பர் — (ஆன்மாவின் வேறுகிய) அறிவு முதலிய அவ் வைங்கோசங்களை ஆன்மாப் பொருந்தல் பற்றி ஆன்மா

வென உபநிடதங்களிற் கூறிய தென்பர் (அதுவும்),—சுடர் எறி விளக்கு இருக்கும் இடத்தையும் விளக்கென்ருற்போல்–ஒளியை வீசும் விளக்கிருக்கின்ற தகழியை விளக்கென்ருற்போல(த் தானியாகுபெயராதற்குரிய இயைபுபற்றியே யன்றிப் பிறிதில்லை யாகலால்),—பொறி புலன் கரணமெல்லாம் புலப்படும் அபேதமாகிப் பிறிதராது அறிவது ஆன்மா – பொறி புலன் கரணமுதலியவெல்லாவற்றின்கண்ணும் அறியப்படும் அபேதமாய்ப் பிரிதலின்றி அறிவதாகிய ஆன்மா,—அறி பொருள் பின்னமாமே-அறியப்படும் அப்பொருள்கட்கு வேறு என்க.

சிவ — பொழிப்புரை

எ–து ஆன்மாவின் வேருகிய அவ்வைங்கோசங்களே ஆன்மாவென வுபநிடதங்களிற் கூறியதூஉம், விளக்குத் தகழியை விளக்கென்ருற்போலத் தானியாகுபெயராதற்குரிய வியைபுபற்றியேயன்றிப் பிறிதில்லையாகலால், அவையெல்லாவற்றின்கண்ணும் அபேதமாய்ப் பிரிதலின்றி யறிவதாகிய வான்மா அவற்றிற்கு வேறென்பதாம்.

அறிவுடல் சிந்தையென்றதும் பொறி புலன் கரணமென்றதும் உபலக்கணம்.

எல்லாவற்றின் கண்ணென்னும் ஏழாவதும் அறிபொருட்கென்னும் நான்காவதும் விகாரத்தாற்றொக்கன.

அபேதமாகிப் பிறிதராதென்றது "ஞானதிரோதக்மாய் மறைத்துக் கொடு நிற்றல்" (சிவஞானபோதம்,நான்காஞ்சூத்திரம், வா – 2.) என்ருற்போலக் கொள்க.

இதனுனே ஐங்கோசங்களே யான்மாவென்னு முபநிடதத்திற்குத்தாற்பரியங்கூறி மேலது வலியுறுத்தப்பட்டது. (29)

கண்டுணர் புருடன் வேறு கனவுகண் டொடுங்கிக் காய முண்டியும் வினையு மின்றிக் கிடந்துயிர்த் திடவு ணர்ந்து கண்டிடுங் கனவுஞ் சொல்லி யொடுக்கமுங் கருதி வேரு யுண்டியும் வினையு முற்றிங் குணர்த்திட வுணரா நிற்கும்.

சுப — பதவுரை

கனவு கண்டு ஒடுங்கி உண்டியும் காயம் வினையும் இன்றிக் கிடந்து உயிர்த்திட உணர்ந்து – அன்னமய கோசமுதலிய நான்கினையும் ஒரோவொன்றுக விட்டு விட்டு ஐந்தவத்தைப்பட்டு விழித்தபின்,—இங்கு உணர்த்திட - இங்கே (அவை கூடிநின்று) அறிவிக்க,—கண்டிடும் கனவு சொல்லியும்–(முறையே) காணப்பட்ட கனவைச் சொல்லியும்,— ஒடுக்கம் கருதியும் – சுழுத்தியினைக் கருதியும்,—வேருய் உண்டியும் வினையும் உற்று உணரா நிற்கும் – அவைகட்கு வேருய் (உண்டி வினைகளின்றிக் கிடந்து உயிர்த்த துரியதுரியாதீதங்களை) உண்டி வினைகள் உறுதலாகிய மறுதலையின் வைத்தும் (அங்ஙனம் அவத்தைப் பட்டவாற்றை) அறியா நிற்குமாகலால்,—கண்டு உணர் புருடன் வேறு–(இதனினும்) கண்டறியப்பட்ட உயிர் (அவற்றின்) வேறென எனத் தெளியப்படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *அன்னமயகோசமுதலிய நான்கினையும் ஒரோவொன்றுக விட்டுவிட்டு அஞ்சவத்தைப்பட்டு விழித்தபின் அவை கூடி நின்றறிவிக்க முறையே சொல்லியுங் கருதியு முண்டிவினையுறுதலாகிய மறுதலையின் வைத்தும் அங்ஙனமவத்தைப்பட்டவாற்றை அறியாநிற்குமாகலால், இதனினும் உயிரவற்றின் வேறெனத் தெளியப்படுமென்பதாம்.*

அவை கூடியபின்னன்றி அறிவு நிகழாமையால் அறிதற்கு அவை யேதுவாதல் பெறப்பட்டது.

ஒடுக்கமென்றது சுழுத்தியை; அது கனவுபோற் செ ா ல் ல வாராமையிற் கருதி யுணர்தற்பாலதாயிற்று.

சித்தமுஞ் செல்லாத வேனையிரண்டுங் கருதவும் வா ரா மையின் மறுதலையின் வைத்துணர்தற்பாலவாயின.

உணர்ந்தபினென்றது உணர்ந்தெனத் திரிந்துநின்றது; உணர் தல் ஈண்டுத் தூயிலெழுதன்மேற்று.

இதனுனே அவத்தைப்படு மியல்பின் வைத்துணர்த்தி மேலது வலியுறுத்தப்பட்டது.

தோற்பாவை யென்பது முதல் இத்தனையுங் கூறியவாற்றுன் மேலைச்சூத்திரத்தின் உற்றுச் செயிருறுமென்பது முதலிய காற் கூற்றுப் பொருளையும் வலியுறுத்தவாறுமாயிற்று. (30)

புருடனே யறிவ னெனிற் பொறிபுல னாதி போதந்
தருவதெ னறிவு மாயா தனுகர ணாதி பற்றி
வருவதிங் கனாதி யாக மலத்தினின் மறைந்து நிற்ப
னருவனு யிவற்றோ டாளுந் மைச்சரு மரசும் போல்வன்.

சுப் — பதவுரை

புருடன் அறிவனே யாகில் – ஆன்மா (முதல்வன் போலச்) சுத்த சித்தே யாகின்,–பொறி புலன் ஆதி போதம் தருவது என் – மாயாகாரியங்களைப்பற்றி நின்றறிதல் வேண்டா,—இவற்றோடு அமைச்சரும் ஆளும் அரசும் போல்வன் – (அவ்வாறன்றி) அமைச்சரும் ஆளுகின்ற அரசும்போல அவற்றுடனின்று,—மாயா தனு கரணாதி

பற்றி இங்கு அறிவு வருவது – அம்மாயாகருவிகளைப் பற்றி இங்கே அறிதலுண்மையால்,—அநாதியாக மலத்தினின் மறைந்து அருவனுய் நிற்பன் - அநாதியே ஆணவ மலத்தின் மறைந்து அருவனுய் நிற்றல் பெறப்படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. ஆன்மா முதல்வன்போலச் சுத்தசித்தேயாகின் மாயாகாரியங்களைப் பற்றிநின்றறிதல் வேண்டா; அவ்வாறன்றி அமைச்சருமரசும் போலுடனின்று மாயாகருவிகளைப்பற்றி யறிதலுண்மையால் அநாதியே யாணவமலத்தின் மறைந்து அருவனுய் நிற்றல்பெறப்படுமென்பதாம்.

தேற்றவேகாரத்தை அறிவனென்பதனேடுங் கூட்டியுரைக்க.

என்னென்பது ஈண்டு வேண்டாமை குறித்து நின்றது.

போல்வனென்பது முற்றெச்சம்.

பின்வருமனுமானத்தை வலியுறுத்தற்பொருட்டுப் புருடனே யறிவனுகிற் பொறிபுலனுதிபோதந் தருவதென்னனைத் தருக்க மெடுத்தோதினுர்.

இதனுனே ஞானச்செய்தி அநாதியே மறைத்துநிற்கும் பசுத்துவ முடையனுதல் காரியானுமானத்தின் வைத்துணர்த்தி வலியுறுத்தப்பட்டது.

அறிவிச்சைசெயல்களென்பது முதல் இத்துணையும் பாமதங்களைப் பரிகரித்து ஆன்மாவுக்கிலக்கணங் கூறுமுகத்தால் இரண்டாங் கூற்றை வலியுறுத்தவாறு.

இனி ஒன்பதுசெய்யுளான் மூன்றுங்கூற்றைத் தெரித்துக் கூறுகின்றுர்.

மூன்றுமதிகரணம்.

படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போ தில்லீற்
கடைதொறும் விட்டு விட்டுக் காவலு மிட்டுப் பின்ன
ரடைதருந் தனியே யந்தப் புரத்தினி லதுபோ லான்மா
வுடலினி லஞ்ச வத்தை யுறுமுயிர் காவ லாக.

சுப் —பதவுரை

ஆன்மா – புருடன் (அவற்றொடு அமைச்சரும் அரசும் போறலின்).—படைகொடு பவனி போதும் பார்மன்னன் – அமைச்சர் படைத்தலைவர் முதலிய பரிசனங்களோடு உலாப்போந்த அவனிமன்னன்,—இல்லின் புகும்போது – (மீள) மாளிகையின்கட் புகுமிடத்து,—கடைதொறும் விட்டு விட்டுக் காவலும் இட்டு - வாயில்கடோறும் (அவரவர்க்கு) விடைகொடுத்து (நிறுத்தி)க் காவலும் வைத்து —பின்னர் அந்தப் புரத்தினில் தனியே அடைதரு மதுபோல் – பின்னர் அந்தப்புரத்தின்கண்ணே தனியே செல்லுமாறுபோல,—உடலினில் உயிர் காவலாக – உடம்பின்கண் (முறையே அக்கருவிகளினீங்கிப்) பிராணவாயுவைக் காவலாக (நிறுத்தி),—அஞ்சு அவத்தை உறும் – ஐவகை அவத்தையுறும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. புருடன் அவற்றோடமைச்சருமரசும் போறலின் அரசன் போலவற்றை விட்டுவிட்டுச் சென்று ஐவகை யவத்தை யுறுமென்பதாம்.

இதனுனே வெவ்வேறவத்தை அணைதருமாறு மேற்கூறிய வுவமையொடு படுத்து வகுத்துக்கூறப்பட்டது. (32)

சாக்கிர முப்பத் தைந்து நுதலினிற் கனவு தன்னி
லாக்கிய விருபத் தைந்து களத்தினிற் சுழுனை மூன்று
நீக்கிய விதயந் தன்னிற் றுரியத்தி லிரண்டு நாபி
நோக்கிய துரியா தீத நுவலின்மூ லத்தி லொன்றே.

சுப் — பதவுரை

நுதலினில் சாக்கிரம் முப்பத்தைந்து – (ஆன்மா அரசன் போல விட்டு விட்டுச் சேறற்கண்) இலாடத்தானத்திற் சாக்கிராவத்தையுறும்வழி முப்பத்தைந்து கருவிகளும்,—களத்தினில் கனவு தன்னில் ஆக்கிய இருபத்தைந்து – கண்டத்தானத்திற் சொப்பனவத்தை யுறும் வழி ஆக்கப்பட்ட இருபத்தைந்து கருவிகளும்,—நீக்கிய இதயந்தன்னில் சுழுனை மூன்று – நீக்கப்பட்ட இருதயத்தானத்திற் சுழுத்தியவத்தை யுறும் வழி மூன்றுகருவிகளும்,—நாபி துரியத்தில் இரண்டு – நாபித்தானத்திற் றுரியாவத்தை யுறும்வழி இரண்டு கருவிகளும்,—நுவலின் மூலத்தின் நோக்கிய துரியாதீதம் ஒன்றே - சொல்லுமிடத்து மூலத்தானத்தில் ஆராயப்படுந் துரியாதீதாவத்தை யுறும்வழி ஒரு கருவியுமாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *ஆன்மா அரசன்போல விட்டுவிட்டுச் சேறற்கட் படுமவத்தையாவன; சாக்கிரமுதலியனவாம். அவ்விடங்களாவன: இலாட முதலியனவாம். ஆண்டாண்டு நிற்குங் கருவிகளாவன: முறையே முப்பத்தைந்து மிருபத்தைந்து மூன்று மிரண்டு மொன்றுமாமென்பதாம்.*

அசிந்திய விசுவசாதாக்கியத்தில் அவத்தைக்கு நிற்குங் கருவிகளிற் கலாதிகளையு முடன்கூட்டியெண்ணி நாற்பத்தொன்று முதலியனவாகத் தொகை கூறுதலானும், கலாதிகளுளவாகவே சுத்ததத்துவங்களின் றொழிற்பாடும் ஆண்டுளவென்பது பெறப் படுதலானும், கலாதிகளில்வழிப் புருடதத்துவமொன்றென வைத் தெண்ணப்படுதல் செல்லாமையானும், ஈண்டு மூப்பத்தைந்து முதலியனவாகத் தொகைகூறியது மலைவாம்போலுமெனின்,—ஆகாது; கடைதொறும் விட்டுவிட்டென்ற வுவமைக்கேற்ப விடப் படுதன்மாலையவாய் நிற்குங் கருவிகண்மாத்திரைக்கே ஈண்டுத் தொகை கூறப்புகுந்தாராகலானும், அதுபற்றிக் கலாதிகளின் ஐயஞ் செல்லாமைப்பொருட்டு அவற்றைப்புருடதத்துவத்துள டக்கி அதனையுமுடன்வைத் தெண்ணினாராகலானுமென்க.

தரியாதீதத்திற் காரணசரீரமாத்திரையேயன்றிக் கஞ்சுக சரீரமில்லையென்றது ஆண்டுக் கலாதிகள் வேறு நில்லாது அதனுளொற்றித்து நிற்குமென்னுங் கருத்தே பிறிதில்லையெனக் கொள்க. (33)

இருவகை சாக்கி ராதி யவத்தைக ளியல்பு தானு
மொருவகை கீழே நூக்கி யுற்பவங் காட்டு மொன்று
பெருகமே னோக்கித் தீப பிறப்பறத் திடுமி யோகிற்
றருவதோர் சமாதி தானுந் தாழ்ந்துபின் சனனஞ் சாரும்.

சுப் — பதவுரை

சாக்கிராதி அவத்தைகள் இயல்புதானும் இருவகை – (மேற்கூறிப்போந்த) சாக்கிரமுதலிய அவத்தைகள் ஐந் தும் கீழ்நோக்கிச் சென்றொடுங்குமுறையும் மேனோக்கித் தோன்றுமுறையும் பற்றி இருவகைப்படும்.—ஒருவகை கீழே நூக்கி உற்பவங் காட்டும் - அவற்றுள் ஒன்றாகிய

ஒடுங்கு முறையது (கன்மார்ச்சிப்புக் கேதுவாகலாற்) கீழ்ச்செலுத்திப் பிறவிக்கு வித்தாம்,—ஒன்று பெருக மேல் நோக்கித் தீய பிறப்பு அறுத்திடும் – பிறிதொன்றுகிய தோன்றுமுறையது (கன்மநுகர்ச்சிக் கேதுவாகலாற்) பரம்பரையிற் கொடிய பிறவியறுதற்குக் காரணமாய் மேற்படும்,—யோகில் தருவதோர் சமாதி தானும் தாழ்ந்து பின் சனனஞ் சாரும் – (இனி இதயமுதற் றுவாதசாந்த மீருகிய தானங்களிற் புறக்கரணம் உட்கரணங்களைப் பற்றியும் பற்றுதும் பிரத்தியாகாரமுதல் ஐவகைப்பட்டு) நிகழும் யோகாவத்தையும் (அதுபோல) ஒடுங்கியும் பின் னர்த் தோன்றியும் அவ்வாறே பயன்றருவதன்றிப் பிறி தன்று என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேற்கூறிப்போந்த சாக்கிர முதலியவைந்துங் கீழ்நோக்கிச் சென்றொடுங்குமுறையும் மேலேக்கித் தோன் றுமுறையும்பற்றி யிருவகைப்படும். அவற்றுள் ஒடுங்கு முறையது கன்மார்ச்சிப்புக்கேதுவாகலாற் கீழ்ச்செலுத்திப் பிறவிக்கு வித்தாம், தோன்றுமுறையது கன்மநுகர்ச்சிக்கே துவாகலாற் பரம்பரையிற் பிறவியறுதற்குக் காரணமாய் மேற் படும். இனி இதயமுதற் றுவாதசாந்த மீருகிய தானங் களிற் புறக்கரண முட்கரணங்களைப் பற்றியும் பற்றுதும் பிரத்தியாகாரமுத லிவகைப்பட்டு நிகழும் யோகாவத்தையும் அதுபோல ஒடுங்கியுந் தோன்றியு மவ்வாறே பயன்றருவ தன்றிப் பிறிதன்றென்பதாம்.

யோகிற்றருவதோர் சமாதி யுண்டென்பதும் அனுவாத முகத்தா னீண்டே பெற்றும்.

தாழ்தல் இழிதல்.

சனனஞ்சார்தல் எழுதல்

இந்த யோகாவத்தையைத்தானே மீட்சியில்லாதாகிய ஞானவத்தை தபோலு மெனக்கொண்டுமயங்குவார்க்குஅங்ஙன மயங் காமைப்பொருட்டு இதனே யதனே டொப்பவைத் தீண்டுக் கூறினர்.

இச்செய்யுளிற் கூறிய மூன்றுபேதமும் முறையே சகலத்திற் கேவலஞ் சகலத்திற்சகலஞ் சகலத்திற் சுத்தமெனப்படுமென்க.

இதனுள், இருவகைப் பிறப்பறுத்திடு மென்றது தாப்பிசையாய் 'அறிதருமுதலவத்தை யடைதருமிடத்தே யைந்துஞ் செறிதரு'மென வருகின்றதனேடுஞ் சென்றியைந்து பொருடருமாகலான் அதற்கு மிவ்வாறுரைத்துக்கொள்க. (34)

அறிதரு முதல வத்தை யடைதரு மிடத்தே யைந்துஞ்
செறிதருங் கரணந் தன்னிற் செயலெறுங் கண்டு கொண்ணீ
பிறிவிலா ஞானத் தோரும் பிறப்பற வருளா லங்கே
குறியொடு மஞ்ச வத்தை கூடுவர் வீடு கூட.

சுப் — பதவுரை

அறிதரும் முதல் அவத்தை அடைதரும் இடத்தே – (சாக்கிராதியவத்தையென மேற்கூறிப்போந்த ஐந்தனுள்) அறிகின்ற முதலவத்தையாகிய சாக்கிரத்தை அடையப் பெறும் இலாடத்தானத்தின் கண்ணேயும்,—ஐந்தும் செறிதரும் – சாக்கிரமுதல் ஐந்தவத்தையுளவாம்,—கரணந் தன்னில் செயல்தொறும் நீ கண்டுகொள்–(அவை) கருவியான் (விடயங்களே யறியுஞ்) செய்கைதோறும் (அதிநுணுக்கமா யிடையீடின்றி நிகழுமாறு நுண்ணுணர்வால் நீ கண்டு

கொள்ளப்படும்,—பிறிவிலா ஞானத் தோரும் – (இனி இவையேயன்றிப்) பிரிவரிய ஞானத்தை அறிந்தோரும்,—பிறப்பு அற அருளால் ஆங்கே வீடு கூட – பிறப்பு நீங்கி அவ்வருண்ஞானத்தால் அவ்விடத்து வீடுபேற்றை யடை தற்கு,—குறியொடும் அஞ்சவத்தை கூடுவர் – (கேவல சகலங்க ணீங்கிய சுத்தத்தினும்) அவ்வாறே ஐவகை யவத்தையைக்கூடுவர் (அவை உண்மை யதிகாரத்துள் உணர்த்த நின்றன) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. சாக்கிராதியவத்தையென மேற்கூறிப்போந்த வைந்தனுள் முதலவத்தையாகிய சாக்கிரத்தானத்தின்கண் ணேயுஞ் சாக்கிரமுதலிந்தவத்தையுளவாம். அவை கரு வியான் விடயங்களேயறியுஞ்செய்கைதோறும்அதிதுணுக்கமா யிடையீடின்றி நிகழுமாறு நுண்ணுணர்வாற் கண்டுகொள் ளப்படும். இனி இவையேயன்றிக் கேவல சகலங்கணீங்கிய சுத்தத்தினும் அவ்வாறே யைவகையவத்தையுள, அவை யுண்மையதி காரத்து ளுணர்த்த நின்றன வென்பதாம்.

முதலவத்தையடைதருமிடமாவது மேற்கூறிய இலாடத் தானம்.

அறிதருமிடத்தேயென வியையும்.

சுத்தாவத்தையினியல்பு ஈண்டுக் கூறுதற்கோ ரியைபில்லேயா யினும் அவத்தையெனப்படுவன ஈண்டுக் கூறியவைமாத்திரையே போலுமெனமலேயாமைப்பொருட்டுஇவ்வாறுகூறியொழிந்தார். (35)

ஐந்துசாக் கிரத்தி னைந்து கனவினிற் சுழுனை மூன்று
வந்திடுந் துரியந் தன்னி னிரண்டொன்று துரியா தீதந்
தந்திடுஞ் சாக்கி ராதி யவத்தைக டானந் தோறு
முந்திடுங் காரணந் தன்னிற் செயறொறு முணர்ந்துகொள் ளே.

சுப் — பதவுரை

சாக்கிராதி யவத்தைகள் – (அறிதரு முதலவத்தை யடைதருமிடத்தே யென மேற்கூறிப்போந்த)சாக்கிராதிய வத்தைகள் (ஐந்தனுள்),—சாக்கிரத்தின் ஐந்து – சாக்கிரத் திற் (சுத்தவித்தை ஈருகிய) ஐந்து கருவியும்,—கனவினின் நான்கு – சொப்பனத்தின் (மகேச்சுர மீருகிய) நான்கு கருவியும்,—சுழுனே மூன்று – சுழுத்தியிற் (சாதாக்கிய மீரு கிய) மூன்று கருவியும்,—வந்திடும் துரியந்தன்னின் இரண்டு – வருகின்ற துரியத்திற் (சத்தியீருகிய) இரண்டு கருவியும்,—தந்திடும் துரியாதீதம் ஒன்று – பொருந்தப் பட்ட துரியாதீதத்திற் (சிவதத்துவமாகிய) ஒரு கருவியும்,– தானந்தோறும்–கலாதிகள் தொழிற்படு மிடந்தோறும்,— கரணந்தன்னில் செயல்தொறும் – கருவியான் (விடயங் களேயறியுஞ்) செய்கைதோறும்,—உந்திடும் உணர்ந்து கொள்ளே–(அக்கலாதிகளேச்) செலுத்திநிற்றலே (நீ நுண் ணுணர்வான்) உணர்ந்து கொள்வாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அறிதரு முதலவத்தை யடைதரு மிடத்தே யென மேற்கூறிப்போந்த சாக்கிராதியவத்தைகளேந்தனுள், சாக்கிரத்திற் சுத்தவித்தை யீருகிய ஐந்து கருவியும், சொப்பனமுதலிய நான்கினும் முறையே அவற்றுளொரோ வொன்றுழித்தொழிந்த கருவியுங் கலாதிகளேச் செலுத்தி நிற்கு மென்பதாம்.*

தானந்தோறும் கலாதிகடொழிற்படு மிடந்தோறும்.

உந்துதல் செலுத்துதல்.

இச்செய்யுள் பிறிதோரவத்தைக் கோதியதுபோலுமென மலையாமைப்பொருட்டுக் காணந்தன்னிற் செயலுறுங் கண்டுகொள் ளென மேற்கூறியவதனை ஈண்டு மறித்துணர்வுங்கழக் கூறினர்; இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறெயுரைப்ப.

ஈண்டைத்தானாகு மூன்றிரண்டொன்றென்றது செலுத்துங் கருவிகளேயென்பது, உந்திடுமென்றதனானும் "சுத்தக் கருவி களைந் தங்கொண் டேசொல் லவத்தையைந்துஞ்-சித்திக்கும் போதத்தி லொன்றுரைன்று சென்றிடும்" (சிற்றம்பலநாடிகள் கலித்துறை, செ - 37.) என்பதனானு மறிக.

இனி இவ்வாறன்றி அறிதரு முதலவத்தை யடைதருமிடத் தேயைந்துஞ் செறிதருமென மேற்கூறிப்போந்ததனையே ஈண்டு ஐந்து சாக்கிரத்தினென் றனுவதித்து வேனச் சொப்பனமுதலிய வற்றின் முறையே அவை தானாகு மூன்றிரண்டொன்று பொருந்து மென்றவாறுகக்கொண்டுரைத்தலுமொன்று; இப்பொருட்குச் சாக் கிராதியவத்தைகளைந்தெனக் கூட்டுக; தானம் நூதல்முதலியவிடம்; உந்துதல் பொருந்துதல்.

இவை தானாகு செய்யுளானும் மேலைத்தவத்தை யென்றவற் றின் பெயரும் வகையு, மிடமும் அவற்றியல்பு மிவையென்பது கூறப்பட்டது. (36)

கேவல சகல சுத்த மென்றுமூன் றவத்தை யான்மா
மேவுவன் கேவ லந்தன் னுண்மைமெய் பொறிக ளெல்லாங்
காவலன் கொடுத்த போது சகலரை மலங்க ளெல்லா
மோவின போது சுத்த முடையபனுற் பவந்து டைத்தே.

சுப் — பதவுரை

ஆன்மாக் கேவல சகல சுத்தமென்று மூன்றவத்தை மேவுவன் – ஆன்மா (அவ்வாறு நிகழும் காரியவவத்தை களை யுறுதற்குக்காரணமாகக்)கேவலம் சகலம் சுத்தமென

மூன்றவத்தை எய்துவன்,—கேவலம் தன் உண்மை – அவற்றுட் கேவலமாவது(தன்னிச்சா ஞானக் கிரியைகளினிகழ்ச்சி சிறிதுமின்றித்) தான்மாத்திரையே உளனுதலாம்.—மெய் பொறிகளெல்லாம் காவலன் கொடுத்த போது சகலனும் – (பின்பு) தனுகரணுதியோடும் முதல்வன் கூட்டக் கூடி (அவை ஒருபுடை விளங்கு) மவதரத்திலே சகலனும்.—மலங்களெல்லாம் ஓவினபோது உற்பவம் துடைத்தே சுத்தம் உடையன் – (பின்பு) பஞ்சமலங்களு நீங்கிப் பிறவி யொழிந்து (சிவத்தோடு கூடி அவ்விச்சா ஞானக் கிரியைகள் எங்குமாய் வியாபித்து) விளங்கு மவதரத்திலே சுத்தமுடையனு மெனப்படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து ஆன்மா அவ்வாறு நிகழுங் காரியவவத்தைகளையுறுதற்குக் காரணமாகக் கேவலஞ் சகலஞ் சுத்தமென மூன்றவத்தையெய்துவன். அவற்றுட் கேவலமாவது தன்னிச்சா ஞானக்கிரியைகளி னிகழ்ச்சி சிறிதுமின்றித் தான்மாத்திரையே யுளனுதல்; பின்பு தனுகரணுதியோடுங் கூடி அவையொருபுடை விளங்குமவதரஞ் சகலம்; பின்பு பஞ்சமலங்களுந் நீங்கிச் சிவத்தோடுகூடி அவ்விச்சாஞானக் கிரியைகளெங்குமாய் வியாபித்து விளங்குமவதரஞ் சுத்தமெனப்படுமென்பதாம்.

இதனனே மேற்கூறிப்போந்த அவத்தைகட்குக் காரணமிவையென்பதூஉம் அவற்றதியல்புங் கூறப்பட்டன. (37)

அறிவில னமூர்த்த னித்த னராகாதி குணங்களோடுஞ்
செறிவிலன் கலாதி யோடுஞ் சேர்விலன் செயல்க ளில்லான்
குறியிலன் கருத்தா வல்லன் போகத்திற் கொள்கை யில்லான்
பிறிவிலன் மலத்தி னெடும் வியாபிசே வலத்தி லான்மா.

சுப — பதவுரை

ஆன்மா – (மேற்கூறிப்போந்த மூன்றவத்தை யுறு தற்குரிய) ஆன்மா.—அமூர்த்தன் – (வரக்கடவனவாகிய காரியங்களுள்) உடம்பு முன்னில்லாதவனும்,—கலாதியோடும் சேர்வு இலன் – கலாதியறிவோடு முன் சேர்தலில் லாதவனும்,—அராகாதி குணங்களோடும் செறிவு இலன் – புத்தி குண மெட்டினையும் (ஏனைப் போக்கியகாண்டக் கருவிகளையும்) முன் பொருந்தாதவனும்,—குறி இலன் – இச்சை முன்னில்லாதவனும்,—அறிவு இலன்–அறிவுமுன் னில்லாதவனும்,—செயல்கள் இல்லான் – ஒரு தொழிலு முன்னில்லாதவனும்,—கருத்தா அல்லன் – தனக்கென ஒரு சுதந்திர முன்னில்லாதவனும்.–போகத்திற் கொள்கை இல்லான்–போகத்தில் முன் கொள்கை இல்லாதவனும்,—நித்தன் – தோற்றக் கேடுகள் முன்னில்லாதவனும்,—வியாபி – ஏகதேசியாதல் முன்னில்லாதவனுமாய்,—கேவலத்தில் மலத்திலேடும் பிறிவு இலன் – கேவலாவத்தையில் ஆணவமலத்தோடு மாத்திரையே கூடி நிற்பன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *வரக்கடவனவாய அறிதன்முதல் ஏகதேசியாத லீறுகிய பத்துக்காரியங்களுள் ஒன்றுமின்றி யாணவமலத் தோடு மாத்திரையே கூடிநிற்பது கேவல மென்பதாம்.*

ஈண்டு அமூர்த்தமென்றது உடம்பின் பிராகபாவத்தை; நித்த மென்றது தோற்றக்கேடுகளின் பிராகபாவத்தை; வியாபகமென் றது ஏகதேசத்தின் பிராகபாவத்தை.

ஏனையின்மைகளும் அவ்வப்பிராகபாவங்களைக் குறித்து நின் றன வாகலான் இவ்வீலக்கணங்கள் ஏனையவத்தைகளிற் செல்லா மையின் இவற்றுளொன்றே கூறவமையு மாயினும், கேவலத்தன்

ணுண்மையென்றது விளங்குதற்பொருட்டு இவையனைத்தும் வருத்துக் கூறினர்; 'பிறிவிலன் மலத்திலென்று' மென்றதும் அதன் பொருட்டு

ஈண்டுக் குறியென்றது முதனிலைத் தொழிற்பெயராய் இச்சையை யுணர்த்திநின்றதென்பது செயலினைச் சாரவைத்தலானறிக.

அறிவில னென்றதனையு மீண்டுத் தந்துரைக்க.

அராகாதி குணமென்றது புத்திகுண மெட்டினையும்; அராகாதி குணங்களென்ற வுபலக்கணத்தால் வினைப் போக்கியகாண்டக் கருவிகளுங் கொள்ளப்படும்.

இதனானே தன்னுண்மை கேவலமாதல்காட்டப்பட்டது. (38)

உருவினைக் கொண்டு போக போக்கியத் துன்னல் செப்பல்
வருசெயன் மருவிச் சத்த மாதியாம் விடயந் தன்னிற்
புரிவதுஞ் செய்திங் கெல்லா யோனியும் புக்கு முன்று
திரிதருஞ் சகல மான வவத்தையிற் சீவன் சென்றே.

சுப் — பதவுரை

சீவன்–(மேற்கூறிப்போந்த கேவலாவத்தை பொருந்திய) ஆன்மா,—உருவினைக்கொண்டு – (அமூர்த்தனுதற்கு மறுதலையாகிய) உருவினைக்கொண்டும்,–போக(த்து மருவி) – (கலாதியோடுஞ் சேர்விலனுதற்கு மறுதலையாகிய)போக காண்டமாய கலாதியோடு செறிந்தும்,—போக்கியத்து (மருவி) - (அராகாதி குணங்களோடுஞ் செறிவிலனுதற்கு மறுதலையாகிய) போக்கியகாண்டமாய புத்தியாதியைச் செறிந்தும்,—உன்னல் (மருவி) – (குறியிலனுதற்கு மறு

தலையாகிய) இச்சையுற்றும்,—செப்பல் (மருவி) - (அறிவிலனுதற்கு மறுதலையாகிய) நால்வகை வாக்குக்களானிகழும் அறிவுற்றும்,—வரு செயல் மருவி – (செயல்களில்லானுதற்கு மறுதலையாகிய) வரப்பட்ட தொழில்களுற்றும்,—சத்தம் ஆதியாம் விடயந் தன்னிற் புரிவதுஞ் செய்து - (கருத்தாவல்லனுதற்கு மறுதலையாகிய) சத்தாதி விடயத்தில் விருப்பஞ்செய்தும் போகத்திற் கொள்கையில்லானுதற்கு மறுதலையாகிய) போகநுகர்ந்தும்,—இங்கு எல்லா யோனியும் புக்கு உழன்று – ஈண்டு (நித்தனுதற்கு மறுதலையாகிய) தோற்றக் கேடுகளிற் புக்குழன்றும்,—சகலமான அவத்தையில் சென்றே திரிதரும் – (வியாபியாதற்கு மறுதலையாகிய) ஏகதேசியாய் (இப்பத்துக்காரியமுமுடையனுய்ச்) சகலாவத்தையிற் சீவித்து நிற்பன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேற்கூறிய வின்மைகள் பத்துக்கும் மறுதலையாகிய விப்பத்துக்காரியமு முடையனுய்ச் சீவித்துநிற்பது சகலமென்பதாம்.

போககாண்டமாகிய கலாதியைப் போகமென்றும் போக்கிய காண்டமாகிய புத்தியாதியைப் போக்கியமென்றுங் கூறினர்.

உன்னலென்றது ஈண்டு விரும்புதன்மேற்று.

செப்பலென்றது செப்பப்படுவனவாய நால்வகை வாக்குக்களோயுமுணர்த்தி அவை காரணமாய் நிகழுமறிவின்மேல் ஆகுபெயராய் நின்றது.

புரிவதுமென்றவும்மையான் நுகர்வதுமென்ற தெஞ்சி நின்றது.

உருவினைக்கோடல் அமூர்த்தனுதற்கும், போகபோக்கியத்துச் செறிதல் கலாதியோடுஞ் சேர்விலன் அராகாதிகுணங்களோடுஞ் செறிவிலனுதற்கும், உன்னல் செப்பல் வருசெயன்மருவு

தல் அறிவிலன் செயல்களில்லான் குறியிலனுதற்கும், சத்தமாதி யாம் விடயந்தன்னிற் புரிவதுஞ்செய்தல் கருத்தாவல்லனுதற்கும், உம்மையாற் போந்த நுகர்வதுஞ்செய்தல் போகத்திற் கொள்கை யில்லானுதற்கும், எல்லாயோனியும் புக்குழலுதல் நித்தனுதற்கும், சென்றுதிரிதரல் வியாபியாதற்கும்மறுதலையாயவாறுகண்டுகொள்க.

இதனானே மெய்பொறிகளெல்லாங் காவலன் கொடுத்தபோது சகலனுதல் வகுத்துக் கூறப்பட்டது. (39)

இருவினைச் செயல்க ளொப்பி னீசன்றன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான் யோகத்தைக் குறுகி முன்னைத்
திரிமல மறுத்துப் பண்டைச் சிற்றறி வொழிந்து ஞானம்
பெருகிநா யகன்றன் பாதம் பெறுவது சுத்த மாமே.

சுப் — பதவுரை

இருவினைச் செயல்கள் ஒப்பின்–(மேற்கூறியபத்தினுள் சத்தமாதியாம் விடயந்தன்னிற் புரிவதுஞ் செய்தல் கழிதற் கேதுவாகிய) இருவினையொப்பின் கண்ணே,—ஈசன்றன் சத்திதோய – (போகபோக்கியத்துக்கருவிகளின் செறிவு கழிதற்கேதுவாகிய) சிவசத்தி நிபாதமுறுதலால்,—கு ரு அருள் பெற்று – (உருக்கழிதற்கேதுவாகிய) குருவருள் பெற்றும்,—ஞானயோகத்தைக் குறுகி – (எல்லாயோனி யும் புக்குழலுதல் கழிதற் கேதுவாகிய) ஞானசாதனம் அடைந்தும்,—முன்னைத் திரிமலம் அறுத்து – (சென்றுதிரி தருதலாகிய ஏகதேசத் தன்மை கழிதற்கேதுவாகிய) அநாதி மும்மல நீக்கியும்,—பண்டைச் சிற்றறிவு ஒழிந்து– (சத்தம் ஆதியாம் விடயந்தன்னின் நுகர்வது கழிதற்கேது வாகிய) பழையவாதனை நீக்கியும்,—ஞானம் பெருகி – (பாச அறிவிச்சை செயல்கள் கழிதற்கேதுவாகிய)ஞானம் பெருக்கியும் (முறையே கிடைப்ப அவற்றுன் அக்காரியம்

பத்து நீங்கப்பெற்று).—நாயகன்றன் பாதம்பெறுவது சுத்தமாமே - சிவபிரான் திருவருளைக்கூடுதல் சுத்தாவத்தை என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேற்கூறிய பத்தனுள், சத்தமாதியாம் விடயந் தன்னிற் புரிவதுஞ்செய்தல் கழிதற் கேதுவாகிய இருவினை யொப்பும், போகபோக்கியக் கருவிகளின் செறிவு கழிதற் கேதுவாகிய சத்திநிபாதமும், உருக்கழிதற்கேதுவாகிய குரு வருளும், எல்லாயோனியும் புக்குழலுதல் கழிதற்கேது வாகிய ஞானசாதனமும், சென்றுதிரிதருதலாகிய ஏகதேசத் தன்மை கழிதற்கேதுவாகிய மும்மலநீக்கமும், சத்தமாதி யாம் விடயந்தன்னினுகர்வது கழிதற்கேதுவாகிய வாதனைநீக் கமும், பாசவறிவிச்சை செயல்கள் கழிதற் கேதுவாகிய ஞானப்பெருக்கமும் முறையே கிடைப்ப, அவற்று னக்காரி யம் பத்தும்நீங்கப்பெற்றுத் திருவருளைக் கூடுதல் சுத்த மென்பதாம்.

சத்தி நிபாதத்திற்கு மூலமாகிய மலபரிபாகமும் இருவினை யொப்புக்கு மூலமாகிய சிவபுண்ணியமுமென்னு மின்னோரன்ன வற்றை ஈண்டுக் கூறுதொழிந்தார், மேற்கூறிய காரியம் பத்தும் நீங்குதற்கேதுவாவன மாத்திரையே யீண்டுக் கூறப்புகுந்தாரன்றி அனைத்துங்கூறப்புகுந்தாரல்லராகலின்; அவையெல்லாம் முன்னர்க் கூறப்படும்.

இதனானே மலங்களெல்லா மோவினபோது சுத்தமுடையனு மாறு வகுத்துக் கூறப்பட்டது.

புருடனேயறிவனுகிலென்றது முதல் இத்தனையும் வெவ்வே றனைதருமென்ற மூன்றுங்கூற்றை வகுத்தோதியவாறு. (40)

நான்காஞ்சூத்திரமுடிந்தது.

ஆகத்திருவிருத்தம் – 230.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் சுபக்கம்

இலக்கணவியல்

ஐந்தாஞ்சூத்திரம்

திருவிருத்தம் — 9.

ஐந்தாஞ்சூத்திரம்

முதலதிகரணம்

காஞ்சூத்திரத்திற் பசுவியல்பு கூறிய வாசிரியர், அதன் மேனின்ற பாசத்தினியல்பு கூறுவாராய் அதனையுள்ளடக்கி நிற்குந் திரோதானசத்தியினியல்பு ஐந்தாஞ் சூத்திரத்திற் கூறுகின்றார்.

பொறிபுலன் கரண மெல்லாம் புருடனு லறிந்தான் மாவை
யறிதரா வகையே போல வான்மாக்க ளனைத்து மெங்குஞ்
செறிதருஞ் சிவன்ற னுலே யறிந்திடுஞ் சிவனைக்காணு
வறிதருஞ் சிவனே யெல்லா மறிந்தறி வித்து நிற்பன்.

சுப் — பதவுரை

புருடனுல் – (மேற்கூறிப்போந்த) புருடனுலே,—பொறி கரணமெல்லாம் – ஐம்பொறி அந்தக்கரணமுதலியன,—புலன் அறிந்து – தத்தம் விடயங்களை இஃதின்னதென்றளவிட்டறிந்தும்,—ஆன்மாவை அறிதரா அவையேபோல – (அறிகின்ற தம்மையும் தம்மையதிட்டித்து நின்று செலுத்தும்) அப்புருடனையும் அறியமாட்டா அவைபோல,—எங்கும் செறிதருஞ் சிவன்றனுலே – எவ்விடத்தும் வியாபகமாகிய முதல்வனது சிற்சத்தியால்,—அறிந்திடுஞ் சிவனைக்காணு ஆன்மாக்கள் அனைத்தும் – (வினைப்பயன்களை) அறிந்தனுபவிக்குந் (தம்மையுந் தம்மைச் செலுத்திநிற்குந்) திருவருளையும் அறியமாட்டாத ஆன்மாக்களையெல்லாம்,—அறிதரும் சிவனே எல்லாம் அறிந்து

அறிவித்து நிற்பன் – (முடிவின்கண்) உண்மையறிவைத் தரக்கடவோனுகிய சிவபிரானே முழுதும் அறிந்தும் அறிவித்தும் உடனிற்பன் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. தன்னையறியமாட்டாத பொறிமுதலியவற்றைத் தானறிந்தறிவித்துடனிற்கும் புருடன்; அதுபோலத் தன்னை யறியமாட்டாத வப்புருடனை அறிந்தறிவித் துடனிற்பது சிவமென்பதாம்.

சிவனே யெல்லாமறிந் தறிவித்து நிற்பனெனப் பொருட்க ணுேதியதனை உவமையினு மேற்குமாறியைவித் துரைத்துக் கொள்க.

திரோதானசத்தி யினியல்பை உபசாரத்தாற் சிவன்மேலேற் றிக்கூறியவாறு.

அறிதருஞ்சிவன் முடிவின்கணுண்மையறிவைத் தரக்கட வோனுகிய சிவன்; அறி முதனிலைத்தொழிற்பெயர்.

இச்செய்யுள் முதனூலஞ்சாஞ்சூத்திரம்போல இருகூற்ற தாமாறு கண்டுகொள்க.

அவற்றுள் முதற்கூற்றுப்பொருளை உள்ளடக்கிநிற்கு மிரண் டாங்கூற்றை அவ்வம் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலி யுறுத்துகின்றுர். (1)

இரண்டாமதிகரணம்

இறைவனே யறிவிப் பானே லீண்டறி வெவர்க்கு மொக்குங், குறைவதி கங்க டத்தங் கன்மமேற் கோமான் வேண்டா, முறைதரு செயற்குப் பாரு முளரிகட் கிரவி யும்போ, லறைதரு தத்தங் கன்மத் தளவினுக் களிப்பனாதி.

சுப் — பதவுரை

இறைவனே அறிவிப்பானேல் – இறைவனே உணர்த்துவனையின்.—ஈண்டு அறிவு எவர்க்கும் ஒக்கும் - ஈண்டு அறிவுகள் யாவர்க்கும் ஒருபெற்றியவாம்,—குறைவு அதிகங்கள் தத்தம் கன்மமேல் – ஏற்றத்தாழ்வுகளாய் நிகழ்வதற்குக்காரணம் அவ்வக்கன்ம மென்னில்,—கோமான் வேண்டா – வேறுமோரிறைவன் வேண்டாவாம் (ஆகலின்),—முளரிகட்கு இரவியும் – பங்கயத்தினது அலர்ச்சிக்கு(ப் பங்கயமேயன்றி) இரவியும்,—முறைதரு செயற்குப் பாரும் போல் – (உழுதல் எருப்பெய்தல் வித்தல் கட்டல் நீர்கால்யாத்தல் காத்தலாகிய) இம்முறையாற்றரப்படுஞ் செயல்களின் பயனுக்கு (அச்செயலேயன்றி) விளைநிலமுங் (காரணமாதல்) போல்,—அறைதரு தத்தம் கன்மத்து அளவினுக்கு அளிப்பன் ஆதி – சொல்லுகின்ற அவ்வக்கன்ம பக்குவத்திற்கீடாகப் பலனைத்தருவன் வேரோர் இறைவன் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *அறிவித்தற்பொருட்டு இறைவன் வேண்டப் படுமெனக்கொள்வார்க்கும், அறிவுகளொருபெற்றிய வாதலின்றி ஏற்றத்தாழ்வுகளாய் நிகழ்தற்குக் காரணங் கன்ம*

மெனக் கொள்ளவேண்டுதலின் அதுவே யமையும் வேறு மோரறிவிப்பானேக் கோடன் மிகையாமாலெனின்,—அற் றன்று; பங்கயத்தின தலர்ச்சிக்குப் பங்கயமேயன்றி இரவி யும் உழவு முதலிய செயல்களின் பயனுக்கு அச்செயலே யன்றி வினைநிலமுங் காரணமாதல் கண்டாமன்றே, அவை போல் அவ்வக்கன்மம் பக்குவமாதலும் பயன்றருதலும் வேறோரிறைவனே யின்றியமையாமையின் மிகையாதல் யாண்டையதென்பதாம்.

குறைவதிகங்கடத்தங்கன்மமெனக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தார்.

செயல் ஆகுபெயர்.

முறைதருசெயல், உழுதல் எருப்பெய்தல் வித்தல் கட்டல் நீர்கால்யாத்தல் காத்தலென்றிம்முறையாற்றராப்படுஞ் செயலென்க.

அற்றேற், கன்மத்தோடுங் கூடியவுயிரே அதற்குக் காரண மாதலமையும் வேறுமோ ரிறைவனென்றுக் கென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (2)

அறிந்திடு மான்மா வொன்றை யொன்றிலு றிதலானு
மறிந்தவை மறத்தலானு மறிவிக்க வறிதலானு
மறிந்திடுந் தன்னை யுந்தா னறியாமை யானுந் தானே
யறிந்திடு மறிவ னன்று மறிவிக்க வறிவ னன்றே.

சுப் — பதவுரை

அறிந்திடும் ஆன்மா – அறியப்பட்டுவரும் இவ்வுயிர், —ஒன்றை ஒன்றிலுல் அறிதலானும் – ஒவ்வொரு விட யத்தை ஒவ்வோரிந்திரியத்தால் அறிதலானும்,–அறிந்தவை

மறத்தலானும் – அறியப்பட்டவற்றை மீள மறத்தலானும்,—அறிவிக்க அறிதலானும் – (ஒருவன்) உணர்த்த உணர்தலானும்,—அறிந்திடும் தன்னையும் தான் அறியாமையானும் - இவ்வாறறிகின்ற தன்னையும் தான் அறியாமையானும்,—தானே அறிந்திடும் அறிவன் அன்றும் – தானே அறியும் முதல்வன்போலச் சுதந்திர அறிவின்றி,—அறிவிக்க அறிவன் அன்றே – அறிவிக்க அறியுந்தன்மைத்து என்க.

சிவ — பொழிப்புரை

எ-து இந்நான்கேதுக்களானும் அறிவுங்கழ்ச்சிக்குப் பொறிபுலன் முதலியவற்றோடொப்ப வேறுகார்ணத்தையவாய்நிற்பதன்றி உயிர்தானேயறிபவற்றன் றென்பதாம்.

ஒன்றையொன்றினு லறிதலே யதனியல்பென்பாரை நோக்கி அறிந்தவை மறத்தலானுமென்றும், அறிந்ததனைப் பின்னறிய வேண்டாமையின் மறக்கலாயிற்றென்பாரைநோக்கி மீளவறிவிக்க வறிதலானுமென்றும், எவ்வாற்றினு மறிதலிற் றிரிபில்லையன்றே யென்பாரை நோக்கி அறிந்திடுந்தன்னையுந் தானறியாமையானு மென்றுங் கூறினர்.

இதனானே சாங்கியர்மதம் பரிகரித்து முதற்கூற்றை வலியுறுத்தவாறுமாயிற்று. விதந்து கூறுது ஒன்றை யொன்றினு லெனப் பொதுப்படக்கூறியது மதன்பொருட்டு.

அற்றேல், ஈண்டொன்றினுலெனப்பட்ட மாயேயமே யதற்கமையும் இறைவனெற்றுக்கென்பாரைநோக்கியெழுந்ததுவருஞ் செய்யுளென்பது. (3)

கருவியாற் பொருளாற் காட்டாற் காலத்தாற் கருமந் தன்னு
ளுருவினு ளளவா னூலா லொருவரா லுணர்த்த லானு
மருவனு யுண்மை தன்னி லறியாது நிற்ற லானு
மொருவனே யெல்லாத் தானு முணர்த்துவ னருளி னுலே.

சுப — பதவுரை

கருவியால் – (உயிர்செலுத்தப்படும்) ஆன்மதத்துவத்தானும்,—பொருளால் – தாத்துவிகத்தானும்,—காட்டால் – (உயிரின் அறிவிச்சைசெயல்களை) விளக்குவனவாய கலைமுதலியவற்றானும்,—காலத்தால் – (கன்மத்தை முந்தாது பிந்தாது வரையறுத்துச் செலுத்துங்) காலதத்துவத்தானும்,—கருமந்தன்னால் – கன்மத்தை ஏறுது குறையாது நிறுத்து நியதிதத்துவத்தானும்,—உருவினால்–உடம்பானும்,—அளவால் – பிரமாணங்களினானும்,— நூலால் – நூல்கட்குக்காரணமாகிய நால்வகை வாக்குக்களானும்,—ஒருவரால் உணர்த்தலானும் – ஒரு சேதனப் பொருள் (ஒரு விடயத்தை) உணர்த்த (உயிருணர்த) லானும்,—உண்மை தன்னில் அருவனுய் அறியாது நிற்றலானும் – (அல்லுழித்) தன்னுண்மையில் அருவனு யுணராமையானும்,–எல்லாத்தானும் அருளினுலே உணர்த்துவன் ஒருவனே – இவை யனைத்தையுங் கொண்டு கூட்டி அருளால் அறிவிப்பானொரு சேதனன் (வேறு வேண்டப்படுமாகலான் இறைவனே யின்றி அறிதல் அமையாது) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *கருவிமுதலியவெட்டும் ஒருசேதனப்பொருளுங் கூடி நின் றொருவிடயத்தை யுணர்த்த வுயிருணர்தலானும், அல்லுழி யுணராமையானும், இவையனைத்தையுங் கொண்டு*

கூட்டி யறிவிப்பானொரு சேதனன் வேறு வேண்டப்படுமா கலான், இறைவனேயின்றி அறிதலமைபாதென்பதாம்.

கருவி உயிர்செலுத்தப்படு மான்மதத்துவம்.

பொருள் தாத்துவிகம்.

காட்டு உயிரினறிவிச்சைசெயல்களே விளக்குவனவாய கலை முதலியன.

காலம் கன்மத்தை முந்தாது பிந்தாது வரையறுத்துச் செலுத் துங் காலதத்துவம்.

கருமம்கன்மத்தையேறுதுகுறையாதுநிறுத்து நியதிதத்துவம்.

உரு உடம்பு.

அளவை பிரமாணம்.

நூல் நூல்கட்குக் காரணமாய நால்வகை வாக்கு.

ஒருவிடயத்தை யறிதற்கண் இவற்றுளொன்றையின்றியு மமையாமை கண்டுகொள்க.

கருமமும் நூலும் ஆகுபெயர்.

இயற்பெயர்ப்பொருளாக வைத்துரைப்பாருமுளர்.

தன்னுண்மை உண்மையெனத் தலைக்குறை.

உண்மையி லொன்றுமிலனுதல்பற்றி அருவனென்றார்.

இவை மூன்றுசெய்யுளானும், முறையே கன்ம மூ முயிரு மாயேயமு மென்னு மிவையே ஆண்டைக்கமையுமென்னு மாருகதர் மீமாஞ்சகர் சாங்கியர் முதலியோரை மறுத்துப் பாரிசேடவளவை யான் அறிதருஞ் சிவனே யெல்லாமறிந்தறிவித்து நிற்றல் வலி யுறுத்தப்பட்டது. (4)

கருவியும் பொருளுங் காட்டும் காலமுங் கருமந் தானு
முருவமு மளவு நூலு மொருவரு முணர்த்த லின்றி
யருவனு யுலக மெல்லா மறிந்தவை யாக்கி வேரு
யொருவனே யுயிர்கட் கெல்லா முயிருமா யுணர்த்தி நிற்பன்.

சுப — பதவுரை

ஒருவனே – இறைவன்,—கருவியும் பொருளும் காட்டும் காலமும் கருமந்தானும் உருவமும் அளவும் நூலும் ஒருவரும் உணர்த்தல் இன்றி அருவனுய் வேருய் – கருவி முதலியன கூடியாதல் மேலொரு சேதனப்பொருளாதல் அறிவித்தலின்றித் தானே தமியனுய்,—உலக மெல்லாம் அறிந்து – (கேவலத்தின்) உயிர்களெவைக்கும் சூக்கும வைந்தொழில் செய்தும்,—அவை ஆக்கி – (பின்னர்) அவைகட்குச் சிருட்டி (யாதிதூலவைந்தொழில்) செய்தும்,—உயிர்கட்கெல்லாம் உயிருமாய் உணர்த்தி நிற்பன் - (பின்பும்) அவ்வான்மாக்கட் கெல்லாம் (முதலவத்தை யடைதரு மிடத்தே) உயிருமாய் அதிசூக்கும வைந் தொழில் செய்து நிற்பன் என்க

சிவ — பொழிப்புரை

எ-து. இறைவனுக்குக் கருவிமுதலியன கூடி அறிவு நிகழ வேண்டாமையின். உயிர்கட்குப்போலத் தனக்கு மேலொருவ னவாவப்படும்போ லுமென்னு மநவத்தைக்கிட மின்றித் தானேதமியனு யறிந்துமாக்கியு முணர்த்தியு நிற்கு மென்பதாம்

உலகெலாமறிந்தென்றது கேவலத்திற் சூக்குமவைந்தொழில் செய்தன்மேற்று.

ஆக்கியெனவே இனம்பற்றி ஏனைகான்கு தொழில்களு முடன் கொள்ளப்படும்.

அவை தூலவைத்தொழிலென்பது.

உணர்த்திநிற்பனென்றது முதலவத்தையடைதரு மிடத்தே செயற்பாலனவாய் ஈண்டெடுத்துக்கொண்ட வதிசூக்குமவைத் தொழின் மேற்று.

அறிதலு மாக்குதலுமாகிய இருதிறத் தைத்தொழிலும் முதல்வன் செயலாதன் மேற்கூறிப் போந்தமையின் அவைபோ லிவையும் முதல்வன் ருழிலேயாமென்பார், அறிந்தாக்கி யுணர்த்தி நிற்பனென உடன் கூறினர்.

இதனனே மேற்கூறியதபற்றி அவத்தையின்ருமாறு கூறப் பட்டது.

அற்ருயினும், கருவியறிதலால் வரும் பயன் உயிர்க்காயவாறு போல உயிரறிதலால் வரும் பயனும் அவனே டுவமிக்கப்படு மிறை வனுக்காவான் செல்லும், செல்லவே யிறைவனும் பந்த முறுவ னெனப்பட்டு வழுவாமாகலின் இறைவன் உயிர்போ லறிவிப்ப னென்றல் இழுக்காம்போலு மென்னு மவ்வாதிகளே தோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது (5)

இறைவன்றன் சந்நி திக்க ணுலகின்றன் சேட்டை யென்னு மறைகளு மறந்தாய் மாயை மருவிடான் சிவனை வன்க ணுறைதரா தசேத னத்தா லுருவுடை யுயிர்கட் கெல்லா நிறைபரன் சந்நி திக்க ணீடுணர் வுதிக்கு மன்றே.

சுப் — பதவுரை

இறைவன்றன் சந்நிதிக்கண் உலகின்றன் சேட்டை யென்னும் மறைகளும் மறந்தாய்-இறைவன் சந்நிதியா

லன்றி உயிர் சேட்டியாமைக்கு (மேற்காட்டிய பாரிசேட வளவையே யன்றி) ஆகமவளவையும் (இனிது விளங்கக் கிடத்தலின் அதனையும்) அறியா(து மறித்து மறித்துப் பிணங்குகின்ற) பேதாய், —எல்லாம் நிறைபரன் சந்நிதிக் கண் நீடு உணர்வு உருவுடை உயிர்கட்கு உதிக்கும் அன்றே – எல்லாவற்றினு நிறைந்து நின்ற இறைவன் சந் நிதியின்கண்ணே நிகழும் அவ்வறிவின் பயன் (வினைக் கீடாக வரும்) வடிவுடைய உயிர்கட்கே உண்டாம்,— சிவனவன்கண் உறைதராது – (அதுவன்றி) இறைவனுக் காதல் செல்லாது,—அசேதனத்தால் மாயை மருவிடான் - சடமாகிய உலகம் (அவனெதிர்) முனைத்துநிற்ற லாற் ருமையால் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து இறைவனலன்றி யுயிர் சேட்டியாமைக்கு மேற் காட்டிய பாரிசேடவளவையேயன்றி ஆகமவளவையு மினிது விளங்கக் கிடத்தலின் அதனையுமறியாது மறித்துமறித்துப் பிணங்குகின்றபேதாய், எல்லாவற்றினுநிறைந்துநின்றவிறை வன் சந்நிதியினிகழுமவ்வறிவின் பயன், வினைக்கீடாய் வரும் வடிவுடைய உயிர்கட்கே யுண்டாமதுவன்றி இறைவனுக் காதல் செல்லாது, சடமாகிய வுலகம் அவனெதிர் முனை த்துநிற்ற லாற்ருமையா லென்பதாம்.

மறந்தாயென்பது விளியுருபேற்ற பெயர்.

மாயையும் உணர்வும் ஆகுபெயர்.

உயிர்கட்கு உதிக்குமென வியையும்.

பிரிநிலையேகாரம் விரித்துரைக்க.

ஐம்பொறிபோலன்றி உணர்தற்பய னுயிர்க்கேயாதற்கு ஏதுக் கூறுவார், உருவுடையுயிரென விசேடித்தார். சங்நிதிக்க ணீடுணர் வுதிக்குமென்றது மதன்பொருட்டு. "வினையாற் கண்டறிந்து நிற்குங்கா-ணெண்ணன் சிவனசத்தை யின்று" (சிவஞானபோதம், ஐந்தாஞ் சூத்திரம், செ-5 என்னுர் முதனூலாசிரியரும்.

இதனனே அறிவித்தல்பற்றி இறைவனுக்குத் தடக்கின்மை கூறப்பட்டது. (6)

உலகமே யுருவ மாக யோனிக ளுறுப்ப தாக
விலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
வலகிலா வுயிர்ப்பு லன்கட் கறிவினை யாக்கி யைந்து
நலமிகு தொழில்க ளோடு நாடக நடிப்ப னுதன்.

சுப் — பதவுரை

(புருடன் உடம்பு முதலியவற்றைக் கொண்டுநின்று உணருமாறுபோல) நாதன் – இறைவனும்,– உலகமே உருவமாக – (தனக்கு) இருநூற்றிருபத்துநாலு புவனமும் திருமேனியாகவும்,—யோனிகள் உறுப்பதாக – எண்பத்துநான்குநூருயிரம் யோனிபேதங்களும் அவயவங்களாகவும்,—இலகு பேர் இச்சா ஞானக் கிரியை உட்கரணமாக – மிக்க விளக்கமுடைய இச்சா ஞானக் கிரியைகள் உட்கரணமாகவும் (கைக்கொண்டு)—அலகு இலா உயிர்கட்குப் புலன் அறிவினை ஆக்கி–எண்ணிறந்த வுயிர்களிடத்தே அறிவுக்கறிவாய் நின்றுணர்த்தி,—நலம் மிகு தொழில்கள் ஐந்தோடும்–(அங்ஙனம் உணர்த்துதலாகிய) நன்மை மிகுந்த அதிசூக்கும ஐந்தொழில்களோயுமே – நாடகம் நடிப்பன் - நாடகமாகச் செய்தருளுவன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. புருடன் உடம்புமுதலியனவற்றைக் கொண்டு நின்றுணருமாறுபோல இறைவன் உலகமுதலியனவற்றைக் கைக்கொண்டு நின்றுணர்த்துவனென்பதாம்.

எனவே, தன் உடல் பொறி காரணங்களைச் செலுத்துதற்கண் உயிர்க்கு விகாரமில்லாமைபோல இறைவனுக்கதுபற்றி விகாரமில்லை யென்றவாருயிற்று.

புலன் ஆகுபெயர்.

இறைவன் ஐந்தொழில் செய்தல் உயிர்கள்போலக் காரணத்தானன்றிச் சங்கற்பமாத்திரையாற் செய்வதென்பது தோன்ற, நாடக மடிப்பனென்றார்.

ஈண்டைந்தொழிலென்றது அறிவித்தற்கட்படு மதிகூக்கும வைந்தொழிலை.

இதனுனே அதுபற்றி விகாரமின்மை கூறப்பட்டது.

அற்றேல், இவை கலமிகுதொழிலாமாறு யாங்ஙன? மென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (7)

தெரிந்துகொண் டொரோவொன் ருகச் சென்றைந்து புலனும் பற்றிப், புரிந்திடு முணர்வி னேடும் போகமுங் கொடுத்தி யோனி, திரிந்திடு மதுவுஞ் செய்து செய்திகண் டுயிர்கட் கெல்லாம், விரிந்திடு மறிவங் காட்டி வீட்டையு மளிப்பன் மேலோன்.

சுப — பதவுரை

மேலோன் – இறைவன்.—ஐந்தும் பற்றிப் புலன் ஒரோவொன்ருகத் தெரிந்து கொண்டு சென்று – (இங்ஙனம்) ஐம்பொறி வழியாக விடயங்களில் ஒவ்வொன்ருக

அறிந்து செல்லுதற்கேதுவாகிய,—உணர்விஞ்ஞேடும் புரிந் திடும் – (ஏகதேச) வறிவை நிகழ்வித்து,—போகமும் கொடுத்து – (சிறு) போகங் கொடுத்து,—யோனி திரிந்திடு மதுவும் செய்து – பிறவியிற்படுத்து,—உயிர்கட்கெல் லாம் செய்திகண்டு – (அதனுல்) உயிர்களெவைக்கும் பருவ முதிர்வித்து,—விரிந்திடும் அறிவும் காட்டி – வியா பகவறிவை நிகழ்வித்து,—வீட்டையும் அளிப்பன் - பர போகமுங் கொடுத்தருளுவன் என்க,

சிவ — பொழிப்புரை

எ-து. *இறைவன் இங்ஙனமேகதேசவறிவை நிகழ்வித் துச் சிறுபோகங் கொடுத்துப் பிறவியிற் படுத்துதல், அத னுற் பருவமுதிர்வித்து வியாபகவறிவை நிகழ்வித்துப் பர போகமுங் கொடுத்தற்பொருட்டென்பதாம்.*

ஏகதேசவறிவு நிகழ்ந்தன்றிச் சிறுபோகநுகர்ச்சி செல்லாமை யும் வியாபகவறிவு நிகழ்ந்தன்றிப் பரபோகநுகர்ச்சி செல்லாமையு முணர்த்துவார், புரிந்திடு முணர்விஞ்ஞெடு போகமுங் கொடுத்தென் றும், விரிந்திடு மறிவுங் காட்டி வீட்டையு மளிப்பனென்றுங் கூறினர்.

இதனுனே தூலவைந்தொழிற்கட்படுவதாகிய அவ்வதிருக்கும வைந்தொழிற்குப் பயன் கூறப்பட்டது.

அற்றேனும், அதனுலிறைவனுக் காகக்கடவதென்னை? யென் பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (8)

அருளது சத்தி யாகு மரன்றனக் கருளா யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச் சிவமின்றிச் சத்தி யில்லை
மருளினை யருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்
கிருளினை யொளியா லோட்டு மிரவியைப் போல வீசன்.

சுப் — பதவுரை

அருளது அரன்றனக்குச் சத்தியாகும் – (அங்ஙனங் கொடுத்துக் காட்டி அளிப்பதாகிய அக்) கருணையும் இறைவனுக்கு (இயற்கைக் குணமெனப்படுஞ்) சத்தியாம்,—அருளே இன்றித் தெருள் சிவம் இல்லே அந்தச் சிவம் இன்றிச் சத்தி யில்லே – அவ்வருட்குணத்தையின்றிக் குணியாகிய தெருள் சிவம் இல்லே அச்சிவத்தையின்றி அருள் நீங்குதலில்லே (ஆதலால்),—கண்கட்கு இருளினே ஒளியால் ஓட்டும் இரவியைப்போல – கண்கட்குப் புறவிருளினைக் கிரணத்தால் ஓட்டிப் பிரகாசத்தினைச் செய்கின்ற ஞாயிறுபோல,—மன்னுயிர்க்கு மருளினை அருளால் வாட்டி அளிப்பன் ஈசன் – நிலேபெற்ற வுயிர்கட்கு மயக்கத்தினைத் தனதருளாலே நீக்கி அனுக்கிரகஞ் செய்வன் இறைவன் (அவனுக்கு அவ்வருட்குண மேம்படுதலின் வேருய் ஆண்டைக்காகக்கடவது பிறிதில்லே) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அங்ஙனங் கொடுத்துக் காட்டி யளிப்பதாகிய வக்கருணை இறைவனுக் கியற்கைக்குணமெனப்படுஞ் சத்தியாகலான், குணங் குணியை விட்டு நீங்காமையின் ஞாயிற்றிற்கொளிபோல இறைவனுக்கவ்வருட்குணம்மேம்படுதலின் வேருயாண்டைக்காகக்கடவது பிறிதில்லையென்பதாம்.*

இதனே அவ்வருள் இறைவனுக்கணிகலமாதல் கூறப்பட்டது. (9)

ஐந்தாஞ் சூத்திரம் முடிந்தது.

ஆகத்திருவிருத்தம் – 239.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் சுபக்கம்

இலக்கணவியல்

ஆருஞ்சூத்திரம்

திருவிருத்தம் — 9.



ஆருஞ்சூத்திரம்

இனி எஞ்சிநின்ற பதிப்பொருளுக் கிலக்கணம் ஆருஞ்சூத்திரத்திற் கூறுகின்றார்.

அறிவுறும் பொருளோ வீச னறிவுரு தவனே வென்னி
னறிபொரு ளசித்த சத்தா மறியாத தின்ரு மெங்குஞ்
செறிசிவ மிரண்டு மின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கு
நெறிதரு சத்தின் முன்ன ரசத்தெலா நின்றி டாவே.

சுப் — பதவுரை

ஈசன் அறிவுறும் பொருளோ அறிவுருதவனே என்னின் – சிவபிரான் சுட்டியறியப்படும் பொருளோ ஒருவாற்ரு னும் அறியப்படாத பொருளோவெனின்,—அறிபொருள் அசித்து அசத்தாம் – சுட்டியறியப்படும் பொருளாகிற் சடமாய் அழிந்துபோவதுமாம்,—அறியாதது இன்ரும் – ஒருவாற்ரு னும் அறியப்படாத பொருளாகிற் சூனியமாம்,—நெறிதரு சத்தின் முன்னர் அசத்தெல்லாம் நின்றிடாவே (ஆகலான்) – நெறியாகிய சிவஞானத்தால் விளக்கப்படுஞ் சிவத்தின் எதிர் அசத்தாகிய பாசஞானம் சிறிது நில்லாமையின்,—எங்கும் செறி சிவம் – எவ்விடத்தும் வியாபகமாகிய சிவம்,—இரண்டும் இன்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும் – அவ்விரண்டு தன்மையுமின்றிச் சித்துச் சத்தாகி நிற்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. சிவன் சுட்டியறியப்படும் பொருளாயிற் சடமாயழிந்து போவதுமாம்; ஒருவாற்ரு னு மறியப்படாத

பொருளாயிற் சூனியமாம்; நெறியாகிய சிவஞானத்தாற் றரப்படுஞ் சிவத்தினெதிர் அசத்தாகிய பாசஞ்ஞான ஞ் சிறிதுநில்லாமையிற் சிவம் அவ்விரண்டுதன்மையுமின்றிச் சித்துச்சத்தாகி நிற்குமென்பதாம்.

இருவர் கூற்றுய் வேறு முடிபுகோடலிற் றீணவழுவின்மை யுணர்க.

அசத்தெனவே அசித்தாதலு மடங்குமாயினும், விளங்குதற் பொருட்டு வேறு கூறினர். சித்தொடு சத்தாய் நிற்குமென்றது மது; சடத்தை நீக்குதற்பொருட்டுமாம்.

தருதல் ஈண்டு விளக்குதன்மேற்று.

ஆண்டுச் சத்தென்றது சிவமென்னுந் துணையாய் நின்றது.

அசத்து முன்னில்லாமையின் அறிபொருளாதலும் நெறிதரு சத்தாகலின் அறியாப்பொருளாதலு மில்லையென்பார், நெறிதருசத் தின் முன்னரசத்தெலா நின்றிடாவாகலா னிரண்டுமின்றி யென் றார். ஆகலானென்பது சொல்லெச்சம்.

முதல்வனுக்குத் தடத்தலக்கணமெனப்படும் பொதுவியல்பு மேற்புனருற்பவம் வருமாறுணர்த்துமுகத்தாற் பெறவிக்கப்பட்ட மையால் இது சொரூபலக்கண மெனப்படுஞ் சிறப்பியல் பெனக் கொள்க. அற்றாகலினன்றே யுண்மையதிகாரத்தைச்சார ஈண்டு வைத்தோதியதூஉ மென்க.

முதனூலாருஞ்சூத்திரத்திற் கெண்ட விருகூற்றொடும் அறியாததின்று மென்றதனை வேறுகோடலால் இச்செய்யுள் முக் கூற்றதாயவாறு கண்டுகொள்க. (1)

முதலதிகரணம்

ஆவதா யழிவ தாகி வருதலா லறிவு தானுந்
தாவலா லுலகு போகந் தனுகர ணாதி யாகி
மேவலான் மலங்க ளாகி விரவலான் வேறு மாகி
யோவலா லசத்தாஞ் சுட்டி யுணர்பொரு ளான வெல்லாம்.

சுப் —பதவுரை

அறிவுதானும் – சுட்டறிவாவது,—ஆவதாய் அழிவ தாகி வருதலால் – தோற்ற நாச மூறுதலானும்,—தாவ லால் – ஓரிடம்விட்டு ஓரிடந் தாவுதலானும், —தனுகரண உலகு போகம் ஆதியாகி மேவலால் – தனுகரண புவ னபோகமுதலியனவாய்ப் பல்வேறு வகைப்படுதலானும்,– மலங்களாகி விரவலால் – மலத்தோடு விரவுதலானும்,— வேறுமாகி ஓவலால் – வேறுபட்டொழிதலானும் (அசத் தேயாகலின்),—சுட்டி உணர்பொருள் ஆனவெல்லாம் அசத்தாம் –(இவ்வறிவினுற்) சுட்டி அறியப்பட்ட பொரு ளனைத்தும் அசத்தாவன (அன்றி அவற்றுள் ஒரு பொரு ளுஞ் சத்தாதல் செல்லாது) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *சுட்டறிவாவது காலத்தா னேகதேசமாதலும் இடத்தா னேகதேசமாதலும் அதுவதுவாய்ப் ப ல வே று வகைப்படுதலும் மலத்தொடு விரவுதலும் வேறுபடுதலு மாகிய இவ்வியல்புகளுடைமையான் அசத்தேயாகலின், இவ்வறிவினு லறியப்பட்டனவனைத்தும் அசத்தாவனவன்றி யவற்றுளொருபொருளுஞ் சத்தாதல் செல்லாதென்பதாம்.*

அசித்தாமென்பதூஉம் பாடம்.

உம்மை முன்னையது இழிவுசிறப்பு.

இதனுனே அறிபொருள்களி னெருசாரனவேயன்றி அனேத்து மசித்தாத லில்லேயென்னுந் தார்க்கிகரை நோக்கி அறிபொருளனேத் தும் அசத்தென்பது அவ்வறிவியல்புபற்றித் தெரித் துணர்த்தப் பட்டது. (2)

மண்டனில் வாழ்வும் வானத் தரசயன் மாலார் வாழ்வு
மெண்டரு பூத பேத யோனிக ளியாவு மெல்லாங்
கண்டவிந் திரமா சாலங் கனக்கழூ திரதங் காட்டி
யுண்டுபோ லின்றும் பண்பி லுலகினே யசத்து மென்பர்.

சுப் — பதவுரை

மண்டனில் வாழ்வும் – மண்ணுலகின் (அரசனுய்) வாழ்தலும்,—வானத்து அரசு அயன் மாலார் வாழ்வும் – விண்ணுலகின் இந்திரன் அயன் மால் முதலியோர் பதவி யைப் பொருந்தி வாழ்தலும்,—எண்தரு பூதபேத யோனி கள் யாவும் – பூதபரிணமமாகிய எண்பத்து நான்கு நூருயிர யோனிபேதங்க ளெவற்றினும் பொருந்தி வாழ் தலுமாய,—கண்ட எல்லாம் – காணப்பட்டன அனேத் தும்,—மா இந்திரசாலம் – (தோன்றும்பொழுதே இல்லை யாய் வேறுபடும்) பெரிய இந்திரசாலமும்,—கனு – (கடை போதலின்றி இடையே அழியப்படும்) கனக்காட்சியும்,— கழுதிரதம் – (ஒரு காரணங் காட்டி அழியப் படும்) பேய்த்தேரும் போல,—உண்டு போல் காட்டி – நெடுங் கால நிலேபெறுவன போலத் தோன்றி,—இன்றும் பண் பில் – (அங்ஙனம்) விரையக் கெட்டு மறைந்துபோ மியல்பு பற்றி,—உலகினே அசத்தும் என்பர் - அவற்றை அசத் தெனக் கூறுவர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து காணப்பட்டனவனைத்தும் இந்திரசால முதலியனபோல நெடுங்கால நிலைபெறுவனபோலத் தோற்றி யங்ஙனம் விரையக்கெட்டு மறைந்துபோ மியல்புபற்றி அவற்றை யசத்தென்ற லமைவுடைத் தென்பதாம்.

அசத்து மென்னு மும்மை பொருட்டன்மையாற் சத்தென்பது பட நின்ற வெதிர்மறை.

இந்திரசாலம் தோன்றும்பொழுதே இல்லையாய் வேறுவன வற்றிற்கும், கனாக்காட்சி கடைபோதலின்றி இடையே யழிவன வற்றிற்கும், கழுதிரதம் ஒரு காரணங்காட்டி யழிவெய்துவனவற்றிற் கும் உவமையாயின.

இதனானே சற்காரியவாதத்தில் அசத்தென வொன்றின்மை யின் ஈண்டறிபொருள் அசத்தென்ற லமையுமாறு யாங்ஙனமென்னுஞ் சாங்கியரை நோக்கி, அறிபொருள் அசத்தாமாறு உவமை யொடு படுத்துக் காட்டப்பட்டது.

இவை யிரண்டு செய்யுளும் அறிபொருளசித்தசத்தாமென்ற மூதற்கூற்றை வலியுறுத்தவாறு. (3)

இரண்டாமதிகரணம்

உணராத பொருள்சத் தென்னி னெருபய னில்லை தானும், புணராது நாமுஞ் சென்று பொருந்துவ தின்று மென்றுந், தணவாத கரும மொன்றுந் தருவது மில்லை வானத், திணரார்பூந் தொடையு மியாமைக் கெழுமயிர்க் கயிறும் போலும்.

சுப் — பதவுரை

உணராத பொருள் சத்தென்னின் ஒரு பயன் இல்லை - (அறிபொருள்போல) அறியப்படாத பொரு (ட்குத் தோற்றக்கேடு முதலியன இன்மையான் அத(னைச் சத் தெனக் கொண்டாற்படும் இழுக்கென்னை? யெனின் (அங் ஙனங் கொண்டதனால்) பெறக்கடவதோர் பயனில்லை யாம்,—என்றும் தானும் புணராது நாமும் சென்று பொருந் துவது இன்றும் – ஒரு ஞான்றும் அதுவும் பொருந்தாது நாமும் அதனோடு பொருந்துமாறு மில்லை,—தணவாத கருமம் ஒன்றும் தருவதும் இல்லை – அதனலாகக்கடவ தோர் நீங்காத செயலுமில்லையாம்,—வானத்து இணர் ஆர் பூந்தொடையும் யாமைக்கு எழுமயிர்க் கயிறும் போலும் - (ஆதலால்) ஆகாயப் பூவானியன்ற மாலையும் யாமை மயிரானியன்ற கயிறும் போல (உணராத பொருள்களின் வைத்தறியப்படுதலான் அது பொருளன்று) என்க.

சிவ — பொழிப்புரை

எ து. *அறிபொருள்போல அறியப்படாத பொருட் குத் தோற்றக்கேடுமுதலியன வின்மையான் அதனைச் சத் தெனக்கொண்டாற்படு மிழுக்கென்னையெனின்,—அங்ஙனங் கொண்டதனாற்பெறக்கடவதோர் பயனில்லை, ஒருஞான்றும் அதனோடெமக்கோரியைபுண்டாமாறு மில்லை, அதனலாகக் கடவதோர் செயலுமில்லையென்பது, ஆகாயப்பூவானியன்ற மாலை ஆமைமயிரானியன்ற கயிறுமுதலிய உணராத பொருள் களின் வைத்தறியப்படுதலான், அது பொருளன்றென் பதாம்.*

ஆகாயத்தினு மாமையினும் பூவு மயிரும் புலனுதலன்றி அதிரூக்குமமாயுள, அவற்றுணுகற்பாலனவு முளவெனக்கொண்டு

பிணங்குவாருளராயினும், அவரை மறுத்தற்பொருட்டு அறிந்து செய்வதாரு வினைமுதலே யின்றியமையாதகாரியப்பொருண் மேல் வைத்துக் கூறினர்.

இதனனே அறியாதது உண்டென்றற்படு மிழுக்கென்னை யென்னு மாணக்கனை நோக்கி இரண்டாங்கூறு வலியுறுத்தப் பட்டது.

அற்றேல், இவ்விரண்டுமின்றிநிற்கும் பொருளை அநிருவசனீய மென்னுது சித்தொடுசத்தாய் நிற்குமென்றது யாங்ஙன? மென்னும் மாயாவாதியை நோக்கியெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (4)

மூன்றுமதிகரணம்

தத்துவஞ் சத்த சத்துச் சதசத்து **மன்றென் றுலை** *ணுப்த்துணர்ந் துண்டோ* **வின்றே வென்றவர்க் குண்டென் றேதில்,** **வைத்திடுஞ் சத்தை** *யாகு* **மனத்தொடு வாக்கி** *றந்த,* **சித்துரு** *வதுவ சித்தா மனத்திறை றேர்வ* **தெல்லாம்.**

சுப் — பதவுரை

தத்துவம் சத்து அசத்துச் சதசத்தும் அன்றென்றல் என் – (மேற்கூறிப்போந்த இருதிறனுமல்லாத) பிரமப் பொருளாவது உள்பொருளுமன்று இல்பொருளுமன்று இரண்டுமாவதுமன்று (வேறுமன்று) என்று அநிர்வசன மாகக் கூறிற்படு மிழுக்கென்னையெனின் (நன்று சொன் னாய்),—உய்த்து உணர்ந்து உண்டோ இன்றே என்ற வர்க்கு – (அங்ஙனம்) உய்த்துணர்ந்து (அநிர்வசனமாய்க் கூறப்படும் பொருளொன்று) உண்டோ இல்லையோவென

வினையினர்க்கு,—உண்டென்று ஓதில் வைத்திடும் சத்தை யாகும் – (இல்லையெனில் உணராத பொருட்கோதிய குற்றமாமென்றஞ்சி) உண்டென்று கூறுவாயாகிற் (பிரமம்) உள் பொருளாவதாம் (அன்றி அநிர்வசனமாதலின் றென்பதற்கு உன் வாய் மொழியே சான்றாயிற்று),—மனத்திலை தேர்வதெல்லாம் அசித்தாம் – (உள்பொருளாயின் அறியப்படுகவெனில்) சுட்டுணர்விற் பட்டனவெல்லாஞ் சடமாய் அழிவெய்தி விடுமாதலால்,—மனத்தொடு வாக்கு இறந்த சித்துரு அது – மனவாக்குக்களாய சுட்டுணர் வினைக் கடந்துநின்ற சேதனப் பொருளே அது என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேற்கூறிப்போந்த இருதிறனுமல்லாத பிரமப் பொருளாவது உள்பொருளுமன்று இல்பொருளுமன்று இரண்டுமாவதுமன்று வேறுமன்று என்று அநிர்வசனமாகக் கூறிற் படுமிழுக்கென்னை யெனின்,—நன்று சொன்னாய்; அங்ஙனம் அநிர்வசனமாய்க் கூறப்படும் பொருளொன்று உண்டோவில்லையோவென வினையினர்க்கு இல்லையென்னில் உணராத பொருட்கோதிய குற்றமாமென்றஞ்சி உண்டென்று கூறுவாயாகின், பிரமமுள்பொருளாவதன்றி அநிர்வசனமாதலின்றென்பதற்கு உன் வாய்மொழியே சான்றாயிற்று உள்பொருளாயினறியப்படுகவெனிற் சுட்டுணர்விற் பட்டனவெல்லாஞ் சடமாயழிவெய்திவிடுமாதலாற் சுட்டுணர்வினைக் கடந்துநின்ற சேதனப் பொருளேயது வென்பதாம்.

தேர்வதெல்லா மென்பது "உள்ளியதெல்லா முடனெய்தும்" (திருக்குறள், வெகுளாமை, செ – 9,) என்றாற்போல ஒருமைப் பன்மை மயக்கம்.

அற்றேல், அறிபொருளுமன்று அறியாததுமன்றென விடுப் பதூஉம் சத்து அசத்துச் சதசத்துமன்றென்பதுபோல் அநிர்வச னமாய் முடியுமன்றே யென்னுமவ்வாதியை நோக்கி அவ்வா சங்கை நீக்குதற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (5)

அறிபொரு ளசித்தாய் வேறு மறிவுருப் பொருள்சத் தென்னி னறிபவ னறியா னகி லதுவின்று பயனு மில்லை யறிபவ னருளி னலே யநந்நிய மாகக் காண்ப னறிபொரு ளறிவாய் வேறு மறிவரு ளுருவாய் நிற்கும்.

சுப் — பதவுரை

அறிபொருள் அசித்தாய் வேறும் – அறியப்பட்ட பொருள் சடமா யழிதலுமாம்,—அறிவுருப் பொருள் சத்தென்னின் – அறியப்படாத (பொருட்குத் தோற்றக் கேடு முதலியன இன்மையான்) அதனைச் சத்தெனக் கொள்ளின்,—அறிபவன் அறியானகில் அது இன்று பய னும் இல்லை – அறியவல்ல ஆன்மாவால் (அறிதல் வேண் டும் அஃது) இன்றேல் அங்ஙனங் கொண்ட பொருளும் இல்லையாய் (அதனற் பெறக் கடவதோர்) பயனுமில்லை,— அறிபவன் அநந்நியமாக அருளினலே காண்பன் – (ஆக லான் அவ்விருதிறனும் இழுக்குப்படுமென்னுமதனை) அறிய வல்லானெருவன் (அச்சிவப்பொருளை) அதனே டொற்றித்துநின்று அவ்வருளானே அறிவன்,—அறி பொருள் அறிவாய் வேறும் அறிவு அருள் உருவாய் நிற் கும் – (அங்ஙனம்) அறியப்படும் பொருளாகிய அது தான் அவ்வறிவேயாய் வேறுமாய் உடனுமாய் நிற்பதோரியல் பிற்றும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேற்கூறிப்போந்தவாற்றால் அவ்விருதிறனு மிழுக்குப் படுமென்னுமதனை யறியவல்லாரெருவனுக்கு அச்சிவப்பொருளதனை டொற்றித்து நின்று அவ்வருளா னே யறியற்பாலதாம், அங்ஙன மறியப்படும்பொருளாகிய வதுதான் அவ்வறிவேயாய் வேறுமா யுடனுமாய் நிற்பதோரி யல்பிற்றாகலானென்பதாம்.

அறியுமாறிது வென்பது பாரிசேடப் பிரமாணத்தா னுணர்த் தவார், 'அறிபொரு ளசித்தாய் வேறு மறிவுருப் பொருள்சத் தென்னி னறிபவ னறியாஞகி லதுவின்று பயனுமில்லை'யென மேற் போந்ததனை அனுவதித்துக்கொண்டு கூறினர்.

கிழவனறிந்தான் கிழத்தி யறிந்திலளென்புழிப்போல அதனை யென்னு முருபேற்ற சுட்டுப்பெயர் வருவித்துரைக்க.

அறிவருளுருவாய் நிற்குமெனக் காரணத்தைக் காரியமாகவுப சரித்தார்; உடனுய் நின்றன்றி யறிவை யருளுதல் செல்லாமையின் அஃததற்குக் காரணமாதலறிக.

அகங்கியமாயவழிக் காண்பானும் காட்சிப்பொருளாமாறும் அருளானுபகரிக்கப்படுமாறும் யாங்ஙனஞ் செல்லுமென்பாரை நோக்கி, அறிவேயாதலும் வேறுதலும் உடனுதலுமாகிய முத்திற முந்தன்கட்டோன்ற நின்றதோ ரத்துவித வியைபுடைமையின் அவ்வாறுதல் செல்லுமென்பார், அறிபொரு ளறிவாய் வேறு யறிவருளுருவாய் நிற்குமியல்பு முடன்கூறினர்.

இவையிரண்டு செய்யுளானும் மாயாவாதிமதம்பற்றி யாசங்கித் துப் பரிகரித்து மூன்றுங்கூறு வலியுறுத்தப்பட்டது.

அற்றேல், அருளா லகங்கியமாகக்காண்ட லெற்றுக்கு? யோக பாவனை செய்து காணவே யமையுமென்னும் பாதஞ்சலரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (6)

பாவிப்ப தென்னிற் பாவம் பாவகங் கடக்கிற் பாவம்
பாவிக்கு மதுநா னென்னிற் பாவகம் பாவங் கெட்டுப்
பாவிப்ப தென்னிற் பாவம் பாவனை யிறந்து நின்று
பாவிக்கப் படுவ தாகும் பரம்பர னருளி னாலே.

சுப் — பதவுரை

பாவிப்பதென்னின் பாவம் – (நீ கூறும் பாவனையாவது) கருவிகளோடு கூடி நின்று செய்வதெனிற் சகலமாய்ப் போகலானும்,—பாவகம் கடக்கின் பாவம் – கருவிகளை நீங்கி நின்று பாவிப்பதென்னின் அப்பொழுது கேவலம் வந்து தலைப்படுமாகலானும்,—பாவம் கெட்டுப் பாவிப்ப தென்னின் பாவம் – இரண்டு மின்றிப் பாவிப்ப தெனின் அஃதநிர்வசநீயமெனப்பட்டுப் பாழாய் முடியுமாகலானும்,—பாவிக்கும் அதுநானென்னின் பாவகம் – (அவ்வாறன்றிப் பாவனைக்கெய்தாத பொருளை எய்தியதாக வைத்துப்) பாவிக்கும் பொருள் யானென்று தன்மேல் வைத்துப் பாவிப்பதென்னில் அதனை வதோர் பயனில்லையாகலானும்,—பாவனை இறந்து நின்று பரம்பரன் அருளினாலே பாவிக்கப்படுவதாகும் – (அப்பாவனை யனைத்தும் நாடகமாத்திரையே யாமாகலான் மேற்கூறியவாறு) அநநியமாய் நின்று அப்பரம்பரன் அருளாற் காண்டலே ஈண்டைக்குரிய பாவனையாவதன்றிப் பிறிதில்லை என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *நீ கூறும் பாவனையாவது, கருவிகளோடுங் கூடி நின்று செய்வதெனிற் சகலமாய்ப் போகலானும், கருவிகளை*

நீங்கி நின்று பாவிப்பதென்னில் அப்பொழுது கேவலம் வந்து தலைப்படுமாகலானும், இரண்டுமின்றிப் பாவிப்பதென்னில் அஃதநிர்வசனீயமெனப்பட்டுப் பாழாய் முடியுமாகலானும், அவ்வாறன்றிப் பாவனைக்கு எய்தாத பொருளே யெய்தியதாக வைத்துப் பாவிக்கும் பொருள் யானென்று தன்மேல் வைத்துப் பாவிப்பதென்னில் அதனைவதோர் பயனில்லையாகலானும், அப்பாவனையனைத்தும் நாடகமாத்திரையேயாமாகலான் மேற்கூறியவாறு அங்ஙியமாய் நின்று அவ்வருளாற் காண்டலே யீண்டைக்குரிய பாவனையாவதன்றிப் பிறிதில்லையென்பதாம்.

பாவிக்குமதுகானென்னிற் பாவகமென்பதனை இதுதிக்கண் வைத்துரைக்க.

பாவம் பாவகம் நாடகமென்பன வொருபொருட்கிளவி.

இதனுனே பாதஞ்சலர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து மேலது வலியுறுத்தப்பட்டது.

அற்றாயினும், பரம்பானருளினுலே பாவிக்கப்படுவ தென்னுது மலமாசு தீர்ந்தவழிச் சிவத்தோடொப்பதாய வுயிரறிவே அதனை யறியுமென்றுற் படுமிழுக்கென்னை? யென்னும் சமவாதசைவரை நோக்கியெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (7)

அங்ஙிய மிலாமை யானு மறிவினு ணிற்ற லானு
முன்னிய வெல்லா முண்ணின் றுணர்த்துவ னுத லானு
மென்னதி யானென் றேது மிருஞ்செருக் கறுத்த லானுந்
தன்னறி வதனுற் காணுந் தகைமைய னல்ல னீசன்.

சுப — பதவுரை

ஈசன் அங்ஙியம் இலாமையானும் அறிவினுள் நிற்றலானும் உன்னிய வெல்லாம் உள் நின்று உணர்த்துவன் ஆத

லானும் – (அச்)சிவம் ஒன்றுய் வேறுய் உடனுமாய் நிற்ப தொன்றுகலானும்,—யான் என்னது என்று ஓதும் இரும் செருக்கு அறுத்தலானும் – (அந்நிலை) அறிவானும் அறி பொருளும் அறிவுமெனப் பகுத்தறிய வாராமையானும்,– தன் அறிவதனுல் காணும் தகைமையன் அல்லன் – (அஃது) உயிரறிவாலறியப்படுவதொன்றன்று என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *அச்சிவம் ஒன்றுய் வேறு யுடனுமாய் நிற்ப தொன்றுகலானும், அந்நிலை அறிவானு மறிபொருளு மறிவு மெனப் பகுத்தறிய வாராமையானும், அஃதுயிரறிவா லறி யப்படுவதொன்றன்றென்பதாம்.*

உன்னியவெல்லா முண்ணின்றுணர்த்துவனென்பதற்கு மேல் அறிவருளுருவாய் நிற்குமென்பதற்கு உரைத்தாங்குரைக்க.

செருக்காலுண்டாகிய பகுத்துணர்வைச் செருக்கென வுப சரித்தார்.

அற்றேல், அம்முத்திறம் ஆண்டுள்ளென்ப தெற்றுற்பெறுது? மென்னுமவரைநோக்கி யஃதுணர்த்துதற் கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. (8)

ஒன்றெனு மதனு லொன்றென் றுரைப்பதுண் டாகையாலே
நின்றனன் வேறுப்பத் தன்னி னீங்கிடா நிலைமை யாலே
பின்றிய வுணர்வுக் கெட்டாப் பெருமைய னறிவி னுள்ளே
யென்றுநின் றிடுத லாலே யிவனவ னென்ன லாமே.

சுப் — பதவுரை

ஒன்றெனு மதனுல் ஒன்றென்று உரைப்பது உண்டு ஆகையாலே வேறுய் நின்றனன் – சிவமும் உயிரும் ஒன் றென்பாரை நோக்கி அங்ஙனம் அறிவதொரு பொருள்

உண்டென்பதுபற்றி வேரூய் நிற்றல் பெற்றும்,—தன்னின் நீங்கிடா நிலைமையாலே பின்றிய உணர்வுக்கு எட்டாப் பெருமையன் – (வேறென்பாரை நோக்கி) அறிவுக்கறிவு பிரிந்து தோன்றுமைபற்றி வேறென்னும் அறிவுக்கெட்டாது உடனுதல் பெற்றும்.—அறிவின் உள்ளே என்றும் நின்றிடுதலாலே இவன் அவனென்னலாமே -(அவ்வளவே கூறுவாரை நோக்கி) அவ்வறிவினுள்ளாக எஞ்ஞான்றும் (நீர் நிழல்போல் ஒற்றித்து) நிற்றல்பற்றி உயிரே சிவமெனும்படி ஒன்றுதல் பெற்றும் (ஆகலான் அப்பெற்றித்தாய அத்துவிதநிலையை அருளினாலே அநந்நியமாகக் காண்டலே தக்கது) என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. சிவமுமுயிருமொன்றென்பாரை நோக்கி அங்ஙன மறிவதொருபொருள் உண்டென்பதுபற்றி வேரூய் நிற்றல் பெற்றும், வேறென்பாரை நோக்கி அறிவுக்கறிவு பிரிந்து தோன்றுமைபற்றி வேறென்னுமறிவுக்கெட்டாது உடனுதல் பெற்றும், அவ்வளவே கூறுவாரைநோக்கி அவ்வறிவினுள்ளாக நீர்நிழல்போலொற்றித்து நிற்றல்பற்றி உயிரே சிவமெனும்படி ஒன்றுதல் பெற்றும்; ஆகலான் அப்பெற்றித்தாயவத்துவிதநிலையை யருளினாலே யநந்நியமாகக் காண்டலே தக்கதென்பதாம்.

இவை யிரண்டுசெய்யுளானுஞ் சிவசமவாதி மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து மேலது வலியுறுத்தப்பட்டது. (9)

ஆருஞ்சூத்திரமுடிந்தது.

ஆகத் திருவிருத்தம் – 248.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் சுபக்கம்

சாதனவியல்

ஏழாஞ்சூத்திரம்

திருவிருத்தம் — 4.

சாதனவியல்

ஏழாஞ்சூத்திரம்

காலாஞ் சூத்திரமுதலிய மூன்றினும் பொருளியல்பு கூறிய வாசிரியர், நிறுத்தமுறையானே, வேண்டுஞ்செய்தி முறைமை யெனப்படுஞ் சாதனங்களதியல்பு மூன்று சூத்திரத்தாற் கூறுவான் றொடங்கினர். அவற்றுள், மேற்கூறிப்போந்த மும்பொருள்களுட் சாதித்துப் பெறுதற்குரிய வதிகாரமுடைய நிதுவென்பது பாரி சேடவளவையின் வைத்தணர்த்தி தற்கெழுந்தது ஏழாஞ்சூத்திரம்.

அனைத்துஞ்சத் தென்னி னென்றை யறிந்திடா தசத்தா லென்னின், முனைத்திடா தசத்துச் சத்தின் முன்னிரு விரவி முன்போ, னினைப்பதிங் கசத்தே யென்னிற் சத்தின் முன் னிலாமை யானுங், தனைக்கொடொன் றுணர்த லானுந் தானசத் துணரா தன்றே.

சுப — பதவுரை

சத்து அனைத்தும் (அறிவது) என்னின் – (மேலைச் சூத்திரத்து வரைசெய் துணர்த்திய சத்தசத்துக்களைப் பகுத்தறியும் பொருள் யாதென வினாயினர்க்குச்) சத்தாகிய சிவமே அசத்தாகிய பாச மனைத்தினையும் அறிவதெனச் சிவாத்துவித சைவர் விடுப்பின்,—ஒன்றை அறிந்திடாது—(சத்தாகிய சிவம் வியாபகவறிவாதலான் எவற்றினையும் ஒருங்கே அறிந்து நிற்பதன்றி ஏகதேசமாய்ப் பகுத்து) ஒன்றை அறியுமாறில்லை,—அசத்தால் (அறிவது) என்னின்- (அற்றேல் சிவம் வியாபகவறிவாயினும் உயிரின் பொருட்டு) அசத்தெனப்படுங் கருவி கரணங்களிடமாக

நின்று (அங்ஙனம் பகுத்) தறிதல் கூடுமெனின்,—இரவிமுன் இருள்போல் சத்தின்முன் அசத்து முனைத்திடாது – இரவி முன் இருள்போலச் சத்தெதிர் அசத்து முனைத்து நில்லா மையின்(அசத்தி னிடமாக நின்று அங்ஙனம் அறியுமென் பதுங் கூடாது).—இங்கு அசத்தே நினைப்பது என்னின் – (இனி விகாரமின்றி நிற்கும் ஆன்ம சந்நிதியில்) அசத்தா கிய கருவியே (சத்தாகிய சிவத்தைச் சிவகரணமாய்நின்) றறிவதெனச் சிவசங்கிராந்த வாதிகள் விடுப்பின்,—சத்தின் முன்னிலாமையானும் – சத்தெதிர் முனைத்து நில்லாதென (மேற்கூறின) மையானும்,—தனைக்கொடு ஒன்று உணர்த லானும் – பிறிதொன்றுணர்வதற்குத் தான் கருவியாய் நிற்ப (தன்றித் தனக்கோரறிவில்லா) தாகலானும்,—அசத் துத்தான் உணராது அன்றே – அசத்து (சத்தை) அறியு மென்பதுங் கூடாது என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேலைச்சூத்திரத்து வரைசெய்துணர்த்திய சத் தசத்துக்களைப் பகுத்தறியும் பொருள் யாதென வினையினர் க்கு, சத்தாகிய சிவமே யசத்தாகிய பாசமனைத்தினையு மறிவதெனச் சிவாத்துவிதசைவர் விடுப்பின், சத்தாகிய சிவம் வியாபகவறிவாதலால் எவற்றினையு மொருங்கே யறிந்து நிற்பதன்றி ஏகதேசமாய்ப் பகுத்து ஒன்றையறியு மாறில்லை; அற்றேல், சிவம் வியாபகவறிவாயினும் உயிரின் பொருட்டு அசத்தெனப்படுங்கருவிகரணங்களிடமாக நின்று அங்ஙனம் பகுத்தறிதல் கூடுமெனின், இரவிமுன் னிருள் போலச் சத்தெதிரசத்து முனைத்து நில்லாமையின் அசத் திடமாய் நின்று அங்ஙனமறியுமென்பதுங் கூடாது; இனி விகாரமின்றி நிற்கு மான்மசந்நிதியில் அசத்தாகிய கருவியே

சத்தாகிய சிவத்தைச் சிவகரணமாய் நின்றறிவதெனச் சிவ சங்கிராந்தவாதிகள் விடுப்பின், சத்தெதிர் மூனேத்து நில்லாதென மேற்கூறினமையானும் பிறிதொன்றுணர்வதற் குத் தான் கருவியாய் நிற்பதன்றித்தனக்கோ ரறிவில்லாதாக லானும் அசத்துச் சத்தையறியுமென்பதுங் கூடாதென்ப தாம்.

எனவே, பாரிசேடவளவையான் இவ்விரண்டினும் வேரு யெஞ்சிநின்ற பசுப்பொருளே இவ்விரண்டினையும் பகுத்தறியு மென்பது பெறப்பட்டது.

படவே, முதனூ லேழாஞ்சூத்திரம்போல இச்செய்யுளும் முக்கூற்றதாயவாறு காண்க.

அனேத்தையுமென இரண்டாவது விரித்துரைக்க.

அறிவதென்பது அவாய்நிலையான் வந்தது; அஃதசத்தா லென்பதனேடுங் கூட்டி யுரைக்கப்பட்டது.

மூனேத்திடாமையாவது, இஃது குடம் இஃது ஆடையென கம்மனோரால் சுட்டி யறியப்படுமாறுபோல முதல்வனுற் சுட்டி யறியப்படுவதாய் வேறு நில்லாமை.

இதனுட்போந்த முக்கூற்றினுள், முன்னே யிருகூற்றினும் விரிக்கக்கடவதாய விசேட மின்மையின் அவற்றை யீண்டே விளு விடைகளாற் றெருகுத் தணர்த்தி, ஏனை மூன்றுங்கூற்றை மூன்றுசெய்யுளான் விரித்துணர்த்துகின்றார்.

அவற்றுட் பாரிசேடவளவையாற் பெறப்பட்டெஞ்சி நின்ற பொருளே இனிது விளக்கி யதனியல்பு வரைசெய்துணர்த்துதற் கெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (1)

மூன்றுமதிகரணம்

சத்தசத் தறிவ தான்மாத் தான்சத்து மசத்து மன்று
நித்தனைச் சதசத் தாகி நின்றிடு மிரண்டன் பாலு
மொத்துட னுதித்து நில்லா துதியாது நின்றி டாது
வைத்திடுந் தோற்ற நாற்ற மலரினில் வருதல் போலும்.

சுப் — பதவுரை

சத்து அசத்து அறிவது ஆன்மா – (தம்முளுரிமையில்லாத) சத்து அசத்து என்கின்ற அவ்விரண்டினையும் அறிவது ஆன்மாவேயாம்,—தான் சத்தும் அசத்தும் அன்று - அதுதான் சத்து அசத்து என்கின்ற அவ்விரண்டிற்கும் வேருய்,—இரண்டன்பாலும் உதித்து உடன் ஒத்து நில்லாது – அவ்விரண்டன் பகுதியினும் விளங்கித் தோன்றி அவற்றே டொப்ப நிற்பதும் அன்ருய்,—உதியாது நின்றிடாது – விளங்காது சூனியமாய் நிற்பதும் அன்ருய்,—வைத்திடும் தோற்றம் -- நிற்கும் முறைமை,– மலரினில் நாற்றம் வருதல் போலும் – மலரின்கணுற்றம் (அவ்விருவகையுமன்றி அதன்கண் அடங்கித்) தோன்றுமாறுபோல,—சதசத்தாகி நித்தனுய் நின்றிடும் – அதுவதுவாய் நின்று (தோன்றுவதோ ரியல்பாமாகலின் அஃது அவைபோலத் தனித்தறியப்படுவதொன்றன்றி அவ்விரண்டனையும் அறியுமுகத்தான் அறியப்படுஞ்) சதசத்தாவதோருரிமையுடைத்தாகலான் என்க,

சிவ — பொழிப்புரை

எ-து. தம்முளுரிமையில்லாத வவ்விரண்டினையுமறிவது ஆன்மாவேயாம்; அதுதா னவ்விரண்டற்கும் வேருய்

இரண்டன்பாலும் மலரின்க ணூற்றம்போல் அதுவதுவாய் நின்று சதசத்தாவதோருரிமையுடைத்தாகலானென்பதாம்.

உயிர் அவ்விரண்டின் வேறுயும் அதுவதுவாய் நிற்பதொன் றென்ற விதனானே, சத்தசத்தறிவதாகிய வான்மாத் தன்னை அறியுமோ? வறியாதோ? வெனக் கடாயினர்க்கு அவைபோலத் தனித்தறியப்படுவ தொன்றன்றி அவ்விரண்டினையு மறியுமுகத்தா னறியப்படுவதாமெனத் தன்னை யறியுமாறு கூறியதூஉமாயிற்று.

அற்றேல், சிவன் சிவனிரண்டுஞ் சித்தாகவும், சிவனெதிர் மூனைத்து நிற்றலாற்றுத வசத்துச் சீவனுலறியப்படுவதாய் அத னெதிர் மூனைத்து நிற்றலாற்றுதற்கு என்னையோ? காரணமென் பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது. (2)

சுத்தமெய்ஞ் ஞான மேனிச் சோதிபா லசத்தஞ் ஞான மொத்துறு குற்ற மெல்லா முற்றிடு முயிரின் கண்ணே சத்துள போதே வேறுஞ் சதசத்து மசத்து மெல்லாம் வைத்திடு மநாதி யாக வாரிநீர் லவணம் போலும்.

சுப் — பதவுரை

மெய்ஞ்ஞானமேனிச் சுத்தசோதிபால் அசத்து அஞ் ஞானம் ஒத்துறு – (அநாதியாகிய முப்பொருளுட் சிவம் உயிர் இரண்டும் நித்த வியாபக சித்தாதற் பொதுமை யான் ஒக்குமாயினும் அவற்றுள்) உண்மை ஞானமே திருமேனியாகவுடைய சிவம் அதிகுக்கும சித்தாதலின் ஆண்டு அசத்தாய பாசம் நிற்றலாற்றுது,—உயிரின் கண்ணே குற்றமெல்லாம் உற்றிடும் – உயிர் தூலசித்தாத லின் அதனெதிரே பாசங்கள் மூனைத்து நிற்றலாற்றும்,— சத்து உளபோதே வேறுஞ் சதசத்தும் அசத்தும் எல்லாம்

அநாதியாக வைத்திடும் – (அங்ஙனம்) சத்தாகிய அச்சிவம் என்றுள்ளது அன்றே வேருகிய சதசத்தாய உயிர்களும் (உள்ளனவாக அவ்வுயிர்களே) அசத்தாகிய பாசங்கள் அநாதியாகப் பற்றி நிற்கும் (என்பது), —வாரிநீர் லவணம் போலும் – (கடலு நீருந் தூயனவேயாகவுங் கடலின் மருவலாற்றுது) கடனீரின் (மருவிநிற்கும்) உப்புப் போலும் (ஆகலான் ஆண்டைக்கு வேறு காரணம் இல்லை) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அநாதியாகிய மூப்பொருள்களுட் சிவமுயிரிரண்டும் நித்தவியாபகசித்தாதற் பொதுமையா னெக்குமாயினும், அவற்றுட் சிவம் அதிசூக்குமசித்தர்தலின் ஆண்டு அசத்து நிற்றலாற்றுது, உயிர் தூலசித்தாதலின் அதனெதிர் முனைத்து நிற்றலாற்றுமென்பது, கடலும்நீருந் தூயனவேயாகவுங் கடலின் மருவலாற்றுது கடனீரின் மருவிநிற்கு முப்புப்போலுமாகலான் ஆண்டைக்கு வேறு காரணமில்லையென்பதாம்.

இலவணமென்பதனிகரம் விகாரத்தாற் றொக்கது.

'சுத்தமெய்ஞ்ஞானமேனிச் சோதிபாலசத்தஞ்ஞான மொத்துறு' வென்ற விதனுனே முன்னே யிருகூற்றையு மொருவாற்றுனே வலியுறுத்தவாறுமாயிற்று.

தூலசித்தென்பது உயிரென்னும் பெயரானு முவமையானும் பெறுதும்.

அற்றேல், சிவமதிருக்கும சித்தென்பதும் உயிர் தூலசித் தென்பதும் எற்றுற்பெறுது? மென்பாரை நோக்கி யெழுத்தது வருஞ்செய்யுளென்பது. (3)

அறிவிக்க வறிதலானு மழிவின்றி நிற்ற லானுங்
குறிபெற்ற சித்துஞ் சத்துங் கூறுவ துயிருக் கீச
னெறிநித்த முத்த சுத்த சித்தென நிற்ப னன்றே
பிறிவிப்பன் மலங்க ளெல்லாம் பின்னுயிர்க் கருளி னாலே.

சுப் — பதவுரை

அறிவிக்க அறிதலானும் – தன்னறிவு நிகழ்ச்சிக்கு வியஞ்சகத்தையின்றி அமையாமையானும்,—(அறிந்த பின்) அழிவின்றி நிற்றலானும் – அறிந்தபின் அழிவின்றி நிற்றலானும்,—உயிருக்குக் குறிபெற்ற சித்தும் சத்தும் கூறுவது – உயிர் தூலசித்தென்பதூஉம் தூலசத்தென் பதூஉம் கூறப்படும்,—ஈசன் உயிர்க்கு மலங்களெல்லாம் பின் அருளினாலே பிறிவிப்பன் – முதல்வன் அவ்வுயிரின் கண்ணதாகிய மலத்தைப் பின்னர் அருளானீக்கி அறிவிக் கும் வியஞ்சகப்பொருளாகலால்,—நெறி நித்த முத்த சுத்த சித் (துச் சத்) தென நிற்பன் அன்றே – சிவபிரான் (தனக்கொரு வியஞ்சகம் வேண்டாத) முறைமையுடைய நித்த முத்த அதிசூக்கும சித்தாயும் சத்தாயும் நிற்பன் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. தன்னறிவு நிகழ்ச்சிக்கு வியஞ்சகத்தையின்றி யமையாமையால் உயிர் தூலசித்தென்பதூஉம், அவ்வுயிரின் கண்ணதாகிய மலத்தை நீக்கியறிவிக்கும் வியஞ்சகப்பொரு ளாகலாற் சிவன் தனக்கொரு வியஞ்சகம் வேண்டாத அதி சூக்கும சித்தென்பதூஉம், இனிது விளங்கு மென்பதாம்.

இவ்வியல்பு கண்ணெளி ஞாயிற்றினெளிகளின் வைத்துக் கண்டுகொள்க.

சித்தியல்புபோற் சத்தியல்பினும் வேற்றுமை காட்டுவார், அழிவின்றிநிற்றலாற் சத்தாங் கூறுவதென்னூர்.

அறிவிக்க வறிதலானு மறிந்தபின் னழிவின்றி நிற்றலானு மென்றுரைக்க; அறிந்தபின்னென்றது ஆற்றலான் வந்தது.

சுத்தசித்தென்புழியுஞ் சத்தென்பது கூட்டியுரைக்கப்படும்.

பிறிவிப்பன் மலங்களெல்லாம் பின்னுயிர்க்கருளினலே என்ற விதனால் வருகின்ற சூத்திரத்திற்குத் தோற்றுவாய் செய்ததாஉ மாயிற்று.

இவை மூன்றுசெய்யுளானும் முறையே உயிர்க்குச் சத்தசத் திரண்டினையு மறியு முரிமையுண்மையும் அதற்குக் காரணமும் அஃதாண்டுளதாமாறுந் தெரித்துணர்த்திப் பாரிசேடவளவையாற் பெறப்பட்ட மூன்றுங் கூற்றுப்பொருள் வலியுறுத்தப்பட்டது. (4)

ஏழாஞ்சூத்திரமுடிந்தது.

ஆகத்திருவிருத்தம் – 252.



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் சுபக்கம்

சாதனவியல்

எட்டாஞ்சூத்திரம்

திருவிருத்தம் — 39.

எட்டாஞ்சூத்திரம்

மேலேச்சூத்திரத்தாற் சாதித்துப் பெறுமுரிமை தனக்கே யுண்டென்ப துணர்ந்த வுயிர்க்கு அப்பேறு தனக்கு வேண்டற்பால தென்பதூஉம், அதற்குச் சிறந்த சாதனமாவ தித்துவென்பதூஉம், அது வருவாயு முணர்ந்தன்றிச் சாதனஞ் செய்தற்கு மனவெழுச்சி செல்லாமையின், மனவெழுச்சி சேறற்பொருட்டு அவற்றை யுணர்த்துதற்கெழுந்தது எட்டாஞ்சூத்திரம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனே யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானுக்கிப் பேணு மாபோற்
றுன்னியபவம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந்தொல் லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி
மலமகற்றித் தானுக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

சுப் — பதவுரை

மன்னவன்றன் மகன் – மன்னவ குமாரனாவானொருவன்,—வேடரிடத்தே தங்கி வளர்ந்து – (பிள்ளைமைப்பருவத்து மடமையால்) வேடருட்பட்டு(ப் பரதந்திரனுய்த் தன்சாதிக்குரிய பெருந்தகைமை யிழந்து இழிதொழில் பயிற்றி) வளர்ந்து,—அவனே அறியாது மயங்கி நிற்ப – அவ்வரசனே(யுந் தன்னையும்) அறியாது மயக்கமுற்று நிற்க,—பின் அவனும் நீ என்மகனென்று அவரின் பிரித்து –பின்பு (தந்தையாகிய) அவ்வரசனும் நீ என்மகனென்று

அறிவுறுத்தி அவ்வேடரினின்றும்(அவனைப்)பிரிப்பித்து,—பெருமையொடும் தான் ஆக்கிப் பேணுமாபோல்–பெருந்தகைமையோடும் தானும் வண்ணஞ் செய்து போற்றுமாறுபோல,—துன்னிய ஐம்புல வேடர் சுழலிற் பட்டு–(தன்னிலையிற் பிறழ்ந்து) நெருங்கிய ஐம்பொறி வேடர் சுழ்லிற்பட் (டறிவிழந்து),–துணைவனையும் அறியாது துயருறும் தொல் உயிரை – (தன்னை அறியாமையேயன்றித்)தலைவனையும் அறியாது நிலைபெற்ற உயிர் வருந்துமாற்றை,—மன்னும் அருள் – இறப்பில் தவமுதிர்ச்சி நோக்கி,—குரு ஆகி வந்து–(நித்த முத்த சுத்த சித்தெனப்படும் அவ்வீசன்) குருவடிவங்கொண் டெழுந்தருளி வந்து (உணர்த்தி),—அவரின் நீக்கி மலம் அகற்றி – அவ்வைம்பொறியினின்று நீங்குமாறு மலவலியைக் கெடுத்து,—தானுக்கி மலர் அடிக்கீழ் வைப்பன் – (மீட்டுத்) தொன்னிலையாய தன்வண்ணமாக்கி (அவ்வுயிரை) மலர்போலுந் திருவடிக் கீழ்வைத்து வாழ்விப்பன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *உயிர் தன்னிலையிற் பிறழ்ந்து ஐம்பொறிகளுட்பட்டறிவிழந்து வருந்துமாற்றை, நித்தமுத்தசுத்தசித்தெனப்படு மவ்வீசன், குருவடிவங்கொண் டெழுந்தருளி வந்து தவமுதிர்ச்சி நோக்கி யுணர்த்தி மீட்டுத் தொன்னிலையிற் பிறழாது வைத்து வாழ்விப்ப னென்பதாம்.*

இங்ஙனம் வாழ்வித்தல் ஈசனுக்குக் கடப்பாடாத லினி துவிளக்குவார், பிள்ளைமைப்பருவத்து மடமையால் வேடருட்பட்டுப் பரதந்திரனுய்த் தன் சாதிக்குரிய பெருந்தகைமை யிழந்து இழிதொழில் பயிற்றி வருந்தும் மன்னவ குமாரனுவா னொருவனுக்கு அவன்றந்தை செய்யு முதவியை யெடுத்துக்காட்டிக் கூறினர்.

மும்மலச் சுழலிற்பட்டு வருந்துதல் காட்சிப்புலனுதல் செல்லாமையின், அதனை யொழித்துக் காட்சிப்புலனு யெளிதினறியப்படுவதாய ஐம்பொறிச்சுழலிற் படுதலே யீண்டெடுத்துக் கூறினர், தூலவருந்திநியம்பற்றிச் சோபானமுறையின் வைத்துணர்த்துதல் மாபாகலின்.

தூணவனையு மென்னுமும்மை தன்னை யறியாமையே யன்றி யென இறந்ததுதழீஇயது; சிறப்புமாம்.

மன்னுமருளென்றது ஈண்டிறப்பிறவத்தின்மேற்று. மூன்றுவது விரித்துரைக்க.

என்மகனீயென்றென உவமையுட் கூறுதலாற் பொருளினும் உணர்த்தி யென்பது வருவித்துரைக்கப்பட்டது. "தவத்தினி னுணர்த்த" (சிவஞானபோதம், எட்டாஞ்சூத்திரம், ஐம்புலவேடர்) என்றார் முதனூலாசிரியரும்.

இங்ஙனமுரைத்தவாற்றுன் முதனூலெட்டாஞ் சூத்திரம் போல இச்செய்யுளும் காற்கூற்றதாமாறு கண்டுகொள்க.

இவற்றுட் குருவாகிவந்துணர்த்தி யென்ற முதற்கூற்றுப் பொருளை ஒன்பது செய்யுளான் வகுத்துக் கூறுவான் தொடங்கினர். (1)

முதலதிகரணம்

உரைதருமிப் பசுவர்க்க முணரின் மூன்று
முயருமும்விஞ்ஞா னகலர்பிர ளயாகலர் சகலர்
நிரையின்மல மலங்கன்ம மலங்கன்ம மாயை
நிற்குமுத லிருவர்க்கு நிராதார மாகிக்

கரையிலருட் பரன்றுவிதா சத்திநிபா தத்தாற்
கழிப்பன்மலஞ் சகலர்க்குக் கன்ம வொப்பிற்
றரையிலா சான்மூர்த்தி யாதார மாகித்
தரித்தொழிப்பன் மலஞ்சதுர்த்தா சத்தினிபாதத்தால்.

சுப — பதவுரை

உரைதரும் இப்பசு – (எண்ணரிதாய்) உரைக்கப் படும் இவ்வுயிர்களெல்லாம்,—உணரின்–உணருமிடத்து,- உயரும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் – உயர்ந்த விஞ்ஞானகலரும் பிரளயாகலரும் சகலரும் (என),—நிரை யின் மலம் மலம் கன்மம் மலம் கன்மம் மாயை நிற்கும்– முறையே ஆணவமலமும் அதனோடு கன்மமலமும் அவைகளோடு மாயாமலமுமாய் நிற்கும் (பந்தவேறுபாட் டான்), மூன்று வர்க்கமாம் - மூவகைப்படும், —சகலர்க்கு- (அவற்றுள் மும்மலங்களுமுடைய)சகலவர்க்கத்திற்கு,— கன்ம ஒப்பில் – இருவினையொப்பின்கண்,—சதுர்த்தா சத் திநிபாதத்தால் –மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரமென்னும் நால்வகைச் சத்திநிபாதமுறைமையின் வைத்து (அரிது ணர்த்த வேண்டுதலின்),–தரையில் ஆசான் மூர்த்தி தரித்து ஆதாரமாகி மலம் ஒழிப்பன் – இவ்வுலகின்கண் (அவ்வுயிர் கட்கே) குருமூர்த்தியை அதிட்டித்து நின்று சாதாரதீக்கை செய்து மலத்தை நீக்குவன்,—முதல் இருவர்க்கும் – ஒரு மலம் இருமலமுடைய மற்றை யிருவர்க்கத்திற்கும்.— துவிதா சத்திநிபாதத்தால் - தீவிரம் தீவிரதரமென்னும் இரு வகைச் சத்திநிபாதத்தின் வைத்து (உணர்த்த அமையு மாதலின்),—கரையில் அருட்பரன் நிராதாரமாகி மலங் கழிப்பன் – அளவிடுதற்கரிய கருணைவடிவாகிய முதல் வன் (சகலவர்க்கம்போல் குருவடிவின் மறைந்து நின்று

படர்க்கையான் உணர்த்தப்பட்டு அரிதுணரவேண்டாத அவ்விருதிறத் துயிர்கட்கும் முறையே உண்ணின்றும் முன்னின்றும் உணர்த்துவதாகிய) நிராதாரதீக்கைசெய்து மலத்தை நீக்குவன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. எண்ணரியவுயிர்களெல்லாம் பந்தவேறுபாட்டான் மூவகைப்படும். அவற்றுள் மும்மலங்களுமுடைய சகலவர்க்கத்திற்கு நால்வகைச்சத்திநிபாத முறைமையின் வைத்து அரிதுணர்த்தவேண்டுதலின், அவ்வுயிர்கட்கே குருவாகி வந்துணர்த்தியென மேற்கூறிய சாதாரதீக்கை செய்வது. ஒருமல மிருமலமுடைய மற்றை யிருவர்க்கத்திற்குந் தீவிரந்தீவிரதரமென்னும் இருவகைச் சத்திநிபாதத்தின் வைத்துணர்த்த வமையுமாதலின், சகலவர்க்கம்போற் குருவடிவின் மறைந்து நின்று படர்க்கையானுணர்த்தப்பட்டரி துணரவேண்டாது அவ்விருதிறத்துயிர்கட்கும் முறையே உண்ணின்று முன்னின்றுமுணர்த்துவதாகிய நிராதார தீக்கை செய்யப்படுமென்பதாம்.

இதனானே தீக்கை இருவகைத்தென்பதூஉம் அவ்விருவகைக்கு முரியா ரிவரென்பதூஉங் கூறப்பட்டன.

இனி இவ்விரண்டனுள் ஈண்டெடுத்துக்கொண்ட சாதாரதீக்கையிற்படும் பாகுபாடும் அவற்றதியல்பும் வகுத்துக் கூறுதற் கெழுந்தன வருஞ்செய்யுட்களென்பது. (2)

பலவிதமா சான்பாச மோசனந்தான் பண்ணும்
படிநயனத் தருள்பரிசம் வாசகமா னதமூ
மலகில்சாத் திரம்யோக மவுத்தி ராதி
யநேகமுள வவற்றினவுத் திரியிரண்டு திறனு

மிலகுஞா னங்கிரியை யெனஞான மனத்தா
லியற்றுவது கிரியையெழிற் குண்டமண்ட லாதி
நிலவுவித்துச் செய்கல்கிரி யாவதிதா னின்னு
நிர்ப்பீசஞ் சபீசமென விரண்டாகி நிகழும்.

சுப — பதவுரை

பலவிதம் – (அவ்வுயிர்க்கண்ணதாகிய மலபரிபாகம்) பலவகைப்படுதலின்,—ஆசான் பாசம் மோசனந்தான் பண்ணும்படி – (அதற்கேற்ப) ஆசிரியன் அம்மலத்தை மோசிக்கும்படி (செய்யும் சாதாரதீக்கையும்),—நயனத்து அருள் பரிசம் வாசகம் மானதமும் அல்கு இல் சாத்திரம் யோகம் அவுத்திராதி அநேகம் உள – திருவருணோக்க மும் பரிசமும் வாக்கும் பாவனையும் மிக்க நூல்களும் யோகமும் ஒளத்திரி சாம்பவமுதலியனவுமாகப் பலவேறு வகைப்படும்,—அவற்றின் அவுத்திரி – அவற்றுள் (ஏனைத் தீக்கைகளெல்லாம் தனக்கு அங்கமாகவுடைத்தாய்ச் சிறந்த) ஒளத்திரிதீக்கையாவது,—இலகு ஞானம் கிரியை என இரண்டு திறனும் – விளங்குகின்ற ஞானவதி கிரியா வதி யென்று இருவகைப்படும்,—எழிற் குண்ட மண்ட லம் ஆதி மனத்தால் கிரியை இயற்றுவது ஞானம் - (அவற்றுள்) அழகினையுடைய குண்டம் மண்டலம் அங்கி நெய் சுருக்கு சுருவமுதலிய அனைத்தும் மனத்தாற் (கற் பித்துக் கொண்டு விதிப்படி அகத்தே ஆகுதிமுதலிய) கிரியை செய்வது ஞானவதி,—நிலவுவித்துச் செய்தல் கிரியாவதி – (அவையனைத்தும் புறத்தே) நிலவக்கொண்டு (புறம்போ அக்கிரியை) செய்வது கிரியாவதி யெனப்படும்,— தான் – (இங்ஙனம் இருவகைப்பட்ட) ஒளத்திரி தீக்கை தான்,—இன்னும் நிர்ப்பீசம் சபீசம் என இரண்டாகி நிக

ழும் – இன்னும் நிர்ப்பீசம் சபீசமென வெவ்வேறு இரு வகைப்படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அவ்வுயிர்க்கண்ணதாகிய மலப்பரிபாகம் பல வகைப்படுதலின், அம்மலத்தை மோசிக்குஞ் சாதாரதீக்கையு மதற்கேற்பத் திருநோக்கமுதலியனவாகப் பலவேறுவகைப் படும். அவற்றுள் ஏனைத்தீக்கைகளெல்லாந் தனக்கங்கமாக வுடைத்தாய்ச் சிறந்த ஔத்திரிதீக்கையாவது ஞானவதி கிரி யாவதியென் றிருவகைப்படும். அவற்றுட் குண்டமண்ட லம் அங்கி நெய் சுருக்குச் சுருவமுதலியவனைத்தும் மனத் தாற் கற்பித்துக்கொண்டு விதிப்படி யகத்தே யாகுதிமுத லிய கிரியை செய்வது ஞானவதி; அவையனைத்தும் புறத்தே நிலவக்கொண்டு புறம்பே யக்கிரியை செய்வது கிரியாவதி யெனப்படும். இங்ஙனமிருவகைப்பட்ட ஔத்திரிதீக்கை தான் இன்னும் நிர்ப்பீசஞ் சபீசமென வெவ்வேறிருவகைப் படுமென்பதாம்.

கிரியையியற்றுவதென மாறுக.

ஔத்திராதியென்றதனாற் சாம்பவதீக்கை முதலியனவுந் தழு வப்பட்டன.

யன தீக்கைமுதலிய ஆறும், சுதந்திரமாய்ச் செய்யப்படுவன வும் அவுத்திரிக்கங்கமாய்ச் செய்யப்படுவனவு மென்றிருவகைப்படும். அவற்றுள் முன்னையவை ஔத்திரிக்குரியரல்லாதார்க்குச் செய்யப் படுவன வெனக்கொள்க.

ஹ்ரீ தசஹிதம் ஹ்ரௌத்த்ரி; ஹ்ரீ தம் ஓம். (3)

பாலரொடு வாலீசர் விருத்தர்பணி மொழியார்
பலபோகத் தவர்வியாதிப் பட்டவர்க்குப் பண்ணுஞ்
சீலமது நிர்ப்பீசஞ் சமயா சாரந்
திகழ்சுத்தி சமயிபுத் திரர்க்கு நித்தத்
தேலுமதி காரத்தை யியற்றித் தானு
மெழினிரதி காரையென நின்றிரண்டாய் விளங்குஞ்
சாலநிகழ் தேகபா தத்தி னோடு
சத்தியநிர் வாணமெனச் சாற்றுங் காலே.

சுப — பதவுரை

நிர்ப்பீசம் – (அவ்விரண்டனுள்) நிர்ப்பீசதிக்கையாவது.—(மலபரிபாக முடையவராயும் தீக்கைப்பின் ஒரு தலையான் வழுவின்றிச் செய்யக்கடவனவாய சமயசாரங்களை அநுட்டிக்கும் ஆற்றல் அறிவிலராகிய) பாலரொடு வாலீசர் விருத்தர் பணிமொழியார் பலபோகத்தவர் வியாதிப்பட்டவர்க்கு – பாலரும் அறிவீனரும் முதியோரும் மெல்லிய வசனத்தையுடைய மாதரும் பலபோகத் தினையுடையவரும் மிக்க நோயினை யுடையவருமாகிய இவர் முதலாயினர்க்கு, —திகழ் சமயாசாரம் சுத்தி – (ஆசாரியனுவான் அதனை உணர்ந்து ஏனைக் கன்மங்களோடுகூட) விளங்குகின்ற சமயாசாரத்தையும் (ஆகுதியாற்) சுத்தி செய் தொழித்து,—நித்தத்து ஏலும் அதிகாரத்தை இயற்றி – நித்தியகன்மமாத்திரையின் ஏன்றவாறனுட்டிக்கும் அதிகாரமுடையவராகச் செய்து (சமயாசாரங்களைச் சுத்தி செய் தொழித்தமையின்),—எழில் நிரதிகாரையென நின்று – (நைமித்திகத்தும் காமியத்தும் அதிகாரங் கொடாமையான் இது) அழகுபொருந்திய நிரதிகாரதீக்கையெனப் பட்டு,—அதுதானும் – அத்தீக்கை மூன்றனுள்,—சமயி

புத்திரர்க்குப் பண்ணும் சீலம் – சமயி புத்திரர்க்குச் செய்வ தாகிய சமயமும் விசேடமும் (ஓரோவொன்றேயாம்),—சாற்றும் காலே - (ஏனை நிருவாண தீக்கையைச்) சொல்லு மிடத்து,—சால நிகழ் தேக பாதத்திலேடு சத்திய நிர் வாணமென இரண்டாய் விளங்கும் – மிக்கு நிகழ்கின்ற தேகாந்தத்தின் முத்தியைப்பயக்கும் அசத்தியோ நிருவாண மெனவும் அப்பொழுதே முத்தியைப் பயக்கும் சத்தியோ நிருவாணமெனவும் இருவகைப்படும் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. அவ்விரண்டனுள் நிர்ப்பீசதீக்கையாவது, மல பரிபாகமுடையவராயுந்தீக்கைப்பின் ஒருதலையான் வழுவின்றிச் செய்யக்கடவனவாய சமயாசாரங்களே அனுட்டிக்கும் ஆற்றலறிவிலராயினர்க்கு, ஆசாரியனவானதனியுணர்த்து ஏனைக்கன்மங்களோடுகூடச் சமயாசாரத்தையும் ஆகுதியாற் சுத்திசெய்தொழித்து, நித்தியகன்மமாத்திரையின் ஏன்ற வாறனுட்டிக்கு மதிகாரமுடையராகச் செய்வதாம்; ஆயினும் சமயாசாரங்களேச் சுத்திசெய்தொழித்தமையின் நைமித்தி கத்துங் காமியத்துமதிகாரங் கொடாமையான், இது நிரதி காரதீக்கையெனப்படும். அத்தீக்கை மூன்றனுட் சமயமும் விசேடமு மொரோவொன்றேயாம், ஏனை நிருவாணதீக்கை தேகாந்தத்தின் முத்தியைப்பயக்கும் அசத்தியோ நிருவாண மெனவும் அப்பொழுதே முத்தியைப் பயக்குஞ் சத்தியோ நிருவாணமெனவும் இருவகைப்படுமென்பதாம்.

சமயாசாரசுத்தியோடு செய்யப்படும் நிருவாணதீக்கையும் அதற்கங்கமாயுஞ் சுதந்திரமாயுஞ்செய்யப்படுஞ் சமயவிசேடங்களும் நிர்ப்பீசதீக்கையெனக்கொள்க. (4)

ஓதியுணர்ந் தொழுக்கநெறி யிழுக்கா நல்ல
வுத்தமர்க்குச் செய்வதுயர் பீசமிவர் தம்மை
நீதியினை னித்தியநை மித்திககா மியத்தி
னிறுத்திநிரம் பதிகார நிகழ்த்துவதுஞ் செய்து
சாதகா சாரியரு மாக்கி வீடு
தருவிக்கு மூலோகசிவ தருமிணியென் றிரண்டா
மாதலினை னதிகாரை யாஞ்சமய விசேட
நிருவாண மபிடேக மிவற்றடங்கு மன்றே.

சுப — பதவுரை

உயர் பீசம் – (இனி) உயர்ந்த சபீசமாவது,—ஓதி உணர்ந்து ஒழுக்கநெறி இழுக்கா நல்ல உத்தமர்க்கு – (மல பரிபாகத்தோடு கூடக்) கற்றறிந்து ஒழுக்கவழியில் வழுவாது நிற்கும் (ஆற்றன் மிக்குடைய) உத்தமத்தினுத்தமராயினர்க்கு,—நிறுத்திச் செய்து – (ஆசிரியனுவான் அஃதறிந்து சமயாசாரகன்மமாத்திரம்) நிறுத்தி (ஏனையவற்றைச் சுத்தி) செய்தொழித்து,—இவர் தம்மை நீதியினன் – இவரை முறைமையான்,—நித்திய நைமித்திக காமியத்தின் நிரம்பு அதிகாரம் நிகழ்த்துவதும் செய்வது – நித்திய நைமித்திக காமியமாகிய மூன்றினும் பேரதிகாரமுடையராகச் செய்வதாம் (ஆகலின்),—அதிகாரையாம்–(இது) சாதிகார தீக்கை யெனவும் பெயர் பெறும்,—சாதகாசாரியரும் ஆக்கி வீடு தருவிக்கும்–(இத்தீக்கைப்பேறுடையார் தீக்கை வேறுபாட்டாற்) சாதகரும் ஆசாரியருமென்று இருதிறப்படுவர்,–உலோக(தருமிணி) சிவதருமிணியென்று இரண்டாம் – (இந்தச் சபீசதீக்கைதான் இல்லற முடையார்க்குத் திரோதான சுத்திரூப சிகாச்சேதமின்றிச் செய்வதாகிய) உலோகதருமிணியும் (துறவறமுடையார்க்குத்

திரோதான சுத்திரூப சிகாச் சேதத்தோடு செய்வதாகிய) சிவதருமிணியுமென்று இருவகைப்படும் (இவை முறையே பௌதிகதீக்கை நைட்டிகதீக்கை யெனவும் பரியாயப் பெயர்பெறும்).–ஆதலினற் சமய விசேட நிருவாணம் அபிடேகம் இவற்று அடங்கும் அன்றே – இவ்வாருதலிற் சமயம் விசேடம் நிருவாணம் அபிடேகமென்னும் பேதமெல்லாம் நிர்ப்பீசம் சபீசமென்னும் இவ்விரண்டினுள் அடங்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. இனிச் சபீசமாவது, மலபரிபாகத்தோடுகூடக் கற்றறிவுமாற்றலும் மிக்குடையராயினர்க்கு, ஆசாரியனவான் அஃதறிந்து சமயாசாரகண்மமாத்திர நிறுத்தி ஏனைய வற்றைச் சுத்திசெய்தொழித்து நித்தியகன்மமுதலிய மூன்றினும் பேதிகாரமுடையராகச் செய்வதாம்; ஆகலின் இது சாதிகாரதீக்கை யெனவும் பெயர்பெறும். இத்தீக்கைப் பேறுடையார் தீக்கை வேறுபாட்டாற் சாதகருமாசாரியருமென்றிருதிறப்படுவர். இந்தச்சபீசதீக்கைதான் இல்லறமுடையார்க்குத் திரோதனசுத்திரூப சிகாச்சேதமின்றிச் செய்வதாய உலகதருமிணியும் துறவறமுடையார்க்குத் திரோதான சுத்திரூப சிகாச்சேதத்தோடு செய்வதாகிய சிவதருமிணியுமென் றிருவகைப்படும். இவை முறையே பௌதிகதீக்கை நைட்டிகதீக்கையெனவும் பரியாயப்பெயர் பெறும். சமய விசேட நிருவாண மபிடேக மென்னும் பேதமெல்லாம் நிர்ப்பீசஞ் சபீசமென்னும் இவ்விரண்டனுளடங்கு மென்பதாம்.

சமயாசார சுத்தியின்றிச் செய்யும் நிருவாணதீக்கையும் அதற் கங்கமாய்ச் செய்யப்படுஞ் சமயவிசேடங்களுஞ் சபீசதீக்கையெனக் கொள்க.

உத்தமத்திலுத்தமரென்பார், நல்லவுத்தமரென்றூர்; ஓதியுணர் தலும் ஒழுக்கமெறி யிழுக்காமையுமாகிய விரண்டுமுடையார் உத்த மத்திலுத்தமரெனவே, அவ்விரண்டினி லொன்றில்லாதார் உத்த மத்தில் மத்திமரென்பதூஉம், இரண்டு மில்லாதார் உத்தமத்தி லதமரென்பதூஉம் பெற்றும்; பெறவே, நிர்ப்பீசஞ் சபீசமென் றிருதிறப்படுஞ் சாதார தீக்கைக்குரியார் இவ்வாறு முத்திறப்படுவ ரென்பதாயிற்று.

இங்ஙனங் கூறியவாற்றுல் ஔத்திரியெனத் தொகையாலுன் றும், ஞானவதி கிரியாவதியென வகையாலிரண்டும், ஞானவதி நிர்ப்பீசஞ் சபீசம் கிரியாவதி நிர்ப்பீசஞ் சபீசமெனவிரியாலுன்கு மாயவாறு காண்க.

நிர்ப்பீசஞ் சபீசமென்னும் இவற்றின் விரியாகிய சமயவிசேட முதலியவற்றி னியல்பெல்லாம் ஆகமங்களுட் காண்க.

இவை மூன்று செய்யுளானுஞ் சாதாரதீக்கையின் வகையும் அவற்றியல்புகளுந் தொகுத்துக் கூறப்பட்டன. (5)

அழிவிலாக் கிரியையினு ஞதல்சத்தி மத்தா
ஞதலத்து வாசுத்தி பண்ணிமல மகற்றி
யொழிவிலாச் சிவம்பிரகா சித்தற்கு ஞான
முதிப்பித்துற் பவந்துடைப்ப னரனெருமூ வர்க்கும்
வழுவிலா வழியாறு மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் புவனங்க டத்துவங்கள் கலைகள்
கழிவிலா தரைத்தமுறை யொன்றினென்று வியாத்தி
கருதுகலை சத்தியின்கண் சத்திசிவன் கண்ணும்.

சுப் — பதவுரை

அரன் – முதல்வன் (குருமூர்த்தியை அதிட்டித்து நின்று),—மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள் ஆரும் வழுவிலா வழி – மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலைகளென அறு வகைப்படும் வழுவில்லாத அத்துவாக்கள்,—கழிவிலாது உரைத்த முறை ஒன்றின் ஒன்று வியாத்தி–நீங்குதலின்றி (இங்ஙனஞ்) சொல்லிய முறையே ஒன்றினென்றடங்க,—கருது கலை சத்தியின்கண் – (இறுதிக்கண் வைத்துக்) கருதப்படும் கலை திரோதான சத்தியினும்,—சத்தி சிவன் கண்ணும் – அத்திரோதானசத்தி சிவத்தினும் (அடங்கு மாறு உணர்ந்து அவ்வாறடக்கி),—அழிவிலாச் சத்திமத் தான் ஆதல் கிரியையினன் ஆதல்–(நிர்ப்பீசம் சபீசமெனத் தனித்தனி இருவகைப்படுமென்று மேற்கூறிப்போந்த) கெடுதலில்லாத ஞானவதி கிரியாவதி யென்னும் இரண்டனுள் ஒரு தீக்கையானே,—ஒரு மூவர்க்கும் அத்துவா சுத்திபண்ணி மலம் அகற்றி – உத்தமத்திலுத்தமர் முதலிய அம்மூவர்க்கும் அறுவகை யத்துவாக்களையும் சோதிக்கு முகத்தாற் (பிறவிக்கேதுவாகிய) மலத்தைக் கெடுத்து,—ஒழிவிலாச் சிவம் பிரகாசித்தற்கு ஞானம் உதிப்பித்து – எங்கணும் வியாபகமாகிய சிவம் பிரகாசித்தற்கேதுவாகிய ஞானத்தைக் கொடுத்து,–உற்பவம் துடைப்பன் – பிறவியை ஒழிப்பன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *அரன், குருமூர்த்தியை யதிட்டித்துநின்று மந்திரமுத லறுவகைப்படு மத்துவாக்களொன்றினென்ற டங்க இறுதிக்கணின்ற கலை திரோதானசத்தியினும் அது*

சிவத்தினு மடங்குமாறுணர்த்து அவ்வாறடக்கி நிர்ப்பீசஞ் சபீசமெனத் தனித்தனியிருவகைப்படுமென மேற்கூறிப் போந்த ஞானவதி கிரியாவதியென்னுமிரண்டனு ளொருதீக் கையானே உத்தமத்திலுத்தமர் முதலிய வம்மூவர்க்கும் அறுவகையத்துவாக்களிலுஞ் சோதிக்குமுகத்தாற் பிறவிக் கேதுவாகிய மலத்தைக்கெடுத்துச் சிவம் பிரகாசித்தற்கேது வாகிய ஞானத்தைக் கொடுக்குமென்பதாம்

கிரியை ஆகுபெயர்.

'ஒளத்திரியிரண்டுதிறனு மிலகுஞானங் கிரியை' யென முதற்க ணெடுத்துக்கொண்டு முடிவின்கண் 'அழிவிலாக் கிரியையினுதல் சத்திமத்தானுத' லென முடித்தமையின், இடைக்கட் கூறப்பட் டனவெல்லாம் இவ்விரண்டற்கும் பொதுவாமாறு காண்க; **சோம சம்புபத்ததி வருணபத்ததி** முதலியவற்றினும் இவ்வாறே கூறப் பட்டன.

இதனுனே ஆசிரியன் தீக்கைசெய்யுமாறு தொகுத்துக் கூறப் பட்டது. (6)

மந்திரங்கண் முதலிலந்துங் கலையைந்தின் வியாத்தி
மருவுமந் திரமிரண்டு பதங்க ணுலே
ழந்தகிலே யெழுத்தொன்று புவன நூற்றெட்
டவனிதத் துவமொன்று நிவிர்த்தியயன் றெப்வம்
வந்திடுமந் திரமிரண்டு பதங்கண் மூவேழ்
வன்னங்க ணுலாறு புரமைம்பத் தாறு
தந்திடுந்தத் துவங்களிரு பத்து மூன்று
தரும்பிரதிட் டாகலிமா லதிதெய்வந் தானும்.

சுப் — பதவுரை

மந்திரங்கள் முதல் ஐந்தும் கலை ஐந்தின் வியாத்தி - (அசுத்தம் மிச்சிரம் சுத்தமென்னு மூவகை அத்துவாக்களும்) மந்திரங்கள் முதலாக ஐவகைப்பட்டு (ஒன்றிலொன்று வியாத்தியாய் முறையானே) பஞ்சகலைகளுள் அடங்குமாறு (யாங்ஙனமெனின்),—மந்திரம் இரண்டு – மந்திரம் இரண்டும்,—பதங்கள் நாலேழ் – பதம் இருபத்தெட்டும்,—அந்தகலை எழுத்து ஒன்று - இறுதிக்கண்ணதாகிய எழுத்து ஒன்றும்,—புவனம் நூற்றெட்டு,—புவனம் நூற்றெட்டும்,–அவனி தத்துவம் ஒன்று–பிருதிவி தத்துவம் ஒன்றும் ஆகிய இவைகள் (ஒன்றிலொன்றுக),–நிவிர்த்தி மருவும் - நிவிர்த்திகலையில் அடங்கும்,— அயன் தெய்வம்–(அதற்குப்) பிரமன் அதிதேவதையாம்,—வந்திடு மந்திரம் இரண்டு – வாராநின்ற மந்திரம் இரண்டும்,—பதங்கள் மூவேழ் – பதம் இருபத்தொன்றும்,—வன்னங்கள் நாலாறு–எழுத்து இருபத்துநான்கும்,—புரம் ஐம்பத்தாறு – புவனம் ஐம்பத்தாறும்,—தந்திடும் தத்துவங்கள் இருபத்துமூன்று–தாராநின்ற தத்துவம் இருபத்துமூன்றும் ஆகிய இவைகள் (ஒன்றிலொன்றுக),—பிரதிட்டாகலை தரும்-பிரதிட்டாகலையில் அடங்கும்,—மால் அதிதெய்வம் தான் ஆம் – (அதற்குத்) திருமால் அதிதேவதையாம் என்க. (7)

வித்தையின்மந் திரமிரண்டு பதநா லேந்து
விரவுமெழுத் தேழுபுர மிருபத் தேழு
தத்துவமு மோரேழு தங்குமதி தெய்வந்
தாவிலுருத் திரைகுஞ் சாந்தி தன்னின்
வைத்தனமந் திரமிரண்டு பதங்கள்பதி னென்று
வன்னமொரு மூன்றுபுரம் பதினெட் டாகு

முத்தமமாந் தத்துவமு மொருமூன் றுகு
முணரிலதி தேவதையு முயரீச னுமே.

சுப — பதவுரை

மந்திரம் இரண்டு – மந்திரம் இரண்டும்,—பதம் நாலைந்து – பதம் இருபதும்,—விரவும் எழுத்து ஏழு – பொருந்திய எழுத்து ஏழும்,—புரம் இருபத்தேழு.—புவனம் இருபத்தேழும்,—தத்துவம் ஒரேழும் – வித்தியா தத்துவம் ஏழும் ஆகிய இவைகள் (ஒன்றினென்றுக),—வித்தையின் தங்கும்–வித்தியாகலைக்கண்ணே அடங்கும்,—தாவு இல் உருத்திரன் அதிதெய்வம் ஆகும் – (அதற்கு) மூடிவில்லாத உருத்திரன் அதிதேவதையாம்.—மந்திரம் இரண்டு – மந்திரம் இரண்டும்,– பதங்கள் பதினென்று – பதம் பதினென்றும்,—வன்னம் ஒரு மூன்று– எழுத்து மூன்றும்,—ஆகும் புரம் பதினெட்டு – ஆகிய புவனம் பதினெட்டும், உத்தமமாம் தத்துவம் ஒருமூன்றும் ஆகும் – உத்தமமாகிய தத்துவம் மூன்றும் ஆகிய இவைகள் (ஒன்றினென்றுக),—சாந்தி தன்னின் வைத்தன – சாந்திகலைக்கண் அடங்கும்,—உணரில் உயர் ஈசன் அதிதேவதையும் ஆமே - உணரும்வழி (அதற்கு) மகேச்சுரன் அதிதேவதையாம் என்க. (8)

சாந்தியா தீதகலை தன்னின்மந் திரங்க
டாமூன்று பதமொன்றக் கரங்கள்பதி னேறு
வாய்ந்தபுர மூவைந்து தத்துவங்க ளிரண்டு
மருவுமதி தேவதையு மன்னுசதா சிவரா
மேய்ந்தமுறை மந்திரங்கள் பதினென்று பதங்க
ளெண்பத்தொன் றக்கரங்க ளைம்பத்தொன் றுகு

மாய்ந்தபுர மிருநூற்றே டிருபத்து நாலா
மறிதருதத் துவமுப்பத் தாறுகலை யைந்தே.

சுப் — பதவுரை

மந்திரங்கள் தாம் மூன்று - மந்திரம் மூன்றும்,—பதம் ஒன்று – பதம் ஒன்றும்,—அக்கரங்கள் பதினெறு – எழுத்துப் பதினெறும்,—வாய்ந்த புரம் மூவைந்து – சிறந்த புவனம் பதினைந்தும்,—தத்துவங்கள் இரண்டு – தத்துவம் இரண்டும் ஆகிய இவைகள் (ஒன்றினொன்றுக),–சாந்தியாதீதகலை தன்னின் மருவும் – சாந்திய தீதகலைக்கண்ணே அடங்கும்,—மன்னு சதாசிவர் அதிதேவதையும் ஆம் –(அதற்கு) நிலைபெற்ற சதாசிவர் அதிதேவதையாம்,—ஏய்ந்த முறை – பொருந்திய விம்முறையே,—மந்திரங்கள் பதினென்று – சத்தியோசாதம் முதலிய பதினெரு மந்திரங்களும்,—பதங்கள் எண்பத்தொன்று – சிவாயநமோநம முதலிய எண்பத்தொருபத மந்திரங்களும்,—ஆகும் அக்கரங்கள் ஐம்பத்தொன்று – க்ஷகாரமுதலாகிய வன்னம் ஐம்பத்தொன்றும்,—ஆய்ந்தபுரம் இருநூற்றேடு இருபத்து நாலாம்–சிறந்த அநாசிருதபுவனமுதற் புவனம் இருநூற்றிருபத்துநான்கும்,—அறிதருதத்துவம் முப்பத்தாறு – அறியப்பட்ட பிருதிவிதத்துவ முதலிய தத்துவம் முப்பத்தாறும்,—கலை ஐந்தே – நிவர்த்திகலை முதலிய கலை ஐந்தும் ஆக(ச் சங்கார முறையின் வைத்தெண்ணி இவ்வாறு கண்டுகொள்க) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து *அத்துவாக்கள் ஒன்றினொன்று வியாத்தியாய் முறைபானே பஞ்சகலைகளுளடங்குமாறு யாங்ஙனமெனின்,–அசுத்தம் மிச்சிரஞ் சுத்தமென்னும் மூவகையத்துவாக்களும்*

ஐவகைப் பட்டுப் பஞ்சகலைகளு ளடங்குமாறு சங்காரமுறை யின் வைத்தெண்ணி யிவ்வாறுகண்டுகொள்க வென்பதாம்.

மந்திரமுதலியவற்றிற்குங் கலையில் வியாத்தி கூறியது பரம் பரையின் வியாப்பியமாதல்பற்றி யாதலான் மேல் ஒன்றிலொன்று வியாத்தி யென்பதனோடு முரணுமையறிக.

சாத்தியாதீதகலை நீட்டும்வழி நீட்டல்.

இவை மூன்று செய்யுளானுந் தீக்கைசெய்தற்கண் அத்து வாக்க ளொன்றிலொன்று வியாத்தியாதலறிந்தடக்குமாறுவகுத்துக் கூறப்பட்டது.

அற்றேல், இறைவனிங்ஙனங் குருமூர்த்தியை யதிட்டித்து நின்று செய்யுந் தீக்கையில் ஏனை மலசுத்திகளை யொழித்து அத்துவ சுத்தியே மிகுத்துக்கூறியது என்னை? யென்பாரை நோக்கி யெழுந் தது வருஞ்செய்யுளென்பது. (9)

மூன்றுதிறத் தணுக்கள்செயுங் கன்மங் கட்கு
முன்னிலையா மூவிரண்டா மத்து வாவி
னொன்றமுறை யவையருத்தி யறுத்துமல முதிர்வித்
தரும்பருவ மடைதலுமே யாசா னுகித்
தோன்றிநுக ராதவகை முற்செய் கன்மத்
துகளறுத்தங் கத்துவாத் துடக்கறவே சோதித்
தென்றவுடற் கன்மமனு பவத்தினு லறுத்திங்
கினிச்செய்கன்ம மூலமல ஞானத்தா லிடிப்பன்.

சுப — பதவுரை

அணுக்கள் மூன்று திறத்துச் செயுங் கன்மங்கட்கு — ஆன்மாக்கள் மனவாக்குக் காயமென்னு முத்திறத்தால் ஈட்டப்படுங் கன்மங்கள் எவைக்கும்,—முன்னிலையாம்

மூவிரண்டாம் அத்துவாவின் ஆன்ற முறை அவை அருத்தி அறுத்து - (பற்றுக்கொடுத்து நிற்கும்) முன்னிலை யாகிய ஆறத்துவாவினும் (ஈட்டிய முறையானன்றிப்)பக் குவமான முறையான் அக்கன்மங்களை (இறைவன்) நுகர் வித்து ஒழித்து,—மலம் முதிர்வித்து – ஆணவமலத்தை முதிர்வித்து,—அரும் பருவம் அடைதலுமே ஆசானுகித் தோன்றி – (அவ்வுயிர்கட்கு) அரிய பருவம் வந்துழிக் குருவடிவாயெழுந்தருளி,—அத்துவாத்துடக்கு அறவே சோதித்து அங்கு நுகராதவகை முன்செய் கன்மத் துகள் அறுத்து – (கிரியா சத்தி விருத்தியாகிய தீக்கையால்) மாயேயமாகிய அத்துவபந்தம் ஒழியும்படி சேர்தித்து ஆண்டு நுகராவண்ணம் (எஞ்சிநின்ற) சஞ்சிதகன்மத் துகளைச் சுத்திசெய்து,—உடல் ஏன்ற கன்மம் அனுபவத் தினல் அறுத்து – உடல் முகந்துகொண்ட பிராரத்தகன் மத்தை அனுபவத்தினல் ஒழித்து,—மூலமலம் இங்கு இனிச்செய் கன்மம் – அநாதியாகிய ஆணவமலத்தையும் இவ்விடத்து (வாதனைபற்றி நிகழும்) ஆகாமிய மலத்தை யும்,—ஞானத்தால் இடிப்பன் – (ஒளிமுன் இருள்போல) ஞானசத்தியால் ஒழிப்பன் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அநாதிமறைப்பாகிய வாணவமலமும் வாதனை பற்றி நிகழுமாகாமியவினையும் ஒளிமுன் னிருள்போல இறைவனது ஞானசத்தியா லொழியற்பாலன; அவ்வாணவ மலத்தை முதிர்வித்தற்பொருட்டு ஈட்டிய முறையானன்றிப் பக்குவமுறையா னுகர்விக்கப்பட் டெஞ்சிக்கிடந்த கன்மமல மும் அதற்குப் பற்றுக்கொடுத்து நிற்கும் முன்னிலையாகிய மாயேயமலமுங் கிரியாசத்தியாலொழியற்பாலன; உடம்பு

முகந்துகொண்ட பிராரத்தகன்மம் அனுபவத்தாலொழியற் பாலன; இங்ஙனமாகலாற் கிரியாசத்திவிருத்தியாகிய தீக்கை யால் எஞ்சிநின்ற கன்மங்களைச் சுத்திசெய்தற்பொருட்டு, அவற்றிற்குப் பற்றுக்கோடாகிய வத்துவசுத்தியே ஈண்டுக் கூறப்பட்டன வென்பதாம்.

அநாதிமறைப்பாகிய ஆணவமலமும் வாதனைபற்றி நிகழும் ஆகாமிய வினையும், ஒளிமுன் இருள்போல இறைவனது ஞான சத்தியால் ஒழியற்பாலன; அவ்வாணவமலத்தை முதிர்வித்தற் பொருட்டு ஈட்டிய முறையானன்றிப் பக்குவமுறையான் நுகர்விக் கப்பட்டெஞ்சிக்கிடந்த கன்மமலமும் அதற்குப் பற்றுக்கொடுத்து நிற்கும் முன்னிலையாகிய மாயேயமலமுங் கிரியாசத்தியால் ஒழியற் பாலன; உடம்பு முகந்துகொண்ட பிராரத்தகன்மம் அநுபவத்தால் ஒழியற்பாலது; இங்ஙனமாகலாற் கிரியாசத்தி விருத்தியாகிய தீக் கையால் எஞ்சிநின்ற கன்மங்களைச் சுத்திசெய்தற்பொருட்டு, அவற்றிற்குப் பற்றுக்கோடாகிய அத்துவசுத்தியே ஈண்டுக் கூறப் பட்டதென வகுத்தோதற்பாலனவற்றை விரிவஞ்சி ஒரு முடிபாக வைத்தோதினார்.

இரண்டும் ஒருபொருள் வினையாதற்குரிய வியைபுதோன்ற 'அருத்தி யறுத்துத்தோன்றி யறுத்' தென உடன் கூறினார்.

ஆன்றமுறை பக்குவமானமுறை.

மலமுதிர்தலாவது தனது சத்தி தேய்தற்குரிய தூணைக்கார ணங்களெல்லாவற்றோடுங் கூடிப்பதனழியுஞ் செவ்வித்தாதல்.

உயிர் பருவமடைதலாவது அறிவித்தவாறே யறியவல்லுஞ் செவ்வித்தாதல்.

அரும் பருவமென்றார், எய்துதற் கருமைநோக்கி, அது வருஞ் செய்யுளிற் பெறப்படும்.

பருவமடைதலுமே யாசாஞகித் தோன்றி யென்றதனானே, பருவமடையாதார்க்குத் தீக்கைசெய்தலும் அடைந்தார்க்கு அது செய்யாமையும் பழுதென்பது பெற்றும்.

இதனானே அத்துவசுத்தியின் சிறப்புக் கூறப்பட்டது.

உரைதருமென்பதமுத லித்தினையுங் குருவாகிவந் துணர்த்தி யென்னும் முதற்கூற்றுப் பொருளை விரித்துணர்த்தியவாறு.

இனி மன்னுமருளா லுணர்த்தி யென்னு மிரண்டாங்கூற்றினை இருபத்தைந்து செய்யுளான் விரித்துணர்த்துகின்றார். (10)

இரண்டாமதிகரணம்

புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றுற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்

சுப் — பதவுரை

(மேற்கூறிய அரும்பருவமடைதல்) புறச்சமய நெறி நின்றும் – புறச்சமய நூல்வழியே ஒழுகியும்,—அகச்சமயம் புக்கும் – அகச்சமய நூல்வழியே சென்றொழுகியும்,—

மிருதி புகல் வழி உழன்றும் – மிருதிநூல் சொல்லும் வழியே சென்றுழுகியும்,—புகலும் ஆச்சிரம அறத்துறை களவை அடைந்தும் - (வேதங்களிற்) கூறியவாறு ஆச் சிரம தருமநெறிகளின் வழுவாதொழுகியும்,—அருந்தவங் கள் புரிந்தும் – செயற்கரிய தவங்களைச்செய்தும்,—அருங் கலைகள் பல தெரிந்தும் – அரிய கலைஞானங்கள் பலவற் றைப் பயின்றும்,—ஆரணங்கள் படித்தும் – வேதங்களை ஓதியும்,—சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் - சிறப் பினையுடைய புராணங்களை அறிந்தும்,—வேதசிரப்பொ ருளை மிகத்தெளிந்தும்,—உபநிடதப்பொருளை மிக (ஆராய் ந்து) தெளிவுற்றும்,–சென்றால் சைவத்திறத்து அடைவர் - (இங்ஙனஞ் சோபானமுறையாற் பல பிறவிகளினு மேற் பட்டு நிகழ்ந்து முற்றுப்பெற்றுச்) சென்றுற் சைவக்கூற் றின் முடிபாகிய சித்தாந்த சைவத்தைத் தலைப்படுவர் (அன்றி ஒருங்கே ஒருகாலத்து முற்றுப்பெறுவதன்று),— இதில் சரியை கிரியாயோகம் செலுத்தியபின் - இச்சித்தாந்த சைவத்தினும் சரியை கிரியா யோகங்களை அநுட்டித்து முற்றியபின்,—ஞானத்தால் சிவன் அடியைச் சேர்வர் – ஞானத்தைப் பெற்று அதனாற் சிவபிரான்றிருவடிகளைச் சேர்வர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேற்கூறிய அரும்பருவமடைதல், இங்ஙனஞ் சோபானமுறையாற் பலபிறவிகளினு மேற்பட்டு நிகழ்ந்து முற்றுப்பெறுவதன்றி, ஒருங்கே பொருகாலத்து முற்றுப் பெறுவதன் றென்பதாம்.

சைவத்திற மென்றது சைவக்கூற்றின் முடிபாகிய சித்தாந்த சைவத்தை.

சென்றாலென்பது சேறலருமை விளக்கி நின்றது...

இதனுனே மேற்கூறிய பருவமடையு முறைமை கூறுமுகத் தான் மன்னுமருளென்றதன்வகையும் அவற்றிற்கு வாயிலிவை யென்பதூஉம் வகுத்துக் கூறப்பட்டன. (11)

இம்மையே யீரெட்டாண் டெய்தியெழி லாரு
மேந்திழையார் முத்தியென்று மிருஞ்சுவர்க்க முத்தி
யம்மையே யென்றுமுத்தி யைந்து கந்த
மறக்கெடுகை யென்றுமட்ட குணமுத்தி யென்று
மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி யென்றும்
விவேகமுத்தி யென்றுந்தன் மெய்வடிவாஞ் சிவத்தைச்
செம்மையே பெறுகைமுத்தி யென்றுஞ்செப் புவர்கள்
சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங் கியாமே.

சுப் —பதவுரை

(ஏனைச் சமயநூலார் கூறு முத்திகளாவன சோபான முறையான் நிலமுதல் நாதமீருய்க் கிடந்த மூப்பத்தாறு தத்துவங்களினிடைக்கட்படுவனவாம் என்னை) இம்மையே ஈரெட்டு ஆண்டு எய்தி எழில் ஆரும் ஏந்திழை ஆர் முத்தியென்றும் – உலகாயதநூலார் இம்மைக்கண்ணே பதினருண்டுள்ள அழகுபொருந்திய ஆபரணங்கள் அணிந்த அரிவையரைக் கூடி இன்புறுதலே முத்தியென்றும்,—அம்மையே இருஞ் சுவர்க்க முத்தி யென்றும் – மீமாஞ்சைநூலார்(யாகாதி கன்மங்கள் செய்து)அம்மைக் கண்ணே பெருமையாகிய சுவர்க்காதிலோக போக நுகர்தலே முத்தியென்றும்,—ஐந்துகந்தம் அறக்கெடுகை முத்தியென்றும் – சவுத்திராந்திகநூலார் உருவமுதலிய ஐவகைக் கந்தங்களு முற்றக் கெடுதலே முத்தியென்றும், —அட்டகுணம் முத்தியென்றும் – ஆருகதநூலார் அநந்த ஞான முதலிய எண்குணமடைதலே முத்தியென்றும்,—

மெய்ம்மையே பாடாணம்போல்கை முத்தியென்றும் - வைசேடிகநூலார் மெய்ம்மையாகப் பாடாணம்போற் கிடக்கையே முத்தியென்றும்,—விவேகமுத்தியென்றும் – சாங்கியநூலார் (தத்துவங்களைப் பகுத்துணரும்) விவேக ஞானமே முத்தியென்றும் மாயாவாதநூலார் (மாயை பிரமங்களை) விசாரிப்பதே முத்தியென்றும்,—தன் மெய் வடிவாஞ் சிவத்தைச் செம்மையே பெறுகை முத்தியென்றும் செப்புவர்கள் – சிவசமவாதிகண்முதலிய அகச்சமய நூலார் தன்னுண்மை வடிவாகிய சிவசாரூபமுதலிய பத முத்திகளைச் செவ்விதாகப் பெறுதலே முத்தியென்றும் கூறுவர் (என்பதாம்).—இங்கேயாஞ் செப்புவது – ஈண்டு (வேதாகமநூலுண்மையுணர்ந்த) யாங் கூறு முத்தியாவது,—சிவன் அடியைச் சேரும் முத்தி – (முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாற்பட்ட) சிவபிரான்றிருவடியைச் சேருமுத்தியாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *ஏனைச் சமயநூலார் கூறுமுத்திகளாவன சோபானமுறையால் நிலமுத லைந்தீறாய்க் கிடந்த முப்பத்தாறு தத்துவங்களிடைக்கட் படுவனவாய அரிவையரின்புறுமுத்தி முதலாயினவாம். வேதாகமநூலுண்மையுணர்ந்தயாங் கூறுமுத்தியாவது முப்பத்தாறு தத்துவங்களுக்கு மப்பாற்பட்ட சிவனடியைச் சேருமுத்தியாமென்பதாம்.*

விவேகமுத்தி இரட்டுறமொழிதல்.

ஏந்திழையை யென்னு மிரண்டாவது விகாரத்தாற்றொக்கது ஆர்முத்தி வினைத்தொகை.

உம்மையை எதிரதுதழீஇயிற்றொக்கி ஈண்டுக் கூறுத சமயமுத்திகளையும் இவற்றுடன் வைத்துக் கூறிக்கொள்க.

இதனானே புறச்சமய நெறிநிற்றன் முதலியனவெல்லாஞ் சைவத்திறத்தடைதற்குச் சோபான முறையான் வாயிலாமாறு அவற்றது பயன் கூறுமுகத்தானே இனிது விளக்கப்பட்டது. (12)

ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்க
ளொன்றேடொன் றெவ்வாம லுளபலவுமிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னி
னீதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினு ணிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூ
லாதலினு ணிவையெல்லா மருமறையா கமத்தே
யடங்கியிடு மவையிரண்டு மானடிக்கீ ழடங்கும்.

சுப் — பதவுரை

ஓது சமயங்கள் – சொல்லப்பட்ட சமயங்களும்,—பொருள் உணரும் நூல்கள் – அச்சமயப் பொருள்களை உணர்த்தற்கேதுவாகிய நூல்களும்,—ஒன்றேடு ஒன்று ஒவ்வாமல் உள பலவும் - மாறுபட்டனவாகவுள்ளன பலவாதலின்,—இவற்றுள் சமயம் யாது பொருள் நூல் யாது இங்கு என்னின் – இவற்றுள் (முதன்மையான) சமயம் யாது அச்சமயப்பொருளை (உணர்த்தும்) நூல் யாது இவ்விடத்தென்னின்,—இது ஆகும் அது அல்லது எனும் பிணக்கது இன்றி – இது பொருந்தும் அது பொருந்தாது என்னும் பிணக்கின்றி,—நீதியினுன் இவையெல்லாம் ஓரிடத்தேகாண நின்றது யாதொரு சமயம் – முறைமையான் இவையனைத்தும் ஒருங்கே காணப்பட்டு நின்றது எச்சமயமோ;—அது சமயம் பொருள் நூல் ஆதலினுன் – அதுவே (முதன்மையான) சமயமும் அச்சமயப் பொருளை (உணர்த்தும் நூலே) நூலுமாதலின்,—இவை யெல்லாம்

அருமறை ஆகமத்தே அடங்கியிடும் – (கண்ணில்லார் பலர் குழீஇக் கொண்டு வேழங்கின்றுழித் தலைப்பட்டுக் கையினுற்றைவந்து வேறு வேறு கூறும் இலக்கணங்களெல்லாம் கண்ணுள்ளானெருவன் கண்டு கூறும் அதனிலக்கணத்துள் ஏகதேசமாய்க் காணப்பட்டு அடங்குமாறுபோல ஏனைச்சமயநூலார் தத்தஞ் சிற்றறிவுக்குப் புலனையவாறுபற்றி) அவ்வந்நூல்களிற்கூறும் பொருளியல் புகளெல்லாம் (முற்றுணர்வுடைய முதல்வனுற்செய்யப்பட்ட) அரியவேதாகமங்களிற் கூறும்பொருளியல்பின் ஏகதேசமாய்க்காணப்பட்டு அவற்றுள்) அடங்குதலின் (அதுவே முதன்மையான சமயமாம்),—அவை இரண்டும் அரன் அடிக்கீழ் அடங்கும் – (சிவபிரானுற் செய்யப்பட்டு அவனையே தமக்கு முதலாகக் கொண்டுரைக்கும்) அவ்விருவகைநூலும் அவ்விறைவன் றிருவடியில் அடங்குதலின் (அவையே நூல்களாம்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *கண்ணில்லார்பலர் குழீஇக்கொண்டு வேழகின்றுழித்தலைப்பட்டுக் கையினுற்றைவந்து வேறு வேறு கூறு மிலக்கணங்களெல்லாங் கண்ணுள்ளா னெருவன் கண்டு கூறு மதனிலக்கணத்துள் ஏகதேசமாய்க் காணப்பட்டடங்குமாறுபோல, ஏனைச்சமயநூலார் தத்தஞ் சிற்றறிவுக்குப் புலனையவாறுபற்றி அவ்வநூல்களிற் கூறும் பொருளியல்புகளெல்லாம் முற்றுணர்வுடைய முதல்வனுற் செய்யப்பட்ட வேதாகமங்களிற் கூறும் பொருளியல்பின் ஏகதேசமாய்க் காணப்பட்டு அவற்றுளடங்கும். சிவபிரானுற் செய்யப்பட்டு அவனையே தமக்கு முதலாகக் கொண்டுரைக்குமவ்விருவகைநூலும் அவ்விறைவன் றிருவடியி லடங்குமென்பதாம்.*

அருமறையா கமுதனூ லனைத்துமுரைக் கையினு
னளப்பரிதா மப்பொருளை யரனருளா லணுக்க
டருவர்கள்பின் றனித்தனியே தாமறிந்த வளவிற்
றர்க்கமொடுத் தரங்களினுற் சமயஞ்சா தித்து
மிருதிபுரா ணங்கலைகண் மற்று மெல்லா
மெய்ந்நூலின் வழிபுடையா மங்கம்வே தாங்களஞ்
சுருதிசிவா கமமொழியச் சொல்லுவதொன் றில்லை
சொல்லுவார் தமக்கறையோ சொல்லொ ணுதே.

சுப் — பதவுரை

(நூலெனப்படுவனவெல்லாம் ஒருநிகரனவாதலின்றி முதனூல் வழிநூல் சார்புநூல் பூருவபக்க நூலெனப் பலவேறுவகைப்பட்டு மேன்மேனூல்களை நோக்கிக் கீழ்க்கீழ்நூல்கள் மேன்மையுடையனவாம்) சமயம் – (அவற்றுள் ஏனைச்) சமயநூல்களெல்லாம்,— அனைத்தும் உரைக்கையினுன் முதனூல் அருமறை ஆகமம் அளப்பரிதாம் அப்பொருளை – அனைத்துங் கூறுகையால் முதனூலாகிய அரியவேதாகமங்களினது அளவிடற்கரிய உயர்ந்தபொருளை,—அணுக்கள் அரன் அருளால் பின் தனித்தனியே – (முழுவதும் உள்ளவாறுணரமாட்டாத) உயிர்கள் முதல்வன் அருளால் (அவற்றுட் சில பொருளைப்) பிற்காலத்தே (சமுத்திரகலசநயம்பற்றி) ஆண்டாண்டெடுத்துக்கொண்டு,—தாம் அறிந்த அளவில் தத்தம்அறிவளவுக்கேற்ப, — தர்க்கமொடு உத்தரங்களினுல் சாதித்துத் தருவர்கள் – பூருவபக்க சித்தாந்தங்களினுற் சாதித்துத் (தொகுத்தும் விரித்துஞ்) செய்த நூலாதலான் (அவையெல்லாம் பூருவபக்கநூலெனப்படும்),— மிருதிபுராணம் கலைகள் மற்றுமெல்லாம் – (சமயநூலல்ல

வாகிய) மிருதி புராணம் கலைகள் உபாகமமுதலாயின வெல்லாம்,— மெய்ந்நூலின்வழி (ஆம்) – மெய்மையாகிய அவ்வேதாகமப் பொருளே (உள்ளவாறுணர்ந்தோர் அவற்றைப்பிறர்க்கு இனிது விளக்குதற்பொருட்டு நால் வகையாப்பினுள் ஒன்றுன்) வழிப்படுத்துச்செய்த (நூலாகலான் அவைவழி) நூலெனப்படும்.—அங்கம் வேதாங்கம் புடையாம்-(ஏனைக் காருடம் தக்கிணமுதலிய) ஆகமாங்கங்களும் (சிக்கை கற்பசூத்திரமுதலிய) வேதாங் கங்களும் (முறையே அவ்விரண்டையும் உள்ளவாறுணர் தற்குச் சார்பாய்ப்புடைபட்டு நிகழ்தலின் அவை) சார்புநூலெனப்படும்,—சுருதி சிவாகமம் ஒழியச்சொல்லு வது ஒன்று இல்லை – (இவ்வாறன்றி) வேதாகமங்களின் அடங்காத (பொருளாய் ஒன்றனையெடுத்துக்கொண்டு சுதந்திரமாய்ச் செய்யு) நூல் ஒன்றுமில்லை,—சொல்லுவார் தமக்கு அறையோ சொல்லொணுதே – (உண்டென்று) சொல்(லிப் பிணங்)கும் பேதைகட்கு உத்தரஞ்சொல்லித் தெருட்டல் இயலாது என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *நூலெனப்படுவனவெல்லா மொருங்கிகரனவாத லின்றி முதனூல் வழிநூல் சார்புநூல் பூருவபக்கநூலெனப் பலவேறுவகைப்பட்டு மேன்மேனூல்களே நோக்கிக் கீழ்க்கீழ் நூல்கண் மென்மையுடையனவாம். அவற்றுள் ஏனைச்சமய நூல்களெல்லாம், முதனூலாகிய வேதாகமப்பொருளே முழு வதுமுள்ளவாறுணரமாட்டாதார் அவற்றுட் சிலபொருளைச் சமுத்திரகலசநயம் பற்றி ஆண்டாண்டெடுத்துக் கொண்டு தத்தமறிவளவுக்கேற்பத் தொகுத்தும் விரித்துஞ் செய்த நூலாகலான் அவையெல்லாம் பூருவபக்கநூலெனப்படும்.*

சமயநூலல்லவாகிய மிருதி புராணங் கலிகள் மற்றுமென்ப தனைற்றழுவப்படும் உபாகமமுதலாயினவெல்லாம் அவ்வேதாகமப்பொருளே உள்ளவாறுணர்ந்தோர் அவற்றைப் பிறர்க்கு இனிது விளக்குதற்பொருட்டு நால்வகையாப்பினு ளொன்றன் வழிப்படுத்துச் செய்த நூலாகலான் அவை வழிநூலெனப்படும். ஏனைக்காருடந் தக்கிணமுதலிய வாகமாங்கங்களும், சிக்ஷை கற்பசூத்திர முதலிய வேதாங்கங்களும், முறையே யவ்விரண்டினையு முள்ளவாறுணர்தற்குச் சார்பாய்ப் புடைபட்டு நிகழ்தலின், அவை சார்புநூலெனப்படும். இவ்வாறன்றி வேதாகமங்களி னடங்காத பொருளாயொன்றினை யெடுத்துக்கொண்டு சுதந்திரமாய்ச் செய்யுநூல் ஒன்றுமில்லை; உண்டென்று சொல்லிப் பிணங்கும் பேதைகள் என்கடவா ரென்பதாம்.

சமுத்திரகலசசயம்பற்றி யெடுத்துக்கொண்டு தருதற்கும் அவர் சுதந்திரரல்ல ரென்பார், அரனருளா லென்றார்.

பிறநூறிகழ்பூர்வமென முன் வருதலின் ஈண்டு வேறு கூறு தொழிந்தார்.

சாதித்தத் தருவர்களென வியையும்.

ஆமென்பதனை மேலுங் கூட்டுக.

ஆகமாங்கத்தை அங்கமென்றது தலைக்குறை.

ஒன்றுமென்னுமும்மை விகாரத்தாற்றொக்கது.

அறை உத்தரம்.

எல்லா மருமறையாகமத்தே காணப்பட்டடங்குதலை இனிது விளக்கியவாறு. (14)

வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க
ளாதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டு
மாரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலா
நீதியினு னுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னெழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூ
றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்.

சுப — பதவுரை

வேதநூல் சைவநூல் என்று இரண்டு ஆதிநூல்கள்- வேதம் சிவாகமம் இரண்டும்(ஏனையோராற் செய்யப்படும் வழிநூல் சார்புநூல் பூருவபக்கநூல்களின் ஒன்ரு க வைத்து எண்ணுதற்கு ஒருவாற்ரு னும் இயைபின்றி அவையனைத்திற்கும்) முதனூலாகி,—அ நா தி அமலன் தருநூல் – அநாதிமுத்தனுகிய இ றை வ னு ற் ற ர ப் ப டு நூலாக,—வேறு உரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள் – ஏனையவெல்லாம் இவையிரண் டி னின் று ம் விரிந்த நூல்களாகலின்,—இரண்டுமே நூல் – இவ்விரு வகைநூலுமே நூலென்று உயர்த்துக் கூறப்படுவனவாம் (அற்றேல் முதல்வனுற்றரப்படு முதனூலே ஒன்ருகவைத் தெண்ணுமல் இங்ஙனம் இருவகைப்படுத்து எண்ணியது என்னையெனின் அஃதொக்கும்),—உலகர்க்கும் சத் தி நி பாதர்க்கும் நீதியினுன் ஆரணம் சைவம் நிகழ்த்தியது – (முதல்வன் பெருங்கருணையாளனுகலின்) உலகத்தார் உய்தற்பொருட்டும் சத்திநிபாதமுடையார் உய்தற்பொருட்டும் (திருவுளத்திற்கருதிப் பொருள் பலபடத்தோன்றுஞ் சூத்திரமும் அ தனை அவ்வாருகவொட்டாது தெளித்

துரைக்கும் பாடியமும்போல) முறையே வேதமும் சிவாகமமும் செய்யப்பட்டனவாகலான்,—பொதுநூல் அருஞ்சிறப்பு நூலாம் – (அவையிரண்டும் முறையானே) பொதுநூல் அரிய சிறப்புநூலெனப்பட்டுச் சூத்திரமும் பாடியமும்போல வேறுவைத்தெண்ணப்பட்டன,—நீள் மறையின் ஒழிபொருள் வேதாந்தத் தீது இல் பொருள்கொண்டு உரைக்கும் சைவநூல் – (இங்ஙனம்) விரிந்த வேதத்துட் கூறும் (கருமகாண்டப்பொருள் கட்கு இன்றியமையாது வேண்டப்பட்டு) எஞ்சிநின்றனவாய பொருள்களையும் வேதமுடிபாய உபநிடதத்தின் சாரமாயுள்ள குற்றமற்ற பொருள்களையும் வேறெடுத்துக்கொண்டு இனிது விளக்குவது சிவாகமமாதலான்,—பிறநூல் திகழ் பூர்வம் – (இதனின் வேறாய வேதத்தின் பூருவபக்கப்பொருளைச்சொல்லும்) ஏனை நூல்களெல்லாம் விளங்குகின்ற பூருவபக்க நூலெனவும்,—சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும் – (அதன் சித்தாந்தப்பொருளைச் சொல்லுவதாய) சிவாகமம் சித்தாந்த நூலெனவுமாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து வேதஞ்சிவாகமமிரண்டும், ஏனையோர் செய்யப்படும் வழி நூல் சார்புநூல் பூருவபக்கநூல்களினென்றுகவைத்தெண்ணுதற்கு ஒருவாற்றானு மியைபின்றி அவையனைத்திற்கும் முதனூலாகி அநாதிமுத்தனாகிய விறைவனாற் ரரப்படுநூலாக, ஏனையவெல்லாம் இவையிரண்டினின்றும் விரிந்த நூல்களாகலின் இவ்விருவகை நூலுமே நூலென்றுபர்த்துக் கூறப்படுவனவாம். அற்றேல், முதல்வனாற் ரரப்படு முதனூலே ஒன்றாக வைத்தெண்ணாமல் இங்ஙன மிருவகைப்படுத்தெண்ணியது என்னையெனின்,—அஃதொக்கும்,

மூதல்வன் பெருங்கருணையாளனுகலின், உலகத்தாருய்தற் பொருட்டுஞ் சத்திநிபாதமுடையாருய்தற்பொருட்டுந் திருவுளத்திற் கருதி, பொருள பலபடத் தோன்றுஞ் சூத்திரமும் அதனை யவ்வாறுகவொட்டாது தெளித்துரைக்கும் பாடிய மும்போல, முறையே வேதமுஞ் சிவாகமமுஞ் செய்யப்பட் டனவாகலான் அவையிரண்டும் முறையானே பொதுநூல் சிறப்புநூலெனப்பட்டுச் சூத்திரமும் பாடியமும்போல வேறு வைத்தெண்ணப்பட்டன. இங்ஙனம் வேத்திற் கூறுங் கருமகாண்டப்பொருள்கட்கு இன்றியமையாது வேண்டப் பட்டெஞ்சி நின்றனவாய பொருள்களேயும் வேதமுடிபாய உபநிடதத்தின் சாரமாயுள்ள பொருள்களேயும் வேறெடுத் துக்கொண்டினிது விளக்குவது சிவாகமமாகலான், இதனின் வேறாய வேதத்தின் பூர்வபக்கப்பொருளைச் சொல்லுமேனை நூல்களெல்லாம் பூர்வபக்கநூலெனவும் அதன் சித்தாந்தப் பொருளைச் சொல்லுவதாய சிவாகமஞ் சித்தாந்த நூலெனவுமாமென்பதாம்.

சிவாகமத்தின் சிறப்புக் கூறியவாறு.

இவ்வாறன்றி யுரைப்பனவெல்லாம் போலியென்பது சொற் கிடக்கை முறையானும் மகுடாகம முதலியவற்றானு மறிக.

இவை மூன்றுசெய்யுளானும் அவ்வந்நூல்களதியல்பு கூறு முகத்தான் மேலதுவலியுறுத்தப்பட்டது. (15)

சித்தாந்தத் தேதசிவன்றன் றிருக்கடைக்கண் சேர்த்திச்
சென்னமொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை யறுத்து

முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்ப னென்று
மொழிந்திடவு முலகெல்லா மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிது.வென்ன பிராந்தி.

சுப் — பதவுரை

செநநம் ஒன்றிலே சிவன் தன் திருக் கடைக்கண் சேர்த்தி – சிவபிரான் தனது (காருண்ணியத்தால் ஆசிரிய மூர்த்தமா யெழுந்தருளிப் பக்குவான்மாக்களுக்குச்) சநந மொன்றிலே திருக்கடைநோக்கஞ்சேர்த்தல் மு த லி ய தீக்கைசெய்து,—ஞானவா ரிமடுத்து ஆனந்தம்பொழிந்து-ஞானசாகரத்தின் மூழ்குவித்துச் சிவாநந்த மேலிடச்செய்தும்,—(செநநம் ஒன்றிலே) மலம் கழுவிச் சீவன்முத்தராக வைத்து – அவ்வொரு பிறப்பிற்றானே மும்மலவழுக்கை நீக்கிச் சீவன்முத்தராகச் செய்து,—ஆண்டுவரும் பிறப்பை அறுத்து – அவ்விடத்தே மேல்வரும் பிறவியை ஒழித்தும்,—முத்தாந்தப் பாதமலர்க் கீழ் வைப்பன் என்று – முத்தி முடிபாகிய திருவடிமலர்க்கீழ் அடங்கி நிற்கச்செய்வன் என்றும் (கூறுதற்கு வழியாகலான்),—சி த் தா ந் த த் தே மொழிந்திடவும் – (இத்துணைப்பெருமைத்தாகிய) சித்தாந்த நெறி (வீடுபேற்றிற்கு நேர்வழியென) உபமந்நியர் அகத்தி யர் முதலிய உயர்ந்தோரெல்லாம் வாயுசங்கிதை சிவகீதை முதலியவற்றுள் விரித்தெடுத்தோதவும்,—உலகெல்லாம் மூர்க்கராகிப் பித்தாந்தப் பெரும் பிதற்றுப் பிதற்றி – உல கத்தாரனைவரும் (அதனைத் தெளியமாட்டாது தத்தமக்கு வேண்டியவாறெல்லாம்) துரபிமானங்கொண்டு பித்த முடிவாகிய பெரும் பித்தாற் பிதற்றி,—பாவப் பெருங் குழியில் வீழ்ந்திடுவர் இது என்ன பிராந்தி – அப்பாவத்

தாற் பெருங் கொடுநரகத்தின் வீழ்வர் ஈதென்னே மயக்கம் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. இத்துணைப் பெருமைத்தாகிய சித்தாந்தநெறி வீடுபேற்றிற்கு நேர்வழியென உபமன்னியன் அகத்தியன் முதலிய உயர்ந்தோரெல்லாம் வாயுசங்கிதை சிவகீதை முதலியவற்றுள் விரித்தெடுத்தோதவும், அதனைத் தெளியமாட்டாது கத்தமக்கு வேண்டியவாறெல்லாந் தூரபிமானங் கொண்டு பிதற்றுமவ்வுலகத்தார் என்கடவரென்பதாம்.

ஔத்தராதியென்றுற்போல முத்தியந்தம் முத்தாந்தமென மரீஇயிற்று.

பித்தாந்தம் பித்தமுடிபு; பெரும்பித்தென்பதாம் (16)

இறைவ னான்ஞான மெல்லா மெல்லா
முதன்மைபனுக் கிரகமெல்லா மியல்புடைபா னியம்பு
மறைகளா கமங்களினு னறிவெல்லாந் தோற்று
மரபின்வழி வருவோர்க்கும் வாரா தோர்க்கு
முறைமையினு லின்பத்துன் பங்கொடுத்த லாலே
முதன்மையெலா மறிந்துமுயங் கிரண்டு போகத்
திறமதனல் வினையறுக்குஞ் செய்தி யாலே
சேருமனுக் கிரகமெலாங் காணுதுநாஞ் சிவற்கே.

சுப — பதவுரை

எல்லாஞானம் எல்லாமுதன்மை எல்லா அநுக்கிரகம் சிவற்கே நாம் காணுதும் – முற்றுணர்வு முடிவிலாற்றல் பேரருளாகிய மூன்றும் சிவபிரானுக்கே (யுளவென்பது)

யாந் தெளிந்தேம் (எங்ஙனமெனின்),—இயம்பு மறைகள் ஆகமங்களினுன் அறிவெல்லாம் தோற்றும் – மேற்கூறியவாற்றுற் பெறப்பட்ட வேதாகமங்களே அருளிச்செய்த ஏதுவான் முற்றுணர்வு தெளியப்படும்,—மரபின்வழி வருவோர்க்கும் வாராதோர்க்கும் முறைமையினுல் இன்பத்துன்பம் கொடுத்தலாலே முதன்மை யெல்லாம் அறிந்தும் – அவ்வேதாகமங்களினெறிச் செல்வோர்க்கும் செல்லாதோர்க்கும் அம்முறையே சுகதுக்கம் அளித்தலாகிய ஏதுவான் முடிவிலாற்றல் தெளியப்படும்,—முயங்கு இரண்டு போகத்திறமதனுல் வீனை அறுக்கும் செய்தியாலே அனுக்கிரகமெலாம் சேரும் – பொருந்திய இன்பத்துன்ப நுகர்ச்சிக் கூறுபாட்டால்(அதற்குக் காரணமாகிய)இருவினைகளை நீக்கும் ஏதுவாற் பேரருள் தெளியப்படும்,–இயல்பு உடையான் இறைவன் ஆவான் – (ஆகலான் அங்ஙனம் இம்மூன்று குணம்) இயல்பாகவுடைய அம்முதல்வன் (செநந மொன்றிலே திருக்கடைக்கண்சேர்த்தி ஞானவாரிமடுத்தானந்தம்பொழிதற்கும் அச்செநந மொன்றிலேதானே மலங்கழுவிச் சீவன் முத்தராகவைத்தாண்டு வரும் பிறப்பை யறுத்தற்கும் பாதமலர்க்கீழ் வைத்தற்கும்) வல்லவனுவான் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. முற்றுணர்வு முதலிய மூன்றுஞ் சிவபிரானுக்கே யுளவென்பது மேற்கூறியவாற்றுற் பெறப்பட்ட மறையாகமமியம்புதன் முதலிய மூன்றேதுவானும் முறையே யறியக்கிடத்தலான், அங்ஙன மிம்மூன்றுகுணமியல்பாகவுடைய வம்முதல்வன் செனனமொன்றிலே திருக்கடைக்கண் சேர்த்தி ஞானவாரிமடுத் தானந்தம்பொழிதற்கும் அச்செனன

மொன்றி லேதானே மலங்கழுவிச் சீவன்முத்தராகவைத் தாண்டு வரும்பிறப்பை யறுத்தற்கும் பாதமலர்க்கீழ் வைத் தற்கும் வல்லவனுவானென்பதாம்.

இறைவனென்றது வல்லவனென்னுந் துணையாய் நின்றது.

பலசனனங்களிலுமாகாதவற்றையெல்லாம் ஒருசனனத்திலே தானே யங்ஙனமாகச்செய்யுமாறு யாங்ஙன?மென்பாரை நாக்கி யவ்வாசங்கை நீக்கி மேலதனை வலியுறுத்தியவாறு.

இதற்குப் பிறரெல்லாம் ஓரியைபின்றுதன்மேலும் கூறியது கூறலென்னும் வழுப்பட வைத்துரைப்ப.

இவையிரண்டு செய்யுளானுஞ் சைவத்திறத் தடைதற்சிறப் புக் கூறப்பட்டது. (17)

சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கந்
தாதமார்க் கம்மென்றுஞ் சங்கரனை யடையு
நன்மார்க்க நாலவைதா ஞான போக
நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செப்வர்
சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்பிய
சாரூப்பிய சாயுச்சிய மென்றுசதுர் விதமா
முன்மார்க்க ஞானத்தா லெய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கு முத்திபத மென்பர்.

சுப — பதவுரை

சங்கரனை அடையும் நன் மார்க்கம் – (அங்ஙனம் சைவத்திறத்தடைந்தார்)சிவபிரான் றிருவடியைச் சேர்தற் குரிய நன்மையாகிய நெறி.—தாதமார்க்கம் சற்புத்திர மார்க்கம் சகமார்க்கம் சன்மார்க்கம் என்றும் நால் – தாச

நெறியென்றும் நன்மையாகிய புத்திரநெறியென்றும் தோழநெறியென்றும் நன்னெறியென்றும் நான்குவகைப் படுதலின்,—அவைதாம் நற்சரியை கிரியா யோகம் ஞான மென நவிற்றுவதும் செய்வர் – அவையே சிவசரியை கிரியை யோகம் ஞானமென்று பெயர்வழங்குவர்,—சன் மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய சாயுச்சிய மென்று சதுர்விதமாம் – அந்நன்மையாகிய நெறிகட்குப் பயன்(முறையே)சிவசாலோக சாமீப சாரூப சாயுச்சியமென நான்குவகைப்படும்.—மூன்றினுக்கு முத்திபதமென்பர் – (அவற்றுள்) சிவசரியை முதலியவற்றுன் எய்தும் சிவசாலோகமுதலிய மூன்றனைப் பதமுத்தி(யாகிய அபரமுத்தி) யெனக் கூறுவர்,—மூன் ஞானமார்க்கத் தால் எய்தும் முத்தி முடிவென்பர் – முதன்மையாகிய ஞானவழியான் எய்துஞ் சிவசாயுச்சியத்தைப் பரமுத்தி யெனக் கூறுவர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து அங்ஙனஞ் சைவத்திறத்தடைந்தார் சிவனடியைச் சேர்தற்குறிய நெறி தாதமார்க்கமுதலிய நான்குவகைப் படுதலின், அவையே சரியைமுதலிய பெயரான் வழங்கப் படும். அவற்றிற்குப் பயன்முறையே சாலோகமுதலிய அபர முத்தியுஞ் சாயுச்சியமாகிய பரமுத்தியுமாமென்பதாம்.

சாலோக்கிய முதலியவற்றிற்குப் பொருள் வருகின்ற செய்யுட்களுன்கினும் ஆசிரியர்தாமே மொழிபெயர்த்தரைக்கின்றவாற் முனறிக.

இதனை சைவத்திறத்தடைந்தாராற் செலுத்தப்படுஞ் சரியை முதலிய நான்கும் முத்திநெறியாதற்கட்படும் பேதமும் அவற்றின் பயனுங் கூறப்பட்டன. (18)

தாதமார்க் கஞ்சாற்றிற் சங்கரன்றன் கோயிற்
றலமலகிட் டிலகுதிரு மெழுக்குஞ் சாத்திப்
போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதிறிரு விளக்கிட்டுத் திருநந்த வனமுஞ்
செய்துதிரு வேடங்கண் டாலடியேன் செய்வ
தியாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியு
மியற்றுவதிச் சரியைசெய்வோ ரீசனுல கிருப்பர்.

சுப் — பதவுரை

தாதமார்க்கம் சாற்றில் – (அந்நான்கனுள்ளே) தாச நெறியைப் பேசுமிடத்து.—சங்கரன்றன் கோயிற்றலம் அலகு இட்டு – சிவபிரானுடைய திருக்கோயிலின் மாட்டுத் திருவலகிட்டு,— இலகு திருமெழுக்குஞ் சாத்தி – விளங்கும்படி திருமெழுக்கிட்டு,—தீது இல் திருவிளக்கு இட்டு–குற்றமற்ற பிரகாசம் பொருந்திய திருவிளக்கிட்டு,–திருநந்தவனமும் செய்து–அழகிய நந்த வனங்கள் வைத்து,–போதுகளும் கொய்து–திருப்பள்ளித்தாமங்கள் எடுத்து,—பூந்தார் மாலை கண்ணி புனிதற்குப் பல சமைத்து – பொலிவாகிய மலரான் இயன்ற மாலை (இண்டை முதலிய) கண்ணிகள் சிவபிரான் திருமேனியிற் பொலிவுறும்வண்ணம் பலவாக அமைத்து,—புகழ்ந்து பாடி–முதல்வனுடைய புகழ்தற்கரிய மேலாகிய சீர்த்தியினை வாயார வாழ்த்தி,–திருவேடங்கண்டால் அடியேன் செய்வது யாது பணியீர் என்று பணிந்து அவர்தம் பணியும் இயற்றுவது–சிவனடியார் திருவேடத்தைக் கண்ணுற்றவளவில் அடியேனுற் செய்யத்தக்க குற்றேவல் யாது அதனை யருளவேண்டுமென்று வணங்கி அவர் அருளிச்

செய்யும் பணிவிடையுஞ் செய்வதாம்.—இச்சரியை செய்வோர்–(புறத்தொழின்மாத்திரையானே உருவத்திருமேனியை நோக்கி வழிபடுதலாகிய) இச்சரியையினை அனுட்டித்தோர்.–ஈசன் உலகு இருப்பர்–சிவசாலோகமாகிய பதமுத்தியைப் பெறுவர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. புறத்தொழின்மாத்திரையானே உருவத்திருமேனியைநோக்கிச் செய்யும் வழிபாடு சரியையெனப்படுமென்பதாம். (19)

புத்திரமார்க் கம்புகலிற் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனமமுது முதல்கொண் டைந்து
சுத்திசெய்தா சனமூர்த்தி மூர்த்தி மானுஞ்
சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த
பத்தியினு ளருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினொடு மெரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலுமிக் கிரியையினை யியற்று வோர்க
ணின்மலன்ற னருகிருப்பர் நிஜையுங் காலே.

சுப் — பதவுரை

புத்திரமார்க்கம் புகலின் – புத்திரநெறியைச் சொல்லுமிடத்து,—புதியவிரைப் போது புகை ஒளி மஞ்சனம் அமுது முதல் கொண்டு – புதிதாகிய வாசனையுடைய மலர்கள் தூபம் தீபம் திருமஞ்சனம் திருவமுது முதலிய (பூசோபகரணங்களெல்லாந் தேடி அமைத்துக்)கொண்டு ஐந்து சுத்தி செய்து ஆசனம் மூர்த்தி மூர்த்திமானும் சோதியையும் பாவித்து ஆவாகித்து – பஞ்சசுத்திகள் பண்ணி(ச்

சிவாசனமூர்த்தி மூலங்களாலே முறையே) ஆசனமிட்டு மூர்த்தியை எழுந்தருளச்செய்து மூர்த்திமானுகிய பரஞ் சோதியைப் பாவனைசெய்து ஆவாகித்து,—சுத்தபத்தியி னுல் அருச்சித்து – நிருமலமாகிய மெய்யன்பினுல் அ ரு ச் சனைசெய்து,—பரிவினெடும் பரவிப் போற்றி – விருப்பத் தொடு துதித்து வழிபாடியற்றி,—நித்தலும் எரியில் வரு காரியமும் பண்ணி – நித்தியாக்கினி காரியமுஞ் செய்து (முடிப்பதாம்),—நினையுங் காலே இக்கிரியையினை இயற்று வோர்கள் – நினையுமிடத்து(ப் புறத்தொழில் அகத்தொழி லென்னும் இரண்டானும் அருவுருவத் தி ரு மே னி யை நோக்கி வழிபடுதலாகிய) இக்கிரியையினை அ னு ட் டி த் தோர்,—நின்மலன்றன் அருகு இருப்பர் – சி வ சா மீ ப மாகிய பதமுத்தியைப் பெறுவர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து புறத்தொழி லகத்தொழிலென்னு மிரண்டானும் அருவுருவத்திருமேனியை நோக்கிச் செ ய் யு ம் வழிபாடு கிரியையெனப்படு மென்பதாம். (20)

சகமார்க்கம் புலனெடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ்
சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்க
ளகமார்க்க மறிந்தவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங்
கணைந்துபோய் மேலேறி யலர்மதிமண் டலத்தின்
முகமார்க்க வழுதுடல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தன் முதலாக வினைக
ளுகமார்க்க வட்டாங்க யோக முற்று
முழுத்தலுழுந் தவர்சிவன்ற னுருவத்தைப் பெறுவர்.

சுப் — பதவுரை

சகமார்க்கம் உழத்தல்–தோழநெறிப் பயிற்சியாவது,– இரண்டும் தடுத்து – (உச்சுவாசம் நிச்சுவாசம்) இரண்டையும் அடக்கி,—வளி சலிப்பு அற்று – (சுழுமுனைமார்க்கத்திலே) பிராணவாயுவைச் சலனமற நிறுத்தி,—புலன் ஒடுக்கி – விடயங்களின் வழி (மனத்தைச் செல்லவொட்டாது) மீட்டு,—முச்சதுரமுதல் ஆதாரங்கள் அகமார்க்கம் அறிந்து – முக்கோணம் சதுரமுதலிய (வடிவினவாகிய மூலாதாரம் சுவாதிட்டானமாதிய) ஆறுதாரங்களின் அந்தர்மாதிருகாக்கிரமத்தை உணர்ந்து,—அவற்றின் அரும்பொருள்கள் உணர்ந்து - அவ்வாதாரங்களின் அரிய அதிதேவதைகளைத் தியானித்து(அவ்வாறுதாரங்களினும் அசபாசத்தி சிவான்மிகையாய் நிற்கு முறைமையைநோக்கி),—அங்கு அணைந்துபோய் மேல் ஏறி – மூலாதாரந்தொடங்கி (விநாயகர் முதலாகிய தேவதைகளை)ப் பொருந்தி மேலாகிய (பிரமரந்திரமளவும் அசபையுடன்) சென்றணைந்து,—அலர்மதி மண்டலத்தின் முகமார்க்க அமுது – (அப்பிரமரந்திரத்தின்கண்ணதாகிய தாமரை முகையை) அலர்வித்து (அதன் கேசராக்கிரத்துள்ள) சந்திரமண்டலத்தை (மூலாக்கினியினுல் இளகப்பண்ணி)அவ்வழித்தாக ஒழுகும் அமிர்தத்தை,—உடலம் முட்டத் தேக்கி – தேக முழுவதும் நிரப்பி,–முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக–பூரணப் பிரகாசத்தைத் தியானித்தன் முதலிய(வாம்),—வினைகள் உக மார்க்க அட்டாங்கயோகம் முற்றும் உழந்தவர் – வினைகள் கெடுதற்குரிய வழியாகிய (இமயநியம முதலிய) இவ்வட்டாங்க யோகமென்னும் (அகத்தொழின் மாத்திரையானே அருவத்திருமேனியை நோக்கி வழிபடுதல்) முற்றும் அனுட்டித்தோர்,—சிவன்றன் உருவத்தைப் பெறுவர் – சிவசாரூபமாகிய பதமுத்தியைப் பெறுவர் என்க.

எ து. அகத்தொழின்மாத்திரையானே அருவத்திரு மேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு யோகமெனப்படு மென்பதாம்.

சகமார்க்கமுழத்தலென வினைமுடிக்க.

இவ்வியோக முழத்தவரென எடுத்துக்கொண்டுரைக்க. (21)

சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்க டாம்பலவு முணர்ந்து
பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம்
பதிபசுபா சந்தெரித்துப் பரசிவனைக் காட்டு
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப்
பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் காணே.

சுப — பதவுரை

சன்மார்க்கம் – நன்னெறியாவது,—சகலகலை புராணம் வேதம் சாத்திரங்கள் சமயங்கள் தாம் பலவும் உணர்ந்து – எல்லாக் கலைஞானங்களும் புராணங்களும் வேதசிவாகமங்களினுள்ள கருமகாண்டங்களும் (ஏனை) நூல்களும் (மற்றச்) சமயசாத்திரங்கள் பலவும் ஆராய்ந்து,—பல் மார்க்கப் பொருள் பலவும் கீழாக (க் கழித்து)-பலவழிப்படுகின்ற பொருள் முழுவதும் கீழெனக்கண்டு கழித்து,—மேலாம் பதி பசு பாசம் தெரித்து – மேலாய பதி பசு பாசமென்னு முப்பொருளையும் (தடத்தலக்கணத்தின் வைத்து வகுத்து) உணர்த்தி,—பரசிவனைக்காட்டும் நன்மார்க்க ஞானத்தை நாடி - (அம்மூன்றனுட்) பதிப்

பொருள் (ஏனைப்பாச பசுக்களுக்கு மேலாதல்) இனிது விளங்கச் சொரூபலக்கணத்தின் வைத்துணர்த்துதலாகிய நல்வழிக்கேதுவான ஞானகாண்டத்தை (ஓதல் கேட்டல் களுடன்) சிந்தித்து,—ஞானஞேயமொடு ஞாதிரு வும் நாடாவண்ணம் பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி – (புறத்தொழில் அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத்தொ ழின் மாத்திரையானே அம்மூன்று திருமேனிக்கு மேலாய்) ஞாதிரு ஞான ஞேயமாகிய பகுப்பின்றி அத்துவிதமாய் இயைந்த (அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற) சிவபிரான்மாட்டுச் செய் யும் வழிபாடாகும்,— ஞானப் பெருமையுடையோர்–(இம்) மகிமைபொருந்திய ஞானத்தினை அநுட்டித்தோர்,—சிவ னைப் பெறுவர் காணே – சிவசாயுச்சியமாகிய பரமுத்தி யைப் பெறுவர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. புறத்தொழிலகத்தொழி லிரண்டுமின்றி அறிவுத் தொழின்மாத்திரையானே அம்மூன்று திருமேனிக்கும் மே லாய் அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப்பிழம்பாய் நிறைந்துநிற்கின்ற சிவபிரானிடத்திற் செய்யும் வழிபாடு ஞானமெனப்படு மென்பதாம்.

அவ்வழிபா டிவையென்பது முன்னர் வகுத்துக் கூறப்படும்.

ஈண்டு வேதமென்றது வேதஞ் சிவாகமமென்னு மிரண்டினு முள்ள கருமகாண்டத்தை. சிவாகமமும் வேதமென வழங்கப்படும். கீழுள்ளவற்றைக் கீழெனக்கண்டு கழித்தாலன்றி மேலுள்ளன பயன்படாவென்பார், கீழாக வென்றார். கழித்தென்பது சொல் லெச்சம்.

பதிபசுபாசந் தெரித்தலாவது அம்மூன்று பொருளையுந் தடத்த லக்கணத்தின் வைத்து வகுத்துணர்த்துதல். பரசிவனைக் காட்டலாவது அம்மூன்றனுட் பதிப்பொருள் வேறைப் பாசபசுக்க ளுக்கு மேலாத லினிதுவிளங்கச் சொரூபலக்கணத்தின் வைத் துணர்த்துதல். ஈண்டு ஞான மென்ற து ஞானசாத்திரத்தின் மேற்று. தெரித்துக்காட்டு ஞானநூலெனவே, ஞான காண்ட மெல்லாந் தூலாருந்ததி நியாயம்பற்றி இங்ஙன மிருபகுதிப்பட நிகழுமென்பதாயிற்று.

காடுதல் சிந்தித்தல். காடியெனவே, காடுதற்கு வேண்டப் படும் ஓதல் கேட்டல்களும் உடன்கொள்ளப்படும்.

பின்மார்க்கச்சிவன் வினைத்தொகை.பின்னுதல் அத்துவிதமா யினைதல்.

நாடாவண்ணம் பின்னிய சிவனென்றுரைக்க. மார்க்கம் இடைப்பிறவரல்.

சன்மார்க்கமாவ துணர்ந்து கழித்து காடி யுடலும் பெற்றி யென வினைமுடிபுசெய்க.

மேல் இச்சரியை இக்கிரியை யென்ருற்போல ஈண்டும் இஞ் ஞானப் பெருமை யெனக் சுட்டு வருவித்துரைக்க.

இவை நான்கு செய்யுளானும் மேலெடுத்துக்கொண்ட சரியை முதலிய நான்கிற்கு மிலக்கணங் கூறப்பட்டது. (22)

ஞானநூ றறிவோத லோது வித்த
னற்பொருளைக் கேட்பித்த ருன்கேட்ட னன்ரு
வினமிலாப் பொருளதனைச் சிந்தித்த லிந்து
யிறைவனடி யடைவிக்கு மெழின்ஞான பூசை

யூனமிலாக் கன்மங்க டபஞ்செபங்க டியான
மொன்றுக்கொன் றுயருமிவை யூட்டுவது போக
மானவையான் மேலான ஞானத்தா லரனை
யருச்சிப்பர் வீடெய்த வறிந்தோ ரெல்லாம்.

சுப் — பதவுரை

ஒன்றுக்கு ஒன்று உயரும் – (சிவதருமோத்தரத்திற் கூறியவாறே) ஒன்றற்கொன்றேற்றமாகிய (கன்மமுதல் ஞானமீருகிய வேள்வி ஐந்தனுள்),—ஊனம் இலாக் கன் மங்கள் தபம் செபங்கள் தியானம் இவை போகம் ஊட்டு வது ஆனவையான் – குறைவில்லாத கன்மவேள்வி தவ வேள்வி செபவேள்வி தியானவேள்வி யென்னு முன்னிய நான்கும் போகத்தை ஊட்டுவனவாகலின்,—ஞான நூல் தனை ஓதல் – (நூலின்கண் அதிகார முடையராயினர்) ஞான நூலைத் தாமோதுதலும்,—ஓதுவித்தல்(-அந்நூலைப்) பிறர்க் கோதுவித்தலும்,—நற்பொருளைக் கேட்பித்தல் – நன்மையாகிய அந்நூற்பொருளை (த் தமது மதிநுட்பத் தால் உணர்ந்து) பிறர்க்குரைத்தலும்,—நன்றுகத் தான் கேட்டல்-(ஆசிரியனை வழிபட்டு அந்நூற்பொருளைத்)தாஞ் செவ்விதாகக் கேட்டலும்,—ஈனம் இலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும் எழில் ஞானபூசை – குறைவில்லாத அப்பொருளைச் சிந்தித்தலுமாகிய ஐவகைப்பட்ட அழகிய ஞானவேள்வி யொன்றுமே,—இறைவன் அடி அடைவிக் கும் – வீடுபேற்றைத் தருவதாம் (ஆதலால்),—வீடு எய்த அறிந்தோர் எல்லாம் – அவ்வீடுபேற்றை அடைய உணர்ந் தோர் எல்லாரும்,—மேலான ஞானத்தால் அரனை அருச் சிப்பர் – (அங்ஙனம் ஐவகையான்) மேம்பட்ட ஞான வேள்வியினாலே சிவபிரானை நோக்கி வேட்கற்பாலர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து சிவதருமோத்தரத்திற் கூறியவாறே ஒன்றற் கொன்றேற்றமாகிய கன்மவேள்வி தவவேள்வி செபவேள்வி தியானவேள்வி ஞானவேள்வியென்னு மைந்தனுள், மூன்னையநான்கும் போகத்தையூட்டுவனவாக, ஓதன்முத லிவகைப்பட்ட ஞானவேள்வியொன்றுமே வீடுபேற்றைத் தருவதாகலான் அஃதுணர்ந்தோரா லங்ஙன மைவகை ஞானவேள்வியே வேட்கற்பாற் றென்பதாம்.

தெளிதற்கும் நிட்டைக்கும் நூல் வேண்டாமையின் நூலானுகற்பாலனவாய ஏனை யைந்துமே ஈண்டு வேள்வியென்றெடுத்துக் கொள்ளப்பட்டன.

கற்பொருளைத் தான்கேட்டல் கேட்பித்தலெனக் கேட்டதற்குப் பின் வைத்தோதாமையான், ஈண்டுக் கேட்பித்தலென்றது, ஆசிரியனை வழிபட்டுத் தான் கேட்டலின்றியும் ஓதவுமோதுவிக்கவும் பெற்று நூலின்கணதிகாரமுடையராயினுர் அந்நூற்பொருளைத் தமது மதிநுட்பத்தாலுணர்ந்து தம்மா லோதுவிக்கப்பட்டார்க்கு உரைத்தலேயென்பது பெற்றும்.

கேட்டதற்குப் பின்னர்த்தாகிய ஏனைக் கேட்பித்தல், பிறர்க்குரையிடத்தே நூற்கலப்பானு மென்பவாகலிற் சிந்தித்தற் பயத்தாய் அதனுளடங்குதலின், வேறுவைத்தெண்ண வேண்டாவாயிற்று. அற்றுகலினன்றே வருஞ் செய்யுளிற் கேட்டற்குப்பின் சிந்தித்தலே கூறியொழிந்ததூஉமென்க. (23)

கேட்டலுடன் சிந்தித்த தெளித னிட்டை
கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்
வீட்டையடைந் திடுவர்நிட்டை மேவி னோர்கண்
மேவாது தப்பினவர் மேலாய பதங்கட்

கீட்டியபுண் ணியநாத ராகி யின்ப
மினிதுதுகர்ந் தானருளா லிந்தப் பார்மே
லுட்டியநற் குலத்தினில்வந் தவதரித்துக் குருவான்
ஞானநிட்டை யடைந்தடைவர் நாதன் றூளை.

சுப் — பதவுரை

கிளக்கில் ஞானம் – மேற்கூறிய (ஞானவேள்வி ஐந்தனுள் முன்னிய மூன்றினும் ஆசிரியன் அறிவுறுக்கும் உண்மைஞானம் நிகழாமையின்) உண்மைஞான மெனப்படுவன,—கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தலென ஈரிரண்டேயாம் – (ஏனை)க் கேட்டல் சிந்தித்தல்களும் சிந்தித்ததனைப் பின்னர்த்) தெளிதலும் (தெளிந்தவாறே அதன்பின்) நிட்டைகூடுதலுமென்னும் நான்கேயாம்,—நிட்டை மேவினோர்கள் வீட்டை அடைந்திடுவர்-(இம்முறையேவந்து) நிட்டை பொருந்தினோர் வீட்டினைத் தலைப்படுவர்,—மேவாது தப்பினவர் -- (இந்நான்கினுள்) மேவுதலின்றி(த் தீக்கையில் அத்துவசுத்தி பண்ணப்பட்டு ஓதல் ஓதுவித்தல் கேட்பித்தல் மாத்திரையினின்று)தப்பினவர்,—மேலாய பதங்கட்கு ஈட்டிய புண்ணியநாதராகி இன்பம் இனிது நுகர்ந்து – மேலாய பதமுத்திகட் கீட்டப்பட்ட புண்ணியத்தலைவராய் (ஆண்டுவைகி) இன்பத்தினை நன்குபெற அனுபவித்து,—அரன் அருளால் இந்தப் பார்மேல் நாட்டிய நற்குலத்தினில் வந்து அவதரித்து – முதல்வனுணையான் (அவைகளினின்று நீங்கி) இவ்வுலகத்தின் கண்ணே உயர்ந்த நற்குலத்திற்றோன்றிய துணையானே,–குருவான் ஞான நிட்டை அடைந்து நாதன் தாள் அடைவர் – ஆசிரியன் (மாட்டுக் கேட்டல் முதலிய நெறி)யால் ஞான நிட்டையினைத் தலைக்கூடி வீடுபேறெய்துவர் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. மேற்கூறிய ஞானவேள்வியைக்தனுள் மூன்னைய மூன்றினும் ஆசிரியனறிவுறுக்கு முண்மைஞானம் நிகழாமையின், உண்மை ஞானமெனப்படுவன ஏனைக் கேட்டல்சிந்தித்தல்களுஞ் சிந்தித்ததனைப் பின்னர்த் தெளிதலுந் தெளிந்தவாறே யதன்பினிட்டை கூடுதலுமென்னு நான்கேயாம். இம்முறையே வந்து நிட்டைபொருந்தினேர் வீட்டினைத் தலைப்படுவர். இந்நான்கினுண் மேவுதலின்றித் தீக்கையி லத்துவசுத்தி பண்ணப்பட்டு ஓத லோதுவித்தல் கேட்பித்தன் மாத்திரையினின்று தப்பினவர், பதமுத்திகளின் வைகி நீங்கிய தூணையாமே ஆசிரியன் மாட்டுக் கேட்டன்முதலிய நெறியானிட்டையினைத் தலைக்கூடி வீடுபேறெய்துவரென்பதாம்.

ஓதன்முதலிய மூன்றினின்றூர்க்குங் கேட்டன்முதலிய ஆசிரியனையின்றியமையாவென்பது உணர்த்துதற்பொருட்டு, இந்தப்பார்மே ஞட்டிய நற்குலத்தினில்வந் தவதரித்தென்ற தூணையேயாகலின் அதுவே நியதமன்றெனக் கொள்க. சரியை முதலியவற்றினின்றூரும் அங்கு நாதனே முன்னிற்கி னணுகுவர் நற்றூளே யென வருஞ்செய்யுளிற் கூறப்படுதலின்.

இனி மேவாது தப்பினவ ரென்பதற்குக் கேட்டன்முதலிய மூன்றினின்று தப்பினவ ரென்றுரைப்பாருமூளர்; கேட்டபின்னர்க் கேட்கவேண்டாமையானும்; சிந்தித்தபின் நூல்வேண்டாமையானும், தெளிந்தவழி நிட்டைமேவுதற்கு இடையூடின்மையானும், கேட்டன் முதலியவற்றினின்றூர் சுத்ததத்துவ புவனங்களின் அபரமுத்தராக வைகிய வாறே பரமுத்தியைத் தலைப்படுவதன்றி மீளுதலின்மையானும், அவர்களைச் சரியைமுதலியவற்றினின்றூரோடொப்பவைத்து அங்ஙனமுரைத்தல் சிறிதுமேலாமையானும்,

மேலைச் செய்யுளோ டியையுபடாமையானும், அவருரைப்பனவெல்லாம் போலியென்றெழுக.

இவையிரண்டு செய்யுளும் மேற்கூறிய ஞானமாவது இத்தலைப்பகுதித்தென்பதூஉம் அவற்றுட் பொதுச்சிறப்பாமாறும் அவற்றிற்குரிய பயன்வேறுபாடு முணர்த்தியவாறு. (24)

தானமியா கந்தீர்த்த மாச்சிரமந் தவங்கள்
சாந்திவிர தங்கன்ம யோகங்கள் சரித்தோர்
ஈனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வ
ரீசனியோ கக்கிரியா சரியையினி னின்றோர்
ஞானமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லா
மொடுங்கும்போ தரன்முனிலா தொழியினுற்ப வித்து
ஞானநெறி யடைந்தடைவர் சிவனே யங்கு
நாதனே முன்னிற்கி னணுகுவர்நற் றுளே.

சுப் — பதவுரை

தானம் – தானங்கள் கொடுத்தலும்,—யாகம்–வேள்விகள் வேட்டலும்,—தீர்த்தம் – புண்ணிய தீர்த்தங்கள் ஆடலும்,—ஆச்சிரமம் – தத்த நிலைகளிற் றவறுதுநிற்றலும்,—தவங்கள் – தபசுகள் புரிதலும்,—சாந்தி – பிராயச்சித்தங்கள் பண்ணலும்,—விரதம்–விரதங்கள் காத்தலும்,—கன்மயோகங்கள் சரித்தோர் – கர்மயோகங்கள் இயற்றலுமாகிய இவைகளை அநுட்டித்தோர்,—ஈனம் இலாச் சுவர்க்கம் பெற்று இமைப்பு அளவில் மீள்வர் – (இன்ப) மிக்குடைய துறக்கவுலகத்தினைப் பொருந்தி (ப் போகங்களை நுகர்ந்து) வீரைந்து மீளுவராகலின் (மேலேமேலே போயு மீளுதற்கேதுவாகிய அப்பசுபுண்ணியம் போலன்றி),—ஈசன் சரியை கிரியா யோகினின் நின்றோர் –

முதல்வன் (விதித்த மேம்பட்ட) சரியை கிரியா யோகங் களாகிய சிவபுண்ணியங்களை (விதிவழி) அநுட்டித்தோ ரும்,—ஊனம் இலா முத்திபதம் பெற்று – (உண்மைஞான மேவாது தப்பினவரோடொப்பத் தத்தமக்குரிய) நிருமல மாகிய பதமுத்திகளி (னெடுங்காலம்) வைகி,—உலகமெல் லாம் ஒடுங்கும்போது அரன் முன் நிலாது ஒழியின் – பிர பஞ்ச முழுதுஞ் சங்காரப்படும்பொழுது முதல்வன் முன் னின்றருளாஞகில்,—உற்பவித்து ஞானநெறி அடைந்தே சிவனை அடைவர் - (மீட்டுஞ்) சநநத்தை யுற்று (முடிவின் கண் எவ்வாற்றானும் குருவருளான்) ஞானநெறியைத் தலைப்பட்டே வீடெய்துவர்,—அங்கு நாதன் முன்னிற் கின் நற்றாளை நணுகுவர் – (அங்ஙனஞ் சாலோக முதலிய பதமுத்தி பெற்றோரும்) ஆண்டு முதல்வன் அருளப் பெறிற் றிருவடியிற் கலப்பர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *மேலேமேலே போயும் மீளுதற்கேதுவாகிய பசு புண்ணியம்போலன்றி, மேம்பட்ட சரியைமுதலிய சிவபுண் ணியங்களை விதிவழியனுட்டித்தோரும், மேவாது தப்பினவ ரோடொப்பத் தத்தமக்குரிய பதமுத்திகளி னெடுங்காலம் வைகி முடிவின்க ணெவ்வாற்றானும் ஞானநெறியைத் தலைப் பட்டே வீடெய்துவ ரென்பதாம்.*

இச்செய்யுள் சரியைமுதலியவற்றிற்குப் பயன் மேற்கூறிய சாலோக முதலிய பதமுத்தி மாத்திரையே போலுமென்னு மாசங் கையை நீக்கியதாமாயிற்று. (25)

சிவஞானச் செயலுடையோர் கையிற் றானந்
திலமளவே செய்திடினு நிலமிலைபோற் றிகழ்ந்து
பவமாயக் கடலினழுந் தாதவகை யெடுத்துப்
பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை யறுக்கத்

தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணிச்
சரியைகிரி யாயோகந் தன்னிலுஞ்சா ராமே
நவமாகுந் தத்துவஞா னத்தை நல்கி
நாதனடிக் கமலங்க ணணுகுவிக்குந் தானே.

சுப — பதவுரை

சிவஞானச் செயலுடையோர் கையின் தானம் திலம் அளவே செய்திடினும் – (விதிவழியின்றிப் பத்திவழியினின்றோர்) சிவஞானிகள் கையின்கண்ணே தானஞ்செய்தளித்த பொருள் சிறிதேயாயினும்,—நிலம் மலைபோல் திகழ்ந்து - நிலமும் மலையும்போல மிக்கோங்குதலான் (அத்தானம் அப்பத்தருக்கு),—பரபோகம் துய்ப்பித்து – மேலாகிய (சிவசாலோகாதி பதங்களை ஒருதலையாக நண்ணி ஆண்டிளவாகிய) இன்பங்களை அநுபவிக்கச் செய்து,—பவமாயக்கடலின் அழுந்தாதவகை எடுத்து – சநநமரண வஞ்சக்கடலின்கண் அமிழ்ந்தாவண்ணம் எடுத்து,—பாசத்தை அறுக்க – பாசத்தினை நீக்க,—தவம் ஆரும் பிறப்பு ஒன்றின் சாரப்பண்ணி – தவஞ்செய்தற்குரிய (உயர்ந்த குலத்தில்) ஒரு பிறவியை அடையச் செய்து,—சரியை கிரியா யோகந்தன்னினும் சாராமே – சரியை கிரியா யோகங்கள் (ஏனோர்க்குப் போலக் கால நீட்டிப்பும் அருமையுமின்றி) எளிதிற் கைகூடி முற்றுப் பெறச் செய்து,–நவம் ஆகும் தத்துவஞானத்தை நல்கியே நாதன் அடிக்கமலங்கள் நணுகுவிக்கும் தான் – (முடிவின்கண்ணே) புதுமையாகிய உண்மை ஞானநெறியைத் தலைப்படுத்தியே முதல்வனது செங்கமலமலர்போலுந் திருவடியாகிய வீட்டினை எய்துவிக்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. விதிவழியின்றிப் பத்திவழியினின்று பதமுத்தியைப் பெற்றோரும் முடிவின்கண் ஞானநெறியைத் தலைப்பட்டே வீடெய்துவ ரென்பதாம்.

பத்திநெறியினின்றோர்க்குப் பக்குவமிகுதிப்பாட்டாற் சரியை கிரியா யோகம் எளிதிற் கைகூடி முற்றுப்பெறுவனவன்றி ஏனோர்க்குப்போலக் காலநீட்டிப்பும் அருமையு முடையனவல்லவென்பார், சரியை கிரியா யோகந் தன்னினுஞ் சாராமே யென்றாராகலின், சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வரென மேற்கூறிய சோபானமுறையோடு மாறுமை யறிக.

இவைதான்கு செய்யுளானும் ஐவகைவேள்வி யாற்றினோர் பெறும் பயனும் சரியை முதலியவற்றிற் சரித்தோர் பெறும் பயனும் சிவஞானிகட்குச் செய்யுந் தானப்பெருமை கூறுமுகத்தாற் பத்திநெறியினின்றோர் பெறும் பயனும் உணர்த்து முகத்தானே, எந்நெறியினின்றோர்க்கும் வீடுபேறெய்துதற்கண் ஞானநெறியாகிய சன்மார்க்கம் இன்றியமையாச் சிறப்பிற்றென்பது கூறப்பட்டது.

ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராண
நல்லவா கமஞ்சொல்ல வல்லவா மென்னு
மூனத்தா ரென்கடவ ரஞ்ஞா னத்தா
லுறுவதுதான் பந்தமுபர் மெய்ஞ்ஞா னந்தா
னைத்தா லதுபோவ தலர்கதிர்முன் னிருள்போ
லஞ்ஞானம் விடப்பந்த மறுமுத்தி யாகு
மீனத்தார் ஞானங்க ளல்லா ஞான
மிறைவனடி ஞானமே ஞான மென்பர்.

சுப் — பதவுரை

ஞானத்தாலே வீ டென் று – (மேற்கூறியவாற்றால் ஏனைய வெல்லாம் ஞானத்தைப் பயப்பிக்கும்) ஞ ா ன ம் ஒன்றே வீடுபேற்றிற்குச் சிறந்த காரணமென் று,—நான் மறைகள் புராணம் நல்ல ஆகமம் சொல்ல – ந ா ன் கு வேதங்களும் பதினெண்புராணங்களும் இருபத்தெட்டுச் சிவாகமங்களுமாகிய பிரமாண நூல்களெல்லாந் துணிந்து கூறுவதாகவும்.—அல்லவாமென்னும் ஊனத்தார் என் கடவர் – அவற்றோடு பிணங்கி (வீடுபேற்றிற்குத் தீக்கை மாத்திரையே அமையும் ஐவகை வேள்வி முதலிய கன் மங்களே அமையும் பத்திநெறிமாத்திரையே அமையு மென்று இவ்வாறு) பிதற்றும் பேதை நீரார் (ஒருவாற்றா னுந்)தெருட்டற்பாலர் அல்லரெனவும்,—அ ஞ் ஞ ா ன த் தால் பந்தம் உறுவது தான் – (ஞானமல்லாதன வெல் லாம் அஞ்ஞானமாகலின்) அவ்வஞ்ஞானப் பகுதிகளாற் பந்தமுறுதலே (அன்றி வீடுபேறடைதல் கூ டா தெ ன வும்),—அது அலர் கதிர்முன் இருள்போல் உயர் மெய் ஞானந்தான் ஆனத்தால் போவது-அவ்வஞ்ஞானப் பகுதி களெல்லாம் விரிந்த ஒளிமுன் இருள்போல மேம்பட்ட உண்மைஞானத்தின் முன்னர்ச் சத்திகெட்டொழியும்.— அஞ்ஞானம்விடப் பந்தம் அறும் முத்தி ஆகும் – அவ்வஞ் ஞானப்பகுதிகள் ஒழியவே (அவற்றாலாகிய) பந்தம் நீங் கும்(அதுநீங்கவே)முத்திநிலை கைகூடுமாகலான் (ஞானம் ஒன்றே முத்திக்குச் சி ற ந் த கா ர ண மெனவும்).— ஈனத்தார் ஞானங்கள் அல்லாஞானம் – (ஞானத்துள்ளும்) தார்க்கிகர் சாங்கியர் மாயாவாதி மு த லி யோ ர் கூறும் ஞானங்களெல்லாம் பாசஞான பசுஞானங்க ளாகலான் (அவையும் பந்தமுறுத்துவனவேயன்றி வீடெய்துவிக்க

மாட்டாமையின்).—இறைவன் அடி ஞான மே ஞான மென்பர் – (அவற்றின்வேறுய) முதல்வன் றிரு வடி ஞானமொன்றே அப்பெற்றித்தாகிய ஞானமாவதெனவுங் கூறுவர் (அந்நூல்களின் உண்மையுணர்ந்தோர்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து மேற்கூறியவாற்றுல் ஏனையவெல்லா ஞானத்தைப் பயப்பிக்கும் ஞானமொன்றே வீடுபேற்றிற்குச் சிறந்த காரணமாவதென்பது வேதமுதலிய பிரமாண நூல்கட்கெல்லாந் துணிபாகவும், அவற்றோடு பிணங்கி வீடுபேற்றிற்குத் தீக்கைமாத்திரையே யமையும் ஐவகை வேள்விமுதலிய கன்மங்களேயமையும் பத்திநெறிமாத்திரையே யமையுமென்று இவ்வாறு பிதற்றும் பேதைதீரார் ஒருவாற்றுனுந் தெருட்டற்பால ரல்லரெனவும், ஞானமல்லாதனவெல்லா மஞ்ஞானமாகலின் அவ்வஞ்ஞானப்பகுதிகளாற் பந்தமுறுதலின்றி வீடுபேறடைதல் கூடாதெனவும், அவ்வஞ்ஞானப் பகுதிகளெல்லாம் ஒளிமுன்னிருள்போல ஞானத்தின் முன்னர்ச் சத்திகெட்டொழியும் அவையொழியவே அவற்றுலுய பந்தநீங்கும் அது நீங்கவே முத்திநிலை கைகூடுமாகலான் ஞானமொன்றே முத்திக்குச் சிறந்தகாரணமெனவும், ஞானத்துள்ளுந் தார்க்கிகர் சாங்கியர் மாயாவாதிமுதலியோர் கூறும் ஞானங்களெல்லாம் பாசஞான பசுஞானங்களாகலான் அவையும் பந்தமுறுத்துவனவேயன்றி வீடெய்துவிக்கமாட்டாமையின் அவற்றின் வேறுய திருவடிஞானமொன்றே அப்பெற்றித்தாகிய ஞானமாவதெனவுங் கூறுவர் அந்நூல்களினுண்மையுணர்ந்தோ ரென்பதாம்.

ஏகாரமிரண்டும்பிரிநிலைக்கண் வந்தன.

சொல்லவுமெனச் சிறப்பும்மை விரித்துரைக்க.

தானிரண்டும் அசை.

ஆனத்தால் ஆனவதனுலென்க. ஆனவென்பதனுளகாரமும் அதனுலென்பதனு ளன்சாரியையுந் தொடைநோக்கி விகாரத்தாற் றொக்கன. "பெற்றத்தாற் பெற்ற பயன்" (திருக்குறள், சுற்றந் தழால், செ - 4.) என்றுற்போல. ஆதல் உண்டாதல்.

இதனுனே பிறவெல்லாம் வீடுபேற்றிற்குச் சிறந்த காரண மல்லவாதல் இனிது விளக்கி மேலது வலியுறுத்தப்பட்டது.

இத்துணையும் ஞானத்தினியல்பும் அதன்பயனும் பொதுவகையாற்கூறி, இனிச் சிறப்புவகையாற் கூறுகின்றுர். (27)

சூரியகாந் தக்கல்லி னிடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்று மாபோ
லாரியனு மாசான்வந் தருளாற் றோன்ற
வடிஞான மான்மாவிற் றோன்றுந் தோன்றத்
தூரியனுஞ் சிவன்றோன்றுந் தானுந் தோன்றுந்
தொல்லுல கெல்லாந்தன் னுள்ளே தோன்று
நேரியனுய்ப் பரியனுமா யுபிர்க்குயிரா யெங்கு
நின்றநிலை யெல்லாமுன் னிகழ்ந்து தோன்றும்.

சுப் — பதவுரை

தோன்றியிடச் செய்ய சுடர் – (தனது கிரணத்தோடுந்) தோன்றுஞ் செம்மையாய ஞாயிற்றின் (சந்நிதி மாத்திரையானே),—சூரியகாந்தக் கல்லின் இடத்தே சோதி (நிகழ்ந்து) தோன்றுமாபோல் – சூரியகாந்தக்கல்லின் கண்ணே நெருப்பு விளங்கித் தோன்றுமாறுபோல,—அரு

ளான் வந்துதோன்ற ஆரியனும் ஆசான்-கேட்பித்தலோடும் வந்து தோன்றும் மேம்பட்ட ஞானசிரியன் (சந்நிதி மாத்திரையானே),—ஆன்மாவின் அடிஞானம் (நிகழ்ந்து) தோன்றும் – மாணாக்கன்மாட்டு (மேல் ஈரிரண்டாங் கிளக்கின் ஞானம் என்றவற்றுள்) முந்திய ஞானமாகிய கேட்டலறிவு விளங்கித் தோன்றும்,—தோன்றத் தூரியனும் சிவன் (முன்னிகழ்ந்து) தோன்றும் - (அது) தோன்றவே முதல்வனுகிய பதியும் நிருவிகற்பமாய் விளங்கித் தோன்றும்,—(தன்னுள்ளே) தானும் (முன்னிகழ்ந்து) தோன்றும் – அப்பதியினுள்ளே பசுவும் நிருவிகற்பமாய் விளங்கித்தோன்றும்,–தன்னுள்ளே தொல் உலகமெல்லாம் (முன்னிகழ்ந்து) தோன்றும் – அப்பசுவினுள்ளே பழைய பிரபஞ்சவடிவாகிய பாசமும் நிருவிகற்பமாய் விளங்கித் தோன்றும்,—நேரியனுய் உயிர்க்கு உயிராய் (நின்றநிலை) – (இறைவன் அணுவோரண்டமாம்படி) நேரியனுகலால் உயிர்க்குயிராய் நின்ற நிலையும்,—பரியனுமாய் எங்கும் நின்ற நிலையெல்லாம் முன்னிகழ்ந்து தோன்றும்–(அண்டமோரணுவாம்படி) பரியனுமாகலால் யாண்டும் நின்ற (பூரண) நிலையுமாகிய வெல்லாம் நிருவிகற்பமாய் விளங்கித் தோன்றும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து *தனது கிரணத்தோடுந் தோன்றும் ஞாயிற்றின் சந்நிதி மாத்திரையானே சூரியகாந்தக்கல்லின்கண் ணெருப்பு விளங்கித் தோன்றுமாறுபோல, கேட்பித்தலோடுந் தோன்று மாசிரியன் சந்நிதிமாத்திரையானே மாணாக்கன்மாட்டு, மேல் ஈரிரண்டாங் கிளக்கின்ஞானமென்றவற்றுள் முந்திய ஞான மாகிய கேட்டலறிவு விளங்கித் தோன்றும்; அது தோன்றவே,*

பதிமுதலிய மூப்பொருளும் அவை யொன்றிலொன்று விய பக விபாப்பியங்க ளாமாறும் நிருவிகற்பமாய்த் தோன்று மென்பதாம்.

அருளானென்புழி ஆன் உடனிகழ்ச்சிப் பொருட்கண் வந்தது; "தூங்குகையானேங்குகடைய" (தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமையியல், சூ-13,) என்றாற்போல. ஈண்டு அருளென்றது ஏற்புழிக்கோடலாற் கேட்பித்தலே யுணர்த்திற்று. ஆசிரியன் நூற்பொருளுரைக்கும்வழி ஆசிரியன் ஞானமே மாணாக்கன்மாட்டுச் சென்று பற்றுவது போலுமென்னு மாசங்கை யறுத்தற்பொருட்டுத் தோன்றத் தோன்றுமென்றார். உவமை கூறியதுமது. சடத்துக்கன்றிச் சித்துக்குச் சங்கிரமங கூடாதென்பது சிவாகமநூற்றுணிபென்க.

அணுவோரண்டமாம்படி நேரியனுகலால் உயிர்க்குயிராதலும் அண்டமோரணுவாம்படி பரியனுமாகலால் எங்குநிற்றலும் பெறப்படுமென்பார், 'நேரியனுய்ப் பரியனுமா யுயிர்க்குயிரா யெங்குநின்ற நிலை' யென்றார்.

முன்னிகழ்ந்தென்பதனே யாண்டுங் கூட்டுக; முன்னிகழுந்தோற்றமாவது சவிகற்பத்துக்கு முன்னுக நிகழும் நிருவிகற்பத் தோற்றம்.

இதனுனே கேட்டலாமாறும் அதன்கணிகழுமனுபவமுங் கூறப்பட்டன. (28)

மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தி நிபாத
மேவுதலு ஞானம்விளைந் தோர்குருவி னருளாற்
புக்கநுட்டித் தேநிட்டை புரிந்து ளோர்கள்
பூதலத்திற் புகழ்சீவன் முத்த ராகித்

தக்கபிரி யாப்பிரிய மின்றி யோட்டிற்
றபநியத்திற் சமபுத்தி பண்ணிச்சங் கரனே
டொக்கவுறைந் திவரவனே யவனிவரை விடாதே
யுடன்தையாய்ச் சிவன்றோற்ற மொன்றுமே காண்பர்.

சுப — பதவுரை

மிக்கது ஒரு பக்குவத்தின் மிகு சத்திநிபாதம் மேவுத லும் – பக்குவமுதிர்ச்சியான் நாலாஞ்சத்திநிபாத மேவிய விடத்தே (அவர்க்கு),—ஞானம் விளைந்து – அக்கேட்ட லறிவு (மந்தமாதலின்றி) முதிர்ந்து (முறுகவிளையும்),—ஓர் குருவின் அருளால் புக்கு – (அப்பொழுது) தம்மாசிரியரா தல் தம்மோடொருசாலை மாணாக்கராய்த் தம்மின் மூத் தாருள் ஒருவராதல் சிந்திப்பிக்க (ப் பெ று ம் அந்நூற் பொருளின்கண்ணே கருத்தொருங்கி) நுழைந்து,—அநுட் டித்தே நிட்டை புரிந்துளோர்கள் – (முன்னெடுபின் மலை வற ஏது திருட்டாந்த முதலியவற்றூற்) சிந்தித்து நிட்டை (கூடுதற்கண்) வேட்கைமிக்குடையராகப்பெற்றூர்,–பூத லத்தின் தக்க பிரியாப்பிரியம் இன்றி – இவ்வுலகின் கண்ணே தக்க விருப்பு வெறுப்பின்றி(ச் சிந்தித்தற் கருமமே மேற்கொண்டு),–ஓட்டில் தபநியத்தில் சமபுத்தி பண்ணி - ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவதாய் (மற்றொன்றினும் பற்றொன்றின்றி),—புகழ் சீவன் முத் தராகி – புகழத்தக்க சீவன்முத்தரோடொத்து,—அவன் இவரை இவர் அவனை விடாதே உடன்தையாய்ச் சங்கர னோடு ஒக்க உறைந்து – பேரறிவாகிய சிவமுஞ் சிற்றறி வாகிய தாமும் (ஞாயிற்றினொளியும் கண்ணொளியும் போல்) அத்துவிதமாய் (த் தானே) சிவத்தோடுகூட நிற்ற லான்,—சிவன் தோற்றம் ஒன்றுமே காண்பர் – (ஆண்டுத்

தாமுளராதல் அறியப்பெறுது) சிவத்தோற்ற மொன்றுமே காணப்பெற்று (நிருவிகற்பஞ் சவிகற்பமென்னும் இரண்டற்கும் இடைநிலத்தே) நிற்பர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. பக்குவமுதிர்ச்சியா னுலாஞ்சத்திநிபாத மேவப் பெற்றார்க்கு அக்கேட்டலறிவு மந்தமாதலின்றி முதிர்ந்து முறுக விளையும்; அப்பொழுது தம்மாசாரியராதல் தம்மோ டொருசாலை மாணாக்கராய்த்தம்மின் மூத்தாருளொருவராதல் சிந்திப்பிக்கப்பெறு மந்நூற்பொருளின்கண்ணே கருத் தொருங்கி துழைந்துமுன்னெடுபின்மலைவறவ துதிருட்டாந்த முதலியவற்றுற் சிந்தித்து நிட்டைகூடுதற்கண் வேட்கை மிக் குடையராகப்பெற்றார், சிந்தித்தற்கருமமே மேற்கொண்டு மற்றொன்றினும் பற்றொன்றின்றிச்சீவன்முத்தரோடொத்துப் பேரறிவாகிய சிவமுஞ் சிற்றறிவாகிய தாமும் ஞாயிற்றினொளி யுங் கண்ணொளியும்போ லத்துவிதமாய் நிற்றலான், ஆண்டுத் தாமுளராத லறியப்பெறுது சிவத்தோற்றமொன்றே காணப் பெற்று நிருவிகற்பஞ் சவிகற்பமென்னு மிரண்டிற்கு மிடை நிலத்தே நிற்பரென்பதாம்.

'மிக்கதொருபக்குவத்தின் மிகுசத்திநிபாதமேவுதலு ஞானம் விளைந்' தெனவே, அஃதங்ஙன மேவாதவழி அக்கேட்டலறிவு முறு குதலின்றி யஃகி நிகழு மென்பதாயிற்று.

விளைந்தவழியென்பது விளைந்தெனத் திரிந்தது.

ஓர்குருவெனப் பொதுப்படக்கூறினர், ஒருசாலை மாணாக்க ராய்த் தம்மின் மூத்தாரையுந் தழுவுதற்கு.

புரிதல் விரும்புதல்.

சிவன்மூத்தாகி யென்புழி ஆக்கச்சொல் உவமப்பொருள் குறித்து நின்றது; ''ஆள்வாரிலி மாடாவேனே'' (திருவாசகம், கோயின்மூத்ததிருப்பதிகம், செ – 7.) என்றாற்போல. உடன்தையா யுறைந்து காண்பரென்றது, 'மழைபெய்து குளநிறைந்த' தென்றாற் போலக் காரணகாரியப்பொருட்டாய் நின்றது. உம்மைசிறப்பு. ஏகாரம் பிரிநிலை. 'அடைபவர் சிவமேயாகு மதுவன்றித் தோன்று மென்ற கடனதென்' என்பதும் இந்நிலையெனக் கொள்க.

இதனானே சித்தித்தலாமாறு மதன்கணிகழு ம னு ப வ மு ங் கூறப்பட்டன. (29)

அறியாமை யறிவகற்றி யறிவி னுள்ளே
யறிவுதனை யருளினை னறியாதே யறிந்து
குறியாதே குறித்தந்தக் காரணங்க ளோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயிற்
பிறியாத சிவன்றானே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெல்லாந் தானுய்த் தோன்றி
நெறியாலே யிவையெல்லா மல்ல வாகி
நின்றென்றுந் தோன்றிடுவ னிராதார னுயே.

சுப் — பதவுரை

அருளினுன் அறியாமை அறிவு அகற்றி – ஆசிரியன் திருவருளால் அறியாமையும் அறிதலுமாகிய இருவகைப் பாசங்களு நீங்கி,—அறிவினுள்ளே அறிவுதனை அறியாதே அறிந்து – தம்மறிவின் கண் ணே கேட்டலறிவினைக் கேட்குமுறைமையிற் கே ட் டு,—குறியாதேகுறித்து – சிந்திக்கு முறைமையிற் சிந்தித்து,—குழைந்து அந்தக்கர ணங்களோடும் கூடாதே வாடாதே இருப்பையாயின் – (பின்பு)அன்புசெய்து அந்தக்கரணங்களிற்சேராது அடங்கி

நிற்கப்பெறுவாராணுல் (தமக்கு),—பிறியாத சிவன்ருனே பிரிந்து தோன்றி – பிரிதலில்லாத முதல்வன் இயல்பு (கேட்டற்காலத்துப் பொருட்டன்மைபற்றிப்) பேதமாய்த் தோன்றி,—பிரபஞ்ச பேதமெல்லாம் தானுய்த்தோன்றி – (சிந்தித்தற்காலத்து) உலகபேதம் அனேத்தினுங் (கலப்புப் பற்றி) அபேதமாய்த் தோன்றி,— இவையெல்லாம் அல்லவாகி – (தெளிந்தபின்) இவ் விரண்டு மன்றி,—நெறியாலே என்றும் நின்றே நிராதாரனுய்த் தோன்றிடுவன் - (நேரியனும் பரியனு மாயதோர்)முறைமைபற்றி எஞ்ஞான்றும் (எவற்றினும் ஒற்றித்து) நின்றே ஒன்றினும் பற்றிலனுய் (வேறு) தோன்றும் என்க.

சுப் — பதவுரை

எ-து ஆசிரியன் றிருவருளா லிருவகைப்பாசங்களு நீங்கிக் கேட்குமுறையிற் கேட்டுச் சிந்திக்கு முறையிற் சிந்தித்துப் பின்னன்பு செய்தடங்கி நிற்கப் பெறுவார்க்கு, முதல்வனியல்பு கேட்டற் காலத்துப் பொருட்டன்மை பற்றிப் பேதமாய்த் தோன்றிச் சிந்தித்தற்காலத்துக் கலப்புப்பற்றி யபேதமாய்த் தோன்றித் தெளிந்தபின் இவ்விரண்டு மின்றி நேரியனும் பரியனுமாயதோர் முறைமைபற்றி எவற்றினு மொற்றித்து நின்றே ஒன்றினும் பற்றிலனுய் வேறு தோன்றுமென்பதாம்.

நின்று நிராதாரனுய்த் தோன்றிடுவனெனைக் கூட்டுக.

தெளிதலாமாறு மதன்பயனு மினிது விளங்குதற்பொருட்டு மேற்கூறிப்போந்தவற்றையும் அனுவதித்து உடன்கூறினர்.

கூடாதே வாடாதேயென ஈண்டுக் கூறவே, ஏனைக் கேட்டல் சிந்தித்தல்களி னெளிதாவழிக் கூடுதலும் வாடுதலு நிகழுமென்ப தாயிற்று. அற்றாகலினன்றே ஆண்டிவ்வாறினிதுவிளங்கப்பெரு தாயிற்றென்பது.

இருத்த லருமைநோக்கி இருப்பையாயினென்றார்.

இதனானே தெளிதலாமாறு மதன்க ணிகழு மனுபவமுங் கூறப்பட்டன. (30)

புண்ணியமே னோக்குவிக்கும் பாவங்கீழ் நோக்கும்
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தி னாலே
நண்ணியஞா னத்தி னிரண்டினையு மறுத்து
ஞாலமொடு கீழ்மேலு நண்ணு னுகி
யெண்ணுமிக லோகத்தே முத்திபெறு மிவன்ரு
னெங்கெழிலென் ஞாயிறெமக் கென்றுகுறை வின்றிக்
கண்ணுதற னிறைவதனிற் கலந்து காயங்
கழிந்தக்கா லெங்குமாய்க் கருதரன்போ னிற்பன்.

சுப — பதவுரை

கீழ்நோக்கும் பாவம் மேல் நோக்குவிக்கும் புண்ணியம் – (வியாபகமாகிய வுயிர் அவ்வியல்பிழந்து ஏகதேசப்பட்டுக்) கீழேசென்று துன்பத்தை நுகர்தற்குக் காரணமாகிய பாவமும் மேலேசென்று இன்பத்தை நுகர்தற்குக் காரணமாகிய புண்ணியமும் (தலையேயாகலின்),—இரண்டினையும் – (அவ்வினைத்தலை) இரண்டனையும்,—புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே நண்ணிய ஞானத்தினால் அறுத்து – சிவபிரானை அருச்சித்தலென்னும் ஞான நூல் ஓதன்முதற் சிந்தித்தலீறாகிய ஞானபூசையின் பயனாய் நிகழ்ந்த தெளிதலுணர்(வெனப்படும் அரத்)தான்

அறுத்து,—ஞாலமொடு கீழ்மேலும் நண்ணுகி—(காரண மின்மையிற் காரியமாகிய) பூமி நரக சொர்க்கங்களிற் செல்லுத(லாகிய ஏகதேசச்செலவும்) இன்றுயொழிந்தா ராகி,—இவன்றன் கண்ணுதறன் நிறைவதனில் கலந்து – (அஃதொழியவே) அவர்(கரணங்களின் வயத்தராதலின்றி மேல் அங்ஙனந்தோன்றிய) இறைவனது வியாபகத்தைத் தலைப்பட்டு,—ஞாயிறு எங்கு எழில் என் எமக்கென்று குறைவு இன்றி - ஞாயிறு எவ்விடத்தெழினும் அதனாலே தமக்காவதோர் பயனின்மை தெரிந்தவராய் (ஒருவாற்றானுங்) குறைவின்மையை அடைந்து,—எண்ணும் இகலோகத்தே முத்தி பெறும் – (இவ்விதமாகக்)கருதும் இம்மையே சீவன்முத்தராகி,—காயம் கழிந்தக்கால் எங்குமாய்க் கருது அரன்போல் நிற்பன் – (மாசினீங்கியவழி ஆடையினது வெண்மை ஆடைமுழுதும் விளங்கினாற்போல இங்குளிவாங்குங் கலம்போலுழல்வதாகிய) இவ்வுடம்பு நீங்கப்பெறும் (பரமுத்தி) நிலையிற் (றமது வியாபக)மெங்கணும் (அறிவு விளங்கப்பெற்றுக்) கருதுகின்ற முதல்வனெடொத்துநிற்பர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *வியாபகமாகியவுயிர் அவ்வியல்பிழந்து கீழு மேலு மேகதேசப்பட்டுச் சேறற்குக் காரணம், அங்ஙனஞ் சென்றவ்வப்பய னுகரச்செய்யு மிருவினைத்தலையேயாகலின், அத்தலையிரண்டனையும் ஞானநூலோதன்முதற் சித்தித்தலீறு கிய ஞானபூசையின் பயனாய் நிகழ்ந்த தெளிதலுணர்வெனப் படும் அரத்தான் அறுக்கப்பெற்றார்க்கு, காரணமின்மையிற் காரியமாகிய ஏகதேசச்செலவு மின்றாயொழியுமாதலின்; அஃ*

தொழியவே, அவர் சுரணங்களின் வயத்தராதலின்றி மேலங் ஙனந் தோன்றிய விறைவனது வியாபகத்தைத் தலைப் பட்டு ஒருவாற்றானுங் குறைவின்றி இம்மையே சீவன்முத்த ராகி, மாசுநீங்கியவழி ஆடையின்வெண்மை ஆடைமுழுதும் விளங்கினைற்போல, இங்குளிவரங்குங்கலம்போனுழல்வதாகிய விவ்வுடம்பு நீங்கப்பெறும் பரமுத்திநிலையிற் றமது வியாபக மெங்கணும் அறிவு விளங்கப்பெற்று முதல்வனெடொத்து நிற்பரென்பதாம்.

சிவசமமாதற்குரிய சாதாரணதன்மமாவ திஃதென்பார், எங்குமாயென்றார்.

தெளிந்தார்க்குக் கண்ணுதற னிறைவதனிற்கலத்தற்க ணிடையீடின்மை யினிது விளக்குவார், இடையீடாவன வினை யென்பதூஉம் அவை கழிந்தவாறு முடன் கூறினர்.

கண்ணுதற னிறைவதனிற் கலந்தார்க்குப் பண்டையேகதேச வுணர்வு தூர்ந்துபோதலின், ஏகதேசவுடம்பி னிகழு மின்பத்தன் பத்திற்கு ஏதுவாகிய வற்பாத முதலியவற்றை நோக்கி வரக்கடவ தோர் கவலையின்மையின், 'எங்கெழிலென்ஞாயிறெமக்' கென்று குறைவின்றி நிற்பாராயினுரென்பது. '[1]தனக்குவமையில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான் - மனக்கவலை மாற்ற லரிது" திருக் குறள், கடவுள்வாழ்த்து, செ - 7) என வெதிர்மறைமுகத்தாற் கூறியது மிதுபற்றியென்க.

கலந்து முத்திபெறுமிவனென வியையும்.

இதனானே நிட்டையாமாறு மதன்பயனுங்கூறப்பட்டன.(31)

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
நன்மையொடு தீமையில்லை நாடுவதொன் றில்லை
சீலமில்லை தவமில்லை விரதமொடாச் சிரமச்
செயலில்லை தியானமில்லை சித்தமல மில்லை
கோலமில்லை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருட னுன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலிலை டாடலிலை பயின்றிடினும் பயில்வர்.

சுப — பதவுரை

ஞாலமதின் ஞான நிட்டை யுடையோருக்கு – இவ் வுலகத்தின்கண் ஞான நிட்டையினையுடையார்க்கு,—நன் மையொடு தீமை இலை - நன்மைதீமைகளாகிய இருவினை களும் இல்லை,—ஒன்று நாடுவது இல்லை – (வினைகளைச் செய்தாராயினும்) ஒருபலத்தை நாடுவதும் இல்லை,—சீலம் இலை – சமயாசாரங்கள் அனுட்டிக்க வேண்டுவதும் இல்லை,—தவம் இல்லை – தவங்கள் பண்ணவேண்டுவதும் இல்லை,—விரதமொடு ஆச்சிரமச்செயல் இல்லை – விரதா னுட்டானங்களும் ஆச்சிரமதருமங்களும் அனுட்டிக்க வேண்டுவதும் இல்லை,—தியானம் இலை – தியானபாவனை கள் செய்யவேண்டுவதும் இல்லை,—சித்தமலம் இல்லை – சித்தசலனமும் இல்லை,—கோலம் இலை – சமயத்துக்கேற்ற வேடங்கள் தரிக்கவேண்டுவதும் இல்லை,—புலன் இல்லை– விடயங்களைவிடுதல் பற்றுதல் வேண்டுமென்ற நியமமும் இல்லை,—கரணம் இல்லை – அந்தக்கரணங்களை அடக்க வேண்டுமென்பதும் இல்லை,—குணம் இல்லை – தாமத இராசதகுணங்களை அடக்கிச் சத்துவகுணச்செய்கைகளைச் செய்யவேண்டுமென்ற நியமமும் இல்லை,—குறி இல்லை –

ஒருகுறியின்கண்ணே நிற்கவேண்டுமென்பதும் இல்லை,—குலமும் இல்லை – குலதன்மத்திலே ஒழுகவேண்டுமென்பதும் இல்லை,—பாலருடன் உன்மத்தர் பிசாசர் குணம் மருவி – பாலர்போல (அறவொழிதலும்) உன்மத்தர் போல (ஒருகாற்செய் தொருகாலொழிதலும்) பேய்பிடியுண்டவர்போலச் செயலிழப்பினின்று செய்தலுமாகிய) குணங்களைப் பொருந்தி,—பாடலினெடு ஆடல் இவை பயின்றிடினும் பயில்வர்–(பரமானந்தமேலீட்டாற்)பாடல் ஆடல்களாகிய தொழில்களைச் செய்திடினுஞ் செய்வர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *இந்தநிட்டையுடையார்க்கு விதித்தன செய்தலும் விலக்கியன வொழிதலும் வேண்டாம், அவர் செய்தன வெல்லாந் தவமாமென்பதாம்.*

பாலர் குணம் அறவொழிதற்கும், உன்மத்தர்குணம் ஒருகாற் செய்தொருகாலொழிதற்கும், பிசாசர்குணஞ் செயலிழப்பினின்று செய்தற்கு முவமையாயின; இவ்வாறன்றி, மேலுணவு தேடாமை முதலியவற்றிற்கு அம்மூன்று முவமையாயினவென்பாருமுளர்; இச் செய்யுளினெடுத்துக்கொண்ட பொருளோ டியைபின்மையானும், ''பாலருன் மத்தர் பிசாசரி லெனவு – முறங்கி லுண்கை வெறும் பாக் கெனவுந்–தானேதவிரா தாலும்''(சங்கற்பநிராகரணம்,செ,2.) எனப் பிறண்டுந் தவிர்தன்மாத்திரைக்கே அவற்றை யெடுத்துக் காட்டியவாற்றானும், அஃதீண்டைக்கேலாமை யறிக.

பாடலினெ டாடலிவை பயிறல் பரமானந்தமேலீடு நோக்கி நிகழ்வதென்க. (32)

தேசமிடங் காலந்திக் காசனங்க ளின்றிச்
செய்வதொன்று போற்செய்யாச் செயலதனைச்செய்தங்
கூசல்படு மனமின்றி யுலாவ னிற்ற
லுறக்கமுணர் வுண்டிபட்ட டினியிருத்தல் கிடத்தன்
மாசதனிற் றாய்மையினின் வறுமை வாழ்வின்
வருத்தத்திற் றிருத்தத்தின் மைதுனத்திற் சினத்தி
னுசையினின் வெறுப்பினிவை யல்லாது மெல்லா
மடைந்தாலு ஞானிகடா மரனடியை யகலார்.

சுப — பதவுரை

ஞானிகடாம் – சிவஞானிகளாவார்,—தேசம் இடம் காலம் திக்கு ஆசனங்கள் இன்றி ஒன்று செய்வதுபோல் செய்யாச் செயலதனைச் செய்து – ஓர்தேயம் ஓரிடம் ஒரு காலம் ஒருதிக்கு ஓராசன முதலியவின்றி(ச் செய்தற்கெளிய) ஒரு தொழில் செய்வதுபோற் செய்தற்கரிய செயல்களைச் செய்து,—உலாவல் நிற்றல் – உலாவுதல் நிற்றல்களையும்,—உறக்கம் உணர்வு – உறங்குதல் விழித்தல்களையும்,—உண்டி பட்டினி – உண்ணுதல் உண்ணுமைகளையும்,—இருத்தல் கிடத்தல் - இருத்தல் கிடத்தல்களையும்,—மாசதனின் தூய்மையினின் – மாசுடைமை தூய்மையுடைமைகளையும்,—வறுமை வாழ்வின் – நல்குரவு செல்வங்களையும்,—வருத்தத்தின் திருத்தத்தின் – துன்பவின்பங்களையும்,—மைதுனத்தின் சினத்தின் – புணர்ச்சி கோபங்களையும்,—ஆசையினின் வெறுப்பின் – விருப்பு வெறுப்புக்களையும்,—இவை அல்லாதும் எல்லாம் அடைந்தாலும் – இவையன்றி (விகாரமுறுதற்கேதுவாகத் தம் முண் மாறுபட்டதொழில்) பலவற்றையுஞ் செய்தாராயினும்,—அங்கு ஊசல்படு மனம் இன்றி அரன் அடியை

அகலார் – அவ்விடத்தே (அவைபற்றி அவர்) சி றி து ம் விகாரமுறுதலின்றி முதல்வன் றிருவடியை விட்டு நீங்கு வாரல்லர் (உண்மையாளேக்குவார்க்கு அவர் செய்யுஞ் செயல் வேருகலான்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. விகாரமுறுதற்கேதுவாகத் தம்முண் மாறுபட்ட தொழில் பலவற்றையுஞ் செய்தாராயினும், அவைபற்றி யவர் சிறிதும் விகாரமுறுவாரல்லர்; உண்மையாளேக்குவார்க்கு அவர் செய்யுஞ் செயல் வேருகலாளென்பதாம்.

செய்யாச்செயலதனைச் செய்தற்கு வேருரு கி ய தி யு ம் வேண்டாமென்பார், தேசமிடங்காலந் திக்காசனங்க ளின்றி யென்ரூர்.

இன்றிச்செய்வதெனவும் அடைந்தாலு மூசல்படு மனமின்றி யெனவு மியையும்.

அடைந்தாலுமென்னுமும்மை சிறப்பின்கண் வந்தது; ''உவரி தோன்றிவாழ் தொழிலவாயினு மயிலலதீஞ்சுவையுப்பிற் சிவணு தாங்கு'' என்ரூற்போல.

இவையிரண்டு செய்யுளானும் நிட்டைமேவினேர்களதாசாரங் கூறப்பட்டது, (33)

இங்நிலைதா னில்லையே லெல்லா மீச
னிடத்தினினு மீசனெல்லா விடத்தினினு நின்ற
வங்நிலையை யறிந்தந்தக் கரணங்க ளடக்கி
யறிவதொரு குறிகுருவி னருளினு லறிந்து

மன்னுசிவன் றனைபடைத்து நின்றவன்ற னலே
மருவுபசு கரணங்கள் சிவகரண மாகத்
துன்னியசாக் கிரமதனிற் றுரியா தீதந்
தோன்றமுயல் சிவானுபவஞ் சுவானுபூ திகமாம்.

சுப் — பதவுரை

இங்நிலைதான் இல்லையேல் – இங்ஙனம் கூறிய முறையானே அகம்புறமென்னுமல் எங்கணும் ஏக நிலையாய்க் கண்டு இறைநிறைவில் அழுந்துவதாய நிட்டைமேவுதல் அரிதாய்ப் பண்டைப் பயிற்சி வயத்தாற் சுட்டுணர்வுபற்றிப் பிரபஞ்சங் காட்சிப்பட வருமாயின்,—ஈசன் எல்லா இடத்தினினும் எல்லாம் ஈசன் இடத்தினினும் நின்ற அந்நிலையை அறிந்து – (அதனைக் காணும்பொழுதே இறைவன் அதற்குள்ளாயும் புறமாயும் நிற்கு நிலைமையும் உடன் கண்டு,—அந்தக்கரணங்கள் அடக்கி (அவ்வாறு அண்டத்தினிற்கு நிலை அறிதல் அரிதாயின்) மனுதிகள் அடக்கி,—குருவின் அருளினால் நின்று அறிவது ஒரு குறி அறிந்து – அறிந்து – குருவருளாற் பிண்டத்தினிற்கு நிலையுள் ஒன்றின் வைத்தறிந்து,—அவன்றனலே மன்னுசிவன்றனை அடைந்து – அது வாயிலாகப் புகுந்தாதல் நிலைபெற்ற (அவ்) வியல்பைத் தலைப்பட்டறிந்து,—மருவுபசுகரணங்கள் சிவகரணமாக – ஆண்டுக் காணுங் கரணங்களெல்லாம்பேரின்பமாகப்பேணி, — துன்னியசாக்கிரமதனின் – (இவ்வாறு) கருவிகளோடுந் தொழிற்பட்டு நிற்பதாகிய சகல சாக்கிரத்திற்றானே,—துரியாதீதம் தோன்ற முயல் – (கருவியொன்றனோடுங்கூடாதுதொழிலிறந்து நிற்கும்) நின்மல துரியாதீதநிலை கைகூடும்படி முயல்வீர்,—சிவானுபவம் சுவானுபூதிகமாம்-(அங்ஙனமுயன்றால்) சிவானுபவத்தைத் தமதாகக் கொண்டு அனுபவிக்கப்பெறலாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இங்ஙனங் கூறிய முறையானே, அகம்புறமென் ணுமலெங்கணு மேகநிலையாய்க் கண்டு இறைநிறைவி'லழுந்து வதாகிய நிட்டை மேவுத லரிதாய்ப் பண்டைப் பயிற்சிவயத் தாற் சுட்டுணர்வுபற்றிப் பிரபஞ்சங் காட்சிப்பட வருமாயின் அதனைக்காணும்பொழுதே இறைவனதற்குள்ளாயும் புற மாயுநிற்குநிலையுமுடன்கண்டு, அவ்வாறண்டத்தினிற்குநிலை அறிதலரிதாயிற் பிண்டத்தினிற்குநிலையு மொன்றின்வைத் தறிந்து அதுவாயிலாகப் புகுந்தாதல் அவ்வியல்பைத் தலைப் பட்டறிந்து ஆண்டுக்காணுங் கரணங்களெல்லாம் பேரின்ப மாகப் பேணி; இவ்வாறு கருவிகளோடுந் தொழிற்பட்டு நிற் பதாகிய சகலசாக்கிரத்திற்றானே கருவியொன்றனோடுங் கூடாது தொழிலிறந்து நிற்கும் நின்மலதுரியாதீதநிலை கை கூடும்படி முயல்வீர், சிவானுபவந் தமதாகக்கொண்டு அனு பவிக்கப்பெறலாமென்பதாம்.

அங்நிலையையறிந்தென்றது அண்டத்தின் வைத்தறிதலை யெனவும், அறிவதொருகுறி குருவினருளினுலறிந் தென்றது அவ் வறிவிற்கேதுவாய்ப் பிண்டத்தின் வைத்தறிதலையெனவுமுணர்க.

சிவன் ஆகுபெயர்.

அகரச்சுட்டு வருவித்துரைக்க.

முயலென்பது முன்னிலையேவல்.

சிவானுபவஞ் சுவானுபூதிகமென்புழித் தொக்குநின்றவாறு வது முறையே செயப்படுபொருண்மைக்கண்ணும் வினைமுதற் பொருண்மைக்கண்ணும் வந்த காரகம்; அமிழ்தவண்டி கடவ ளருண்டி யென்றுற்போல.

இதனானே அங்கிட்டை மேவப்பெறுதார்க்கு அது பெறுமுபாயம் கூறப்பட்டது. (34)

சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்க ளுலகிற்
சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்க ளிவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுவெ னிம்மையிலே யுயிரின்
பற்றறுத்துப் பரத்தையடை பராவுசிவ ரன்றே
வாக்குமுடி கவித்தரசாண் டவர்களரி வையரோ
டனுபவித்தங் கிருந்திடினு மகப்பற்றற் றிருப்பர்
நோக்கியிது புரியாதோர் புறப்பற்றற் றுலு
நுழைவர்பிறப் பினின்விலக ணுங்கி டாவே.

சுப் — பதவுரை

சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் – (இங்ஙனம் பசுகரணஞ் சிவகரணமாகத் துன்னிய) சாக்கிரத்தினின்று கொண்டு தானே (கரணங்கடந்த) அதீதத்தைப் புரிந்தார், —உலகில் சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்கள் – இவ்வுலகின் கண்ணே கருவிகளினீங்கி (நிட்டை மேவினரோ டொப்ப)ச் சிறந்தாரேயாவர்,—இவர்கள் பாக்கியத்தைப் பகர்வது என் – இவர்கள் (மூற்பிறவியிற் செய்த) சிவ புண்ணியப் பேற்றைச் சொல்ல வொண்ணுமையின்,— இம்மையிலே உயிரின் பற்று அறுத்துப் பரத்தை அடை பராவு சிவர் அன்றே – இம்மைக்கண் உயிர்ப்பற்று நீங்கிச் சிவத்தைப்பொருந்தி (இரண்டற நிற்கையாற்) சஞ்சரிக்கின்ற சிவமேயாவர்,—அவர்கள் ஆக்கு முடி கவித்து அரசு ஆண்டு அரிவையரோடு அனுபவித்து அங்கு இருந்திடினும் – அவ்வுண்மை யறிந்தார் ஆக்கப்பட்ட முடியினையணிந்து அரசாட்சிசெய்து அரிவையரோடின்புற்றிருந்திடினும்,—அகப்பற்று அற்று இருப்பர் – அகப்

பற்று நீங்கினவரேயாவர் (ஆகலின் உண்டுடுத்துப் பூசி முடித்துச் செய்யுந் தொழிலொப்புமையே பற்றி அவரை உலகத்தாரோடு வைத்தெண்ணற்க.—நோக்கி இது புரியாதோர் புறப்பற்று அற்றாலும் – ஆராய்ந்து இவ்வகப்பற்று நீங்காதோர் புறப்பற்று நீங்கினும்,—வினைகள் நுங்கிடாவே பிறப்பினின் நுழைவர் – வினைகள் ஏறுதலிற் பிறப்பினையடைவர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து இங்ஙனம் பசுகரணஞ் சிவகரணமாகத் துன்னிய சாக்கிரத்தினின்றுகொண்டுதானே கரணங் கடந்தவதீதத்தைப் புரிந்தார், கருவிகளினீங்கி நிட்டைமேவினோரோடொப்பச் சிறந்தாரேயாவர்; அவ்வுண்மையறிந்தார் உண்டுடுத்துப் பூசி முடித்துச் செய்யுந் தொழிலொப்புமையே பற்றியவரை உலகத்தாரோடு வைத்தெண்ணற்கவென்பதாம்

பராவுதல் சஞ்சரித்தல்.

இதனானே யங்ஙன முயன்றாரது பெருமை கூறப்பட்டது.

ஞானவதிகாரப்பட்டமைபற்றி யீண்டுக் கேட்டலுடன் வைத்து ஒருவாற்றாற் றொகுத்தோதிய இன்னோரன்னவையெல்லாம் வருகின்ற சூத்திரங்களான் விரித்துக் கூறப்படும்.

புறச்சமயநெறியென்பதுமுதலித்தினையும் இரண்டாங்கூற்றைத் தெரித்துணர்த்தியவாறு. (35)

மூன்றுமதிகரணம்

கருவிகழிந் தாற்காணு ரொன்றுமெனிற் காணுர்
காணுதார் கன்னிகைதான் காமரதங் காணுண்
மருவியிரு வரும்புணர வந்த வின்பம்
வாயினற் பேசரிது மணந்தவர்தா மூணர்வ
ருருவினுயிர் வடிவதுவு முணர்ந்திலர்காண் சிவனே
யுணராதா ருணர்வினு லுணர்வதுகற் பனைகா
ணருள்பெறினவ் விருவரையு மறிவிறந்தங் கறிவ
ரறியாரேற் பிறப்புப்விடா தாணவமு மறுதே.

சுப் — பதவுரை

மருவி இருவரும் புணர வந்த இன்பம் வாயினல் பேச அரிது – பொருந்தி யிருவரும் புணரவந்த இன்பம் வாக் காற்பேசுதல் அரிதாயினும்,—மணந்தவர்தாம் உணர்வர்– மணந்தவர்தாம் உணர்வரன்றி,—காமரதம் கன்னிகை தான் காணுள் – அக்காமரசத்தினைக் கன்னிகை அறியாள் (அதுபோல),—அருள்பெறின் அவ்விருவரையும் அறிவு இறந்து அங்கு அறிவர் – திருவருளைப் பெறிற் றம்மையுந் தலைவனையும் (கருவி) அறிவிறந்து அங்கே யறிவர் அன்றி,– காணுதார் காணுர் அறியாரேல் – அறியமாட்டாத அபக் குவர் அதனைக் காணுர்தாமே அங்ஙனம் அறியாரேல் (அவர்க்குணர்த்தும்வாயில் இல்லை இதுகிற்க),—உருவின் உயிர்வடிவதுவும் உணர்ந்திலர்காண் – (பன்னிறங்களான் மயங்கித் தன்னெளியிழந்த படிகம்போலக்) கலையாதி மண்ணந்தமாகிய உருவான் (மயங்கியே) ஆன்மசொரூபம் உணரப்பெற்றிலர்,—உணராதார் உணர்வினுல் சிவனை உணர்வது கற்பனைகாண் - அதனையுணராத சிவசங்கிராந்த

வாதிகள் அப்பெற்றித்தாகிய வுருவுணர்வால் (அவ்வான் மாவுக்குள்ளாகிய) சிவபிரானையும் அறிவாமென்றல் பாவக மாத்திரையேயாகலான்,—கருவி கழிந்தால் ஒன்றும் காணர் எனின் – கருவியறிவு இறந்துநின்று அருளான் அறியப்பெரு ரென்னின் (ஏகதேசமாகியகருவியுள்ளளவும் ஏகதேசக்காட்சி நீங்காமையால்),—பிறப்பும் விடாது ஆணவமும் அருதே – பிறவி யொழியாது பிறவிக்கு மூல மாகிய ஆணவமலமும் பற்றறக் கழியாது என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. இருவரும் புணர வந்த வின்பம் பேசரிதாயினும் மணந்தவர்தாமுணர்வர், அங்காமரசங் கன்னிகை காணுள், அதுபோல அருள்பெறிலவ் விருவரையுமறிவிறந்தங்கறிவர், காணமாட்டாத வபக்குவ ரதனைக் காணர்தாமே யாகலான் அவருக்கு உணர்த்தும் வாயிலில்லை. இது நிற்க. பன்னிறங் களான் மயங்கித் தன்னொளியிழந்த படிகம்போல உருவான் மயங்கியே யான்மசொரூப முணரப்பெற்றிலர்; அதனையுணரா தார் அப்பெற்றித்தாகிய வுருவுணர்வால் அவ்வான்மாவுக் குள்ளாகிய சிவனையு மறிவாமென்றல் பாவகமாத்திரையே யாகலாற் கருவியறிவிறந்து நின்று அருளானறியப்பெரு தார்க்கு ஏகதேசமாகிய கருவியுள்ளளவு மேகதேசக்காட்சி நீங்காமையாற் பிறவி யொழியாது பிறவிக்கு மூலமாகிய வாணவமலமும் பற்றறக்கழியாதென்பதாம்.

இஃது எடுத்துக்காட்டுவமை.

ஈண்டுருவென்றது கலையாதிமண்ணந்தமாகிய கருவிக் கூட்டத்தை.

இன் ஏதுப்பொருட்கண் வந்த வைந்தாமுருபு.

அது பகுதிப்பொருள் விகுதி.

உணராதார் சிவனேயுணர்வதென வியையும். உயர்வு சிறப்பும் மை விகாரத்தாற் றொக்கது. உணராதாரென்றது சிவசங்கிராந்த வாதிகளே நோக்கிக் கூறியது.

காணிரண்டுங் கட்டுரைக்கண்வந்தவசைகிலே.

இதனானே பசுகரணங்கள் சிவகரணமாகத் தன்னிய சாக்கிரத் தைப் பெற்றார் அதன்மேலுங் காரணங்கடந்த வதீதத்தைப் புரிதற்கு அறிவு செல்லுமாறு யாங்ஙன? மென்னுஞ் சிவசங்கிராந்தவாதிகளே மறுக்குமுகத்தால், 'தன்னிய வைம்புலவேடர் சுழலிற்பட்டுத் தூணை வனேயுமறியாது தயருறுந்தொல்லுயிர் என்ற' மூன்றுங்கூறு வலி யுறுத்தப்பட்டது. (36)

நான்காமதிகரணம்.

பன்னிறங்க ளவைகாட்டும் படிகம்போ லுள்ளம்
பலபுலன்க ணிறங்காட்டும் பரிசு பார்த்திட்
டிந்நிறங்க ளென்னிறமன் றென்று தன்ற
னெழினிறங்கண் டருளினு லிந்நிறத்தின் வேறுப்ப
பொய்ந்நிறவைம் புலநிறங்கள் பொய்யெனமெய் கண்டான்
பொருந்திடுவன் சிவத்தினெடும் போதான் பின்னை
முன்னிறைநீர் சிறைமுறிய முடுகி யோடி
முந்நீர்சேர்ந் தந்நீராய்ப் பின்னீங்கா முறைபோல்.

சுப — பதவுரை

பல் நிறங்களவை காட்டும் படிகம்போல் – (தன்னை யடுத்த) பன்னிறங்களின் இயல்பே (தன்மாட்டுக்) காட்டி நிற்கும் (பொதுவியல்புடைய) படிகம்போல,—உள்ளம் பல புலன்கள் நிறம் காட்டும் பரிசு பார்த்திட்டு – ஆன்மாவும் (தன்னுற் சாரப் பட்ட) கருவிகளினியல்பே (தன்மாட்டுக்) காட்டிநிற்குந் தனது பொதுவியல்பை (முன்னர்ச்) சிந்தித்தறிந்துகொண்டு,—இந்நிறங்கள் என்நிறம் அன்று என்று தன்றன் எழில் நிறம் இந்நிறத்தின் வேருய் அருளினுல் கண்டு – (பின்னர்ப் படிகவொளி அவற்றின் வேறுளதாயினுற்போல) இப்பொதுவியல்பு எனதியல் பன்றென்று தனது சிறப்பியல்பு இவற்றின்வேரு (யுண்டென்பதும்) அருளான் உணர்ந்து,—பொய்ந்நிற ஐம்புல நிறங்கள் பொய்யென மெய்கண்டான்-(பின்பு அங்ஙனம்) பொதுவியல்பையே (தன்னியல்பாகச்செய்துநிற்கும்) அக்கருவிஞானம் பொதுவியல்பேயா யொழியும்படி (தன்னியல்பு விளங்குதற் கேதுவாகிய) உண்மையுணர்ந்தான்,–சிவத்தினெடும் பொருந்திடுவன் – (அத்தன்னியல்பின் விளங்கித் தோன்றுஞ்) சிவத்தையுறுவன்,—பின்னப் போதான் – மீள (அக்கருவிக்கூட்டத்திற்) செல்வானல்லன்,—முன்நிறை சிறைநீர் முறிய முடுகி ஓடி முந்நீர் சேர்ந்து அந்நீராய்ப் பின் நீங்கா முறைபோல் – முன்னிறைவுற்றுச் சிறைப்பட்ட நீர் முறிந்தவழி விரைந்தோடிக் கடலின்கட்சென்று அந்நீராயடங்கிப் பின் மீளாதவாறு போலும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து *தன்னையடுத்த பன்னிறங்களினியல்பே தன்மாட்டுக்காட்டி நிற்கும் பொதுவியல்புடைய படிகம்போல,*

ஆன்மாவுந் தன்றற்சாரப்பட்ட கருவிகளினியல்பேதன் மாட்டுக்காட்டி நிற்கும். தனது பொதுவியல்பை மூன்னர்ச் சிந்தித்தறிந்துகொண்டு, பின்னர் அப்படிகவொளி யவற்றின் வேறுளதாயினைப்போல, தனது சிறப்பியல்பு இவற்றின் வேறு யுண்டென்பது முணர்ந்து, பின்னங்ஙனம் பொதுவியல் பையே தன்னியல்பாகச் செய்துநிற்கும் கருவிஞானம் பொதுவியல்பேபாயொழியும்படி தன்னியல்பு விளங்குதற்கு ஏதுவாகிய வுண்மையுணர்ந்தானத்தன்னியல்பின் விளங்கித் தோன்றுஞ் சிவத்தையுறுவன்; மீளவக்கருவிக்கூட்டத்திற் செல்வானல்லன், சிறைப்பட்டநீர் முறிந்தவழிக் கடலிற் சென்றடங்கி மீளாதவாறுபோலுமென்பதாம்.

கருவிகள் அப்பெற்றியவாயவழி அவற்றை நீங்கி யருள்பெறு மாறு யாங்ஙன? மென்று நோதலுறுவார்க்கு உபாயங் கூறியவாறு.

சேர்தற்கு இடையீடின்மை விளக்குவார், முடியே யாடி யென்றார். (37)

எங்குந்தா னெண்ணி லெய்த வேண்டா
வெங்குமில னென்னின்வே றிறையு மல்ல
னங்கஞ்சே ருயிர்போல்வ னென்னி னங்கத்
தவயவங்கள் கண்போலக் காணு வான்மா
விங்குகா மியம்புந்தத் துவங்களின்வைத் தறிவ
திறைஞானந் தந்துதா னீதல்சுட ரிழந்த
துங்கவிழிச் சோதியுமுட் சோதியும்பெற் றுற்போற்
சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே.

சுப் — பதவுரை

எங்கும் தான் என்னின் நாம் எய்த வேண்டா — உயிர் கரணங்களெல்லா சிவமயமேயெனின் (வேற்றுமை

யின்மையாற் கருவிவழிச் செல்லுஞ் சகலநிலையைக் கைவிட்டுத் திருவடியை) யாந் தலைக்கூடவேண்டாமையானும்,—எங்கும் இலன் என்னின் வேறு இறையும் அல்லன்—(அதுபற்றி) எல்லாஞ் (சிவமாதல்) இல்லையெனின் (எவற்றினும் வியாபகமாயுடனின்று செலுத்துவதாகிய) அவனதிறமைக் கிழுக்காய் முடியுமாகலானும்,—அங்கஞ்சேர் உயிர் போல்வன் என்னின் – இருவகையுமின்றிக் கலப்பிலுல் உடம்பின்கட் பொருந்திய உயிர்போல ஒப்ப நிற்பனென்பது பெறப்படுமாகலான்,—அங்கத்து அவயவங்கள் கண்போலக் காணு இங்கு – உடம்பின்கணுளவாகிய (ஐந்திந்திரியங்களினும் உயிரொப்பநிற்பினும்) ஏனையிந்திரியங்கணுன்கும் (ஒளியால் அவ்வான்ம போதத்தோடும் விரவிச் சேய்மைக்கண்ணதாகிய விடயத்தையும் வியாபித்தறியுங்) கண்ணிந்திரியம்போல வியாபித்தறியமாட்டா (வாய்த் தம்மாட்டு வந்த விடயங்களே நின்ருங்கு நின்றியையந்தறிவனவே யாமன்றே) அதுபோல,—ஆன்மா நாம் இயம்புந் தத்துவங்களின் வைத்து அறிவது – ஆன்மாவினும் நீ யியம்புந் தத்துவங்களினும் வைத்துப் பார்த்து (வேற்றுமை) அறிந்துகொள்ளப்படும்,— இறை ஞானம் தந்து தாள் ஈதல் - (ஆகலான் அப்பெற்றித்தாகிய உயிர் அப்பெற்றித்தாகிய கருவிஞானத்தைக் கைவிட்டு) இறை ஞானந் தந்து திருவடிகளே ஈயப்பெறுதல்,—சுடர் இழந்த துங்க விழிச் சோதியும் உட்சோதியும் பெற்ருற்போல் – ஒழியிழந்த கண் மாசுநீங்கியவழித் தன்னெளியையும் (தனக்குள்ளொளியாய் நின்று செலுத்தும்) ஆன்மபோதத்தையும் (ஒருங்கே) பெற்ருற்போலுமாகலின்,—சோதிக்குட்சோதியாய்த் தோன்றிடுவன் காணே – (அவ்வழி இறைவன்) ஆன்மாவின் அறிவுக்கறிவாய்த் தோன்றுவான் (அன்றி ஏகதேசமாகிய ஏனைக் கருவி யறிவுக்குள் அறிவாய்த் தோன்றுவானல்லன்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. உயிர் கரணங்களெல்லாஞ் சிவமபமேயெனின் வேற்றுமையின்மையாற் கருவிவழிச் செல்லுஞ் சகலநிலையைக் கைவிட்டுத் திருவடியைத் தலைக்கூட வேண்டாமையானும், அதுபற்றி யெல்லாஞ் சிவமாதலில்லையெனின் எவற்றினும் வியாபகமாயுடனின்று செலுத்துவதாகிய வவன திறமைக்கு இழுக்காய் முடியுமாகலானும், இருவகையுமின்றிக் கலப்பினு லுடம்பின்க ணுயிர்போல ஒப்பநிற்பனென்பது பெறப்படுமா கலான், உடம்பின்கணுளவாகிய வைந்திந்திரியங்களினும் உயிர் ஒப்ப நிற்பினும் ஏனை யிந்திரியங்களுண்கும் ஒளியாலவ் வான்ம போதத்தோடும் விரவிச் சேப்மைக்கண்ணதாகிய விடயத்தையும் விபாபித்தறியுங் கண்ணிந்திரியம்போலவியா பித்தறியமாட்டாவாய்த் தம்மாட்டு வந்த விடயங்களை நின் றுங்குநின்று இயைந்தறிவனவேயாமன்றே, அதுபோலவான் மாவினுந் தத்துவங்களினும் வைத்துப் பார்த்து வேற்றுமை யறிந்துகொள்ளப்படுமாகலான், அப்பெற்றித்தாகிய உயிர் அப்பெற்றித்தாகிய கருவிஞானத்தைக் கைவிட்டு இறை ஞானந்தந்து திருவடிகளையீயப்பெறுதல், ஒளியிழந்த கண் மாசு நீங்கியவழித் தன்னொளியையுந் தனக்கு உள்ளொளி யாய் நின்று செலுத்துமான்மபோதத்தையும் ஒருங்கே பெற் றுற்போலுமாகலின், அவ்வழி யிறைவன் ஆன்மாவி னறிவுக் கறிவாய்த் தோன்றுவானன்றி ஏகதேசமாகிய வேனைக் கருவி யறிவுக்கு ளறிவாய்த் தோன்றுவானல்லனென்பதாம்.

இறைவ னெப்ப நிற்பினும் ஏகதேசப்பொருள் ஏகதேசப் பொருளே வியாபகப்பொருள் வியாபகப்பொருளே யென்பார், உவமை யெடுத்துக் காட்டி. ஆன்மாவினும் காமியம்புந் தத்துவங் களினும் இங்கு வைத்தறிவதென்னூர்.

காமென்னு முளப்பாட்டுத் தன்மை "காமரை யாமத் தென்ஞெவந்துவைகி மயந்ததுவே" (திருக்கோவையார், செய்யுள் – 87.) என்முற்போல ஈண்டிழித்தற் குறிப்புத் தோன்ற முன்னிலைக்கண் வந்தது.

அறிவதென்றது வியங்கோள், "கொள்ளப்படாதுமறப்பது" (திருக்கோவையார், செ- 87.) என்பதுபோல.

இங்கென்பது உவமவுருபு தோன்ற நின்றது.

ஈதல் ஆகுபெயர்.

இழந்தவென்னும் அன்பெறுத வகரவீற்றுப் பலவறிசொல் விழிகளே யுணர்த்திப் பெற்றுற்போலென்னும் பயனிலைகொண்டது.

மாசுநீக்கந் தோன்றத் தங்கவிழிச் சோதியென்றார்.

யாண்டுமொப்பநிற்குஞ் சிவத்தினெடும் பொருந்தினவன் மீளினும் அதுபற்றி யிழுக்கென்னே? யென்னுஞ் சிவாத்துவித சைவரை நோக்கி ஒப்ப நிற்கும் வழியும் வேற்றுமை யுண்டென்பது உவமை முகத்தானினிது விளக்கிப் 'போதான் பின்னே' யென்றதனை வலியுறுத்தியவாறு. (38)

பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட் டெறியப்
படும்பொழுது நீங்கியது விடும்பொழுதிற் பரக்கு
மாசுபடு மலமாயை யருங்கன்ம மிணைத்து
மரனடியை யுணரும்போ தகலும்பின் னணுகு
நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கு
நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாகி
யாசையொடு மங்குமிங்கு மாகியல மருவோ
ரரும்பாச மறுக்கும்வகை யருளின்வழி யுரைப்பாம்.

சுப் — பதவுரை

நேசமொடும் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கும் நினை வுடையோர் – இடையறுத அன்போடு சிவத்தைப் பொருந்தி அதீதத்தையடையும் இச்சையுடையோர்,—நிலை அதுவேயாகி நின்றிடுவர்–அச் சுத்தாவத்தை நிலையேயாய் நிற்பர் (ஓரோவழி),—படு குட்டத்தில் கல்லினை விட்டெறியப் படும்பொழுது நீங்கி அது விடும்பொழுதில் பரக்கும் பாசி–பொருந்திய தடாகத்திற் கல்லெறியும்போது நீங்கி அஃதில்லாதபொழுது பரக்கும் (அந்நீர்ப்) பாசிபோல,—ஆசு படு மலம் மாயை அருங்கன்மம் அனைத்தும் அரன் அடியை உணரும்போது அகலும் பின் அணுகும்–குற்றம்பொருந்தியமலமும் மாயையும் பெரிய கன்மமுமாகிய வெல்லாம் சிவத்தை உணரும்போது நீங்கி (அதனை யுணராத அற்றம் பார்த்து வந்து தலைப்படுதலாகிய) மீட்சிவருமாயின் (அது வாதனைபற்றி நிகழ்வதாகலின்),—ஆசையொடும் அங்கும் இங்குமாகி அலமருவோர் அரும்பாசம் அறுக்கும் வகை அருளின் வழி உரைப்பாம் – (அங்ஙனம்) விருப்பத்தோடு சிவத்தின்மாட்டும் கருவிகளின்மாட்டும் மீண்டு சுழல்வோர் (அதற்கேதுவாகிய) பெரிய மலவாதனையைப் போக்கும்வண்ணம் அருளுபாயத்தை முன்னர்க் கூறுவாம் (அதனைக் கடைப்பிடித்துச் செய்து அவ்வாதனை நீக்கிக் கோடற் பாற்று) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *சிவத்தைப் பொருந்தியவன் ஓரோவழிக் கருவிகளின் மீளவருமாயின் அது நீர்ப்பாசிபோல அற்றம் பார்த்து வந்து தலைப்படும் வாதனைபற்றி நிகழ்வதாகலின், அவ்*

வாதனை முன்னர்க் கூறப்படு முபாயத்தைக் கடைப்பிடித்துச் செய்து நீக்கிக்கோடற்பாற்றென்பதாம்.

இவை மூன்றுசெய்யுளானும் 'அவரினீக்கி மலமகற்றித் தாளுக்கி மலரடிக்கீழ் வைப்ப' னென்ற காலாங்கூற்றுப் பொருள் வலியுறுத்தப்பட்டது. (39)

எட்டாஞ்சூத்திரமுடிந்தது.

ஆகத்திருவிருத்தம்–291.



உ

சிவமயம்


திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் சுபக்கம்

சாதனவியல்

ஒன்பதாஞ்சூத்திரம்

திருவிருத்தம் — 12.



ஒன்பதாஞ்சூத்திரம்

மேலைச் சூத்திரத்தாற் பேறுமுதலியவற்றை யுணர்ந்தானுக்கு அப்பேறு பயப்பதாகிய சாதனஞ்செய்யுமாறு வகுத்துக் கூறுதற் கெழுந்தது ஒன்பதாஞ்சூத்திரம்.

பாசஞ்ஞா னத்தாலும் பசுஞ்ஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே
நேசமொடு முள்ளத்தே நாடிப் பாத
நீழற்கீழ் நில்லாதே நீங்கிப் போதி
னைசைதரு மூலகமெலா மலகைத்தே ராமென்
றறிந்தகல வங்ஙிலையே யாகும் பின்னு
மோசைதரு மஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்க
வுள்ளத்தே புகுத்தளிப்ப ஞானமெலா மோடை.

சுப — பதவுரை

பாசஞ்ஞானத்தாலும் பசுஞ்ஞானத்தாலும் பார்ப்ப அரிய பரம்பரனை – (மேற்கூறிய வாற்றால்) ஏனைப் பாசஞ்ஞான பசுஞ்ஞானங்களாகிய இருவகை ஞானங்களாலும் எய்துதற் கரியனைய பரம்பரனை,—பதிஞானத்தாலே உள்ளத்தே நாடி – அவனது திருவடிஞான மொன்றுனே தன்னறிவின்கண் வைத்தாராய்ந்து,—நேசமொடும் பாதநீழற் கீழ் நில்லாதே நீங்கிப்போதின் – நேசமொடுந் திருவடி நிழலின்கீழ் நீங்காதே தூங்கப்பெறுதவழி,—ஆசை தரும் உலகமெலாம் அலகைத்தேராமென்று அறிந்து அகல – பற்றுச்செய்தற்கேதுவாகிய எத்திறப்பட்ட பிரபஞ்சமும் (நின்றுழி நில்லாது பெயருங்) கானற்றேரின் இயல்பினவாகக் கண்டுகழிப்பவே,—அங்ஙிலையே ஆகும் – (அத்திரு

வடிஞானம் விளங்கி) அந்நிலை கைகூடப்பெறும்,—பின்னும் உள்ளத்தே புகுந்து அளிப்பன் ஊனமெலாம் ஓட-அதன்பின்னும் அவ்வாறு உளத்தே ஞானத்தை விளக்கி ஞேயமாகிய தன்னை அளிப்பனுதலாற் பாசமுற்று நீங்கி வாதனைபற்றிச் சலியாமைப்பொருட்டு,—ஓசைதரும் அஞ் செழுத்தை விதிப்படி உச்சரிக்க – அப்பொருள் பயக்குந் திருவஞ்செழுத்தை அவ்விதிப்படி (யறிந்து) உச்சரிக்க என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேற்கூறியவாற்றால் ஏனையிருவகைஞானங்களானு மெய்த்துதற்கரியனாகிய பரம்பரனை அவனது திருவடி ஞானமொன்றனே தன்னறிவின்கண் வைத்தாராய்ந்து நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதேதூங்கப்பெறுதவழிப் பற்றுச் செய்தற்கேதுவாகிய எத்திறப்பட்ட பிரபஞ்சமும் நின்றுழி நில்லாது பெயருங் கானற்றேரினியல்பினவாகக் கண்டு கழிப்பவே, அத்திருவடிஞானம் விளங்கி யந்நிலை கைகூடப்பெறும். அதன்பின்னு மவ்வாறு பாசத்தையொருவி ஞானத்தைப் பெற்று ஞேயத்தைக் கண்ட காட்சி யொரோவழி வாதனை பற்றிச் சலியாமைப்பொருட்டு, அப்பொருள் பயக்குந் திருவஞ்செழுத்தை யவ்விதிப்படி யறிந்து உச்சரிக்க வென்பதாம்.

ஈண்டு ஊனமென்றது வாதனாமலத்தை.

நில்லாதே நீங்கிப் போதினனவே, அவ்வாறு நிற்றலு மனுவாதமுகத்தா னீண்டு விதிக்கப்பட்டதாயிற்று.

ஆகவே இச்செய்யுள் முதலொன்பதாஞ் சூத்திரம்போல முக்கூற்றதாயவாறு கண்டுகொள்க. (1)

முதலதிகரணம்

வேதசாத் திரமிருதி புராணகலே ஞானம்
விரும்பசபை வைகரியா தித்திறங்கண் மேலா
நாதமுடி வானவெல்லாம் பாச ஞான
நணுகியான் மாவிவைகீழ் நாட லாலே
காதலினை ஞன்பிரம மென்னு ஞானங்
கருதுபசு ஞானமிவ னுடலிற் கட்டுண்
டோதியுணர்ந் தொன்றென்று வுணர்ந்திடலாற் பசுவா
மொன்றுகச் சிவனியல்பி னுணர்ந்திடுவன் காணே.

சுப் — பதவுரை

பாசஞானம் – மேற்கூறிப்போந்த மூவகை ஞானங்களுட்) பாசஞானமாவது,—வைகரி ஆ தி த் தி ற ங் க ள் வேதம் சாத்திரம் மிருதி புராணம் கலைஞானம் விரும்பு அசபை - வைகரிமுதலிய நால்வகை வாக்கின் பகுதியவாகிய வேதங்களும் சாத்திரங்களும் மிருதிகளும் புராணங்களும் மற்றக் கலைஞானங்களும் விரும்புகின்ற அசபையு (மாகிய சொற்பிரபஞ்சமும்),—மேலாம் நாதமுடிவான வெல்லாம் – (நிலமுதல்) மேலாகிய நாதமீருகிய (பொருட் பிரபஞ்சமு மென்னும்) இவை (பற்றி நிகழும் ஏகதேச ஞானம் அனைத்துமாம்),—கருது பசுஞானம் – கருதுகின்ற ஏனைப் பசுஞானமாவது,—நணுகி (ய) ஆன்மா இவைகீழ் நாடலாலே – (இவற்றைப்) பொருந்திய ஆன்மா இவையனைத்துந் தன்கீழ் வியாப்பியமென்றறி (ந்து நீங்கித் தான் அவற்றிற்குமேற்படு)தலான்,—கா த லி னை ஞன் நான் பிரம மென்னும் ஞானம் – (அங்ஙனம் அதுபற்றி நிகழ்வதோர்)

செருக்கால் (அநாதிமுத்தனைப்போல முத்தனாகிய) யானும் (அவ்வாறு) பிரமமாவேனெனச் (சடிதியின் மதிக்கவருவதோர்) சிவசமவாதஞானமாம் (அற்றேல் அறிந்து நீங்குதலின் வேற்றுமையின்மையிற் பசுவைச் சமப்பிரமமென்றற் கிழுக்கென்னையெனின்),—இவன் உடலில் கட்டுண்டு – இவ்வான்மாத் தூல சூக்கும பரதேகங்களாற் கட்டுண்டும்,—ஓதி உணர்ந்து - நூலுணர்வான் உணர்த்தவுணர்ந்தும்,—ஒன்று ஒன்று உணர்ந்திடலால் – ஒவ்வோர் இந்திரியங்களிலுல் ஒவ்வொரு விடயங்களை யுணர்ந்தும் இடையே நீங்கு)தலான்,—பசுஆம் அப்பசு (ஆதிமுத்த)னும்,—சிவன் – பதி,—இயல்பின் ஒன்றுக உணர்ந்திடுவன் காணே – (ஒருவனுணர்த்த உணர்தலின்றித்) தானேமுழுதும் அறிந்தாங்கறி(ந்து அநாதியே நீங்கிய பேரறிவு)ஞகலின் (அநாதிமுத்தனும்) இவ்வேறு பாட்டைத் தெற்றெனவுணர்க என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேற்கூறிப்போந்த மூவகைஞானங்களுட் பாசஞானமாவது நால்வகைவாக்கின் பகுதியவாகிய வேதமுதலிய சொற்பிரபஞ்சமும் நிலமுதலைதமீறுகிய பொருட்பிரபஞ்சமுமென்னு மிவைபற்றி நிகழு மேகதேசஞானமனேத்துமாமென வும், ஏனைப்பசுஞானமாவது இவற்றைப்பொருந்திய வான்மாவையனேத்துந் தன்கீழ் வியாப்பியமென்றறிந்து நீங்கித் தானவற்றிற்கு மேற்படுதலான் அங்ஙனமதுபற்றி நிகழ்வதோர் செருக்கால் அநாதிமுத்தனைப்போல முத்தனுகிய யானுமவ்வாறு பிரமமாவேனெனச் சடிதியின் மதிக்க வருவதோர் சிவசமவாதஞானமெனவு முணர்கவென்பதாம்.

ஞானவேற்றுமை தெரித்துக் கூறியவாறு. அற்றேல், அறிந்து நீங்குதலின் வேற்றுமை யின்மையாற் சமப்பிரமமென்றற் கிழுக்கென்னே? யென்னு மாசங்கை நீக்குதற்பொருட்டு அகாதிமுத் தினோடு ஆதிமுத்தனிடையறிந்து நீங்குதலின் வேற்றுமை பெரிதா தல் காட்டுவார், இவனுடலிற் 'கட்டுண் டோதியுணர்ந் தொன் றொன்று வுணர்ந்திடலாற் பசுவாமொன்றுகச் சிவனியல்பி னுணர்ந் திடுவன்காணே' யென்றார். பசுத்துவ நீங்கியவழியு மவ்வாறு மதித் தல் பசுத்துவவாதனே பற்றியாகலா னதுபசுஞானமேயாமென்பது, கான் பிரமமென்னுஞானம் எகான்மவாதம்பற்றி நிகழுஞான மெனினுமாம்.

காடலாலெனவும் உணர்ந்திடலாலெனவும் உணர்ந்திடுவ னெனவுங் காரியத்தைக் காரணமாக வுபசரித்தார். காதமுடிவான வெல்லாமென்றது மது.

கணுகியவென்னும் பெயரெச்சத்தகரம் விகாரத்தாற்றொக் கது; "தகுவரியன்பு" என்றாற்போல.

'ஒன்றுகச் சிவனியல்பி னுணர்ந்திடுவன்காணே' யென்றதனாற் பதிஞானத்தியல்பு இதுவென்பதூஉம் பெறப்பட்டது.

அஃதங்ஙனமாக வைகரியாதித் திறங்களெல்லாம் பாசஞான மெனக்கழிப்பின் வைகரியாதித்திறத்தட்பட்ட ஞானநூறனை யோத லோதுவித்தன் முதலியன ஞானபூசையென மேற்கூறியது போலியாய் முடியும்போலுமெனின்,—முடியாது; பதிஞானம் விளங்குதற்கு ஏதுவாமுகத்தாற் பயன்படுதலுடைமையின். (2)

கரணங்கள் கெடவிருக்கை முத்தியா மென்னிற்
கதியாகுஞ் சிறைமுட்டை கருமரத்தி னுயிர்க்கண்
மரணங்கொண் டிடவுறங்க மபங்கிமூர்ச் சிக்க
வாயுத்தம் பிறைபண்ண வல்விடத்தை யடைபச்

சரணங்கள் புகுநிழல்போற் றனையடையுஞ் சமாதி
தவிராது மலமிதுவும் பசுஞான மாகு
மரணங்க ளெரித்தவன்ற னடியையறி வீறந்தங்
கறிந்திடீர் செறிந்ததுக ளகற்றி டீரே.

சுப் — பதவுரை

சரணங்கள் கெட இருக்கை முத்தியாமென்னின் - (அங்ஙனம் நான் பிரமமென நிகழுஞானமேயன்றி) ஆன் மா இவைகீழ் நாடி நீங்குதன் மாத்திரையே முத்தியென் னின்,—சினை முட்டை கரு மரத்தின் உயிர்கள் (மருவ)க் கதி ஆகும் – சினையினும் முட்டையினும் கருப்பாசயத் தினும் மரத்தினும் உயிர்கள்பொருந்த முத்தியாதல்வேண் டும் (அங்ஙனமின்மையின்).—(இதுவும்) - (அச்சிவசம வாத ஞானத்திற்கு முன்னை நிகழும்) இப்பாடாணவாத ஞானமும்,—சரணங்கள் புகும் நிழல்போல் தனை அடை யும் சமாதி (முத்தியாமென்னின்)–(சேய்மைக்கட்சென்ற) ஒருவனிழல் (உச்சிப்போதின்கண் அங்ஙனஞ் சேற லொழிந்துஅவன்) தன்மாட்டு வந்தொன்றி நிராதாரமாய் நிற்கு மதுவே முத்தியெனின்,— மரணங்கொண்டிட உறங்க மயங்கி மூர்ச்சிக்க வாயுத்தம்பனை பண்ண வல் விடத்தை அடைய(க்கதி ஆகும்)-மரணமாகிய பத்தாம வத்தை அடைந்தவிடத்தும் உறங்கியவிடத்தும் மயக்க முற்று மூர்ச்சித்தவிடத்தும் பிராணவாயு இயங்காமற் றம்பித்தவிடத்தும் கொடிய நஞ்சம் பொருந்தியவிடத்தும் முத்தி யாதல்வேண்டும்(அங்ஙனமின்மையின்).–இதுவும்– (பாடாணவாத ஞானத்தின்பின்னைக் நிகழும்) இப்பேத வாத ஞானமும் (என்னும் இவையும்),—பசுஞானமாகும்- பசுஞானங்களாம்,—அறிவு இறந்து அங்கு அரணங்கள்

எரித்தவன்றன் அடியை அறிந்திடீர் – (ஆதலால்) சிவ ஞானத்தான் முப்புரங்களைத்தகித்த சிவபிரானே(யுந் தம்மை யும்) அறியப்பெறுமின்,—செறிந்ததுகள் அகற்றிடரே – (அறிந்து உம்மைப்) பந்தித்த மலத்தை நீக்குமின்,—மலம் தவிராது – (மேற்கூறிய பசுஞானங்கட்கேதுவாகிய)பசுத் துவவாதனே (இச்சிவஞானமுடையார்க்கன்றி) நீங்காது என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அங்ஙனம் நான்பிரமமென நிகழுஞானமேயன்றி ஆன்மா விவைகீழ்நாடி நீங்குதன்மாத்திரையே முத்தியாத லமையுமென வதற்கு முன்னைக நிகழும் பாடாணவாதஞான மும், சேய்மைக்கட் சென்ற வொருவனிழல் உச்சிப்போ தின்க ணங்ஙனஞ் சேறலொழிந்து அவனடியுள் வந்தொடுங் கிறற்போலக் காணங்களிற் சென்ற தன்னறிவு பக்குவம் வந் துழி யங்ஙனஞ் சேறலொழிந்து தன்மாட்டு வந்தொன்றி நிராதாரமாய் நிற்கு மதுவே முத்தியாதலமையுமெனப் பாடாணவாதஞானத்தின் பின்னைக நிகழும் பேதவாதஞான முமென்னு மிவையும் பசுஞானமாம். இவ்வாறு நிகழும் பசு ஞானங்களுக்கேதுவாகிய பசுத்துவவாதனே இவற்றைக் கை விட்டுச் சிவஞானத்தாற் சிவனேயுந் தம்மையு மறியப்பெற் றூர்க்கன்றி நீங்காதென்பதாம்.

இதுவும் உம்மை இறந்தது தழீஇயிற்று.

கதியாகுமென்றது செயவென்னும் வாய்பாட்டு வினையெச் சங்களோடு தனித்தனி சென்றியையும்.

சினமுட்டை கருமரத்தினுயிர்கண் மருவவென்றுரைக்க. மருவவென்பது சொல்லெச்சம்.

முத்தியாமென்னினென்பதனைத் தனையடையுஞ் சமாதி யென்பதனுலேடுங் கூட்டுக. ஞாயிற்றைக் காணப்பெறுதார்க்கு இருணீங்காதவாறுபோலத் தனையடையுஞ் சமாதி முத்தியென் பார் சிவனை யறியப்பெறுமையி னவர்க்கு மலந்தவிராதாயிற் றென்பது.

கதியாகுமெனவுந் தவிராது மலமெனவும் ஈண்டுக் கூறியது, மேலச்செய்யுளின் உணர்ந்திடலாற் பசுவா மொன்றுகச் சிவனி யல்பி னுணர்ந்திடுவனென்றுற்போல ஆசங்கைநீக்கி அவை பசு ஞானமாதலை வலியுறுத்தற்பொருட்டு. (3)

சிவனையவன் றிருவடிஞா னத்தாற் சேரச்
செப்புவது செயல்வாக்குச் சிந்தை யெல்லா
மவனையணு காவென்று மாத லானு
மவனடியவ் வொளிஞான மாத லானு
மிவனுமியான் றுவக்குதிர மிறைச்சி மேதை
யென்புமச்சை சுக்கிலமோ விந்திரியக் கொத்தோ
வவமகல வெனையறியே னெனுமைய மகல
வடிகாட்டி. யான்மாவைக் காட்ட லானும்.

சுப — பதவுரை

சிந்தை வாக்குச் செயல் எல்லாம் – (ஈண்டுக் கூறிப் போந்த ஞானங்களுண்) மனவாக்குக்காயமாகிய முப் பொறி முதலியன,—அவனை என்றும் அணுகா ஆதலானும் –அவனை எஞ்ஞான்றும் அணுகாமையான் (அவைபற்றி ஏகதேசமாய் நிகழுஞ் சுட்டுணர்வாகிய பாசஞானத் திற்)கும்,—இவனும் – இவ்வான்மாவும்,—யான் துவக்கு உதிரம் இறைச்சி மேதை என்பு மச்சை சுக்கிலமோ இந் திரியக்கொத்தோ – யான் தோல் இரத்தம் தசை மேதை

அத்தி மச்சை சுக்கிலம் இந்திரியக்கூட்ட முதலியவோ வென (ப்பலதலைப்பட்டு),—அவம் அகல எனை அறியேன் எனும் ஐயம் ஆதலானும் – குற்ற மகல எனது சொரூபத் தையே அறியமாட்டேனென்னும் ஐயமுற்று நிற்றலான் (அங்ஙன நிற்கும் பசுஞானத்திற்)கும்,—அகல அவ்வொளி அடிகாட்டி ஆன்மாவைக் காட்டலானும் அவன் அடி ஞானம் – அவ் (ஐயம்) நீக்கித் தானே தற்பிரகாசமும் தன்னையும்விளக்கி ஆன்மாவையும் விளக்கிப் பரப்பிரகாச முமாய் நின்று (எல்லாப்பொருளையும் இனிது விளக்குவதா கிய) பதிஞானம் (போலவிளக்குமாற்றல்செல்லாமையா) னும்,—அவன் திருவடிஞானத்தால் – அப்பெற்றித்தாகிய பதிஞானம் ஒன்றுனே,—சிவனைச் சேரச் செப்புவது – பதிப்பொருளை அங்ஙனம் அறியற்பாற்றென மேற்கொண் டது என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. ஈண்டுக் கூறிப்போந்த ஞானங்களுள் முப்பொறி முதலியனபற்றி யேகதேசமாய் நிகழுஞ் சுட்டுணர்வாகிய பாசஞானத்திற்கும், தற்சொரூபமே யறியமாட்டாது பல தலைப்பட்டையுற்று நிற்பதாகிய பசுஞானத்திற்கும், தானே தற்பிரகாசமும் பரப்பிரகாசமுமா யெல்லாப் பொருளையு மினிது விளக்குவதாகிய பதிஞானம்போல, விளக்கு மாற்றல் செல்லாமையால் அப்பெற்றித்தாகிய பதிஞானமொன்றுனே பதிப்பொருளை யங்ஙனமறியற்பாற்றென மேற்கொண்டதென் பதாம்.

கண்டிடுங்கண் டனைக்காணு கரணங் காணு
கரணங்க டமைக்காணு வுயிருங் காணு
வுண்டியம ருயிர்தானுந் தன்னைக் காணு
துயிர்க்குயிரா மொருவனையுங் காணு தாகுங்
கண்டசிவன் றனைக்காட்டி யுயிருங் காட்டிக்
கண்ணுகிக் கரணங்கள் காணம னிற்பன்
கொண்டரனை யுளத்திற்கண் டடிகூடிற் பாசங்
கூடாது கூடிடினுங் குறித்தடியி னிறுத்தே.

சுப் — பதவுரை

கண்டிடும் கண் தனைக் காணு கரணம் காணு–பரப்பிரகாசமாய் நிற்கின்ற கண்ணனது தன்னியல்பையுங் காணமாட்டாது (தனக்கு முதலாகிய) அந்தக்கரணங்களையுங் காணமாட்டாது,—(கண்டிடும்) கரணங்கள் தமைக்காணு உயிரும் காணு – பரப்பிரகாசமாய் நிற்கின்ற புத்திமுதலிய புறக்கரணமும் வித்தியர்தத்துவமாகிய அகக்கரணமும் தம்மியல்பையுங் காணமாட்டா (தமக்கு விடயங்களைக் காட்டி முதலாய் நிற்கும்) உயிரையுங் காணமாட்டா (அவைபோல),—உண்டி அமர் உயிர்தானும் தன்னைக் காணுது உயிர்க்கு உயிராம் ஒருவனையும் காணுதாகும் – பரப்பிரகாசமாய் நிற்கின்ற ஆன்மாவும் தன்னியல்பையும் அறியமாட்டாது தனக்குயிரா யுணர்த்திநிற்கு முதல்வனையுங் காணமாட்டாதாகலின்,—தனைக்காட்டி உயிரும் காட்டிக் கண்டசிவன் – தற்சொரூபத்தையும் விளக்கி ஆன்மசொரூபத்தையும் விளங்கச்செய்து (தனக்கொரு காட்டின்றி) அறிந்தாங்கறித்து (தற்பிரகாசமும் பரப்பிரகாசமுமாய் நிற்குஞ்) சிவஞானம்,—கண்ணுகிக் கரணங்கள் காணமல் நிற்பன் – காட்டாகித் (தனக்கொரு)

கரணங்கள் வேண்டாது நிற்குமாகலின்).-கொண்டு அரனை உளத்தில் கண்டு – (அச்சிவஞானத்தைக் காட்டாகக்) கொண்டு முதல்வனை அவ்வறிவினிற் காணப்பெற்று,—அடிகூடின் பாசம் கூடாது – திருவடியைத்தலைக்கூடிற் பாசம்நீங்கும்,—கூடிடினும் குறித்து அடியின் நிறுத்தே – (நீங்காது) கலந்திடினும் சிவபாவனையை விடாது செய்து சிவபிரானை அவன் றிருவடிஞானத்தாற் சேறலே பொருத்தமுடைத்து என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. பாசபசுஞானங்கள் பரப்பிரகாசமாய் நிற்பினுந் தற்பிரகாசமாய் நிற்றல் செல்லாதென்பது கண்மேல்வைத் தறியக் கிடத்தலானும், ஏனைப்பதிஞானத்திற்குத் தற்பிரகாசமாய் நிற்றலுஞ் செல்லுமென்பது தானவ்விரண்டற்குங் காட்டாய்த் தனக்கொரு காட்டு வேண்டாது நிற்றல்பற்றி யறியப்படுதலானும், சிவனை அவன்றிருவடிஞானத்தாற் சேறலே பொருத்தமுடைத்தென்பதாம்.

மேலதற்குத் தரிசனங்காட்டியவாறு.

காணுதென்னுந் துவ்வீறு விகாரத்தாற் றொக்கது.

கண்டிடுமென்பதனைக் கரணங்களென்பதனோடுங் கூட்டுக. கண்டிடுதல் ஈண்டுப் பரப்பிரகாசமாதன் மேற்று. உண்டியமர்தலுமது.

எடுத்துக்காட்டுவமை.

தனைக்காட்டி யுயிருங்காட்டிக் கண்டசிவனெனவியையும்.

காட்டிக்கண்ட சிவனென்றது அனுவாதம்.

கண்ணுகியென்பது காட்டாகியென்றவாறு; 'சொன்னசிவன் கண்ணு' வென்றற்போல.

கரணங்களாற் காணுமென மூன்றுவது விரித்துரைக்க.

கரணங்களெனவும் உயிரெனவும் சிவனெனவும் அவ்வப் பொருண் மேல் வைத்து உபசரித்தார்.

இரண்டாங்கூற்றுக்குத் தோற்றுவாய்செய்வார், 'பாசங்கூடாது கூடிடினுங் குறித்தடியி னிறுத்தே' யென்றார்.

இவை தான்கு செய்யுளானும் முதற்கூற்றின் பொருள் விளக்கப்பட்டது. (5)

இரண்டாமதிகரணம்

குறித்தடியி னின்றட்ட குணமெட்டுச் சித்தி
கோகநதன் முதல்வாழ்வு குலவுபத மெல்லாம்
வெறுத்துநெறி யறுவகையு மேலொடுகீ ழடங்க
வெறும்பொயென நினைந்திருக்க மேலொடுகீ ழில்லா
னிறுத்துவதோர் குணமில்லான் றன்னையொரு வர்க்கு
நினைப்பரியா னென்றுமிலா னேர்படவந் தள்ளே
பொறுப்பரிய பேரன்பை யருளியதன் வழியே
புகுந்திடுவ னெங்குமிலாப் போகத்தைப் புரிந்தே.

சுப — பதவுரை

அடியில் குறித்து நின்று – (குருவினருளால் அறிவ தொரு) குறியின்கண் உறைத்து நின்றுகொண்டு,—அட்ட குணம் எட்டுச்சித்தி – (பைசாசபதத்தின் அட்டமாசித் தியை நோக்கி) எண்மடங்கேற்றமாகிய அட்டசித்தியை யுடைய,—கோகநதன்முதல் வாழ்வு குலவு பதம் எல்லாம்

வெறுத்து – பிரமபதமுதலிய திப்பியமகளிரும் அதிவிசித்திரமாகிய மாடமுமாளிகையு முதலிய போக்கியப்பொருட் சிறப்புக்களான் அழகுபெற்ற பதங்களையுடைய (காலாக்கினி புவனமுதல் அனுசிருத புவனமீருயுள்ள) எவ்வகைப்பட்ட புவனமும் (இதற்குமுன் அனுபவித்துக் கழித்தமையிற் கான்ற சோறெனக் கண்டு) அருவருத்துவிட்டு,—அறுவகை நெறியும் மேலொடு கீழ் அடங்க வெறும் பொயென நினைந்து இருக்க – அறுவகை அத்துவாவுட்பட்ட (மூவகைப் பிரபஞ்ச)மும் காரணரூபத்திற் சிறிதுங் காணப்படாமையாற் (பித்திகைவடிவங் காண்பார்க்குக் காணப்படாதா யதன்கண் மறைந்த சித்திரவடிவம் போல) முழுப்பொய்யெனக் கண்டு (அவ்வாறு கண்ட காட்சி) சலியாதிருக்கப்பெறின்,—மேலொடு கீழ் இல்லான் – மேலொடு கீழ் இல்லாதாகியும்,—நிறுத்துவதோர் குணம் இல்லான் – குறித்தறிவதொருகுணம் இல்லாதாகியும்,—தன்னை ஒருவர்க்கும் நினைப்ப அரியான் – தான் ஒருவராலும் உணரப்படாதாகியும்,—ஒன்றும் இலான் – ஒரு பற்றும் இலா (தாகியும் உள்ள அப்பிரபஞ்சத்திற்கு விலக்கணமான) ஞானசொரூபம்,—உள்ளே வந்து நேர்பட – அவ்வறிவின்கண் இனிது விளங்கித் தோன்றும் தோன்றவே,—பொறுப்ப அரிய பேரன்பை அருளி - (வறியார்க்கு நிதிவாய்த்துழிப்போல அதன்கட்) பொறுத்தற்கரிய பெருங்காதல் மீதூரும் அது மீதூரவே,—அதன்வழியே–"இன்பினினிதென்றலின்றுண்டே லின்றுண்டா - மன்பினிலையே யது" (திருவருட்பயன், இன்புறுநிலை, செ - 10) வாகலான் அவ்வன்பின்வழியே,—எங்கும் இலாப் போகத்தைப் புரிந்தே – எவ்விடத்தும் அறிதற்கரிய பேரின்பமயமாய்,—புகுந்திடுவன் – புகுந்து உயிரின்கண் விளங்கித் தோன்றும்(அந்த ஞானத்திற்கு முதலாகிய)ஞேயம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. குருவினருளாலறிவதொரு குறியின்க ணுறைத்து நின்றுகொண்டு, காலாக்கினி புவனமுத லாகிருதபுவனமீரு யுள்ள எவ்வகைப்பட்ட புவனமும் இதற்குமுன் ன னுபவித் துக் கழித்தமையிற் கான்றசோறெனக்கண் டருவருத்து விட்டு, அறுவகையத்துவாவுட்பட்ட மூவகைப்பிரபஞ்சமுங் காரணரூபத்திற் சிறிதுங் காணப்படாமையாற் பித்திகை வடிவங் காண்பார்க்குக் காணப்படாதா யதன்கண் மறைந்த சித்திரவடிவம்போல முழுப்பொய்யெனக் கண்டு அவ்வா று கண்ட காட்சி சலியாதிருக்கப்பெறின், அப்பிரபஞ்சத்திற்கு விலக்கணமான ஞானசொரூபம் ஆண்டினிது விளங்கித் தோன்றும்; தோன்றவே, வறியார்க்கு நிதிவாய்த்துழிப்போல அதன்கட் பெருங்காதன் மீதூரும்; அது மீதூரவே ''இன்பி லினிதென்ற லி ன் று ண் டே லின்றுண்டா – மன்பி னிலை யே யது'' வாகலான் அவ்வன்பின்வழியே பேரின்பமயமாய்ப் புகுந்து உயிரின்கண் விளங்கித் தோன்றும் அந்தஞானத் திற்கு முதலாகிய ஞேயமென்பதாம்.

அட்டகுண மெட்டுச்சித்தி கோகநதனென்ற துபைசாசபதத்தி னட்டமாசித்தியை கோக்கி எண்மடங்கேற்றமாகிய வட்டசித்தி யுடைய பிரமபதமென வதன் பெருமை கூறியவாறு.

கோகநதன் ஆகுபெயர்; ஒற்றுமிகாமை வடநூன்முடிபு.

வாழ்வுகுலவுபதம் திப்பியமகளிரும் அதி விசித்திரமாகிய மாடமுமாளிகையுமுதலிய போக்கியப் பொருட்சிறப்புக்களா னழகு பெற்ற பதம்; ஒற்றுமைபற்றிக் குணங்குணியாக வுபசரிக்கப்பட் டது.

இதனுனே 'ஆசைதரு முலகமெலா மலகைத்தோ' மென் றறிந்தகலுமாறும் அந்நிலையேயாமாறும் வகுத்துணர்த்தி இரண் டாங்கூறு வலியுறுத்தப்பட்டது. (6)

மூன்றுமதிகரணம்.

கண்டவிவை யல்லேனு னென்றகன்று காணுக்
கழிபரமு நானல்லே னெனக்கருதிக் கசிந்த
தொண்டினெடு முளத்தவன்று னின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
விண்டகலு மலங்களெல்லாங் கருடதியா னத்தால்
விடமொழியு மதுபோல விமலதையு மடையும்
பண்டைமறை களுமதுநா னேனே னென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே.

சுப் — பதவுரை

கண்ட இவை நான் அல்லேன் என்று காணுக் கழி பரமும் நான் அல்லேன் என அகன்று - (உடம்பேநா னென்றும் அது நீங்கியவழிப் பிரமம் நானென்றும் இங் ஙனம் விபரீதமாக வுணர்கின்ற உயிராவது) சுட்டுணர்வுட் பட்ட உடம்புமுதலிய தொகுதியாகிய அப்பாசமும் நான் அன்றென்றும் சுட்டுணர்விறந்து மேம்பட்டு நின்ற அப் பதிப்பொருளும் நான் அன்றென்றும் (இரண்டற்கும் வேறனக்கண்டு வேருகிய பாசத்தை மேற்கூறியவாற் றல்) ஒருவி,-கசிந்த தொண்டினெடும்உளத்து அவன்றன்

நின்ற கலப்பாலே கருதி – (ஏனைப்பதிப்பொருள் வேறுயி னும் வியாப்பிய வியாபக பாவத்தாற் கண்ணெளியும் ஞாயிற்றினெளியும் போல வேற்றுமை சிறிதுந் தோன்று தவாறு ஒற்றித்து நிற்றற்குரிய) தனது கரிந்த தொண்டினை யும் உளத்தே இறைவன் நின்ற கலப்பினையும் நோக்கி நின்று,—சோக மெனப் பாவிக்க–(கருடோதகம் பாவனை போலச்) சிவோகம் பாவனை ஒருவன் செய்யப்பெறு மாயின்,—கருடதியானத்தால் விடம் ஒழியுமது போல – அக்கருடன் அம்மாந்திரிகனுக்கு வேறுதலின்றி அத்துவித மாய்த் தோன்றி விடத்தை நீக்கித் தெளிவுசெய்யுமாறு போல,—வேறு இன்றித் தோன்றுவன் - சிவபிரானும் இவனில் வேறுதலின்றி அத்துவிதமாய்த் தோன்றி,–மலங் களெல்லாம் விண்டு அகலும் விமலதையும் அடையும் – மலங்கள் முழுவது நீக்கிச் சுத்தனைகச் செய்வன்,—பண் டைமறைகளும் அது நானேனேன் என்று பாவிக்கச் சொல்லுவது இப்பாவகத்தைக் காணே–பழைய வேதாந் தமும் அது நானேனேன் என்னப் பாவிக்கச் சொல்லுவதும் இப்பாவனையையே என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. உடம்பே நானென்றும் அது நீங்கியவழிப் பிர மம் நானென்றும் இங்ஙனம் விபரீதமாகவுணர்கின்ற உயிரா வது, சுட்டுணர்வுட்பட்ட வப்பாசமுமன்று சுட்டுணர் விறந்துநின்ற வப்பதிப்பொருளுமன்று இரண்டற்கும் வே றெனக் கண்டு, வேறுகிய பாசத்தை மேற்கூறியவாற்று லொருவி, ஏனைப்பதிப்பொருள் வேறுயினும் வியாப்பியவியா பக பாவகத்தாற் கண்ணெளியும் ஞாயிற்றினெளியும்போல வேற்றுமை சிறிதுந் தோன்றுதவாறு ஒற்றித்து நிற்றற்குரிய

தனது தொண்டினையும் இறைவன் கலப்பினையும் நோக்கி நின்று, கருடோகம்பாவனைபோலச் சிவோகம்பாவனை யொருவன் செய்யப்பெறுமாயின், அக்கருடனம் மாந்திரிகனுக்கு வேறுதலின்றி யத்துவிதமாய்த் தோன்றி விடத்தை நீக்கித் தெளிவுசெய்யுமாறுபோல, சிவனுமிவனில் வேறுதலின்றி அத்துவிதமாய்த் தோன்றி மலங்களை நீக்கிச் சுத்தனாகச் செய்வன்; வேதாந்த மகாவாக்கியத்திற்கும் இதுவே பொருளாகக் கொள்கவென்பதாம்.

இப்பாவனை யின்றியமையாச் சிறப்பிற்றென்ப தணர்த்துவார், பயனுமுடன் கூறினர்.

பாமுமென்ற வும்மை இறந்ததழீஇயது

பாம் அவனெனத் திணைமயங்கிற்று.

தொண்டாவது சார்ந்ததன்வண்ணமா மியல்புடைய வுயிர் கழிபரமு ஞானல்லே னெனக் கருதியவழி முன்போல மூனைத்தலின்றி ஒங்குணர்வி னுள்ளடங்கி அதன்வழித்தாய் நிற்றல். மூனைத்து நின்று செய்யும் உலகத்தொண்டி னீக்குதற்குக் கசிந்ததொண்டென விசேடித்தார். வேறுய வழியுஞ் சோகமெனப் பாவித்தற்குரிய வியைபு இருவர்மாட்டு முண்மை விளக்குவார், கசிந்த தொண்டினொடு மூளத்தவன்ரு னின்ற கலப்பாலே யென்ரு ர். கருடபாவனையை யெடுத்துக்காட்டியதும் அதன்கணையநீக்குதற் பொருட்டென்பது. எனவே கருடோகமெனப் பாவிக்கு மத்துவித பாவனைக்கு மந்திரத்தினதாற்றலும் அவ்வாற்றல்வழிநின்று பாவிக்கும் மாந்திரிகனதாற்றலும் ஒருதலையான் வேண்டப்பட்டு ஆண்டைக்கு நிலைபெறுமாறுபோல, சிவோகமெனப் பாவித்து நிற்கு மத்துவிதநிலைக்கு இறைவனது கலப்பும் இவனது தொண்டும் ஒருதலையான் வேண்டப்படுமென்பது போந்தமையால்

அங்ஙனந் தொண்டு செய்தற்குரிய ஆன்மாவினது ஞானக்கிரியை களும், கலத்தற்குரிய இறைவன் ஞானக்கிரியைகளும், ஆண்டுக் கேடின்றி நிலைபெறு மென்பதூஉம் அருத்தாபத்தியா னுணர்ந்து கொள்க; "உன்றன்குலமிரண்டென்குலமிரண்டுங் குறுகிடாவண்ண மின்பமாயென்பாற் கூத்தையுங் கொண்ட தெப்படிதான்" (உல குடைய நாயனார் கழிகெடிலடியாகிரியவிருத்தம். செ. 4.)என வியந்துகூறியதூஉம் இவ்வுண்மைநோக்கியென்க. இப்பெற்றித் தாகிய சுத்தாத்துவித வுண்மை யுணரமாட்டாதார், ஒருபொருள் மற்றொருபொருளாதல் யாண்டுமின்மையின் அது நானேனென்னு மொருவார்த்தைப்பொருள்படுமாறு யாங்ஙன?மென்றுசங்கித்தார்க்கு ஒன்றுகெட்டு ஒன்றுமெனக்கொண்டு பரிணமங் கூறுவாரும், அது நானென்னு மிருபெயரும் விட்டுவிடாத வாகுபெயரெனக்கொண்டு கேவலாத்துவிதங் கூறுவாரும், அவற்றுள் ஒன்றனே மாத்திர மாகுபெயரெனக் கொண்டு விசிட்டாத்துவிதங் கூறுவாருமாயிடர்ப் படுவர். அங்ஙன மிடர்ப்பட் டுரைப்பனவெல்லாம் பொருளல்ல வென்பார், 'பண்டைமறைகளு மதுநானுனே னென்று பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே'யென்றார். எனவே,வேதாந்த மகாவாக்கியமுஞ் சித்தாந்த மகாவாக்கியமும் பொருளாலொன் றென்பதூஉம் பெறப்பட்டது. ஈண்டுக் கருடனென்றது கருடனுக் கதிதெய்வமாகிய மந்திரசொரூபத்தையாகலின் அப்பாவனை மெய் யாதற் கிழுக்கின்மையுணர்க.

இதனுனே திருவஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிப்பார்க்கு வேண்டப்படும் பாவனை கூறப்பட்டது.

அஞ்செழுத்தா லான்மாவை யரனுடைய பரிசு
மரனுருவு மஞ்செழுத்தா லமைத்தமையு மறிந்திட்
டஞ்செழுத்தா லங்கர நியாசம் பண்ணி
யான்மாவி னஞ்செழுத்தா லிதயத் தர்ச்சித்

தஞ்செழுத்தாற் குண்டலியி னனலை யோம்பி
யணைவரிய கோதண்ட மணைந்தருளின் வழிநின்
றஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கமதி யருக்க
னணையரவம் போற்றேன்று மான்மாவி லரனே.

சுப் — பதவுரை

(ஆன்மா அரனுக்கு உடைமையாம் பரிசும்) ஆன் மாவை அரனுடைய பரிசும் அஞ்செழுத்தால் (அறிந் திட்டு) – (கசிந்த தொண்டிலெடு முளத்தவன்ரு னின்ற கலப்பாலே சோகமெனப் பாவித்தற்கண்) ஆன்மாவுஞ் சிவமும் அங்ஙனம் உடைமையும் உடையானுமாய் நிற் கும் பரிசை ஐந்தெழுத்தோது முறையின் வைத்து உணர் ந்து,—அரன் உருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்டு – (''ஆடும்படிகேள்'' உண்மைவிளக்கம், செ - 33 என வும் ''சேர்க்குந்துடிசிகரம்'' செ - 34 எனவும் ஓதியவாறே) அவன்றிருமேனி ஐந்தெழுத்தால் அமைந்த பரிசும் உணர்ந்து,—அங்க கர நியாசம் அஞ்செ ழுத்தாற் பண்ணி – (அம்முறையே) அங்கநியாச கரநியா சங்களும் அவ்வைந்தெழுத்தாற் செய்துகொண்டு (இரு தயம் உந்தி புருவநடுவென்னு மூன்றும் பூசைத்தானம் ஓமத்தானம் தியான த்தானமாகக் கற்பித்துக் கொண்டு),—இதயத்து ஆன்மாவின் அஞ்செழுத்தால் அர்ச்சித்து – இதயத்தில் ஆன்மாவில் அவ்வஞ்செழுத் தாற் பூசித்து,—குண்டலியின் அஞ்செழுத்தால் அனலை ஓம்பி – உந்தியில் அவ்வஞ்செழுத்தால் ஓமித்து,— அணைவு அரிய கோதண்டம் அணைந்து – அணைதற்கரிய புருவநடுவிற் சேர்ந்து தியானித்து,—அருளின்வழிநின்று அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க – அருள்வழித்தாக

நின்று அவ் வஞ்செழுத்தைவிதிப்படியே(மாறி நெஞ் சழுததி) உச்சரித்தல்செய்க (இவ்வாறு சிவோகம்பாவனை யும் திருவைந்தெழுத்து மந்திரமும் அந்தரியாகக் கிரியையு மென்னும் இம்மூன்றினும் ஒருவழிப்பட நின்றுகொண்டு அதனைக் கணிக்கப் பெறுவார்க்கு),—மதி அருக்கன் அணை அரவம்போல் – (நவக்கோள்களுள் ஏனை யேழும்போல் காண்டல்செல்லாத) இராகு கேதுக்கள் (உபராகத்திற்) சந்திராதித்தர்மாட்டுக் காணப்படுமாறுபோல,—அ ர ண ஆன்மாவில் தோன்றும்–(முப்பொருள்களுள் யான் இதனை அறிந்தேன் அறிகின்றிலேனென்னும் அறிவிற்கு விடய மாய்த் தோன்றும் ஏனைப் பசுபாசங்கள் போலப் புலனாகாத அப்) பதிப்பொருள் (அவ்வுச்சரிப்பின்) ஆன்மாவின் மாட்டு விளங்கித் தோன்றும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *கசிந்ததொண்டினெடு முளத்தவன்றனின்ற கலப்பாலே சோகமெனப் பாவித்தற்கண் ஆன்மாவுஞ் சிவமு மங்ஙனம் உடைமையுமுடையானுமாய் நிற்கும் பரிசை ஐந் தெழுத்தோதுமுறையின் வைத்துணர்ந்து, "ஆடும்படி கேள்" எனவும் "சேர்க்குந்துடிசிகரம்" எனவுமோதிய வாறே அவன்றிருமேனி அஞ்செழுத்தாலமைந்த பரிசுமுணர்ந்து, அம்முறையே அங்கநியாச கரநியாசங்களு மவ்வைந் தெழுத்தாற் செய்துகொண்டு, இதயமுந்திபுருவநடுவென் னும் மூன்றும் பூசைத்தானம் ஓமத்தானந் தியானத்தான மாகக் கற்பித்துக்கொண்டு, அங்ஙனம் வழிபட்டுநின்று கொண்டு அவ்வஞ்செழுத்தை விதிப்படியே மாறி நெஞ்ச ழுத்தி யுச்சரித்தல் செய்க.* இவ்வாறு சிவோகம்பாவனையுந் திருவஞ்செழுத்துமந்திரமும் அந்தரியாகக்கிரியையு மென்

னும் இம்மூன்றனும் ஒருவழிப்பட நின்றுகொண்டு அதனைக் கணிக்கப்பெறுவார்க்கு, நவக்கோள்களுள் ஏனை யுழும் போலக் காண்டல் செல்லாத ராகுகேதுக்கள் உபராகத்திற் சந்திராதித்தர்மாட்டுக் காணப்படுமாறுபோல, மும்பொருள்களுள் யானிதனையறிந்தே னறிகின்றிலேனென்னு மறிவிற்கு விடயமாய்த்தோன்று மேனைப் பசுபாசங்கள்போலப் புலனு காதவழிப்பதிப்பொருள் அவ்வுச்சரிப்பி லான்மாவின்மாட்டு விளங்கித் தோன்று மென்பதாம்.

அறிந்திட்டென்பதனை மேலுங் கூட்டுக.

ஆன்மாவை யானுடைய பரிசுமென்ற வும்மையால் ஆன்மா அனுக்குடைமையாம் பரிசுமறிதலினு லறிந்திட்டென்பதூஉம் பெற்றும்.

அனுருவமென்றவுப்மை சிறப்பு.

அனுருவு மஞ்செழுத்தா லமைந்தமையு மறிதல் இதயத்தி லான்மாவில் அவ்வாறு கண்டு அர்ச்சித்தற்பொருட்டென்க.

இனி உம்மையை எண்ணும்மையாக்கி, அஞ்செழுத்தா லான் மாவை யானுடைய பரிசு மனுருவு மறிந்திட்டெனக் கண்ணழித்து, ஆன்மாவையும் அனுடைய பரிசாகிய திருவருளையுஞ் சிவசொரூ பத்தையும் அஞ்செழுத்தா லுணர்ந்தென்றும், அஞ்செழுத்தா லமைந்தமையு மறிந்திட்டென்பது அமைந்தொழிந்த மலங்களையு மைந்தெழுத்தி லுணர்ந்தென்றும் உண்மைவிளக்கஞ் சிவப்பிரகாச முதலியவற்றுள் ஓதியவாறுபற்றி யுரைத்தலுமொன்று.இப்பொருட் குக்''கற்பனவு மினியமையும்''(திருவாசகம்,திருப்புலம்பல். செ.ப்.) என்றாற்போல அமைதல் வேண்டாதொழிதன்மேற்று. மை அஞ் சனம் மலம் என் பன ஒருபொருட்கிளவி. ஈண்டு மலமென்றது ஆணவ திரோதங்களை.இவை கழிந்தொழிந்தமைபற்றி வேறுவைத் தெண்ணப்பட்டன.

அணைந்து தியானித்தென்றபால்து அணைந்தென்று உபசரிக் கப்பட்டது. அல்லுழிப் பயன்படாமை யுணர்த்துவார், விதிப்படி யென ஈண்டுங் கூறினர்.

இதனுனே ஆண்டைக்கு வேண்டப்படும் மந்திரமுங் கிரியை யுங் கூறப்பட்டன. (8)

நாட்டுபித யந்தானு நாபியினி லடியாய்
ஞாலமுத றத்துவத்தா லெண்விர ளைத்தாய்
மூட்டுமோ கிநிசுத்த வித்தைமல ரெட்டாய்
முழுவிதழெட் டக்கரங்கண் முறைமையினி னுடைத்
காட்டுகம லாசனமே லீசர்சதா சிவமுங் [தாய்க்
கலாமூர்த்த மாமிவற்றின் கண்ணுகுஞ் சத்தி
வீட்டையருள் சிவன்மூர்த்தி மானுகிச் சத்தி
மேலாகி நிற்பனிக்த விலேவறிந்து போற்றே.

சுப — பதவுரை

நாபியினில் – உந்தியில்,—ஞாலம் அடியாய் – பிருதிவி தத்துவம் கிழங்காகவும்,—முதல் தத்துவத்தால் எண்விரல் நா ள த் தா ய் – (அப்பிருதிவியை) முதலாகவுடைய (ஏனை அப்பு முதலிய இருபத்துமூன் று) தத்துவங்களும் (அவ் வுந்தியினின் று தோன் றி) எண்விரலளவைத்தாயுள்ள நாள வடிவாகவும்,—மூட்டு மோகிநி சுத்தவித்தை மலர் எட் டாய் – பொருந்திய அசுத்த மாயையின் காரியமாகிய வித் தியா தத்துவங்கள் ஏழும் சுத்தவித்தையுமென்னும் எட் டுத் தத்துவங்களும் எ ட் டி தழ் வடிவாகவும்,—முழு இதழ் எட்டு அக்கரங்கள் முறைமையினில் உடைத்தாய்– சிதைவுறுத அவ்விதழ் எட்டும் (பிரணவாதி எட்டு) அக் கரங்களே முறையே உடையதாகவும்,—ஈசர் சதாசிவம்

கலாமூர்த்தமாம் – ஈசுவரம் சதாசிவமென்னும் இரண்டு தத்துவமும் அறுபத்துநான்கெனப்படுங் கேசரவடிவாக வும்,—சத்தி இவற்றின் கண்ணுகும் – சத்திதத்துவம் (அக் கேசரங்களுக்கு உள்ளாகிய பொகுட்டு வடிவமாகவும்) அப்பொகுட்டிற் காணப்படும் ஐம்பத்தோர் பீசவடிவ மாகவுமுடைய,—நாட்டும் இதய கமலந் தானும் காட்டு ஆசனம் – நாட்டப்படும் இருதய கமலம் விளங்கப்பெற்ற ஆசனமாம்,—மேல் சத்திமேலாகி – அ த ன் மே ற் சத்தி மூர்த்தியாய் (நிற்கும்),—வீட்டை அருள் சிவன் மூர்த்தி மானுகி நிற்பன் – வீடுபேற்றை யருளுகின்ற சிவபிரான் மூர்த்திமானுய் நிற்பனுகலின்,— இந்த விளவு அ றி ந் து போற்றே – இம்முறையை அறிந்து அ ரு ச் சி ப் ப ா யா க என்க.

சிவ – பொழிப்புரை

எ-து. *இதயத்தர்ச்சித்தற்கு, நிலமுதற் சத்திதத்துவ மீருகிய முப்பத்தைந்தினையுங் கிழங்குமுதற் பீசமீருகிய அவ யவங்களாகவுடைய இதயகமலம் ஆசனமும், அதன்மேற் சத்தி மூர்த்தியும், சிவன் மூர்த்திமானுமாமென்பதாம்.*

சிவதத்துவஞ் சத்திதத்துவங்கட்குத் தம்முள் வே று பா டு சிறிதாதல் பற்றிச் சிவதத்துவத்தை வேறெண்ணுது சத்திதத்து வத்து ளடக்கிக் கூறினர்.

சத்திமேலாகி யென்றதனுற் சத்தி மூர்த்தியென்பதூஉம் பெறப்பட்டது.

அற்றேல், மேல் ஐந்தெழுத்தா லமைந்தவருவெனக் கூறி அதன்பின் ஆன்மாவிலர்ச்சித்தெனவுங் கூறி ஈண்டுச் சத்தி மூர்த்தி

யென்றன் மலைவாம்போலுமெனின், ஆகாது; அம்மூன்றும் முதல் வனுக்கு முறையே தூலவடிவுஞ் சூக்குமவடிவும் அதிசூக்குமவடிவு மெனக்கோடலாலென்பது. அண்டமோராணுவாம் பெருமை கொண்டு காரணங்களெல்லாங் கடந்து நின்ற வவ்விறைவனே அணுவோரண்டமாஞ் சிறுமைகொண்டு ஆன்மாக்களுய்தற்பொ ருட்டு உடம்பினுள்ளு மவ்வாறு நிற்கின்ருன். அதனையறிந்து செய்யாதவழிப் பூசையாற் பயனில்லையென்பார், இந்த வினைவறிந்து போற்றேயென்ருர். தன்னினமுடித்தலால் ஒமித்தல் தியானித் தல்களினும் இவ்வாறேயுணர்ந்து செய்யப்படுமெனக்கொள்க. (9)

அந்தரியா கந்தன்னை முத்திசா தனமா
வறைந்திடுவ ரதுதானு மான்மசுத்தி யாகுங்
கந்தமலர் புகையொளிமஞ் சனமமுது முதலாக்
கண்டனவெ லாமனத்தாற் கருதிக் கொண்டு
சிந்தைதனி லர்ச்சிக்கச் சிவனைஞா னத்தாற்
சிந்திக்கச் சிந்திக்கத் தர்ப்பணத்தை விளக்க
வந்திடுமவ் வொளிபோல மருவியர னுளத்தே
வரவரவந் திடுவன்பின் மலமான தறுமே.

சுப் — பதவுரை

தர்ப்பணத்தை விளக்க வந்திடும் அவ்வொளிபோல – கண்ணுடிக்கு (ப் பொடியிட்டு) விளக்க (விளக்க) ஒளி மேலிட்டு மாசு நீங்குமாறுபோல,—சிந்தை தனில் சிவனை– ஆன்மாவிற் சிவத்தை,—கந்தம் மலர் புகை ஒளி மஞ் சனம் அமுது முதலாக் கண்டனவெலாம் மனத்தால் கருதிக்கொண்டு ஞானத்தால் அர்ச்சிக்கச் சிந்திக்கச் சிந் திக்க – சந்தனம் புட்பம் தூபம் தீபம் திருமஞ்சனம் திரு வமுது முதலியவாகக் காணப்பட்ட பூசாதிரவியங்களெல் லாம் மனத்தாற் கற்பித்துக்கொண்டு ஞானத்தால் அருச்

சித்தலும் ஓமித்தலுந் தியானித்தலும் (செய்யச்செய்ய),—அரன் உளத்தே மருவி வரவர வந்திடுவன்– (ஆண்டு அச்) சிவம் உள்ளத்தின்கண்ணே பொருந்தி மேலிட்டு மேலிட்டு வந்து விளங்கித் தோன்றும்(தோன்றவே),–பின் மலமானது அறுமே – பின்பு ஆணவமலந் (தேய்ந்து தேய்ந்து) பற்றறக் கழியும்,—அதுதானும் ஆன்ம சுத்தியாகும் அந்தரியாகந் தன்னை முத்திசாதனமா அறைந்திடுவர் – (அங்ஙனம்) அஃது ஆன்ம சுத்திக் கேதுவாகலான் அவ்வந்தரியாகத்தை (ஒருதலையான் வேண்டப்படும்) முத்திசாதனமென்று அறிகவென்பர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *கண்ணுடிக்குப்பொடியிட்டு விளக்க விளக்க* ஒளி மேலிட்டு மாசு நீங்குமாறுபோல, *ஆன்மாவிலவ்வாறு ஞானத்தாலர்ச்சித்தலும் ஓமித்தலுந்தியானித்தலுஞ் செய்யச்செய்ய ஆண்டுச்சிவம்மேலிட்டுமேலிட்டு வந்து விளங்கித் தோன்றும்; தோன்றவே ஆணவமலந் தேய்ந்துதேய்ந்து பற்றறக் கழியும்; அங்ஙன மான்மசுத்திக்கு ஏதுவாகலான் அவ்வந்தரியாகம் ஒருதலையான் வேண்டப்படும் முத்திசாதனமென்றறிகவென்பதாம்.*

அதுதானு மான்மசுத்தியாகுமென ஒற்றுமைபற்றிக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தார்.

உம்மை சிறப்பு.

'கந்தமலர் புகையொளி மஞ்சனமமுது முதலாக் கண்டன வெலாமனத்தாற் கருதிக்கொண்டு சிந்தைதனிலர்ச்சிக்க' வென வே, அவற்றை யங்ஙனங் கற்பித்துக்கோடலு மனுவாதமுகத்தாற் பெற்றும். மனத்தாற் கருதுமாறு *''காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக''* (திருநாவுக்கரசுகாயனார் தேவாரம், தனித்திருகேரிசை, செ - 4) என்பது முதலிய திருவாக்குக்களானு மறிக.

ஞானத்தாலென்பதனை அர்ச்சிக்கவென்பதனோடுங் கூட்டுக.

சிந்திக்கவென்றது முன்னையது ஒழித்தன்மேற்று.

இவையிரண்டு செய்யுளானும் அந்தரியாகஞ் செய்யுமாறும் அஃதாண்டைக் கொருதலையான் வேண்டப்படுவ தென்பதூஉங் கூறப்பட்டன. (10)

புறம்பேயு மரன்கழல்கள் பூசிக்க வேண்டிற்
பூமரத்தின் கீழுதிர்ந்த போதுகளுங் கொண்டு
சிறந்தாருஞ் சீர்ச்சிவனை ஞானத்தா லங்குச்
சிந்திக்கும் படியிங்குச் சிந்தித்துப் போற்றி
யறம்பாவங் கட்குநா மென்கடவே மென்று
மாண்டவனைக் கண்டக்கா லகம்புறமென் னுதே
திறம்பாதே பணிசெய்து நிற்கை யன்றே
சீரடியார் தம்முடைய செய்தி தானே.

சுப — பதவுரை

ஆண்டவனைக் கண்டக்கால் – (அகத்தாதல் புறத்தாதல் ஒரு குறியின்கண்) இறைவனைக் காணப்பெறின்,— அறம் பாவங்கட்கு நாம் என்கடவேம் என்றும் – (அகம் புறமென் றிரண்டால் அர்ச்சனைபுரியும் இந்தச் சகம்போலப்) புண்ணியபாவங்கட்கு யாம் என்செயக்கடவமெனக் குறித்தலும் (இன்றி),–அகம் புறம் என்னுதே திறம்பாதே பணிசெய்து நிற்கை அன்றே–அதுவேறு இதுவேறெனப் பிரித்துக் காண்டலுமின்றி (யாண்டும்) ஒரு பெற்றியராய் இட்டபணி செய்து நிற்றலன்றே,—சீர் அடியார் தம் முடைய செய்தி தானே – மெய்யடியார் செய்தி (யாகலான்),—சிறந்து ஆரும் சீர்ச் சிவனை – சிறந்து விளங்குகின்ற புகழையுடைய முதல்வனை,—ஞானத்தால் அங்குச்

சிந்திக்கும்படி – ஞானத்தால் அகத்தே காணும்படி,— புறம்பேயும் இங்குச் சிந்தித்து – புறத்தேயும் ஒரு குறியிற் கண்டு,–வேண்டின் பூமரத்தின் கீழ் உதிர்ந்த போதுகளும் கொண்டு – (உபகரணம்) வேண்டுமாயின் (மூயன்று வருந்துதலும் பிறவுயிர்களை வருத்துதலும் ஆகாமையாற்) பொலிவாகிய மரத்தின்கீழ் உதிர்ந்த பூக்களும் (யாறு குள முதலியவற்றின் உளதாகிய நீரும் அயாசகமாய் வந்த அமுது முதலாயினவும்) கொண்டு,—அரன் கழல்கள் போற்றிப் பூசிக்க – அம்முதல்வன் றிருவடிகளை வழிபட்டுப் பூசிக்கக்கடவர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அகத்தாதல் புறத்தாதல் ஒருகுறியின்கணிறைவனைக் காணப்பெறின், அகம்புறமென்றிரண்டாலர்ச்சனை புரியுமிந்தச் சகம்போலப் புண்ணியபாவங்களைக் குறித்தலின்றி அதுவேறிதுவேறனப் பிரித்துக் காண்டலுமின்றியாண்டுமொருபெற்றியராய் இட்டபணி செய்து நிற்றலே மெய்யடியார் செய்தியாகலான், அகத்தே காணும்படி புறத்தேயு மொரு குறியிற்கண்டு அரன் கழல் பூசிக்கற்பாற்று; அதற்குபகரணம் வேண்டுமாயின், மூயன்று வருந்துதலும் பிறவுயிர்களை வருத்துதலுமாகாமையான், மரத்தின் கீழுதிர்ந்த பூக்களும் ஆறுகுளமுதலியவற்றினுளதாகிய நீரும் அயாசகமாய் வந்த அமுதுமுதலாயினவுமே ஆண்டைக்கமையுமென்பதாம்

போற்றிப் பூசிக்கவென வியையும்.

புறம்பேயுமென்ற உம்மை இறந்ததழீஇயிற்று.

போதுகளுமென்றவும்மை எதிரதழீஇயது.

இதனுனே புறப்பூசையும் ஆண்டைக்கு அங்கமாதல் கூறப்பட்டது. (11)

இந்தனத்தி னெரிபாலி னெய்பழத்தி னிரத
மெள்ளின்கணெண்ணெயும்போலெங்குமுளனிறைவன்
வந்தனைசெய் தெவ்விடத்தும் வழிபடவே யருளு
மலமறுப்போ ரான்மாவின் மலரடிஞா னத்தாற்
சிந்தனைசெய் தர்ச்சிக்க சிவனுளத்தே தோன்றித்
தீயிரும்பைச் செய்வதுபோற் சீவன் றன்னைப்
பந்தனையை யறுத்துத்தா னுக்கித்தன் னுருவப்
பரப்பெல்லாங் கொடுபோந்து பதிப்பனிவன் பாலே.

சுப் — பதவுரை

இந்தனத்தின் எரி (போல்) – விறகிற்றீப்போல (உலகத்தார்க்குச் சிறிதுந் தோன்றுதவாறு மறைந்துடனுயும்),-பாலின் நெய் (போல்)–பாலினெய்போல (மந்ததரமலபாகமுடையார்க்கு ஒருவாற்றுற் றேன்றியுந் தோன்றுது மறைந்துடனுயும்),—பழத்தின் இரதம்(போல்)–பழத்தின் இரதம்போல (மந்தமலபாகமுடையார்க்கு உய்த்துணரும் வழி விளங்கித் தோன்றுவதாயுடனுயும்),—எள்ளின்கண் எண்ணெயும் போல் – எள்ளின்கண் எண்ணெய்போல(த்தீவிரமலபாக முடையார்க்கு இனிது விளங்கித் தோன்றினும் பிரித்தறியப்படாதுடனுயும்),— இறைவன் எங்கும் உளன் – இறைவன் (அகம் புறமென்னும் பிரிவின்றி)யாங்கணுமுளனுகலான்,-எவ்விடத்தும் வந்தனை செய்து வழிபடவே அருளும் – (மேற்கூறியபடி) அகத்தாதல் புறத்தாதல் யாண்டு வந்தித்து வழிபடினும் அனுக்கிரகிக்கு (மென்பதே தேற்ற)ம்,—மலம் அறுப்போர் – (அங்ஙனமாயினும்) வாதனுமலம் நீக்கலுறுவார்க்கு,—மலர்

அடி ஞானத்தால் ஆன்மாவில் சிந்தனை செய்து அர்ச்சிக்க செங்கமல மலர்போலுந் திருவடிஞானத்தால் ஆன்மாவின்மாட்டு (அவ்வாறு வழிபடுதலாகிய) அகப்பூசை ஒருதலையான் வேண்டும் (இங்ஙனம் விசேட வியைபுடைய உரிமையால்).—சிவன் தோன்றிப் பந்தனையை அறுத்து – இறைவன் விளங்கித் தோன்றி வாசனையைப் பற்றறத் துடைத்து.—தீ இரும்பைச் செய்வதுபோல் சீவன்றன்னைத்தானுக்கி – தீ இரும்பைச் செய்வதுபோல உயிரைத் தன்வண்ணமாக்கி.—தன் உருவப் பரப்பெல்லாம் கொடுபோந்து இவன்பாலே உளத்தே பதிப்பன் – தனது பேரானந்தப் பெருஞ்செல்வமுழுவதும் அருளி இவனதாகச் செய்தருளுவன் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து இறைவன் அகம்புறமென்னும் பிரிவின்றி யாங்கணுமுளனாகலான், மேற்கூறியபடி அகத்தாதல் புறத்தாதல் யாண்டு வழிபடினும் அணுக்கிரகிக்குமென்பதே தேற்றம். அங்ஙனமாயினும் ஆன்மாவின் கண்ணதாகிய வாதனாமலநீக்கவுறுவார்க்கு அகப்பூசையாலவ்வாறு வழிபடுதலொரு தலையான் வேண்டும்; இறைவன் விளங்கித் தோன்றி வாசனையைப் பற்றறத் துடைத்தற்குந் தன்வண்ணமாக்கித் தனது பேரானந்தப்பெருஞ்செல்வமுழுவதும் இவனதாகச்செய்தற்கும் உரிமையுடைய விசேடவியைபு ஆண்டையதாகலானென்பதாம்.

இத்தனத்தினெரி உலகத்தார்க்குச் சிறிதுந் தோன்றுதவாறு மறைந்து உடனுய் நிற்றற்கும், பாலினெய் மந்தரமலபாக முடையார்க்கு ஒருவாற்றுற் றோன்றியுந் தோன்றுது மறைந்து உடனுய் நிற்றற்கும், பழத்தினிரதம் மந்தமலபாகமுடையார்க்கு உய்த்துணரும்வழி விளங்கித்தோன்றுவதாய் உடனுய் நிற்றற்கும், எள்ளின்க

ணெண்ணெய் தீவிரமலபாகமுடையார்க்கு இனிது விளங்கித் தோன்றினும் பிரித்தறியப்படாது உடனுய் நிற்றற்கும், உவமை யாயின.

எங்குமுளனிறைவ னென்றது எவ்விடத்தும் வழிபடவே யருளுதற்குரிய வியைபு விளங்குதற்கும், மலமறுப்போரென்றதுந் தோன்றியறுத்தாக்கிப் பதிப்பனென்றதும் ஆன்மாவிற் சிந்தனை செய் தர்ச்சித்தற்குரிய விசேட வியைபு விளங்குதற்கும், ஏதுவாய் நின்றன.

தன்னுருவப்பரப்பெல்லா மிவன்பாலே பதிதலாவது, தீ இரும்பைச் செய்வதுபோல இறைவனுக்குரிய முற்றுணர்வு முதலிய எண்குணங்களும் படிகம்போலச் சார்ந்ததின் வண்ணமா மியல்புடைய ஆன்மாவுக்குரிய குணமாம்படி அத்துவித வியை பானே இவன்மாட்டு விளங்கித்தோன்றுதல். அதுவே சிவானந்த மேலிடுதலென்பது.

அர்ச்சிக்கவென்றது வியங்கோள்; முடிவு வேருகலிற் பால் வழுவின்மையுணர்க. அர்ச்சிக்கவென்பதனை எச்சமாகக்கொண்டு பாடமோதுவார் பால்வழுவாதலையும் நோக்கிற்றிலர்போலும்.

மேல் அந்தரியாகத்தன்னையென்ற செய்யுளிற் பெறப்பட்ட தனை ஈண்டுங் கூறுதல் கூறியதுகூறலாம்போலு மெனமலையற்க, வேண்டாது கூறி வேண்டியது முடித்தற் கெழுந்தவிச்செய்யுளாக லின். இதனுனே யப்புறப் பூசையி லகப்பூசை விசேடமுடைத் தென அதன் பெருமை கூறப்பட்டது.

இவை யாறுசெய்யுளானும் மூன்றுங்கூற்றின் பொருளைத் தெரித்துணர்த்தியவாறு. (12)

ஒன்பதாஞ்சூத்திரமுடிந்தது.

ஆகத்திருவிருத்தம் - 303.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் சுபக்கம்

பயனியல்

பத்தாஞ்சூத்திரம்

திருவிருத்தம் — 6.

பயனியல்

பத்தாஞ் சூத்திரம்

இங்ஙனம் வேண்டுஞ்செய்தி முறைமைகள் மூன்று சூத்திரத்தால் வகுத்தோதிய வாசிரியர், நிறுத்தமுறையானே அச்சாதனத்தாற் பெறப்படும் பெத்தநீக்கமும் முத்திப்பேறுமாகிய பயனியல்பு மூன்று சூத்திரத்தாற் கூறுவான் றொடங்கினர். அவ்விருவகைப் பயனுள் அப்பெத்த நீக்கமாமாறு கூறுதற்கெழுந்தது பத்தாஞ் சூத்திரம்.

இவனுலகி லிதமகிதஞ் செய்த வெல்லா
மிதமகித மிவனுக்குச் செய்தார்பா லிசையு
மவனிவனுய் நின்றமுறை யேக னுகி
யரன்பணியி னின்றிடவு மகலுங் குற்றஞ்
சிவனுமிவன் செய்தியெல்லா மென்செய்தி யென்றுஞ்
செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்
பவமகல வுடனுகி நின்றுகொள்வன் பரிவாற்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே.

சுப் — பதவுரை

அவன் இவனுய் நின்ற முறை–(பதிஞானத்தால் அங்ஙனங் காணப்பட்ட) இறைவன் (பெத்தநிலையில் உடனுய் நிற்பினும் வேறு காணப்படுமாறின்றி) ஆன்மாவேயாய் (ஒற்றுமைப்பட்டு ஆன்மாவின்வழி) நின்ற முறைமை போல,—ஏகனுகி அரன்பணியின் நின்றிடவும் – (ஈண்டான்மா அம்முதல்வனேடுடனுய் நின்றறியினும்)

தா னென வேறுகாணப்படாதவாறு அவனோடொற்று மைப்பட்டு அவ்விறைபணியின் வழுவாது நிற்கப்பெறின் (அங்ஙனம் ஏகனாகி நிற்றலான் யானெனதென்னுஞ் செருக்கு அறுதலின்),—சிவனும் இவன் செய்தியெல்லாம் என் செய்தி என்றும் (உடனாகி நின்றுகொள்வன்) -- அவ்விறைவனும் இவன் செய்யும் இதமகிதங்களெல்லாம் யான் செய்யும் இதமகிதங்களென உடனாய்நின் றேன்று கொள்வன் (அரன்பணியினிற்றலான் இந்திரியங்களின் வசமாய் நிற்கும் பரதந்திரியம் ஒழிதலின்),—இவனுக்குச் செய்தது எனக்குச் செய்ததென்றும் பவம் அகல உடனாகி நின்றுகொள்வன்–(அவ்விறைவனும்) இவனுக்கு (இன்ப துன்ப நுகர்ச்சியாமாறு) பிறர்செய்யு மிதமகிதங்களெல் லாம் எனக்கு (நுகர்ச்சியாமாறு செய்தனவேயாமெனப் பிறவிநீங்க உடனாய்நின்று ஏன்று கொள்வன்,—பரிவால் பாதகத்தைச் செய்திடினும் (புண்ணியத்தைச் செய்திடினும்)பணி ஆக்கிவிடுமே – (இவ்விருதிறத்தானும் முறையே) அன்பொடும் இவன் செய்யும் இதமகிதங்கள் இவனுக்குப் பணியாய்முடியும்,—உலகில் இவனுக்கு இதம் அகிதம் செய்தார்பால் இவன்செய்த இதம் அகிதமெல் லாம் இசையும் – உலகத்தின்கண் இவனுக்கு இதமகிதஞ் செய்தார்மாட்டு (அவ்விதமகிதங்கள் அவ்வளவினன்றி மிகுதிப்படுதற்கு) இவன்செய்த இதமகிதம் (முறையே துணைக்காரணமாக) இயையும்,—குற்றம் அகலும்–(இங்ஙனம் ஆர்ச்சிப்பும் நுகர்ச்சியும் இவனைப் பந்தியாதொழிய வே) ஏனைச்சஞ்சிதவினையும் மாயையும் ஆணவமுமாகிய குற்றங்கள் மூன்றும் (இவனைப் பந்திக்கமாட்டாவாய்) விண்டொழியும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து பதிஞானத்தா லங்ஙனங் காணப்பட்ட விறை வன். பெத்தநிலையி லுடனுய் நிற்பினும் வேறு காணப்படு மாறின்றி ஆன்மாவேயா யொற்றுமைப்பட்டு ஆன்மாவின் வழிநின்ற முறைமைபோல, ஈண்டான்மா அம்முதல்வனே டுடனுய் நின்றறியினுந் தானென வேறு காணப்படாதவாறு அவனேடொற்றுமைப்பட்டு அவ் விறைபணியின் வழுவாது நிற்கப்பெறின், அங்ஙனமேகனகி நிற்றலான் யானெனதென னுஞ் செருக்கறுதலின் அவ்விறைவனும் இவன் செய்யு மிதமகிதங்களெல்லாம் யான் செய்யு மிதமகிதங்களென உடனுய் நின்று ஏன்றுகொள்வன். ஆன்பணியினிற்றலான் இந்திரியங் களின் வசமாய் நிற்கும் பரதந்திரியமொழிதலின் அவ்விறை வனும் இவனுக்கின்பத்துன்ப நுகர்ச்சியாமாறு பிறர் செய்யு மிதமகிதங்களெல்லாம் எனக்கு நுகர்ச்சியாமாறு செய்தனவே யாமென உடனுய் நின்று ஏன்றுகொள்வன். இவ்விருதிறத் தானும் முறையே, இவன் செய்யுமிதமகிதங்கள் இவனுக்குப் பணியாய் முடியும், இவனுக்கு இதமகிதஞ்செய்தார்மாட்டு அவ்விதமகிதங்கள் அவ்வளவினன்றி மிகுதிப்படுதற்கு முறையே துணைக்காரணமா யிடையும். இங்ஙனம் ஆர்ச்சிப் பும் நுகர்ச்சியும் இவனைப் பந்தியாதொழியவே, ஏனைச்சஞ் சிதவினையு மாயையு மாணவமுமாகிய குற்றங்கண் மூன்றும் இவனைப் பந்திக்க மாட்டாவாய் விண்டொழியு மென்பதாம்.

நின்றிடவென்பதனை ஈரிடத்துங்கூட்டி நிரனிறையாக வைத்து, என்றென்னு மெச்சங்களைக் கொள்வனென்பதனேடுந் தனித்தனி கூட்டி, 'இவனுலகி' லென்னுமுதலடியைப் 'பாதகத் தைச்செய்திடினும் பணியாக்கிவிடுமே' யென்றதன் பின்னுக வைத் தரைத்துக்கொள்க.

நின்றிடவு மென்றவும்மை சிறப்பு.

பாதகத்தைச் செய்திடினு மென்றவும்மையாற் புண்ணியத்தைச் செய்திடிற் பணியாக்கிவிடுதல் கூறவேண்டாவாயிற்று.

அவை மிகுதிப்படுதற்குத் துணைக்காரணமாயியையுமென்பது ஆற்றலாற்பெற்றும். அ து அவர்தாஞ் செய்வினைதன்னு னலமு டனே பிறர்செய்வினை யூட்டியொழிப்பானுயென முன் வருகின்ற வாற்றுனறிக. அச்செய்யுளின் கருத்துமுணராது இவன்செய்த இதமகிதங்களே இவன்மாட்டுச் செய்தார்க் கியையுமென்றுரைப்பின் இவன்மாட்டுச் செய்தவருடைய இதமகிதங்கள் வேறென்னுய் முடியுமெனக் கடாயினுர்க்கு விடையின்மையும், நியதிதப்புதலும், சிவஞானச்செயலுடையோர் கையிற்றுனந் திலமளவே செய்திடினு மத்தானமே நிலமலைபோற் றிகழுமென்றுற் போல்வனவற்றுடு மூரணுதலுமாகிய குற்றங்களுளவாமா றுணர்க.

உலகத்தார் பார்வைக்கு இவன்செய்தனவாகவும் அச்செயல் இதமகிதமாகவுந் தோன்றப்படுவன மாத்திரையே யன்றிப் பிறி தில்லை யென்பார்உலகிலென்றார்.

அவனென்பதும் இவனென்பதும் மகாவாக்கிய வழக்கு.

இவ்வாறன்றி, நின்றிடவென்னுமெச்சத்தை அகலுமென்பத னெடு முடியவைத்துரைப்பார்க்கு, ஏனைய தம்மு ளவாய்நின்று ஒருபொருண்மேல் வருவனவல்லவாய் முடிதலின், முதனூலோ டொத்து ஒரு பொருணுதலிய சூத்திரமாதற் கேலாமையறிக.

இச்செய்யுளிற் கூறப்படும் முக்கூற்றுள், ஒருவாற்றுனீண்டு வலியுறுக்கப்படுமிறுதிக்கூறு பதினெண்றுஞ்சூத்திரத்தில் இயைபு பற்றி யெடுத்துக்கொண்டு தடைவிடைகளாற் சாதிக்க நின்றமை யின், முன்னையிருகூறுமே வேறெடுத்துக்கொண் டோதப்படுவன வெனக் கொள்க. (1)

முதலதிகரணம்

யான்செய்தேன் பிறாசெய்தா ரென்ன தியா னென்னு
மிக்கோணை ஞானவெரி யால்வெதுப்பி நிமிர்த்துத்
தான்செவ்வே நின்றிடவத் தத்துவன்ரு னேரே
தனையளித்து முன்னிற்கும் வினையொளித்திட் டோடு
நான்செய்தே னெனுமவர்க்குத் தானங் கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்ம
மூன்செய்யா ஞானந்தா னுதிப்பி னல்லா
லொருவருக்கும் யானெனதிங் கொழியா தன்றே.

சுப் — பதவுரை

யான்செய்தேன் பிறர்செய்தார் யான் என்னது என்னும் இக்கோணை – யான்செய்தேன் பிறர்செய்தார் யான் எனதென்னும்(அகங்கார மமகாரங்களாகிய செருக்கு விளைதற்கு ஏதுவாகிய) மலக்கோணை,—ஞான எரியால் வெதுப்பி நிமிர்த்து – ஏகனெனி நிற்கும் ஞானக்கினியி னுலே காய்ச்சி அக்கோணைத்தீர்த்து,—தான் செவ்வே நின்றிட – தான் முதல்வன்வழித்தாக நிற்கவே,—அத்தத் துவன்ரு ன் தனை அளித்து நேரே முன் நிற்கும் – அம்முதல் வன் தற்சொரூபத்தை விளக்கி நேராக வெளிப்பட்டுத் தோன்றுமாகலின்,—வினை ஒளித்திட்டு ஓடும் – (புண்ணிய பாவமாகிய) வினைகள் (இவனைப்) பொருந்தாமல் (இவனுக்குப் பணியாய் இவனுக்கு இதமஹிதஞ் செய்தார்பால் அவைமிகுதற்குத் துணைக்காரணமா) யியையும்,—நான் செய்தேன் எனுமவர்க்கு – (மேற்கூறிய) யான்செய்தே னென்பது முதலிய நினைவுடையாருக்கு,—தான் அங்கு இன்றிப் போகத்தை நண்ணுவிக்கும்-முதல்வன் விளங்கித்

தோன்றுதலின்றி′க் கன்மத்துக் கீடாக)ப் போகத்தைப் புசிப்பித்து,—கன்மம் பண்ணுவிக்கும்—(அங்ஙனம் புசிக்குமிடத்து) ஆகாமியவினையை ஏறச்செய்யுமாகலின்,—ஊன் செய்யா ஞானந்தான் உதிப்பின் அல்லால் – மாயாகருவிகளைப் பொருந்தியறிகிற சிற்றறிவினின்று நீங்கி ஏகனுகி நிற்கு ஞானம் பெற்றலன்றி,—ஒருவருக்கும் யான் எனது இங்கு ஒழியாது அன்றே – யாவர்க்கும் யானெனதென்னுஞ் செருக்கு ஒழிதலின்று என்க.

சிவ — பொழிப்புரை

எ-து யானெனதென்னுஞ் செருக்கற்றலன்றி, இறைவனுடனுய்நின்றகோடலும் அதுபற்றி வினைநுகர்ச்சியுமார்ச்சிப்பும் இவனுக்கில்லாததலும் அதுபற்றிக்குற்றமகலுதலுமாகியவிவை முறையே நிகழ்தல் செல்லாமையால் அச்செருக்கறுதியைப் பயப்பதூஉம் அவ்வினைவருப்நின்ற முறையேநகலுகிநிற்கு ஞானமொன்றேயன்றிப் பிறிதின்மையின், அச்செருக்கறுதியின்பொருட்டு அவ்வாறுநிற்கு ஞானம் ஒருதலையான் வேண்டற்பாற்றென்பதாம்.

வலியுறுத்தற்பொருட்டு உடம்பாட்டுமுகத்தானும் எதிர்மறைமுகத்தானுங் கூறினர். உருவகஞ்செய்ததும் அதனை யின்றியமையாமை விளக்குதற்பொருட்டு.

ஞானமென்றது ஈண்டு ஏற்புழிக்கோடலால் ஏகனுகிநிற்கு ஞானத்தின் மேற்றுயிற்று.

இதனுனே மேலைச்சூத்திரத்தோதியவாறு ஞாதிருவு ஞானமுஞ்ஞேயமுமாகநின்று காணுங் காட்சியே யமையும் அதன்மேலும் ஏகனுகிநிற்றல் ஏற்றுக்? கென்பாரைநோக்கி, அவ்வாறு நின்றலன்றி யானெனதென்னுஞ் செருக்கறுதன் முதலியன முறையே நிகழ்ந்து முத்தியைத் தலைக்கூடுதல் செல்லாதென முதற்கூறு வலியுறுத்தப் பட்டது. (2)

இரண்டாமதிகரணம்

இந்திரிய மெனைப்பற்றி நின்றேயென் வசத்தி
னிசையாதே தன்வசத்தே யெனையீர்ப்ப திவற்றைத்
தந்தவன்ற னாணைவழி நின்றிடலா லென்றுந்
தானறிந்திட் டிவற்றிலெடுந் தனையுடையான் முள்கள்
வந்தனைசெப் திவற்றின்வலி யருளினால் வாட்டி
வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்க ளுண்டேன்
முந்தனுடைச் செயலென்று முடிக்தொழுக வினைகண்
மூளாவங் காளாகி மீளா னன்றே.

சுப் — பதவுரை

(உலகத்துப்பாடிகாவலராயினர் பிழைசெய்துள்ளா ரைத் தம்முளடக்கித் தாம் ஈர்த்தவாறெல்லாம் பரதந்திர மாய்க் கிடப்பச்செய்வது தம்மை அவ்வாறு செய்விக்கும் அரசன தாணைவழி நிற்கும் அவ்வாற்றல் கொண்டன்றிப் பிறிதின்மையின் அதனையறிந்து அப்பாடிகாவலர்க்குந் தமக்கும் இறைவனுகிய அவ்வரசனைத் தலைக்கூடப்பெற்று அவன்கருத்தின்வழி யொழுகவல்லராயவழி அவர் அப் பரதந்திரநீங்கி அரசனதருளாற் பாடிகாவலரையுந் தம் மாணைவழியினிற்பித்துக் கொள்ளவல்ல சுதந்திரராவர் அதுபோல) இந்திரியம் எனைப்பற்றி நின்றே என்வசத்தின் இசையாதே எனைத் தன்வசத்தே ஈர்ப்பது-(விஷயசெய்தமை பற்றி) இந்திரியங்கள் என்னைப்பற்றி நின்றே என்வசத் தவாய் நில்லாமல் என்னைத் தம்முளடக்கி ஈர்(த்தவழியெல் லாம் பரதந்திரப்பட்டுக் கிட) ப்பச்செய்வதும்,—இவற் றைத் தந்தவன்றன் ஆணைவழி நின்றிடலால் என்றும் தான் அறிந்திட்டு – அவற்றை அவ்வாறு செய்விக்கும்

முதல்வனதாணைவழி அவைநிற்றலான் (அ வ் வீ ர் த் த லை மாற்றுதற்கு உபாயமாவது யாமும் அவ்வாணைவழி நிற்ற லென்றும் அவ்வாற்றல்கொண்டன்றிப் பிறிதில்லை)யென் றும் இவ்வாறுணர்ந்து,—இவற்றினெடு தனேஉடையான் தாள்கள் வந்தனைசெய்து – அவ்விந்திரியங்களையுந் தன்னை யும் உடையானுகிய அம்முதல்வன்ருள் (களைத் தலைக் கூடப் பெற்று அவன்)பணியினின்ருெழுக ஒருவன் பெறு மாயின்,—அருளினுல் இவற்றின் வலிவாட்டி வாட்டம் இன்றி இருந்திடவும் – (அவன் அம்முதல்வன்) திருவரு ளால் அவ்விந்திரியங்களைத் தன்னுணைவழி நிற்பித்து (க் கொள்ளவல்ல சுதந்திரனுவன் அவ்வாறு முதல்வன்வழி யின்)உறைத்துநிற்புழியும்,—வரும் செயல்கள் உண்டேல் முந்தன் உடைச்செயல் என்று முடித்து ஒழுக – (பயிற்சி பற்றி ஒரோவழி அவ்விந்திரியங்களின்) குறும்பு நிகழுமா யின் (இந்திரியங்கட்கும் எனக்கும் ஒரு சுதந்திரமின்மை யின் அதுவு) முதல்வன் செயலேயென்று வரைசெய்து பணியின் வழுவாதொழுகவே,—வினைகள் மூளா – (அது வாயிலாகப் புகுந்து கூடித் தொடக்கவல்ல) வினைகள் (அங்ஙனம் ஆகமாட்டாவாய்) மடங்கியொழியுமாகலான், —அங்கு ஆளாகி மீளான் அன்றே – (அவ்வாறு) அடி மைத்திறத்து நின்ருன் மறித்துப் பொறிகளின் வழிப் பட்டுப் பரதந்திரனுவானல்ல னென்க.

சிவ — பொழிப்புரை

எ-து *உலகத்துப் பாடிகாவலாயினர் பிழைசெய் தாள்ளாரைத் தம்மூடக்கித் தாமீர்த்தவாறெல்லாம் பரதந் திரமாய்க் கிடப்பச்செய்வது தம்மையவ்வாறு செய்விக்கு மரசனதாணைவழி நிற்குமவ்வாற்றல்கொண்டன்றிப் பிறிதின் மையின், அதனையறிந்து அப்பாடிகாவலர்க்குந் தமக்கு*

மிறைவனுகியபவவ் வரசனைத் தலைக்கூடப்பெற்று அவன் கருத் தின்வழி யொழுகவல்லராயவழி, அவரப் பரதந்திரரீங்கி யரசனருளாற் பாடிகாவலரையுந் தம்மாணைவழி நிற்பித்துக் கொள்ளவல்ல சுதந்திரராவர். அதுபோல, வினைசெய்தமை பற்றி இந்திரியங்களென்னைத் தம்முளடக்கி யீர்த்தவழியெல் லாம் பரதந்திரப்பட்டுக் கிடப்பச் செய்வதும் அவற்றை யவ் வாறு செய்விக்கு முதல்வனதாணைவழி யவைநிற்றலான், அவ்வாற்றல்கொண்டன்றிப் பிறிதில்லையென் றிவ்வாறுணர் ந்து அவ்விந்திரியங்களையுந் தன்னையுமுடையனுகியவம்முதல் வன்றாள்களைத் தலைக்கூடப்பெற்று அவன் பணியினின்றொ ழுக வொருவன் பெறுமாயின், அவன் அம்முதல்வன் றிரு வருளால் அவ்விந்திரியங்களைத் தன்னாணைவழி நிற்பித்துக் கொள்ளவல்ல சுதந்திரனுவன். அவ்வாறு முதல்வன் வழியி னுறைத்து நிற்புழியும் பயிற்சிபற்றி யொரோவழியவ்விந்திரி யங்களின் குறும்புநிகழுமாயின், இந்திரியங்களுக்குமெனக்கு மொரு சுதந்திரமின்மையின் அதுவும் முதல்வன் செயலே யென்று வரைசெய்து பணியின் வழுவாதொழுகவே, அது வாயிலாகப் புகுந்துகூடித் துடக்கவல்ல வினைகள் அங்ஙன மாகமாட்டாவாய் மடங்கியொழியுமாகலான், அவ்வாறடி மைத்திறத்தி னின்றுன் மறித்துப் பொறிகளின் வழிப்பட் டுப் பரதந்திரனுவானல்லனென்பதாம்.

குறிப்புருவகம்.

ஏகனுகிநிற்றலேயமையும்அதன் மேலுமான்பணியினிற்றலெற் றுக்? கென்பாரைநோக்கி,ஏகனுகிநிற்பினுந் தன்பணி மடங்கி னு லன்றி வினைத்துடக்குறுதற் கேதுவாய் இந்திரியங்களின் வழிப் பட்டுச் செல்லும் பரதந்திர நீங்காமையின், அது நீங்குமாறு தான்

பணியை நீத்தற்பொருட்டு அரன்பணியினிற்றலு மொருதலையான் வேண்டப்படுமென்றுணர்த்தியவாறு.

கின்றிடலா லீர்ப்பதென்றறிந்திட்டென வியையும். தான் அசை. ஈர்ப்பதென்பது அத்தொழின்மேனின்றது. என்று மென்னுமும்மை அவ்வீர்த்தலை மாற்றுதற்கு உபாயமாவது யாமு மவ்வாணைவழி நிற்றலென்றுமறிந்தென எதிரது தழீஇயிற்று.

இவற்றினெடுங் தனையுடையானென்றது குறிப்பேதுவாய் நின்ற பெயர்.

வந்தனைசெய்தல் ஈண்டு அரன்பணியினிற்றன் மேற்று.

வருஞ்செயல்களுண்டேலென்பது ஒருமைப்பன்மை மயக்கம்.

வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்களுண்டேன் முந்த னுடைச்செயலென முடித்தொழுகுதல், "யானுமதுவே வேண்டி னல்லால் – வேண்டும்பரிசொன் றுண்டென்னி னதுவுமுன்றன் விருப்பன்றே" (திருவாசகம், குழைத்தபத்து, செ – 7)என்ற திரு வாக்கினுமறிக.

அவ்வாறு முடித்தொழுகவும் வருஞ்செயல்களுளவாம் போலு மென்பாரை நோக்கி அங்ஙனம் வரம்பின்றி அநவத்தையாதலில்லை யென்பார், 'ஆளாகி மீளா'னென்றுங் கூறினர். (3)

சலமிலனுப் ஞானத்தாற் றனையடைந்தார் தம்மைத்
தாளைக்கித் தலைவனவர் தாஞ்செய்வினை தன்னை
னலமுடனே பிறர்செய்வினை யூட்டியொழிப் பானுய்
நணுகாமல் வினையவரை நாடிக் காப்ப
னுலகினிலென் செயலெல்லா முன்னியதே நீயே
யுண்ணின்றுஞ் செய்வித்துஞ் செய்கின்ற யென்று
நிலவுவதோர் செயலெனக்கின் றுன்செயலே யென்று
நினைவார்க்கு வினைகளெல்லா நீங்குந் தானே.

சுப் — பதவுரை

நீயே உள் நின்றும் (செய்கின்றாய்) – நீயே எனக் குண்ணின்று செய்கின்றாயாகலின்,—உலகினில் நிலவுவ தோர் செயல் எனக்கு இன்று என்செயலெல்லாம் உன் விதியே என்றும் – உலகின்கண் விளங்குவதோர் செயல் எனக்கின்று என்னுற் செய்யப்படும் இதமகிதமெல்லாம் நீசெய்யுஞ் செயலே யென்றும்,—செய்வித்தும் செய்கின் றாய் – (நீயே பிறரைக்கொண்டு) செய்வித்துஞ் செய்கின் றாயாகலின்,—உன் செயலே என்றும்– (பிறரால் எனக்கு வரும் (இதமகிதங்களும்) நீசெய்யுஞ் செயலே(பிறிதில்லை) யென்றும்,—நினைவார்க்கு வினைகளெல்லாம் நீங்குந்தானே- (இங்ஙனம்) அவனருளே யல்லதொன்றறியுங் கருதாராய்த் தம்மையிழந்து நிற்கப்பெறுவார் மாட்டு அஞ்ஞானகன் மம் பிரவேசிக்கமாட்டாதாய் ஒழிந்துவிடுமாகலான்,— ஆய் ஞானத்தால் தனை அடைந்தார் தம்மை – (அப்பெற் றித்தாகிய) மெய்யுணர்வாற் றன்னை அடைக்கலம்புக்கா ரை,—தானுக்கிக் காப்பன்– தன்னைப்போலச் சுத்தராகச் செய்து பாதுகாப்பவனும்,–நாடி (யும்) அவரை நணுகாமல் வினை – (மந்திரவலியான் அடங்கி இரைநுகரப் பெறுது கிடக்கும் பாந்தள் யாதானும் ஓரிலக்கு வந்து வாய்த்துழி வறிது கிடவாதவாறுபோல) அவர் மாட்டெழுந்தும் அவரைச் சாரமாட்டா தொழிந்துகிடந்த அவ்வாகாமிய வினை (அவர்க்கு இதமகிதங்களைச் செய்வார் பிறருளராய வழி அவ்வியைபுபற்றி ஆண்டவ் விதமகிதங்கட்குத் துணை யாய்த் தலைக்கூடற்பாலதாகலின்),—அவர் தாம் செய் வினை தன்னல் பிறர் செய்வினை நலமுடனே ஊட்டி ஒழிப் பானும் – அதனை அவ்வாறு செலுத்திப் பிறர்செய்யும் அவ் விதமகிதங்களை (மிகுவித்து நன்மைபோடு) நுகர்வித்

தொழித்தல் செய்பவனுமாகியும்,—தலைவன் சலம் இலன். (அது பற்றி) இறைவன் சலமுடையனுவா னல்லனென்க.

சிவ — பொழிப்புரை

எ-து. நீயே எனக்குண்ணின்று செய்கின்ற யாகலின் என்னற் செய்யப்படு மிதமகிதமெல்லாம் நீ செய்யுஞ் செயலே யென்றும், நீயே பிறரைக்கொண்டு செய்வித்துஞ் செய்கின்ற யாகலிற் பிறராலெனக்கு வருமிதமகிதங்களும் நீ செய்யுஞ் செயலே பிறிதில்லையென்றும், இங்ஙனம் அவனருளேயல்லது ஒன்றினையுங் கருதாராய்த் தம்மை யிழந்து நிற்கப்பெறுவார் மாட்டு, அஞ்ஞானகன்மம் பிரவேசிக்கமாட்டாதா யொழிந்து விடுமாகலான், அப்பெற்றித்தாகிய மெய்யுணர்வான் அடைக் கலம்புக்காரைத் தன்னைப்போலச் சுத்தராகச் செய்து பாது காத்தலும், மந்திரவலிபானடங்கி இரைதுகரப்பெறுது கிடக் கும் பாந்தள் யாதானு மோரிலக்கு வந்து வாய்த்துழி வறிது கிடவாதவாறுபோல, அவர்மாட்டெழுந்தும் அவரைச் சார மாட்டாதொழிந்து கிடந்தவ் வாகாமிய வினை, அவர்க்கு இதமகிதங்களைச் செய்வார் பிறருளராயவழி அவ்வியைபு பற்றி ஆண்டவ் விதமகிதங்களுக்குத் துணையாய்த் தலைக் கூடற்பாலதாகலின், அதனை யவ்வாறு செலுத்திப் பிறர் செய்யுமவ் விதமகிதங்களை மிகுவித்து நுகர்வித்தொழித் தலுஞ்செய்வனுகலான், அதுபற்றியிறைவன் சல முடைய னுவானல்லனென்பதாம்.

ஆக்கிக்காப்பனென வியையும்.

பிறரை யூட்டியொழித்தலே யவரை வினைகணுகாமற் காப்ப தெனக் கொள்க.

பிறரை யங்ஙனமூட்டுதலுங் கருணையேயாமென்பார், ஊட்டி யென்றெழுதியாது ஒழிப்பானுமென்றும் கலமுடனேயென்றுங் கூறினர்.

'உலகினிலென்செயலெல்லா முன்விதியே நீ யே யுண்ணின்றுஞ் செய்வித்துஞ் செய்கின்றியென்று, நிலவுவதோர் செயலெனக்கின் றுன்செயலேயென்று நினைவார்க்' கென்றதனால், அரன்பணியினின்றிடலாவது இதுவெனத் தெரித்துக் கூறியதாமாயிற்று.

இறைபணியினிற்கு மிவன் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கிவிட்டு இவனுலகிலிதமகிதஞ் செய்தவெல்லா மி த ம கி த மிவனுக்குச் செய்தார்பாலிசையச் செய்தல் இறைவனுக்குச்சலமாய் முடியும்போலு மென்பாரைநோக்கி, அதனைத் தெரித்துணர்த்திச் சலமின்மை காட்டியவாறு. (4)

காடுகளிற் புக்குழன்றுங் காடுகளிற் சரித்து
நாகமுழை புக்கிருந்துந் தாகமுத றவிர்ந்து
நீடுபல காலங்க ணித்தரா யிருந்து
நின்மலஞா னத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பி
லேடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே
யெறிவிழியின் படுகடைக்கே கிடந்துமிறை ஞானங்
கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக்
குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர்.

சுப் — பதவுரை

நாடுகளில் புக்குஉழன்றும்–புண்ணியதேயங்களிற் சென்று புண்ணியதல புண்ணிய தீர்த்தங்களைத் தரிசித்தும் ஆடியும்,—காடுகளில் சரித்தும்–வனத்திலே சென்று கந்த மூல பலாதிகளை அயின்றும்,–நாக முழை புக்கு இருந்தும்–மலையினுள்ள குகையில் யோகத்திருந்தும்,—தாகமுதல்

தவிர்ந்தும் – (அவ்யோகப்பயிற்சிவலியினால்) பசி நீர் வேட்கை முதலியன வொழிந்தும்,—நீடு பல காலங்கள் நித்தராயிருந்தும் - நெடுங்கால மரணமில்லாதிருந்தும்,—நின்மல ஞானத்தை இல்லார் – நிருமலமான(இறைபணியி னிற்றலாகிய மெய்த்தொண்டுசெய்யும்)ஞானமில்லாதார்,—பிறப்பில் நிகழ்ந்திடுவர் – சனனத்துட்படுவர்,—ஏடுதரும் மலர்க்குழலார் முலைத்தலைக்கே இடைக்கே எறிபடுவிழி யின் கடைக்கே கிடந்தும் – இதழ்பொருந்திய மலர்மாலை யணிந்த கூந்தலையுடைய மங்கையர் கொங்கையிடம் அல்குல் வீசப்பெற்றகட்கடைமுதலிய அவயவங்களைத் தோயப்பெறினும்,—இறை ஞானம் கூடுமவர்–அரன்பணி யினிற்றலாகிய ஞானத்தைப் பெற்றோர்,—கூட அரிய வீடும் கூடிக் குஞ்சித்தசேவடியும் கும்பிட்டேயிருப்பர்-பெறுதற்கரிய வீட்டினைத் தலைக்கூடிச் சிவந்த குஞ்சித பாதத்தின்கண் அடங்கிநிற்பர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *ஏனைப் பெரும்பேறெல்லாங் கொடுக்க வல்லனவாய எத்துணைநன்மைகளும், இங்ஙனம் அரன்பணியினிற்றலாகிய மெய்த்தொண்டு செய்யும் ஞானத்தாற்றரப்படும் பேற்றைக் கொடுக்கவல்லுவனவல்ல, எல்லாப்பெரும்பேற்றையுங் கொடுக்கவல்லனவாய எத்துணைத்தீமைகளும், இதனாற்றரப்படும் பெரும்பேற்றைக் கெடுக்கவல்லனவுமல்ல; அத்துணைப்பெரியதோர் சிறப்பிற்று இவ்வினைபணி நிற்கு ஞானமென்பதாம்.*

அரன்பணிநிற்றலது ஆற்றல் கூறியவாறு.

சாக்கிரத்தே யதீதத்தை யென்னுஞ் செய்யுளில், சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்கள் சாக்கிரத்தி னிற்றலொப்புமை மாத்திரையேபற்றி அவரை யெல்லாரோடு மொப்பவைத்திகழற்கவென வவரது பெருமையுணர்த்துவார், ஆக்குமுடிகவித் தாசாண்டு நுங்கிடாவேயென ஆண்டுக்கூறினர்; அதனையே அரன்பணியினிற் றலா ஞகற்பாலதன்கண் மற்றொன்றுற் செய்யக்கடவதொன்றுமில்லை யென அத்தொண்டின் பெருமையுணர்த்துவார், ஈண்டு மெடுத் தோதினர். இங்ஙனங் கருத்துவகையாற் பொருள்வேறு பாடுண்மையிற் கூறியது கூறலாகாமை கண்டுகொள்க. (5)

அங்கித்தம் பனைவல்லார்க் கனல்சுடா தாகு
மௌடதமந் திரமுடையார்க் கருவிடங்க ளேறு
வெங்கித்தைக் கன்மமெலாஞ் செய்தாலு ஞானிக்
கிருவினைகள் சென்றணையா முற்செய்வினை யிங்குத்
தங்கிப்போம் பாத்திரமுங் குலாலன்வினை தவிர்ந்த
சக்கரமுங் கந்தித்துச் சுழலு மாபோன்
மங்கிப்போய் வாதனையா லுழல்விக்கு மெல்லா
மலங்களும்பின் காயமொடு மாயு மன்றே.

சுப் — பதவுரை

அங்கித்தம்பனை வல்லார்க்கு அனல் சுடாதாகும் — (சுடுதற்கேதுவாகிய) அங்கியைத் தம்பனஞ் செய்யவல்லார் அவ்வங்கி (யுண்மூழ்கிக் கிடப்பினும் அதுபற்றி யவர் மாட்டு)ச் சுடுநிகழாதவாறும்,—மந்திரம் ஔடதம் உடையார்க்கு அருவிடங்கள் ஏறு — (கொலைத்தொழிற் கேதுவாகிய விடங்களைத் தடுக்கவல்ல) மந்திர மருந்துகளைப் பெற்றுடையார் அவ்வுரியவிட (ங்களையெல்லாம் நிறையப்பருகினும் அதுபற்றி அவர்மாட்டு)க் கொலைத்

தொழில் நிகழாதவாறும்போல.—ஞானிக்கு எங்கித்தை (நின்று) கன்மமெலாம் செய்தாலும் – (விருப்புவெறுப்புக்கள் நிகழ்தற் கேதுவாகிய இந்திரியங்களை மேற்கூறிய முறையினின்று தம்வழிப்படுத்தவல்ல) ஞானிகள் எவ்விந்திரியங்களினின்று எத்தொழிலைச் செய்தாராயினும்.—இருவினைகள்சென்றணையா – (அதுபற்றி அவர்மாட்டு) விருப்புவெறுப்பு நிகழ்ந்து மேலைக்கு வித்தாதல் செல்லாமையானும்,—முன்செய்வினை மங்கிப்போய் வாதனையால் உழல்விக்கும் – ஏனைப் பிராரத்தவினையும் (தற்பணிநீத்தவவர்மாட்டுத் தலைக்கூடமாட்டாது வெந்தபடம்போலச்) சத்திகெட்டேபோய் வாதனைமாத்திரையாய்நின்று சிறிதே தாக்கும் (அவ்வளவேயன்றி வாதனையாற் செய்யக்கடவது பிறிதில்லையாதல்),—இங்குத் தங்கிப்போம் பாத்திரமும் கந்தித்து – காயம் இருந்தொழிந்த பாத்திரத்தில் (அவ்வாசனைகிடந்து) கந்தித்தும் (ஒருகறிக்கு உபயோகமாதலின்மையும்),–குலாலன் வினைதவிர்ந்த சக்கரமும் சுழலுமாபோல் – குயவனுவான் (குடத்தை வனையுமளவும் சுழற்றிவிட்ட)திகிரியில்அவ்வாதனைகிடந்து தன்வேகமுள்ளவளவும் அதனை மெலிதாகச் சுழல்வித்து (மற்றொன்றனை வனைதற்கு உபயோகமாதலின்மையும்) போலுமாகலானும்,—எல்லா மலங்களும் பின் காயமொடுமாயும் அன்றே– (வாதனைமாத்திரைக்குத் துணையாய்நின்ற) ஏனைமலவாசனைகளும் பின் அவ்வுடம்பு(மாயுங்காலத்து வேறொரு பற்றின்மையான் அது) னோடு மாய்ந்தொழியும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *சுடுதற்கேதுவாகிய அங்கியைத் தம்பனஞ்செய்ய வல்லார் அவ்வங்கியுண் முழுகிக்கிடப்பினும் அதுபற்றி யவர் மாட்டுச் சூடு நிகழாதவாறும், கொலைத்தொழிற்கேதுவாகிய*

விடங்களைத் தடுக்கவல்ல மந்திரமருந்துகளைப் பெற்றுடையார் அவ்விடங்களையெல்லாம் நிறையப்பருகினும் அது பற்றியவர்மாட்டுக் கொலைத்தொழி னிகழாதவாறும்போல, விருப்புவெறுப்புக்க ணிகழ்தற்கேதுவாகிய இந்திரியங்களை மேற்கூறிய முறையினின்று தம்வழிப்படுத்த வல்ல ஞானிகள் எவ்விந்திரியங்களினின்று எத்தொழிலைச் செய்தார்களாயினும் அதுபற்றி யவர்மாட்டு விருப்புவெறுப்பு நிகழ்ந்து மேலைக்கு வித்தாதல் செல்லாமையானும், ஏனைப் பிராரத்த வினையுந் தற்பணிநீத்தவர்மாட்டுத் தலைக்கூட்மாட்டாது வெந்தபடம்போலச சத்திகெட்டேபோய் வாசனைமாத்திரையாய்நின்று சிறிதே தாக்குமவ்வளவேயன்றி வாதனையாற்செய்யக்கடவது பிறிதில்லையாதல், காயமிருந்தொழிந்த பாத்திரத்தில் அவ்வாதனை கிடந்து கந்தித்தும் ஒருகறிக்குபயோகமாதலின்மையுங் குயவனுவான் குடத்தை வனையுமளவுஞ் சுழற்றிவிட்ட திகிரியில் அவ்வாதனை கிடந்து தன்வேகமுள்ளவளவு மதனை மெலிதாகச் சுழல்வித்து மற்றொன்றனை வனைதற்கு உபயோகமாதலின்மையும்போலுமாகலானும், வாதனைமாத்திரைக்குத் துணையாய்நின்ற ஏனை மலவாதனைகளும் அவ்வுடம்பு மாயுங் காலத்து வேறொருபற்றின்மையான் அதனோடு மாய்ந்தொழியுமென்பதாம்.

இங்குத்தங்கிப்போம் பாத்திரம் தீவிராதனைக்கும், வினை தவிர்ந்த சக்காம் மந்தவாதனைக்கு முவமையாயின.

எங்கென்பது எங்கித்தையென மீ இயிற்று.

நின்றென்பது சொல்லெச்சம்.

கந்தித்தென்னும் வினையெச்சம் எச்சப்பொருடாராது செவ்வெண்மாத்திரையே குறித்து நின்றது; "பயந்துகாத் தழிக்கு

மற்றை மூவர்'' (திருவாசகம், திருச்சதகம், செ - 30) என்றதற் போல.

மங்கியென் றொழியாது போயென்றார், வலியுறுத்தற்கு உவமையெடுத்துக்காட்டியதும் அதனைத் தெளிவித்தற்பொருட்டு.

இச்செய்யுள் மேல் ஒருவாற்றான் வலியுறுத்தப்பட்ட மூன்றாங் கூற்றை வருஞ்சூத்திரத்தி னியைபுபுற்றி யெடுத்துக்கொண்டு தடைவிடைகளாற் சாதித்தற்பொருட்டு ஈண்டுத்தோற்றுவாய் செய்துகொள்ளுமுகத்தானே, மேலைச்செய்யுளின் 'எறிவிழியின் படுகடைக்கேகிடந்துங் கும்பிட்டேயிருப்ப' ரென்றதனை உவமைகளின் வைத்துணர்த்தி யினிதுவிளக்கியவாறு.

இவை சான்று செய்யுளானும் இரண்டாங்கூற்றின்கட் பதினாறல்லாம் வருத்துக் கூறப்பட்டன. (6)

பத்தாஞ்சூத்திரமுடிந்தது.

ஆக்கத்திருவிருத்தம் — 309.

உ

சிவமயம்


திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் சுபக்கம்

பயனியல்

பதினொஞ்சூத்திரம்

திருவிருத்தம் — 12.



பதினொஞ்சூத்திரம்

இங்ஙனம் பத்தாஞ்சூத்திரத்தாற் பெத்தத்தினின்றும் நீங்கப் பெற்றார்க்கு முத்திப்பயன் பெறுமாறு வகுத்துக் கூறுதற்கெழுந்தது பதினொஞ்சூத்திரம். முத்தியென்றது ஈண்டுத் தலைமைபற்றிச் சிவப்பேற்றின் மேனின்றது.

காயமொழிந் தாற்சுத்த ஞகி யான்மாக்
காட்டக்கண் டிடுந்தன்மை யுடைய கண்ணுக்
கேயுமுயிர் காட்டிக்கண் டிடுமா போல
வீசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவ னித்தை
யாயுமறி வுடையனு யன்பு செய்ய
வந்நிலைமை யிந்நிலையி லடைந்த முறையாலே
மாபமெலா நீங்கியரன் மலரடிக்கீ ழிருப்பன்
மாறுத சிவாநுபவ மருவிக் கொண்டே.

சுப — பதவுரை

காட்டக் கண்டிடும் தன்மை உடைய கண்ணுக்கு - காட்டக்காணுந்தன்மை யுடைய கண்ணிந்திரியத்துக்கு (ஓர் உருவத்தைக் காணும்படி),—ஏயும் உயிர் காட்டிக் கண்டிடுமாபோல – பொருந்திய உயிர் (அத்துடனுய்நின்று) காட்டுதன்மாத்திரையேயன்றி (அக்கண்ணெளியோடு கூடச்சென்று அவ்வுருவத்தை)க் காணுதலுஞ் செய்து உபகரிக்குமாறுபோல —உயிர்க்கு–உயிர்க்கு (ஓர் விடயத்தை அறியும்படி),—ஈசன் காட்டிக்கண்டிடுவன் - முதல்வன்(உடனின்று) அறிவித்தன் மாத்திரையேயன்றி (அவ்வுயிருணர்வோடுகூட அத்துவிதமாய்ச் சென்று அவ்விடயத்தை) அறிதலுஞ்செய்து உபகரித்து

வருமாகலான்,—காயம் ஒழிந்தால் சுத்தனுகி ஆன்மா – (எல்லாமலங்களும் பின்காயமொடு மாயுமென மேலைச் சூத்திரத்து இறுதியிற் கூறியவாற்றுற்) காயம் ஒழிந்தான் (மும்மலங்களும் நீங்கப்பெற்றுச்) சுத்தனுவோனுகிய ஆன்மா,—இத்தை ஆயும் அறிவு உடையனுய் – (முதல் வன்) இங்ஙனம் அத்துவிதமாய் நின்று உபகரித்துவரு முரிமையைக் கடைப்பிடித்தறிந்துகொண்டு நிற்கப்பெ றின்,—அன்புசெய்ய – (அத்தொடர்பு பற்றிய அம்முதல் வன் றிருவடிகளைத் தலைப்படுதற்கண்)இச்சை இடையருது நிகழும் அங்ஙனம் அறிவிச்சைகள் இரண்டும் பிறிதொன் றிற் சேறலின்றி அவ்வத்துவித நிலையொன்றேபற்றி முதல் வன்திருவடிக்கண்ணவாய் ஒருங்குநிகழவே,–அந்நிலைமை இந்நிலையில் அடைந்தமுறையாலே – காயம் ஒழிந்தபின் மலநீங்கிச் சுத்தனுய்நிற்குமுறைமை காயத்தோடு நிற் புழித்தானே கைகூடப்பெறுதலால்,—மாயமெலாம் நீங்கி-(ஏனைக்கிரியையுமே) எல்லாமலங்களையும்(இம்மையே) நீத் தொழித்து (அவ்வறிவிச்சைகளோடொப்ப ஒருவழிக் கொண்டு).—அரன் மலர் அடிக்கீழ் மாருத சிவானுப வம் மருவிக்கொண்டே இருப்பன் – அம்முதல்வனது செங்கமலமலர்போலுந் திருவடியைத் தலைக்கூடப்பெற்று மாறுபடாத சிவானுபூதியே சுவானுபூதியாகக் கொண்டு வாழ்வன் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *கண்ணிந்திரியம் ஒருருவத்தைக் காணும்படி உயிரதனுடனைய் நின்று காட்டுதன்மாத்திரையேயன்றி அக் கண்ணெளியோடு கூடச் சென்று அவ்வுருவத்தைக் காணு தலுஞ்செய் துபகரிக்குமதுபோல, உயிரொரு விடயத்தை*

யறியும்படி முதல்வனுடனின்றறிவித்தன்மாத்திரையே யன்றி அவ்வுயிருணர்வோடுகூட அத்துவிதமாய்ச் சென்று அவ்விடயத்தை யறிதலுஞ்செய் துபகரித்துவரு மாகலான், எல்லாமலங்களும் பின்காயமொடு மாயுமென மேலைச் சூத்திரத்திறுதியிற் கூறியவாற்றாற் காயமொழிந்தான் மும் மலங்களும் நீங்கப்பெற்றுச் சுத்தனேவோனாகிய வான்மா, முதல்வனிங்ஙனம் அத்துவிதமாய்நின்று உபகரித்துவரு மூரிமையைக் கடைப்பிடித் தறிந்துகொண்டு நிற்கப்பெறின், அத்தொடர்புபற்றிய வம்முதல்வன்றிருவடிகளைத் தலைப்படு தற்கண் இச்சையிடையறாது நிகழும்; அங்ஙனம் மறிவிச்சை களிரண்டும் பிறிதொன்றிற் சேறலின்றி அவ்வத்துவிதநிலை யொன்றேபற்றி முதல்வன்றிருவடிக்கண்ணவாய் ஒருங்கு நிகழவே, காயமொழிந்தபின் மலநீங்கிச் சுத்தனைய் நிற்கு முறைமை காயத்தோடு நிற்புழித்தானே கைகூடப்பெறுத லால், ஏனைக்கிரியையுமே எல்லாமலங்களையு மிம்மையே நீத் தொழித்து அவ்வறிவிச்சைகளோடொப்ப வொருவழிக் கொண்டு அம்முதல்வன்றிருவடியைத் தலைக்கூடப்பெற்று, சிவானுபூதியே சுவானுபூதியாகக்கொண்டு வாழ்வனென் பதாம்.

அத்துவிதநிலை விளக்குவதாகிய காணுமுபகார மாத்திரையே யீண்டுக்கூறப் புகுந்தார், இனிது விளங்குதற்பொருட்டு ஐந் தாஞ்சூத்திரத்துட் கூறிப்போந்த காட்டுமுபகாரத்தையு மனுவதித் துடன்கூறினர். ஈண்டுகாணுமுபகாரமாத்திரையே கூறுதல் கருத் தென்பது முதனூலின் "உள்ளத்தைக்கண்டுகாட்டல்" என்பதற்கு (சிவஞானபோதம் பதினைஞ்சூத்திரம்.) "அவனுமவற்றதுவிட யத்தையுணருமென்றது" எனக் காணுமுபகாரமாத்திரையே வேறெ டுத்துக்கொண்டுரைத்த கண்ணழிப்புரையானு முணர்க. காட்டுமுப

காரமாத்திரையே யன்றி அதன்பின்னுக வுடனின்று காணுமுபகார மும் வேண்டப்படுமென்பது 'எவ்விடத்து' மென்னுஞ்செய்யுளின் வினாங்கக் காட்டுதும்; ஆண்டுக்காண்க.

காயமொழிந்தாற் சுத்தஞுகியான்மா இத்தையாயு மறிவுடை யஞுயெனவியையும்.

ஆகியென்றது பெயர்.

அங்ஙிலையென்பதற்கு வேறுவேறுரைப்பாருமுளர். அகரச் சுட்டு அடுக்கநின்றதனை யொழித்து வேறொன்றனைச் சுட்டுதல் செல்லாமையும் பிறவும் அவர் நோக்கிலர்.

இருவகைப்பயனு மொருங்கே சேரவைத்து விளக்குவாராய், மேலச்சூத்திரத்து வேறுகூறுக வையாது ஒருவாறு வலியுறுக்கப் படு மூன்றுங்கூற்றைக் காயமொழிந்தாற் சுத்தஞுகியெனவும், அங்ஙிலமை யிங்ஙிலையிலடைந்தமுறையாலே மாயமெலா நீங்கியெனவும், அதனெழிபாக ஈண்டெடுத்துக் கொண்டாராகலின், அதனேடுளப் பட இச்செய்யுள் முக்கூற்றதாயவாறு கண்டுகொள்க. (1)

பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வயிந்தவத்தின் கலக்கந்
தருஞானம் போகஞா திருஞான நேயந்
தங்கியஞா னஞ்சங்கற் பநிஞான மாகுந்
திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞான
மாதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்.

சுப் — பதவுரை

பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர் - இத்தையாயு மறிவெனப்பட்ட பரஞானத்தால் அச்சிவத்தை (த்

தெளிய) நோக்கி அன்புசெய்யப்பெற்றூர்,—பரமே பார்த் திருப்பர் பதார்த்தங்கள் பாரார் – அவ்வொன்றனையே உணர்ந்துகொண்டு நிற்பரன்றி (மேற்கூறிய பிராரத்தவா தனை தாக்குதற்குரிய ஏனை)ப்பதார்த்தங்களை (ச் சிறிதுங்) காண்பாரல்லர்,—பார்க்கவரு ஞானம் பலஞானம் அஞ் ஞானவிகற்பம் - (அவற்றைக் காணவருஞானங்களா வன (கருவிகளைப்பற்றி நின்றறியுங் காட்சி அனுமானம் உரையெனப்) பலவகைப்பட்ட (அளவை) ஞானங்கள் (அவையெல்லாஞ்) சுட்டுணர்வின்பேதமாகலானும்,— வாச்சிய வாசக ஞானம் கலக்கந்தரு வயிந்தவத்தின் ஞானம்– (ஏனைக்கேட்டலின்கண்ணதாகிய) சாத்திரஞான்ம் ஐயந்தருவதாய் (நால்வகைவாக்கைப்பற்றி நிகழும்) விந்துஞானமேயாகலானும்,—போகத்தங்கிய ஞாதிரு ஞான ஞேயஞானம் சங்கற்பனை ஞானமாகும் – (அக் கலக்கந்தருஞானம்) போம்படி (சிந்தித்துத் தெளிதற் கண்ணதாய்த்) தங்கிய பேதஞானமும் பாவனைஞானமாத லேயன்றி (அனுபூதி) ஞானமாகாமையானும்,—இவை யெல்லாங்கடந்த சிவஞானம் திருஞானம் – இவையனைத் திற்கு மேலாய் (சண்டுக்கூறப்பட்ட இச்) சிவஞானம் (ஒன்றே பதார்த்தங்களைப் பார்க்கவாராத) சிறப்புடைய ஞானம்,—ஆதலால் சீவன்முத்தர் சிவமேகண்டிருப்பர் – ஆகலான் (இதனைப்பெற்ற) சீவன்முத்தர் சிவமொன்றே கண்டிருப்பர் (அன்றி ஏனைப்பதார்த்தங்களை நோக்கிப் பிராரத்தவாதனையிற் படுவாரல்லர்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *இத்தகையாயுமறிவெனப்பட்ட பரஞானத்தால் அதனைத் தெளிய நோக்கி அன்பு செய்யப்பெற்றூர், அவ் வொன்றனையே யுணர்ந்துகொண்டு நிற்பரன்றி மேற்கூறிய*

பிராரத்தவாதனை தாக்குதற்குரிய ஏனைப்பதார்த்தங்களைச் சிறிதுங் காண்பாரல்லர்; அவற்றைக் காணவரு ஞானங்களாவன; கருவிகளைப் பற்றிநின்றறியுங் காட்சி யதுமான முறையெனப் பலவகைப்பட்ட அளவைஞானங்கள்; அவையெல்லாஞ் சுட்டுணர்வின் பேதமாகலானும்,ஏனைக்கேட்டலின்கண்ணதாகிய சாத்திரஞானம் நால்வகைவாக்கைப்பற்றி நிகழும் விந்துஞானமேயாகலானும், சிந்தித்துத் தெளிதற்கண்ணதாகிய பேதஞானமும் பாவனைஞானமாதலேயன்றி அனுபூதிஞானமாகாமையானும், இவையனைத்திற்கும் மேலாய் ஈண்டுக் கூறப்பட்டவிச் சிவஞானமொன்றே பதார்த்தங்களைப் பார்க்கவாராத சிறப்புடைய ஞானமாகலான்,இதனைப் பெற்ற சீவன் முத்தர் சிவமொன்றே கண்டிருப்பரன்றி ஏனைப் பதார்த்தங்களை நோக்கிப் பிராரத்தவாதனையிற் படுவாரல்லரென்பதாம்.

சிவமே கண்டிருப்பரென்றது முடிந்தது முடித்தல். ஏகாரம் பிரிநிலை.

ஈண்டு அஞ்ஞானமென்றது சுட்டுணர்வின்மேற்று.

கலக்கம் ஐயம். கேட்டலறிவு மேற் சிந்தித்துத் தெளியும்படி ஐயத்தை விளைத்தல்பற்றி, அதனைக் கலக்கந்தரு ஞானமென்றார். போகத்தங்கியஞானமென்றது அக்கலக்கந்தருஞானம் போம்படியவ்வாறு தங்கிய ஞானமென்றவாறு.

சீவன்முத்தர் பிறிதொன்றனைப்பாராரென வற்புறுத்தோதிய விதனானே, பிராரத்தவினை மங்கிப்போயவழியும் மங்காது நின்று ழல்விப்பதாகிய அதன்வாதனை பற்றறக் கழியுமாறு சாதிக்கப்பட்டது. (2)

அநாதியுட லொன்றினைவிட் டொன்றுபற்றிக் கன்மா
லாயழிந்து வருதலா லந்த மில்லை
பினுதியருள் பெற்றவர்க ணித்தவுரு வத்தைப்
பெற்றிருக்கை முத்தியெனிற் பெறும்பதமே யிதுவு
மினுதுநிலை யிதுதானுங் காய முண்டே
லிருங்கன்ம மாயைமல மெல்லா முண்டா
மனுதிதரு முடலாதி காரியத்தா லநாதி
மலமறுக்கு மருந்தற்றா லுடன்மாயுங் காணே.

சுப் — பதவுரை

உடல் அநாதி ஒன்றினைவிட்டு ஒன்றுபற்றிக் கன்மால் ஆய்ப் பின் அழிந்து வருதலால் அந்தம் இல்லை – உடம்பாவது அநாதியாய் (உயிரைப்பற்றி நீரோட்டம் போல)த் தொடர்ச்சியாய்க் கன்மத்திற்கேற்ப ஆகியும் பின்னர் அழிந்தும் வருவதாகலான் அதற்கொரு முடிவு கூறுதல் பொருந்தாமையின்,—ஆதி அருள் பெற்றவர்கள் நித்த உருவத்தைப் பெற்றிருக்கை முத்தியெனில் – (உருவசிவசமவாதிகள்) முதல்வனருளைப் பெற்றவர்கள் (இவைபோலன்றி) நித்திய சுத்த மங்கள மயமான திப்பிய சரீரத்தைப்பெற்றிருத்தல் முத்தியென்பரெனின்,—காயம் உண்டேல்மாயை இருங்கன்மம் மலம் எல்லாம் உண்டாம் – உடம்புளதாகவே (அதற்குக் காரணமாகிய) மாயையும் (அதன்கணிகழும் உண்டிவினைகட் கேதுவாகிய) மிக்க கன்மமும் (அதனையெவிப்பதாகிய) ஆணவமலமுமாகிய அனைத்தும் விட்டு நீங்குதலில்லை,—இதுதானும் இனுதுநிலை – அதுவும் இன்னுமையைப் பயக்கும் நிலையேயாம்,—இதுவும் பதமே பெறும்–(ஆகவே) அதனை (முத்தியென்பதற்குத்தாற்பரியம்)பதமுத்தியென்பதேயாம்,—மனுதி தரும்

உடல் காரியத்தால் ஆதி - மனமுதலிய புரியட்டக வுடம் பினின்றுந் தோன்றுவதாகிய இவ்வுடம்பு அக்காரியப் பாட்டால் ஆதியாய்,—அநாதி மலம் அறுக்கும் மருந்து அற்றால் உடன் மாயும் காணே–அநாதியாகிய மலநோய் தீர்தற்கு மருந்தாய்(வரும் இஃது அக்காரண நீங்கிய வழித்) தானு முடனீங்குவதாம் (ஆகலான் அது பொருந்தாது) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. உடம்பாவது அநாதியாயுயிரைப்பற்றி நீரோட் டம்போலத் தொடர்ச்சியாய் வருவதாகலான் அதற்கொரு முடிபு கூறுதல் பொருந்தாமையின் முத்தியினும் இவை போலன்றி நித்தியசுத்தமங்களமயமான திப்பிய சரீரமுண் டென்னும் உருவசிவசமவாதிகண் மதமாது உடம்புளதா கவே அதற்குக்காரணமாகிய மாயையும் அதன்கணிகழு முண்டிவினைகட்கேதுவாகிய கன்மமும் அதனியையைவிப்பதா கிய வாணவமலமும் விட்டுநீங்குகலின்மையின் அதுவு மின் ணமையைப் பயக்கு நிலையேயாகலானும், ஆகவே யதனை முத்தியென்பதற்குத் தாற்பரியம் பதமுத்தியென்பதேயாமா கலானும், மனமுதலிய புரியட்டகவுடம்பினின்றுந் தோன்று வதாகிய விவ்வுடம்பு அக்காரியப்பாட்டா லாதியாய் அநாதி யாகிய மலநோய் தீர்தற்குமருந்தாய்வரும், இஃது அக்காரண நீங்கியவழித் தானுமுடனீங்குவதன்றி நிற்றற்கோ ரியைபின் மையான் அந்த மாதற்கு ஞானங்கையின்மையானு மென் பதாம்.

இதனானே மாயாமலம் பற்றறக்கழியுமாறு தடைவிடைகளாற் சாதிக்கப்பட்டது. (3)

தெரிவரிய மெய்ஞ்ஞானஞ் சேர்ந்த வாறே
சிவம்பிரகா சிக்குமிங்கே சீவன்முத்த னுகு
முரியமல மௌடதத்தாற் றடுப்புண்ட விடமு
மொள்ளெரியி னொளிமுன்ன ரிருளுந் தேற்றின்
வருபரல்சேர் நீர்மருவு கலங்களும் போலாகி
மாயாதே தன்சத்தி மாய்ந்து காயந்
திரியுமள வும்முளதாய்ப் பின்பு காயஞ்
சேராத வகைதானுந் தேயு மன்றே.

சுப் — பதவுரை

தெரிவு அரிய மெய்ஞ்ஞானம் சேர்ந்தவாறே - (மேற் கூறிய) தெரிதற்கரிய மெய்ஞ்ஞானத்தைப் பெற்றவழி யும்),—சிவம் பிரகாசிக்கும் – (அதனற்) சிவம் பிரகாசித்த வழியும்,—இங்கே சீவன்முத்தனுகும் – (அதனால்) ஈண்டுச் சீவன்முத்தராயவழியும் (முறையே),—தேற்றின் வருபரல் சேர் நீர் மருவு கலங்களும் - தேற்றுமரத்துண்டாகிய வித்தினுற்றேற்றப்பட்ட நீரின்மருவிய கலங்களும்.—ஒள் எரியின் ஒளிமுன்னர் இருளும் – மிக்க அக்கினிப்பிரகா சத்திற்கு முன்னர் இருளும்,—ஔடதத்தால் தடுப்புண்ட விடமும் போலாகி – மருந்தினுற்றடைப்பட்ட நஞ்சமும் போல,—உரிய மலம் மாயாதே தன்சத்தி மாய்ந்து காயம் திரியும் அளவும் உளதாய் – சகசமாகிய ஆணவமலங் கெடாது தனது சத்திகெட்டு (வாதனைமாத்திரையாய்) அவ்வுடம்புள்ள அளவு நின்று,—பின்பு காயம் சேராத வகைதானும் தேயும் அன்றே – மற்றொரு பிறவிக் கேது வாதலின்றி அதனோடு கழிந்தொழியும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. மேற்கூறிய மெய்ஞ்ஞானத்தைப் பெற்றவழியும், அதனாற் சிவம் பிரகாசித்த வழியும், அதனாற் சீவன் முத்தராயவழியும், முறையே தேற்றின் வருபரல்சேர் நீர்மருவுகலங் கன்முதலிய மூன்றும்போல ஆணவமலத்தனது சத்திகெட்டு வாதனைமாத்திரையாயவ்வுடம்புள்ளவளவு நின்று, மற்றொரு பிறவிக்கு ஏதுவாதலின்றி அதனோடு கழிந்தொழியுமென்பதாம்.

தேற்றின் வருபரல்சேர் நீர்மருவு கலங்கல் பாஞானஞ் சேரப் பெற்றுர்மாட்டு மாய்ந்து கிடக்கு மலசத்தி ஒருகாரணத்தான் மேற்படினு மொட்டின்றி யங்ஙனம் விண்டொழிதற்கும், சிவம்பிரகாசித்தார்மாட்டு ஒள்ளெரியிஞ்ளிமுன் னிருள் அஃதாண்டைக்குச் சிறிதாயினும் இயைபின்றியுஞ் சேய்மைக்கண்ணுள்ளதுபோலத் தோன்றுதற்கும், ஒளடதத்தாற் றடுப்புண்டவிடம் சீவன் முத்தராகப் பெற்றுர்மாட்டு ஒருவாற்றுனு மியைபின்றியும் அந்நிலையின் மெலிவு பார்த்திருத்தற்கும் உவமையாயின. எதிர்நிரனிறையாக வைத்துக் கண்டுகொள்க.

ஒள்ளெரியென விசேடித்ததனுல் விளக்குமுதலிய அற்ப வெரியிஞ்ளிகள் நீக்கப்பட்டன.

இதனுனே ஆணவமலம் பற்றறக்கழியுமாறு கூறப்பட்டது.(4)

ஆணவந்தா னகாதியந்த மடையா தாகு
மடையினந்த வான்மாவு மழியுமெனிற் செம்பிற்
காணலுறுங் களிம்பிரத குளிகைபரி சிக்கக்
கழியுஞ்செம் புருநிற்கக் கண்டோ மன்றே

தாணுவின்றன் கழலணையத் தவிருமலந் தவிர்ந்தாற்
றூன்சுத்த மெயிருக்கை முத்தியரன் றூளைப்
பூணவேண் டுவதொன்று மில்லெனினி னருக்கன்
புகுதவிருள் போமடியிற் பொருந்தமலம் போமே.

சுப் — பதவுரை

ஆணவந்தான் அநாதி அந்தம் அடையாதாகும் – (முற்கூறப்பட்ட) ஆணவமலம் அநாதி (நித்தமாதலால்) நாசமடைவதின்று,—அடையின் அந்த ஆன்மாவும் அழியுமெனின் – நாசமுறுமாயின் அவ்வான்மாவும் அழியு (மெனப்பட்டு நித்தமாதற்கிழுக்காய் முடியு) மெனின் (அற்றன்று),—இரதகுளிகை பரிசிக்கச் செம்பில் காண லுறு களிம்பு கழியும் – இரதகுளிகை பரிசித்த மாத்திரையே செம்போடு சகசமாய் நின்ற களிம்பு நீங்கும் (நீங்கவே),—செம்பு உரு நிற்கக் கண்டோம் அன்றே – செம்புரு வேறுநிற்றல் கண்டாமாகலின் (அதுபோல).—தாணுவின்றன் கழல் அணைய மலம் தவிரும் – அரன்றிருவடியாகிய மெய்ஞ்ஞானஞ் சார்ந்த மாத்திரையே (உயிரோடுசகசமாய்நின்ற) ஆணவமலம் நசிக்கும்,—தவிர்ந்தால் தான் சுத்தனைய் இருக்கை முத்தி – நசித்தவழி உயிர் வேருய் நிற்றல் முத்தி (என்றற்கோரிழுக்கின்மையான் முத்தி நிலையினுஞ் சகசமல நீங்குமாறில்லையென்னும் பாடாண வாதசைவர்மதமும்),—அரன்தாளைப் பூணவேண்டுவது ஒன்றும் இல்லையெனின் – (மெய்ஞ்ஞானஞ் சேர்ந்த மாத்திரையே மலநீங்கப்பெறுமதுவே முத்தியாதல் அமையும் அதன்மேலும்) அரன்றிருவடியைக் கலத்தல்வேண்டாவெனப் பேதவாதசைவர் கூறுவரெனின்,—அருக்கன் புகுத இருள்போம் – அருக்கனெளி மேவியவழி (அருக்கனைடு கண்ணெளி கலந்தாலே) இருள்பற்றறக்கழியும்

(அதுபோல),—அடியில் பொருந்தவே மலம்போம் – (மெய்ஞ்ஞானஞ் சேரினும் சிவம்பிரகாசித்துத்) திருவடியை (உயிர்)பொருந்தினலே ஆணவமலம் பற்றறக்கழியும் (ஆதலால் அவர் மதமும் அடா) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இரதகுளிகை பரிசித்தமாத்திரையே செம்போடு சகசமாய் நின்ற களிம்பு நீங்கச் செம்புரு வேறுநிற்றல் கண்டாமாகலின், அதுபோல மெய்ஞ்ஞானஞ் சார்ந்தமாத்திரையே உயிர் வேறுப் நிற்ப உயிரோடு சகசமாய் நின்ற ஆணவமலம் நசிக்குமென்றற்கோ ரிழுக்கின்மையான், முத்தியினுஞ் சகசமல நீங்குமாறில்லையென்னும் பாடாணவாதசைவர் மதமும், அருக்கனெளி மேவினும் அருக்கனெடு கண்ணெளி கலந்தாலன்றி இருள் பற்றறக் கழியாதவாறுபோல மெய்ஞ்ஞானஞ் சேரினுஞ் சிவம் பிரகாசித்துத் திருவடியை உயிர் பொருந்தினலன்றி ஆணவமலம் பற்றறக் கழியுமாறின்மையின், மெய்ஞ்ஞானஞ்சேர்ந்தமாத்திரையே மலநீங்கப் பெறும் அதுவே முத்தியாதலமையும் அதன்மேலுந் திருவடியைக் கலத்தல் வேண்டாவென்னும் பேதவாத சைவர்மதமும் அடாவென்பதாம்.

இதனுனே தடைவிடைகளான் மேலது சாதிக்கப்பட்டது. 5

நெல்லினுக்குத் தவிடுமிக ளாதி யாயே
நெல்லைவிட்டு நீங்கும்வகை நின்றநிலை நிகழ்த்தீர்
சொல்லியிடிற் றுகளற்ற வரிசியின்பா லில்லை
தொக்கிருந்து மற்றொருநெற் ரூன்றி டாவா

மெல்லவிவை விடுமறவே யிவைபோல வணுவை
மேவுமல முடல்கன்ம மநாதிவிட்டே நீங்கு
நல்லசிவ முத்தியின்கட் பெத்தான் மாவை
நணுகிநிற்கு மாதலா னசமுமின் றுமே.

சுப — பதவுரை

நெல்லினுக்கு அநாதியாயே மூலை தவிடு உமிகள் நெல்லைவிட்டு நீங்கும்வகை நின்றநிலை நிகழ்த்தீர்–அரிசியொடுஞ் சகசமாய் நின்றமூலை தவிடு உமிகள் அவ்வரிசியைவிட்டுக் கெட்டொழிய அரிசி கேடின்றி நிலைபெறுதல் (கண்டாம் அவ்வியல்பு) கூறுவீராக (எனின்),—தொக்கு இருந்தும் மற்று ஒருநெல் தோன்றிடாவாம்–(அம்மூலை முதலியன) அடங்கிநிற்குமேனும் (அவ்வரிசி முன்போல) வேறொரு நெல்லுத் தோன்றுதற்குக் காரணமாதல் செல்லாவாம் (அங்ஙனஞ்செல்லாமையான்),—சொல்லியிடின் துகள் அற்ற அரிசியின் பால் இல்லை மெல்ல இவை அறவேவிடும் இவைபோல – (அவை) சொல்லுமிடத்துக் குற்றமற்ற(அவ்) வரிசியின்கண் அடங்கி நிற்குமென்றற்கோரியைபின்மையின் மெல்ல (மெல்ல நீங்கி) அவை ஆண்டில்லையென்பதே தேற்றம் அவைபோல,—அநாதி அணுவை மேவு மலம்உடல்கன்மம் நல்ல சிவமுத்தியின்கண் விட்டே நீங்கும்–அநாதியே உயிர்களோடு சகசமாய் நின்ற மல மாயை கன்மங்களாகிய மும்மலங்களும் நல்ல சிவமுத்தி நிலைக்கண் விண்டொழியுமென்றே கொள்க,—பெத்தான்மாவை நணுகி நிற்கும் ஆதலால் நாசமும் இன்றுமே – (ஆண்டு விண்டொழியினும் ஏனைப்) பெத்தரிடத்துக் காணப்படுதலால் அவை நித்தப்பொருளாதற்கும் இழுக்கில்லை என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அரிசியொடுஞ் சகசமாய் நின்ற மூலதவிடுமிகள் கெட்டொழிய அரிசி கேடின்றி நிலைபெறுதல் கண்டாம்; அவ்வரிசி முன்போல வேறொரு நெல்லுத் தோன்றுதற்குக் காரணமாதல் செல்லாமையான் அவை யவ்வரிசியின்கணடங்கி நிற்குமென்றற்கு ஓரியைபின்மையின், அவை ஆண்டில்லையென்பதே தேற்றம். அவைபோல அநாதியேயுயிர்களோடு சகசமாய்நின்ற மும்மலங்களும் முத்திநிலைக்கண் விணடொழியுமென்றே கொள்க. ஆண்டு விண்டொழியினும் ஏனைப் பெத்தரிடத்துக் காணப்படுதலால் அவை நித்தப் பொருளாதற்கும் இழுக்கில்லையென்பதாம்.

"இத்தவிலாவித்தன்மலம்" (உண்மை விளக்கம், செ. 51) என்பதூஉமறிக.

மெய்ஞ்ஞானஞ் சேர்ந்தமாத்திரையே மலம் பற்றறக்கழியுமென்பாரையும் ஈண்டுமறுப்பார், மெல்லவிவைவிடுமறவே யென்றுங் கூறினர். ஏகாரந் தேற்றம்.

இனம்பற்றியும் உவமேயம்பற்றியும் மூலையுமுடன் வைத்துரைக்கப்பட்டது.

இதனானே இராதகுளிகை பரிசித்த செம்பிலுங் களிம்பு தொக்கிருக்குமெனக் கோடுமென்பாரைநோக்கித் தொக்கிருத்தல் செல்லாமை அநுபவத்தியேதவின் வைத்துணர்த்தற்பொருட்டு, வேறுமோருவமை கூறுமுகத்தான் அம்மூன்று மொருங்கே வலியுறுத்தப்பட்டன.

இவையைந்துசெய்யுளும் மேலைச்சூத்திரத்தின் அகலுங்குற்றமென்ற இறுதிக்கூற்றினெழிபாய் இயைபுபற்றி யீண்டுவைக்கப்பட்டன.

முதலதிகரணம்

எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றை
யறிந்தியற்றி டாவுயிர்க ளீசன் ருனுஞ்
செவ்வினி னுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து
சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப
னிவ்வுயிர்க டோற்றும்போ தவனியின்றித் தோற்ரு
விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு
மவ்வுயிர்போ னின்றிடுவ னுதலானு
மானடியை யகன்றுநிற்ப தெங்கே யாமே.

சுப் — பதவுரை

எவ்விடத்தும் இறை அடியை இன்றி உயிர்கள் அமைந்திடா – பெத்தமுத்தியிரண்டினும் இறைவன் றிரு வடியையின்றி ஆன்மாக்கட்கு (அறிவுசெயல்கள் விளங் குதலும் விளங்கியபின் விடயத்திற் சென்று பற்றுதலும்) அமைய மாட்டா) அதுபற்றி),-ஈசன்ரு னும்–இறைவனும், அம்முதலெழுத்துக்கெல்லாமாய் நிற்கும் அவ்வுயிர்போல் இவ்வுயிர்கள் தோற்றும்போது அவனியின்றித்தோற்ரு இவற்றினுக்கு நின்றிடுவன் – அக்கரங்களை இயக்கு தற் பொருட்டு அவற்றுடனிற்கும் அகரம்போல அவ்வான் மாக்கட்கு அறிவுசெயல்கள் விளங்குங்கால் அவனியின்றி விளங்காமையின் அவை விளங்குதற்பொருட்டு அவ்வுயிர் களோடு கலந்து நிற்பன்'—ஒன்றை அறிந்து இயற்ற – (அங்ஙனம் விளங்கிய அறிவுசெயல்கள்) ஒருவிடயத்திற் சென்று பற்றுதற்பொருட்டு,—செவ்வினின் உளம் புகுந்து செய்தியெலாம் உணர்ந்து சேட்டிப்பித்து எங்கு மாய்ச்செறிந்துநிற்பன்–அவ்வுயிர்களை அதிட்டித்துக்

கொண்டு அவைசெல்லுமாறெல்லாம் அறிந்துசெலுத்தி அவ்விடயங்களினும் உடனுகக் கலந்து நிற்பன,—ஆதலால் நாம் அரன் அடியை அகன்று நிற்பது எங்கே யாமே – ஆகலான் (ஆணவமலத்தினீங்கி வேறுநின்ற) வுயிர்கள் (அதுபோல)இறைவனேவிட்டுத் தனித்துநிற்றல் ஓரிடத்தினு மில்லை என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. ஆன்மாவுக்கு அறிவுசெயல்கள் விளங்குதலும் விளங்கியபின் விடயத்திற் சென்று பற்றுதலும் இறைவன் றிருவடியையின்றியமையமாட்டா; அதுபற்றி யிறைவனும், அக்கரங்களே யியக்குதற்பொருட்டு அவற்றுடனிற்கும் அகரம்போல. அறிவுசெயல்கள் விளங்குதற் பொருட்டு உயிர்களோடுங் கலந்து நிற்பன். அங்ஙனம் விளங்கிய அறிவு செயல்கள் பின் விடயத்திற்சென்று பற்றுதற்பொருட்டு அவ்வுயிர்களேயதிட்டித்துக்கொண்டு அவை செல்லுமா றெல்லா மறிந்து செலுத்தி அவ்விடயங்களினு முடனுகக் கலந்து நிற்பனுகலால் ஆணவமலத்தினீங்கி வேறு நின்ற வுயிர்கள் அதுபோல இறைவனேவிட்டுத் தனித்து நிற்றல் ஓரிடத்துமில்லையென்பதாம்.

எவ்விடத்தும் பெத்தமுத்தி யிரண்டினுமென்க.

இதனுள் உயிர்க ளறிந்தியற்றியிடாவெனவும் ஈசன்முனுஞ் செறிந்து நிற்பனெனவுங் கூறியது ஆன்மாவி னறிவுசெயல்கள் விடயித்தற்கட்படு மியல்பிற்கும், தோற்றும்போதவனேயின்றித் தோற்றுவெனவும் ஈசனவ்வுயிர்போ னின்றிடுவனெனவுங் கூறியது அவை விளங்குதற்கட்படு மியல்பிற்கு மெனக்கொள்க.

இவ்விருதிறத்துள் உயிரிற் கலந்துநின்று அறிவு செயல்களை விளக்குதலே காட்டு முபகாரமெனவும், அவ்வுயிரை யதிட்டித்துக் கொண்டு சென்று விடயத்திற் கலந்துநிற்றலே காணுமுபகார மெனவுங்கொள்க.

உயிர் ஒன்றனைவிடயித்தல் இறைவனவ் விடயத்துமுடன் சென்று கலந்தாலன்றி உயிரிற் கலத்தன்மாத்திரையா லமையா தென்பது, கண்ணெளிவிளக்கின் சோதியோடு கலந்தும், விளக் கொளி கலந்தவற்றையன்றிக் காண்டல் செல்லாமையின் வைத் துணர்ந்துகொள்க. ''அறிவானுந்தானே யறிவிப்பான் றானே'' (அற்புதத்திருவந்தாதி, செ – 20.) என்றபின் 'அறிவாயறி கின்றன்றனே' என்ற அம்மைதிருவந்தாதியுமிது.

இதனனே அகாதி யுடனின்றவாணமலத்தை விட்டுநீங்கி, இறைவனோடு கூடுமாயின் அம்முறைபற்றி இறைவனையு மொரோ வழிவிட்டு நீங்கப்பெறும்போலு மென்னுமவ் வாதிகளை நோக்கி, அது கூடாமைக்கு எதிர்கூறுமுகத்தான் 'ஈசனுயிர்க்குக் காட்டிக் கண்டிடுவ'னென்ற முதற்கூறு தெரித்துணர்த்தி வலியுறுத்தப்பட் டது. (7)

இரண்டாமதிகரணம்

எங்குந்தா னிறைந்துசிவ னின்றரு ளகி
லெல்லாருங் காணவே வேண்டுந்தா னென்னி
லிங்குந்தா னந்தகருக் கிரவியிரு ளாகு
மீசனருட் கண்ணில்லார்க் கொளியாயே யிருளாம்

பங்கந்தா னெழும்பதுமம் பக்குவத்தை யடைப்பப்
பரிதியலர்த் திடுவதுபோற் பருவஞ்சே ருயிர்க்குத்
துங்கவரன் ஞானக்கண் கொடுத்தருளி னலே
சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே.

சுப — பதவுரை

சிவன் எங்குந் தான் நிறைந்து நின்றுளனில் — முதல்வன் (அத்துணைக்கலப்புடையனுய்) எங்குஞ் செறிந்து நின்று உபகரித்துவரின்,—எல்லாருங் காணவே வேண்டுந் தான் என்னில் — யாவரும் அறிய வேண்டுமெனின்,—இங்குந்தான் இரவி அந்தகருக்கு இருளாகும் — இவ்விடத்தே ஆதித்தன் (விளக்கமாயிருந்தும்) அந்தகருக்கு இருளாயே நின்றுற்போல,—ஈசன் ஒளியாயே அருட்கண் இல்லார்க்கு இருளாம் — முதல்வன் உபகாரம் விளக்கமாயிருந்தும் (அஃது) அருட்கண்ணுடையார்க்கன்றி அறியவாராது,—பங்கந்தான் எழும் பதுமம் பக்குவத்தை அடையப் பரிதி அலர்த்திடுவதுபோல்—சேற்றிற்றேன்றிய பக்குவமுடைய தாமரைமலரை ஆதித்தன் அலர்வித்திடுதல்போல,—பருவம் சேர் உயிர்க்கு—(அவ்வருட்கண்ணும்) பக்குவமுடையார்க்கன்றி(க் கிடைக்கப்பெறுது அப்பேறும் முதல்வனேயின்றி அமையாது),—ஞானக்கண் அரன் துங்க அருளினுலே கொடுத்து — (ஆகலான் அப்பெற்றித்தாகிய) அருட்கண்ணே முதல்வன் பெருங்கருணையாற் (பருவம்பார்த்திருந்து) கொடுக்க (அதனைப் பெற்றுடையார்க்கே),—சோதிக்குள் சோதியாய்த் தோன்றிடுவன் காணே — அவன் அறிவுக்கறிவாய் நின்று அவ்வாறுபகரித்துவரும் (அத்துவிதநிலை) இனிது விளங்கும் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. முதல்வன் அத்துணைக் கலப்புடையனு மெங்குஞ் செறிந்துநின்று உபகரித்துவரினும், அஃதருட்கண்ணுடையார்க்கன்றி அறியவாராது; அவ்வருட்கண்ணும் பக்குவமுடையார்க்கன்றிக் கிடைக்கப்பெறாது; அப்பேறும் முதல்வனையின்றி யமையாது; ஆகலான் அப்பெற்றித்தாகிய வருட்கண்ணை முதல்வன் பருவம் பார்த்திருந்து கொடுக்கப் பெற்றுடையார்க்கே அவனறிவுக்கறிவாய்நின்று அவ்வாறுபகரித்துவருமத்துவிதநிலை இனிது விளங்குமென்பதாம்.

இத்தையாயு மறிவுடையனுதற்கு உரிமை கூறியவாறு.

பருவமெய்தாததூஉம் ஓரிடத் தொருங்கு காட்டுவார், பங்கந் தானெழும் பதுமமென வேறுவமை கூறினர். (8)

சென்றணையு நிழல்போலச் சிவனிற்ப னென்னிற்
சென்றணையு மவன்முதலி சிவத்தையணைந் தொன்றாய்
நின்றதுயிர் கெட்டென்னிற் கெட்டதணை வின்றா
நிற்றதேற் கேடில்லை யணைந்துகெட்ட தென்னிற்
பொன்றினதேன் முத்தியினைப் பெற்றவரார் புகனீ
பொன்றுகையே முத்தியெனிற் புருடனித்த னன்றா
மொன்றியிடு நீரொடுநீர் சேர்ந்தாற்போ லென்னி
னிருபொருளாமதிபதியோடுயிர்பொருளொன்றன்றே.

சுப் — பதவுரை

சென்றணையும் நிழல்போலச் சிவன் நிற்பனென்னின்– (அரன் கொடுத்துத் தோன்றுவானெனல்வேண்டா) பதிகராற் சென்றணையப்படு மரநிழல்போல முதல்வன் (விகார

மின்றி) நிற்ப (உயிர்தானே பருவஞ்சேர்ந்தவழி ஞானக் கண்ணேப்பெற்று அரனைத்தலைக்கூடுதல் அமையு) மென ஈசுரவவிகாரவாதி மதம் பற்றிக்கூறின்,—செ ன் ற ணை யு மவன் முதலி – (மரநிழலுக்குச் சுதந்திரமின்றிச் சென் றணைவார்க்கு அச்சுதந்திரமாமாறுபோல முதல்வனுக்குச் சுதந்திரமில்லை) அவனைத் தலைக்கூடுவதாயுள்ள வுயிருக்கே சுதந்திரம் (எனப்பட்டு வழுவாம்),—உயிர் கெ ட் டு ச் சிவத்தை அணைந்து ஒன்றுய் நின்றதென்னின் - இனிப் பரிணமவாதிகள் உயிர்கெட்டுக் கூடி அரனடியில் ஒன் றுய்ப்போமென்பரெனின்,—கெட்டது அணைவு இன்றும்-கெட்டாற் கூடுமாறின்மையானும்,—நின்றதேல் – (கெ டாது) நின்று கூடுமெனின்,—கேடு இல்லை – (அவ்வாறு கூடியவழிக்) கேடின்மையின் (ஒன்றுதல் பெறப்படாமை யானும்),—அணைந்து கெட்டதென்னின்- கூ டி ய பி ன் கெட்டதெனின்,—பொன்றினதேல் முத்தியினைப் பெற்ற வர் ஆர் நீ புகல் - கெட்டவழி (முத்திபெறுவதொன் றின்மையானும்) அம்முத்தியினைப்பெற்றவர் யாவர் நீ கூறுவாயாக —பொன்றுகையே முத்தியெனின் – கேடே முத்தியெனின்,—புருடன் நித்தன் அன்றும் – உயிர் நித்த மாதல் செல்லாமையானும் (அதுவும் வழுவாம்),—நீரொடு நீர் சேர்ந்தாற்போல் ஒன்றியிடும் என்னின் - இனி அயிக்க வாதிகள் நீரிலே நீர்சேர்ந்தாற்போல (உயிர் அரனடியைச் சேர்ந்து) ஒன்றுமென்பரெனின்,—ஒருபொருளாம் அதி பதியோடு உயிர் பொருள் ஒன்று அன்றே – (நீருநீரும் போல) ஒப்பற்ற பொருளாகிய முதல்வனும் உ யி ரு ம் (தம்முட்) சமப்பொருளாதல் செல்லாமையின் (அவர் மதமும் அடாது) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. அரன் கொடுத்துத் தோன்றுவானெனல் வேண்டா, பதிகராற் சென்றணையப்படும் மரநிழல்போல முதல்வன் விகாரமின்றி நிற்ப உயிர் தானே பருவஞ்சேர்ந்த வழி ஞானக்கண்ணைப் பெற்று அரனைத் தலைக்கூடுமென வமையுமென ஈசுரவஷிகாரவாதிமதம்பற்றிக் கூறின், மரநிழலுக்குச் சுதந்திரமின்றிச் சென்றணைவாருக்கு அச்சுதந்திரமாமாறுபோல, முதல்வனுக்குச் சுதந்திரமில்லை அவனைத் தலைக்கூடுவதாகிய வுயிர்க்கே சுதந்திரமெனப்பட்டு வழுவாம். இனிப் பரிணமவாதிகள் உயிர் கெட்டுக் கூடி அரனடியி லொன்றுப்போமென்பர். கெட்டாற் கூடுமாறின்மையா யானும், கெடாதுநின்று கூடுமெனின் அவ்வாறு நின்று கூடிய வழிக் கேடின்மையின் ஒன்றுதல் பெறப்படாமையானும், கூடியபின் கெட்டதெனிற் கெட்டவழி முத்தி பெறுவ தொன்றின்மையானும், கேடே முத்தியெனின் உயிர் நித்தமா தல் செல்லாமையானும், அதுவும் வழுவாம். இனி ஐக்கவாதி கள் நீரிலே நீர் சேர்ந்தாற்போல உயிரரனடியைச் சேர்ந் தொன்று மென்பர். நீருநீரும்போல முதல்வனுமுயிருந் தம் முட் சமமாதல் செல்லாமையின் அவர்மதமும் அடாதென் பதாம்.

அரன்மலரடிக்கீ ழிருக்குமியல்பு வேறுவேறுகக் கூறுமவ் வம்மதங்களைப் பரிகரித்தவாறு. (9)

செம்பிரத குளிகையினுற் களிம்பற்றுப் பொன்னுய்ச்
செம்பொனுடன் சேருமலஞ் சிதைந்தாற் சீவ
னம்பனுடன் கூடுமெனிற் பொன்போ லல்ல
னற்குளிகை போலவர னணுகுமலம் போக்கி

யம்பொனடிக் கீழ்வைப்ப னருங்களங்க மறுக்கு
மக்குளிகை தானும்பொன் ணாகா தாகு
மும்பர்பிரா னுற்பத்தி யாதிக்களுக் குரிய
னுயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே.

சுப — பதவுரை

செம்பு இரதகுளிகையினால் களிம்பு அற்றுப் பொன்னுய்ச் செம்பொனுடன் சேரும் – (களிம்புள்ளளவும்) செம்பு (பொன்னுடன் ஒத்தொன்றுமாறில்லையாயினும்) இரதகுளிகையினற் களிம்பு நீங்கியவழிப் பொன்னுய்ச் செம்பொன்னுடன் ஒத்தொன்றுதல்செல்லும் (அதுபோல),—மலஞ்சிதைந்தால் சீவன் நம்பனுடன் கூடுமெனின் – மலநீங்கியவழி உயிர் முதல்வனேடு ஒத்தொன்றுமெனின் (அஃதும் அடாது),— நற்குளிகைபோல அரன் பொன்போல் அல்லன் – (உயிர்க்கு மலத்தை நீக்கும் ஆற்றலுடைய முதல்வனைச் செம்பிற்குக் களிம்பு நீக்கும் ஆற்றலுடைய) நன்மையாய இரதகுளிகைகளோடு ஒப்புறுத்தலன்றி (அவ்வாற்றலில்லாத) பொன்னேடு ஒப்புறுத்துதல் ஈண்டைக்கேலாமையானும்,—நணுகும் மலம் போக்கி அம்பொன் அடிக்கீழ் வைப்பன்–(முதல்வன்) பொருந்திய மலத்தைநீக்கிப் பொன்போலுந் திருவடிக்கீழ் (உயிரை) வைப்பனுயின்,—அருங்களங்கம் அறுக்கும் அக்குளிகை பொன்றுனும் ஆகாது – மிக்க களிம்பை ஒளித்த அக்குளிகைகளாகப் பொன்னுகாது (அதுபோல),—உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்குமே உரித்து – (மலநீங்கியவழியும்) உயிர் சிவானுபவம் ஒன்றற்கே சுதந்திரமாம்,—உற்பத்தி ஆதிகளுக்கு உம்பர் பிரான் உரியனுகும் – ஐந்தொழிலெல்லாவற்றிற்கும்

முதல்வனே சுதந்திரனுவன் (ஆகலின் உயிர் முதல்வனேடு ஒத்தொன்றுதல் செல்லாமையானும்) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து களிம்புள்ளளவுஞ் செம்பு பொன்னுடனெத்து ஒன்றுமாறில்லைபாயினுங் களிம்பு நீங்கியவழி ஒத்தொன்றுதல் செல்லுமென்பது மடாது. உயிர்க்கு மலத்தை நீக்குமாற்றலையுடைய முதல்வனைச் செம்பிற்குக் களிம்பு நீக்குமாற்றலுடைய இரதகுளிகைகளோ டொப்புறுத்துதலன்றி அவ்வாற்றலில்லாத பொன்னே டொப்புறுத்துதல் ஈண்டைக்கேலாமையானும், மலநீங்கியவழியுஞ் சிவானுபவமொன்றற்கே சுதந்திரமாயவுயிர் ஐந்தொழிலெல்லாவற்றிற்குஞ் சுதந்திரனுகிய முதல்வனே டொத்தொன்றுதல் செல்லாமையானுமென்பதாம்.

ஒன்றினுக்குமென்னுமும்மை முற்றும்மை.

'சிவானுபவமொன்றினுக்கு முரித்தே' யென்றவிதனுனே, சிவானுபவத்திற்கு முரித்தன்றென்னுஞ் சுத்தசைவர்மதமு மறுக்கப்பட்டது. (10)

சிவன்சீவ னென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னிற்
சிவனருட்சித் திவனருளாச் சேருஞ்சித் தவன்றன்
பவங்கேடு புத்திமுத்தி பண்ணுஞ்சித் தவற்றிற்
படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ்சித்து மிவன்று
னவன்றனே யறியுஞ்சித் தாதலினை யிரண்டு
மணைந்தானு மொன்றுகா தலங்கியமா யிருக்கு
மிவன்றனும் புத்தியுஞ்சித் திவனுமோ புத்தி
யிதுவசித்தென் றிடிலவனுக் கிவனுமசித் தாமே.

சுப் — பதவுரை

சிவன் சீவன் என்ற இரண்டும் சித்து ஒன்றுமென் னின் – முதல்வன் உயிரென்கிற இருபொருளும் சித்தே யாகலான் ஒத்தொன்று (மென்றலே அமைவுடைத்தன்றி உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தேயென வேற்றுமைப்படுத்துக் கூறுதல் ஆண்டைக் கமையாதா) லெனின் (அற்றன்று),—சிவன் அருட்சித்து இவன் அரு ளாச்சேரும் சித்து – முதல்வன் அருளாகிய சித்தாம் உயிர் அவ்வருளைச் சேரும் சித்தாம்,—அவன்றன் பவம் கேடு புத்தி முத்தி பண்ணும் சித்து (இவன்) அவற்றின்படியும் சித்து – முதல்வன் பவத்தினைக்கெடுத்துப் புத்தி முத்தி யளிக்குஞ் சித்தாம் உயிர் அவைகளில் அழுந்துஞ்சித் தாம்,—அவன் தானே அறியும் சித்து இவன்றன் அறிவிக் கப்படும் சித்தும் – முதல்வன் தானே யறியும் சித்தாம் உயிர் அறிவிக்க அறியுஞ் சித்தாம்,—இரண்டும் அணைந் தாலும் அநந்நியமாய் இருக்கும் ஒன்றுகாது ஆதலினால் – (ஒளியென்னும்பொதுமையால் ஒத்தொன்று மாயினும் வியஞ்சகத்தையின்றி அமையாதாய் அதுவதுவாய் மூந்திக் காணுங் கண்ணெளிக்கும் அதுபோலத் தனக்கொரு வியஞ்சகம் வேண்டாது தானே வியஞ்சகமாய் எல்லா வற்றையும் ஒருங்கே விளக்கிநிற்கு ஞாயிற்றினெளிக்கும் தம்முள் வேற்றுமை பெரிதாயினற்போல இங்ஙனஞ் சித் திரண்டிற்கும் தம்முள் அந்தரங்க வேற்றுமை பெரிது முண்மையான்) அவ்விருபொருளுந் தம்முட் கூடியவழி யும் அத்துவிதமாய் நிற்றலேயன்றி ஒன்றுப்போமா றில்லை யாகலான்,—இவன்றனும் புத்தியும் சித்து புத்தி இவனுமோ – உயிரும் புத்தி தத்துவமுஞ் சித்தெனக் கூறப்படினும் புத்தி தத்துவம் உயிராதலில்லை,—இது

அசித்தென்றிடில் அவனுக்கு இவனும் அசித்தாமே — புத்திதத்துவஞ் சடமென்றிடின் (ஏனைத்தத்துவங்களோ நோக்க உயிர் சித்தேயாயினும்) முதல்வனை நோக்க உயிர் அசித்தேயாம் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. இருபொருளுஞ் சித்தேயாகலான் ஒத்தொன்றுமென்றலே யமைவுடைத்தன்றி, உயிர்தானுஞ் சிவனுபவமொன்றினுக்குமூரித்தேயெனவேற்றுமைப்படுத்துக்கூறுதல் ஆண்டைக்கமையாதாலெனின்,— அற்றன்று; ஒளியென்னும் பொதுமையால் ஒத்தொன்றுமாயினும் வியஞ்சகத்தையின்றி யமையாதா யதுவதுவாய் முந்திக் காணுங் கண்ணெளிக்கும் அதுபோலத் தனக்கொரு வியஞ்சகம் வேண்டாது தானே வியஞ்சகமாய் எல்லாவற்றையு மொருங்கே விளக்கிநிற்கு ஞாயிற்றினொளிக்குந் தம்மூள் வேற்றுமை பெரிதாயினுற் போல, சித்திரண்டற்குந் தம்மூளத்தரங்கவேற்றுமை பெரிதுமுண்மையான், அவ்விருபொருளுந் தம்முட் கூடிய வழியும் அத்துவிதமாய் நிற்றலேயன்றி ஒன்றுப்போ மாறில்லையென்பதாம்.

நீருநீரும்போல ஒத்தொன்றுய் நிற்குமென்னும் ஐக்கவாதிகளை மறுத்தற்கெழுந்த விவ்விரண்டுசெய்யுளும், ஒத்து வேறுய் நிற்குமென்னும் அருவ சிவசமவாதிகளை மறுத்தற்குமுரியவாறு காண்க.

(11)

இரும்பைக்காந் தம்வலித்தாற் போலியைந்தங் குயிரை
யெரியிரும்பைச் செய்வதுபோ லிவனேத்தா னுக்கி
யருமபித்திந் தனத்தையன லழிப்பதுபோன் மலத்தை
யறுத்தமல னப்பணிந்த வுப்பேபோ லணைந்து

விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோ லடங்கி
மேளித்துத் தானெல்லாம் வேதிப்பா னிகிக்
கரும்பைத்தே னேப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே.

சுப — பதவுரை

காந்தம் இரும்பை வலித்தாற்போல் (அமலன்) அங்கு உயிரை இயைந்து – காந்தம் (விகாரமின்றி நின் றே றை) இரும்பை வலிப்பவுங்கண்டாம் அதுபோல இறைவனும் (விகாரமின்றியே) உயிரைத் தன்வழிப்படுத்து நிற்பதை லாற் (சென்றணையு நிழல்போலச் சிவனில்லாமை பற்றிச் சிவனிருவிகாரியாதற் கிழுக்கில்லை).—எரி இரும்பைச்செய் வதுபோல் அனல் இத்து அரும்பு இந்தனத்தை அழிப்பது போல் (அமலன்) இவனைத் தானைக்கி மலத்தை அறுத்து – எரி இரும்பை (க்கெடுத்தலின்றி) த் தன்வண்ணமாக்கி (த் தன்வண்ணமாக்குதற் குரித்தாகாது) அவ்விரும்பின்கண் உடன் ரேன்றி நிற்குங் கறைமாத்திரங்கெடச் செய்யும் அதுபோல இறைவனும் உயிரைத் தன்வண்ணமாகச் செய்து (தன் வண்ணமாக்குதற் குரித்தாகாது அவ்வுயி ரின்கண் உடன்ரேன்றிநிற்கு) மலமாத்திரங்கெடச் செய்யு மாகலாற் (பொன்றுகை முத்தியாகாமை பற்றி ஒன்றுதற் கிழுக்கில்லை).—அப்பு அணைந்த உப்பே போல் விரும்பி அமலன் அணைந்து – நீரோடு சேர்ந்தவுப்புத் (தன்சுவை முழுதும் அந்நீர்க்காக்கித் தன்னைடொப்பச் சமன்செய்து நிற்கும் அது) போலவிரும்பி (உயிரைச்சேர்ந்த) விறைவ னும் தனக்குரிய எண்குணங்களையும் அவ்வுயிரின்கட் பதிப்பித்துத் தன்னைடொப்பச்செய்து நிற்பனகலான் (நீரொடுநீர் சேர்ந்தாற்போ லல்லாமைபற்றிச் சிவசம

மாதற்கிழுக்கில்லை).—குளிகை (மேளித்துப்) பொன்னினை ஒளிப்பதுபோல் தான் எல்லாம் மேளித்து வேதிப்பானுகி அடக்கி – இரதகுளிகை (செம்பையுருக்கித்) தன்னேடு கூட்டி (வேதித்துப் பொன்னுகச்செய்தும்) பொன்னியல் பைக் காட்டாது தன்னுளடக்கி நிற்குமாறுபோல இறை வன் (உயிரை) அவ்வாறெல்லாஞ் செய்தும் (அதனியல்பு சிறிதுந் தோன்றுது அறிவிறந்து நிற்குமாறு) தனது வியா பகத்து ளடக்கிநிற்கு மாகலான் (அப்படிணைந்தவுப்புப்போ லவினைத் தொப்பச்செய்தமைபற்றி உம்பர் பிராளெருவனே யுற்பத்தியாதிகளுக் குரியனுதற் கிழுக்கில்லை).—கரும் பைத் தேனைப் பாலைக் கனியமுதைக் கண்டைக் கட்டி யைக் கலந்தே ஒத்து (அமலன்) அந்தமுத்தியினில் இருப் பன் – கருப்பஞ்சாறு தேன் பால் கனி யிரதம் கற்கண்டு சருக்கரை முதலிய சுவைப்பொருளெல்லாம் ஒன்றுகக் கலந்தவழி (யுளதாகிய சுவை இவ்வியல்பிற்றெனப் பிரித் தறியவாராமைபோல) இறைவனும் பரமுத்தியில் (உயிரின் கண் அங்ஙனங் கலந்தவழி இவ்வியல்பிற்றெனப் பிரித்தறிய வாராத ஆனந்தசொரூபமாய்) நிற்பனுகலான் (அறிவிறந்து நிற்றல்பற்றி உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு மூரித்தாதற் கிழுக்கில்லை) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *காந்தம் விகாரமின்றிநின்றே இரும்பை வலிப் பவுங்கண்டாம்; அதுபோல இறைவனும் விகாரமின்றியே உயிரைத்தன்வழிப்படுத்து நிற்பனுகலாற் சென்றணையுநிழல் போலச் சிவனில்லாமைபற்றிச் சிவன் நிருவிகாரியாதற் கிழுக் கில்லை. வரி இரும்பைக் கெடுத்தலின்றித் தன்வண்ணமாக்கித்*

தன்வண்ணமாக்குதற்குரித்தாகாது இவ்விரும்பின்கணுடன் றேன்றிநிற்குங் கறைமாத்திரங் கெடச் செய்யும்; அதுபோல இறைவனும் உயிரைத் தன்வண்ணமாகச் செய்து தன்வண்ண மாக்குதற் குரித்தாகாது அவ்வுயிரின்கண்ணுடன்றேன்றி நிற்கு மலமாத்திரங் கெடச் செய்யுமாகலால், பொன்றுகை முத்தியாகாமைபற்றியொன்றுதற் கிழுக்கில்லை. நீரோடு சேர்ந் தவுப்புத்தன் சுவைமுழுவதுமங் நீர்க்காக்கித் தன்னெடொப் பச்சமஞ் செய்து நிற்கும். அதுபோல உயிரைச் சேர்ந்தவிறை வனுந்தனக்குரிய எண்குணங்களையும் அவ்வுயிரின்கட்பதிப் பித்துத்தன்னெடொப்பச் செய்துநிற்பனாகலான், நீரொடுநீர் சேர்ந்தாற்போ லல்லாமைபற்றிச்சிவசமமாதற் கிழுக்கில்லை. இரத குளிகை செம்பையுருக்கித் தன்னெடு கூட்டி வேதித் துப் பொன்னாகச்செய்தும் பொன்னியல்பைக் காட்டாது தன்னு ளடக்கி நிற்குமாறுபோல, இறைவன் உயிரையவ் வாறெல்லாஞ் செய்தும் அதனியல்பு சிறிதுந் தோன்று தறி விறந்து நிற்குமாறு தனது வியாபகத்துளடக்கி நிற்குமா கலான், அப்பணிந்தவுப்பே போலணிந்து ஒப்பச் செய்தமை பற்றி உம்பர் பிராரெருவனே உற்பத்தியாதிகளுக் குரியனு தற் கிழுக்கில்லை. கருப்பஞ்சாறு முதலிய சுவைப்பொருளெல் லாம் ஒன்றாகக் கலந்தவழியுளதாகிய சுவை இவ்வியல்பிற் றெனப் பிரித்தறிய வாராமைபோல, இறைவனுமுயிரின்க ணங்ஙனங் கலந்தவழி இவ்வியல்பிற்றெனப் பிரித்தறிய வாராது ஆனந்த சொரூபமாய் நிற்பன் ஆகலான் அறிவிறந்து நிற்றல்பற்றி உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு மூரித்தாதற்கு இழுக்கில்லையென்பதாம்.

சென்றணையு நிழல்போலச் சிவனிற்பனென்பது முதலாகக் கூறுமவ் வாதிகளை மேலேமறுத்தவழி அவர் கூறுமாசங்கைகளை

முறையேபரிகரித்துச் சித்தாந்தம் வலியுறுத்தற்பொருட்டு, இங்ஙனம் வெவ்வேறுவமைகளின் வைத்துக்காட்டி ஒருங்கு கூறியவாறு.

மலாடிக்கீழ்வைப்பனெனவும், பாதநிழற்கீழ் நிற்கவெனவும் ஏகஞ்கிங்கின்றிடவெனவும், அான் மலாடிக்கீழிருப்பனெனவுங் கூறிய இந் நான்கு சூத்திரங்கட்குந் தம்முட் பொருள்வேற்றுமை யில்லை போலுமென மயங்காமைப்பொருட்டு இறுதிக்கண்ணவற்றைத் தொகுத்தெடுத்துக்கொண்டு சிவரூபமுதலிய நான்காக வகுத்து வைத்துணர்த்தியவாறுமாம்.

நின்மல சாக்கிர முதலிய ஐந்தவத்தையுந் தெரித்துக்கூறிய வாறென்றலுமொன்று.

மதங்கத்துட் கூறப்படு மெழுவகை முத்திகளே வகுத்துக் கூறியதென் றுரைப்பாருமுளர்.

இத்தரும்பிந்தனமெனவும் ஆகியடக்கியெனவும் கலந்தொத் தெனவு மியையும்.

இத்தென்புழி அன்சாரியையும் இல்லுருபும் விகாரத்தாற் றொக்கன.

அனலா னழிக்கப்படுத லொப்புமைபற்றி இரும்பின் கறையை இந்தனமாக வுருவகஞ்செய்தார்.

அணைந்தெனக்காரியத்தைக் காரணமாக வுபசரித்தார்.

மேளித்தல் கூட்டுதல்.

ஆகியுமெனச் சிறப்பும்மை விரித்துரைக்க.

கலந்தவழியென்பது கலந்தென்த் திரிந்துநின்றது.

அரும்பித்திந்தனத்தை அனலழிப்பதுபோலென்பதற்கு இவ் வாறுரைக்க வறியாது விறகின்மேல்வைத்து உரைப்பாருமுளர்; விறகை யழித்தற்கட்படும் விசேடமின்மையானும், ஏனையபோல உயிரோ டியைபுடைத்தாதற்குரிய வுவமையன்மையானும், அரும்

பித்தென வொருசொல்லின்மையானும், அவ்வுரை போலியென் றுரழிக. அல்லதூஉம், தீ இரும்பைச்செய்வதுபோற் சிவன்றன் னைப் பந்தனையை யறுத்துத்தானுக்கியென அறுத்தல் ஆக்குத லிசண்டும் இரும்பின்மேல்வைத்தே மேற்கூறிய வாசிரியர்க்கு, ஈண்டுமதுவே கருத்தாதலுணர்ந்துகொள்க.

மேளித்துத்தானெல்லாம் வேதிப்பானுகியென்றதனை அடக்கி யென்பதனெடியையாது வேறுவைத்துரைப்பின், ஏனையவற்றிற் கெல்லாம் உவமைதனித்தனி யெடுத்துக்காட்டி இது மாத்திரைக் குவமை கூறுமை குன்றக்கூறலாய் முடியுமென்றுரழிக.

இவையைந்துசெய்யுளானும் இரண்டாங்கூற்றிற்கு அவ்வம் மதம் பற்றிநிகழுமாசங்கைகளைப் பரிகரிக்குமுகத்தாற் சித்தாந்தங் கூறப்பட்டது. (12)

பதினெராஞ்சூத்திரமுடிந்தது.

ஆகத்திருவிருத்தம் - 321.



ஓ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் சுபக்கம்

பயனியல்

பன்னிரண்டாஞ்சூத்திரம்

திருவிருத்தம் — 7.

பன்னிரண்டாஞ்சூத்திரம்

இவ்வாறு பத்தாஞ்சூத்திரத்தானும் பதினொராஞ்சூத்திரத்தானும் முறையே பாசநீக்கமுஞ் சிவப்பேறுமாகிய பயன்பெற்றூர்க்குச் சீவன் முத்திநிலைக்க ணிகழுமியல்பு வகுத்துக் கூறுதற்கெழுந்தது பன்னிரண்டாஞ்சூத்திரம்.

செங்கமலத் தாளிணைகள் சேர லொட்டாத்
திரிமலங்க ளறுத்தீச னேசரொடுஞ் செறிந்திட்
டங்கவர்தந் திருவேட மாலயங்க ளெல்லா
மரனெனவே தொழுதிறைஞ்சி யாடிப் பாடி
யெங்குமியா மொருவர்க்கு மெளியோ மல்லோம்
யாவர்க்கு மேலாஞ் மென்றிறுமாப் பெய்தித்
திங்கண்முடி யாரடியா ரடியோ மென்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடை யோரே.

சுப் — பதவுரை

செங்கமலத் தாள் இணைகள் சேரல் ஒட்டாத் திரிமலங்கள் அறுத்து – செந்தாமரை மலர்போலுந் திருவடிகளை அணையவொட்டார் (துஅயர்த்தலைச் செய்விக்கும் பற்றறக் கழிந்த) மும்மலங்கள் (விளக்கற்றம்பார்க்கும் இருள்போல அறிவற்றம்பார்த்து நிற்பனவாகலான் அவற்றை யஞ்சிப்) பரிகரித்து,—ஈசன் நேசரொடும் செறிந்திட்டு – (பரிகரித்தற்குத் துணையாகிய) சிவபிரானுடைய மெய்யன்பரோடு பயின்று,—அங்கு அவர்தம் திருவேடம் ஆலயங்கள் எல்லாம் அரனெனவே தொழுது இறைஞ்சி ஆடிப் பாடி – (அப்பயிற்சி நிலைபெறும்படி)

அவரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் அரனெனக் கண்டு வழிபாடியற்றி (ஆனந்தமேலீட்டால்) ஆடல் பாடல்களைச் செய்து,—எங்கும் ஒருவர்க்கும் யாம் எளியோம் அல்லோம் யாவர்க்கும் மேலானேமென்று இறுமாப்பு எய்தி – (இப்பேறு பெறமாட்டாரது சிறுமையை நோக்கி) எவ்விடத்துமுள்ள ஒருவர்க்கும் யாம் எளிய ராதலின்றி (த் திருவடியைத் தலைக்கூடப்பெற்றமையான்) யாவர்க்கு மேலானேமெனக் களித்து, — திங்கள் முடியார் அடியார் அடியோமென்று திரிந்திடுவர் – பிறையினை யணிந்த திருமுடியையுடைய சிவபிரான் றிருவடியைத் தலைக்கூடப்பெற்ரு (ரது பெருமையை நோக்கி அவ) ர்க்கடிமையென வாழ்வர், — சிவஞானச் செய்தியுடையோரே – (இச்செய்கையை இயல்பாகவுடையார்) சீவன்முத்தர் என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. பற்றறக் கழிந்த மும்மலங்கள், விளக்கற்றம் பார்க்கு மிருள்போல, அறிவற்றம் பார்த்து நிற்பனவாகலான், அவற்றை யஞ்சிப்பரிகரித்தலும், பரிகரித்தற்குத் துணையாகிய மெய்யன்பொடு பயிறலும், பயிற்சி நிலைபெறும்படி அவரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் அரனெனைக் கண்டு வழிபடுதலுமுடையராய், இப்பேறு பெறமாட்டாரது சிறுமையும் பெற்ரூரது பெருமையும் நோக்கிக் களித்து வாழ்தல், சீவன்முத்தர்க்குரிய வியல்பென்பதாம்.

ஒட்டாவென்னும் பெயரெச்சமறை ஏதப்பெயர்கொண்டு முடிந்தது.

இச்செய்யுள் முதனூல் பன்னிரண்டாஞ் சூத்திரம்போல முக்கூற்றதாமாறு கண்டுகொள்க. (1)

இரண்டாமதிகரணம்

ஈசனுக்கன் பில்லா ரடியவர்க்கன் பில்லா
ரெவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்குமன் பில்லார்
பேசுவதென் னறிவில்லாப் பிணங்களோநா மிணங்கிற்
பிறப்பினிலு மிறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ
யாசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட்
டவர்களும முன்களும மாகச் செய்து
கூகிமொழிந் தருண்ஞானக் குகியி னின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே.

சுப் — பதவுரை

(காமுகனுவாளொருவன் ஒரு வனிதையிடத்து அன்பு டையனென்பது அவளொக்கலைக் கண்டுழி நிகழும் அன் பினளவுபற்றியே தெளியப்படும் அதுபோல ஈசனுக்கன் புடைமைஅவனடியவரைக் கண்டுழி நிகழும் அன்பினளவு பற்றியே தெளியப்படுமாகலான்) அடியவர்க்கு அன்பு இல்லார் ஈசனுக்கு அன்பு இல்லார் – அடியவர்மாட் டன் பில்லாதார் ஈசன்மாட்டும் அன்பில்லாதாரே (அங்ஙனம் ஈசனுக் கன்புடையார்போல் ஒழுகுதல் நாடகமாத்திரை யே பிறிதில்லை).—எவ்வுயிர்க்கும் அன்பு இல்லார் – (எவ் வுயிர்க்கண்ணுமூளனாகிய ஈசனிடத் தன்புடையார்க்கே அத்தொடர்பு பற்றி எவ்வுயிர்க்கு மன்புடையராதல் கூடும் அங்ஙனம் ஈசனிடத் தன்பில்வழி)எவ்வுயிர்க்கு மன்பில்லா தாரேயாவர்,—தமக்கும் அன்பு இல்லார் நாம் பேசுவது என் – (இவ்விடங்களின் அன்பில்லாதார்) தம்முயிர்க்கு உறுதிசெய்து கொள்ளுவாரல்லராகலின் (அதனை) நாஞ்

சொல்லுவதென்னே (கழிகாமத்தராயினர்க்கு அத்தொடர் புடையார தினக்கம் அக்காமப்பைங்கூழை வளர்க்கு நீரா தல்பற்றி அதன்கட் கழிபேருவகை யாமாறுபோல).—நீ அரன் அடியார் அடியாரை அடைந்திட்டு அவர்கருமம் உன்கருமமாக அருண்ஞானக் குறியில் நின்று ஆ சை யொடும் செய்து—(மாறுத சி வா நு பவ மருவிக்கொண்டு அரன்மலரடிக்கீழிருக்கப்பெற்ற) நீ (அதனே வ ள ர் க் கு நீர்மையராகிய) அத்தொடர்புடையாரோ டிணங்கி அவர் ப ணி யை உன்பணியாகவே தற்போத முனேத்தலின்றி உவகை மிகுதியுடன் செய்து காமுகரல்லாதா ரிணக்கம் அக்காமப் பைங்கூழைப் பாறச்செய்யுங் கனியாதல்பற்றி அதன்கண் வெறுப்பு மிகுதியாமாறுபோல).—அ றி வி ல் லாப்பிணங்கனே இணங்கில் பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடு - (அச்சிவாநுபவத்தைக் கெ டு க் கு நீர்மையராகிய) அறிவில்லாப் பி ண ம் போன்றவரோடு இணங்கிற் பிறப்பிறப்பிற்படுத்துவராதலின் (அ த ன் க ண் வெறுப்பு மிகுதியால் அதனே) விட்டுநீங்கி,—கூசிமொழிந்து - (அடியாரதுயர்வும் உனதிழிவுநோக்கிக்)கூசி நயமொழி கூறி,—கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே—(உவ கைமிகுதியாற்) கும்பிட்டுக் கைகொட்டிக் கூத்துமாடித் திரிவாயாக என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. *கழிகாமத்தராயினர்க்கு, அத்தொடர்புடை யாரதிணக்கம் அக்காமப்பைங்கூழை வளர்க்கு நீராதல்பற்றி அதன்கட் கழிபேருவகையும், அல்லாரதிணக்கம் அதனேப் பாறச்செய்யுங் கனியாதல்பற்றி அதன்கண் வெறுப்புமிகுதி யும், உளவாமாறுபோல, மாறுத சிவாநுபவ மருவிக்கொண்டு*

அரன்மலரடிக்கீ ழிருக்கப்பெற்றார்க்கு, அதனீ வளர்க்கு நீர்மையராகிய வத்தொடர்புடையாரோ டிணங்குதற்கண் உவகை மிகுதியும், அதனைக் கெடுக்கு நீர்மையராகிய பிற ரோடிணங்குதற்கண் வெறுப்புமிகுதியும், இயல்பா னுளவா மென்பதாம்.

விதிமுகத்தாற் கூறினார், சுவைப்பொருட் டுண்ணப்படும்பால் மருந்துமாமாறு போலச் சாதனமு மாமாறுணர்த்துதற்கு. முன் வருவனவற்றிற்கு மிஃதொக்கும்.

காமுகனுவானொருவன் ஒருவனிதையிடத் தன்புடையனென் பது, அவளொக்கலைக் கண்டுழி நிகழுமன்பினளவுபற்றியே தெளி யப்படும்; அதுபோல ஈசனுக்கன்புடைமை அவனடியவரைக் கண் டுழி நிகழுமன்பினளவு பற்றியே தெளியப்படுமாகலான், அடியவர்க் கன்பில்வழி ஈசனுக்கன்புடையார் போலொழுகுதல் நாடகமாத்தி ரையே பிறிதில்லை யென்பார், அடியவர்க்கன்பில்லாரீசனுக் கன் பில்லாரென்றும், எவ்வுயிர்க்கண்ணு முளனாகிய வீசனிடத்து அன் புடையார்க்கே அத்தொடர்புபற்றி எவ்வுயிர்க்கு மன்புடையாதல் கூடுமென்பார், ஈசனுக்கன்பில்லா ரெவ்வுயிர்க்கு மன்பில்லாரென் றும், இவ்விடங்களிலன்பில்லாதார் தம்முயிர்க்குறுதி செய்து கொள்ளுவா ரல்லரென்பார், தமக்குமன்பில்லாரென்றுங்கூறினார். ''அன்பிலா ரெல்லாந் தமக்குரியர்'' (திருக்குறள், அன்புடைமை, செ - 2.) என்புழித் தம்மென்றது உடம்பைநோக்கியாகலின், அஃ தீண்டைக்கு முரணுமையறிக. இதனைநிர்மறைமுகத்தால் அடிய வர்க்கன்புடையாரது பெருமையுங் கண்டுகொள்க. அவர்கரும முன் கருமமாகச் செய்தலுந் தற்போத முனைத்து நின்று செய்யிற் குற் றமாமென்பார், அருண்ஞானக் குறியினென்றார்.

கூசுதல் அவருயர்வுந் தன்னிழிபும் நோக்கிநிகழ்வது.

கும்பிடுதலுங் தட்டமிடுதலுங் கூத்தாடுதலும் உவகைமிகுதி யினிகழுமெய்ப்பாடு.

இதனுனே இரண்டாங் கூறு தெரித்துணர்த்தப்பட்டது.

முதற்கூறு செங்கமலத்தாளிணைகள் சேரலொட்டாத் திரி மலங்களென ஆண்டே யுடம்பொடு புணர்த்தோதி வலியுறுத்தமை யின், வேறு கூறிற்றிலர். (2)

மூன்றுமதிகரணம்

அறிவரியான் றனையறிய யாக்கை யாக்கி
யங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத் தருளாற்
செறிதலினைற் றிருவேடஞ் சிவனுருவே யாகுஞ்
சிவோகம்பா விக்குமத்தாற் சிவனு மாவர்
குறியதனு லிதயத்தே யரனைக் கூடுங்
கொள்கையினு லரனுவர் குறியொடுதா மழியு
நெறியதனுற் சிவமேயாய் நின்றிடுவ ரென்று
னேசத்தாற் றெழுதிடுநீ பாசத்தார் விடவே.

சுப — பதவுரை

அறிவுஅரியான் – அசிந்திதனுய் நின்ற பரம்பொருள்,— தனைஅறிய–(உலகத்துள்ளார்)தன்னை அறிதற்பொருட்டு,— யாக்கை ஆக்கி – திருநீறு கண்டிகைமுதலிய திருவேட மாகிய தனது வடிவத்தைத் தன்னன்பர்க்கு அளித்து,— அங்கு அங்கே உயிர்க்கு உயிராய் அறிவு கொடுத்து - யாங்

கணும் உயிர்க்குயிராய் அறிவினை விளக்கி,—அருளாற் செறிதலினால் – அருளாற்கலத்தலானும்,—திருவேடம் சிவன் உருவே ஆகும் – அத்திருவேடமுடைய மெய்யன்பர் சிவமேயாதல் தெளியக்கிடத்தலின்,—சிவோகம் பாவிக்குமத்தால் – சிவோகம் பாவனையானும்,–சிவனும் ஆவர்–சிவமேயாதல் தெளியக்கிடத்தலின்,—இதயத்தே குறியதனால் அரனைக் கூடுங்கொள்கையினால் – இருதயத்தானத்தில் ஒரு குறியின்கண் வைத்து முதல்வனைக்கூடுஞ் செயலானும்,—அரன் ஆவர்–சிவமேயாதல் தெளியக்கிடத்தலின்,– குறியொடு தாம் அழியும் நெறியதனால் – குறியுடனே தாமென்பதொன்று இன்றுகிய தன்மையானும்,—சிவமேயாய் நின்றிடுவர் என்றால் நேசத்தால் நீதொழுதிடு-சிவமேயாதல் தெளியக்கிடத்தலின் (அதுபற்றி அவரை அரனெனவே தேறி) அன்பொடு நீ வழிபடுக,–பாசத்தார் விடவே–ஏனைப் பாசப்பற்றுடையாரது பற்று விட்டொழிதற் பொருட்டு என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. *வேடத்தானும் பாவனையானுஞ் செயலானுந் தன்மையானுந் திருவேடமுடைய மெய்யன்பர் சிவமேயாதல் தெளியக்கிடத்தலின், அதுபற்றி யவரை அரனெனவே தேறி வழிபடுக, ஏனைய பாசப்பற்றுடையாரது பற்று விட்டொழிதற்பொருட்டென்பதாம்.*

சிவமாதல் தெளிந்துகோடற்குவேடமுதலியவற்றுளொன்றே யமையுமென்பார், சிவமாதலை யவற்றோடு தனித்தனி கூட்டிக் கூறினர்.

அவ்வேடமுடையாரென் றெடுத்துக்கொண்டுரைக்க.

பாசத்தார் ஆகுபெயர். (3)

திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே
யுருக்கோலி மந்திரத்தா லெனநினையு மவர்க்கு
முளனெங்கு மிலனிங்கு முளனென் பார்க்கும்
விருப்பாய வடிவாகி யிந்தனத்தி னெரிபோன்
மந்திரத்தில் வந்துதித்து மிகுஞ்சுரபிக் கெங்கு
முருக்காண வொண்ணுத பான்முலைப்பால் விம்மி
பொழுகுவது போல்வெளிப்பட் டருளுவனன் பார்க்கே.

சுப —பதவுரை

திருக்கோயிலுள் இருக்கும் திருமேனி தன்னையே – (பகுத்துணர்தலின்றித்) திருவாலயத்துள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்க முதலிய திருமேனிகளையே,—சிவனெனக் கண்டவருக்கு – சிவமெனக்கண்டு வழிபடுஞ்சரியையாளர்க்கு,—சிவன் அங்கே உறைவன் – சிவபிரான் ஆண்டு வெளிப்படாது நின்று அருள்செய்வன்,—மந்திரத்தால் உருக்கோலியெனை நினையுமவர்க்கும் – (அருவப்பொருளாகிய சிவபிரான்) ஈசானதிமந்திரங்களாற் சிவலிங்கமுதலிய திருவுருக்கோலினை னெனக்கருதி(மந்திரநியாசத்தால்) வழிபடுங் கிரியையாளர்க்கும்,—உளன் எங்கும் இலன் இங்கும் உளன் என்பார்க்கும் - (யோகிகள்) உள்ளமெங்கணும் இல்லமாக வாழுஞ்சிவபிரான் இத்திருமேனியிலும் வீற்றிருந்து பூசைகொண்டருளுவ னெனக்கருதி (ச் சாத்தியமந்திரங்களால்) வழிபடும் யோகிகட்கும்,—இந்தனத்தின் எரிபோல் மந்திரத்தில் விருப்பாய வடிவாகி (அங்கே) வந்து உதித்தும் – (முறையே) விறகைக் கடைந்தவழித்தோன்றும் எரி (யும் கறந்தவழித்தோன்றும்பாலும்)போல் அவ்வம்மந்திரங்களால் அவரவர் விரும்பியவடிவாய் அத்

திருமேனிகளில் (அப்போதப்போது) தோன்றி நின்று அருள்செய்வன்,—அன்பர்க்கே – (அவர்போல் ஏகதேச மாய்க் குறித்தலின்றி அன்பு மாத்திரையான் ஆண்டுவழி படு) ஞானிகட்கு,—மிகும் உரு எங்கும் காண ஒண்ணுத பால் சுரபிக்கு முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல் (அங்கே) வெளிப்பட்டு அருளுவன் - மேம்பட்ட வடிவ மெங்கணுங் காணப்படாதபால் (கன்றை நினைந்த) புனிற் றுவின்முலையின் விம்மியொழுகுவதுபோல (க்கருணை மிகுதியால் அவ்வன்பேதானுய் எப்போதும்) ஆண்டு வெளிப்பட்டு நின்று அருள்செய்வன் (ஆகலான் அஃ தறிந்து வழிபடுக) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து பகுத்துணர்தலின்றிச் சிவலிங்கமுதலிய திரு மேனியே சிவமெனக் கண்டு வழிபடுஞ் சரியையாளர்க்குச் சிவன் ஆண்டுவெளிப்படாது நின்று அருள்செய்வன். அருவப்பொருளாகிய சிவன் ஈசானாதி மந்திரங்களாற் சிவ லிங்கமுதலிய திருவுருக் கோலினெனக் கருதி மந்திர நியாசத்தால் வழிபடுங் கிரியையாளர்க்கும், யோகிகளுள்ள மெங்கணு மில்லமாக வாழுஞ் சிவன் இத்திருமேனியிலு மிருந்து பூசைகொண்டருளுவனெனக் கருதிச் சாத்திய மந்திரங்களால் வழிபடும் யோகிகட்கும், கடைந்தவழித் தோன்றுமெரியுங் கறந்தவழித் தோன்றும் பாலும்போல் அவ்வமந்திரங்களா லவரவர் விரும்பிய வடிவாய் அத்திரு மேனிகளில் அப்போதப்போது தோன்றிநின்று அருள்செய் வன். அவர்போலேகதேசமாய்க் குறித்தலின்றி அன்புமாத் திரையா ணண்டு வழிபடு ஞானிகட்கு, கன்றை நினைந்த புனிற்றுவின் முலைப்பால்போல, கருணைமிகுதியால் அவ்

வன்பே தானுப் எப்போது மாண்டு வெளிப்பட்டுநின்று அருள்செய்வன்; ஆகலான் அஃதறிந்து வழிபடுகவென்பதாம்.

ஆகலானஃதறிந்துவழிபடுக வென்பது குறிப்பெச்சம்.

அங்கேயென்பது யாண்டுஞ் சென்றியையும். மந்திரத்தால் உருக்கோலியெனமாறுக. கோலியென்பது பெயர்.

உளன் உள்ளம்.

இலனென்பது இல்லெனு மிடப்பெயரடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.

இங்குமென்னுமும்மை இறந்தது தழீஇயிற்று.

அன்பர்க்கு விம்மி யொழுகுவது போலெனவே யோகிகட்குக் கறக்க வொழுகும் பால்போலென்பது பெறப்பட்டது.

அன்பரென்றது ஈண்டு ஞானிகண்மேற்று, "அன்பரொடு மரீஇ" (சிவஞானபோதம், பன்னிரண்டாஞ்சூத்திரம்) என்புழிப் போல.

திருவேடஞ் சிவனெனத் தெளியுமாறு தொழப்படுவாரது கருத்துவகைபற்றிக் கூறினர், சிவாலயத்தைச் சிவனெனத் தெளியுமாறு தொழுவாரதகருத்துவகைபற்றிக் கூறினரென வுணர்க. (4)

ஞானயோ கக்கிரியா சரியை நான்கு
நாதன்றன் பணிஞானி நாலினுக்கு மூரிய
ஞானமிலா யோகமுதன் மூன்றினுக்கு மூரியன்
யோகிகிரி யாவான்ரு ணெண்கிரியை யாதி
யானவிரண் டினுக்குரியன் சரியையினி னின்ரே
னச்சரியைக் கேயுரிய ரகலினுல் யார்க்கு
மீனமிலா ஞானகுரு வேகுருவு மிவனே
யீசனிவன் ரனென்று மிறைஞ்சி யேத்தே.

(மேலைச்செய்யுளிற்கூறிய நால்வகைக்கருத்தும் அவரவர் மாத்திரைக்கே உரித்தாயிருக்கச் சரியையாளரைப்போல ஞானிவழிபடுதல் எற்றுக் கெனின்) ஞானயோகக் கிரியா சரியை நான்கும் நாதன்றன்பணி – ஞானயோகக் கிரியா சரியையென்னும் நான்கு பாதத்தினிகழுங் கிரியையெல்லாங் கருத்தாவினது உண்மைப்பணியாகலான் (உலகின் மருவாத இன்பத்துள்வைத்த குருவினுபகாரத்தைக் கருதி நால்வகைத் தொழிலும் ஞானிசெய்தலே கடப்பாடென்பது உட்டொழில் செய்வார் புறத்தொழிற்கு முரியரென்னு முறைமைபற்றி),—ஞானி நாலினுக்கும் உரியன்– அந்தஞானி ஞானமுதல் நான்கினுக்கு முரியனென்றும் (ஏனையோர் தத்தந்தொழிற்கே யுரியரென்பது புறத்தொழில்செய்வார் உட்டொழிற்குரியரல்ல ரென்னு முறைமைபற்றி),–யோகி ஊனம் இலா யோகமுதல் மூன்றினுக்கும் உரியன் – யோகி குற்றமில்லாத யோகமுதல் மூன்றினுக்கு முரியனென்றும்,—கிரியாவான்ருன் ஒண்கிரியை ஆதி ஆன இரண்டினுக்கு உரியன் – கிரியாவான் ஒள்ளிய கிரியை முதலிய இரண்டினுக்கு முரியனென்றும்,—சரியையினில் நின்ருேன் அச்சரியைக்கே உரியன் – சரியாவான் அச்சரியையொன்றிற்கே யுரியனென்றும் (உணர்ந்து கொள்ளப்படுவன),—ஆகலினுல் யார்க்கும் ஈனம் இலா ஞானகுருவே குருவும் – ஆகலினுல் (இனி அந்நால்வகைப் பாதத்தினிற்கு மாணக்கர்க்கு ஆசிரியன்மார் உபதேசித்தற்கட்படும் உரிமையும் இவ்வாறே வைத்துணர்ந்து) எல்லார்க்கும் (உபதேசித்தற்குரிய) குறைவில்லாத ஞானகுருவே தலையாயகுருவென்றும்,—ஈசனிவன்ருன் இவனே என்றும் இறைஞ்சி ஏத்தே–ஈ(ண்டுக்கூறிய)தாபர(சங்கம)ங்களும் இக்குருவடிவின் வேறல்லவென்றுந் (தேறி அவ்விரண்டினும்) வழிபடுக என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. மேலைச் செய்யுளிற் கூறிய நால்வகைக்கருத்தும் அவரவர் மாத்திரைக்கே யுரித்தாயிருக்கச் சரியையாளரைப் போல ஞானி வழிபடுத லெற்றுக்கெனின்,—நாலுபாதத்தி னிகழுங் கிரியையெல்லாங் கத்தாவின தண்மைப்பணியாக லால், உலகின் மருவாதவின்பத்துள் வைத்த குருவினுப காரத்தைக் கருதி நால்வகைத் தொழிலும் ஞானி செய்தலே கடப்பாடென்பது உட்டொழில் செய்வார் புறத்தொழிற்கு முரியரென்னு முறைபற்றியும், ஏனையோர் தத்தந்தொழிற்கே யுரியரென்பது புறத்தொழில் செய்வார் உட்டொழிற் குரிய ரல்லரென்னு முறைபற்றியு முணர்ந்துகொள்ளப்படுவன. இனி யந்நால்வகைப் பாதத்தினிற்கு மாணக்கர்க்கு ஆசிரி யன்மார் உபதேசித்தற்கட்படு முரிமையும் இவ்வாறே வைத் துணர்ந்து, எல்லார்க்குமுபதேசித்தற்குரிய ஞானகுருவே தலையாய குருவென்றும், ஈண்டுக் கூறிய தாபரசங்கமங்களும் இக்குருவடிவின் வேறல்லவென்றுந் தேறி, அவ்விரண்டினும் வழிபடுகவென்பதாம்.

மேற்கூறிய நால்வகைக் கருத்துக்கு முரியராவாரைக் கூறு வார், அவற்றை யுள்ளடக்கி நிற்கும் ஞானமுதலியவற்றை யுடையாரது இயல்பின்மேல்வைத்துக் கூறினர்.

சொற்பல்காது மாட்டேற்றின்மேல் வைத்துணர்ந்துகோடற் பொருட்டு, ஆகலினுலிறைஞ்சியேத்தே யென்பதனையும் ஈண்டுடன் கூறினர்.

திருவேடமாலயங்களெல்லா மானனவே தொழுதிறைஞ் சுதற்கட்படும் விசேடங்கூறியவாறு.

ஈசனிவனென்புழி இவனென்பது பகுதிப்பொருள் விகுதி. ஈண்டு ஈசனென்றது திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனியை.

என்றுமென்னு மும்மையை எதிராததழீஇயிற்றுக்கித் திரு வேடமுமிவனேயென் றிறைஞ்சி யேத்தெனவு முரைத்துக் கொள்க.

இவை மூன்றுசெய்யுளானும் மூன்றுங்கூறுதெரித்துணர்த்தி வலியுறுத்தப்பட்டது. (5)

மந்திரத்தான் மருந்துகளால் வாய்த்தவியோ கத்தான்
மணியிரத குளிகையினுன் மற்று மற்றுந்
தந்திரத்தே சொன்னமுறை செய்ய வேத
சகலகலே ஞானங்க டிரிகால ஞான
மந்தமிலா வணிமாதி ஞானங்க ளெல்லா
மடைந்திடுமா சானருளா லடிசேர் ஞானம்
வந்திடுமற் றொன்றலும் வாரா தாகு
மற்றவையு மவனருளான் மருவு மன்றே.

சுப் — பதவுரை

மந்திரத்தால் – மந்திரங்களாலும்,—மருந்துகளால் – மருந்துகளாலும்,—வாய்த்த யோகத்தால் – சிறந்தயோகத் தாலும்,—மணி இரத குளிகையினுல் – மணியாகிய இரச குளிகையினுலும்,—மற்றும் மற்றும் தந்திரத்தே சொன்ன முறைசெய்ய - வேறுவேறு சாத்திரங்களிலே கூறியபடி செய்தலாலும் (வருஞ்சித்திஞானங்களும்),— வேதம் சகலகலைஞானங்கள்–வேதாகமமுதலிய கலை ஞானங் களும்,—திரிகாலஞானம் – திரிகாலஞானங்களும்,—அந் தம் இலா அணிமாதிஞானங்கள் எல்லாம் – முடிவில்லாத

அணிமாமுதலிய ஞானங்களுமாகிய அனைத்தும்,—அடைந்திடும் – (ஆசிரியனையின்றியும்) அமையும்,—அடிசேர் ஞானம் ஆசான் அருளால் வந்திடும் மற்றொன்றாலும் வாராதாகும் – பொருந்திய திருவடிஞானம் ஆசிரியன் அருளான் அமைதலேயன்றி ஒருவாற்றானும் (அவனேயின்றி) அமையப்பெறாது,—அவன் அருளால் மற்றவையும் மருவும் அன்றே–அக்குருவருளால் முற்கூறியனவும் அமையப்பெறும்(ஆகலால் இவனே யீசனிவன்றானென்று மிறைஞ்சி யேத்து) என்க.

சிவ — பொழிப்புரை

எ-து. ஏனைஞானங்களெல்லாம் ஆசிரியனையின்றியுமமையும், திருவடிஞானம் ஒருவாற்றானு மாசிரியனையின்றியமையாது; ஆகலால் இவனேயீசனிவன்றானென்றுமிறைஞ்சியேத்தென்பதாம்.

ஆகலாலிவனேயீசனிவன்றானென்று மிறைஞ்சியேத்தென்பது குறிப்பெச்சம்.

அவ்வாறேத்துதற்குரிய பெருமை கூறியவாறு.

மற்றவையுமவனருளான் மருவுமென்றது இயைபின்மை நீக்குதற் பொருட்டு. (6)

பரம்பிரம மிவனென்றும் பரசிவன்றா னென்றும்
பரஞான மிவனென்றும் பராபரன்றா னென்று
மரன்றருஞ்சீர் நிலையெல்லா மிவனே யென்று
மருட்குருவை வழிபடுவே யவனிவன்றா னேயே

யிரங்கியவா ரணம்யாமை மீனண்டஞ் சினையை
யியல்பிழைடும் பரிசித்து நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமா போற்சிவமே யாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானே.

சுப் — பதவுரை

பரம்பிரமம் இவனென்றும் – சொரூபசிவமுங் குரு மூர்த்தமே யெனவும்,—பரசிவன்ருன் (இவன்)என்றும் – தடத்த சிவமுங் குருமூர்த்தமேயெனவும்,—பரஞானம் இவன் என்றும் – பரஞானத்தை யுடையாருங் குருமூர்த்தமேயெனவும்,—பராபரன்ருன் (இவன்) என்றும் – ஏனைத் தாபரமூர்த்தங்களும் குருமூர்த்தமே யெனவும்,—அரன் தருஞ்சீர் நிலையெல்லாம் இவனே யென்றும் – அறுபத்து மும்மை நாயன்மார் முதலிய சிவபத்தர் பொருட்டாக ஆண்டாண்டு வெளிப்பட்டருளி மறையு மூர்த்தங்களெல் லாங் குரு மூர்த்தமே யெனவுந் (தேறி),—அருட் குருவை வழிபடவே– ஞானசாரியனை (வழிபடுக அங்ஙனம்) வழி படப்பெறின்,—அவன் இவன்ருனையே–சிவபிரான் இக் குருவை யாவேசித்து நின்று,—இரங்கிய வாரணம் யாமை மீன் இவை – இரக்கமுற்ற கோழியாமை மீனுகிய இவை கள்,—அண்டஞ் சினையை இயல்பிழைடும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும் பரிந்து தாமாக்குமா போல் – (முறையே) அண்டமாகிய முட்டையை இயல்பாகத் தீண்டியும் கருதியும் நோக்கியும் பரிவுற்றுத் தம்வண்ண மாகச்செய்யுமாறுபோல,—பரிசித்தும் சிந்தித்தும் பார்த் தும் சிவமே யாக்குந்தானே – (நாடோறுஞ்செய்யும்) பரி சமுதலிய மூன்ருனும் (அவ்வுயிரைத்) தன்வண்ணமாகச் செய்தருளுவன் என்க.

சிவ — பொழிப்புரை

எ–து. சிவபேதமறுத்துங் குருமூர்த்தமேயெனத் தேறி ஞானாசாரியனை வழிபடுக; அங்ஙனம் வழிபடப்பெறின் சிவன் இக்குருவை யாவேஷித்து நின்று நாடோறுஞ்செய்யும் பரிசமுதலிய மூன்றனும் அவ்வுயிரைத் தன்வண்ணமாகச் செய்தருளுவனென்பதாம்.

அவ்வாறேத்தினார்க்கு வரும் பயன் கூறியவாறு.

பரம்பிரமமென்றது சொரூபசிவத்தையெனவும், பரசிவனென்றது தடத்தசிவத்தையெனவும், பராஞானமென்றது ஆகுபெயரான் அதனையுடையாரையெனவும், பராபரனென்றது ஏனைத்தாபர மூர்த்தத்தை யெனவும், அரன்றருஞ்சீர்நிலையென்றது அறுபத்துமூன்மை காயன்மார்முதலிய சிவபத்தர்பொருட்டாக ஆண்டாண்டு வெளிப்பட்டருளி மறையும் மூர்த்தங்கள் எல்லாவற்றினையுமெனவும் கொள்க.

பராஞானமிவனென்றும் பராபரன்றானென்றும் வழிபடுதலதிகாரப்பட்டமையின் ஏனையவுமுடன் கூறினார். (7)

பன்னிரண்டாஞ்சூத்திரமுடிந்தது.

ஆகத்திருவிருத்தம் - 328.

சிவஞானசித்தியார் சுபக்கமுற்றியது.

ஸ்ரீ மெய்கண்டதேவர் திருவடிவாழ்க.

ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

செய்யுள் முதற்குறிப்பகராதி



சிவஞானசித்தியார்

செய்யுள் முதற்குறிப்பகராதி

எண் — பக்கஎண்.

அகலியை	232	அருளது	385
அங்கித்தம்	545	அருளிலுலா	16
அசித்தரு	339	அருளிலுலு	218
அசித்தெனி	332	அவ்வவ	234
அஞ்செழுத்	516	அவ்வுடலு	318
அண்டசஞ்	292	அழிக்தபி	72
அத்துவா	145	அழிப்பீலை	115
அதாதியுட	557	அழிவிலா	426
அதாதியே	41	அளவை	21
அந்தரியா	522	அறிதரு	361
அந்தியமிலா	400	அறிந்திடுமா	376
அயனரி	320	அறிந்திடும்	310
அயன்றனை	150	அறிபொரு	397
அரசனுஞ்	216	அறியாமை	474
அரனடிக்	212	அறிவதைம்	308
அரன்விதி	241	அறிவறியா	588
அரிசனம்	299	அறிவிக்க	411
அருந்தின்பத்	31	அறிவிச்சை	323
அருமறையா	441	அறிவில	365
அருவமோ	117	அறிவுடல்	352
அருவவிகா	331	அறிவுறும்	389
அருவினிலு	98	அறுவகைச்	7
அருவுருவீ	100	அனைத்துஞ்	405
அருவுருவெ	329	அன்னியசா	27

ஆங்கார	253
ஆணவந்தா	560
ஆணேயா	215
ஆணமாக	130
ஆவதா	391
ஆன்மா	322
இங்குதா	207
இதமகித	190
இந்தனத்தி	526
இந்திரிய	537
இந்நிலேதா	482
இம்மையின்	181
இம்மையே	437
இயல்புகா	57
இரந்தாமாகி	261
இரும்பை	575
இருவகை	359
இருவினேச்...கா	182
இருவினே...கள்	369
இருவினேய	228
இருவினேயின்ப	178
இருவினேயெ	180
இவனுலகி	531
இறுதியாங்	112
இறைவகு	448
இறைவனிங்	191
இறைவனே	375
இறைவன்	381
ஈசனுக்க	585
ஈண்டுபக்	43
உடலியா	349
உடலினி	334
உடலின்வே	307
உடல்விடா	223
உடற்செய	186
உணராத	393
உணர்வன	315
உதிப்பது	55
உயிரவை	107
உயிரினே	333
உயிரினேலு	29
உயிரென	305
உருமேனி	144
உருவருள்	132
உருவினி	335
உருவினே	367
உருவுயி	327
உருவொடு	176
உரைதரு	417
உரைத்த	110
உலகமே	383
உலகினிற்	125
உலகினே	134
உலகுடல்	201
உலகெலா	173
உள்ளதமில	63
உள்ளுண	88
எங்குந்தானி	567
எங்குந்தானெ	491
எங்குந்தான்	336
எல்லாமாய்	279
எவ்விடத்து	565
எழுமுடல்	243
என்னுடல்	347
என்னேயிப்	10
எதுமூன்று	36
ஐந்துசாக்	362
ஐந்துசுத்த	265
ஒருகோட்	1
ஒருபுலனுக	297

ஒருபொரு	64	குறிகள்வச்	263
ஒருவனே	164	குறித்தடியி	510
ஒருவலே	53	குறித்ததொன்	129
ஒழுக்கமன்	202	கேட்டலு	460
ஒன்றதாயநேக	281	கேவலசகல	364
ஒன்றதாயிச்சா	156	சகமார்க்கம்	454
ஒன்றென	175	சங்கமந்	229
ஒன்றெனு	401	சத்தசத்	408
ஒன்றே	137	சத்திதன்வடி	154
ஓசைகற்	258	சத்திதாளுத	275
ஓதியுணர்ந்	424	சத்திதான்	153
ஓதுசமய	439	சத்தியாய்	274
ஓரிடமழிய	69	சத்தியுஞ்	167
கண்டபொரு	24	சத்தியேவடி	123
கண்டவிவை	513	சந்திரன்வடிவு	330
கண்டிடுங்	508	சந்நிதிருண	326
கண்டுணர்	354	சலமிலனுய்	540
கண்ணுதல்	140	சன்மார் சகமார்	450
கரணங்க	503	சன்மா சகல	456
கருதுகாரண	78	சாக்கிரத்தே	485
கருவிகழிந்	487	சாக்கிரமுப்	358
கருவியாமன	317	சாந்தியா	430
கருவியாற்	378	சார்பினிற்	61
கருவியும்	380	சாற்றிய	260
கருவினுள	296	சித்தமா	251
கற்றநூற்	106	சித்தாந்தத்	446
காண்டல்வா	26	சிவஞானச்	464
காண்பவன்	209	சிவஞ்சத்திதன்	277
காயத்தினழி	67	சிவஞ்சத்திநாத	273
காயமொழி	551	சிவனருவரு	169
காரணவணு	73	சிவனேயவ	506
காரியகாரண	82	சிவன்சீவ	573
காரியமென்ப	74	சீலமோ	104
காலமேகடவு	70	சீவனுமிச்சா	158
குணங்களே	324	சுத்ததத்துவ	264

சுத்தமாமா	338	தெரிந்து	384
சுத்தமாம்	147	தெரிவரிய	559
சுத்தமெய்ஞ்	409	தேசயிட	481
சூக்குமங	236	தேரிலெருரு	135
சூக்குமதேஹி	342	தோற்பாவைக்	346
சூக்குமவா	90	தோற்றமு	75
சூக்குமவுரு	328	தோற்றுவித்	109
சூரியகாக்தி	469	நண்ணிடு	118
செங்கமல	583	நரர்களாய்	230
செப்பிஞய்	233	நரர்பயிறைய	293
செம்பிரத	571	நற்செவி	255
செயல்களே	194	நாடுகளிற்	543
செய்ங்கிடுங்	194	நாட்டுமித	520
செய்தவர்	198	நாயகன்	139
சென்றணைய	569	நிகழ்ந்திடு	93
சொன்னவித்	113	நிக்கிரகங்	192
ஞாலமதின்	479	நித்தமாயரு	244
ஞானத்தா	466	நியதிபின்	247
ஞானநூறனே	458	நிலம்புன	59
ஞானமேயாண்	160	நெல்லினுக்	562
ஞானயோ	592	பக்கமூன்றின்	33
தத்துவஞ்	395	படைகொடு	357
தத்துவமெண்	268	படைப்பாதி	141
தத்துவரூப	267	பண்டைநற்	12
தந்தைதாய்	193	பந்தமும்	127
தனுகரண	278	பரஞான	554
தன்மமோ	226	பரம்பிரம	596
தன்னியல்	180	பரிதியை	283
தாதமார்க்க	452	பலவிதமா	419
தாபரசங்க	211	பன்னக	225
தானஞ்செ	199	பன்னிறங்	489
தானமியா	463	பாசஞான	499
திரவியமுவ	196	பாசிபடு	494
திருக்கோயி	590	பாலொடு	422
தூலமாமு	239	பாவிப்ப	399

பிணத்தினை	300	மாசறுகா	22
புகையா	38	மாயைதான்	121
புண்ணியமே	476	மாயையிற்	246
புத்திமற்	80	மாயையினுள்	77
புத்திரமார்க்	453	மாயையின்கா	289
புந்தியை	351	மாயையின்வயி	341
புருடனே	355	மாயையே	283
புருடன்றன்	286	மாறியிவ்	235
புறச்சமய	435	மானுடப்பிற	295
புறம்பேயு	524	மிக்கதொரு	471
பூதஞசரீரம்	222	மும்மலகேல்	287
பேறிழவின்	184	முற்செயல்	187
பொறிபுலன்	373	மூவகை	96
பொன்மை	165	மூன்றுதிறத்	432
பொன்னணி	348	மூன்றுபக்	34
போகியா	136	மேலேக்கு	189
போதகாரி	285	மொய்தரு	271
போதகா	39	யாதொரு	206
மண்டனில்	392	யான்செய்தே	535
மண்ணினிற்	102	வண்டுக	231
மண்ணுளே	220	வருங்குண	249
மண்புன	262	வாக்கொடு	256
மந்திரங்க	428	வாயாதி	257
மந்திரத்தா	595	வாழ்வெனு	293
மந்திரமதனி	148	விச்சையி	248
மந்திரமத்து	146	விதிப்படி	238
மருத்துவ	219	வித்தக	119
மருவானந்	343	வித்தைகள்	95
மலமாயை	291	வித்தையின்	429
மலமென	282	வித்தையோ	162
மறைகளீச	213	வித்துவின்	83
மறையிலு	13	வேதசாத்	501
மனமதைச	254	வேதநூல்	444
மனமதினினை	204	வேற்றுமைப்	89
மன்னவன்	415	வைகரி	86

1. அரும்பதமுதலியவற்றின் அகராதி

[எண் – பக்கஎண்]

அகரமும் அன் சாரியையும் விகாரத்தாற்றொக்கது 469
அகறல் – நீங்குதல் 123
அகற்றி பெயர்; கான்கணுருபு விகாரத்தால் தொகல் 205
அங்கம் தலைக்குறை 443
அங்கித்தம்பனை ஔடதமந்திர முடையார் 545
அசத்துச்சீவன்முன்முனைத்து நிற்றல் 409
அசிந்திதன் உரையளவை 136
அசிந்தன் வடசொல் 136
அடக்குதல்–சொப்பனவத்தையிற் செலுத்துதல் 316
அடைவு – இலக்கணம் 87
அணுக்களுக்கும் அவயவமுண்டு 75
அண்டத்தின் வைத்தறிதல் பிண்டத்தின் வைத்தறிதல் 484
அதிசூக்கும வைந்தொழிற்குப் பயன் 385
அதிசூக்குமவைந்தொழில் 381
அதிட்டித்தல் 148
அத்துவசுத்திச்சிறப்பு 435
அத்துவ நியாசம் 150
அத்துவிதசீலை 515
அத்துவிதவியையுடைமை 398
அதவத்தையின்றுமாறு 381, 540
அநிருவசனீயம் 395, 397
அநுபலத்தியேது 564
அந்தக்கரணங்கள் கருத்தாவல்ல 318
அந்தரியாகம் 518
அபிழ்தவுண்டி கடவுளருண்டி 484
அம்முக்கெட்டுருபேற்றல் 156, 165
அராகாதிகுணம் 367
அரிது-இன்மைகுறித்தல் 340
அருத்தவாதம் – பூனைக்துரை 24
அருத்தாபத்தி 516
அருவம் – அதிசூக்குமமாதல் 340
அருள் இறைவனுக்கணிகலமாதல் 386
அவசித்தாந்தம் 98
அவாய்நிலை 220, 226, 407
அவத்திரி ஹூதம்–ஓமம் 421
அளவு - அணுமானப்பிரமாணம் 15
அறிவது வியங்கோள் 494
அறிவு-தக்கனவும் தகாதனவும் பகுத்தறிதல் 204

அறுவகைக்குணம் 9
அறுவகை வினையெச்சம் 9
அறை-உத்தரம் 443
அணுமானஅளவைக்குற்றம்44
அன்பெறுத அகரவீற்றுப் பல வறிசொல் 118
அன்மொழித்தொகை 133
அனுமான விசேடம் 43
அனுவாதம்64, 87, 103, 120, 123, 148, 196, 360, 509,
அன்றி யென்னும் வாய்பாட்டு வினையெச்சக்குறிப்பு 298
அன்றுதல் 125
ஆகம் 152
ஆகி-பெயர் 54, 554
ஆகுபெயர் 4, 31, 54, 226, 289, 298, 306, 310, 340, 342, 368, 376, 379, 382, 384, 428, 484 494, 512, 589
ஆக்கச்சொல் 55
ஆக்கச்சொல் உவமப்பொருள் குறித்து நிற்றல் 474
ஆக்கச்சொல் வருவித் துரைத் தல் 337
ஆக்குதல்-சாக்கிராவத்தையிற் செலுத்துதல் 316
ஆணவமலத்தா னுகிய பொல் லாமை 292
ஆணவமலம் முதலியன ஞான சத் தி முதலியவற்றுல் ஒழியற்பாலன 434
ஆதல்-உண்டாதல் 469
ஆதிசத்தி 149
ஆய்தம் விகாரத்தாற் றெரு கது 310
ஆர் இழித்தற்குறிப்பு 324
ஆறனுருபு காரகப் பொரு ணமை 81
ஆருவது செயப்படுபொருண் மைக்கண்ணும் வினைமுதற் பொருண்மைக்கண் ணும் வந்த காரகம் 484
ஆற்றுதல்-வல்லுதல் 261
ஆனந்தமயகோசம் 345
ஆனுருபு விகாரத்தாற்றெரு கது 320
ஆன் – உடனிகழ்ச்சிப்பொருட் கண் வந்தது 471
ஆன்மசுத்தி 523
ஆன்மா கருத்தா வென்னுந் துணையாய் நிற்றல் 518
ஆன்மா வியாபியெனும் வழக் குடையனுதல் 347
ஆன்மாவுக்கிலக்கணம் 316
ஆன்றமுறை – பக்குவமான முறை 434
இகந்துபடாமைக்காத்தல் 56
இசையெச்சம் 3
இடப்பெயரடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று 592
இடைப்பிறவரல் 458
இதயகமலம் 521
இதழி 2, 3
இதழித்துணர் 3
இந்தனத்தினெரி முதலியன 527

இந்திரசாலமுதலியன உவமை யாதல் 393
இரட்டுற மொழிதல் 89, 126, 438
இராகு கேதுக்கள் சந்திரா தித்தர் மாட்டுக் காணப்படுதல் 519
இராகுவினது தலை 348
இருபெயரொட்டுப் பண்புத் தொகை 133, 240
இருமை எண்ணின் மேல் நின்றது 165
இருவகை யநுமானம் 34
இருவினையின் விசாரூபம் 229
இருவினையுண்மை காரியவேதவின் வைத்துச் சாதித்தல் 183
இலேசு 62, 105
இழித்தற்கண் வந்த குறிப்பு மொழி 124, 199, 299
இழித்தற் குறிப்புத் தோன்ற முன்னிலைக்கண்வந்தது 494
இழிவு – சாக்காடு 185
இழிவு சிறப்பும்மை 220
இறந்ததுதழீஇய எச்சவும்மை விகாரத்தால் தொகல் 298
இறைவன் – வல்லவன் 450
இறைவன் ஐந்தொழில்சங்கற்ப மாத்திரையாற்செய்தல் 384
இறைவனுக்கு விகாரமில்லை 384
இன்சாரியை பெற்ற வகர வீற்றுப் பலவறிசொல் 348
இன்னதற்காக இதுபயனுக என்னும்இரண்டுகாரகம் 202
உடம்பாடு, எதிர்மறை முகத்தாற் கூறல் 536
உடலினுயிருண்டென்பது 311
உடையர் – செல்வர் 183
உணர்தல் - துயிலெழுதல் 355
உணர்வோர் 2
உண்மைஞானம் 462
உண்மை தலைக்குறை 379
உந்துதல் - செலுத்துதல் 363
உந்துதல் - பொருந்துதல் 364
உபசரித்தல் 97, 320, 321, 401, 510
உபசாரம் 9, 15, 31, 97, 126, 133, 165, 185, 217
உபசாரவழக்கு 11
உபலக்கணம் 15, 105, 200, 353, 367
உம்மை இழிவுசிறப்பு 220, 392
உம்மைஇறந்ததுதழீஇயது 54, 105, 193, 220 252, 417, 505, 515, 525, 592
உம்மை எதிரது தழீஇயது 115, 224, 525, 540
உம்மை எதிர்மறைக்கண் வந்தது 286, 393
உம்மை சிறப்பு 165,176,310, 474, 482, 519, 523, 534
உம்மை விகாரத்தாற்றொக்கது 77, 443
உயர்திணைக்கண் சிறுபான்மை ளகாரம்திரிதல் 105
உயிரவை 109
உயிர் பருவமடைதல் 434
உருகோட்டன்பு 2

உருத்திரன் - மாசங்காரக்கடவு ளாகிய பரமசிவன் 161
உருபுமயக்கம் 57, 109, 198
உருபேற்ற சுட்டுப்பெயர் வரு வித்துரைத்தல் 398
உருவகம் 342, 579
உரைபோலியாதல் 69, 580
உரையளவைமூன்றனியல்பு43
உரையனுமானம் 40
உலகம் – உயிர்கள் 174
உவகைமிகுதியின் நிகழும் மெய்ப்பாடு 588
உவமவுருபு 11
உவமவுருபு விகாரத்தாற் றொக்கது 159
உவமைத்தொகை 3, 152, 194
உளன் – உள்ளம் 592
உன்னல் – விரும்புதல் 368
ஊனம்–வாதனுமலம் 500
எடுத்துக்காட்டுவமை-186,239 488, 509
எண்ணலங்காரம் 4
எண்ணும்மை 17, 115, 143, 247, 519
எதிர்நிரனிறை 61, 107, 128, 315, 320.
என்னே என்னும் விழு இன்மை குறித்துநிற்றல் 181
என்னென்பது வேண்டாமை குறித்தல் 356
ஏகதேசவறிவு வியாபகவறிவு 385
ஏகதேசவுருவகம் 219, 243
ஏகாரம் தேற்றம் 81, 100, 165, 166, 193, 216, 274, 544
ஏகாரம்பிரிநிலை 54, 73, 76, 100, 152. 281, 469. 474, 556
ஏகான்மவாதம் 503
ஏது–எற்றுக்கு 109
ஏதுப்பெயர் 89
ஏதுப்பெயரோடு முடிந்த வினைத்தொகை 217
ஏதுப்பொருட்கண்வந்த ஐந்தா முருபு 489
ஏதுமூன்று 37
ஏதுப்பொருட்கண்வரும் இன்னுருபு 270
ஏதுப்போலியெனப்படாமை 50
ஏற்புழிக்கோடல் 87, 165, 270, 471, 536
ஐ–அழகு; ஆகுபெயர் 152
ஐ–சாரியை 177
ஐங்கோசங்களை ஐந்து பறவையாக வேதத்துள் உருவகஞ் செய்தல் 345
ஐம்பொறிச்சுழலிற்படுதல் 417
ஒடுக்கம்–சுழுத்தி 355
ஒட்டென்னுமலங்காரம் 216
ஒத்தொவ்வாமை 168
ஒப்புமைபற்றியுடன்கூறல் 320
ஒருபொருட்கிளவி 81, 113, 160, 161
ஒருமைப்பன்மைமயக்கம் 158. 276, 396, 540
ஒழுக்கம்–உலகத்தோடொட்ட வொழுகுதல் 204
ஒளி–சத்தி 174

ஒன்றும் 81
ஓகாரம் சிறப்பு 105, 123,
ஓகாரம் எதிர்மறை 4
ஓக்கும் 7
ஓத்தல்—ஆராய்தல் 9
ஓவாதே 2
கட்டுரைக்கண்வந்த அசைநிலை 489
கண்டநூல் 12, 13
கண்ணெளி ஞாயிற்றினெளி 412
கதி—ஞானம்; வடமொழிமதம் 242
கதித்தல் 132
கருடன் 516
கருடோகம்பாவனை சிவோகம் பாவனை 515
கருத்து 107
கருமம்—வியாபாரபேதம் 163
கருவி பொருள் காட்டு காலம் கருமம் உரு அளவை நூல் முதலியன 379
கலையித்திரி 163
கலையில் வியாத்தி 432
கன்மம்—முயற்சி 186
கன்னிகை காமரதங் காணுள் 487
காண்டல் 103
காரணகாரியப் பொருட்டு 291, 474
காரணத்தைக் காரியமாக உபசரித்தல் 186, 316, 356, 376, 398, 523
காரியத்தைக் காரணமாக வுபசரித்தல் 294, 579
காரியாநுமானத்தின் வைத்துணர்தல் 356
கிடத்தல் 78
கிரியை—வியாபாரம் 156
குணம் 133
குணம் குணியாக உபசரித்தல் 512
குணவினை குணிமேலேற்றப் பட்டது 342
குருடர் குழீஇக்கொண்டு வேழத்தைத் தைவருதல் 440
குறிப்புருவகம் — 11, 539
குறிப்புவினைத்தொகை 87
குறிப்பெச்சம் 202, 276, 352, 592, 596
குறிப்பேது 55, 307, 316,
குறிப்பேதுவாய் நின்ற பெயர் 540
குன்றக்கூறல் 580
கூசுதல் — அவருயர்வும் தன் இழிபும் நோக்கி நிகழ்வது 587
கூறியதுகூறல் 61, 103, 109, 450
கூறியது கூறலாகாமை 545
கேட்டலறிவு முறுகுதலின்றி அஃகிநிகழ்தல் 473
கேவலத்திற் சுக்குமவைந் தொழில் 380
கோலி பெயர் 592
சகமார்க்கம் — தோழதெறி 454
சகலத்திற்கேவலம் சகலத்திற் சகலம் சகலத்திற் சுத்தம் 361

சத்திநிபாதத்திற்கு மூலம் மலபரிபாகம், இருவினையொப்புக்கு மூலம் சிவபுண்ணியம் 370
சத்து–சிவம் 390
சபீசதீக்கை 426
சமுத்திரகலசநயம் 441 442
சற்காரியவாதம் 185
சனனஞ்சார்தல்–எறுதல் 361
சன்மார்க்கம்–நன்னெறி 456
சன்மார்க்கர்–ஞானிகள் 13
சாக்கிராதீதம் புரிந்தவர் 485
சாதி 29
சாதாரதீக்கை நிராதாரதீக்கை 419,
சாதாரதீக்கையின் வகை–இயல்பு 426
சாதியொருமை 306, 347
சாமுசித்தர் 12 13
சாம்பவதீக்கை 421
சாரியையும் உருபும் விகாரத்தாற்றொகல் 342
சார்ந்து 165
சாலுதல்–அமைதல் 241
சிறப்பும்மை 54, 62, 217, 227, 278, 579
சித்தம்–அறிவு 10
சித்தசித்து – தமிழ்நூலின் முடிபு 265
சித்தத்தியல்பு 109
சிந்தனை–விபரீதவுணர்வு 165
சிநதை–அறிவு 2, 16
சிவம்–சுத்தம் 241
சிவம் அதிசூக்குமசித்து உயிர் தூலசித்து 410
சிவாகமம்–வேதம் 457
சிவாகமநூற்றுணிபு 471
சிவானந்தமேலீடு 528
சிவானுபவம் சுவாநுபூதிகம் 483
சீலம் 3, 105
சுகதுக்கமோகங்களோப்பித்தெனல் 165
சுட்டுவருவித்துரைத்தல் 458
சுதத்துவம் பரதத்துவம் 29
சுதந்திரவடிவம் 163
சுத்தமாயையிற்றோன்றுங்காரியம் 98
சுவைப்பொருட்டு உண்ணப்படும்பால் மருந்துமாம் 587
சூக்குமவுடம்பு முதற்காணமாமாறு 239
சூசி கடாகநயம் 29
சூரியகாந்தக்கல் 469
சைவத்திறம் – சித்தாந்தசைவம் 436
செவ்வெண்டொகை விகாரத்தால் தொக்கது 274
செயவெனெச்சத்திரிபு 220, 223
செய்யுமென்வாய்பாட்டுப் பெயரெச்சம் 59
சென்னி - சிரத்தானம் 11
சொல்லிரண்டு 38
சொல்லெச்சம் 103,167,226, 255, 321, 390, 457, 505, 547
சோமசம்புபத்ததி வருணபத்ததி 428
ஞானகாண்டமூவகை 43

ஞானதிரோதகம் 353
ஞானம் - சத்திக்குப் பரியாயப் பெயர் 161
ஞானம் - ஞானசாத்திரம் 458
ஞானநிட்டை 479
ஞானபூசை 477
ஞானவதி கிரியாவதி 426
ஞானிகள் அரனடியை அகலாமை 481
தடத்தலக்கணம் – பொதுவியல்பு 316
தடையிலாஞானம் 156
தண்டத்துரைசெய்தல் 217
தத்துவ தாத்துவிகங்களினியல்பு 261
தத்துவங்களுக்குத் தொகை அவற்றதியல்பு 265
தந்திரம் - ஆகமம் 149
தரணம் - கடத்தல் 179
தரணி - மருத்துவன் 179
தருகோட்டம் பிறை 2, 3
தருதல் - விளக்குதல் 390
தருக்கநூறி வலியுறுத்தல் 78
தருக்கமெடுத்தோதல் 356
தலைக்குறை 24, 78
தற்பரம் 279
தன்வேதனைக்காட்சி, யோகக் காட்சி 32
தன்னின முடித்தல் 522
தன்னை உள்ளபடி காண்டல் 92
தாதமார்க்க முதலியன 450
தாதமார்க்கம் - சரியை 452
தாதான்மியம்–நீங்காதுநிற்றல் 276
தாப்பிசைப்பொருள்கோள் 361
தார்க்கிகர் மதம் அடாது 29
தாமரையைப் பங்கயம் என்றது 135
தாழ்தல் – இழிதல் 361
தானந்தோறும் 363
திணைமயங்கிற்று 515
திணைவழுவின்மை 390
திருகு - மலக்கோண் 2
திருவைந்தெழுத்தை உச்சரித்தல் 500
திரோதானகரிவடசொல் 290
திரோதானசத்தியினியல்பை உபசாரத்தால் சிவன்மேலேற்றிக்கூறுதல் 374
துயில் - கனவு 306
துரியாதீதத்தி லுயிருண்டென்பது 307
துறவு – ஆண்டகைமை 204
தூலவருந்ததிநியாயம் 417
தூலாருந்ததி நியாயம் 458
தெள்ளுதல் 89
தே – சிவமாந்தன்மைப் பெருவாழ்வு 2
தேயம் 139
தேளுக்கஞ்சிப் பார்த்தள்வாயின் விழுதல் 152
தொண்டாவது 515
தோல்வித்தானம் 49
நயப்பு 139
நயனதீக்கை முதலிய ஆறு 421
நலம் - மேம்பாடு 61
நன்மை - உபாயம் 158
நாடுதல் - சிந்தித்தல் 458

காயகாயகிபாவம் 276
கால்வகை வாக்கும் ஐ வ கை ப் படுதல் 95
கிரணிறை 288, 316
கிர்ப்பீசதீக்கை 423
கின்றல் விகாரம் 138
கீங்காமை - தாதான்மியம் 174
கீட்டும்வழிகீட்டல் 291, 432
கீர்மை - இயல்பு 194
துதலியபொருண்முதலியன 13
கேரியன் பரியன் 471
பகுதிப்பொருள்விகுதி 86
பக்கமூன்று 35
பசுத்துவ வாதனை 505
பசுபுண்ணியம் சிவபுண்ணியம் செய்வார் கருத்துவகை 209
பஞ்சசத்திகள் 156
பண்பு – தன்மை 159
பண்புத்தொகை 148
பதம் 128
பதிகர் 569
பதிஞானத்தியல்பு 503
பதிஞானம் விளங்குதற்கு ஏது 503 .
பதிபசுபாசந்தெரித்தல் 458
பதிப்பொருள் ஆன் ம ா வி ன் ம ா ட் டு விளங்கித்தோன்று தல் 519
பயத்தல் 152
பாகாயப்பிரவேசம் 347
பாசரீரம் மூவகைப்படும் 342
பாசிவனைக்காட்டல் 458
பரமபந்தம் 97
பரமானந்தமேலீடு 480
பரவிப்பார்த்தல்– பு டை ப ட வொற்றியாராய்தல் 198
பராவுதல்–சஞ்சரித்தல் 486
பரிக்கிரகவிபூதி 243
பரிணமம் இருவகை 95
பரிணமம் விருத்தி 94
பற்றிபெயர் 133
பன்னகம் முதலிய தான்சும் உவமையாதல் 226
பாசஞானம் பசுஞானம் சிவசம வாதஞானம் 501
பாய்தல் 139
பாரிசேடப் பிரமாணம் 398
பாரிசேடம் 22, 81, 379, 405, 407
பாலர். உன்மத்தர், பிசாசர் சூனம் 480
பால்வழுவின்மை 207
பாவப்பயன் புண்ணியப்பயன் 224
பாவம் பாவகம் காடகம் 400
பாவி வடசொல் 159
பானீற்று வினையெச்சம் 143
பிணி – துன்பம் 185
பித்தாக்கம் – பி த் த மு டி பு; பெரும்பித்து 448
பித்து 252
பிரணவமாகலின் உள்ளவாறே வெளிப்படக் கூறுமை 320
பிரமாணம் அறுவகை 22
பிரமேயம் 28
பிராகபாவம் 366
பிராகிருதர் 12, 13
பிராமாணியம் 28
பிரித்துக்கூட்டல் 143

பிரிகிலேயேகாரம் 152, 161
பிரேரித்தல் 148
பிறிதினியைபுநீக்கல் 152
பின்னுதல்-அத்துவிதமாயியைதல் 458
புத்திரமார்க்கம்–கிரியை 453
புரிதல்–விரும்புதல் 473
புருடதத்துவம் 249
புருடதத்துவத்தைச் செலுத்துதல் 320
புருடன் அஃறிணைச் சால் 92
புரைத்தல் 111
பூசைத்தானம், ஓமத்தானம், தியானத்தானம் 518
பூருவபக்கநூல் 442
பெயரடியிற்பிறந்த பெயரெச்சவினை 143
பெயரெச்சம் ஏதுப்பெயர் கொண்டது 241
பெயரெச்சத்தகரம் தொகல் 111, 308, 503
பெயரெச்சவீறு விகாரத்தால் தொக்கது 138 333
பெயரெச்சமறை ஏதுப்பெயர் கொண்டுமுடிதல் 584
பேணி 165
பேதவாத ஞானம் 505
பேரீசன்–மகேசன் 161
போகத்தின்மூகமாகிய உயிரே புருடதத்துவம் 163
போகபோக்கியம் 368
போக்கிய காண்டக் கருவிகள் 367
போத்திருத்துவம் 282
போலியுரை 252, 463
மகாவாக்கியவழக்கு 534
மகுடாகமம் 446
மங்கலவாழ்த்துக்குஇலக்கணம் 9
மயக்கம்–விபரீதவுணர்வு 161, 246
மயங்குதல்-பரிணமித்தல் 165, 252
மரங்கண் முதலியவற்றிற்குச் சூக்கும முயற்சியுளவாதல் 188
மருவுவித்தல் 55
மலமுதிர்தல் 434
மலம் – ஆணவ திரோதங்கள் 519
மறை–மொழி 216
மற்று வினைமாற்று 207
மன்னுமருள் – இறப்பில்தவம் 417
மாத்திரை–தலைக்குறை 259
மாயாவாதி 395, 397
மாயாள்– பெண்பால்; வட மொழிமதம்–உருவகம் 169, 258
மானதக்காட்சி வாயிற்காட்சி 31
முக்கூற்றுப் புறச்சமயம் 8
முடிந்தது முடித்தல் 229
முதலவத்தை யடைதருமிடம் 362
முதல்வன் சிவம் சத்தி பதி எனப்பெயர்பெறல் 174
முதற்காரணமூன்று 86

முதனிலைத் தொழிற்பெயர் 107, 367, 374
முத்தியத்தம் முத்தாந்தம் என மரீஇயிற்று 448
மூப்பத்தாறுதத்துவமும் மூவினமாதல் 267
முயற்சிக்குப்பயனிது 190
முராணுதற்குற்றம் 534
மூலதவிடுமி உவமையாதல் 289
முறைசெயல் 376
முற்றும்மை 573
முற்றெச்சம் 211, 220, 337, 351, 356
மூனைத்திடாமை 407
முன்பின்னுகத் தொக்க இருபெயரொட்டுப் பண்புத் தொகை 149
முன்னிலையேவல் 484
மூப்பு – உயர்ச்சி 185
மூன்றவத்தை 8
மெய்த்திடும் பலம் 196
மேளித்தல் 579
மையல் – செருக்கு 294
யாதனுசரீரம் 223
யோகாவத்தையை ஞானவத்தை போலுமெனமயக்குதல் 361
யோக்கியம்–ஒக்கியம், மரீஇயிற்று 237
வகரவீற்றுப்பலவறிசொல் 235
வடசொன்முடிபு 81
வடநூன்முடிபு 83
வந்தித்தல் வணக்கல் அர்ச்சித்தல் 204
வரம்பின்றியோடல் 187
வலித்தல் 111
வறியார்க்கு நிதிவாய்த்தழிப் போல 512
வன்னம்–படிகநிறம் 166
வாக்காயம் தொகைச் சொல் வடநூன்முடிபு 296
வாயிற்காட்சிமுதலியன 27,31
வாரணம்–வாரணமுகத்தான் 2
வாழ்க்கை 168
வாழ்வாவன 294
வாழ்வுகுலவுபதம் 512
வாளாபெயராய்நின்றது 168
விகாரத்தால் தொகல் 266
விஞ்ஞானமய கோசம் முதலியன உயிரின் வேறுதல் 351
விடயம்–காரியம் 261
விட்டுவிடாதவாகுபெயர் 516
விதி–சாபவருள்கண் மேற்று 234
விபாகம் 90
வியங்கோள் 528
வியஞ்சகம்–தூண் 411, 574
விருத்தி 95
விவ்விகுதி விகாரத்தாற் றொக்கது 220
விளியுருபேற்றபெயர் 382
வீறுதல் 87
வினைத்தொகை 31, 35, 89, 92, 125 133, 438, 458
வினைமுதலும் செயப்படு பொருளும் ஒன்றுதல் யாண்டுமின்மை 59
வினைமுதற்காரகம் 166, 254

வினையெச்சத்தகரம் தொகல் 109
வினையெச்சத்திகரம் உகரமாதல் 94
வினையெச்சம் எச்சப்பொருள் தராது செவ்வெண்மாத்திரையாதல் 547
வினையெச்சமுடிபு காரணகாரியப் பொருட்டாய் நிற்றல் 342
வீடுபேறெய்துதற்குச் சன்மார்க்கம்இன்றியமையாதது 466
வெற்பம், காயமிருந்தபாண்டம்.குலாலன்வினைதவிர்ந்தசக்கரம் முதலியன 545
வேடருட்பட்ட மன்னவர்குமாரன் 415. 416
வேண்டாதகூறி வேண்டியது முடித்தல் 528
வேதமும் ஆகமமெனல் 42
வேதம் — கருமகாண்டம் 457
வேதாந்தமகாவாக்கியமும் சித்தாந்தமகாவாக்கியமும் பொருளாலொன்றுதல் 516
வேள்விஐந்து 460

ஸ்ரீமாதவச்சிவஞானயோகிகள்
பொழிப்புரை முதலியவைகளில் காணக்கிடக்கும்
2. அரும்பதக் குறிப்பகராதி முதலியன

அகம் – உயிர், மனம்.

அச்சு – மெய்ப்பொருளாகிய சிவம். அது அச்சுப்போல ஆன்மாவை மலவாசனைபற்றிப் பிறழவிடாமையின் அங்ஙனம் உருவகம் செய்யப்பட்டது: உடம்பு.

அங்கி – அங்கமுடையது. அக்கினி.

அங்கம் – அவயவம்.

அங்குரம் – முளை.

அஞ்சனம் – இருளாயிருப்பது.

அடங்குதல் – உள்ளமைதல்.

அடாது – கூடாது.

அடிப்பாடு – அமைவு.

அடுக்க – சமீபமாக

அடைப்படுதல்-சமைக்கப்படுதல்

அடைவு – முறைமை

அணு – சூக்குமவுடம்பு.

அணை – வரம்பு

அண்டன் – முதல்வன்.

அதிகம் – மிகுதி.

அதிகாணம் – நிலைக்களம்.

அதிகாரம் – தலைப்பாடு.

அதிகாரி – கேட்டற்கேற்ற பக்குவமுடையோன். சம்பந்த முடையோன்.

அதீதம் – தூரியாதீதாவத்தை.

அத்தன் – இறைவன்.

அத்துவா – வழி, அவை மந்திராத்துவா முதலியன.

அகர்த்தம் – கேடு.

அநாதி – தொடக்கமில்லாதது.

அநுகூலம் – இணக்கம்.

அநுக்கிரகம் – அருள்.

அநுபவம் – அறிந்தபொருளில் அழுந்துதல், அநுபூதி, புசிப்பு.

அநுபூதி-பிறபொருளின் தூணையின்றி இயற்கையால்எல்லாவற்றையும் அளந்தறியும் அறிவு.

அந்தகாரம் – இருள்.

அந்தரம் – ஆகாயம்.

அந்தரம் – தீவிரதரத்தில் தீவிரதரமான சத்திநிபாதம், சித்தம்.

அந்தம் – மான்காஞ்சத்திநிபாதம்

அந்நியம் – வேற்றுமை.

அந்நியமின்மை-ஆன்மாவுக்கும் முதல்வனுக்குமுள்ள பிரிக்க முடியாதுநிற்கும் சம்பந்தம். அது அத்துவித சம்பந்தமென்பர்.

அபகரித்தல் – கவர்தல்.

அபாவம் – இன்மை.
அபேதம் – பேதமின்மை.
அப்பிரமேயம் – அளவையான் அளக்கப்படாதது
அமைச்சு – அமைச்சன்.
அமைச்சர் – மந்திரிகள்.
அமைதல் – இருத்தல்
அமையும் – போதும்.
அமையாமை–பூரணமாகாமை.
அயராமை – மறவாமை.
அரக்கு – மெழுகு.
அரசு – அரசன்.
அரு – சூக்குமம்.
அருளுதல்-கருணைபுரிக்கூர்தல்.
அருள் – இரக்கம், திரோதான சத்தி.
அல்லன் – வேறு.
அவசித்தாந்தம் – தோல்வித் தானங்களுள் ஒன்று, அது தன் சித்தாந்தத்திற்கு இணங்காதவைகளைச்சொல்லிச் சித்தாந்தம் தாபித்தல்.
அவதரம் – அவகாசம்.
அவதரித்தல் – பிறத்தல்.
அவத்திதன் – அவத்தையுற்றவன்.
அவயவம் – தனித்தனிபிரிக்கப்படும் தருதியுடையன.
அவயவி – அவயவமுடையது.
அவிச்சை–அஞ்ஞானம், ஆணவம்
அவித்தை–அஞ்ஞானம் செய்வது.
அழுந்துதல்–அமிழ்ந்துதல், நன்றாய்ப்பதிதல்.
அளவை – பிரமாணம், அளத்தற்கருவி.
அறிவு – ஆன்மஞானம், ஞாதா.
அற்புதம் – சூனியம்.
அற்று – அவ்வியல்பிற்று.
அன்பு – இச்சை மிகுதி.
அன்மை – உடைமைக்கு மறுதலை.
அன்றல் – மாறுபடுதல்.
அன்று – அஞாதி.
அன்னர் – அத்தன்மையினர்.
ஆக்குதல் – படைத்தல்.
ஆக்கியோன் – செய்தோன்.
ஆசங்கை – வினா.
ஆசங்கித்தல்–ஆட்சேபித்தல்.
ஆசரித்தல் – அநுட்டித்தல்.
ஆசாரம் – ஒழுக்கம்.
ஆணவம்-வியாபகவுயிர் அணுத்தன்மைப்படச்செய்வது
ஆணை – கட்டளை.
ஆச்சிரவம் – பொறிவழிச் சேறல், கன்மத்தொடர்ச்சி.
ஆதி – தொடக்கமுடையது, முதற்கடவுள்.
ஆகந்தம் – இன்பம்.
ஆமா – காட்டுப்பசு.
ஆரவாரம் – வெற்றொலி.
ஆராய்ச்சி – விசாரித்தல்.
ஆயுள் – வயசு.
ஆய்தல்–ஆராய்ந்தறிதல், நிச்சயித்தல், நூணுகுதல்.
ஆவிருதி – ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களை மறைப்பது.
ஆவேசித்தல் – வெளிப்படுதல்.

ஆளுதல் – ஆட்சி செய்தல்.
ஆள் – அடிமை.
ஆற்றல் - சொற்குப்பொரு ளோடுஉளதாகியசம்பந்தம்.
ஆனந்தரீயம் – இவையாய்ந்த பின் இது கேட்கற்பாற்று என்னும் யாப்பு.
ஆஞமை – நீங்காமை.
ஆன்மா–வியாபகம்.சித்தசித்து
ஆன்றோர் – பெரியோர்.
இகலல் – பகைத்தல்.
இகல் – முரண்.
இடர்ப்படுத்தல் – ஆற்றலைக் குறைத்தல்.
இடுதல்-வைத்தல்,கொடுத்தல்.
இதழ் – தளம்.
இந்திரியம் – பொறி.
இப்பி – சிப்பி.
இயங்கல் – தொழிற்படுதல்
இயல்பு – இயற்கை, இயல்பா யுள்ளது, தன்மை.
இருதயம் – நெஞ்சு
இலக்கு – அவகாசம்.
இலாடம் – நெற்றி.
இழுக்கு – குற்றம்.
இறுதி – சங்காரம்.
இறுவாய் – இறுதி.
இறை – விடை.
இறைவன் – தலைவன்.
இன்மை-உண்மைக்குமறுதலை.
ஈறுதல் – சங்காரப்படுதல்.
உச்சரித்தல் – உச்சாரணம் செய்தல்.
உடங்கு – ஒருங்கு.
உடைமை-உடையாராந்தன்மை
உடையான் – பொருளாத்தன தாகக் கொண்டிருப்பவன். வடநூலார் உடையானை சுவாமி என்பர்.
உணர்தல் – பாவித்தல்.
உணர்த்தல் – அறிவுறுத்தல்.
உணர்வது – அநுபவிப்பது.
உண்ணுதல் – விடயத்தில் அழுந்துதல்.
உண்மை – உளதாந்தன்மை, சிறப்பு
உதவி – உபகாரம்.
உதாரணம் – எடுத்துக்காட்டு.
உத்தியுத்தர் – விந்துவின் காரி யங்களில் முயன்றவர்.
உத்தேசம் – பெயர்மாத்திரை யான் எடுத்தோதல்.
உபகரித்தல் – உதவுதல்
உபதேசம் – போதித்தல்
உபதேசி – அறிவிக்க அறியும் தன்மைத்து.
உபாயம் – கிட்டியவழி.
உயிர்த்தல் – சுவாசித்தல்.
உரிமை – சம்பந்தம்
உவமேயம் – உவமானத்தால் வருணிக்கப்படுவது.
உவர்ப்பு – வெறுப்பு.
உழப்பு – முயற்சி.
உளம் – உயிர், ஆன்மா, ஆன்ம போதம்.
உறவு – கட்பு
உற்பத்தி – தோற்றம்.
உன்மத்தர்–சித்தமயக்கமுடை யோர்.
ஊறு – பரிசம்.

ஊட்டல் — தூக்கவித்தல்.
எதிரது — வருவது
எய்தல் — அடைதல்
எழுப்புதல் — பிரகாசிப்பித்தல்.
ஏகாரம் — 'முதலேயே' என்புழி மற்றைய முதல்வரிலே இயையாது பிரித்தலும், சங்காரகாரணனுகிய முதலிலே இயையாமையைப் பிரித்தலும் அறிக. இயைபின்மை நீக்குதல் — இயைவித்தல். பிறிதினியைபு — மற்றொன்றிற்போய்ப் பொருந்துதல்.
ஏது — காரணம்.
ஏலாமை — இயையாமை.
ஐயப்பாடு — சந்தேகம், துணிவு பிறவாமை
ஒடுங்குதல் — மறைதல்.
ஒருங்கு — ஒருசேர
ஒருதலை — நிச்சயம்
ஒருவுதல் — நீங்குதல்.
ஒற்றுமை — இயைபு.
ஒத்து — ஒதப்பட்டவிதி.
ஒமித்தல் — ஒமஞ்செய்தல்.
கஞ்சுகம் — சட்டை.
கடல் — நீர்க்குஇடம்கொடுத்து நிற்கும் ஆகாயம்.
கடா - விஞை.
கடைப்பிடித்தல் — உறுதியாகக் கொள்ளுதல்.
கட்டு — தொடக்கு.
கணித்தல் — மானதமாகச் செபித்தல்.
கண் — அறிவு.
கண்கூடு — பிரத்தியட்சம்.
கண்ணல் — கருதல்.
கதி — பிறப்பு.
கதிர் — ஒளி.
கந்தித்தல் — காறுதல்.
காரணம் — மனமுதலியகருவி.
கரு — கருப்பம்.
கருத்தா — செய்பவன்.
கருத்து — தாற்பரியம், கருதப்பட்டது.
கலக்குதல் — கலங்கச்செய்தல், குழப்புதல்.
கலை — ஒருதத்துவம்.
களிம்பு — செம்புமுதலியவற்றில் இருக்கும் காளிதம்.
கலைகண் — ஆதாரம், பற்றுக்கோடு.
கனல் — அக்கினி.
கனவு — சொப்பனம்.
காட்சி — பார்வை.
காட்டம் — விறகு.
காட்டிற்றை — காட்டினதை.
காட்டு — காண்பிப்பது, காட்டாயகருவிகள், வியஞ்சகம்.
காணர் — உணர்தலைச் செய்யார்.
காண்டல் — ஐயுறவின்றித் தெளில்.
காமிகம் — சைவாகமம் இருபத்தெட்டனுள் ஒன்று.
காமுகர் — காமமுடையவர்.
கான்மியம் — கன்மமலம்.
குணம் — பண்பு.
குணி — குணமுடையது.
குண்டலி — குண்டலித்தானமாகிய நாபி.

குரம்பை – கூடு.
குறி – இலிங்கம்.
குறை — இன்றியமையாப் பொருள்
கூட்டரவு – கூட்டம்.
கூவல் – கிணறு.
கேசரம் – தாமரைப்பொகுட்டின் புறத்தே தாங்கு மலை.
கேட்டல் – உண்மைஞானம் தான்கனுள் ஒன்று, அது குரு முகமாக ஆகமப்பொருளைச் செவிமடுத்தல்.
கேவலம் – ஆன்மா அறிவு செயல் குறி குணம் ஒன்று மின்றித் தனியே ஆணவ மலத்தான் மறைந்து நிற்கும் நிலை.
கோடல் – கொள்ளுதல்.
கோடும் – கொள்ளும், கொள்பகுதி, தும்விகுதி.
கோட்டம் – ஒரு பாற்சாய்தல், அநீதி.
சகம் – நிலவுலகம்.
சகலம் – ஆன்மாச் சரீரம் முதலியவற்றைப் பெற்றுநிற்கும் நிலை.
சங்கற்பித்தல் – எண்ணுதல்.
சங்கமம் – இயங்கியற் பொருள்
சங்கிரமித்தல் – கலத்தல்.
சங்கேதம்–சொற்கும் பொருட்கும் உளதாகிய நியம ஆற்றல்.
சங்கை – சந்தேகம்.
சடிதி – சீக்கிரம்.
சட்ட – செப்பம்.
சதுரப்பாடு – சாமர்த்தியம்.
சத்தன் – விந்துவின் காரியங்களை ஓடுக்கியிருப்பவன்.
சத்து – உள்ளது; சத்தாகிய சிவம்; நிலையுதலுடையது.
சந்நிதி – முன்னிலை.
சமயம் – மார்க்கம்.
சமவாயம் – அவயவம் முதலியவற்றிற்கு அவயவி முதலியவற்றோடு நீக்கமின்றி உளதாகிய இயைபு. நீக்கமில்லாமை, ஒற்றுமை.
சமுதாயம் – கூட்டம்.
சமுவாரம் – பொறிவழிச் செல்லாது தடுத்து முத்திக்குக் காரணமாவது.
சம்பவம் – உண்மை.
சலம் – வஞ்சனை, கோட்டம்.
சாக்கிரம் – சாக்கிராவத்தை.
சாங்கியர் – கபிலமுனிவரால் செய்யப்பட்ட சாங்கிய நூலை அநுசரிப்போர்.
சாதகம் - கருவி
சாதனம் – தொழிலைப்பயப்பிக்கும் முக்கியகாரணம், முடிப்பது.
சாதி – ஒரு நிகரானவாகிய பல பொருளுக்குள்ள பொதுவான்தன்மை, குலம்.
சாதித்தல் — சாதனத்தால் நிறுத்துதல்.
சார்தல் – அடைதல்.
சார்பு — ஆதாரம்.
சாலுதல் – அமைதல்.

சான்று – சாட்சி.
சித்தம் – அந்தக்காரணங்களுள் ஒன்று.
சித்து–அறிவுடைப்பொருள்.
சிந்தித்தல் – உண்மை ஞானம் நான்களுள் ஒன்று. அது குரு முகமாகக் கேட்ட பொருளே மனனம் செய்து தோஷம் நீங்குமாறு ஆராய்தல்.
சிறுமைப்படுதல் – கீழ்மைப்படுதல்,
சிறை - தடை.
சீ – புண்ணீர்.
சுதந்திரம்-தன்வயமுடைமை.
சுத்தம்–இருவினையொப்பு மல பரிபாகம் பெற்றுச் சிவனே யடைந்து நிற்கும் நிலை.
சுருதி – வேதமுரன்றனே அவாவாது தான் கருதிய பொருளைத் தானே தெரிவிப்பது.
சூழ்தி – அந்தக்காரணங்களுள்ளே சித்தமாத்திரத் தோடு கூடிய நித்திராவத்தை.
சூக்குமம் – நுண்மை.
சூழ்–சூழ்ச்சி, உபதேசமொழி.
சூனியம் – பாழ்.
செயற்கை – இடையிலே தோன்றியது
செய் – விளைநிலம்.
செய்தி – தொழில்.
செய்பவர் – உழவர்.
செய்வோர் – வினைநிகழ்த்துவோர்.
செல்லாது – சித்தியாது.
செவ்விது – வருத்தமின்றி.
சேடம் – குறை. யாதொன்றுயாதொன்றன் பொருட்டாய்த் தனக்கெனச் சுதந்திரமின்றி நிற்கும் அஃது அதற்குச் சேடம் எனப்படும்.
சேடன் – அடிமை.
சேட்டித்தல் – செயற்படுதல்.
சேய்மை – தூரம்.
சேர்வை – சேர்ச்சி.
சேறல் – செல்லுதல்.
சைதன்னியம்–ஆன்மா,அறிவு.
சோகம் – கூம்புதல்.
சோதகம் – எவ்வது.
சோதிட்டோமம் – ஓர்யாகம்.
தண்டம் – ஒறுத்தல்,
தத்துவம் – உள்ளது.
தமி – தனிமுதற்பொருள்.
தருக்கம் – புத்தியினுல் சாதிக்கப்படும் ஆராய்ச்சி.
தருமி - தருமமுடையது.
தருமம் - பண்பு.
தர்ப்பணம் – கண்ணாடி.
தலை – இடம்.
தலைப்படுதல் - கூடுதல்.
தலைமைப்பாடு – மேம்பாடு, முதன்மை.
தலைவர் – உத்தமர்.
தனி – வேறு
தன்மை – சொரூபம்.
தாக்காது – விகாரமின்றி.

தாக்குதல் – உறுத்தல்
தாரகம் - தாங்குவது.
தாரை - தெகிழ்ச்சிப் பொருளின்கண் உள்ள இடையறவொழுக்கு.
தார்க்கிகர் – தர்க்கநூற் கொள்கையுடையோர், தர்க்க சம்பந்த முடையோர்.
தாவரம் – நிலையியற்பொருள்.
தாற்பரியம்-சொல்ல விரும்பிய கருத்து.
நிதி – உள்பொருள்.
திரவியம் – பொருள்.
திரிவு – வேறுபாடு.
திருவருள் — ஈண்டுத் திரோதானசத்தி.
திவ்வியம் – தெய்வத்தன்மை.
திறம் – வகை, கூறு
திறல் – வெற்றிப்பாடு.
தீக்கை – ஒருசமயக்கிரியை, அது பாசத்தைத் தெடுத்து மோட்சத்தை கொடுப்பது.
தீ–கொடுத்தல். கூசா – கெடுத்தல்.
துணிதல்-அறிதற்பொருட்டு.
துணை – அளவு.
துமிதல் – கெடுதல்.
துரத்தல் – ஓட்டுதல், உந்தித் தள்ளுதல்.
துரியம் – இருவகைக்கருவிகளின் பிரவிருத்தியின்றியிருக்கும் அறிவுநிலை.
தூலை – தராசு.
தெவ்வாமை – அநுபவிக்கமாட்டாமை.
தொழனி – ஆரவாரம்.
தொறக்கம் – சுவர்க்கம்.
தோ – அதிவேகம்.
தின்னல் – செறிதல்.
தூலம் – பெரியது.
தெரிதல் – நிச்சயித்தல்.
தெரித்தல் – அறிவித்தல்.
தெருளுதல் – தெளிதல்.
தெளிதல் – உண்மை ஞானம் நான்கனுள் ஒன்று. அது கேட்டபின் ஆராய்ந்து இதுவே கொளற்பாலது என்று நிச்சயித்தல்.
தைவம் – தேவனதுடைமை.
தொகுதல் – அடங்குதல்.
தொடுதல் – தோண்டுதல்.
தொழும்பு – அடிமை
தொன்மையே – அன்றே.
தோற்றம் – தோன்றுதல்.
தோற்றப்பட்ட – உண்டாக்கப்பட்ட
நசித்தல் – கெடுதல், நாசமடைதல்.
நட்டோர் – நண்பர்.
நண்ணல் – புகுதல்.
நண்ணுதல் – தலைப்படுதல்.
நத்தம் – நிறைதல்
நயம் – பயன், நியாயம்.
நலிதல் – வருந்தல்.
நல்சூர்தல் – வறுமையடைதல்.
நல்லார் – கேட்டுச்சிந்தித்துத் தெளிந்த முதியோர்.
நள் – நடு.
நனவு – சாக்கிரம், விழிப்பு.
நன்னெறி – ஞானம்.

காடி – ஆராய்ந்தறிக.
காத்திகர் – கடவுளும், சுவர்க்க நரகங்களும், மறு பிறப்பும் இல்லை என்பவர்.
காதம் – சிவதத்துவம்
காபி – உந்தி, கொப்பூழ்.
காளம் – தண்டு.
நிகழ்ச்சி – உண்டாதல்.
நிகழ்தல் – உண்டாதல், நடத்தல், ஐயந்திரிபின்றி விளங்குதல்.
நிட்டை – உண்மை ஞானம் நான்கனுள் ஒன்று. அது கேட்டுச் சிந்தித்துத் தணிந்தபொருளுடன் பிரிவின்றி உறுதியாக நிற்றல்.
நித்தம் – நித்தியம்.
நிமித்தம் – காரணம்.
நியமம் – நிச்சயம்.
நியாயம் – முறை.
நிரயம் – நரகம்.
நிரூபித்தல் – ஆராய்தல்.
நிலை – ஆச்சிரமம், நிற்றல்.
நீக்கம் – பிரிவு.
நீதி – நடத்துவது.
நுகர்தல் – அநுபவித்தல்.
நுட்பம் – நுண்மை.
நுணுகுதல் – சிறுத்தல்.
நுதலல் – கருதல்.
நுழைதல் – பிரவேசித்தல்.
நேர் – ஒப்பு.
நொடித்தல் – அழித்தல்.
நோக்குதல் – காத்தல்.
நோன்றல் – பொறுத்தல்.

பக்கம் – துணிபொருளிருக்குமிடம்.
பக்குவம் – பருவம், முதிர்ச்சி.
பசாசம் – இரும்பு.
பசுத்துவம் – பசுவின்தன்மை.
பசு – பாசக்கட்டுடையது.
பச் – கட்டு.
பஞ்ச – ஐந்து.
படர்தல் – பரத்தல்.
படலம் – காசபடலம்.
படிகம் – பளிங்கு.
பணி – தொண்டு.
பண் – பண்ணப்படும்கதிகள்.
பண்டு – அநாதி.
பண்ணுதல் – கதிப்பித்தல்.
பண்பு – உவமைகள்.
பதி – முதல்வன், ஊர், இடம்.
பந்தம் – கட்டு.
பயப்பித்தல் – பெறுவித்தல்.
பயன் – பேறு.
பயிலல் – கற்றல்.
பயிற்சி – பழக்கம், வாசனை, அழுத்தம்.
பரம் – பரம்பொருள்.
பரவல் – எல்லார்க்கும் புலனுமாறு மிக்குநிகழ்தல்.
பரிகரித்தல் – கலைதல்.
பரிசம் – தீண்டுதல்.
பரிசனம் – பரிவாரம்
பரிணமம் – இயற்கையினின்றுந் திரிதல்.
பரிதல் – இரங்குதல்
பரிபவம் – அவமானம்.
பரிபாகம் – உத்தமமானபக்குவம்.

பரியாயம் – ஒத்தபொருளுடையது.
பவம் – உண்மை, பிறவி.
பல்குதல் – பெருகுதல், விரிதல்.
பாகதம் – பிராகிருதச்சொல்.
பாகம் – பக்குவம்.
பாகுபாடு – பிரிவு.
பாசத்தார் – பாசக்கட்டுடையார்.
பாடம்-படிக்கப்பட்டசுலோகம்
பாடியம் – உரை.
பாவகம்–எண்ணம், மனம் முதலிய வற்றோடுகூடி நின்று பாவிப்பது. பாவனை என்பதும் அது.
பாவம் – உண்மை.
பாழ் – சூனியம்.
பிணங்கல் – மாறுபடுதல்
பிணிப்புண்ணுதல்-கட்டுண்ணுதல். ஒருசெல்நீர்மைத்து.
பித்தி – சுவர்.
பிரகாசம்–சித்து, விளங்குதல்.
பிரபஞ்சம் – உலகம், விஸ்தாரமுடையது என்னும் பொருளது. உயிரும் பாசமுமே பிரபஞ்சம் எனப்படும்.
பிரமாதா–அளந்துகொள்பவன்
பிரமாணம் – அளத்தல்.
பிரமிதி-அளவையால்உணர்ந்தமெய்யுணர்வு.
பிரமேயம் – அளவையால் அளந்து கொள்ளப்படுவது: இவை தான்கும் பிரமாணநெறிக்குஇன்றியமையாதன என்பர் அளவைநூலோர்.
பிரயோகம் – வழங்கும் முறை.
பிரயோசனம் – பயன்.
பிரவிருத்தன்–வித்துவின் காரியங்களைத் தொடங்கினவன்.
பிராமாணியம் – பிரமாணமுளதாம் தன்மை.
பிறழ்தல் – மாறுபடுதல்.
பீசம் - வித்து.
புணர்தல் – தலைப்படல்.
புத்தி – ஒருதத்துவம், அஃது இது இன்னதென நிச்சயித்தறிவது.
புரிதல் – எப்பொழுதும் மேற்கோடல்
புலப்படுத்தல் – அறிவித்தல்.
புவனம் – உடம்புக்கு ஆதாரமாகியவுலகம்.
புறம் – புறம்பு.
புறம்பு – வெளி.
புறன் – புறம்பு, புறச்சமயம் பற்றி இகழ்ந்துரைக்கும் மொழி, புறங்கூற்று மொழி.
பூசை தல் – அடங்கி நிற்றல்.
பூசைத்துகோடல் - குடுதல்.ஒருசொல் நீர்மைத்து.
பூரித்தல் – நிறைத்தல்
பெயர்த்து – மாறி.
பெறுதல் – அடைதல்.
பெற்றி – தன்மை.
பெற்றிமை – சாதி.
பேதம் – வேறுபாடு.
பேதை – மடவோன்.
போமல் – பிறழாமல்.

பொருட்டு – காய்.
பொய்–பொதுவியல்பு, செயற்கைச் சுட்டுணர்வு.
பொய்கை – குளம்
பொருள் – உவமேயம்.
பொறி – இந்திரியம்.
பொற்பு – பொலிவு.
போகம் – அநுபவம்.
போக்கு – இறத்தல்.
போதல் – வருதல்
போதரும் – புலப்படும்.
போதித்தல் – அறிவித்தல்.
போது – புட்பம்.
போந்தது – வந்தது.
போழ்தல் – பிளத்தல்.
பௌதிகம் – பிருதிவிமுதலிய பூதசம்பந்தமுடையது.
மகவு – பிள்ளை.
மடக்கி – திருப்பி.
மடங்குதல் – மூனைத்தை மாமை.
மடவோன் – அறியாமையுடையோன்.
மணத்தல் – சேர்தல்.
மதம் - கொள்கை, உடன்பட்டது.
மதுகை - வலி.
மந்திரம் – நினைப்பவனைக் காப்பது. மந் - நினைத்தல். திரகாத்தல்.
மயக்கம் – தெளிவுபிறவாமை.
மயர்வு – மயக்கவாசனை.
மலம் - அழுக்கு.
மலையற்க – மயங்கற்க.
மறுதலை – எதிர்.
மறைப்புண்ணுதல் - மறைக்கப்படுதல்.
மனம் – ஒருதத்துவம் அஃது ஒன்றை இஃது இன்னது ஆகற்பாற்று என்று சங்கற்ப விகற்பம் செய்வதறிவது. பசுஞானம்.
மாசு – அழுக்கு. கர்சபடலம்.
மாட்டாமை – இயலாமை.
மாணுமை – வியாபகவுணர்விற்கு விடயமாகாமை.
மாந்திரிகன் – மந்திரவாதி.
மாயேயம் – மாயாகாரியமாகிய தநு முதலாயின. தநு – உடம்பு.
மாறு – மூரண்.
மாறுதல் - இறத்தல்.
மான் – பெரியோன்.
மிகுதிப்பாடு – அதிகம்.
மிகை – வேண்டுமளவின்மிகுதிப்பாடு.
மிக்கு – அதிகம்.
மிச்சிரம் – கலந்தது.
மிருதி – முனிவராலநுஷ்டிக்கச் செய்யப்பட்ட தருமசாத்திரம்.
மிருத்தியு – மரணத்தைச்செய்வது.
மீட்சி – மீளுதல்
மீமாஞ்சகர் – மீமாஞ்சை என்னும் நூற்கொள்கையையநுசரிப்போர்.
மீன் – நாண்மீன்.
முகத்தல் – அள்ளுதல்.
முத்தர் – மலம் நீங்கினவர்.

மூாணுதல் – மாறுபடுதல்.
முழங்குதல் – ஆரவாரித்தல்.
முறுகுதல் – கன்கு முதிர்தல்.
மூனைத்தல் – மூற்படுதல்.
முன் – அறிவாயாக.
மூர்ச்சை – மயக்கத்தைச் செய்வது, அறிவை மயக்குவது.
மெய் – உயிர், சிறப்பியல்பு, இயற்கையுணர்வு.
மோகினி - அசுத்தமாயாதத்துவம்.
யாத்தல் – கட்டுதல்.
யாப்பு – இந்நூல் கேட்டபின் இந்நூல் கேட்கற்பாற்று என்னும் இயைபு.
யாப்புறுத்தல் – வலியாக்கல்
வகை – கூறுபாடு.
வசிகரித்தல் – வசப்படுத்தல்.
வரம்பு – எல்லை
வருக்கம் – ஒரினமானகூட்டம்.
வருணம் – சாதி.
வல்லி – மாயை.
வல்லுதல் – வலிமையுடைத்தாதல்.
வல்லுகர் – இயலுகர்.
வழக்கு – பிரசித்தி.
வழங்குதல் – கடைபெறுதல்.
வழி – நூல்வந்தவழி.
வளி – காற்று.
வறிது – சும்மா.
வன்னம் – நிறம்.
வாக்கியம் – அவாய்நிலை, தகுதி அண்மை என்னும் மூன்று முடைய சொற்களின் சமூகம். சுருதியும் இலிங்கமுமின் றிச் சொற்றொடர்பு பற்றிப் பொருளுணர வருவது.
வாக்கு – கால்வகை வாக்குக்கள். அவை சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்பன. வாக்காகிய நாத முடிவான பாசஞானம்.
வாணிகம் – வியாபாரம்.
வாதிகள் – தங்கொள்கையை நிறுத்திப் பேசுவோர்.
வாதித்தல் – வருத்துதல்.
வாய்தல் – கிடைத்தல்
வார்த்திகம் – காண்டிகையுரை.
வார்த்தை – சொல்.
விகாரம் – வேறுபாடு.
விசித்திரம் – ஆச்சரியம்.
விசேடம் – சிறப்பு, ஒரு பொருட்கே உரியதன்மை.
விசேடித்தது – அடைகொடுத்துக் கூறியது.
விடயம் – பற்றப்படுவது, பொருள்.
விடயித்தல் – பற்றுதல்.
விடை – உத்தரம்.
விண் - தூறக்கம்.
வித்தகம் - விசித்திரம்.
வித்து - விதை.
விந்து – சுத்தமாயை.
விபவம் – செல்வம்.
விபரீதம் – திரிவு.
விம்முதல் – சுரத்தல்.
வியவகாரம் – வழக்கம்.
வியாக்கியானம் – உரை.

வியாபகம் – நிறைவது.
வியாபரித்தல் – தொழிற்படுபடுதல்.
வியாப்பியம் – வியாபிக்கப்படுவது.
வியூகம் – வகுப்பு.
விரவுதல் – கலத்தல்.
விருத்தி – தொழிற்பாடு, விரிவு.
விளக்கு – காட்டு.
விளித்தல் – அழைத்தல்.
விளையாது – உணதாதலின்றி.
விளைவிக்கப்படுதல் – உண்டாக்கப்படுதல்.
வினைமை – வினையுடைமை.
வீயாத – கேடில்லாத.
வெகுளல் – கோபித்தல்.
வெரிந் – முதுகு.
வெளி – ஒளி.
வேகம் – கதி.
வேட்கை – அவா.
வேட்டுவன் - வேட்டைவாளி, இதனை ஒருவகைவண்டுஎன்றும் புழு என்றும் கூறுவர்.
வேள்வி – யாகம்.
வேறு – மாறு, அந்நியம்.

3. அருந்தொடர் அகராதி.

அகண்டாகாரம் - கண்டிக்கப் படாத வடிவம்.

அகத்தொண்டர் - உட்பணி செய்வோர்.

அகவிருள் - அஞ்ஞானம்.

அங்கித்தம்பனை - அக்கினியின் சூட்டைத்தடுத்தல்.

அசிந்தன் - சிந்திக்கப்படாதவன்.

அசிபதம் - ஆனுய் என் னும் பொருளுடைய பதம்.

அணுபரிமாணம் - அணுவளவு; பாஞ்சராத்திரிகள் ஆன்மா உடம்பிலே அணுவளவாய் நிற்குமென்பர்.

அனேந்தோர் தன்மை - சீவன் முத்தரியல்பு.

அதிகாரதத்துவம் - சுத்த வித்தை, ஈசுரம் என்பன.

அதிகாராவத்தை - பிரபஞ்சத்தைப் படைக்கும்நிலை.

அதிசூக்குமம் - மிக்கநுண்மை.

அதிட்டிக்கப்படுதல் - நிலக்களமாகக்கொண்டு செலுத்தப்படுதல்.

அதிதீவிரம் - மிக்கதீவிரம்.

அதிதெய்வம் - மேலான தெய்வம்.

அதிபரிபக்குவம் - மிகுந்தபரிபக்குவம்.

அதீதாவத்தை - துரியாதீத நிலை,

அதுவதுவாய் நின்றறிதல்- சார்ந்ததன் வண்ணமாய் நின்றறிதல்.

அதோமாயை - கீழேயுள்ளமாமாயை.

அத்தாணிமண்டபம்- அரசிருக்கை மண்டபம்.

அத்தியாச வாதம் - இட்பியை வெள்ளி யென்பது போல ஒன்றை மற்றொன்றுகக் கூறும் விபரீதவாதம்.

அத்துவசுத்தி ஆறத்துவாக்களினும்கட்டுப்பட்டிருக்கும் போகங்கள் எல்லாவற்றையும் ஏகாலத்திலே புசிப்பித்துத் தொலைத்து முத்தி கொடுத்தல்.

அத்துவித நிலை - ஏகமாயநிலை.

அநந்திய பாவனை - அத்துவித பாவனை.

அநந்தியம் - வேறுகாமை

அநாதிசித்தன் - அநாதியேயுள்ளவன்

அநாதிநித்தம் -அநாதியாயிருக்கும் நித்தியம்

அநாதிபந்தம் - அநாதியாயுள்ள பாசக்கட்டு

அகாதிமுத்தத் தன்மை - அகாதியே மலத்தினீங்கிய தன்மை.

அநித்தியானந்தம் - அழிவுள்ள ஆனந்தம்: அது சிற்றின்பம்.

அநிர்வசனம் - சொல்லொணாதது.

அநுமானவளவை - அநுமானப் பிரமாணம்

அநுமித்தறிதல் - கருதியறிதல்.

அநேகாந்தவாதி - அநேகமுடிபைச் சொல்லுபவன்.

அநேகேச்சுரவாதி - பலகடவுளர் உண்டு என்போன்.

அந்தக்கரணம் - உட்கருவி அவை மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பன.

அந்தப்புரம் - அரசன் தேவியர் உறைவிடம்.

அந்தரியாகம் - உட்பூசை.

அந்தரியாமி - உள்ளே நின்று நடத்துவோன்.

அந்நியசாதி - வேற்றுச்சாதி.

அபரசாதி - குறைவுடையவைகளிலே தோன்றுவது.

அபரமுத்தி - பரமுத்தியல்லாதது அதுபதமுத்தி.

அபிமுக மாத்திரை - சந்நிதி மாத்திரை.

அபுத்திபூருவம் - அறியப்படாதது.

அயிக்கியவாதம் - நீரும் நீரும் சேர்ந்தாற்போல ஆன்மாவும் சிவமும் முத்தியில் ஐக்கமாகும் வாதம்.

அருஞ்சுரம் - செல்லுதற்கரிய பாலைநிலம்.

அருண்மயம் - கருணைவடிவம்

அருவப்பிரபஞ்சம் - சேதனப் பிரபஞ்சம்.

அவயவப் பகுப்பு - உறுப்பு உறுப்பாய்ப் பிரிக்கப்படுதல்.

அவாந்தர காரணம் - இடைப்பட்டகாரணம்.

அவாய்நிலை - ஒருசெல் தனக்கு எச்சொல்லின்றி வாக்கியப் பொருளுணர்ச்சி கூடாதோ அச்சொல்லை அவாவி நிற்றல்.

அவிச்சைக்காலம் -அஞ்ஞானத்தையுடைய காலம்.

அவிப்பாகம் - தேவருணவின் பங்கு.

அவிநாபாவம் -நீக்கமின்றியிருப்பது (அ - இன்மை, விநா - நீக்கம் பாவம் - இருத்தல்) பிரிவிலதாய் உடனிகழ்வதாம்.

அவையடக்கம் - சபையை அடக்குதல்.

அவ்வளவில் அவன் மகிழ்தல் - ஒருநியாயம், பெற்றது கொண்டு பெரிதும்மகிழ்தல்.

அழிதன்மாலைய - அழியுந்தன்மையையுடையன.

அளவிலாற்றல் - அளவிடப்படாத வலிமை.

அளவைநூல்- தருக்கசாத்திரம்
அறிவற்றம் - அறிவின்சோர்வு
அறிவுத்திரிவு - உணர்வு வேறு படுதல்.
அறிவுறுத்தல்- நன்குணர்த்தல்
அனந்ததேவர் - அட்டவித் தியேசுரருள்ளே தலைவர்; அசுத்தமாயா காரியங்களைச் செய்பவர். அழிவில்லாத தேவர் என்பது பதப்பொருளாம் என்பர்.
ஆகமவளவை - ஆகமப்பிரமாணம்.
ஆகாமியவினை - பிராரத்தம் புசிக்கும்போது வந்து கூடும் வினை.
ஆக்கச்சொல் - செயற்கையை யுணர்த்தும் சொல். ஆதலை யுணர்த்தும் சொல்.
ஆசான்மூர்த்தி - குருமூர்த்தி.
ஆடூஉவறிசொல் - ஆண்பாலை யுணர்த்தும்சொல்.
ஆணவமலபரிபாகம் - ஆணவ மலம் தனுகரண முதலிய மாயாமலத்தோடு சேர்ந்தாற்றூன் பக்குவப்படும். சிறுட்டி செய்வது அதன் பொருட்டே.
ஆதிதைவிகம் - ஒருவாயிலானன்றித் தெய்வந்தானே காரணமாக வருவது.
ஆதிபௌதிகம் - சடம் வாயிலாக வருவது.
ஆத்தியான்மிகம் - சடத்தோடு கூடிய சேதனம் வாயிலாக வருவது.
ஆயுள்வேதம் - எல்லாம் அநுட்டித்தற்குச் சாதனமான யாக்கையை நோயின்றி நிலை பெறச்செய்வது.
ஆலயவிஞ்ஞானம் - இலயபரியந்தம் நிற்கும் ஓர் விசேடவுணர்ச்சி.
ஆவேசவாதி - காபாலசமயி; சிவன் ஆவேசித்தலால் சிவன் குணங்கள் முத்தான்மாவிடத்தில் தோன்றும் என்று சொல்லுபவன். ஆவேசித்தல்வெளிப்படுதல்.
ஆறு கோடி மாயாசத்திகள் - ஆறு பேதமான மாயாசத்திகள். அவை காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன.
ஆன்மசுத்தி - ஆன்மாத்தன்னியல்பு கெட்டு ஞானமயமாய் நிற்றல்.
ஆன்மதரிசனம் - பசுகாரணம் ஒன்றும் தோன்றாது சுட்டறிவும் நீங்கித்தன்னை உள்ளவாறு காண்டல்.
ஆன்மபோதம் - உயிருணர்வு
ஆன்மப்பிரகாசம் - ஆன்மாவின் விளக்கம்.
ஆன்மலாபம் -ஆன்மாவாலடையப்படுதல்
இடத்திரிவு - தானம் வேறு படுதல்.
இடையீடு - இடைவிடல்.

இடையூறு - விக்கினம்.

இதஞ்செய்தல் - பற்றுச்செய்தல்.

இந்திரசாலம் - இல்லதை உள்ளதுபோலக் காட்டும் ஒருவித்தை.

இயற்றுமுதியோன் - செய்யும் முதியோன்.

இயைபின்மை நீக்குதல் - சம்பந்தமின்மையை நீக்குதல்.

இரட்டுறக்காண்டல் - ஐயக் காட்சி.

இரட்டுறமொழிதல் - ஒரு வாக்கியத்தை இரண்டு பொருள் படச்சொல்லுவது.

இரணியகருப்பமதம் - பிரமாவையே பரம் என்று கூறும் மதம்.

இருநிறன் - இரண்டு கூறுபாடு

இருவகை அஞ்சவத்தை-மேல் கீழ் என்னும் இருவகையான அஞ்சவத்தை.

இருவகையியல்பு - இருவகை இலக்கணம்.

இலயதத்துவம் - சிவதத்துவம் சத்திதத்துவம் என்பன.

இலயாவத்தை - பிரபஞ்சத்தை ஒடுக்கும்நிலை.

இல்பொருள் - ஒருகாலத்தும்மில்லாத பொருள்.

இல்லாவருவு - புலப்படாத அருவம்.

இன்றியமையாமை - இல்லாமல் முடியாமை.

உச்சரித்தன் மாத்திரை - உச்சரித்தவளவு.

உடம்பொடுபுணர்த்தல் - ஓர் உத்தி. அஃது ஒரு பொருளைச் சொல்லத்தொடங்கியதொடரிலே பின்னும் ஒரு பொருள் தோன்றச்சொல்லுதல்

உடலூழ் - உடம்பினுகர்ச்சி.

உடல்வினை - பிராரத்தம்.

உடற்றிரிவு - சரீரம் வேறுபடுதல்.

உடனிகழ்ச்சி - கூடநிகழ்தல்.

உடைத்தாதல் செல்லாது - உடைத்தாகாது. செல்லல் ஒருதினைவினை. செல்லாது நிகழாது எனினுமாம்.

உட்பேதம் - அகவேறுபாடு.

உரைக்காரணல் - விளங்க அறிதல்.

உண்மையாற் சுட்டப்படுதல் - உள்பொருளாகச்சுட்டப்படுதல்.

உபதேசமொழி - உபதேசவரக்கியம்.

உயர்திணை - உயர்வாகியசாதி. அஃறிணை - உயர்வல்லாத சாதி.

உயிரூழ் - உயிர்நுகர்ச்சி.

உய்த்துணர்தல் - ஒருபொருளை ஆராய்ந்தறிதல். போதந்துணர்தல்: போதந்து - கொண்டுபோய்.

உருவப்பிரபஞ்சம் - அசேதனப் பிரபஞ்சம்.

உரைச்செய்யுள் - உரையாகிய செய்யுள்.

உரையளவை - ஆகமப்பிரமாணம்.

உலகானந்தம் - சிற்றின்பம்.

உளதாகச்சுட்டப்படுதல்-திரிவு ஐயங்களானன்றிமெய்யாகச் சுட்டப்படுதல்.

உள்பொருள் - உள்ளபொருள்

உறைத்துநிற்றல் - அழுந்தி நிற்றல்.

உற்பத்திவாதி - மாவிரதசமயி; சிவனுடைய குணங்கள் முத்தான்மாவிடத்தில் தோன்றுமென்று சொல்லுபவன்.

உற்றழி-ஆபத்துவந்தவிடத்து

ஊர்த்துவமாயை - மேல்நோக்கிய மாயை.

ஊனக்கண் - பசுஅறிவு.

எஞ்சாப்பொருண்மை - மிஞ்சாமையாகிய பொருள். ஈண்டுமைவிகுதி தன்மைப் பொருளுணர்த்தாது நின்றது.

எண்ணியறிதல் - ஆராய்ந்தறிதல்.

எதிர்மறைமுகம் - எதிர்மறுத்தலாகிய வாயில். முகம் - வாயில்

எரிசேர்ந்தவித்து - வறுத்தவித்து.

ஏகதேசப்பொருள் - ஒரு பகுதியாகிய பொருள்.

ஏகதேசவுணர்வு - சிற்றறிவு.

ஏகஞ்சி - ஒற்றுமைப்பட்டு.

ஏகான்மவாதம் - சீவான்மா என்றும் பரமா என்றும் இரண்டில்லை ஆன்மா ஒன்றே என்னும் வாதம்.

ஏவுமுதியோன் - தொழிற்படுத்தும் முதியோன்.

ஏற்புழிக்கோடல் - ஓர் உத்தி. அது இயையும் இடமறிந்து பொருள்கொள்ளல்

ஐந்துகந்தம்-உருவம், வேதனை குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் ஐந்தன் சமூகம். கந்தம்-சமூகம் என்னும் பொருட்டு

ஐவகைச்சுத்தி - தானசுத்தி, பூதசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்பன.

ஒருசாரான - ஒருபகுதியன.

ஒருபுடையுவமை - கருத்தாவாதலாகிய பொதுத்தன்மை பற்றி உவமையாதலன்றிச் செய்யும் வகைபற்றி உவமையாகாமையின் ஒருபுடையுவமையாயிற்று. செய்யும் வகையாவன முதல்வன் சங்கற்பத்தாற் செய்தலும், குயவன்தண்டு சக்கரமுதலிய கருவிகளாற் செய்தலுமாம்.

ஓரோவொன்று - ஒவ்வொன்று

ஒவ்வொருகாலவிசேடம் - ஒவ்வொருபருவம்.

கட்புலன் - கண்ணறிவு.

கண்டுணர்தல்-ஆராய்ந்தறிதல்

கணபங்கம் - கணந்தோறும் தோன்றியழிதல்.

கணபங்கவாதி - பிரபஞ்சம் கணந்தோறும் தோன்றியழியும் என்று சொல்லுபவன்.

கண்கூடு - பிரத்தியட்சம்.

கண்ணழித்துரைத்தல் - பதச்சேதம் செய்து உரை கூறுதல். கண் - கணு. அழித்தல் - சேதம் செய்தல். கணு - சொற்களின் சந்தி.

கருடதியானம் - கருடனுகத் தன்னை நினைத்தல்.

கருணைமறம் - நிக்கிரகமாகிய கருணை.

கருமகாண்டம் - கிரியைகளைக் கூறும் பாகம்.

கருமபேதவியல் - கிரியைகளின் வேறு பாட்டைக் கூறுமியல்.

கருமமலம் பரிபாகமாதல்-கன்மம் தூலமாய் ஆகாமியம் எனப்பெயர் பெற்றுச் சங்கார காலத்தில் மாயையிலே புத்தி தத்துவம் பற்றுக்கோடாகக் கிடந்து பின் பிராரத்தமாகப் பக்குவப்படும். சங்காரத்தாலேதான் பக்குவம் வரும்.

கலாதிகள் - கலை, காலம், வித்தை, இராகம், நியதி, புருடன் என்பன.

கல்லால் - ஆலமரவிசேடம் இங்கு ஞானமயமான விருட்சம் என்க.

கழிபேருவகை - மிகப்பெரிய மகிழ்ச்சி.

கழிப்பித்தகாரணம் - நீங்கிய ஏதுகழிப்பித்தல்தன்வினை; காட்டியவுள்ளம் என் முற் போல.

கறக்கோலை - காற்முடி.

கறைமிடறு - காளகண்டம்.

காட்சிப்பொருள் - காணப்படும் பொருள்.

காட்சியளவை - பிரத்தியட்சப் பிரமாணம்.

காட்சிவாதி - உலோகாயதன்; பிரத்தியட்சமே பிரமாணமென்று சொல்லுபவன்.

காமக்கிழத்தியர் - இன்பத்திற்கு உரிமையுடையோர்.

காமநூல் - இன்பநூல்.

காமியப்பயன்-விரும்பியபேறு.

காரணக்குறி - காரணப்பெயர்.

காரணமாதற்பொதுமை - பிறவற்றுல் வேறுபடினும் காரணமாதன் மாத்திரையாகிய பொதுமை.

காரணவவத்தை - காரியத்திற்கு முற்பட்டநிலை.

காரணவாக்கியம் - விண்டு முதலியோரை நிமித்தகாரணர் என்று சொல்லும் வசனம்.

காரியரூபப்பிரபஞ்சம் - காரியப்பிரபஞ்சம்.

காரியாவத்தை - உண்டாக்கப்பட்டநிலை.

காலவிசேடம் - விசேடகாலம்

கிரியாசத்தி - தொழில் வடிவாகிய சத்தி.

கிரீடாப்பிரமவாதம் - கிரீடையையுடைய பிரமம் நான் என்று சொல்லுவது.

கிளந்தெடுத்துரைத்தல் - விதந்து கூறுதல்.

கீழ்காடல் - வியாப்பியமாகக் கருதல்.

குடாகாயம் - குடத்துள்வெளி

குணதத்துவம் - மூக்குணங்களும் வெளிப்பட்டிருக்கும் தத்துவம்.

குணிப்பொருள் - குணியாகிய பொருள். குணி-குணமுடையது.

குணிருத்திரன் - குணதத்துவத்தில் வைகும் உருத்திரன்.

குண்டலித்தானம் - மூலாதாரம்.

குறிப்பேது - வெளிப்படலின்றிக் குறிப்பாக எதுப்பொருள்பட நிற்பது.

கேவலஞானம் — ஞானமாத்திரை.

கைமுதிகநியாயம் - 'பூளைக்கு இத்துணை அஞ்சுவாளையின், புலிக்கு அஞ்சுதல் எத்துணை என்பது சொல்லவேண்டியதில்லை' என்பது போன்ற ஒரு நெறி. "தின்னியார் குற்றமுந் தூற்றும்மாபினர்-என்னைகொல் ஏதிலார் மாட்டு" என்னும் திருக்குறளும் இதற்கு உதாரணமாகும். இது 'கிமுத' (எவ்வளவு) என்பதினின்று தத்திதம் பெற்றுக் கைமுதிகம் என்றுயிற்று என்பர். மேற்குறித்த குறளில் உள்ள என்னைகொல்' என்பது 'கிமுத' என்பதற்குச் சமம் ஆகும்.

கோசரமாதல் - விடயமாதல்.

சகமார்க்கம் - தோழவுரிமைக் குரிய நெறி.

சகலநிலை - கலை முதலியவற்றோடு கூடிய நிலை.

சகளநிட்களம் - அருவுருவம்.

சங்கமவடிவு - சிவபத்தர்வடிவம்.

சங்கமவேடம் - அடியார்திருவேடம்.

சங்கிராந்தவாதி -பாசுபதசமயி

சச்சிதானந்தம் - உண்மையறிவானந்தம்.

சத்ததாது - உடற்கணுள்ள ஏழு தாதுக்கள், அவை - இரசம், இரத்தம். சுக்கிலம், மூளை, தசை, எலும்பு தோல் என்பன.

சத்தப்பிரமவாதம் - சத்தமே பிரமமென்று சொல்லுவது

சத்திசங்கற்பம் - சத்தியாய் இஃது இங்ஙனமாகுகவென்று எண்ணுதல்.

சத்திமடங்கல் - வலிகுன்றல்

சத்தியப்பொருள் — உள்பொருள்.

சத்திவடிவு — வெளிப்படாத வரு.

சமயதீக்கை- சமயப்பிரவேசத் தைப்பயக்கும் தீக்கை.

சமயவாதிகள் - தத்தஞ்சமயங் களே மெய்ச்சமயம் என்று சொல்லுவோர்.

சமவியாபகம் — ஒத்தவியாப கம்.

சமுதாயவாதி — புறச்சமுதா யமும் அகச்சமுதாயமுமே சகம் என்று சொல்லுபவன் புறச்சமுதாயம் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பன. அகச்சமுதாயம் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என் பன. சமுதாயம் - கூட்டம்.

சம்பந்தப்படுத்தல் — தொடர் புண்டாக்கல்.

சம்பந்தவிசேடம் — ஒருவகைச் சம்பந்தம்.

சரியைமுதலிய மூன்று பாதப் பொருள் — சரியாபாதப் பொருள், கிரியாபாதப் பொருள், யோகபாதப் பொருள் என்பன. பாதம் — ஞானநிலையொன்று.

சரீர சரீரி பாவம் — சரீரமும் சரீரமுடையனுமாந்தன்மை.

சருவ வியாபி — எங்கும் நிறைந்தவன்.

சர்வேதர்ம - எல்லாக்குணங் களையுமுடையது. அஃதா வது சார்ந்ததன் தன்மை யாய் நிற்றல்.

சலியாது நிலைபெறுதல்—அசை யாதுநிற்றல்

சவிகற்பம் — விகற்பத்தோடு கூடியது பெயர் சாதி முதலியவற்றோடு கூடிய தாம்.

சாதாரம்—ஆதாரத்தோடு கூடி யது.

சாதியொருமை — ஒருசொல் ஒருமையீறு தோன்றியா வது தோன்றுமலாவது நின்று பன்மைப் பொருளை உணர்த்துவது.

சாமுசித்தாராவார் — சாமான்ய மான இஷ்டாபூர்த்தாதி தருமங்களுக்குப் பரமான விசிஷ்ட சிவதருமமாகிய சரியை கிரியாயோகமியற்றி அதனால் நின்மல அந்தக்கர ணராய் அந்தத் தேகம் விட்டும் அந்தஞானம் கெடாமல் மீளவும்ஜனிக்கும்பொழுதும் அந்தஞானத்துடனே ஜனித்து சிவபாவனைபண்ணுமவர்.

சாந்தரூபம் — பொறுமையா யிருக்கும் தன்மை.

சார்ந்ததன் வண்ணம்—சேர்ந்த பொருளின் தன்மை.

சாலம்பயோகம் — ஆதாரத் தோடு கூடிய யோகம்.

சிங்கநோக்கு - முன்னும் பின்

ஹும் பார்க்கின்ற சிங்கத்தின் பார்வை.

சித்தபுருடர் – சித்தியுடையராகிய புருடர்.

சித்தாந்தசைவர் – சித்தாந்தமாகிய சைவத்தை அனுசரிப்போர்.

சித்தாந்தமகாவாக்கியம்– சிவத்துவமசி.

சித்தாந்த முடிபு – ஆகமத்தின் முடிந்த பொருள்.

சித்தின்பம் – ஞானானந்தம்.

சித்தாந்தசைறி – சித்தாந்த சைவநெறி.

சித்தாந்தம் – முடிந்தமுடிவு

சித்தித்தல் – உண்மை ஞானம் கான்கனுள் ஒன்று அது குருமுகமாகக் கேட்ட பொருளே மனனஞ் செய்து தோஷம் நீங்குமாறு.

சிவசங்கிராந்த வாதி – சிவன் தன் குணங்களே முத்தான்மாக்களிடத்துப் பற்றச் செய்வன் என்று சொல்லுபவன்.

சிவசத்து – சித்தாகிய உண்மை பொருள்

சிவசமவாதி – முத்தியிலே சிவமும் ஆன்மாவும் சமம் என்று வாதிப்போன்.

சிவதரிசனம் – பரமசுகமாகிய பேரின்பத்திற் சேர்ந்து சிவத்தினையே காண்டல்.

சிவபோகம் – பேரின்பமாய் வாழ்ந்திருந்தல்.

சிவப்பேறு – சிவமாந்தன்மையைப் பெறுதல்.

சிவமயம் – சிவமாந்தன்மை.

சிவரூபம் – முத்தொழில்களேயுஞ் செய்து பக்குவம் வருவித்துக் குருவாய் நின்று அருள்பவனுகிய சிவனுடைய தன்மையைத் தன் அறிவிலே காண்டல்.

சிவஞானம் – பரஞானம்.

சிவன்தாள் – சிவனருள்.

சிவானந்த போகம் – சிவானந்தானுபவம்.

சிவானுபவம் – சிவானந்தத்தை அநுபவித்தல்.

சிவார்ப்பணம் – சிவனிடத் தொப்பித்தல்.

சிவோகம் பாவனை – சிவனேநான் என்று பாவித்தல்.

சிறப்படையாளம் – விசேடசின்னம்.

சிறப்பியல்பு – சிறப்பிலக்கணம்

சிறப்புத்திருநாமம் – சிறப்புப் பெயர்.

சிறப்புப்பாயிரம் – இருவகைப் பாயிரத்துள் ஒன்று. அது ஒன்றற்கே உரியதாய் ஆக்கியோன்பெயர் முதலிய எட்டனையும் கூறுவது. காலம், களன், காரணம் என்னும் மூன்றையும் சேர்த்துப் பதினென்றனையும் கூறுவது என்பாரும் உளர்.

சிறப்புவகையானறிவு நிகழ்தல்- சவிகற்பமாயறிவுண்டாதல்.

சிறுபான்மை – ஏகதேசம்.

சிறுமையுறுத்தல் – தாழ்மைப் படுத்தல்.

சிற்சத்தி – ஞானசத்தி.

சீகண்டருத்திரன் – பிரளயா கலருள்ளே பக்குவமுடை யோனுய்ப் பாசநீங்கிச் சிவ னுக்குரியசாமாதிகளைப்பெற் றுச் சைவாகமங்களை அறிவு றுக்கும் குரவன். சீ – கஞ்சு. கண்டம் – கழுத்து.

சீவன்முத்தன் – சீவிக்கும் பொழுதே பாசத்தினின் றும் விடப்பட்டவன்.

சீவான்மா – தேகத்தையபிமா னிக்கும் உயிர்.

சீற்றமிக்கெரிதல் – சுவாலித் தெரிதல்.

சுகப்பிரபை – சுகத்தின் விளக் கம்.

சுகரூபம் – மகிழ்ச்சியாயிருக் கும் தன்மை.

சுட்டியறிதல் – ஏகதேசமா யறிதல்.

சுட்டியறியப்படுவது – இது பொன் இதுமண் என்றுற் போல ஆன்மபோதத்தால் ஒவ்வொன்றாகக் குறித்தறி யப்படுவது.

சுட்டிநின்று நின்றறியப்படுதல்- அத்துவிதமாய் நின்றறியப் படுதல்.

சுதந்திரவடிவம் – சுவாதீன சரீரம்.

சுத்தசத்தை – விசேடிக்கப் படாதசத்தை. சத்தை – உண்மைத் தன்மையாகிய சாதி.

சுத்த தத்துவ புவனம் – சுத்த தத்துவங்களில் இருக்கும் புவனங்கள். சுத்ததத்துவங் கள் சிவதத்துவம் சத்திதத் துவம் சதாசிவதத்துவம் ஈசுரதத்துவம் சுத்தவித் தியா தத்துவம் என்பன.

சுத்தமாயை – சுத்தப்பிரபஞ் சத்திற்குக்காரணமான மாயை.

சுத்தமாய் நிற்றல் – விசேடிக் கப் படாது நிற்றல்.

சுத்தாத்துவா – சுத்தமாயை யிற்றோன்றிய மந்திர் முத லிய ஆறத்துவாக்கள்.

சுத்தாவத்தை – பாசம் நீங்கிய நிலை.

சுபக்கம் – தன்பக்கம்.

சுயம்பு மூர்த்தி–தானேதோன் றிய மூர்த்தத்தை யுடை யோன். மூர்த்தம் – திரு மேனி.

சுருக்குச் சுருவம் – கெய்த் தடுப்புக்கள்.

சூக்குமதேகம் – காரணதன் மாத்திரைகள் ஐந்தும் சித்த மொழிந்த அந்தக்கரணம் மூன்றுமாகிய எட்டினுலும் ஆக்கப்பட்ட வுடம்பு.

சூக்கும பஞ்சாக்கரம் – பிரணவம்.

சூக்குமபூதம் – தன்மாத்திரை.

சூத்திரப்பாவை – கயிற்றிற் கட்டி ஆட்டப்படும்பாவை.

சூரியகாந்தம் – சூரியன் ஒளியில் தீயைக் கக்கும் கல்.

சூனியவாதி – எல்லாம் சூனியம் என்று சொல்லுபவன்.

சூழ்ச்சித்துணைவர் – ஆ ல ா சனைக்குத் துணையாய் உள்ளவர்.

செம்பொருள்– வெளிப்படைப் பொருள்.

செவியறிவுறுத்தல் – உபதேசித்தல்.

செறிந்தறிதல் – அழுந்தியறிதல்.

சேதனப்பிரபஞ்சம் – சித்துப் பிரபஞ்சம். அஃது உயிர் வர்க்கம்.

சையுத்த சமவாயம்–சையோக சம்பந்தம் உடையதில் ஒற்றுமை யுடையது. சையோக சம்பந்தமுடையது குடம், அதில் ஒற்றுமையுடையது குடவுருவம்.

சையுத்த சமவேத சமவாயம்–சையோக சம்பந்தமுடைய தோடு கூடியதன்கண் ஒற்றுமை யுடையது. சையோக சம்பந்தமுடையது குடம் அதனோடுகூடியது குடவுருவம் அதன்கண் ஒற்றுமை யுடையது அதன் தன்மை.

சொப்பனத்தானம் – கண்டம்.

சொரூபலக்கணம் – சிறப்பிலக்கணம். அ ஃ த ா வ து இயற்கையாய் உள்ள இலக்கணம். ஸ்வரூபம் சொரூபம்என்றுயிற்று. இஃதுஉண்மை எனவும் பெயர் பெறும்.

சொல்லினண்மை – சொற்கள் அடுத்து நிற்றல்.

சோபான முறை – படிமுறை.

ஞானகாண்டம் – ஞானத்தைக் கூறும் பாகம்.

ஞானக்கண் – அ ரு ட் க ண், திருவடி ஞானம்.

ஞானசத்தி - அறிவுவடிவாகிய சத்தி.

ஞானதிரோதகம் – அறிவை மறைப்பது.

ஞானபாவம் – ஞானத்தினின்மை.

தடத்தலக்கணம் – இலக்கண வகையுள் ஒன்று; அ து பிறிதொரு பொ ரு ளின் சார்புபற்றி இ ல க் கி ய ப் பொருளில் இருப்பது. தடத்தமாகிய இலக்கணம் என விரியும். தடத்தம் – அயலிடத்திருப்பது. இலக்கணம்-இயல்பு. இது பொதுவியல்பு எனவும் பெயர் பெறும்.

தத்துவஞானம் - மெய்யுணர்வு.

தருமிவாசகம் – பண்பியாகிய சொல்.

தற்பதம் – அது என் னும் பொருளே உணர்த்தும்பதம்.

தற்பரம் – ஆன்மாவுக்கு அதீத மாகிய சிவம்.

தற்பொருட்டுப்பொருள் - தனக் காக என்னும் பொருள்.

தற்போதம் – ஆன்மபோதம்.

தற்றருமம் – அதன்குணம்.

தன்மையின் வைத்தோதல் – பொருளாற் கூறுது அதன் தன்மையிலேற்றிக் கூறுதல் அது மூவினை என் னுது மூவினைமை என்றது.

தன்வயம் – பிறதுணை வேண் டாது தானுக எல்லாஞ்செய் யும் தலைமை.

தனுவேதனைக்காட்சி – இன் பத்துன்பங்களே அ ரா க ம் முதலிய ஐந்து தத்துவங்க ளாலும் உயிரிலேடு உணர்வு தொடர்தல்.

தன்னியல்பு-சிறப்பிலக்கணம்.

தாதமார்க்கம் - அடிமையுரி மைக்குரிய நெறி.

தாதான்மிய சத்தி – எக்கா லத்தும் விட்டுநீங்காதசத்தி.

தாவரவுரு – சிவலிங்கத்திரு மேனி.

தான்பணியை நீத்தல் – தனக் கொரு செயலுண்டு என் பதை நீக்குதல். அ ஃ து எல்லாம் சிவன்செயல் எனக் கொள்ளுதல்.

திதியின் பக்கத்து – திதியி னிடத்து.

திரியக்காண்டல் – விபரீதக் காட்சி.

திரிவுபுலன் – திரிவுகாட்சி.

திரோதான சத்தி – மறைக் குஞ்சத்தி.

தினைத்துணை – தினையளவு. இது மிகச் சிறுமைக்குக் காட்டப்படும் பிரமாணம்.

துணிந்ததாகவைத்து - துணி ந்து.

துணைக்காரணம் – முதற்கார ணத்துக்குத்துணையாய்அது காரியப்படுமளவும் உடனிகழ் வது.

துரியகீலை – அருணீலை.

துவம்பதம் – நீ என் னும் பொருளே யுணர்த்தும் பதம்.

துவாதசாந்தம் – பிரமரந்திரத் திலிருந்து பன்னிரண்டங் குலத்தின் முடிவிடம்.

துவிதபாவனை – இரண்டாகப் பாவித்தல்.

துறவறம் – உலகப்பற்றைத் துறந்தவருக்கு உரியஅறம்.

தூலபூதம் – பிருதிவி முதலிய ஐம்பூதம்.

தூலவுடம்பு–பஞ்சபூத பரிணம மாகிய உடம்பு.

தெளியக்காண்டல் – நிச்சயக் காட்சி.

தெளிவுபுலன்–நிச்சயக்காட்சி.

தொகுத்துணர்த்தல் – சுருக்கி விளக்குதல்.

தொகை நிலைச்சொல் – உருபு முதலியன தொக்குநிற்குஞ் சொல்.

தொகைப்பொருள் – பிண்டப் பொருள்.

தொழிற்படுஞ்சொல் - ஏவும் வாக்கியம்.

தொன்றுதொட்டுவருதல்-முன் தொடங்கிவருதல்.

தோற்றப்பட்ட – உண்டாக்கப்பட்ட.

நண்பகல் – மத்தியானம்.

நற்சார்பு – நல்லினம், உயர் குலம்.

நாண்மீன் – அசுவினி முதலிய இருபத்தேழு நட்சத்திரம்.

நால்வகை வாக்கு – நான்குவித மான வாக்கு. அவை சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்பன.

நாற்பாதத்துள் வைத்து – சரியை முதலிய நான்கு பாதத்துள்.

நிட்களம் – கலையற்றது, அருவம்.

நித்தப்பொருள் – என்றுமுள்ள பொருள்.

நித்தியானந்தம் – அழியாத இன்பம்.

நிமித்தகாரணம் – வினைமுதற் காரணம்.

நிரதிசயகுணம்- மிகமேலாகிய குணம்.

நிரயத்துன்பம் – நகாவேதனை.

நிரனிறையிடம் – முறைமையாக நிறுத்தப்பட்ட இடம்.

நிராதாரம்– ஆதாரமில்லாதது.

நிராலம்பம்-ஆதாரமில்லாதது.

நிருவாணதீக்கை– முத்தியைப் பயக்கும் தீக்கை. நிருவாணம் – முத்தி.

நிருவிகற்பம் – விகற்பமில்லாதது; பெயர் சாதிமுதலியன அறியப்படாதது.

நிருவிகாரி – விகாரமில்லாதவன்.

நிர்க்குணன்– மூக்குணங்களுள் ஒன்றுக அறியப்படாதவன். மாயா குணங்களில்லாதவன் என்க.

நிலைக்களம் – நிற்றற் குரிய இடம்.

நீக்கமின்றி நிற்றல் – சமவேதமாய் நிற்றல்.

நூன்முகம் – நூலின் ஆரம்பம், நூலின் முன்னிடம்.

பகுதிப்பொருள் விகுதி – பகுதிக்குரிய பொருளன்றி வேறு பொருளில்லாத விகுதி.

பக்கிசைத்தல் – பிரிந்திசைத்தல்.

பக்குவவிசேடம் – சிறந்த பக்குவம்.

பங்கயம் – சேற்றிற்பிறந்தது.

பசுபதி – ஆன்மாக்களுக்குத் தலைவன்.

பசுஞானம் – நான்பிரமம் என்னும் ஞானம்.

பசுநீகாரம்–பசுவை மறைப்பது.
பசுவர்க்கம் – விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் உயிர்வருக்கம்.
படல விசேடம் – ஒருவகைப் படலம்: காசப்படலம்.
பட்டாசாரியன் மதம் – சைமினி முனிவனுடைய சீடனாகிய பட்டாசாரியன் மீமாஞ்சையை அநுசரித்துச் செய்த ஒருமதம்.
பதமுத்தி – சாலோகம், சாமீபம், சாரூபம் என்பன.
பதார்த்தம் – பதத்தாற் பெயரிட்டு வழங்கற்பாடுடையது.
பயனிலை – பொருண்முடிவு.
பரகாயம் – வேற்றுடம்பு.
பரசாந்தி – அதிகமானவைகளிலே தோன்றுவது.
பரதந்திரம் – பிறன்வசமுற்று அவனைத் தலைமையாகக் கொண்டு நிற்றல்.
பரபக்கம் – பிறர்பக்கம்.
பரமசுகம் – மேலான இன்பம்.
பரமாணு – மிகநுண்மையான அணு.
பரம்பரை – ஒன்றன்பின் ஒன்றுக வருதல்.
பரமான்மா – பரம்பொருள்.
பாவுடம்பு – காரணசரீரம்.
பரிக்கிரகசத்தி – தொழிற்குக் காரணமாய் நிற்கும் கிரியாசத்தி. அது வேண்டுழி உபகாரமாவது. மாயை – வைப்புச்சத்தி என்பர்.
பரிதியக்கடவுள் – சூரியன். பரிதியாகிய கடவுள் என விரியும்.
பரியாயப்பெயர் – ஒத்தபொருளுடைய பெயர்.
பலசாங்கியம் – பல எண்ணுடையது.
பழமொழி - முதுமொழி.
பறவாக்குளவி – மலைப்பச்சை, மலை மல்லிகை.
பற்றுக்கோடு – கொழுகொம்பு.
பன்னிருபடலம் – தொல்காப்பியர் முதலிய பன்னிருவரால் பன்னிரு படலமாகச் செய்யப்பட்ட ஒரு புறப்பொருளிலக்கணநூல்.
பாகடை – பாக்கும் வெற்றிலையும்
பாசஞானம் – பாசஅறிவு. அது வேதசாத்திராமுதலியன பற்றி நிகழும் ஏகதேசக் காட்சி. பாசம் வாயிலாக ஆன்மாவின்கண் நிகழும் ஞானம்.
பாச்செய்யுள் – பாவாகிய செய்யுள்
பாஞ்சராத்திரி – விஷ்ணுவே முத்தொழிலுக்கும் கர்த்தா எனக்கூறும் பாஞ்சராத்திர நூலை அனுசரிப்போன். அந்நூல் ஐந்து இரவில் செய்யப்பட்டமையால் பாஞ்சராத்திரம் எனப் பெயராயிற்று என்பர். பாஞ்சராத்திரம் இது தத்திதாந்தபதம்.

"அஞ்சலினவர்புகழ்" எனக் கந்தபுராணத்து வருவது காண்க.

பாடிகாவல் – களைகணுவான் ஒருவனைக்கொண்டு வேந்தன் செய்வீப்பதொரு தண்டத்தொழில் வீசேடம்.

பாயாவேங்கை - பொன், வேங்கைமரம்.

பாவனாநிதம் – பாவனையைக் கடந்தது.

பிடகநூல் – பௌத்தமதசாத்திரம்.

பிண்டப்பொழிப்பு – பதச்சேதமின்றிப் பொருளைத் திரட்டிக்கூறுவது.

பிரகாசரூபம் – மறைவின்றியிருக்குந் தன்மை.

பிரகாசிக்கவேண்டுவது – அறியப்படவேண்டுவது.

பிரகிருதி புவனாந்தம் – பிரகிருதி தத்துவத்திலுள்ள புவனம் வரை.

பிரமகாண்டம் – ஞானகாண்டம்.

பிரமக்கொலை – பிராமணனைக் கொல்லுதல்.

பிரவாகாகாதி – நீர்ப்பிரவாகம் போன்ற அநாதி.

பிரவிருத்திரூபம் – தொழில் வடிவம்.

பிராகிருதராவார் – பூமியில் ஜனித்தபின் சொப்பனத்தின் ஞானம்போல் அறிந்தறியாமலும், கிளிஞ்சியை வெள்ளி யென்று அறிவது போல விபரீத ஞானியுமாய் அதனாலே தேகாதிகளே ஆன்மா என்றும், பிரகிருதி ஜந்திய வஸ்துக்களேயே பரமென்றும் எண்ணுமவர்.

பிராணயாமம் – பிராணவாயுவைத் தடுத்தல்.

பிராந்திஞானம் – விபரீத வுணர்வு.

பிராரத்தவினை – இப்பொழுது அநுபவிக்கப்படும் முன்னை வினை.

பிரோகவவத்தை – எவநிலை.

பிள்ளைத்திருநாமம் – பிள்ளைப் பருவத்திலிட்டதிருப்பெயர்.

பிறிதினியைபு நீக்குதல் – மற்றொன்றன் சம்பந்தத்தை நீக்கல்.

புத்திதத்துவம் – மூப்பத்தாறு தத்துவங்களுள் ஒன்று. அஃது உயிர்களின்புண்ணிய பாவங்களுக்குப் பற்றுக்கோடாயும், பொருளை நிச்சயிப்பதாயும, சுகதுக்கமோகரூபமாய்ப் பரிணமித்து விடயமாயும் இருப்பது.

புத்திபூருவம்-அறியப்பட்டது.

புத்திமார்க்கம் – புத்திரவரிமைக்குரியதெறி.

புத்திவிருத்தி –மனத்தின் தொழில்.

புருடதத்துவம் – ஆன்மா.

புலப்படக்காண்டல் – வெளிப்பட்டுத்தோன்றக்காண்டல்.

புலனுணர்வு – கருவிகளாலுள்ள பாசஞானம்.

புறவிருள் – வெளியிற் காணப்படும் பூதவிருள்.

புனருற்பவம் - மீளப்பிறத்தல்.

பூனந்தரை – விதியைவழங்குவித்தற் பொருட்டு விதிப்பயனை உள்ளதனலும் இல்லதனலும் வருணித்துக் கூறுவது. இதனைவடநூலார் அர்த்தவாதம் என்பர்.

பூதக்கூட்டரவு – பூதங்களின் கலப்பு.

பூதசாரவுடம்பு – பஞ்சபூதங்களின் சாரங்களால் ஆக்கப்பட்டதேகம். அது தேவசரீரம்.

பூதமயம் – பூதவடிவம்.

பூரணநிலை – எங்கும் நிறைந்த நிலை.

பூருவபக்கம் - விடயமும் பிறவுமாகச் சித்தாந்த விரோதமாய்ப் பிறரால் கூறப்பட்ட வாக்கியம்.

பெத்தகாலம் – மலப்பிணிப் புண்டு நிற்கும் காலம்.

பெறுவிக்கப்பட்ட – தோற்றுவிக்கப்பட்ட.

பேருள் – பெருங்கருணை.

பைமறியாப் பார்த்தல் – மறிக்கப்பட்ட பைபோலப் பார்த்தல். மறித்தல் – உள்வெளியாகத்திருப்புதல்.

பொதிந்து கொள்ளுதல்-அடக்கிக் கொள்ளுதல்.

பொதுநீக்கல் - ஒருவர்க்கே உரிமையாக்கல்.

பொதுவகையானறிவுநிகழ்தல்-நிருவிகற்பமாயறிவுண்டாதல்.

பொதுவியல்பு - பொதுவிலக்கணம்.

பொருட்டன்மை – பொருளியல்பு.

பொருளியல்புகூறும் வாக்கியங்கள் – பொருள்களின் இலக்கணம்கூறும் தொடர்மொழிகள்.

பொருளியல்புரைத்தல் – வருபொருளுரைத்தல். இது மூவகைவாழ்த்துள் ஒன்று.

பொருள்படா–உண்மையாகா.

போகதத்துவம்-சதாசிவதத்துவம்.

போகரூபம் – அநுபவவடிவம்.

போகாவத்தை – பிரபஞ்சத்தைக்காக்கும்நிலை, பிரபஞ்சத்தைப் படைக்க முயன்றநிலை.

போக்கியரூபம் – அநுபவிக்கப்படும் பொருள் வடிவம்.

போந்தபயன் – பெறப்பட்டபயன்.

மகாகாயம் – பெருவெளி.

மகாருத்திரன் – பரமசிவன்.

மகேசுரமூர்த்தி–மகேசுரமூர்த்தம்; சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர் முதலிய இருபத்தைந்து கேவலவடிவம்.

மங்கலவாழ்த்து – நன்மைபயக்கும் வாழ்த்து.
மங்கிப்போதல் – குறைந்து போதல்.
மந்ததரம் – அதிகமந்தம்.
மந்தவுணர்வு - கூர்மையில்லாத புத்தி.
மந்திரசாந்நித்தியம் – மந்திரத்தின் அண்மை.
மந்திர மகேசர் – விஞ்ஞான கலருள்ளே மலபரிபாகத்திற்கேற்பச் சதாசிவ மூர்த்தியாலே மந்திரருக்குத்தலைவராக நியமிக்கப்பட்டுச் சுத்தாத்துவாவில் இருப்போர்.
மயக்கவாசனை – திரிபறிவு.
மலவாசனை – மலப்பயிற்சி.
மனவெழுச்சி-உள்ளக்கிளர்ச்சி
மனோவிகற்பம்-மனவேறுபாடு.
மாட்டெறிதல்–ஓர்உத்தி, அது ஒன்றற்குச் சொல்லப்பட்ட இலக்கணத்தை அதனைப் பெறுதற்குரிய மற்றொன்றற்கும் மாட்டிவிடுதல்.
மாயாகாரியம் – அசித்துப் பிரபஞ்சம்.
மாறுகோளுரை – முன் பின் முரணும் வசனம்.
மானதக்காட்சி – மனத்தாலுணரும் காட்சி.
மிக்குவழங்குதல் – பாந்துங்கிழ்தல்.
மித்தையுணர்வு – பொய்யறிவு.
முகந்துகொள்ளுதல்– அள்ளிக் கொள்ளுதல்.
முடிவினை – பிராரத்தவினை.
முதற்காரணம் – காரியத்தோடொற்றுமைப்பட்டு நிற்கும் காரணம்.
முதுவேனில் – முதிர்ந்த வெய்யிற்காலம்.அஃது ஆனி ஆடி மாதங்கள்.
முத்திறத்தைந்தவத்தை – கேவலாதி முத்திறமுடைய ஐந்தவத்தை.
மும்பொருள் – பதிபசுபாசம்.
மும்மையணு – மூன்றுசேர்ந்த ஓர் அணு.
முற்பக்கம் – பூருவபக்கம்.
முற்றுணர்வு எல்லாவற்றையும் தடையின்றி அறியும்அறிவு.
முனிகணம் – முனிவர் கூட்டம். அவர் சனற்குமாரர் முதலாயினோர்.
மூடரூபம் – மூடமாயிருக்கும் தன்மை.
மூலகாரணம் –முதற்காரணம்.
மூலப்பகுதி – பிரகிருதி. இருபத்துமான்காம் தத்துவமாயுள்ளது. இது அசுத்தமாயையினின்றும் தோன்றி அசுத்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமாய் இருப்பது.
மூவகைப்பிரபஞ்சம் – சுத்தப் பிரபஞ்சம், மிச்சிரப்பிரபஞ்சம், அசுத்தப் பிரபஞ்சம் என்பன. மிச்சிரம் – சுத்தம் அசுத்தம் இரண்டின் கலப்பு.

மூவகைப் புறச்சமயம் – புறப் புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம் என்பன.

மூன்றவத்தை – கேவலம் சகலம் சுத்தம்.

மெய்கண்டான் – சத்தினியல்பை அறிந்தோன்.

மெய்கண்டதேவன் – மெய்ப் பொருளுணர்ந்த தேவன்.

மெய்ஞ்ஞானம் – மெய்ஞ்ஞானமாகிய சிவசத்து, வீடுபயக்கும் உணர்வு.

மெய்ப்பொருள் – சத்தாயுள்ள சிவம்.

மேற்கோடல் - ஏதுதிருட்டாந்தம் முதலியவற்றுல் சாதிக்கப்படும் தன்மையுண்மையின் மற்றைய போலி நிச்சயங்களேவென்று அங்கீகாரமாய் மேற்பட்டெழுதல். மீதூரல்.

மொழிபெயர்த்தல்-ஒரு பாடையில் உள்ளபொருளே மற்றொரு பாடையிலே திருப்பிச் செய்தல்.

மோகரூபம் – மோகமாயிருக்கும் தன்மை.

யாப்புறுத்தல் – வலியாக்கல்.

யோகமதம் – பாதஞ்சல நூற்கொள்கை.

வடமொழி மதம் - வடநூற்கொள்கை.

வாம்பின்றியோடல் - எல்லையின்றிச் செல்லுதல்.

வருவாய் - வரும்வழி.

வரைந்து வைத்தல் - முடிவு பண்ணுதல்.

வரையறை - எல்லைப்படுத்தல்.

வலியுறுத்துதல் –பெலமுடையதாக்கல்

வழிமொழிதல்–அநுவதித்தல்.

வாக்கியசேடம் - வாக்கியக் குறை. அஃதாவது ஒரு வாக்கியத்தை ஐயமறத் துணிதற்கு அநுகூலமாகிய குறைவாக்கியம்.

வாதனுமலம் - பயிற்சிபற்றி வந்தமலம்.

வாயிற்காட்சி - இந்திரியக் காட்சி.

வாய்பாடு - வாயிற்படுவதாகிய வாக்கியம்.

விசிட்டசத்தை - விசேடிக்கப்பட்ட உண்மைத்தன்மையாகிய சக்தி.

விச்சுவரூபம் - பாரமேசுரவடிவம்.

விஞ்ஞானதீக்கை - ஞானதீக்கை

விஞ்ஞானவாதி - ஞானமே உள்பொருள் என்று சொல்லுபவன்.

விதந்தோதுதல் - எடுத்துச் சொல்லுதல்.

விதிக்குஞ்சொல் - விதியைப் புலப்படுத்துஞ்சொல், இதனைச் செய்க இதனை ஒழிக என நியமிக்குஞ் சொல்.

விதிவாக்கியம் - இதனைச் செய்க என்று நியமிக்கும்

வாக்கியம்.

விநாயகக்கடவுள் - சிவபிரானுடைய மூத்த பிள்ளையார் தன்னினும் தலைமையான வர் பிறரிலராகப் பெற்றகடவுள் என்பது பொருள். கடவுள் என்பதில் கட பகுதி உள்தொழிற்பெயர் விகுதி. கடத்தல் என்பது பொருள். எனவே, தத்துவாதீதர் என்பது கருத்து.

விருத்திப்படுதல் – படம் குடிலாஞற்போல விரிதல்.

விலக்கியல் – விலக்குவனவற்றைக் கூறும் இயல்.

விவகரிக்குஞ்சொல்- பொருளை அறிவிக்கும் சொல்.

விவேகித்தறிதல் – மெய்யாக உணர்தல், பகுத்தறிதல்.

விழுச்சுடர் – மிக்கவொளி.

விள்ளற்பாலது–விடற்பாலது.

வினைக்கீடாக – வினைக்குச்சமமாக.

வினைமுதல் – வினைநிகழ்ச்சிக்குத் தலைமைப்பட்டு நிற்பது. இதனை வடநூலார் கருத்தா என்பர்.

வினைவயம்–வினையே தலைமையாக அதன்பால் அமைதல்.

வீடுபேறு – முத்திபெறுதல், முத்தியாகிய பயன்.

வெள்ளறிவு – உள்ளீடில்லாத அறிவு, பொய்யுணர்வு.

வெற்றெனத் தொடுத்தல்–ஓர் உத்தி. அதுபொருள்வெளிப்படையாகத் தோன்றச் சொற்களைத்தொடுத்தல்.

வெற்றிப்பாடு – வெற்றியடைதல்.

வேதமாபுபற்றிய பெ
வேதத்திலே வழ
முறைமைபற்றிய பெ

வைதிகவினை – வேதச
மான கிரியை,

வைகயிகாவார் – விகய
உலகத்துக்கு உயர்
போதிக்கும் ஞான
னும், குரு உபதேச
னும், சிவசாஸ்திரத்தி
நித்தியாநித்தியவஸ்து
கிகளாய் மனோவாக்
வியாபாரங்களிஞல்
கன்மங்களையும் தவ
பட்டவர்களாகிக் கி
தின் மோகூத்தை
பவர்.

விதிமுகம்–நிருமிக்கும்

உபலக்கணமாவது :—
பொருளைக் கூறு
அதனோடு இயை
தனையும் உய்த்துக்
டுணரவைப்பதாம்.

விதிமுகம்–நிருமிக்கும்

அருந்தொடரகராதி முற்றிற்று.

பிழையும் திருத்தமும்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
6 மூகவுரை	6	சுப்பிாமணியக் கடவுள்	– சுப்பிரமணியக்கடவுள்.
6	,, 24	உரைப்படும்	– உணரப்படும்.
7	,, 1	காரணுகிய	– காரணனுகிய.
27	,, 11		சிவஞானசித்தி பொழிப்புரை.
192		நிக்கிரககங்கடானும்	– நிக்கிரகங்கடானும்.
193		தந்தையாய்பெற்ற	– தந்தைதாய் பெற்ற.
273		சிவசத்தி காதம்	– சிவஞ்சத்தி காதம்.
316		ஏகாகேகம்	– ஏகாகேகம்.
		வவியுறுத்தவாறு	– வலியுறுத்தவாறு.
361		சகலத்திற் கசலஞ்	– சகலத்திற் சகலஞ்
401		ஆண்டுள வென்பதெ ற்ருற் பெருதும்	– ஆண்டுளவென்பதெ ற்ருற் பெறுதும்.
419		வந்துணரத்தியென	– வந்துணர்த்தியென.
471		வியபகவியாப்பியங்கள்	– வியாபக வியாப்பியங்கள்
		சங்கிரமங்கூடாதென் பது	– சங்கிரமங்கூடாதென் பது.
519		உப்மை சிறப்பு	– உம்மை சிறப்பு.
547		வெந்தபடம்போலக் சத்தி	– வெந்தபடம்போலச் சத்தி

இவைகளேயன்றிப் புள்ளி கன்ருகப் பதியாத பிழைகள் காட்டப்படவில்லே. விடுபட்டவைகளேயும் திருத்தி வாசிக்க.